# சுஜாதா



விகடன்
பிரசுரம்

# கற்றதும்... பெற்றதும்...

சுஜாதா

# கற்றதும்..
# பெற்றதும்..



விகடன்
பிரசுரம்

Title:
KATRATHUM PETRATHUM (Volume-I)
© SUJATHA
ISBN: 81-89780-62-X

விகடன் பிரசுரம்: **35**

நூல் தலைப்பு:
கற்றதும்... பெற்றதும்... (பாகம்-I)

நூல் ஆசிரியர்:
© சுஜாதா

நூல் வடிவமைப்பு:
பிரபு

முதற்பதிப்பு : ஜனவரி, **2003**

பன்னிரெண்டாம் பதிப்பு: ஆகஸ்ட், **2016**

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

உதவி ஆசிரியர்:
ஜெ.கலைவாணி

கிராஃபிக் டிசைனர்:
த.வினோத்

வடிவமைப்பு:
ப.ஷங்கர், தே.ஆறுமுகம், ப.சுப்பிரமணி

இந்த புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாக்கும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

# பொருளடக்கம்

என்னுரை
முன்னுரை
கற்றதும் பெற்றதும் **(**பாகம்**-I)**

# என்னுரை

சுஜாதாவுக்கு எப்போதுமே நான் அதிக அவகாசம் தந்ததாக நினைவில்லை. தொடர்கதையோ.. 'ஏன்.. எதற்கு.. எப்படி?' மாதிரியான தொடர்ப்பகுதியோ.. எதுவாக இருந்தாலும் 'இது சுஜாதா செய்தால் சரியாக இருக்கும்' என்று தோன்றிய நிமிடம் நான் தொலைபேசியில் அவரது எண்ணைச் சுழற்றிவிடுவேன். ஒருமுறைகூட அவர் மறுத்ததில்லை.

உடனே கிளம்பி வருவார். 'அவுட்லைன்' ஐடியா சொல்வார். விவாதிப்போம். அத்தனை ஆலோசனைகளையும் திருத்தங்களையும் ஏற்றுக்கொண்டு அவர் புறப்படும்போதே அறிவிப்பு வெளியிட்டுவிடலாம்.

என் பத்திரிகையுலக அனுபவத்தில் எனக்குக் கிடைத்த இனிய நண்பர்களில் முக்கியமானவர் சுஜாதா. அவரது படைப்புகளின் முதல் ரசிகன் என்ற பெருமிதம் எனக்கு எப்போதும் உண்டு.

பணியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகும் பரபரப்பாக இருக்கிற மனிதர். ராஜீவ்காந்தியுடன் விமானத்தில் சுற்றியவர். ரஜினிகாந்த்துடன் சினிமா பேசியவர். அப்துல்கலாமுடன் நட்பு பாராட்டுபவர். நாட்டுப்புறப் பாடல்களைத் தேடுவார். கம்ப்யூட்டர் கருத்தரங்குகளில் உரையாற்றுவார். பல தளங்களில் இயங்கியபடி தன் வாழ்வினையும் தமிழ் வாசகர்களையும் சுவாரஸ்யப்படுத்தத் தெரிந்தவர் சுஜாதா.

'கற்றதும் பெற்றதும்' - விகடனில் சுஜாதாவின் வெற்றிகரமான தொடர்களில் ஒன்று. அவருக்கே உரித்தான குறும்புகள், அறிவியல் தேடல்கள், சாமர்த்தியமான சமூகச் சாடல்கள், எதிர்காலக் கனவுகள், கவலைகள், அனுபவப் பாடங்கள் எல்லாமே இந்தத் தொடரில் மின்னல் வேக நடையில் வாசகர்களை வசீகரித்தது. இலக்கியம் முதல் இன்டர்நெட் வரை வாரா வாரம் விகடனில் வந்த அவரது

உலகத்துக்குள் இப்போது ஒரே மூச்சில் உலாப் போக உங்களை அழைக்கிறேன். இந்தத் தொகுப்பு உங்களுக்கு நிறையவே கற்றுத் தரும் என உறுதியாக நம்புகிறேன்.

நன்றி.

20.12.2002

எஸ். பாலசுப்ரமணியன்
ஆசிரியர்

# சுஜாதா



தமிழ் எழுத்து நடையில் புதுமையும் இளமையும் கொண்டுவந்த சுஜாதா, எழுத்துலகில் நாற்பத்தைந்து ஆண்டுகள் கொடிகட்டிப் பறந்தவர். சுஜாதாவின் நிஜப்பெயர் ரங்கராஜன்.

ஜீனோமிலிருந்து ஜீனோ நாய்க்குட்டி வரை அவரால் பல சங்கதிகளை சுவாரஸ்யமாக எழுத முடிகிறது. அடுப்பங்கரையிலும் அடுக்களையிலும் சுழன்றுகொண்டிருந்த கதைகளின் மத்தியில் தனது அறிவியல் கருத்துக்களை அறிமுகப்படுத்தி, தமிழில் அறிவியல் கதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் வித்திட்டவர்.

பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் பொதுமேலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார். பணியிலிருந்தபோது இவருடைய பொறுப்பில் கணிப்பொறி இயல், எலெக்ட்ரானிக்ஸ் இயல்களில் பலவிதமான முன்னணி ஆராய்ச்சிகள் நிகழ்ந்தன.

அறிவியல், புனைகதைகள், கவிதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், நாடகங்கள், சினிமா என்று இவரது படைப்புகள் பரந்து விரிந்த ஒரு

பெருங்கடல். கணேஷ், வசந்த் என்ற இவரது கதாபாத்திரங்கள் வாசகர்களால் மறக்க முடியாதவை.

அறிவியல் நூல்களில் 'கணிப்பொறியின் கதை', 'தலைமைச் செயலகம்', 'சிலிக்கன் சில்லுப்புரட்சி', 'செய்தி சொல்லும் செயற்கைக்கோள்கள்', 'அடுத்த நூற்றாண்டு', 'கி.பி. இரண்டாயிரத்துக்கு அப்பால்' போன்றவை பிரசித்தம். புனைகதை இயலில் 'கரையெல்லாம் செண்பகப்பூ' போன்ற நாவல்களும் 'காகிதச் சங்கிலிகள்' போன்ற குறுநாவல்களும் 'மத்யமர்' போன்ற சிறுகதைகளும் கணையாழியின் கடைசிப் பக்கக் கட்டுரைகளும் 'கடவுள் வந்திருந்தார்', 'அடிமைகள்', 'ஊஞ்சல்' போன்ற நாடகங்களும் உதாரணங்கள். தமிழ் சினிமாக்களுக்கு திரைக்கதையும் வசனமும் எழுதியிருக்கிறார்.

அறிவியலை எளிய தமிழில் ஊடகங்களில் பரப்பியதற்காக என்.ஸி.என்.டி.ஸி. விருதை மைய அரசு இவருக்கு அளித்தது.

27.2.2008-ல் சுஜாதா இயற்கை எய்தினார்.

# முன்னுரை

இந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகளை நான் மூன்று ஆண்டுகளில் இரண்டு தவணைகளில் எழுதினேன். விகடன் ஆசிரியர் என்னை முதலில் சுய சரித்திரம் எழுதச் சொன்னார். அது சுவாரஸ்யமாகவும் இருக்கும் என்று சொன்னார். நான் யோசித்துப் பார்த்து இரண்டு நாட்களில் பதில் சொல்வதாகச் சொன்னேன். பாலன் அவர்கள் சொன்னால் உடனே ஒப்புக் கொள்வதுதான் வழக்கம். இப்போது தயங்கினேன். காரணம் - சுயசரித்திரம் எழுதும்போது, அதில் காணப்படும் மனிதர்கள் பெரும்பாலானோர் உயிருடன் இருக்கும்போது உண்மையாக, யோக்கியமாக எழுதுவதில் சில சிரமங்கள் ஏற்படும் என்று தோன்றியது. பல விஷயங்கள் 'சொன்னால் விரோதம்' என்கிற பாகுபாட்டில் வந்துவிடும். பல நல்ல விஷயங்களும் வரும். ஆனால், அவற்றை ஞாபகம் வைத்துக்கொள்ள மாட்டார்கள். நெகட்டிவ்வாக எழுதிய ஒரு சின்ன அடிக்குறிப்புகூட தெளிவாக ஞாபகமிருக்கும். மேலும் சுயசரித்திரம் எழுதும் கட்டம் எனக்கு வந்துவிட்டதா என்பதும் தெரியவில்லை. வாழ்க்கையில் ஆர்வம் தணிந்தபின்தான் சுயசரித்திரம் எழுதும் கட்டம் வரும் என்றார் எவலின் வா (Evelyn Waugh).

யோசித்துப் பார்த்தால் நான் எழுதிய அத்தனை கதை, கட்டுரைகளிலும் சுய சரித்திரம் ஒளிந்திருக்கிறது. பிகாசோ For those who know how to read I have painted my autobiography (படிக்கத் தெரிந்தவர்களுக்காக என் சுயசரித்திரத்தை வரைந்திருக்கிறேன்) என்றார். பாலன் அவர்களிடம் அங்கங்கே சொந்தக் கதையையும் கலையுலக, எழுத்துலகானுபவங்களையும் பொது விஷயங்களையும் கலந்து எழுதுகிறேன் என்றேன்.

தாராளமாக செய்யுங்கள் என்றார். நான் கொடுத்த தலைப்புகளில் 'கற்றதும் பெற்றதும்' அவருக்குப் பிடித்திருந்தது. தொடர்ந்து ஒரு வருடம் எழுதினேன். அதன்பின் 'சற்று இடைவெளி கொடுக்கலாமே... உங்கள் தொடர்கதை தேவைப்படுகிறதே' என்றார். 'இரண்டாவது காதல்

கதை'க்காக 'கற்றதும் பெற்றதும்' சற்று இளைப்பாறியது. அதை முடித்ததும் உடனே தொடரச் சொன்னார். மறுபடி ஏறத்தாழ ஒரு வருடம் எழுதினேன். 'கற்றதும் பெற்றதும்' இரண்டாம் பகுதி வெளிவந்தது. 'யவனிகா'வுக்காக ஒரு இடைவெளி. தற்போது மூன்றாவது இன்னிங்ஸ்.

விகடனின் பவழ விழா தொடர்பாக கற்றதும் பெற்றதும் கட்டுரைகளை சிறப்பாக வெளியிடுகிறார்கள். இந்தக் கட்டுரைத் தொடரை முன்மொழிந்து, அவ்வப்போது யோசனைகள் கூறி, எங்கேயாவது மாற்றினால் அதை உடனே என்னிடம் தெரிவித்து ஒரு பத்திரிகாசிரியரின் அனைத்து தர்மங்களையும் திறமைகளையும் பயன்படுத்தி விகடனில் வெளியிட்ட ஆசிரியர் பாலன் நான் கற்ற, பெற்ற முக்கியமான நண்பர். அவர்களுக்கும் இதைத் திறமையாக வெளியிட்ட விகடன் ஆசிரியர் குழுவினருக்கும் குறிப்பாக வீயெஸ்வி அவர்களுக்கும் நன்றி கூற விரும்புகிறேன்.

கற்பதற்கும் பெறுவதற்கும் 'முற்றும்'மே இல்லை. உங்களுக்காக எப்போதும் விகடன் காத்திருக்கும் என்று சொன்ன மன தாராளம் பாலன் அவர்களிடம் மட்டும் நான் கண்ட பண்பு.

இந்தப் புத்தகத்தைச் சிறப்பாக வெளியிடும் விகடன் பதிப்பகத்தாரையும் பவழ விழா ஆண்டில் விகடனை இன்னும் பல சாதனைகளை நோக்கி அழைத்துச் செல்லும் ஜேஎம்டி திரு. சீனிவாசன் அவர்களையும் இந்தத் தருணத்தில் பாராட்டுகிறேன்.

சென்னை,
புத்தாண்டு 2003

சுஜாதா

# தேச பக்தி!



**வி**யட்நாம் போர் நடந்தபோது ஒரு புதுக்கவிஞர் எழுதிய வரிகள் இவை –

நாங்கள் கவிதை எழுதுவதற்குள்
போர் நின்றுவிட்டதே வியட்நாம்
போர் நின்றுவிட்டதே

கார்கில் யுத்தமும் வந்த சுவடு தெரியாமல் போய் விட்டது. திடீரென்று நாடு முழுவதும் ஒரு தேச பக்தி அலை அடிக்கத் துவங்கி அரசியல்வாதிகளும் சினிமா நட்சத்திரங்களும் கிரிக்கெட் வீரர்களும் செய்தித்தாள்களும் உற்சாகமாக நிதி திரட்டித் தர, அலுவலகங்களில் ஒரு நாள் சம்பளத்தை துறந்தார் கள். ஆட்டோ ஓட்டுனர்கள் அன்றைய தின வசூலை கைக்குட்டைகளில் கொட்டி கோட்டைக் குச் சென்று, யாரிடம் கொடுப்பது என்று கேட்டார் கள். 'முருகு சோதிடக்கலை' வரை நம் அத்தனை பத்திரிகை நிருபர்களும் போர்முனைக்குச் சென்று 'குண்டு மழையின் நடுவில் நம் நிருபர்' என்று போட்டோக்கள் எல்லாம் போட்டுக் கொண்டு விலாவாரியாக பாரத வீரத்தைப் பற்றி பத்தி பத்தியாக எழுதி, குறைந்தபட்சம் ஆறு வாரமாவது அதை இழுக்கடிப்பதற்குள் போர் நின்றுவிட்டது. மீண்டும் 'தூதுவளைக்காயை உலர்த்தி தயிர், உப்பு ஆகியவற்றில் பதப்படுத்தி எண்ணெயில் வறுத்து உண்டால் மலச்சிக்கல் தீரும்' போன்ற அத்தியாவசியமான செய்திகளுக்குத் திரும்பிவிட்டார்கள்.

கார்கில் யுத்தத்தில் எத்தனை பேர் செத்துப் போனார்கள் என்கிற விவரம் முழுவதும் தெரிய கொஞ்ச நாளாகும். அதற்குள் அதன் சுவாரஸ்யம் போய்விடும் (ஹர்ஷத் மேத்தா ஊழல் யாருக்காவது நினைவிருக்கிறதா? ஐயாயிரம் கோடியா, பதினெட்டாயிரம் கோடியா?). அதுபோல் யுத்தவியல் நிபுணர் கே. சுப்ரமணியத்தின் ரிப்போர்ட்டும் மக்களவையில் வைக்கப்படும்போது நிலவும் அரசியல் வேடங்களுக்கு ஏற்ப விமரிசித்து அவர்கள் நாள்முழுவதும் தூர்தர்ஷனில் பேசுவார்கள். நாம் சானல் மாற்றி 'சிம்ரனுக்குக் கடுமையான ஜுரம்' போன்ற தமிழ் கூறும் நல்லுலகத்தின் அன்றாடக் கவலைகளுக்குத் திரும்புவோம்.

கார்கிலில் நாம் இழந்தவை இரண்டாயிரத்துக்கு மேல் இருக்கும் என்கிறது பி.பி.சி.! பெர்னாண்டஸும் ஜஸ்வந்த்சிங்கும் டிம் செபாஸ்டியனின் ஊசி முனைக் கேள்விகளுக்கு மழுப்பினார்கள். தமிழர்கள் பலர் இறந்துபோனது என்னவோ வெளிப்படையாகத் தெரிகிறது. கர்னல் நடராஜனின் வீரமரணம் நம் எல்லோர் மனத்தையும் உலுக்கியது.

கார்கிலை தவிர்த்திருக்கலாம், டாக்காவுக்கு பஸ் விடும்போதே இந்தப் பக்கம் ஊடுருவியிருக்கிறார்கள் என்று சோனியா பேசியிருக்கிறார். தவிர்த்திருக்கலாமோ என்ற சந்தேகத்தை முன்வைத்தால் இப்போது அடிக்க வருவார்கள். அவ்வளவு பெரிய ஊடுருவலை எப்படி கோட்டை விட்டார்கள் என்ற கேள்வியை இந்த தேசநேச வேளையில் - கேட்கக்கூடாது. கார்கில் கடினமான போர் மலை அடிவாரத்தில் நாம். மலை உச்சியில் ஊடுருவல்காரர்கள். அவர்களில் ஒருவரைக் கொல்ல நம் நால்வரை இழக்கவேண்டிய கடுமையான uphil task. மலையேற்றப் போர் ஆரம்பத்தில் அவர்கள் பங்கர்களை இன்ஃபண்ட்ரி மட்டும் தனியாக அலை அலையாக மலை ஏறித் தாக்கப் போய் மிகுந்த ஆட்சேதம் ஏற்பட்டு போர்த் தந்திரத்தை மாற்றிக் கொண்டு விமானப் படையின் மேற் பார்வையுடன் ஆர்ட்டிலரியைக் கொண்டுவந்து போஃபர்ஸ் பீரங்கிகளால் இடைவிடாமல் அவர்களுடைய சப்ளை லைனை அபாயகரமானதாக ஆக்கியிருக்கிறார்கள். எதிரிகள் பங்கர்களை விட்டு வெளியே வர இயலாமல் தண்ணீர் சப்ளை நின்றுபோய் பனியை உருக்கி நீர் அருந்தி இருக்கிறார்கள். அதில் இங்கிருந்து அடித்து வெடித்த ஷெல்களின் கார்டைட் கலந்திருந்ததால் வயிற்றுப் போக்கு வந்து அதனாலும் அவர்கள் பின்வாங்க வேண்டியிருந்ததாம்.

'தேசபக்தி என்பது என்ன என்று இந்தச் சமயத்தில் யோசிக்கலாம். நம் ஜவான்களும் இளம் ஆபீஸர் களும் இந்த நாட்டுக்குத்தான் உயிர்த் தியாகம் செய் தார்களா? இளமை, மனைவி, மக்கள், எல்லாவற்றையும் துறந்து சத்தியமான மரணத்தை நோக்கி கிரினேடுகளையும் ரைஃபிள்களையும் தாங்கித் துரத்திச் சென்று தாக்கத் தூண்டும் உந்துசக்தி எது? நாட்டுப்பற்றா என்றால் யுத்தவியல் மனோதத்துவர்கள் அப்படி இல்லை, நட்புதான் என்கிறார்கள். என் ராணுவ நண்பரைக் கேட்டபோது அவர் சொன்னது புதிதாக இருந்தது. இந்திய ராணுவத்தின் இன்ஃபண்ட்ரி என்னும் முன்னணி காலாட்படையின் அமைப்பு பல்டன் என்னும் ப்ளாட்டூன், கம்பெனி, பட்டாலியன், பிரிகேடு, டிவிஷன், கோர் என்று ஆங்கிலேயர் காலத்தில் இருந்து இருக்கும் அமைப்பு. இதன் ஆதார குறிக்கோள் சிறு குழுக்களின் 'பலதன் விசுவாசம்' நட்பு.

மிகச் சிறிய பிரிவான ப்ளாட்டூன் - என்பதுதான் ஆதாரமானது. அதில் நான்கு அல்லது ஐந்து பேர் இருப்பார்கள். ஓர் இளம் லெப்டினெண்ட் கமிஷன்டு ஆபீஸர் தலைமையில் இயங்குவார்கள் ஜவான்கள். அவர் ஒரே மொழிக்காரர்களாக, ஏன் ஒரே ஊரைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். ஒருவருக்கொருவர் அமைதிக் காலத்தில் ஒன்றாகப் பழகியவர்கள், பேசியவர்கள். வாழ்க்கையின் சந்தோஷங்களைப் பகிர்ந்துகொண்டவர்கள். அவர்கள் போரிடும்போது அவர்களைச் செலுத்தும் அடிப்படையான உணர்ச்சி நட்புதான். தேசபக்தியெல்லாம் பிற்பாடுதான். அவர்கள் ஒரு தாக்குதலுக்குச் செல்லும்போது சற்றுமுன் உயிருடன் - பார்த்த ஆப்த நண்பன் கண்முன் - இறந்துபோகும்போது ஏற்படும் ஆவேசமும் கோபமும் உந்துசக்தியாகி உயிரைத் துச்சமாக மதிக்கும் மிதிக்கும் அந்த நிமிஷத்தில் அவர்களுக்கு நண்பன் ஒருவன் போய்விட்டானே என்கிற கோபம்தான் முன்நிற்கும். ஆபீஸருக்கும், நம்ம கம்பெனி பழனியோ முருகவேலோ இறந்துவிட்டானே என்ற கோபம்தான் முன்னணியில் இயங்கும். அதுதான் அவர்கள் தியாகத்தின் ஊற்றுக்கண். அதன்பின்தான் தேசநேசம் எல்லாம்.

கார்கிலில் நம் வெற்றி அதிக விலை கொடுத்துப் பெற்றதுதான். பல ரத்தினங்களை இழந்துவிட்டோம். ஆனால் அதில் நிரூபிக்கப்பட்டது ஒரு வியாபாரக் கூலிப்படைக்கும் டிசிப்ளினும் ஒற்றுமையும் நேசமும் உள்ள ஒழுங்கான ராணுவத்துக்கும் யுத்தம் நடந்தால் ஆயுதங்களைவிட மனங்கள்தான் வெற்றிபெற்றுத் தரும் என்பதே.

புறநானூறில் ஓர் ஆச்சரியமான பாடல் உள்ளது. 255-வது பாடல் பாடியது வன்பரணர்.

'ஐயோ வெனின்யான் புலி அஞ்சுவலே
அனைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்.
என்போற் பெருவிதிர்ப் புறுக நின்னை
இன்னாது உற்ற அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடந்திசிற் சிறிதே.'

'ஐயோ என்று கூக்குரல் கொடுத்தால்
புலி வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்.
உன்னைத் தூக்கிக்கொண்டு செல்லலாம் என்றால்
ரொம்ப கனமாக இருக்கிறாய்.
உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிய நியாயமற்றவன்
என்னைப் போலவே பெரிசாக வருத்தப்படட்டும்.
தூரத்தில் மலையடிவாரத்தில் நிழல் உள்ளது.
என் வளைக் கையைப் பற்றிக்கொள்
கொஞ்சம் நடப்போம்.'

இந்தப் பாடலின் சூழலை சுலபமாக முதுபாலையிலிருந்து கார்கில் மலையடிவாரத்துக்கு மாற்ற முடிகிறது. அபாயகரமாக அடிபட்டிருக்கும் ஒருவனை காப்பாற்றுவது புறநானூற்றிலும் கார்கிலிலும் நட்புதான்.

பின்குறிப்பு:

கார்கில் நிதி திரட்டுவதற்காக நம் திரையுலக நட்சத்திரங்களின் நிகழ்ச்சியை டி.வி-யில் பார்த்திருப்பீர்கள். சில நடிகர்களின் தமிழ் உச்சரிப்பு என்னை வியப்பில் ஆழ்த்தியது. பெண்களை விட்டுவிடுங்கள். சுகாசினி, ராதிகா தவிர மற்றவர்களுக்கு டமிலே தெரியாது (தேவயானி ஒரு பேட்டியில் 'டைட்டில்ஸ்ல 'தே' வரைக்கும் படிச்சிருவேன் ஹாப்பி' என்றார்). ஆண் நடிகர்கள் பெரும்பாலானவர்கள் தமிழர்கள். ஆனால், 'கேளி', 'வள்ளரசு' 'முள்ளை', 'அண்பார்ந்த', 'இயக்குணர்' 'மணது' போன்ற உச்சரிப்புகளையெல்லாம் கேட்கும் போது 'ல', 'ன' உச்சரிப்பை தமிழ் வெகு விரைவில் இழந்துவிடும் என்று தோன்றுகிறது. மிக அவரசமாக இந்த உச்சரிப்புக்கான ஒலியன்களை கம்ப்யூட்டரில் போட்டுக் கொள்ள வேண்டும். வருங்காள... ஸாரி, வருங்காலத்துக்காக. இதில் வேடிக்கை என்னவெனில், இந்த மாதிரியான பிழைகள் எதுவும்

இல்லாமல் உச்சரித்த நடிகர்களில் ஒருவர் பிரகாஷ்ராஜ்!



# பிறந்த தின நிகழ்ச்சிகள்!



கணிப்பொறியில் ஜாதகம் கணிக்கும் மென் பொருள்கள் பல உள்ளன. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பே ஃப்ளாப்பி தகடுகள் தோசைக்கல் அளவுக்கு இருந்த 186, 286 கணிப் பொறியின் கற்காலத்திலும் 'டீலக்ஸ் அஸ்ட்ரோஸ்கோப்' போன்ற மென்பொருள்களைப் பார்த்திருக்கிறேன். இப்போது இன்டர்நெட்டில் கலர் கலராக 'ஸ்டார்லைட் அஸ்ட்ராலஜி', 'ரியல் அஸ்ட்ராலஜி', 'அஸ்ட்ரோ அபி' என்று வலைமனைகள் மலிந்துள்ளன. அவற்றில் ஒன்றை க்ளிக்கிப் பார்த்தேன். உங்கள் பிறந்த தேதி சொன்னால் கொடுத்த காசுக்கு ஏற்ப (14 டாலரிலிருந்து 49 டாலர் வரை கேட்கிறார்கள்) ஜாதகங்கள், ஸினாஸ்ட்ரி என்னும் ஜாதகப் பொருத்தங்கள், ஒரு வருஷ ராசி பலன் எல்லாம் தருகிறார்கள். உங்கள் செக்ஸ் வாழ்க்கையைக்கூட Passionscope, lovescope என்று விலாவாரியாக கொடுக்கிறார்கள் (எனக்குக் கிடைத்த உபதேசம் - 'காதலை மறைக்காதீர்கள். செயல்படுங்கள்').

நம் தமிழிலும் வீமேசுர உள்ளமுடையான், குமாரசுவாமீயம், சாதகாலங்காரம், சாதக சிந்தாமணி, செகராஜசேகரம், சந்தான தீபிகை, காக்யம், அம்மணீயம், சிதேந்திரமாலை, விதான மாலை என்று இதையெல்லாம் படிக்கும்போது எனக்கு ஒரு ஆதார சந்தேகம், இதுநாள் வரை தீரவில்லை. ஒரே தேதியில், சமயத்தில், ஒரே கிரக நிலையில் பிறந்திருக்கும் லட்சக்கணக்கானவர்க்கும் அதேதானா? என்னுடைய ரிஷப ராசியில் வில்லியம் ஷேக்ஸ்பியர், சிக்மண்ட் ஃப்ராய்டு, பார்பரா ஸ்ட்ரைஸன், மால் கோம் எக்ஸ், பெண்டாஃபோர் அதிபர் சந்திரசேகர் எல்லாருக்கும் ஒரே கிரக பலன்தானா? எழுத்தாளனான எனக்கு இதில் சம்மதம் இல்லை. உலகத்தின் ஒவ்வொரு மனிதனும் ஒரு தீவு. அவர்கள் அனைவரையும் எப்படிப் பத்துப் பன்னிரண்டு பாகுபாட்டில் கொண்டு

வரமுடியும் என்று கேட்டால், அதற்குப் பதிலாக உங்கள் பிறந்த நேரத்தையும் இடத்தையும் அட்சரேகை, தீர்க்கரேகை எல்லாம் துல்லியமாகச் சொன்னால் மற்றவர்களிடம் இருந்து வேறுபாடு என்ன என்பதைச் சொல்ல முடியும் என்கிறார்கள். அப்படியும் அவர்கள் சொல்லும் குணாதிசயங்கள் அனைத்தும் பொதுவானதாகவே இருக்கிறது. உதாரணமாக, என் ராசிக்காரர்கள் அனைவரும் பொறுமையுள்ளவராம். நம்பகமானவராம். அன்பும் பரிவும் உள்ளவராம். தீர்மானமாக ஒரு காரியத்தை எடுத்தால் செய்து முடிப்போமாம். பத்திரத்தை விரும்புபவராம். அதே சமயம் பொறாமை, பிடிவாத குணம், தானழகு தம்பிரான், பேராசை போன்றவை எங்கள் வீக் .பாயிண்ட்டுகளாம்!

இந்த மாதிரியான வர்ணனைகள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு மட்டும் இல்லை, உலகத்தில் எல்லோருக்கும் பொருந்தும். ஆனால், வில்லியம் ஷேக்ஸ்பியரும் நானும் ஜோதிட நோக்கில் ஒண்ணு என்பதைத்தான் ஜீரணிக்க இயலவில்லை.



நான் பிறந்தது மே மாதம் 3-ம் தேதி 1935. ஆனால், என்னுடைய எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தில் ஏப்ரல் 13, 1935 என்று இருக்கும். காரணம், என் தந்தை என்னைப் பள்ளியில் சேர்க்கும்போது சட்டென்று ஞாபகம் இல்லாமல் ஏப்ரல் 13 என்று கொடுத்துவிட்டாராம். இதை அவரே ஒரு முறை சொன்னார். இதனால் நான் என் 58-வது வயதில் - ஒரு மாதம் முன்பாகவே பாரத் எலெக்ட் ரானிக்ஸிலிருந்து ஓய்வு பெறவேண்டி

இருந்தது. வேறு விளைவுகள் இல்லை. அல்லயன்ஸ் என். சீனிவாசன் 'இந்த நாளில் அன்று' என்று ஒரு சுவையான புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அதில் மே மூன்றாம் தேதி நான் பிறந்ததைத் தவிர வேறு என்ன என்ன உலகை உலுக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்று பார்த்தேன். அப்படி ஒன்றும் விசேஷமாக இல்லை. தாதா சாஹேப் பால்கே-யின் 'ராஜா அரிச்சந்திரா' என்னும் முதல் இந்தியத் திரைப் படம் பம்பாய் காரனேஷன் சினிமாட்டோகிராஃப் அரங்கில் 1913 மே 3-ல் திரையிடப்பட்டதாம் (இதனால்தான் எனக்கும் சினிமாவுக்கும் ஒரு சம்பந்தம் ஏற்பட்டது என்று ஜோசியம் சொன்னால் அது உட்டாலக்கடி). நர்கிஸ், மலையாளத் திரைப்பட நடிகர் ஒருவர், தெலுங்கு இலக்கியவாதி ஒருவர் - இவர்கள் எல்லாம் இறந்த தினம் மே 3. அதற்கு நான் எந்த விதத்திலும் பொறுப்பில்லை.

முதன் முதலாக சென்னை மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது 1969 மே 3-ல். அதற்கும் என்னை யாரும் அனுமதி கேட்கவில்லை. முதல் மாலை நாளிதழ் 'தி ஸ்டார்' என்பது 1788 மே 3-ல் வெளிவந்தது. 1830 மே 3-ல் முதல் ரயில் ஓடியது. மற்றபடி வானில் பெரிய நட்சத்திரங்களோ உபரியாக வெளிச்சங்களோ குறைந்தபட்சம் ஒரு மீடியம் சைஸ் எரிகல்லோ எதுவும் தோன்றியதாக செய்தி இல்லை.

இப்போதெல்லாம் பிறந்தநாளை ஞாபகம் வைத்துக் கொண்டாடவில்லையென்றால் கோர்ட்டுக்குப் போகிறார்கள். கணவன் மனைவி, ஏன்... கைக்குழந்தைகள்கூட டென்ஷனாகிவிடுகிறார்கள். சற்று விவரம் தெரிந்த குழந்தைகள் கோபித்துக் கொண்டு ஆர்ச்சிஸ் கார்டு வரும் வரை மூலையில் விரோதமாக உட்கார்ந்து கொள்கிறார்கள். அந்த நாட்களில் அதெல்லாம் முக்கியமில்லை. பிறந்ததினம் மற்றுமோர் நாளே.

புத்தர் பிறந்தபோது ஒரு ஜோசியர் சொன்னாரே, அதுபோல எனக்கும் கோயம்புத்தூர் ஜோசியர் ஒருவர் இந்தப் பையன் பிற்காலத்தில் என்னவெல்லாம் ஆகப்போகிறான் என்று ஒரு காகிதத்தில் எழுதி வைத்து இருந்ததை அம்மா காட்டியிருக்கிறாள். எல்லாம் தப்பு. 'பிற்காலத்தில் இந்தப் பையன் பெரிய லாயராகவும் ஜட்ஜாகவும் வருவான்' என்று எழுதியிருந்தார். அப்படி ஏதும் ஆகவில்லை. லாயர்களைப் பற்றி கதைதான் எழுதினேன்.

நல்ல திடகாத்திரனாகவும் சுமார் ஐந்தரை அடி உயரமாக குண்டாக இருப்பான் என்று எழுதியிருந்தார். அதுவும் தப்பு. ஆறடி உயரமாக

ஓடக்கோல் போல கிள்ளியெடுக்க சதையில்லாமல் வளர்ந்தேன் ("மழை பெய்தால் இவன் நனையவே மாட்டான்டா" என்று ஸ்ரீரங்கத்தில் கேலி செய்வார்கள்).



ரொம்ப நாளாக எனக்கு பரணி ஜென்ம நட்சத்திரம் என்று சொல்லி, 'பரணி தரணி ஆள்வான்... அதிர்ஷ்ட நட்சத்திரம்' என்று சொல்லி வந்தார்கள். கல்யாணத்துக்கு முன்பு ஜாதகத்தைச் சரியாக கணித்ததில் எனக்கு கார்த்திகை நட்சத்திரம் என்று தெரிந்தது. அதனால் எனக்குச் சரியாக தரணி ஆள முடியவில்லை. இல்லை எனில் வல்லக்கோட்டை ஜமீன்தாராகவோ, குவளகுடி மிராசுதார் ஆகவோ ஆகி வெள்ளிச் செம்பும் பன்னீர் புகையிலையுமாக அரசோச்சியிருப்பேன். இந்தக் கட்டுரை எழுதியிருப்பேனா என்பது சந்தேகம்.

எனக்கு மேஷ ராசியா, ரிஷப ராசியா... அதுவும் குழப்பம். முதல் பாதம் மூன்றாம் பாதம் என்று ஏதோ சொல்வார்கள். அதனால் ராசி பலன் பார்க்கும்போது இரண்டு ராசியும் பார்த்து எது நல்லதாக போட்டிருக்கிறதோ அதை எடுத்துக்கொள்வேன். இங்கிலீஷ் ஜோசியத்தில் 'டாரஸ்', நாளடைவில் எல்லா ராசியும் பார்த்து எது நல்லதாக போட்டிருக்கிறதோ அதை எடுத்துக்கொள்ளப் பழகினேன்.

மேற்சொன்ன காரணங்களால் எனக்கு முதலிலிருந்தே ஜோசியம், ஜாதகம் இவற்றில் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. 'நாள் என் செய்யும், வினைதான் என் செய்யும், எனை நாடி வந்த கோள் என் செய்யும்' என்ற அருணகிரிநாதர் கட்சி நான்.

ஜாதகங்களைக் கணிப்பொறி மூலம் தருவதால் அவை தனிப்பட்ட எந்தவித அங்கீகாரமும் பெறுவதில்லை. இந்த சாஸ்திரம் நவீன அறிவியலுக்குப் புறம்பானது என்பதை கம்ப்யூட்டராலும் மாற்ற முடியாது. 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்னும் ஆங்கில கலைக்களஞ்சியம் - 'நியூட்டனுக்குப் பின் சோதிட இயல் அறிவியல் ரீதியாக அஸ்திவாரமற்றதாகி விட்டது. சமூக இயல் அடிப்படையில் நவீன ஜோதிட சாத்திரம் மிகவும் விரும்பப்பட்டதாக இருப்பினும் அதில் அறிவு சார்ந்த மதிப்பு இல்லாமல் போய்விட்டது.' நான்சென்ஸ் என்பதைச் சர்க்கரை தடவிச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் கவலை மிகுந்த நாட்களில் யாராவது கிரகம் பார்த்து நற்செய்தி சொன்னால் ஏற்றுக்கொண்டு மன நிம்மதி பெறுவதில் தப்பில்லை. ஆனால், அதற்காக தீர்மானங்களை ஒத்திப் போடவும் வாழ்க்கையில் நாம் செய்த தவறுகளுக்கு கிரகங்களைக் குறை கூறுவதும் தவறு.

# அடித்தளத்தில் ஒரு சோகம்!



கணிப்பொறி இயலில் FAQ (Frequently Asked Questions) என்று அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைத் தொகுத்து விடைகளை ஒரு தனிக் கோப்பாக வைத்திருப்பார்கள். எழுத்தாளனிடம் அதிகம் கேட்கப்படும் கேள்விகளில் இரண்டு - 1. எழுத்தின் ஊற்றுக்கண் என்ன அனுபவமா, ஞாபகமா? 2. உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவங்கள் என்ன?

மறக்க முடியாத சம்பவங்களைத்தான் எழுதுகிறோம்... பெயர் மாற்றி, கற்பனை முலாம் தடவி, இடம், காலம் மாற்றி. அதேபோல் எழுத்தின் ஊற்றுக்கண் மனதின் அடித்தளத்தில் படிந்த சம்பவங்கள், காட்சிகள், காயங்கள் எல்லாமே. அவை எப்போது எந்த வடிவத்தில் எந்தக் கலவையில் வெளிப்படுகின்றன என்பது எழுத்தாளனுக்கே சரியாகத் தெரியாது. இவ்விரண்டையும் விளக்கக் கொஞ்சம் சுயபுராணம் தேவைப்படுகிறது. மன்னிக்கவும்.

நான் பிறந்தது சென்னை திருவல்லிக்கேணியில். இப்போதும் அந்த வீடு இருக்கிறது. 33-ஏ, தெற்குக் குளத்தங்கரைத் தெரு. பார்த்தசாரதி கோயிலுக்கு அருகில். என் தந்தை அப்போது அரசாங்க மின்சார இலாகாவில் இன்ஜினீயராக வேலை பார்த்து வந்தார்.

நான் இந்தப் பூவுலகில் வந்து பிறந்ததைப் பற்றி எனக்கு அவ்வளவாக நினைவு இல்லை. லேசாக கர்ப்பத்துக்குள் பிரபந்தம் கேட்டதாக ஞாபகம் என்று அம்மாவிடம் சொல்லிப் பார்த்தேன். "புளுகாதே... அதெல்லாம் பிரகலாதனுக்குத்தான்" எனறாள்.

இந்திய சுதந்திரம் போல நள்ளிரவில் பிறந்தேனாம். மாலை வரை அம்மா வீட்டுவேலை செய்துவிட்டு சமையல் எல்லாம் முடித்துவிட்டு

அப்பா வரக் காத்திருந்தாளாம். அப்பா ஏதோ கோபத்தில் வெளியே போயிருந்து வர லேட்டாக, என் சித்தப்பா அப்போது பி.ஏ. பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தார். "மன்னிக்கு இடுப்புவலி வந்துவிட்டது. அப்பாவைத் தேடிப்போய் மருத்துவச்சி வருவதற்குள் பிறந்து முடித்து விட்டாய்" என்பார் என் பாட்டி (அம்மாவுக்கு அம்மா) அப்போது மாம்பலத்தில் இருந்திருக்கிறாள். காலையில்தான் அவளை அழைத்திருக்கிறார்கள். வந்ததும் ரொம்ப அழுதாளாம். "கூப்பிடு தூரத்தில் இருக்கிறேன். என்னைக் கூப்பிடக்கூடாதா மாப்பிளை? இப்படி ஒத்தாசை எதும் இல்லாமலா என் மகள் பிள்ளை பெறுவாள்?" என்று கண்ணீர் விட்டாளாம். ஏதோ சண்டை என்பது தெரிந்தது. எதற்காக என் பிரசவத்துக்காக அம்மாவை அப்பா அனுப்பவில்லை என்பதை இறுதிவரை இருவரும் எனக்குச் சொல்லவில்லை.

"யாருக்கும் தொந்தரவு தராமல் அதிகம் இடுப்புவலி எடுக்காமல் பிறந்துவிட்டாய்" என்பாள் அம்மா. இப்படி மற்றவருக்குத் தொந்தரவு தராமல் இருப்பது என் பிறவிக் குணங்களில் ஒன்று என்று கதையளக்க விரும்பவில்லை. எந்த மருத்துவ உதவியும் இல்லாமல் செபசிஸ் ஆகாமல் நான் பிறந்தது ஒரு குட்டி அதிசயம்தான். காரணம், ஒருவேளை ஆரோக்கியமான அம்மா கடைசிவரை வீட்டுக் காரியங்களில் ஈடுபட்டதாக இருக்கலாம். இருந்தாலும் 'டச் அண் கோ!'

உண்மையாக திருவல்லிக்கேணி தினங்கள் எதும் சுத்தமாக ஞாபகம் இல்லை. வயசும் பத்தாது. அப்பாவுக்கு ஊட்டியில் இருந்த பைக்காரா பவர் ஹவுஸுக்குச் செல்லும் வழியில் மலை உச்சியில் இருந்த க்ளென்மார்கனுக்கு மாற்றலாகியிருக்கிறது. இது 1937 வாக்கில் இருக்கலாம்.

எனக்கு அடுத்த பிரசவத்துக்கு அம்மா பிறந்தவீட்டுக்கு ஸ்ரீரங்கம் அனுப்பப்பட்டாள். அம்மா இரண்டு குழந்தைகளுடன் மூன்றாவது பிரசவத்துக்கு வந்திருக்கிறாள். பெண் குழந்தை. அந்தப் பெண் பிறந்த கையோடு அம்மாவை அழைத்துச் செல்ல அப்பா வந்திருக்கிறார். பாட்டி,'பச்சை உடம்பு.. பச்சைக் குழந்தை' என்று சொல்லியும் கேளாமல், கைக்குழந்தையுடன் நாங்கள் இரண்டு குழந்தையுடன் ஊட்டிக்கு ரயிலில் பயணப்பட்டிருக்கிறார்கள். ரயிலில் நல்ல கூட்டமாம். குழந்தையைத் தரையில் கிடத்தி அருகில் படுத்திருக்கிறாள். குழந்தை ராத்திரி ரயிலில் இறந்துவிட்டது. வழியில் இறங்கி அதைப் புதைத்து விட்டார்களாம். இந்தச் சம்பவத்தைப் பற்றி அப்பா என்னிடம் பேசியதே

இல்லை. அம்மா நான் நன்றாக வளர்ந்து சுயசிந்தனையும் மனப்பக்குவமும் வந்தப்புறம்தான் சொல்லத் தலைப்பட்டிருக்கிறாள். எனக்கு நல்லவேளை அந்த இரவுப் பயணம் எதும் ஞாபகம் இல்லை என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால், உள்மன சில் அது எங்கோ தேங்கியிருக்க வேண்டும்.

இது ஒரு சம்பவம்.

என் கல்யாணம் ஆகி முதல் குழந்தை விழுப்புரத்தில் பிறந்தது. பெண் குழந்தை. பிறந்த சில தினங்களில் இறந்துவிட்டது. அப்போது நான் டெல்லியில் இருந்தேன். அவசரமாக ப்ளேன் பிடித்து மனைவிக்கு ஆறுதல் சொல்ல வந்தேன்.

குழந்தையைப் பறிகொடுத்த அந்த இளம் மனைவியை முதலில் பார்த்தபோது என் அடிமனதில் பதிந்தது ஒரே ஒரு பிம்பம்.

அண்மையில் என் 'கனவுத் தொழிற்சாலை' நாவலைப் புரட்டிக் கொண்டிருந்தபோது கீழ்வரும் பகுதி ஆச்சரியம் அளித்தது. தானாகவே எழுதிக்கொண்ட பகுதிகள் ஒரு எழுத்தாளனுக்கு அரிதாகவே கிடைக்கும்.

"லூயிஸ்... டாமினிக் லூயிஸ்" என்று கூவி விசித்து அழ ஆரம்பித்தாள். குழந்தை நிதானமாகத் தன் சின்னப் போராட்டத்தைக் கைவிட்டுக் கொண்டிருந்தது.



'என் பிள்ளைங்க... என் பிள்ளைங்க... பெத்து இருபது நா ஆவலைங்க."

"அழாதம்மா... இந்தக் குழந்த சர்வேசுவரனுடைய தேவதை மாதிரி. இது என்ன பாவம் செய்தது... ஒண்ணுமில்லைல்ல ? இதற்கு எப்பேர்ப்பட்ட மோட்ச சாம்ராஜ்யம் காத்திருக்குது தெரியுமா... குழந்தை இந்த ஸ்தூல சரீரத்தைவிட்டு சூட்சும சரீரமாய் அந்த நாளில் இது எந்திரிக்கிறபோது இதைப் பரலோகத்துத் தேவதைகள் எல்லாம் தங்க வாசலிலே தாங்கி வாங்கிக்கு வாங்கம்மா... பேர் என்ன சொன்னிங்க?"

"லூயிஸ் டாமினிக் அருமைராசன்."


"லூயிஸ் டாமினிக் அருமைராசன்! சமாதானத்துடன் கடவுளோடு ஒன்றித்திருப்பாயாக. உன் ஆத்மா அந்த சர்வேஸ்வரனுடன் இளைப் பாறட்டும்."

குரு அந்தக் குழந்தைக்குப் பரிசுத்த எண்ணெய் தடவ, அந்தக் குழந்தையின் பிராணன் என்னும் அழகான இளம் காற்று ஒரு பிரபஞ்சக் கானத்துடன் கலந்து கொள்ள பிரயாணப்பட்டது.

லூயிஸ் டாமினிக் அருமைராசன் பெங்களூரில் பிறந்து, பதினெட்டு நாள் வாழ்ந்து சென்னைக்கு வந்து அதன் வெளிப்புறத்தில் இருக்கும் செமெட்டரியில் ஒரு சின்னப் பெட்டியில் அடக்கமானான். உபதேசியார் 'மண்ணிலே பிறந்தாய்... மண்ணிற்கே போகிறாய். கடவுளின் சமாதானத்தில் இளைப்பாறுவாயாக' என்று முணுமுணுக்க செமெட்டரிக்கு வெளியில் சகாயமேரி தெருவோரத்தில் உட்கார்ந்திருக்க , அவள் மார்பெல்லாம் முலைப்பாலால் நனைந்திருந்தது.

செத்துப்போன தங்கைக்கும் மரித்த மகளுக்கும் பல வருடங்கள் கழித்து ஒரு அழகான கிறித்தவ நல்லடக்கம் செய்தபின்தான் என் மனதின் அடித்தளத்தில் இருந்த அந்தச் சோகம் வடிந்தது.

# கெட்ட செய்திகள்!



**வி**ல்லியம் ஹாஸ்லிட் என்னும் ஆங்கில இலக்கியகர்த்தா வெறுப்பதில் உள்ள சந்தோஷத்தைப் பற்றி 'On the pleasure of hating' என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். "நாம் வெளிப்படையாகச் செய்யும் காரியங்களில் மனிதாபிமானம் கலந்துவிட்டோம். ஆனால், மனதில் உள்ள இச்சைகளையும் கற்பனைகளையும் கட்டுப்படுத்த இன்னும் கொஞ்சம் நாளாகும்" என்றார். இது 1828-ல் எழுதிய கட்டுரையில். இன்று, 1999-ல்கூட வெளிச் செயல்களுக்கும் உள்மன விருப்பத்துக்கும் உள்ள வேற்றுமை அப்படியே இருக்கிறது.

அண்மையில் பரபரத்த பார்வதி ஷா கொலையைப் பற்றி 'மூலிகை மணி', 'ஸ்ரீ வைஷ்ணவ சுதர்ஸன'த்தைத் தவிர, மற்ற எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதிவிட்டார்கள். அவர்கள் கல்யாணப் படங்களை அச்சுக் கொட்டினாற் போல பதிப்பித்து மாமியாரிலிருந்து பாண்டிச்சேரி செம்மி நாய் வரை பேட்டி கண்டு விவரமாக பதிப்பித்திருந்தார்கள். இதற்குக் காரணம் என்ன என்று யோசித்துப் பாருங்கள். முதலில் அது ஒரு அழகான குடும்பம். படங்கள் எல்லாம் 'வாலி' திரைப்பட ஸ்டில்கள் போல இருந்தன. பணக்காரர்கள், குஜராத்தி - தமிழ் கலப்புத் திருமணம், செக்ஸ் வக்கிரங்கள், பாண்டிச்சேரி ஆசிரமத்தைச் சார்ந்தவர்களின் அதிகம் வெளியில் தெரியாத நடவடிக்கைகள் மேல் ஓர் ஆர்வம் எல்லாம்தான் காரணம். பார்வதி ஷா அழகாக இல்லாமல் இருந்தால் இத்தனை விலாவாரியாக போட்டிருப்பார்களா என்பது சந்தேகம் (அழகாக இல்லாமலிருந்தால் இந்தக் கொலை நடந்திருக்காது).

இதில் ஆழமாகப் பொதிந்துள்ள சமூக அடையாளங்களைத்தான் ஹாஸ்லிட் அப்போதே சொல்லியிருக்கிறார். "We give up the external demonstration, the brute violence but cannot part with the essence or

principle of hostility".

மூர்க்கத்தனமான வன்முறையின் வெளிவடிவங்களை நாம் கைவிட்டுவிடுகிறோம். ஆனால், விரோதத்தின் சாரத்தை நம்மால் கைவிட முடியாது.

நம் ஊடகங்கள் (பத்திரிகைகள், டி.வி. செய்தி சேனல்கள்) எப்போதுமே கெட்ட செய்திகளையே தருவதற்கு இதுதான் காரணம். குடிசைகள் எரிந்தால்தான் வியாசர்பாடியைப் பற்றி நியூஸ் வரும். ஸ்டார் நியூஸ் உதாரணம் - பீகார் அல்லது ஒரிஸ்ஸா அல்லது ராஜஸ்தான் மாநிலத்தில் ஏதாவது ஒரு மூலையில் ஏதாவது ஒரு பெண்ணை கணவன் இறந்தபின் உயிருடன் எரிக்கிறார்களா என்று காத்திருக்கிறார்கள். எரித்த உடனே கொடியில் தொங்கும் ஜீன்ஸை அணிந்துகொண்டு, காமிராவைச் சேகரித்துக்கொண்டு, கறுப்பாக நீளமாக மைக் இருக்கிறதே... அதையும் பற்றிக்கொண்டு ஓர் இளம்பெண் நிருபி பிளேன் பிடித்து ஜீப் எடுத்து ஒற்றை மாட்டு வண்டி, ஒட்டகம். எப்படியாவது கிராமத்தை மேப்பில் தேடி அடைந்து, அங்கே போய் பேட்டி கண்டு சப்-டைட்டில்களுடன் சாட்டிலைட் மூலம் தேசம் முழுவதும் காட்டுகிறார்கள்.

அஸ்ஸாமில் உள்ள சிறிய ரயில் நிலையமான கைஸ்வால் சரித்திரத்தில் இடம்பெற ஐந்நூறு பேர் விபத்தில் சாக வேண்டியிருக்கிறது. அதாவது, ரயில்கள் ஓடுவது செய்தி அல்ல. அவை மோதிக் கொள்வதுதான் செய்தி. பி.பி.சி. சி.என்.என்-னின் உலகச் செய்திகளும் அவ்வணமே. இந்தக் கட்டுரையை எழுதும் வாரத்தில் அந்த சேனல்களைக் கவனித்தால் இந்தோனேஷியாவில் கிறிஸ்தவ - முஸ்லிம் இனக் கலவரம்.. கொசோவாவில் அல்பேனிய - செர்பிய மோதல்கள், அயர்லாந்தில் கத்தோலிக்க - -ப்ராடெஸ்டன்ட் மோதல்கள், ஆப்பிரிக்காவில் இனச்சண்டையில் கை கால் வெட்டினது. ஸ்ரீலங்காவில் மனித குண்டு. இப்படியே செய்தி என்பதற்கே அர்த்தம் 'கெட்ட செய்தி மட்டும்' என்றாகிவிட்டது.

எத்தனையோ நகரங்களில் எத்தனையோ அழகான மனைவிகளுடன் மச்சினர்கள் கேலியும் அன்பும் பாட்டுமாக சரளமாக வாழ்கிறார்கள். ரயில்களும் ஏரோபிளேன்களும் நேரத்தில் பத்திரமாகச் செல்கின்றன. நதிகள் கரை மீறாமல் செல்கின்றன. இவையெல்லாம் செய்தி இல்லை. மதனியின் முன் மச்சினர் அண்டர்வேரில் நடை பழக வேண்டும். ரயில் மோத வேண்டும். பிளேன் நொறுங்க வேண்டும். நதி வெள்ளம் ஊருக்

குள் புகுந்து நூறு பேருக்காவது காலரா வரவேண்டும். கூரை மேலிலிருந்து மக்கள் ஹெலிகாப்டரில் சோறு வரக் காத்திருக்க வேண்டும். அப்போதுதான் செய்தி. எத்தனையோ ஊர்களில் சின்னச் சின்ன பாட்டுப் போட்டியும் பேச்சுப் போட்டியும் நடனங்களும் திருவிழாக் களும் உரியடிகளும் கரகங்களும் கொடித் திருவிழாக்களும் நடக்கின்றன. அவை எல்லாம் செய்தி இல்லை. யாராவது யாரையாவது வெட்டிக்கொண்டால் தான் 'ஊடக'த்தகுதி பெறுகிறார்கள்.

மனிதர்கள் வேண்டாம் என்று விலங்குகளைக் காட்டும் 'நேஷனல் ஜியாக்ரபிக்', 'டிஸ்கவரி சேனல்' போனால் - அங்கும் கரடி சால்மன் மீனைப் பிடித்துக் கண்ணை மட்டும் நோண்டிச் சாப்பிட்டுத் துடிக்கத் துடிக்க தூக்கிப் போடுகிறது. சிறுத்தை மானை அடித்துக் கழுத்தில் கடித்துக் குதறி லிப்ஸ்டிக் போட்டாற்போல ரத்தத்துடன் விலகுகிறது. அது ஏன் என்று மீடியா நண்பரிடம் கேட்டபோது, "நல்ல செய்தி கொடுத்தால் யாரும் பார்க்க மாட்டார்கள். 'ரேட்டிங்' விழுந்து விடும்" என்றார். இந்த விடையுடன் சமாதானமாகாமல் ஒரு சைக்காலஜிஸ்ட்டைக் கேட்டபோது, "நம் மனதில் சமூகத் தேவைகளாலும் நாகரிகத்தினாலும் சமூகக் கட்டுப்பாடுகளினாலும் அடக்கி வைக்கப்பட்ட வன்முறை உணர்ச்சிகளுக்கு உபத்திரவம் இல்லாத வடிகால்கள் இவை" என்கிறார்.

வெறுப்பதில் சந்தோஷம் இருக்கிறது. ஒரு கரப்பான்பூச்சியை யாவது சிலந்தியையாவது கமல் ஷாவையாவது வெறுக்க வேண்டும். நம் எண்ணங்களின் செயல்பாடுகளின் ஊற்றுக்கண் வெறுப்புதான் என்கிறார் ஹாஸ்லிட் - "Without something to hate, we should lose the very spring of thought and action.."



மதச்சார்பு, தேசபக்தி எல்லாமே நம் உள்ளே உள்ள வெறுப்பின் கௌரவமான வடிகால்கள், நொண்டிச் சாக்குகள் என்கிறார். உண்மையோ என்று பயமாக இருக்கிறது. தொலைக்காட்சியில் இந்த அவலங்கள் எல்லாம் உண்மையாக நம் நடுக்கூடங்களில் தெரிந்தாலும் எல்லாமே பிக்ஸெல் வடிவங்கள். எந்தவிதப் பொறுப்பும் அபாயமும் இன்றி வெறுக்க முடிகிறது. கறிகாய் நறுக்கிக் கொண்டே ரத்த தரிசனம் செய்ய முடிகிறது. நம்மிடம் மிச்சமுள்ள ஆதிமனித இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள முடிகிறது. தெருவில் யாராவது சண்டை போட்டால் கொஞ்சம் போடட்டும் என்று விட்டுத்தான் அடக்க முயற்சி செய்கிறோமே, அதுபோல!

WWF காட்சிகளை ஐந்திலிருந்து பதினெட்டு வயதுச் சிறுவர்கள், நாற்பதுக்குமேல் உள்ள என் போன்ற மாமா, தாத்தாக்கள் ரசிப்பதற்கும் இதுதான் காரணம் - அது முழுவதுமே 'உட்டாலக்கடி' என்பது நன்றாகத் தெரிந்தும்.

வன்முறையே இல்லாத நிகழ்ச்சிகள் சின்னத் திரையில் இல்லையா..?

இருக்கின்றன. அவை வழக்கொழிவதற்குள் பார்த்து விடுங்கள். உதாரணம் - 'குழந்தைகளுக்கான நிகழ்ச்சி.'

'பேர் சொல்லுங்கம்மா..'

கட்டபொம்மன் வேஷத்தில் குழந்தை - (மௌனம்)

"ரொம்ப ஜோரா இருக்குதே உங்க வேஷம்... யார் போட்டுவிட்டாங்க..?"

குழந்தை (ஆடியன்ஸைப் பார்த்து அதட்டலாக), "அம்மா வாம்மான்னா!"

"அம்மா வரமாட்டாங்க... (கட்டபொம்மன் என்ற பதிலை எதிர்பார்த்து) நீங்க யாரு சொல்லுங்க.."

"கேர்ள்.."

"பேர் சொல்லுங்கம்மா.."

"தமிழ்ச்செல்வி.."

"எதாவது பாடுங்கம்மா."

"பாபா பாக் சீப்.. எவு எனி உல்.."

"தமிழ்ப்பாட்டு ஏதாவது சொல்லும்மா..!"

"முக்காலா முக்காபலா!"

"(அவசரமாக) "நல்லா பாடறீங்க.. போய் உட்காருங்கம்மா.. நீ வாப்பா."

Delightful!

அதுபோல் ஸாய்பராஞ்ச்பே (குழந்தைகள் இளைஞர்கள் சினிமா கழகத்தின் தலைவி) 'பால்தூத்' என்ற ஒரு அருமையான நிகழ்ச்சி கொடுக்கிறார். தூர்தர்ஷனில் ஒவ்வொரு ஞாயிறும் பிற்பகல் 12.30-க்கு வருகிறது. நீங்கள் யாராவது பார்த்திருக்கிறீர்களோ... குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் நல்ல செய்திகள், விஞ்ஞானக் குறிப்புகள், சின்னச் சின்ன கார்ட்டூன், நிஜ வாழ்க்கை சித்திரங்கள் என்று குழந்தைகளே நடத்திக்காட்டும் ஒரு நல்ல முயற்சி. ஆனால், இந்த நிகழ்ச்சியை அவ்வப்போது பலி போட்டுவிடுகிறார்கள். ஐம்பத்து இரண்டு வாரத்தில் முப்பத்தாறு வாரம்தான் வந்திருக்கிறது. காவஸ்கருக்கு ஐம்பது வயசு

என்றால் பாலதூதனை வெட்டி விடுகிறார்கள். கிரிக்கெட், விம்பிள்டன் என்றால் முதலில் வெட்டப்படுவது இதுதான். கைக்காசைப் போட்டு நடத்தும் இலக்கியப் பத்திரிகை போல, எப்போதாவது வருவதால் இதை யாரும் ஒழுங்காகப் பார்க்க முடிவதில்லை. காரணம், நல்ல விஷயத்தை யாரும் பார்ப்பதில்லை என்கிற ஆதாரமான, அதிர்ச்சிகரமான சித்தாந்தம்தான்.

உங்களில் யார் யார் டிஸ்கவரியில் 'நெக்ஸ்டெப்', பி.பி.சி. யின் 'டுமாரோ வொர்ல்ட்' போன்ற நிகழ்ச்சிகள் பார்த்திருக்கிறீர்களோ.. மலையாள ஆசியாநெட் சேனலில், தினசரி கிடைக்கும் கர்னாடக சங்கீதம் பார்க்கிறீர்களோ.. நீங்கள் என் நண்பர். கை குடுங்கள். சில பிரிட்டிஷ் காமெடி நிகழ்ச்சிகள், சித்தார்த் பாசுவின் க்விஸ், டி.என்.டி-யில் சில பழைய படங்கள். சந்திரபாபு, நாகேஷ் பழைய படங்கள். பி.பி.சி-யின் பேட்டிகள்.. இப்படித் தேடிப் பார்த்து சேனல் தாவினால் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் கெட்ட செய்தி இல்லாமல் பார்க்கத் தகுதியாக இருக்கிறது. மெள்ள மெள்ள இது ஒரு நாளைக்குப் பத்து நிமிஷமாக மாறினால் ஆச்சரியமில்லை. நல்லதுதான். புத்தகம் படிக்கும் பழக்கம் பழைய நண்பர்கள் போல.. அவற்றை எழுதியவர்கள் சாவதில்லை. மறுபடி வாழ்கிறார்கள் - வில்லியம் ஹாஸ்லிட் போல!

# ஆழ்வார் பாடல்கள்!

சென்னை கம்பர் கழகத்தின் விழாவை நிறைவுசெய்யும் வகையில் முதன்முறையாக இந்த ஆண்டு அரையர் சேவை நடைபெற்றது. நிகழ்த்தியவர் ஸ்ரீராம பாரதி. இதற்குச் சில வாரங்கள் முன் பாரதிய வித்யாபவனில் அரையர்சேவை பற்றி ஆங்கிலத்தில் ஸ்ரீராமபாரதி எழுதிய புத்தகத்தின் வெளியீட்டு விழாவுக்குப் போயிருந்தேன். வானமாமலை ஜீயர் சுவாமிகள், சி.சுப்ரமணியம், எம்.எஸ்.சுவாமிநாதன், பத்மா சுப்ரமணியம் போன்றோர் பங்கேற்றுக்கொண்ட நல்ல விழாவின் இறுதியில் ஸ்ரீராமபாரதி பிரபந்தத்தில் ராமாயணச் செய்திகளைத் தொகுத்துப் பாடி அபிநயித்து அரையர்சேவை நடத்திக்காட்டினார்.

விஷ்ணு கோயில்களில் ஆழ்வார் பாசுரங்களை விண்ணப்பித்தவர்களை அரையர் என்று சொல்வார்கள். ஸ்ரீரங்கத்தில் மார்கழி மாதம் பகல் பத்து ராப்பத்து உற்சவங்களின் அரையர்சேவை நடைபெறும். அதற்கான பட்டுக்குல்லாயும் குழித்தாளக் கிண்கிணியின் ஒற்றைத் தாளமும் மைக் இல்லாததால் லேசாகக் கேட்கும் பிரபந்தப் பாடல்களும் என் சிறுவயது ஞாபகங்கள்.

இந்த அரையர்சேவை தமிழ்நாட்டில் பல இடங்களில் நடைபெற்றதாம். இப்போது ஸ்ரீரங்கத்திலும் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் மட்டும் இருக்கிறது. ஆழ்வார் திருநகரிலும் வானமாமலையிலும் சிலசமயம் நடைபெறுவதாக ஜீயர் சுவாமிகள் சொன்னார். அரையர் சேவையைப் பற்றிச் சிலர், குறிப்பாக நாட்டியக் கலைஞர்களான மாளவிகா சருக்கை, பத்மா சுப்ரமணியம் போன்றவர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். ஸ்ரீராமபாரதியின் ஆராய்ச்சி முழுமையானது. பாடப்படும் பிரபந்தப் பாடல்களின் அர்த்தம் (பாடல்களின் தமிழ் வடிவத்தையும் கொடுத்திருக்கலாம்!), அவற்றின் ராகங்கள், ஓதுவார்களுக்கும் அரையர்களுக்கும் உள்ள வேறுபாடுகள்,

திருநெடுந்தாண்டகம் என்னும் முழு தியேட்டர் அனுபவம்... இவற்றை விரிவாக எழுதி உள்ளார். அனுபந்தமாக ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அவர்களின் தமிழ்க் குறிப்புகள் மிகவும் பயனுள்ளவை.

அரையர் சேவையை ஒரு தியேட்டர் அனுபவமாகக் கருதி, அதன் பக்தி குறையாமல் புதுப்பிக்க ஸ்ரீராமபாரதி முயற்சி செய்து வருகிறார். இவர் ஒரு விந்தை மனிதர்! டெல்லி கே.எஸ். ஸ்ரீனிவாசன் அவர்களின் (காவ்ய ராமாயணம்) குமாரர். அமெரிக்காவில் டாக்டரேட் படிக்கப் போய் பாதியில் திரும்பிவந்து, டெல்லியில் டாக்டர் வி.வி.சடகோபனிடம் (மற்றொரு விந்தை மனிதர்!) தமிழ்ப் பாசுரங்களைப் பயின்று, தூர்தர்ஷனில் டைரக்டர் வேலையில் இருந்து, அதைத் துறந்து, பள்ளிக்கரணை ஜல்லடியான்பேட்டையில் முத்து திருநாராயணனுக்கு ஒரு கோயில் அமைத்து, அக்கம்பக்கத்துக் கிராமப்பிள்ளைகளுக்குப் பிரபந்தம் பாடச் சொல்லித் தருகிறார்! தெளிவாக, அருமையாக ஆழ்வார் பாடல்களைப் பாடி காஸெட்டுகளாகக் கொடுத்திருக்கிறார்! இத்தனை திருப்பங்களா என்று வியக்கும் அளவுக்கு ஸ்ரீராம பாரதியின் வாழ்க்கைச் சம்பவங்கள் அமைந்துள்ளன. அவருக்கு உறுதுணையாக மனைவி லட்சுமியும் இருக்க, இப்போது பிரபந்த கானத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு கோயிலை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டிருக்கிறார்!

அரையர்சேவையை இவர் வேஷங்களுடன் பாடல்களுடன் அபிநயித்துக் காட்டுவது பரவசப்படுத்துகிறது. திருவரங்கராகிய இறைவனை இசையால் ஏத்தி மகிழ்விப்பது அரையர்களின் பணியாகும். நாதமுனிகள் காலத்திலிருந்து இது வரையறுக்கப்பட்டது. ராமானுஜர் ஆழ்வார் பாசுரங்களின் தத்துவங் களையும் பொருள்களையும் எல்லோரும் அறியுமாறு நடித்துக்காட்ட, ராமானுஜடியார் என்று சிலரை நியமித்தார். 'கோயில் ஒழுகு' போன்ற நூல்களில் அரையர்களுக்கான நியமனங்களும் சலுகைகளும் கடமைகளும் குறிப்பிடப்பட்டு உள்ளன. ஸ்ரீரங்கத்தில் இன்றும் அரையர் குடும்பங்கள் உள்ளன. இன்றைய வாழ்க்கையின் யதார்த்தங்களுக்கிடையில் பழைய கிரமங்களை வழுவாமல் செய்கிறார்கள்.

என் நினைவில் அரையர் சேவையில் பட்டுக்குல்லாயும் 'எச்சரிகே', 'நாயிந்தே நாயிந்தே' (என் நாயகனே) போன்ற கோஷங்களும் சின்னதாக ஆர்ப்பரிக்கும் கிண்கிணியும் சன்னமான தென்றல் போலக் கேட்கும் ஆழ்வார் பாடல்களும் 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய

மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்', 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமானென்றென்றே கண்கள் நீர்மல்கி' போன்ற பாடல்கள் எல்லாம் கேட்டு வந்தபோது, அவற்றின் ஆழ்ந்த இலக்கிய அனுபவத்தையும் பக்திச் சுவையையும் ரசிக்கும் பக்குவம் எனக்கு அப்போது இல்லை. திருமங்கை ஆழ்வாரின் திருநெடுந்தாண்டகம், திருவாய்மொழியில் 'கங்குலும் பகலும்' பாசுரங்கள்... 'சூழ் விசும்பு அணிமுகில்' என்று சொர்க்கத்துக்குப் போகும் மார்க்கத்தை வைகுண்ட ஏகாதசியின்போது பெருமாளே வழிகாட்டும் பாடல்கள்.. இவையெல்லாம் என் எழுத்துக்கு ஒரு முக்கியமான அஸ்திவாரமென்பது இப்போது தெரிகிறது.

ஆழ்வார் பாடல்கள் ஸ்ரீரங்கத்தில் எல்லா தினங்களிலும் ஒலிக்கும். என் மூதாதையரான குவளக்குடி சிங்கமையங்கார் பாடசாலையில் காலையில் ஒலிக்கும். பெருமாள் உற்சவங்களில் வீதிவலம் வருமபோது முன்னால் பிரபந்தகோஷ்டி தமிழில் வர, சமஸ்கிருத - வேதகோஷ்டி பின்னால் தான் வரும். இவையெல்லாம் என் காதில் விழுந்ததே ஒரு பாக்கியம் என்றாலும் என் தந்தை, தமையனார்களின் உந்துதலால் பிரபந்தம் முழுவதையும் படித்தது எழுத்தாளனான எனக்கு ஒரு பெரிய பக்கபலமாயிற்று. இப்போது அரையர் சேவைக்கு ஒரு மவுசு வந்து, அது கலிஃபோர்னியாவில் தலைகலைந்த கதர் அணிந்த அறிவுஜீவிகள் மத்தியில் The total experience of the 'Tirunetuntantakam' as an expression of divine ethos என்று இங்கிலீஷ் பேசிக் கொண்டு டிஸ்கஸிக்கப்பட்டால் ஆச்சரியமில்லை.



'ஆயிரம் பேரைக் கொன்றால் அரை வைத்தியன்' என்று ஒரு பழமொழி உண்டு. இது பேர் இல்லை, வேர் என்று ஒரு மூலிகை வைத்தியர் என்னிடம் சொன்னார். பேரோ, வேரோ.. இப்போதெல்லாம் மருத்துவம் கற்பதற்கு ஆயிரம் பேரை அசால்ட்டாகக் கொல்லலாம், கம்ப்யூட்டரில். அதற்கான புரோகிராம்கள் வந்திருக்கின்றன.. நிஜமான கேஸ்களிலிருந்து ஒரு நோயாளியை உருவாக்கி, அவரை முதலில் பரிசோதிப்பது ஈ.ஸி.ஜி., எக்கோ, ஸி.டி., எம்.ஆர்.ஐ. ஆன்ஜியோ லொட்டு லொசுக்கு என்று டெஸ்ட்டுகள் எடுப்பது, அவரைத் திறப்பது, ஆபரேஷன் செய்வது, மூடுவது, அது தப்பாகிப் போய் அவர் உயிர் ஊசலாடுவது, செத்துப்போவது. ஏன்.. வேண்டுமென்றால் - நம் இந்திய வழக்கத்துக்குக்கேற்ப, வெளியே காத்திருக்கும் மனைவியிடமோ மகளிடமோ, "என்ன செய்யறதும்மா.. எங்களால ஆன எல்லா முயற்சிகளும் பண்ணிப் பார்த்துட்டோம். காப்பாத்த முடியலை. மனசைத் தேத்திக்கிட்டு இன்ஷூரன்ஸ் பாலிஸியை எங்கே வெச்சிருக்கார்.. தேடுங்க.." என்று ஆறுதல் சொல்வதுவரை சிமுலேட்டர்

புரோகிராம்கள் வைத்திருக்கிறார்கள்.

சிமுலேட்டர்களைப் பயிற்சிக்காக பல துறைகளில் பயன்படுத்துகிறார்கள். ஏரோப்ளேனை நிஜமாகப் பறப்பதற்கு முன் அதை அப்படியே தத்ரூபமான காக்பிட்டில் தரையைவிட்டு ஒரு அடிகூட எவ்வாமல் முழுப்பயிற்சியும் அளிக்கும் சிமுலேட்டர்களை ஏர்லைன்காரர்கள் பயன்படுத்துகிறார்கள். ராணுவத்தில் லாரி, டாங்கி ஓட்டுவதை ஒரு சொட்டு பெட்ரோல் செலவில்லாமல் ஒரு கோழிக்குஞ்சு கூட அரை படாமல் சொல்லித் தருகிறார்கள். யுத்தங்களில் சுடுவது, யுத்த தந்திரங்கள், கப்பல் ஓட்டுவது இவற்றின் பயிற்சிக்கான பணச்செலவு குறைகிறது. பயிற்சிக்கு முன்னும் பின்னும் நிறைய உயிர்களும் காப்பாற்றப்படுகின்றன.

என் பைலட் நண்பர் சொன்ன சம்பவம் ஞாபகம் வருகிறது. ஹைதராபாத்தில் ஏர்பஸ் பயிற்சிக்கான சிமுலேட்டரில் பறக்கும் திறமைகளுடன் சங்கடகால பயிற்சிகளும் அளிக்கலாம். வெளியே கண்ணாடி ஜன்னலிலிருந்து கவனிப்பார்கள். பயிற்சி பைலட் நெருக்கடியை எப்படிச் சமாளிக்கிறார் என்று சோதிப்பதற்காக இன்ஸ்ட்ரக்டர் ஒருமுறை இன்ஜினை அணைத்தாராம். ஹைட்ராலிக்ஸை அணைத்தாராம். ரேடியோ தொடர்பையும் துண்டித்தாராம். கற்பவர் சட்டென்று கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து சிகரெட் பற்ற வைத்தராம்.

"என்னப்பா ஆச்சு..? "என்றதற்கு, "பிளேன் ரொம்ப அடாசு.. . பூட்டகேசு. அதான் வெளியே குதித்துவிட்டேன்" என்றாராம்.

"அவர் இப்போது எங்கே இருக்கிறார்?" என்றேன்.

"ஏர்லைன்ஸை விட்டுவிட்டார். அரசியலில் இருக்கிறார்.." என்றார் நண்பர்.

# ஆயிரம் பேர் காத்திருக்கிறார்கள்!



அமெரிக்காவில் வோட்டியந்திரம் இல்லை என்று நான் எழுதியதற்கு மறுப்பாக அமெரிக்காவாழ் அன்பர் ஒருவர், 'அதெப்படி சுஜாதா சொல்லப் போகும்... இருபது வருடங்களாக வோட்டு இயந்திரத்தில்தானே வோட்டுப் போடுகிறேன்' என்று விகடன் அலுவலகத்துக்கு மின் அஞ்சல் அனுப்பி யிருந்தார்.

விளக்குகிறேன். அமெரிக்காவில் மாநிலத்துக்கு மாநிலம் வோட்டுப் போடும் முறை மாறுகிறது. மிகச் சில மாநிலங்களில் ஆதார வோட்டுப் பதிவு எலெக்ட்ரானிக் முறையில் பதிவாவது உண்மைதான். பெரும்பாலான மாநிலங்களின் வோட்டுப் பதிவு 'பாலட் பேப்பர்' என்னும் வோட்டுச் சீட்டு முறையில் தான் நடைபெறுகிறது. நான் கிளிண்ட்டன் தேர்தலின் போது டெக்ஸஸ் மாநிலத்திலும் கலிஃபோர்னியா மாநிலத்திலும் தங்க நேர்ந்தது. அப்போது அவர்கள் வோட்டுப் போடும் முறையைக் கவனமாகப் பார்த்தேன். இரு மாநிலங்களிலும் வாக்குச் சீட்டு முறையைத்தான் பயன்படுத்தினார்கள், முன்பக்கம் பின்பக்கமாக நெருக்கமாக அச்சடிக்கப்பட்ட சீட்டு. ஒரே சீட்டில் கட்சி, ஜனாதிபதி, உப ஜனாதிபதி, செனட், காங்கிரஸ் உறுப்பினர்கள், சுப்ரீம் கோர்ட், ஜட்ஜ்கள், ஜில்லா கோர்ட் ஜட்ஜ்கள், ஷெரீப், டாக்ஸ் கலெக்டர், ரெயில் ரோடு கமிஷனர், கான்ஸ்டபிள் பதவிகளுக்கான பெயர்களைக் கொடுத்து தேர்ந்து எடுக்கிறார்கள்,

ஒவ்வொரு வேட்பாளர் பெயருக்கு எதிரிலும் வெட்டப்பட்ட ஒரு அம்புக்குறி கொடுக்கிறார்கள். வேட்பாளரை விரும்பினால், அவர் பெயருக்கு எதிரான அம்புக்குறியை நிரப்ப வேண்டும். யாரையும் பிடிக்கவில்லை என்றால் பிடித்தமானவர் பெயரை எழுதி, அவருக்கு வோட்டுப் போட ஒரு காலியிடத்தையும் கொடுக்கிறார்கள், சீட்டு பெரிசாக இருந்தது. எல்லாப் பெயர்களும் சீட்டில் இருந்தன. மேலும்

மக்களின் கருத்தைக் கேட்கும் கேள்விகளும் அதே வாக்குச்சீட்டில் பதிவாகியிருந்தன. "

உதாரணமாக, 'நம் மாகாணத்தில் சூதாட்டத்தைத் தடைசெய்ய வேண்டுமா, வேண்டாமா?' போன்ற கேள்விகளும் இருந்தன. சட்டத்திருத்தங்கள் பற்றிய கருத்துக்களும் கேட்கிறார்கள், இந்த வகை வாக்குச்சீட்டில் வோட்டுப் போட படிப்பறிவு வேண்டும். ஆனால், ஆதார வோட்டுப்பதிவு முறை காகிதத்தில்தான். அதில் மக்கள் தம் விருப்பங்களைக் குறித்தபின், குறியிட்ட அடையாளங்களைப் படிக்க 'ஆப்டிக்கல் ரீடர்', 'மார்க்ட் கார்டு சென்ஸர்' போன்ற கணிப்பொறி எலெக்ட்ரானிக்ஸ் சார்ந்த முறைகளைப் பயன்படுத்துகிறார்கள். அதாவது வோட்டுப் போட அல்ல, வோட்டுகளை எண்ண அதிவேக எலெக்ட்ரானிக் முறையையும் அதிவேக செய்தித் தொடர்பையும் பயன்படுத்தி, அன்றிரவே முழு முடிவுகளையும் அறிவித்து விடுகிறார்கள். தேர்தல் தினத்தின் பிற்பகலிலேயே 'எக்ஸிட் போல்' வெளியேற்ற முறையைப் பயன்படுத்தி, டிவி-க்காரர்கள், யார் வெல்லப் போகிறார்கள் என்பதையும் அறிவித்து, தோற்றவர் சாயங்காலத்துக்குள்ளேயே மனைவியுடன் டி.வி-யில் தோன்றி, ஒரு கண்ணீர்த்துளியை விரலால் உதறிவிட்டு, டாட்டா காட்டி விடுகிறார்!

இதுபற்றி, 'அறுபது அமெரிக்க நாட்கள்' என்ற புத்தகத்தில் எழுதி உள்ளேன். நம்முடைய தேர்தல் முறை முற்றிலும் வேறுபட்டது. 'எலெக்ட்டோரல் காலேஜ்' சமாசாரமெல்லாம் இங்கு இல்லை. அந்த விகிதத்தில், நம் இயந்திரங்கள் உலகத்திலே ஒரு புதுமைதான். இந்த உதாரணத்தில் மற்றொரு விஷயமும் இருக்கிறது.

'சுஜாதாவிடமிருந்து இந்தத் தப்பை நான் எதிர்பார்க்கவில்லை' என்ற தொனியில் அன்புடன் எழுதியிருந்தார். பிரபலத்திலும் வெகுஜனப் பத்திரிகையில் எழுதுவதிலும் உள்ள சங்கடம் இது. நல்லது எழுதினால் மனசுக்குள் ஒளித்து வைப்பார்கள். ஒரு தப்புப் பண்ணினால், சுட்டிக்காட்ட ஆயிரம் பேர் காத்துக் கொண்டிருப்பார்கள், இந்தப் பாடம் எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே கிடைத்தது.

குமுதம் இதழில் நான், எஸ்.ஏ.பி, அவர்களின் மறைவுக்குப் பின் சுமார் ஒரு வருடம் அதன் ஆசிரியராக இருந்தது உங்களுக்கெல்லாம் நினைவிருக்கலாம். பொறுப்பை எடுத்துக் கொண்ட கையோடு, சில கோர்ட் கேஸ்கள் (ஜெயலலிதா உட்பட) ஓடிக் கொண்டு இருந்ததை

அறிந்தேன். ஒரு பிரபல டைரக்டரைப் பற்றி ஏப்ரல் 1-ம் தேதி விளையாட்டாக எழுதப் போய், அவர் மானநஷ்ட வழக்குப் போட்டிருந்தார் (எஸ்.ஏ.பி. தன் குன்றிய உடல்நிலையிலும் கோர்ட்டுக்குப் போக வேண்டியிருந்ததாம்). அந்த டைரக்டர், என் நண்பர். அவருக்கு போன் செய்து 'இம்மாதிரி வழக்குகளில் இரு தரப்பும் பிடிவாதமாக இருக்கும்வரை, வக்கீல்களைத் தவிர யாரும் ஜெயிப்ப தில்லை. உங்களுக்கு எந்த விதத்தில் கடிதம் எழுத வேண்டுமோ, அந்த மாதிரி எழுதித் தந்து நிர்வாகத்தைக் கையெழுத்துப் போட்டுத் தரச்சொல்கிறேன்' என்றதும் அவரும் சம்மதித்தார். நிர்வாகத்தினர் 'எஸ்.ஏ.பி. இருந்தால் இம்மாதிரி செய்திருப்பாரா.. சந்தேகம்' என்றார்கள். அதை அவரிடம் சொர்க்கத்தில் போய் விசாரித்துக் கொண்டிருக்க முடியாது. என் ஆசிரியப் பொறுப்பை கோர்ட் கேஸில் ஆரம்பிக்க விரும்பவில்லை என்று விளக்கினேன். இருதரப்பு வக்கீல்களும் சம்மதிக்க... கோர்ட்டுக்கு வெளியே விஷயம் தீர்ந்துவிட்டது!

ஒரு வெகுஜனப் பத்திரிகையின் மேல் கோபித்துக் கொள்ள, தப்பு கண்டுபிடிக்க நிறைய விஷயங்கள் இருக்கின்றன. நிறைய பேர் காத்திருக்கிறார்கள். சில சமயங்களில் ஓர் எளிய மன்னிப்புக் கடிதம் வீண் செலவைக் குறைக்கும்.

பெரிய பத்திரிகைகளில் போட்டிகளை அறிவிப்பதிலும் அபாயங்கள் இருக்கின்றன என்பது நான் கற்ற அடுத்த பாடம். இளையராஜா அவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது, "நான் உங்கள் பத்திரிகை மூலம் புதிய பாடலாசிரியர்களை ஊக்குவிக்க விரும்புகிறேன். அதனால் ஒரு பாட்டின் சந்தம் தருகிறேன். அதை வைத்துக் கொண்டு வாசகர்களைப் பாட்டு எழுதச் சொல்லுங்கள். அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க லாம்..." என்றார். அதை அடுத்து, 'தானன தானன' முறையில் (வாலி அதை தத்தகாரம் என்பார்) ஒரு சந்தம் அனுப்பியிருந்தார். 'சிச்சுவேஷ'னையும் சொல்லியிருந்தார். அதைப் பத்திரிகையில் அறிவித்தபின்தான் தமிழ்நாட்டில் இத்தனை பாடல் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பது தெரிந்தது.

ஆயிரக்கணக்கில் பாடல்கள் வந்து குவிந்தன. அவற்றைச் சந்தத்துக்குப் பொருத்தமானவையா என்று பாடிப் பார்த்துத் தேர்ந்தெடுக்க ஒரு உதவி ஆசிரியரிடம் பணித்தபோது, சில தினங்களில் அவர் கண் சிவந்து, கடும் ஜுரத்துடன் வந்தார். விரல்கள் லேசாக

நடுங்கிக் கொண்டிருந்தன. ஏறக்குறைய சந்நியாசம் வாங்கிச் செல்லும் நிலையில் இருந்தார். பக்கத்து வீட்டுக்காரர்கள் போலீஸுக்குப் புகார் செய்கிறார்கள் என்று சொன்னார் (ஆயிரம் காதல் சந்தங்களைப் பாடிப் பார்த்ததின் விளைவு போலும்!). பலர் 'சந்தம் பொருந்த வில்லையென்றாலும் ஆவனசெய்து நீங்களே திருத்திக் கொள்ள அனுமதி தருகிறேன். அதற்காகச் சன்மானத்தை இசைஞானி குறைத்துக்கொள்ளலாம்' என்று தருமி நாகேஷ் போல எழுதியிருந்தார்கள்.

எப்படியோ ஆயிரக்கணக்கில் இருந்ததை இருபதாகக் குறைத்து ராஜாவிடம் அவர் அவற்றைப் பாடிப் பார்த்துவிட்டு, 'எல்லாமே அடாசு... இது கொஞ்சம் பரவாயில்லை..." என்று ஒன்றைத் தேர்ந்தெடுத்தார். கோவையில் ஒரு தமிழாசிரியர் அனுப்பிய பாடல் என்று ஞாபகம். அடுத்த வாரம் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயரையும் முதல் வரியையும் அறிவித்தோம். 'அந்தப் பாடலை ஒரு திரைப்படத்தில் பயன்படுத்துவார்... பூஜையின் போது கவிஞர் அழைக்கப்படுவார்' என்பதையும் அறிவித்தோம்.

'போட்டி முடிந்தது' என்று என் நிம்மதிப் பெருமூச்சு, புரசைவாக்கம் கெல்லிஸ் பஸ் நிலையம் வரை கேட்டிருக்கும். ஆனால், விதி ஆசிரியர் அறையின் தென்மேற்கு மூலையிலிருந்து சிரித்துக் கொண்டிருந்தது. பாடலின் முதல்வரியை அறிவித்த மறுநாளிலிருந்து அதே பாடலின் அதே வரிகளைத் தான் எழுதியதாக சில நூறு கடிதங்கள் கூரியரிலும் நேரியாிலும் பதிவுத் தபாலிலும் மலிவுத் தபாலிலும் வரத் துவங்கின. இது எனக்கு வியப்பாக இருந்தது. எப்படி இத்தனை பேர் ஒரே பாடலை எழுதியிருக்க முடியும்?'

ரே ப்ராட்பரியின் கதையில் வருவது போல், ஏதாவது தேவதை அனைவர் கனவிலும் ஒரே சமயம் தோன்றி 'எடு பேப்பர் பென்சிலை... எழுதிக்கொள்' என கட்டளையிட்டதா? புரியவே இல்லை. எனினும் எழுதியவரைப் புறக்கணிக்க முடியாது (மறுபடியும் கோர்ட் கேஸா...). அதனால் அவ்வாறு எழுதிய கவிஞர்கள் ஒவ்வொருவரையும் வரவழைத்து, 'எங்கே, நீங்க அந்தப் பாடலை முழுக்க எழுதிக் காட்டுங்க. கையெழுத்தையும் பாத்துரலாம்' என்று சொன்னபோது பெரும்பாலானோர் 'அவசரமாக வேலையிருக்கிறது... மத்தியானம் வந்துர்றங்க' என்று காணாமல் போனார்கள். ஒருவர் மட்டும் விடாப்பிடியாக, 'நான்தான் எழுதியது. அதைப் பரிசு பெற்றவர்

திருடிவிட்டார்’ என்று அங்கலாய்க்க... அவருக்கு ஒரு பாலிகிராஃப் டெஸ்ட் எடுக்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னபின்தான் விலகினார்.



அந்தப் படம் எடுக்கப்பட்டதா... பாடல் பாடப்பட்டதா என்ற விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. ஆயினும் இந்தச் சம்பவத்தை நான் பின்னால் தீவிரமாக யோசித்தபோது கிடைத்த பாடம் என்ன? தமிழ்நாட்டில் குறுக்குவழியில் புகழுக்கு ஆசைப்படுகிறவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள் என்பதா..? இல்லை!

பரிசு பெற்ற பாடலின் முதல் வரியை அறிவித்தது நான் செய்த தப்பு. அந்த வரி - 'முழு நிலவோ கனவோ அழகு தேவதையோ' என்பது போன்ற உப்புச்சப்பில்லாத வரி... தமிழ்நாட்டில் அத்தனை பேருக்குத் தோன்றியிருந்ததில் வியப்பில்லை. இந்தச் சம்பவத்தின் நிஜமான பாடம் - நல்ல கவிஞர்களை இந்த முறையில் தேர்ந்தெடுக்க முடியாது!

# மண்டைக்குள் குரல்!



**ஆ**னந்த விகடன் பத்திரிகையில் 1992-ல் 'ஆ' என்று ஒரு தொடர்கதை எழுதினேன். அதில் ஒருவனுக்கு மண்டைக்குள் குரல்கள் கேட்கின்றன. 'ஆடிட்டரி ஹாலுஸினேஷன்' என்கிற உபாதை அவனுக்கு. இதைப் பற்றி ஒரு சைக்கியாட்ரி புத்தகத்தில் படித்ததிலிருந்து என் மண்டைக்குள் அந்தக் கதைக் கரு உறுத்திக்கொண்டே இருந்தது. ஆராய்ச்சி பண்ணி புத்தகங்கள் படித்து எழுத ஆரம்பித்தேன். கதை சொல்லும் பாணியில், ஒருவிதமான மனக் கலக்கம் கொண்ட ஐ.ஐ.டி. படித்த புத்திசாலி கணிப்பொறி இன்ஜினீயரின் மன அலைச்சல்களை பிரதிபலிக்கும் வகையில் நடையை அமைத்திருந்தேன். உதாரணமாக -

'வாழ்க்கையில் சில விஷயங்கள் ஓசைப்படாமல் அறிமுகமாகின்றன. சில திருப்பங்கள் அறிவிப்பில்லாமல் நுழைகின்றன. சில மாறுதல்கள் அனுமதியில்லாமல் தம்மை நுழைத்துக் கொண்டுவிடுகின்றன. சில ரத்தங்கள் சத்தமில்லாமல் சிந்துகின்றன. பருவங்கள் மாறுவது போல உருவங்கள் மாறுகின்றன. நம்பிக்கைகள் நாளைய குர்யோதயத்துடன் விழுந்துவிடுகின்றன. பக்தி நாஸ்திகமாகிறது. தன்னம்பிக்கைகள் பயமாகின்றன.'

இவ்வாறான ஒரு மாதிரியான சிதறிய நடையில் கதாநாயகன் தன் மனச் சித்திரங்களை விவரிக்கிறான். அந்தத் தொடர்கதையின் ஒவ்வொரு அத்தியாயமும் 'ஆ' என்ற ஓர் ஒற்றை எழுத்தில் முடிக்கிற யோசனையை ஆசிரியர் பாலசுப்ரமணியன் கூறியபோது, அது என் எழுத்துத் திறமைக்கு ஒரு சவாலாக இருந்ததால் ஏற்றுக் கொண்டேன். கதை என்னை எழுதிக் கொண்டு போனது. சென்னையிலும் டெல்லியிலும் திருச்சியிலும் அலைந்தது. முற்பிறவியும் இப்பிறவியும் இடம் மாறின. மனைவி காதலியானாள். துரோகங்கள் மறுபிறவிக்குத் தொடர்ந்தன.

இந்த கதை வெளிவந்து கொண்டிருந்த போது பெங்களூரில் வாசம் செய்து வந்தேன். ஒரு நாள் இரவு ஓர் இளைஞன் என்னைப் பார்க்க வந்திருந்தான். இரவு பதினொன்றிருக்கும். நெல்லையிலிருந்து பஸ் பிடித்து நேராக வீட்டை விசாரித்து வந்திருக்கிறான் (இந்த மாதிரி ஆட்களுக்கு எல்லாம் விலாசம் கண்டுபிடிப்பதில் சிரமமே இருப்பதில்லை). அவன் சொன்ன கதை என்னை திகைக்க வைத்தது. பிரமிப்பாக இருந்தது.

தான்தான். 'ஆ' கதையின் நாயகன் என்றும் என் மகளை மணம் முடிப்பதற்காக தான் வந்திருப்பதாகவும் சொன்னான். மண்டைக்குள் அதே குரல்கள் அவனுக்கும் கேட்பதாகச் சொன்னான். அதற்கு பணிந்துதான் வந்திருப்பதாகவும் சொன்னான்.

எனக்கு மகள் இல்லை என்று அந்த ராத்திரி வேளையில் சொல்லிப் பார்த்தும் அவன் என்னைக் கவனிக்கவே இல்லை. 'உங்களுக்குப் பணிவிடையாவது செய்கிறேன். வேலை கொடுங்கள்' என்றான்.

'ஆ' கதாநாயகனின் மனக்குரல் அவனைக் கொலை செய்யத் தூண்டும். 'The author makes his readers just as he makes his characters' என்று Henry James சொன்னது சட்டென்று நினைவுக்கு வந்தது. 'இது என்னடா வம்பாகப் போச்சு! அவனை எங்கே அனுப்புவது... எப்படிச் சமாளிப்பது?' என்று யோசித்த வேளையில் என் மனைவி அவனுடன் தெளிவாகப் பேசி எந்த ஊர், அப்பா - அம்மா யாரு என்பதெல்லாம் விசாரித்தாள் (அவளுக்கு என் எழுத்தால் வரும் விளைவுகள் பழகிவிட்டன). அவனை என்ன செய்வது என்று தெரியவில்லை. அவனது எளிய பையில் மெடிக்கல் ரெக்கார்டுகள் இருந்தன. கையில் காசில்லை. அவன் ஒரு 'ஸ்கிட்ஸோ' என்று தெரிந்து கொண்டேன். கண்டமேனிக்கு அவனுக்கு இஸிடி ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்திருப்பதும் தெரிந்தது.

எப்படியோ சமாதானம் சொல்லி அவன் தந்தைக்குத் தகவல் தெரிவித்து ('ஐயோ... அங்க வந்துட்டானுங்களா..?') திரும்பிப் போக பஸ் கட்டணம் கொடுத்து அவனை வீட்டுக்கு அனுப்புவதற்குள் பெரும்பாடாகிவிட்டது.


அடுத்தமுறை நான் திருநெல்வேலி சென்றிருந்த போது அந்த தந்தை என்னை வந்து சந்தித்து, பணத்தைத் திருப்பிக் கொடுத்தார். 'பையனுக்கு

எப்படி இருக்கிறது?' என்று கேட்டதில் 'பரவாயில்லை' என்றார்.

எழுத்து என்பது எந்த மனதை எப்படிப் பாதிக்கிறது என்பது எழுதும் போது தெரிவதில்லை. என் அனுபவத்தில் பெரிய பத்திரிகைகளில் ஓரளவுக்கு நம்பும்படியாக எழுதினால் விதிவிலக்கில்லாமல் அது வாசகர்களிடம் சில எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தியே தீரும். உதாரணமாக 'ஆ' தொடர்கதையில் நான் போகிற போக்கில் குறிப்பிட்டிருந்த தோரஸின் மருந்து எங்கு கிடைக்கும்... அதை சாப்பிட்டதில் உங்கள் மண்டைக்குரல்கள் நின்றுவிட்டதா என்று ஒருவர் கேட்டிருந்தார். இந்த மருந்துகளை யாரும் டாக்டர் சம்மதமின்றி உட்கொள்ளக்கூடாது என்று கதையின் இடையில் ஒரு எச்சரிக்கை விடவேண்டியிருந்தது.

கணேஷ் - வசந்த் உண்மையாகவே இருக்கிறார்கள் என்று பலர் நம்புகிறார்கள். 'வசந்தை ஏன் கூட்டி வரவில்லை?' என்று பொதுக்கூட்டத்தில் கேட்கிறார்கள். கணேஷ் - வசந்தின் 'எதையும் ஒருமுறை' கதையை தொலைக்காட்சித் தொடராகத் தருகிறார் சுஹாசினி. அண்மையில் அவரை ஒரு ரசிகர் நெருங்கி 'நிருபமா... உங்களுக்கு வசந்த் ரொம்ப தொந்தரவு கொடுக்கிறானா...' என்று கேட்டதாகச் சொன்னார். இதையெல்லாம் என் எழுத்தின் வெற்றியாகக் கொள்வதைவிட எழுத்தின் பொறுப்பாகத்தான் எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரியான அனுபவங்கள் எல்லா எழுத்தாளர்களுக்கும் ஏற்படும் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்கள் எப்படிச் சமாளிக்கிறார்களோ... நான் கடைப்பிடிக்கும் கொள்கை இது: வாசகர்கள் என் எழுத்தைத்தான் ரசிக்கிறார்கள். நேசிக்கிறார்கள், விமரிசிக்கிறார்கள். சில சமயம் திட்டுகிறார்கள். என்னை அல்ல. என்னை அவர்களுக்குத் தெரியாது. பாராட்டும் திட்டும் வேறு யாருக்கோ நிகழ்வதாகக் கொள்ள வேண்டும். இல்லையெனில், எழுத்து சொந்த வாழ்க்கையைப் பாதித்துவிடும்.

எழுத்தாளனிடம் வாழ்க்கையின் பிரச்னைகளுக்கு விடைகள் இல்லை. அவன் தொழில் சுற்றிலும் நடப்பதைத் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்வையாளனின் நோக்கில் உன்னிப்பாகப் பார்த்து சம்பவங்களைத் தொகுத்து யோக்கியமாக, பாசாங்கு இல்லாமல் சொல்வது. முடிவுகளை வாசகனுக்கே விடுவது.



வாசகர் கடிதங்களுக்கும் நான் சாதாரணமாக பதில் எழுதுவதில்லை. 'ஏறக்குறைய சொர்க்கம்' எழுதும்போது ஒரு வாசகர் தன் மனைவி மேல் சந்தேகப்பட்டு பக்கம் பக்கமாக ஒரு கடிதம் எழுதியிருந்தார். 'நாளைக்குள் எனக்குப் பதில் வரவில்லையென்றால் தற்கொலை பண்ணிக் கொள்வேன்' என்றது கடிதம்.

என் மனைவி அதைப் படித்துவிட்டு, 'இவருக்கு ஒரு பதில் எழுதிவிடுங்களேன்' என்றாள். நான் எழுத மறுத்துவிட்டேன். அதற்கு இரண்டு காரணங்கள் சொன்னேன். தற்கொலை செய்து கொள்பவன் இந்த மாதிரி அறிவித்து விட்டு செய்து கொள்ள மாட்டான். அது சடுதியில் தாக்கும் ஒரு உடனடி வியாதி. மேலும் அந்த மனைவியின் கதை நமக்குத் தெரியாது. அவளைக் கேட்டால் கதை வேறாக இருக்கும்.

உண்மையான வாசகர்கள் கடிதம் எழுதுபவர்கள் இல்லை.' அவர்களை நான் அணுகவேண்டும் என்பது என் எழுத்து வாழ்வில் கற்ற மற்றொரு பாடம்.

அண்மையில் ஒரு கல்யாணத்தின் போது ஒரு பெண்மணி என்னை அணுகி தனியாகப் பேசவேண்டும் என்றார்.

"என்ன...?" என்றேன் தயக்கத்துடன்.

"உங்க 'ஆ' கதையைப் படிச்சேன்.”

"அப்படியா... சந்தோஷம்..."

"அதுல வர மாதிரி எனக்கும் மண்டைக்குள்ள குரல்லாம் கேக்கறது."

"இஸிட்? டாக்டரைப் பார்த்தீங்களா?"

"தேவையில்லை. உங்க தினேஷ் குமாருக்கு அந்தக் குரல் தற்கொலை செய்யச் சொல்றது. எனக்கு என்ன கேக்கறது தெரியுமோ?"

"என்ன..?" என்றேன் நடுக்கத்துடன்.

"பெருமாள் பேரா கேக்கறது."

முகத்தில் படிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு டைனிங் ஹாலுக்குச் சென்றேன்.

# தங்க பஸ்பம் உஷார்!



அண்மையில் டயபடிஸ் உடனடியாக குணமாவதாக மார்க்கெட்டில் ஒரு மாத்திரை பரவலாக உலவியது. அதைச் சாப்பிட்டதும் ப்ளட்சுகர் சரேல் என்று ரம்பாவின் ஜாக்கெட் பிளவுஸ் போல சரிகிறதாம். குலாப்ஜாமூன், லாடு, சோன்பப்டி, ரஸ்மலாய் எல்லாம் வஞ்சனையில்லாமல் சாப்பிடலாம் என்று அந்த மாத்திரையை மக்கள் பரபரப்பாக வாங்கினார்கள். ஸ்ரீலங்காவுக்குச் செல்பவர் எல்லாம் ஆளுக்கு பத்து பட்டை வாங்கிச் சென்றார்கள் (அங்கே நான்கு மடங்கு விலையாம்). இது குறித்து டாக்டர் கிருஷ்ணசுவாமியிடம் கேட்டபோது, 'இந்த மாதிரியான விந்தை மருந்துகள் டயபடிஸுக்கு வந்துகொண்டே இருக்கும். இவற்றில் ஈயம் போன்ற கனமான உலோகங்கள் கலந்திருக்கலாம். அவை கிட்னி, சிறுநீரகத்தின் செயல்பாட்டைக் குறைத்து சுகர் குறைவது போல தோற்றத்தை ஏற்படுத்தும். எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தங்கபஸ்பம் சாப்பிடுவதும் அவ்வாறே! ஒரு நாள் கிட்னியே போய்விடும்' என்றார். அது போல ஆஸ்துமாவுக்கு ஹைதராபாத்தில் குறிப்பிட்ட தினத்தில் உயிருள்ள ஒரு மீனை விழுங்கினால் போதும்... பளிங்கு மாதிரி குணமாகிவிடும் என்கிறார்கள். முதுகுவலிக்கு யோகா, ரெக்கிடி, ப்ராணிக் ஹீலிங், காது கேளாதவர்களுக்கு ஒரே ஒரு சொட்டு, போலியோவுக்கு ஒரு எண்ணை என்று என்ன என்னவோ சொல்கிறார்கள்.

ஆதாரமாக ஒன்றை நாம் அறிவோம். எந்த வியாதிக்கும் குறுக்குவழியில் சிகிச்சை கிடையாது. ஒரு நாளில் டயபடிஸ் குணமாகிவிடுவது ஒரு வாரத்தில் கம்ப்யூட்டர் கற்றுத் தருகிறோம் என்கிறார்களே அது போல. இதனால் அலோபதி முறை உயர்ந்தது என்று நான் சொல்லவில்லை. அதிலும் பணம் பிடுங்கும் உத்திகள் பல இருக்கின்றன. விஞ்ஞான ரீதியாக வலிக்காமல் அட்டை மாதிரி

பிடுங்குவார்கள். துரதிர்ஷ்ட வசமாக மருத்துவம் என்பது இப்போது வியாபாரமாகிவிட்டது. எந்த வியாபாரத்துக்கும் தங்கள் விலைஉயர்ந்த சரக்கை விற்பதுதான் முக்கியக் குறிக்கோள். அதற்கு வாடிக்கையாளர் கள் தேவை. அலோபதி மருத்துவத்தில் விலை உயர்ந்த சரக்கு என்ன? தேவையில்லாத சர்ஜரி தான். இந்த தொந்தரவில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க சில சாமர்த்தியங்கள் பழக வேண்டும்.

அலோபதியின் கண்டுபிடிப்பு முறைகளில் குறை ஏதும் இல்லை. அவர்கள் பரிந்துரைக்கும் சிகிச்சைகள்தான் மறுபரிசீலனைக்கும் கேள்விகளும் உரியவை. நன்றாகக் கேள்வி கேட்கலாம். கேட்க வேண்டும்.

பொதுவாக எந்த வலியும் இருபத்தைந்து நிமிடங்களுக்கு மேல் நீடித்தால் காரணம் கண்டுபிடிக்க வேண்டும். டாக்டரைப் பார்க்க வேண்டும் என்பார்கள். தலைவலியோ, வயிற்று வலியோ, நெஞ்சுவலியோ பரிசோதிப்பதில்... டெஸ்ட் எடுப்பதில் தப்பில்லை. ஆனால், டெஸ்ட் எடுத்தபின் டாக்டர் சொல்லும் சிகிச்சையை உடனே அப்படியே வேதவாக்காக ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயமில்லை. இரண்டாவது மாற்றுக் கருத்து உள்ளதா என்று பார்க்க வேண்டியது மிக முக்கியம் (பெரும்பாலும் இருக்கும்). அதை அறிந்தே ஆக வேண்டும், குறிப்பாக அறுவை சிகிச்சை சிபாரிசு செய்யும் போது. உதாரணம்: உங்களுக்கு மாடிப்படியேறும் போது மூச்சு இரைக்கிறது. ஏன்... பேசும்போதே மூச்சு வாங்குகிறது என்றால் அது நிச்சயம் இதயம் சம்பந்தப்பட்ட கோளாறு. அதற்கு முதலில் ஈசிஜி எடுக்கச் சொல்வார்கள். படுக்க வைத்து மார்பில்... கையில்... காலில் எலெக்ட்ரோடுகளை இணைத்து அருகில் ஒரு கருவி சத்தமின்றி வரைந்து காட்டும். இதில் அபாயமில்லை. ஆனால், 'ரெஸ்ட் ஈசிஜி' என்பது பெரும்பாலும் வெத்து. 'ஈசிஜி எடுத்து பார்த்துட்டேன். எல்லாம் நார்மல்னு சொல்லிட்டார் டாக்டர்' என்று என்னிடம் சொன்னவர், அடுத்த வாரம் ஹிந்து ஸ்போர்ட்ஸ் பேஜில் கீழ் இடது மூலைக்கு வந்துவிட்டார்.


அடுத்த கட்டம் 'ஸ்ட்ரெஸ் ஈசிஜி.' இதில் இதயக்கோளாறுகளை நிச்சயம் கண்டுபிடிக்க முடியும். ஆனால், அனுபவமிக்க கார்டியாலஜிஸ்டுகளால்தான் அந்த 'எஸ்டி செக்மெண்ட்' ஏற்ற இறக்க கிறுக்கல்களை ஐயந்திரிபறப் படிக்க முடியும். அடுத்து 'எக்கோ' என்று ஒரு சமாசாரம். அல்ட்ராசவுண்டு என்று சொல்வார்கள். ஸ்கான்

என்பார்கள் (கர்ப்ப ஸ்திரீகளுக்குச் செய்யவில்லை என்றால், குழந்தை பிற்காலத்தில், 'என்னம்மா ஸ்கான் பண்ணிக்காம என்னைப் பெத்துக்கிட்டியா! அவமானமா இருக்கம்மா' என்று புகார் செய்யும்.).

இதயத்தை ஸ்கான் பண்ணும்போது மார்பில் ஒரு ஜெல்லி போல் தடவி அதன்மேல் 'பீஸோ எலெக்ட்ரிக்' டிரான்ஸ்ட்யூசரை வைத்து அழுத்தி கேளா ஒலியை பயன்படுத்தி இதயத்தின் உள்ளே தசைகளும் வால்வுகளும் இயங்குவதைக் கணிப்பொறி மூலம் மறுபதிப்பு செய்து காட்டுவார்கள். வலிக்காது... அபாயம் ஏதும் இல்லை.

இதில் வால்வு கோளாறுகளையும் இதயம் என்னும் பம்பின் ஆற்றலையும் கண்டுகொள்ள இயலும். ஆனால், இதிலிருந்து இதயத்தைச் சுற்றிலும் உள்ள கரோனரி ஆர்ட்டரி என்னும் ரத்தக் குழாய்களின் அடைப்புகளைக் கண்டுபிடிக்க முடியாது. அப்படிச் சொன்னால் டாக்டரை மாற்றி விடுங்கள். அதற்கு 'ஆன்ஜியோகிராம்' எடுக்க வேண்டும். தனியார் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். அதிக செலவாகும். அரசு மருத்துவமனைகளில் கருவி வேலை செய்கிறதா என்று விசாரித்துவிட்டுப் போகலாம்.

'ஆன்ஜியோகிராம்' என்பது தொடையிலிருந்து இதயத்துக்கு நேராகச் செல்லும் ரத்த நாளத்தில் பொத்தல் போட்டு, ஒரு நுட்பமான குழாயை அனுப்பி இதய வாசலுக்கு வந்ததும் எக்ஸ்ரே நுண் கதிர்களை மறைக்கக்கூடிய ஒரு சாயத்தைப் பீய்ச்சி விடியோ எடுப்பது. ரத்தக் குழாய்கள் அடைபட்டிருப்பதைப் பார்க்க அவர்களால் முடியும். வலிக்கவே வலிக்காது. சாயம் பீய்ச்சும்போது உடலெல்லாம் சற்று உஷ்ணமாக உணர்வோம், அவ்வளவுதான். மயக்க மருந்து ஏதும் கிடையாது (அமெரிக்காவில் காஸெட் போட்டு பாட்டு கேட்டுக்கொண்டே செய்வார்கள்.). ப்ளாஸ்திரி பிரிக்கும் போது மட்டும் வலிக்கும். ஆன்ஜியோகிராமை நீங்கள் பார்த்தால் சாட்டிலைட்டிலிருந்து படம் பிடித்த காட்டாறு போல இருக்கும். அனுபவம் உள்ள கார்டியாலஜிஸ்டுகள் இந்த சுவாரஸ்யமான விடியோக்களைப் பார்த்து குழாயில் எத்தனை சதவிகிதம் அடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கணிப்பார்கள். சிலர் நாற்பது சதவிகிதம் என்பார்கள். சிலர் தொண்ணூறு என்பார்கள். யாரை நம்புவது? அனுபவ ஆண்டுகள் அதிகமுள்ள டாக்டர்களை நம்பவும். சர்ஜன்களைவிட கார்டியாலஜிஸ்டுகளை நம்பலாம். எப்படியும் அந்த விடியோவை கல்யாண விடியோ போல பலரிடம் போட்டுக்காட்டத் தயங்கக் கூடாது.



இதன் பின்னர் சிகிச்சை. அதில் இரண்டு இருக்கிறது - 'ஆன்ஜியோப்ளாஸ்டி', 'பை-பாஸ் சர்ஜரி' என்று. ஆமாம்... இதெல்லாம் எப்படி உனக்கு அத்துப்படி என்று உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஒரு ஆன்ஜியோப்ளாஸ்டி, இரண்டு பை-பாஸ் செய்து கொண்டு களம் கண்ட மறத்தமிழன் நான்.

மருத்துவ சாத்திரம் தினம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் 'ஹார்ட் அட்டாக்' என்பது தலைவலி ரேஞ்சுக்கு வந்துவிடலாம். அதன்பின்,

"என்ன சார் ரெண்டு நாளா காணோம்?"

"அதுவா, முந்தா நாள் (கைகளை அகல விரித்து) இத்தா பெரிய ஹார்ட் அட்டாக் வந்துச்சுங்க. என்ன பண்ணேன் (பைக்குள்ளிலிருந்து குட்டி டார்ச் போல ஒரு கருவியை எடுத்து) இதை மார்ல வெச்சுக்கிட்டேன்ங்க. ப்ர்ர்ர்ர்ன்னு சத்தம் வந்துச்சு... ஒரு நிமிஷத்துல சரியாப்போச்சு" என்ற உரையாடலை விரைவிலேயே எதிர்பார்க்கலாம்.

**ஆ**ழ்வார் திருநகரியைச் சேர்ந்த ஸ்ரீனிவாச ஆச்சாரியார், அரையர் சேவையைப் பற்றி நான் எழுதியிருந்த கட்டுரையை விமரிசித்து விகடன்

அலுவலகத்தின் ஃபேக்ஸ் மூலமும் தனித்தபாலிலும் எனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். தூய தமிழ்ப் பிரபந்தங்களைப் பரப்ப வேண்டிய அரையர் வம்சத்தைச் சேர்ந்தவர், எதற்காக ஆங்கிலத்தில் எழுதினார் என்பது எனக்கு வியப்பாக இருந்தது. ஆங்கிலத்தில் எழுதும்போது சில தமிழ்ப் பெயர்களின் உச்சரிப்பில் சந்தேகம் வருகிறது. (உதாரண்மாக:Keelaiyagathazhvan Melayagathazhvan) தமிழிலேயே எழுதியிருக்கலாம். எனக்குக் கொஞ்சம் தமிழ் தெரியும். அரையர் அவர்கள் கடிதம், என்னுடைய ஸ்ரீவைஷ்ணவ தென் சம்பிரதாய அறிவின் குறைபாட்டைக் குறிப்பிட்டு சற்று காட்டமாக எழுதப்பட்டிருந்தாலும் அதன் சாரத்தைப் பதிப்பிக்க வேண்டியது பத்திரிகை தர்மம்.

அரையர் ஸ்ரீனிவாச ஆச்சாரியார் சொல்வது இதுதான் - மணவாள மாமுனிகள் தன் சகோதரியின் புத்திரர்கள் கீளையகத்தாழ்வான், மேலையகத்தாழ்வான் இருவர் மூலமும் ஏற்பாடு செய்ததுதான் அரையர் சேவை என்பது. இதில் தான் மேலையகத்தாழ்வான் வம்சத்தில் வந்தவன் என்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருக்கின்றன என்பதையும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். மேலும் "வானமாமலை ஜீயர் சுவாமிகள் அரையர் சேவை இப்போதெல்லாம் ஸ்ரீரங்கத்தில் தவிர வேறெங்கும் சரியாக நடப்பதில்லை என்று குறிப்பிட் டிருக்க மாட்டார். 'வியாபாரக் கூட்டத்தின் இரைச்சலிடையே' நீதான் அவரைச் சரியாகக் கேட்டிருக்கமாட்டாய். ஆழ்வார் திருநகரியில் வருடம் முழுவதும் அரையர் சேவை நடைபெறுகிறது. அதை கடந்த மே மாதம் 30-ம் தேதி ஜீயர் சுவாமிகளே பார்த்திருக்கிறார்” என்று எழுதியிருந்தார். வருடம் முழுவதும் அரையர் சேவை ஆழ்வார் திருநகரியில் நடைபெறுகிறது என்பதை அறிய எனக்கு மிக்க மகிழ்ச்சி.

# நாய் தத்துவம்!



குறுக்குவழிகள் மருத்துவத்தில் மட்டும் இல்லை. அறிவியலின் அத்தனை பிரிவுகளிலும் தோற்றமெடுக்கும். கொஞ்ச காலம் அரசோச்சும். ஓச்சி, அவை தப்பு என்று நிரூபிக்கப்பட்டு பதவி நீங்கும்.

பூமி தட்டை என்று இன்றும் நம்புபவர்கள் இருக்கிறார்கள். 'சந்திரனுக்கு மனிதன் போகவே இல்லை... எல்லாம் பாவ்லா' என்று சொல்லும் ஜோசியர்கள் இருக்கிறார்கள். வேற்றுக் கிரகத்தில் மனிதர்கள் இருப்பதாக நம்புகிறார்கள். பறக்கும் தட்டைப் பார்த்தவர்கள், பிசாசைப் பார்த்தவர்கள், கடவுளைக் கண்டவர்கள், லஞ்சம் வாங்காத அரசியல்வாதியைப் பார்த்தவர்கள் என்று பலதரப்பட்ட விளிம்பு மனிதர்கள் இருக்க, பகுத்தறிவின் அழுத்தமான குரலாக நவீன விஞ்ஞானம் இருக்கிறது. மெள்ள மெள்ள விடைகளைக் கண்டுகொண்டிருக்கிறது.

ஸ்ரீலங்காவைச் சேர்ந்த ஐ.நா. அதிகாரியும் தமிழ் எழுத்தாளருமான நண்பர், ஏ. முத்துலிங்கம் அண்மையில் எனக்கு ஒரு சுவாரஸ்யமான புத்தகத்தை அனுப்பியிருந்தார்.(Longitude by Dava Sobel, Fourth Estate, London.)

பதினெட்டாம் நூற்றாண்டு வரை மனித உள்ளங்களை ஆக்கிரமித்த ஒரு பிரச்னை லாஞ்ஜிட்யூடு என்னும் கடக ரேகை பற்றியது. Longitude Problem என்று சொல்வார்கள்.

பூமியை அட்சரேகை, கடகரேகை என மானசீகக் கோடுகளால் பிரித்திருப்பதை எல்லோரும், எல்லா வரைபடங்களிலும் பூகோள உருண்டைகளிலும் பார்க்கிறோம். இந்த முறை கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்து இருந்து வருகிறது. டாலமி (Ptolemy), கி.பி.150-ல்

முதல் உலக அட்லஸ் பதிப்பித்தார். அதில் இருபத்தேழு வரைபடங்கள் இருந்தன.

இந்த சரித்திரப் புகழ்பெற்ற புத்தகத்தில் டாலமி, உலகின் பல இடங்களின் பெயர்களையும் அட்சரேகை, கடகரேகைகளையும் அகர வரிசையில் பட்டியலிட்டிருந்தார். டாலமி உலகை வரைந்தாலும் வீட்டைவிட்டு அதிகம் போகாத வானவியலாளர். பூமத்திய ரேகைக்குக் கீழே இருப்பவர்கள் எல்லாம் உஷ்ணத்தில் கருகிச் செத்து விடுவார்கள் என்று நம்பி வந்த காலம் அது. அதனால், பூமத்திய ரேகைக்கு அவர்கள் 0 (சைபர்) எண்ணிக்கை கொடுத்தார்கள்.

அதேபோல, சூரியன் திசை மாறும் 'ட்ராபிக் ஆஃப் கான்சர்', 'கப்ரிக்கார்ன்' போன்ற வகைகளிலும் ஓரளவுக்குக் குழப்பமில்லை. இவை அனைத்தும் பூமியின் ஒட்டியாணங்கள் போல, கிழக்கு மேற்காக வரையப்படும் இணை அட்சரேகைக் கோடுகள். நடுப்பகலில் சூரியனின் உயரத்தை வைத்துக் கொண்டு அல்லது நட்சத்திரங்களைக் கொண்டு, அவர்களால் ஒரு இடத்தின் அட்சரேகை என்ன என்பதைத் துல்லியமாகக் கணக்கிட முடிந்தது.

பூமத்திய ரேகைதான் அட்சரேகையில் 0 (சைபர்) டிகிரி என்பதில் கருத்து வேறுபாடு ஏற்படவில்லை. வடக்கு தெற்காகக் குறுக்கே செல்லும் கடக ரேகைகளில்தான் குழம்பினார்கள். டாலமி அதில் முதல் ரேகையை கானரி தீவுகள் ஊடே செல்வதாக வரைந்தார். பின்னர் வந்த வரைபடப் பதிப்பாளர்கள் ரோமாபுரி, கோபன்ஹாகன் போன்ற நகரங்களின் வழியே இஷ்டத்துக்குக் கடகரேகையின் முதல் ரேகையை வரைந்து வந்தார்கள்.

கடலில் செல்லும் மாலுமிகளால் அட்சரேகை அளவுக்குக் கடகரேகையைக் கணக்கிட இயலவில்லை. அதற்குக் காரணம், அவை இணைகோடுகள் அல்ல... அவற்றுக்குள் உள்ள இடைவெளி, பூமத்திய ரேகையில் மிக அதிகமாகத் துவங்கி, வடக்கே செல்லச் செல்ல அவை நெருக்கமாகி, துருவங்களில் புள்ளியாக ஒன்று சேர்ந்துவிடுகின்றன.

பூமி ஒரு முறை சுழலுவதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் இருபத்து நான்கு மணி நேரம். அதில் 360 டிகிரி கடகரேகைகளாகப் பிரித்திருப்பதால், ஒரு மணி நேர இடைவெளி என்பது, பதினைந்து டிகிரி கடகரேகை வித்தியாசம் என்பது தெரிந்தது. அது பூமத்திய ரேகையில் ஆயிரம் மைல் தூரத்துக்குச் சமம். மாலுமிகள் ஒவ்வொரு


தினமும் சூரியன் உச்சத்தில் இருக்கும்போது, மணி மதியம் பன்னிரண்டு என்று கடிகாரத்தை அமைத்துக்கொண்டார்கள்.

அப்போது அதே சமயத்தில், புறப்பட்ட இடத்தில் என்ன மணி என்று தெரிந்தால், ஒவ்வொரு மணிக்கு பதினைந்து டிகிரி என்று கணக்கிட்டு, கடகரேகையின் மதிப்பைக் கண்டுபிடித்து, அட்சரேகையுடன் சேர்த்து இருப்பிடத்தைத் தெரிந்துகொள்வார்கள். இதற்கு ஒரு நல்ல கடிகாரம் தேவைப்பட்டது. அந்தக் காலங்களில் அந்த அளவுக்குத் துல்லியமான கடிகாரங்கள் இல்லை. அவர்கள் காலத்துக் கடிகாரங்கள், தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப விரைந்தோ, மெள்ளவோ சென்றன... நின்றன.

அதனால் நீண்ட நாள் பயணத்தில், புறப்பட்ட இடத்தில் அல்லது தெரிந்த மற்றொரு இடத்தில் சரியான மணி என்ன என்பதை அறியாமல் மாலுமிகள் பலர் திசை தவறினார்கள். கப்பல்கள் மூழ்கி, ஆயிரக் கணக்கானவர்கள் இறந்துபோனார்கள். கப்பல்கள் தரை தட்டின. வாஸ்கோடகமா, மெகல்லன், சர் ஃப்ரான்சிஸ் ட்ரேக் போன்ற தேர்ந்த மாலுமிகள்கூட, போக விரும்பிய இடங்களை அடைந்ததற்குக் கொஞ்சம் அதிர்ஷ்டத்தையும் கடவுளையும் காரணம் காட்டினார்கள்.

கடலில் செல்லும்போது நிற்காத ஒரு கடிகாரத்தைக் கண்டுபிடிப்பதுதான் அந்நாட்களின் தலையாய கவலையாக இருந்தது. ஈயத்தைத் தங்கமாக்குவது, சதா இளமைக்கு மருந்து, எப்போதும் இயங்கும் இயந்திரம்... அவற்றைப் போல மிகப்பெரிய சவாலாக இருந்தது.

1687-ல் 'அடிபட்ட நாய் தத்துவம்' என்று ஒன்று பிரபலமாக இருந்தது. சர் கெனலம் டிக்பி (Sir KenelmDigby) என்கிற ஒரு போலி டாக்டர், தெற்கு பிரான்ஸில் ஒரு அதிசய மருந்தைக் கண்டுபிடித்தார். இது ஒரு சூரணம், பொடி. அதன் விசேஷம் என்னவென்றால், அதனால் வெகுதூரத்தில் இருப்பவர்களைக்கூடக் குணப்படுத்த முடியும். இதற்கு டிக்பி 'அனுதாப பவுடர்' (Powder of Sympathy)என்று பெயர் சூட்டினார்.



ஒவ்வொரு முறையும் கப்பலில் பயணப்படும்போது, ஒரு நாயைக் காயப்படுத்தி அழைத்துச் சென்றார்கள். கிளம்புவதற்குமுன், அதன் காயத்தைக் கட்டின துணியை நம்பகமான ஆளிடம் கொடுத்துவிடுவார்கள். தினமும் அந்த ஆசாமி, அந்தத் துணியின்மேல் அனுதாப பவுடரைச் சரியாகப் பகல் பன்னிரண்டு மணிக்குத் தெளிப்பார். அப்போது கடலில், கப்பலில் சென்ற நாய் வலியில் ஊளையிடுமாம்! உடனே, ஊரில் நேரம் பன்னிரண்டு... இங்கே நேரம் நாலரை. அதனால், நம் கடகரேகை இத்தனை' என்று முடிவு செய்தார்கள். நாய்கள், அதுவும் கப்பலில் செல்லும் நாய்கள் அவ்வப்போது வீட்டு ஞாபகம் வந்து ஊளை இடுவதில் ஆச்சரியமில்லை. அதை வைத்துக் கணக்கிட்ட மாலுமிகளும் திசை தவறியதில் ஆச்சரியம் இல்லை.

இங்கிலாந்து அரசு 1714-ல் 'கடகரேகை சட்டம்' ஒன்று இயற்றியது. இன்று ஏறக்குறைய பத்து லட்சம் டாலர் மதிப்புள்ள பரிசு தருவதாக அந்த நாட்களில் அறிவித்தார்கள், கடலில் பயன்படக்கூடிய நல்ல கடிகாரம் கண்டுபிடிப்பவர்களுக்கு!

1714-ல் அறிவிக்கப்பட்ட பரிசு, 1773-ல்தான் கொடுக்கப்பட்டது. அந்தப் பரிசைப் பெற்ற ஜான் ஹாரிசன் - பெண்டுலம் இல்லாமல், கப்பலின் ஆட்டத்துக்கேற்ப ஈடுகொடுத்து, தட்பவெப்பங்களுக் கேற்ப சுருங்கி நீளும் உலோகங்களை நுட்பமாக ஜோடி சேர்த்து, அருமையான கடிகாரத்தை வடிவமைத்திருந்தார். ஹாரிசன் அதிகம் படித்தவர் அல்ல. அதனால், அவருக்குப் பரிசு கொடுக்க அந்தக்கால வானவியல் நிபுணர்களும் படித்தவர்களும் தயங்கினார்கள். ஏறக்குறைய சாகும்தறுவாயில் அவருக்கு அந்தப் பரிசு கொடுத்துத்

தொலைக்கப்பட்டது. காரணம் - ஹாரிசனின் கடிகாரங்கள் சரியாக வேலை செய்து, மாலுமிகளுக்கு வழி காட்டின.

இன்று பர்மா பஜாரில் நூறு ரூபாய்க்குக் கிடைக்கும் டிஜிட்டல் கடிகாரம், ஹாரிசனின் கடிகாரத்தை விடப் பல மடங்கு நுட்பமானது. எல்லா விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் இப்படித் தடுக்கித் தடுக்கித்தான் உன்னதம் பெறும். அறிவியல் அறிவு முன்னேற முன்னேற, இந்த 'உன்னத இடைவெளி' சுருங்கிவருகிறது.

கம்ப்யூட்டர் 1942-ல் ஒரு ஹால் முழுவதும் பரவியிருந்தது. இன்று, பான்பராக் சைஸுக்கு வந்து விட்டது. மைக்ரோ பிராஸஸர் என்னும் சில்லு 1972-ல் கண்டுபிடிக்கப்பட்டு, இன்று ஒரு லட்சம் மடங்கு உன்னதம் பெற்றிருக்கிறது. அதேபோல்தான் இன்டர்நெட், டி.என்.ஏ. எல்லாம் ஏதோ ஒரு அவசரத்தில் இருக்கின்றன.

ஒரு தெருவில் எல்லோரும் வேகமாக ஒரு திசையில் ஓடிக்கொண்டிருந்தார்களாம். அவர்கள் ஒருவனோடு சற்று நேரம் கூடவே ஓடி, 'எங்கே போகிறாய்..?' என்று விசாரித்ததில், 'எனக்குத் தெரியாது... அவங்கெல்லாம் ஓடறாங்க, நானும் ஓடறேன்...' என்றானாம்.

இன்றைய டெக்னாலஜியின் நிலையும் இதுதான்!

# காந்தி தரிசனம்!



காந்தி மகாத்மா பிறந்த நாளின் போது சென்னை வானொலியிருந்து போன் செய்தார்கள். 'இன்று காந்தி ஜெயந்தி. அவரைப் பற்றி ஏதாவது சொல்லுங்கள். நிலையத்துக்கெல்லாம் வரவேண்டியதில்லை. அப்படியே தொலைபேசியிலேயே பதிவு பண்ணிக் கொள்கிறோம்' என்றார்கள்.

நான், 'கொஞ்சம் இருங்கள். மூஞ்சி அலம்பித் தலைவாரிக்கொண்டு வந்துவிடுகிறேன். அஞ்சு நிமிஷம் விட்டு மறுபடி போன் செய்யுங்கள்' என்றேன். அவர்களும் 'சரி' என்று சொன்னார்கள். அவர்களுக்குப் புரிந்ததா, தெரியவில்லை.

காந்தியை நாம் இப்போது இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் வேடிக்கைக்கு உரிய ஒரு தாத்தாவாகத்தான் கருதுகிறோம். 'ரூபாய் நோட்டில் சிரிக்கிறார் காந்தி, புன்னகையை ஏந்தி' என்று சினிமாப் பாட்டு பாடுகிறோம். காந்திக் கணக்கு என்கிறோம். அலுமினியம் பெயிண்ட் தடவி கண்காட்சிசாலைகளில் கழியேந்தி நிற்கவைக்கி றோம். குழந்தைகளுக்கான மாறுவேஷப் போட்டி களில் காந்தியும் பாரதியாரும் எப்போதும் உண்டு. ஒவ்வொரு ஊரிலும் ஒரு மகாத்மா காந்தி ரோடு இருக்கிறது. அதில் ஒயின்ஷாப் கட்டாயமாக இருக்கிறது.

உண்மையாக இன்றைய தலைமுறையினர் பெரும்பாலான வருக்கு காந்தி என்கிற அடையாளமே பிடிபடவில்லை. காரணம் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் காந்தி இறந்தபின் பிறந்தவர்கள். மிச்சமுள்ளவர்கள் அவரை தேசப்பிதா ஸ்தானத்துக்கு ஏற்றி அவரிடமிருந்த கொஞ்சநஞ்ச மனித இயல்புகளையும் கழற்றிவிட்டு மகாத்மாவாக்கிவிட்டார்கள். அதில் பல சௌகரியங்கள் உண்டு. குறிப்பாக, வருஷத்துக்கு இரண்டு தடவை ரோஜாமாலையுடன்

மறந்துவிட லாம். இந்த அபாயம் அண்ணா, எம்.ஜி.ஆர். தமிழ்த்தாய், இந்தியப் பெண் எல்லோருக்கும் உள்ளது.

இன்று பாரதி இருந்திருந்தால் காந்தியைப் பற்றிய தன் அறுசீர் விருத்தத்தில் ஒரு வரியை மட்டும் திருத்தியிருப்பார்:

'வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்கத் தவறிவிட்டோம்
வாய்ச் சொல்லில் வீரரானோம்'

என்று மன்னிப்புக் கேட்டிருப்பார்.


காந்தியைப் பற்றிய என் இளவயது ஞாபகங்கள் இவை: இரண்டு முறை காந்தியை நான் பார்த்திருக்கிறேன். ஏறத்தாழ 'தரிசித்திருக்கிறேன்' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. சுதந்திரம் வந்த பின்னரா, முன்னரா... சரியாக ஞாபகமில்லை. அவர் விசேஷ ரயிலில் தென் இந்தியச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். மூன்றாம் வகுப்புப் பெட்டி ஒன்றில் வந்தார். ஸ்ரீரங்கம் ரயில்நிலையத்தில் அதிகாலையிலேயே சென்று மரத்தின் மேல் ஏறிக்கொண்டு காத்திருந்தோம். வண்டி லேட்டாக வந்தது. லால்குடியில் தாமதித்துவிட்டு எங்கள் ஊருக்கு வந்தது. காந்தி அடிகள் மெள்ளக் கதவு திறக்க, ரயில்பெட்டியின் வாசலில் நின்றார். சிவப்பாக இருந்தார். ஜெயகோஷங்கள் முழங்கின. எங்கள் பக்கத்து மரக்கிளையில் கீழச்சித்திரை வீதி சீமாச்சு அன்றைக்கு மட்டும் கதர் குல்லாய் போட்டிருந்தான். தெற்கு வாசல் கதர்க்கடை நாராயணனிடம் வாங்கியதாகச் சொன்னான். எனக்கும் போட்டுக்கொள்ள வேண்டும் போலிருந்தது. குல்லாய் வாங்க காசில்லை. ஆளாளுக்குக் கூட்டத்தை கட்டுப்படுத்திக் கொண்டிருக்க... காந்தி, 'இந்த ஊரில் ரங்கராஜன் என்று ஒருவன் இருக்கிறானாமே... அவனைக் கூப்பிடுங்கள்' என்று சொல்வார் என்று எதிர்பார்த்தேன். அவர் எங்களை நோக்கிப் பொதுவாகக் கையசைத்துவிட்டு, கைகூப்பி வணங்கினார். ரயில் புறப்பட்டது.

அடுத்த முறை சென்னை தி.நகர் இந்திப் பிரசார சபாவிலோ,

தக்கர்பாபா வித்யாலயத்திலோ... சரியாக ஞாபகமில்லை - ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. மைதானம் ஞாபகம் இருக்கிறது. வெகுதூரத்திலிருந்து காந்தியைப் பார்த்தேன். அப்போதும் என்னை அவரால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

காந்தியின் சுயசரித்திரம் படித்திருக்கிறேன். எனக்கு அதில் பளிச்சென்று ஞாபகம் இருக்கும் பகுதிகள் மூன்று. அவரும் என்னைப்போல சின்ன வயசில் திருடியிருக்கிறார். மாமிசம் சாப்பிட்டு விட்டு இரவு அந்தப் பிராணி கனவில் வந்து, 'நான் என்ன பாவம் செய்தேன்' என்று கேட்பது போல அவஸ்தைப்பட்டு எழுதியிருக்கிறார். அப்பாவோ, அம்மாவோ சாகக்கிடக்கும்போது மனைவியுடன் படுத்திருந்து சுகம் அனுபவித்ததைப் பற்றிய குற்ற உணர்ச்சியுடன் எழுதியிருக்கிறார். இவ்வாறு அவர் நிஜமாகவே நகமும் சதையும் உள்ள மனிதர் என்பதை உணர்த்தும் சம்பவங்கள் அவருடைய சுயசரிதையில் உள்ளன.

மிக எளிய, நேரடியான, தப்பில்லாத, அலங்காரமில்லாத ஆங்கிலநடை என்னையும் என் எழுத்தையும் பாதித்தது. எளிய அணுகுமுறை. சத்தியாக்கிரகம் என்னும் ஆயுதம் இன்று ஏகே47-ஐவிட அதிக சக்தியுள்ளதாக இருக்கிறது. அதை தோரோ, மார்ட்டின் லூதர்கிங், மண்டேலா போன்றவர்கள் பயன்படுத்தியதும் சாதனைகள். தோரோ, ரஸ்கின், டால்ஸ்டாய், எட்வின் ஆர்னால்டு போன்றவர்களை அவர் குறிப்பிட்டதால் அணுகிப் பயன்பெற்றேன். ஒரு வாழ்நாளில் அவர் எழுதியவை பத்தாயிரம் பக்கத்துக்கு மேல் இருக்கும். அண்ணலின் எழுத்துக்களை திரட்டி வெளியிடுவதற்காக ஒரு சர்க்கார் இலாகாவே டெல்லியில் பல வருடங்கள் இயங்கியது. இதையெல்லாம் அசைபோட்டுக் கொண்டிருக்கையில் டெலிபோன் ஒலித்தது.



"ஹலோ, சுஜாதாங்களா... ஒரு நிமிஷம் இருங்க... டேப்ரிக்கார்டரை ஆன் பண்றோம். நாங்க ஓகே சொன்னதும் பேசுங்க."

பேசினேன்.

"காந்தி மகாத்மா பிறந்ததினமான இன்று எனக்குச் சில வருஷங்களுக்கு முன் ஆர்.கே.லஷ்மண் வரைந்த கார்ட்டூன் ஞாபகம் வருகிறது. ஒரு அரசியல் தலைவர் பெரிய படத்தின் கீழ் என்ன பெயர் எழுதியிருக்கிறது என்று குனிந்து உற்றுப் பார்த்துப் படிக்க முயன்று கொண்டிருப்பார். அருகில் உள்ளவர் 'காந்தி சார்' என்பார்.

வருஷத்தில் ஒரே ஒரு தினம்தான் நாம் காந்தியடிகளை நினைவு கூர்கிறோம். அவர் சமாதிக்கு மலர் வைக்கிறோம். அதே வைஷ்ணவ ஜனதோ, அதே கதர்க்குல்லாய், அதே ராட்டை, அதே நூல். இந்தக் காலத்து இளைஞர்கள் காந்தியைப் பார்ப்பது ரூபாய் நோட்டுக்களில்


மட்டுமே. அவர் வாழ்ந்த வாழ்வையும் செய்த தியாகங்களையும் இப்போது சொன்னால் ஐன்ஸ்டைன் கூறியது போல் இப்படி ஒருவர் இருந்தாரா என்பதை நம்ப மறுப்பார்கள்.

இப்போது காந்தியை நம் எல்லா உபாதைகளுக்கும் குற்றம் சொல்வது ஒரு கெட்ட பழக்கமாகிவிட்டது. 23ஏ பஸ் குறித்த நேரத்தில் வராவிட்டாலும்கூட காந்திமீது பழிபோடுகிறோம். அவருடைய கிராமப்புறம் சார்ந்த பொருளாதாரம் நடைமுறைக்கு ஒவ்வாது என்று சொல்லி, கிராமங்களில் அநாவசியமான நுகர்பொருள் ஆசைகளை வளர்த்திருக்கிறோம் . அவர்களுக் கெல்லாம் வேலை வாய்ப்புத் தராமல் நகரத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அடுத்த வேளை சோற்றுக்கு ஏற்பாடு செய்யாமல் ஷாம்பூ எளிதாகக் கிடைக்கும்படி செய்திருக்கிறோம். இன்றும் சரியாகப் படித்துப் பார்த்தால் காந்தியின் கிராமப் புறம் சார்ந்த பொருளாதாரம்தான் நம் ஏழ்மையைப் போக்குவதற்கு ஒரே மார்க்கம்.

அடுத்த முறை நூறு ரூபாய் நோட்டிலோ ஐந்நூறு ரூபாய் நோட்டிலோ காந்தியின் புன்னகை முகத்தைப் பார்க்கும்போது ஒரே ஒரு வைராக்கியம் எடுத்துக்கொள்ளுங்கள். அதைச் செலவழித்து உங்கள் சொந்தக் கிராமத்துக்கு ஒரு முறை சென்று வாருங்கள். அங்கு எதாவது ஒரு நல்ல காரியம் செய்து வாருங்கள். 'இன்று நபிகள் நாயகம் இந்தியாவுக்கு வந்தால் என்னைத்தான் நிஜமான முஸ்லிம் என்று ஏற்றுக்கொள்வார். உண்மையான கிறிஸ்தவர்கள் மேற்கே இல்லை. இருந் திருந்தால் உலக யுத்தங்கள் வந்திருக்காது' என்று காந்தி ஒரு கடிதத்தில் எழுதினார்.

இத்தகைய ஆழமான கருத்துக்களையாவது நினைவுகூரலாம்."

# மந்திர வார்த்தை!



இன்று ஆங்கிலத்தில் மிக அதிகம் பயன்படும் எழுத்து என்ன? E என்றால் உங்களுக்கு சைபர் மார்க். சௌபாக்யா வெட்கிரைண்டர் கிடையாது (சைபருக்குச் சரியான தமிழ் வார்த்தை என்ன?)!

W-தான் அதிகம் புழங்கும் எழுத்து! World Wide Web-ல் உள்ள மூன்று எழுத்துக்களான www-தான் இன்று உலகை ஆக்கிரமிக்கிறது.

வெப் என்று சொல்லப்படும் இன்டர்நெட் வலைப்பின்னல் எப்படி வந்தது என்று கொஞ்சம் சரித்திரம் பேசலாம்.

1990-களில் வையகம் முழுவதும் விரியத் தொடங்கிய இந்த வலையைப் பற்றிய கனவு நாற்பதுகளிலேயே தொடங்கியுள்ளது. அமெரிக்க ராணுவ ஆராய்ச்சி சாலைகளின் தலைவராக இருந்த வான்னவார் புஷ் என்பவர் 1945-ல் 'அட்லாண்டிக் மன்த்லி' என்கிற பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். 'நாம் நினைத்தால்' என்பது கட்டுரையின் தலைப்பு.

"இப்போது நம்மிடம் உள்ள கருவிகளைச் சரியாகப் பயன்படுத்தினால் மனிதனால் உலகம் இதுவரை பெற்றுள்ள அத்தனை அறிவையும் அணுகவும் கட்டுப்படுத்தவும் முடியும்" என்றார். தொடர்ந்து அவர் தகவல் வெள்ளத்தைப் பற்றிப் பேசினார்... தகவல்களை ஆள்வதன் அவசியத்தையும்... "மனித அனுபவங்களின் கூட்டுத்தொகை பயங்கரமாக அதிகரித்துக்கொண்டு வருகிறது... இந்த அறிவுவலையின் ஊடே உலவ நாம் பயன்படுத்தும் முறைகள் புராதனமானதாக இருக்கின்றன" என்றார்.

புஷ் இதை எழுதிய காலகட்டத்தில் கணிப்பொறிகள், அளவில்

மிகப்பெரிதாக இருந்தன. இன்றைய பாக்கெட் கால்குலேட்டரை விட சக்தி குறைந்த கணிப்பொறி, ஏறக்குறைய வள்ளுவர் கோட்டம் ரேஞ்சுக்கு இடத்தை ஆக்கிரமித்தது. ஆனால், புஷ் சொன்ன யோசனை அவர் காலத்தை மீறினதாயிற்று. அவர் தகவல்களைச் சங்கிலிபோல் இணைப்பதைப் பற்றி அப்போதே பேசினார். மனிதமனம் செயல்படுவது போல் தகவல்களையும் இணைக்க முடியும் என்றார். இந்த மாதிரி இணைப்பதற்கு 'மெமெக்ஸ்' என்று பெயர் சூட்டினார்.

மனிதமனம் எப்படி இயங்குகிறது என்று யோசித்தால் 'ஹைப்பர் லிங்க்' என்னும் சித்தாந்தம் புரியும். முதலில் இந்த 'ஹைப்பர்' என்கிற சொல் 'ஹைப்பர்-ஸ்பேஸ்' முப்பரிமாணங்களை மீறிய விண்வெளிக்குப் பயன்பட்டது. அதுபோல் ஹைப்பர் லிங்க் என்பது அன்றாடப் பரிமாணங்களை மீறிய தொடர்பு.

கணவனுடன் ஒரு மனைவி பேசும் பேச்சு இதற்குப் பொருத்தமான உதாரணம்.

"நம்ம சாரதா இருக்காளே, அவகூட டிவோர்ஸ் பண்ணிட்டு புரொபசர் ஒருத்தனோட போயிட்டாளே, அவா வீட்டுல, அதாங்க அக்ரிகல்ச்சரல் காலேஜ் புரொபசர், அவா வீட்டுலகூட கறுப்பா ஒரு நாய் இருக்குமே... அதுகூட ஒரு தடவை நம்ம சுலோசனாவை மூக்குல கடிச்சுடுத்தே!" இந்த அன்றாட உரையாடலில் நிகழும் ஹைப்பர் லிங்க்குகளைக் கவனியுங்கள்... சாரதா - டிவோர்ஸ் - அக்ரிகல்ச்சரல் காலேஜ் - நாய் - கறுப்புநிறம் - சுலோசனா - மூக்கு... இதில் விசேஷம் என்னவென்றால், தகவல்கள் அனைத்தும் அந்த மனைவியின் மூளையின் நியூரான் நினைவகங்களில் அங்கங்கே பதிவாகி இருக்கின்றன. அவற்றைச் சங்கிலி போல் இணைக்கும் செயல்முறை 'அல்காரித'மும் அந்த மனைவியின் மூளையில், புத்தியில் பதிந்திருக்கிறது. இதே உரையாடல் கணவனுக்கும் மனைவிக்கும் நிகழ்ந்தால் எப்படி இருக்கும்?

கணவன்: "நம்ம சாரதா இருக்காளே.."

மனைவி: "ஆமாங்க அவகூட புரொபசர் ஒருத்தர் கூட ஓடிப்போய்ட்டாளே.."

கணவன்: "அக்ரிகல்ச்சரல் காலேஜ்?"

மனைவி:"அவங்க வீட்டில் ஒரு நாய் இருக்குமே!"

கணவன்: "கறுப்புநாய்!"

மனைவி: "சுலோசனாவை கடிச்சுடுச்சே!"

கணவன்: "மூக்குல!"

இப்போது கணவன் - மனைவி இரண்டு மூளைகளிலும் நியூரான்களில் பதிந்த செய்திகள் ஹைப்பர் லிங்க் செய்யப்படுகின்றன. இருவர் மூளைகளிலும் தகவலைத் தேடி இணைக்கும் அல்காரிதமும் செயல் முறையும் பதிந்திருக்கின்றன. புஷ் இப்படித்தான் கணிப்பொறித் தகவல்களையும் இணைக்க வேண்டும் என்றார். தன் வாழ்நாளில் இந்த 'மெமெக்ஸை' அமைக்க முடியவில்லை. ஆனால், அவர் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். அவர்களில் டெட் நெல்சன் என்பவரும் ஒருவர்.

1965-ல் ஏஸ்எம் என்னும் அமெரிக்கக் கணிப்பொறிக் கழகத்துக்கு அளித்த ஆராய்ச்சிக் கட்டுரையில் ஹைப்பர் டெக்ஸ்ட் 'மீஉரை' என்ற சித்தாந்தத்தை முதலில் எடுத்துரைத்தார் நெல்சன். ஒரு கணிப்பொறியில் இருக்கும் தகவல்களிலேயே மற்றொரு கணிப்பொறியில் உள்ள தகவல்களை அணுகி இணைக்கும் மென்பொருள்களை வைப்பதை அவர் குறிப்பிட்டார். உதாரணமாக, சார்லஸ் டிக்கன்ஸ் ஒரு சிறந்த நாவலாசிரியர் என்கிற தகவலைக் கணித்திரையில் பார்த்தால் அதில் இருந்து டிக்கன்ஸின் நாவல்களின் தலைப்புகளின் பட்டியல் உள்ள தகவல் தளத்துக்கு இணைப்பு இருக்கும். அதை நீங்கள் அணுகித்தேர்ந்தெடுத்தால் அதிலிருந்து டிக்கன்ஸின் 'பிக்விக் பேப்பர்ஸ்' அல்லது 'எ டேல் ஆஃப் டூ சிட்டிஸ்' நாவலை அணுகிப் படிக்க முடியும். மற்ற நாவல்களுக்கான இணைப்புகள் அந்த புரோகிராமிலேயே இருக்க வேண்டும். 1965-ல் நெல்சன் எழுதியது இது - "கணிப்பொறிகளின் எதிர்காலம் அதில் கிடைக்கும் தகவல்களுடன் நாம் இணைந்து செயல்படுவதில் இருக்கிறது. உலகளாவிய ஒரு வலை பின்னலின் மூலம் உலகில் உள்ள அத்தனை தகவல்களுடன் பாலங்கள் அமைக்க வேண்டும்."

இதைச் சாத்தியமாக்கும் மென்பொருளுக்கு ஜனாது (xanadu) என்று பெயர் வைத்தார். காலரிட்ஜ் என்னும் ஆங்கிலேயக் கவிஞரின் ஒரு கவிதையிலிருந்து இந்தப் பெயர் வந்தது. அந்தக் கவிதையில் ஜனாது என்பது இலக்கிய நினைவுகள் எதுவும் மறக்கப்படாத மாய உலகம்.

நெல்சன் ஐடியா மன்னர். ஆனால், செயல்படுத்தப் பொறுமையில்லாதவர். அவரால் அதை முடிக்க இயலவில்லை. ஜான் வாக்கர் 'ஆட்டோ டெஸ்க்' என்கிற பிரபலமான கம்பெனியை நிறுவியவர். ஐம்பது லட்சம் டாலர் கொடுத்து நெல்சனின் ஐடியாவை வாங்கினார். நாலு வருஷம் அதில் உழைத்தார். அதற்குள் ஸ்விஸ் நாட்டில் செர்ன் (CERN) என்னும் அணுத்துகள் ஆராய்ச்சிசாலையில் டிம் பெர்னர் லீ என்ற இயற்பியலாளர் உலகளாவிய வலைப்பின்னல் ஒன்றை அறிவித்தார். அதற்கு World Wide Web என்று பெயரிட்டார். இது 1989-ல். லீ கண்டுபிடித்த மூன்று ஆதாரமான விஷயங்கள் இன்று கணிப்பொறி இயலில் குழந்தைகளுக்குக்கூட அத்துபடி. முதலில் எல்லா கம்ப்யூட்டர்களும் தகவலை அணுகுவதற்கான விதிமுறைகளை 'ப்ரோட்டோக்கால்' அறிவித்தார். 'ஹைப்பர் டெக்ஸ்ட் டிரான்ஸ்ஃபர் ப்ரொட்டோக்கால்' (http) என்று இதற்குப் பெயர். இது ஆரம்பம், இது செய்தி, இது முடிவு, இது படம், இது எழுத்து என்று முன்பே தீர்மானிக்கப்பட்ட விதிமுறைகள். பிறகு கணிப்பொறிகளில் தேடும்போது அவற்றுக்கு முகவரியைக் கொடுக்கும் முறையை அறுதியிட்டார். யுஆர்எல் (URL-Uniform Resource Locator)என்று இதன் பெயர். நீங்கள் கணிப்பொறியில் ஒரு வலைமனையைத் தேடும்போது இந்த முகவரியைத்தான் முதலில் கொடுக்கிறீர்கள். www.playboy.com என்று அடிக்கும் போது நீங்கள் கொடுப்பது யுஆர்எல் முகவரிதான். நெல்சன் அதன்பின் எச்.டி.எம்.எல். (HTML-Hypertext Markup) என்னும் கணிப்பொறிக்கான எளிய மொழியையும் வடிவமைத்தார். கணித்திரையில் தெரியும் டாகுமெண்ட்டுகளை ஆணைத்தொடர்கள் மூலம் தலைப்பாகவோ அல்லது மற்ற செய்திகளுடன் இணைப்பாகவோ நிர்ணயிக்கக்கூடிய எளிய கணிமொழி.

1991-ல் பெர்னர் லீ இந்த மூன்று மென்பொருள்களையும் இன்டர்நெட் இணையத்தில் வைத்தார். இன்று உலகம் பூரா இவை மந்திர வார்த்தைகள் ஆகிவிட்டன! இந்தியாவில் சிறு நகரங்களில்கூட இவற்றைக் கற்றுத் தரும் நிலையங்கள் புற்றீசல் போலக் கிளம்பிவிட்டன. கொஞ்சம் பொது அறிவு இருந்தாலே எச்டிஎம்எல் கற்றுக்கொண்டு உங்கள் சொந்த வலைமனையை அமைக்கலாம்.

1945-ல் ஒருவர் மனதில் ஒரு ஐடியாவாக இருந்தது இன்று உலகெங்கும் புரவியுள்ளது. Nothing is more powerful than an idea whose time has come என்று விக்டர் ஹ்யூகோ சொன்னதுபோல எல்லாவற்றுக்கும் வேளை வரவேண்டும். இதனிடையே கனவு

காண்பதை நிறுத்தக்கூடாது.

தமிழ் சினிமாவில் கலாபூர்வமான படங்களுக்கு வேளை வந்துவிட்டதா என்று யோசிக்க சென்ஸார் அதிகாரி ஞான ராஜசேகரன் எடுத்திருக்கும் 'முகம்' என்கிற திரைப்படத்தைப் பார்க்கலாம்.

தோற்றத்தில் குரூபியான ஒருவன் முகத்தைப் பார்த்து உலகம் அவனைத் திறமையிருந்தும் நிராகரிக்கிறது. காதலுக்கோ, மிலிட்டரிக்கோ, கட்சிக் கூச்சலுக்கோ, ஏன்... ஒரு பிரியாணி பொட்டலத்துக்குக் கூட லாயக்கில்லாத முகம். தப்பித்தவறி ஒரு சினிமா சான்ஸ் கிடைத்தால் ஜனங்கள் அந்த முகத்தைப் பார்த்து வெறுப்பாகி திரையைக் கிழித்து எரிக்கிறார்கள்.

இந்த நிலையில் அவனுக்கு அந்த முகத்தை நீக்கி ஒரு அழகான பொய் முகத்தைப் பொருத்திக்கொள்ளும் வாய்ப்பு தற்செயலாகக் கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு புகழின் உச்சத்துக்குச் சென்று விடுகிறான். நாடே அந்த முகத்தை உபாசிக்கிறது. அழகான பெண் அந்த முகத்தை தர்ணா இருந்து திருமணம் செய்து கொள்கிறாள். மக்கள் அதை புஜங்களில் பச்சை குத்திக்கொள்கிறார்கள். அந்த முகம் குட்டிக்குழந்தைகளுக்குப் பேர் வைக்கிறது. சச்சரவு களுக்குத் தீர்வு சொல்கிறது பொய்முக உபாசனை அவனுக்கு மனதில் உறுத்துகிறது. மீண்டும் பழைய முகத்துக்கு ஏங்குகிறான். கடைசியில அதைத் திரும்பப் பெறுகிறான். அதே மக்கள் அவனை அடித்து மிதிக்கிறார்கள். மீண்டும் பொய்முகத்தை மாட்டிக்கொள்கிறான். அதுவே அவனுடைய நிஜ முகமாகிறது.

Allegory முறையில் மறைமுகமான நேர்முகமான செய்திகள் உள்ள இந்தக் கதையை ராஜசேகரன் பெரும்பாலும் திறமையாகத்தான் சொல்லியிருக்கிறார். அங்கங்கே நாசர் கண்ணாடி முன் நின்றுகொண்டு சுய இரக்கமாக 'என் முகத்தை யாரும் மதிக்கமாட்டார்கள்... எல்லோரும் வெறுக்கிறார்கள்.." என்று விஷுவலாக ஏற்கெனவே காட்டியதை விளக்கும் காட்சிகளை டைரக்டர் தவிர்த்திருக்கலாம். இளையராஜாவின் பொருத்தமான, உறுத்தாத பின்னணி இசையும் நாசரின் நடிப்பின் உழைப்பும் வித்தியாசமான கதையும் இந்தப் படத்தைத் தமிழின் ஒரு முக்கியமான திருப்புமுனையாகச் சொல்ல வைக்கின்றன. அவார்டுகள் வரும். மக்கள் வரவேண்டும்.

# சிங்கப்பூர் தமிழன்!



யு டி.வி. சிங்கப்பூரின் டி.வி. பன்னிரண்டு சானலுக்காகத் தயாரிக்கும் 'பேனா முனை' நிகழ்ச்சியில் தமிழ்க் கவிதைகளின் பல்வேறு வடிவங்கள் பற்றி அரவிந்தனுடன் உரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஒரு வாரம் சிங்கப்பூர் சென்றிருந்தேன். சாட்டிலைட், ஜி.பி.எஸ். மூலம் டாக்ஸிகள் விளிக்கப்பட்டு மத்திய நகரத்தில் நுழைந்தால், தானாகவே சுங்கம் கழிக்கப்பட்டு, ராணுவ அணிவகுப்பு போல வாகனங்கள் நகரும் ஹைடெக் நகரத்தின் வான்விரும்பும் கட்டடங் களின் முகப்பில் 'யாரும் இல்லைதானே கள்வன்' போன்ற சங்கப் பாடல்களையும் அவற்றுடன் மரபுத் தொடர்ச்சி கொண்ட புதுக் கவிதைகளையும் இயல்பாகப் படித்துப் பார்த்தோம். தேவைப்பட்டால் விளக்கினோம்.

கல்யாண்ஜி, கலாப்ரியா, மனுஷ்யபுத்ரன், பழமலய் போன்ற தெரிந்த கவிஞர்களுடன் அமலன், ஸ்டான்லி, லாவண்யா, ஆடலரசன், நா. விசுவநாதன் போன்ற பலரையும் கலந்து ரசித்தோம். பெண் கவிஞர் என்கிற பாகுபாடு தேவைதானா என யோசித்தோம். அடுத்த நூற்றாண்டில் கவிதை என்ன ஆகும் என்று வியந்தோம். (கம்ப்யூட்டர்கள் கவிதை எழுதத் துவங்கிவிடும். முதலில் சினிமாப் பாடல்கள், பின்னர் பிரம்மராஜன், பெருந்தேவி வகைக் கவிதைகள். சிந்திக்கத் துவங்கியதும் மனிதனுக்குப் போட்டியாகக் கவிதைகள் -

'சொல்வடா சிவசாமி என்னைச்  
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்  
எல்..எஸ்..ஐ.. தாராயோ....  
இந்த இன்டர்நெட் பயனுற வாழ்வதற்கே...'.)

மனநிறைவு தந்த இம்மாதிரி நிகழ்ச்சி ஏன் தூதனிலோ, ததொகா சானல்களிலோ அமைப்பதில்லை என்று வருத்தமாக இருந்தது.

அலி, புஷ்பா, மணி போன்றவர்கள் தமிழ்நாட்டுக் கலாசாரத்தில் முழுகிவிடாமல், சிங்கப்பூர் தமிழர்களைக் காப்பாற்றுவதில் முனைப்பாக இருக்கிறார்கள். A losing battle. சுமிரத்னம், மலர்வண்ணன் போன்றவர்கள் தாய்நாடு திரும்பி வந்து சாதிக்கும் அவசரத்தில் இருக்கிறார்கள். தமிழ் முரசு பெண்கள் பத்திரிகை துவங்கவிருக்கிறது ('இட்லிக்கு மிளகாப்பொடி சேர்த்துக் குழைக்கும்போது, ஆறிய நீர் சிறிது கலந்து தடவினால், இட்லி ஊறிக்கொண்டு மெதுவாக இருக்கும்' போன்றவற்றைத் தயவுசெய்து தவிர்க்கவும்).

மத்தியானம் ஆனால், தவறாமல் மழை பெய்து ஏற்கெனவே சுத்தமாக இருக்கும் தெருக்களை அலம்புகிறது. ஒவ்வொரு முறையும் சிங்கப்பூர் சென்று திரும்பும்போது, எனக்குத் தாழ்வு மனப்பான்மையைத் தேய்த்துக் குளிக்க ஒரு மாசமாகிறது. இமிக்ரேஷனில் மஞ்சள்கோட்டை மீறாமல் அங்கு நிற்கும் அதே இந்தியர், இங்கே வந்ததும் ஏன் அதை மதிக்காமல் அதிகாரியின் மூக்கின் அருகில் சென்று நிற்கிறார் என ஆச்சரியமாக இருக்கிறது.

சிங்கப்பூரின் பிரதமர் அவர்களுடைய பார்லிமெண்டில் பேசும்போது, 'வருஷத்துக்கு ஐம்பதாயிரம் குழந்தைகள் பிறக்க வேண்டும். சென்ற ஆண்டு நாற்பத்திரண்டு ஆயிரத்துச் சொச்சம்தான் பிறந்திருக்கிறது. சிங்கப்பூர்வாசிகளே, பிள்ளை பெற்றுக் கொள்ளுங்கள்! ஒன்றுக்குமேல் பெற்றால் அரசாங்கச் சலுகை தருகிறோம்' என்று அறிவிக்கிறார். 'ஒவ்வொரு ஆண்டும் The Year of the Rabbit ஆகவேண்டும்' என்றார்.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதால் ஏற்படும் விளைவு இது. பிள்ளைப்பேறு குறைந்துவிடும். சில சுதந்திரங்களைத் தியாகம் செய்ய சதிபதிகள் சம்மதிக்க மாட்டார்கள். சம்பாதிக்கும் பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளத் தயங்குவார்கள். இந்தக் காரணங்களால் ஐரோப்பிய நாடுகளான ஸ்வீடன், ஜெர்மனியில் மக்கட்பெருக்கம் யு-டர்ன் அடித்துவிட... அரசாங்கமே 'ராத்திரியானால் இதைப் பார்த்தாவது உணர்ச்சி வசப்படட்டும்' என டி.வி-யில் அ.கு. படம் போட்டுக் காட்டு கிறார்கள். ஆண்கள் கால்பந்திலும் சிகரெட் பிடிப்பதிலும் பியர் குடிப்பதிலும் மும்முரமாக இருந்தால், குழந்தைகள் எப்படி வரும்? அடுத்த முறை செல்லும்போது சிங்கப்பூர் அரசாங்கம் பின்னிரவில் 'படுத்திருந்த ராவுகள்' போன்ற மலையாளப் படங்கள் காட்டினால் ஆச்சரிய மில்லை.

முஸ்தாபா ஆறு மாடிக்கு விரிந்து, அ-விலிருந்து ஃ வரை எல்லாம்

கிடைக்கிறது. கொட்டிக் கிடக்கும் பொருட்களின் இடைநடந்து செல்வதுதான் சிரமம்.

செரங்கூன் ரோட்டில் கிளிஜோசியர் போன தடவை பார்த்ததற்குப் புஷ்டியாக இருக்கிறார். கூண்டுக்குப் பின்னால் செல்போன் வைத்திருக்கிறார். ஆஸ்திரேலிய அரைடிராயர் டூரிஸ்ட் கிழவர்களை நேராக சாங்கியிலிருந்து அழைத்துக்கொண்டு வந்து காட்டும் டூரிஸ்ட் அட்ராக்ஷனாகப் பயன்படுகிறார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் தமிழர்களின் அப்செஸிவ் கம்பல்ஸிவ் ந்யூரோஸிஸ் இரவு பத்து மணிக்குக் கடை மூடும்வரை வாங்கித் தள்ளுவது. பிளாட்பாரத்தில் உட்கார்ந்து, ஒவ்வொரு ஜாமானின் பேரிலும் ஊர்க்காரர் பெயர்களை எழுதுகிறார்கள்.

கணிப்பொறி மென்பொருள் இத்யாதிகளுக்காக சிங்கை வந்திருக்கும் பிஆர் தமிழர்கள், கோமளவிலாஸில் சாப்பிட்டுவிட்டு செல்போனில் 'சாரே ஜஹான் சே அச்சா' கூப்பிட... வெவ்வேறு திசைகளில் நடந்து கொண்டே பேசுகிறார்கள் (சிங்கப்பூரில்தான் இல்போனை விட செல்போன் எண்ணிக்கையில் அதிகமாம்!).

எச்.டி.பி. ஃப்ளாட் தமிழ்க் குடும்பங்கள் கண் விழித்திருந்து, 'திகில் நேரம்' வரை இரண்டரை மணி தாமதித்துப் பார்த்தபின் தான் தூங்குகிறார்கள் (மாசம் பதினைந்து டாலராம்!).

சிங்கப்பூர் தமிழன் ஒருவனைப் பற்றிய ஒரு கவிதை... (நன்றி: தமிழ் முரசு)

'ஓவர் ஸ்டேயில் இருந்த
வீரமுத்து மவன் பாண்டியனுக்கு
ரோத்தான் அடி
பாளம் பாளமா இறங்கியிருக்குதாம்....
பய குளிக்கையிலகூட
சட்டையக் களட்டுறதில்லையாம்....

என்ன செய்ய
என்னைய்யனுக்கு அஞ்சு
பொண்ணாச்சு....
கல்யாணம் காத்தி, புள்ள

பொறவு பாக்கணுமில்ல....
வயல்ல பம்புசெட்டு மாத்தணும்;
வீடு பழுதுபாக்கணும்;

போன லீவுக்குப் போனது
பொட்டையாப் போச்சு.
பத்து வெள்ளின்னாலும்
ஊர்ப் பணத்துல இருநூத்தம்பது....
பயலையாவது பெருமாக் கோயில்ல
கூடுற பட்டணத்து பயலுவ மாதிரி
கம்பூட்டர் படிக்க வைக்கோணும்...'

'ஆனாலும்' என்ற தலைப்பில் இதை எழுதிய கனிமொழியின் நாட்டங்கள், சிங்கப்பூரில் விசாலமடைந்து வருகிறது சந்தோஷமான விஷயம் (ரோத்தான் என்றால் பிரம்பு).

'சிங்கப்பூர் போன்ற நகர நாடு ஒன்றை, மற்ற இடங்களில் வைக்க முடியுமா?' என்று அவர்கள் ஒரே ஒரு பரிசோதனைதான் பண்ணிப் பார்த்திருக்கிறார்கள். நான்கு வருஷத்துக்கு முன் ஸு சாவ் என்னும் இடத்தில் சீனாவுடன் சேர்ந்து, ஒரு தொழில் தோட்டம் துவங்கினார்கள். அதிபர் லீ க்வான் யு உற்சாகமாக அதைத் துவக்கிவைத்தார். சிங்கப்பூர் அச்சில் அதே வார்ப்பு!

கட்டடங்கள், தொழில்முறைகள், திறமைகள் என்று ஒரு தொழில்பேட்டை வைத்தார்கள். 65வி சிங்கப்பூரும் 25வி சீனாவும் முதலீடு செய்து, நல்ல முகூர்த்தத்தில்தான் துவங்கினார்கள். இன்று சிங்கப்பூர், அதன் பங்குகளை சீனாவுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டது. பலத்த நஷ்டம். விட்டால் போதும் என்று விலகி வந்துவிட்டது. காரணம், சீனாவின் முகமற்ற அரசாங்க லஞ்சத்தை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஏறக்குறைய தமிழ்நாட்டிலும் இவ்வாறு சிங்கப்பூர் ஒரு காரிடார் அமைக்க முயற்சி செய்து தோற்றது உங்களுக்குத் தெரியுமோ? அப்போது இருந்த தமிழக அரசு கூசாமல் நேரடியாக லஞ்சம் கேட்க, அவர்கள் பயந்துபோய் பெங்களூருக்கு மாற்றிவிட்டார்கள் (லஞ்சம் கொஞ்சம் கம்மி!). 'உங்களுக்கு நல்லது செய்ய, உங்களுக்கே எதற்கு லஞ்சம்?' என்பது அவர்களுக்குப் புரியவில்லை.



திரும்பி வரும்போது, ஏர் இந்தியா விமானத்தில் டயட் கோக் கிடைக்காததால் விரோதமாக உட்கார்ந்திருந்தேன். திரையை இறக்கி, ஒரு தமிழ் சினிமா காட்டினார்கள். அஜீத்துக்கு கான்சரோ, ப்ரெய்ன் டியுமரோ... ஆறு மாதத்தில் சாகப்போகிறார். அதுவரை கிதார் வாசிக்க உத்தேசிக்கிறார். கதாநாயகி தனக்கும் டியுமர் என்று பொய் சொல்லி அவரை மணக்கிறாள். கர்ப்பமாகிறாள். இப்படி அறுந்த பட்டம் போலப் போய்க் கொண்டிருந்தது கதை. கண் அயர்ந்துவிட்டேன்.

எட்போனில் வித்யாசாகர் ஒலிக்க, அற்புதமான கனவொன்று கண்டேன். சென்னை சிறுமேம்பாலத் துறையினர், அவர்கள் கட்டும் ஒவ்வொரு பாலத்தின் அருகிலும் 'இந்தப் பாலம் இந்த வருடம், இந்த மாதம், இந்தத் தேதி கட்டி முடிக்கப்படும்' என்று அறிவிப்புகள் வைத்திருப்பதாக குடிநீர்க்காரர்கள் தோண்டிய குழிகள் எல்லாம் மூடிவிட்டதாக...

பைலட்டுக்கு யார்மீது கோபமோ... ஒரு டன் செங்கல் போல விமானத்தைத் தரையிறக்கினார். கனவு கலைந்து விழித்துக் கொண்டேன். விமானத்தைவிட்டு வெளியே வரும்போது, புது வழக்கமாக போர்டிங் கார்டு கேட்டார்கள் (இல்லையென்றால், திரும்ப சிங்கப்பூர் அனுப்பிவிடுவார்களோ!). பெல்ட்டில் என் பெட்டிகள் வர ஒரு மணி நேரமாயிற்று.

எப்பவோ ஆரம்பித்து, இன்னமும் கட்டி முடிக்கப்படாத கிண்டி மேம்பாலத்தைப் புழுதியுடன் கடந்து, வீடு வந்து சேர்ந்தேன்.

# ஒரு வரியில் கதை!



சென்ற கட்டுரையில், அடுத்த நூற்றாண்டுக் கவிதை எப்படியிருக்கும் என்பதைப் பற்றி யோசித்தோம். www.poetry.com என்னும் வலை முகவரியில் விடை கிடைக்கிறது. நண்பர் இரா.முருகன் அமெரிக்காவில் இருந்து இதைக் குறிப்பிட்டிருக்கிறார். சயின்ஸ் ஃபிக்ஷ,ன் என்னும் விஞ்ஞானக் கதைகள் முதலில் ஹைக்கூ வடிவம் பெற்று, 'சைஃபிகூ' என்று ஒரு புதிய பாவினத்தை 1995-லிருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். விஞ்ஞானக் கற்பனைகளைப் பற்றி ஹைக்கூ எழுதுவது அதன் நோக்கம்.

'சம்பிரதாயமான ஹைக்கூவின் பதினேழு அசை, பருவக்குறிப்பு போன்ற விதிகளை அப்படியே கடைப் பிடிக்கத் தேவையில்லை. விஞ்ஞானம் சார்ந்த கற்பனைக் கருத்தை ஹைக்கூ வடிவில் முயற்சிக்க வேண்டும்' என்கிறார்கள். உதாரணம்...

'எரிகற்கள்
ஒரு சப்தமுமின்றி மோத,
சிதறல்களினூரடே செல்கிறோம்...'."

விண்வெளிப் பயணம் பற்றிய சைஃபிகூ இது. இதுபோல் பல உதாரணங்கள் இந்த வலைமனையில் உள்ளன.

⋆ புராதன நகரில் தோண்டி எடுத்தோம் டென்னிஸ் ஷூவின் பதிவை..

⋆ உடை களைத்தபோது அவள் மனுஷி இல்லை.

அடியேனுடைய ஒரு முயற்சி இஃது -

⋆ சந்திரனில் இறங்கினேன்.... பூமியில் புறப்படும்போது, கதவைப் பூட்டினேனோ?

தீபாவளியன்று வெளியாகும் திரைப் படமான 'முதல்வன்' உருவாக்கத்தில் (வசனம்) பங்கு கொண்டவன் என்ற தகுதியில், தமிழ் சினிமா வின் இன்றைய நிலையைப் பற்றிச் சிந்திக்க முடிகிறது.



'முதல்வன்' ஒரு பெரிய நடிகருக்காகப் 'பண்ணப்பட்ட' கதை. அதைக் கேட்டு அவர் மிகுந்த சிந்தனைக்குப் பின், 'இந்தக் காலகட்டத்தில் நான் இந்தப் படத்தில் நடித்தால் பிரச்னைகள் வரும்' என்று வருத்தத்தோடுதான் நிராகரித்தார். இதை அவர் துவக்கவிழாவிலேயே சொன்னார். நிஜவாழ்வும் சினிவாழ்வும் தமிழ்நாட்டில் இரண்டறக் கலந்திருப்பதினால் வரும் தயக்கம். அவர் எடுத்த முடிவு சரியா என்பதைப் படம் வந்ததும் நீங்கள் தீர்மானிக்கலாம்.

கதை சுவாரஸ்யமாக இருந்ததால், 'பெரிய நடிகர் இல்லாமல், ஒரு நல்ல நடிகர் இருந்தாலே போதும்' என்று சொன்னேன். ஷங்கர் இறுதியில் தன்னுடைய முதல் வெற்றிப் படமான 'ஜென்டில்மேன்' னில் நடித்த அர்ஜுனைத் தேர்ந்தெடுத்தார். கதாநாயகிக்கு 'இந்தியனி'ல்

நடித்த மனிஷா கொய்ராலாவை ஒப்பந்தம் செய்தார்.



'முதல்வன்' ஓர் எளிய கருத்தைச் சொல்லும் படம். புராணக் கதைகளில் திடீரென யானை வந்து மாலை போட்டதும், 'நீதான் இந்த நாட்டுக்கு ராஜா' என்று சொல்வார்களே... அதுபோன்ற கதை. தற்செயலாக ஒருவனுக்கு ஒரே ஒரு நாள் முதல்வராக இருக்கச் சந்தர்ப்பம் கிடைக்கிற ஒரு fairy tale, அதன் விளைவுகளை, ஷங்கரின் பாணியில் பிரமாண்டமான காட்சிகள், பிரமிப்பூட்டும் படப்பிடிப்பு, டி.டி.எஸ்., ஏ.ஆர். ரஹ்மான் போன்ற சமாசாரங்களுடன் சுவாரஸ்யம் குறையாமல் சொல்கிறார்.

இதற்கு வசனம் எழுதும்போது, தமிழ்நாட்டு அரசியலின் எந்த நிழலும் படாமல், எந்த மாநிலத்திலும் நிகழக்கூடிய கற்பனைக் கதையாகத்தான் எழுத வேண்டியிருந்தது. கதையின் களம்தான் தமிழ்நாடு, அரசியல் இந்தியா. ஷங்கர் பாசாங்குகளோ, சினிமா சென்டிமெண்ட்டுகளோ இல்லாத டைரக்டர். அவருடைய ஒரே சென்டிமெண்ட் - படத்தின் தலைப்பு சுருக்கமாக இருக்க வேண்டும் என்பதே (ஜென்டில்மேன், காதலன், இந்தியன், ஜீன்ஸ், முதல்வன்... அடுத்த படம் அன்னியன்)

எட்டாம் நம்பரை எல்லோரும் திட்டுகிறார்கள் என வேண்டுமென்றே காருக்கு எட்டாம் நம்பரைத் தேர்ந்தெடுக்கிறவர். முதல்வனின் டிஸ்கஷன் ஊட்டியில் சென்ற வருடம் ஏப்ரல் மாதம் நடந்தது. ஒரு வருஷத்துக்கு மேல் முனைந்த கதையை, இப்போது திரைவடிவில்

பார்க்கையில், ஒரு ஓட்டல் அறையில் மனதில் புறப்பட்ட கதையைக் கோடிகள் கொடுத்து, நாடு முழுவதும் திரை விரித்துக் காட்டும் இந்த 'அல்கெமி'யின் விதிகளும் விபத்துகளும் அவஸ்தைகளும் புரி கின்றன.

ஷங்கரிடம் நான் ஹாலிவுட் சினிமாவின் அயரா விதிகளான premise, three act structure போன்றவற்றை விவரித்துச் சொன்னபோது பொறுமையுடன் கேட்டு, 'அதாவது... நீங்க சொல்றது இப்படிச் செய்யணுங்கறீங்களா?' என்று சரிபார்த்துக் கொண்டு, அதன் சாரத்தை மட்டும் வாங்கிப் பயன்படுத்துகிறார்.

பொதுவாகவே இந்த 'ப்ரிமைஸ்', மூன்று - பாக அமைப்பு என்பது, நான் பார்த்த எல்லா வெற்றிப்பட டைரக்டர்களிடமும் இருக்கிறது. அதைச் சிலபேர் உணராமல் பயன் படுத்துகிறார்கள். கமல், பாசில், ராஜீவ் மேனன், மணிரத்னம் போன்றவர்கள் உணர்ந்து பயன்படுத்துகிறார்கள்.

ஹாலிவுட் ஃபார்முலா என்ன வென்று சொல்லி விடுகிறேன். ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் படிப்பவர்களுக்கு இது தெரியும். விகடன் வாசகர்களில் திரைக்கதை எழுதும் ஆர்வமுள்ளவர்களுக்கு இது பயன்படலாம். 'ப்ரிமைஸ்' என்பது, கதையை ஒரு வரியில் சொல்ல வேண்டும். இதை 'வாட் இஃப் - what if' என்பார்கள். எல்லா நல்ல படங்களுக்கும் இந்த 'ப்ரிமைஸ்' உண்டு. சில உதாரணங்கள்:

ரோஜா - திருநெல்வேலி கிராமத்துப் பெண்ணின் கணவனைக் காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டால் என்னாகும்?

இந்தியன் - சுதந்திரப் போராட்ட தாத்தா, லஞ்சம் வாங்குபவர்களையெல்லாம் கொல்ல ஆரம்பித்தால் என்னாகும்?

கண்டுகொண்டேன் கண்டு கொண் டேன் - வரவேண்டிய சொத்தை எதிர்பாராமல் இழந்தால், இரு சகோதரிகளின் காதல்கள் என்னாகும்?

கண்ணெதிரே தோன்றினாள் - ஆப்த நண்பனிடம், அவன் தங்கையைக் காதலிப்பதை வெளிப்படையாகச் சொல்ல முடியாவிட்டால் என்னாகும்?

ஹேராம் - பிரிவினையின் வகுப்புக் கலவரங்களில் மனைவியை இழந்தவன், காந்திதான் அதற்குக் காரணம் எனத் தீர்மானித்தால்

என்னாகும்?

முதல்வன் - ஒரு சாதாரண டி.வி. ரிப்போர்ட்டருக்கு, ஒரு நாள் மட்டும் முதல்வராகும் வாய்ப்பு வந்தால் என்னாகும்?

-இப்படி யோசித்தால், எல்லா வெற்றிப் படங்களிலும் இந்த 'என்னாகும்?' இருக்கும், இருக்க வேண்டும். இதை நம் சினிமா பரிபாஷையில்' நாட்' அல்லது 'தாட்' என்கிறார்கள். அவர்கள் 'ப்ரிமைஸ்' என் கிறார்கள். நம் சினிமா இடை வேளைக்கு முன், இடைவேளைக் குப் பின் என்று இரண்டு பாகங் களாகப் பிரிகிறது. ஹாலிவுட் இதை மூன்றாகப் பிரிக்கிறது.



இந்த மூன்று பாக அமைப்பு எளிமையானது. முதல் பாகத்தில், எல்லாப் பாத்திரங்களையும் அறிமுகம் செய்து விடவேண்டும். இரண்டாவது பாகத்தில், அவர்களிடையே எழும் ஒரு முரண்பாட்டை விவரிக்க வேண்டும். மூன்றாவதில், அதைத் தீர்த்துவைக்க வேண்டும். சிரிப்பாகவோ, சோகமாகவோ, ஃபைட்டோ, சேஸோ... எப்படியோ!

இந்த அமைப்பு தமிழ்ப் படங்களில் ஒளிந்து கொண்டிருந்தாலும், பெரும்பாலும் தற்செயலாகத்தான் அமைகிறது. தெரிந்தே செய்வதில்லை. 'முதல் பாகத்திலேயே கதை மாந்தர்கள் அத்தனை பேரையும் சொல்லிவிடு' என்கிற விதி நாவல்களுக்குக்கூடப்

பொருந்தும்.

'கடைசி ஸீனில் புதுசாக ஒரு ஒன்றுவிட்ட மாமா வந்து... கதாநாயகன், வில்லனின் சின்ன வயதில் பிரிந்த தம்பி என்று அரணாக்கயிறில் போட்டோ வைத்த லாக்கெட் மூலம் நிரூபிப்பது தப்பாட்டம்' என்கிறது ஹாலிவுட் 'மாமாவையும் லாக்கெட்டையும் முதல் ஆக்ட்டில் ஒருமுறையாவது காட்டு' என்கிறது. அவ்வளவுதான்.

இந்தியா சினிமாவை இரண்டு பாகங்களாகப் பிரிப்பது பாப்கார்ன், ஐஸ்க்ரீம் வியாபாரம், டாய்லெட் கட்டாயங்களைச் சார்ந்ததாக இருக்கிறது. மூச்சா போனவர்கள் வீட்டுக்குப் போய்விடாமல் இருட்டுக் குத் திரும்ப வரவேண்டிய கட்டாயத்தை ஒட்டி, நம் 'இன்டர்வெல் ப்ளாக்'கின் விதிகள் அமைகின்றன.

இதற்கு முக்கியக் காரணம், படத்தின் நீளம் இரண்டரையிலிருந்து மூன்று மணி நேரமாக இருப்பதே. நம் ஒரு படம், அவர்கள் இரண்டு படம். அவர்களின் பெரும்பாலான படங்கள் இரண்டு மணி நேரத்துக்குள் முடிந்துவிடுகின்றன. அதனால் '12 பாயிண்ட் கூரியர் போல்டு' எழுத்துக்களில் நூற்றிருபது பக்கத்துக்குமேல் ஸ்கிரிப்ட் எழுதினால் கையை ஒடிப்பேன் என்கிறார்கள்.

ஷங்கர் இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு, காந்தியின் குண்டூசி போல், தனக்குத் தேவைப்பட்ட அளவுக்கு அதைக் கிரகித்துக் கொள்கிறார். தமிழ் சினிமா ஒரு நால்ரோட்டில் நிற்கிறது. டெக்னிக்கலாகப் பல சிறப்புகள் பெற்றிருந்தும் கதை என்கிற இலாகா சவலையாக இருக்கிறது. எழுத்து வேலையை முடிக்காமல் காமிராவுக்குப் போவது ஆபத்தானது என்பதை இப்போது உணர்ந்து வருகிறார்கள்.

ஷங்கர் ஒருமுறை என்னிடம் சொல்லியிருக்கிறார் - "என்னுடைய ஆடியன்ஸ் நீங்க மட்டுமில்லை சார்..." இதுதான் ஒருவேளை அவர் வெற்றியின் ரகசியமா என்பதை நீங்கள் முதல்வனைப் பார்த்துத் தீர்மானிக்கலாம்.

# டூயட்டும் மழையும்!



'Things you would never know without the movie industry' என்று எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. பென்டாஃபோர் உஷா அமெரிக்காவிலிருந்து அனுப்பியது. 'ஹாலிவுட் சினிமாக்களில்தான் இவையெல்லாம் பார்க்கலாம்' என்று ஒரு பட்டியலே தருகிறார்.

1. என்னதான் ஏழையாக இருந்தாலும், கதாநாயகன் வசிக்கும் வீடு பளபளவென்று விசாலமாக இருக்கும்.

2. இரட்டையர்களில் ஒருவர் எப்போதும் கெட்டவர்.

3. பாம் வெடிப்பதைத் தடுக்க வேண்டுமெனில், எந்த ஒயரை வேண்டுமானாலும் வெட்டலாம், பரவாயில்லை. வெடிக்காது.

4. எவ்வளவு பேர் கதாநாயகனைத் தாக்க வந்தாலும், ஒவ்வொருவராகத்தான் வந்து உதைபடுவார்கள்.

5. அதுவரை மற்றவர் அடிபட, தங்கள் முறை வரும் வரை சுற்றிலும் நடனமாடிக் கொண்டிருப்பார்கள்.

6. ராத்திரி படுத்துக் கொள்ளும்போது பெட்ரூம் விளக்கை அணைத்தாலும், அறையில் எல்லாம் நன்றாகத் தெரியும். என்ன, கொஞ்சம் நீலமாகத் தெரியும். அவ்வளவுதான்.

7. அழகான இருபத்திரண்டு வயசு கதாநாயகி அணுஆயுத, நியூக்ளியர் ரகசியங்களிலும் கம்ப்யூட்டரிலும் எக்ஸ்பர்ட்டாக முடியும்.

8. விசுவாசமுள்ள, கடுமையாக உழைக்கும் போலீஸ் அதிகாரி

ரிட்டயர் ஆவதற்குப் பத்து நாள் முன்பு சுட்டுக் கொல்லப்படுவார்.

9. வில்லன், கதாநாயகனை நேராகச் சுட்டுக் கொல்வதற்குப் பதில் சிக்கலான இயந்திரங்கள், ப்யூஸ்கள், விஷவாயுக்கள், சக்கரங்கள், லேசர் அல்லது சுறாமீன்களிடம் விட்டுவிட்டு, சுற்றி வளைத்துத்தான் கொல்வான். கதாநாயகன் தப்பிக்க முப்பது நிமிஷமாவது கிடைக்கும்.

10. போலீஸ் விசாரணையின்போது கட்டாயமாக ஒரு நைட்கிளப்பில் போய் விசாரித்தாக வேண்டும். பின்னால் மழுப்பலாக ஒரு ஸ்ட்ரிப் டீஸ் தெரியவேண்டும்.

11. எல்லாப் படுக்கைகளிலும் ஸ்பெஷல் போர்வைகள் உண்டு - பெண்களுக்கு மார்பு வரை மறைக்கவும், ஆண்களுக்கு இடுப்பு வரை மறைக்கவும் (ஆண்கள் அப்போது சிகரெட் குடித்தே ஆகவேண்டும்).

12. யாராயிருந்தாலும் ஒரு விமானத்தைத் தரையிறக்க முடியும். கண்ட்ரோல் டவரிலிருந்து எப்போதும் சிகரெட் குடிக்கும் ஒரு ஆசாமி பேசிப் பேசியே இறக்கவைப்பான்.

13. தண்ணீருக்கடியில் போனாலும் லிப்ஸ்டிக் அழியாது.

14. எந்த யுத்தமாக இருந்தாலும், காதலியின் போட்டோவைக் காட்டாத வரை கதாநாயகன் பிழைக்கலாம். எடுத்துக் காட்டிவிட்டால், அடுத்த காட்சியில் அவன் குளோஸ்.

15. பாரீஸ் நகரத்தில் எந்த ஜன்னலிலிருந்து பார்த்தாலும் ஈஃபல் டவர் தெரியும்.

16. கதாநாயகன் வில்லனிடம் செமையாக அடி வாங்கும்போது வலிக்கவே வலிக்காது. ஆனால், பின்னர் கதாநாயகி பஞ்சு ஒத்தடம் கொடுக்கும்போது மட்டும் 'ஸ்... ஆ...' என்பான்.

17. ஒரு பெரிய கண்ணாடி காட்டப்பட்டால், அதன் வழியாக யாராவது வீசி எறியப்படுவார்.

18. காரில் நேரான ரோட்டில் நேராகப் போனாலும் கதாநாயகி அடிக்கடி ஸ்டியரிங்கைத் திருப்புவாள்.

19. எல்லா 'டைம்பாம்'களிலும் வெடிக்க எத்தனை செகண்டு

பாக்கியிருக்கிறது என்று ஒரு நம்பர் தெரிந்தே ஆகவேண்டும்.

20. போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் பண்ணதும்தான் கேஸைத் துப்புத்துலக்கத் தேவைப்படுவார்.

21. தெருவில் நீங்கள் நடனமாடத் துவங்கினால், தெருவில் வரும் போகும் எல்லாரும் அதே தாளத்தில் ஆடுவார்கள்.

22. பாழடைந்த பங்களாவில் தங்கும் பெண்கள், ஏதாவது விநோதமான சத்தம் கேட்டால் என்னவென்று பார்க்க, சிக்கனமான ஜட்டியில்தான் நடந்து செல்வார்கள்.

23. போலீஸ் அதிகாரிகளும் அவர்களுடைய உதவியாளர்களும் எப்போதும் நேர்மாறான குணமுள்ளவர்களாகத்தான் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

24. ரஷ்ய அதிகாரிகள் ரஷ்யாவில் தமக்குள் ஆங்கிலத்தில்தான் பேசிக்கொள்வார்கள்.

இவை பெரும்பாலும் நம் பாலிவுட், கோலிவுட் சினிமாவுக்கும் பொருந்துவதை நீங்கள் இது நேரம் உணர்ந்திருப்பீர்கள். கோடம் பாக்கத்துக்கு 24-க்குமேல் அனுபந்தமாகச் சில விஷயங்கள் உண்டு. அவை இவை:


25. உணர்ச்சிவசப்படும் காட்சியில் திடீரென்று மின்னல் வெட்டி, மழை வந்தே ஆகவேண்டும். கதாநாயகி வீட்டைவிட்டுத் துரத்தப்படும்போது, காதலின்போது, டூயட்டின்போது... எப்போது வேண்டுமானாலும் மழை வரலாம். மழையின் போது மட்டும் அவள் வெள்ளைப் புடவை அல்லது வெளிர் மஞ்சள் அணியவேண்டும்.

26. பாடல் காட்சிகளில் ஒரு வரி மயிலாப்பூரிலும் அடுத்த வரி மியாமியிலும் பாடப்படலாம்.

27. ஒரே பாட்டில் பாதி பாடிக்கொண்டிருக்கும்போது உடை மாறலாம்... நிறம் மாறலாம்.

28. சட்டென்று எல்லா 'பிஜிஎம்'மும் நின்றுவிட்டால், யாரோ செத்துப்போய்விட்டார்கள் என்பது உறுதி.

29. கோர்ட்டில் யார் வேண்டுமானாலும் வழக்கின் எந்தக் கட்டத்திலும் நுழைந்து, உடனே சாட்சி சொல்லலாம். கோர்ட் வாசற்படியில் நின்றவாறேகூட சாட்சி சொல்லலாம்.




30. 'முகூர்த்தத்துக்கு நேரமாறது, பொண்ணை வரச் சொல்லுங்கோ...' என்று குடுமி சாஸ்திரி அவசரப்படுத்தினால், பெண் காணாமல் போகப் போகிறாள் என்பதை எதிர்பார்க்கலாம்.

31. இறுதியாக, பாடல் காட்சிகளில் எந்த வேளையிலும் எந்த லொகேஷனிலும் நாற்பது பெண்கள் வரலாம். எல்லாரும் குட்டைப் பாவாடை அணியவேண்டும்.

இந்த வரிசையில், இன்னும் ஏதாவது விட்டுப் போயிருக்கிறதா?

**எ**ன் கதைகளில் அவ்வப்போது வரும் கணேஷ் - வசந்த் பாத்திரங்கள் உண்மையானவர்களா, எப்போது முதலில் தோன்றினார்கள் என்று கேட்கிறார்கள். கணேஷ்தான் முதலில் வந்தான். 1968-ல் நான் எழுதிய

'நைலான் கயிறு' என்னும் தொடர்கதையில், பம்பாயில் ஒரு லாயராகத் தோன்றினான். பாதிக் கதையில் விடைபெற்றான். அதன்பின் சில குறுநாவல்களில் தோற்றமளித்தான்.

அப்போது அவனுக்கு அசிஸ்டெண்டாக நீரஜா என்கிற பெண் இருந்தாள். எனக்குக் கல்யாணமானதும் மறைந்துபோனாள். வசந்த், கணேஷுடன் சேர்ந்து கொண்டது 'ப்ரியா' என்ற தலைப்பில் 1973-ல் எழுதிய தொடர்கதையில். அதன்பின் இருவரும் பல நாவல்களில் ஒன்றாகத் தோன்றினார்கள். இன்றைக்கு அவர்கள் தோன்றி, முப்பத்தோரு வருடங்களாகியும் அதே வயசு கணேஷுக்கு! கல்யாணமாகவில்லை. அவன் புத்திசாலித்தனத்துக்கேற்ப பெண் கிடைக்கவில்லை.

நான் பி.இ.எல்-லில் பணிபுரியும் போது, ஜாலஹள்ளி ஸ்டேட் பாங்க்கில் பர்சனல் பாங்கிங் மானேஜராக ஒரு வசீகரமான இளைஞர் இருந்தார். அவர் பெயர் வசந்த். அந்தப் பெயர் சட்டென்று ஞாபகம் வந்ததால், கணேஷின் உதவியாளனுக்குச் சூட்டினேன். வசந்த் இன்னமும் பெண் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

இவ்விரு பாத்திரங்களும் நான் பார்த்த பல புத்திசாலி லாயார்களின் குணாதிசயங்களை அவ்வப்போது சேர்த்துக் கொண்டு வடிவமைத்திருக்கிறார்கள். இதனால் கணேஷ், வசந்த்தைப் பற்றி ஒவ்வொரு வாசகர் மனதிலும் ஒரு பிம்பம். அவர்கள் பார்த்த அதிபுத்திசாலிகளைச் சார்ந்து அமைகிறது.

அதனுடன் மாட்ச் ஆகவில்லையென்றால் திரையிலோ, டி.வி-யிலோ கணேஷ் - வசந்த்தைப் பார்க்கும்போது, 'என்ன சார்... நான் நினைத்தபடி இல்லையே?' என்று எனக்குக் கடிதம் எழுதுகிறார்கள். கதையில் உள்ள பாத்திரங்களைக் கற்பனை பண்ணிக்கொள்ளும் அவர்களுடைய சுதந்திரத்தில் குறுக்கிடுவதால்தான் அவர்களுக்குச் சலிப்பும் அதிருப்தியும் ஏற்படுகிறது.

இதுதான் எழுத்தைப் படமாக்குவதில் உள்ள முதன்மையான ஆபத்து. சத்யஜித்ரேகூட இந்த விமரிசனத்துக்குத் தப்பவில்லை. 'பதேர் பாஞ்சாலி' நாவலை எழுதிய பிபூதி பூஷன் பட்டாச்சார்யா, 'என்ன படம் எடுத்திருக்கிறார்?' என்று அலுத்துக் கொண்டாராம். தாகூர்கூட உயிருடன் இருந்தால் 'தீன் கொன்யா', 'கரே பைரே' பற்றி என்ன சொல்லியிருப்பார் என்று சிந்திக்கிறேன்.

# மறைந்திருக்கும் உண்மைகள்!



ரிச்சர்டு இயர்சன் என்பவர் எழுதிய 'Management of the Absurd' என்கிற புத்தகத்தை இந்த வாரம் ரசித்துப் படித்தேன். உலகின் பல நிகழ்வுகள் முரண்பாடு உடையவை. அபத்தமானவை. வெளிப்படையாகத் தெரிவதும் உள்ளே இருப்பதும் வேறுபடும் என்கிறார்.

அதிகமாக ஒடுக்கப்பட்டவர்களுள்ள சமூகத்துக்கு ஆதரவான எழுச்சித் தலைமையும் எதிர்ப்புக் குரல்களும் யாரிடமிருந்து வர வேண்டும்..? அந்தச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரிடமிருந்துதானே..? அப்படியில்லை என்கிறார் இயர்சன். பல உதாரணங்கள் காட்டுகிறார் ஆப்பிரிக்க - அமெரிக்க இனத்துக்கு முதல் ஆதரவுக் குரல் 'அபலிஷனிஸ்ட்டுகள்' என்று சொல்லப்பட்ட வெள்ளையர்களிடமிருந்துதான் எழுந்ததாம்.



அதுபோல, அமெரிக்கப் பெண் விடுதலைக்கான முதல் குரல் கொடுத்த க்ளோரியா ஸ்டைனம் என்கிற பெண்மணி, நல்ல வசதியும் சுதந்திரமும் உள்ள ஒடுக்கப்படாத குடும்பத்தைச் சேர்ந்தவராம். குழந்தைகளின் உரிமைகளுக்காக வாதாடுபவர்கள் பெரியவர்களே. டைவோர்ஸ் கேஸ்களில் பிரபலமாக விளங்கும் லாயர்கள் பலர் திருப்தி யான மணவாழ்க்கை கொண்டவர்களே.

நம் நாட்டிலும் உதாரணங்கள் பல உள்ளன. மூட நம்பிக்கைக்கு எதிராகப் புரட்சி செய்தவர்கள், ஆரம்பத்தில் தீவிரமாகச் சாமி கும்பிட்டவர்கள். தமிழுக்கு உயிரையே தருவேன்.. அது மூச்சு, ரத்தம்' என்று சொல்பவர்களை தோண்டிப் பார்த்தால் வீட்டில் தெலுங்கு பேசுபவர்களாக இருக்கும். கன்னடத்தில் மிகப்பெரிய சாகித்யகர்த்தாக்களான டி.பி.கைலாசம், மாஸ்தி போன்றவர்கள் தமிழர்கள்.

சுதந்திரப் போராட்டத்தைத் துவக்குவித்த காங்கிரஸ் கட்சியின் ஸ்பதாபகர், ஒரு வெள்ளையர் - ஏ.ஓ.ஹ்யூம். ஆதரித்தவர் - அன்னி பெசன்ட், மற்றொரு வெள்ளையர். ரஷ்யப் புரட்சிக்குக் காரணமாக இருந்த மார்க்ஸியத்தைக் கொண்டுவந்த கார்ல் மார்க்ஸ் ஒரு


ஜெர்மானியர். இந்த முரண்பாடுகளைத் திட்ட வட்டமாக ஆராய்கிறார் இயர்சன். இவற்றைப் பற்றி நாம் எப்போதும் பிரக்ஞையுடன் இருக்க வேண்டும். எந்தத் திசையிலிருந்து எதிர்ப்போ, புதிய கருத்துகளோ, எழுச்சியோ, மாறுதலோ வரும் என்பதை எதிர்பார்க்க முடியாது. அதற்குத் தயாராக இருக்க வேண்டும். பெரும்பாலும் அபத்தமான திசைகளிலிருந்துதான் வரும் அதை உணர்ந்து, மேலாண்மைக்கான மானேஜ்மெண்ட் கருவியாகப்பயன்படுத்தலாம் என்கிற வசீகரமான கருத்தைச் சொல்கிறார். இதைப் பயன்படுத்திய பலர் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

ஒரு பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் அடிக்கடி திருட்டுப் போயிற்றாம். அதைக் கண்டுபிடிக்க என்னென்னவோ செக்யூரிட்டி வைத்துப் பார்த்தார்கள். டி.வி. காமிரா வைத்துப் பார்த்தார்கள். குறைக்க முடியவில்லை. பெருத்த நஷ்டமில்லா விட்டாலும் பணிபுரிபவர்கள் பயந்தார்கள். அதைப் போக்க வேண்டியிருந்தது. அதிபர் எதிர்பாராதவிதமாக அபத்தமாகச் சிந்தித்தார். ஒரு முன்னாள் திருடனையே செக்யூரிட்டி வேலைக்கு அமர்த்தினார். அவனுக்கு யார் யார், என்னென்ன, எப்போது திருடுவார்கள் என்பது அத்துப்படியாக இருந்தது. திருட்டு மிகவும் குறைந்துவிட்டது!

Invisible Obvious என்று மற்றொரு சங்கதி பற்றி இந்தப் புத்தகத்தில் சொல்கிறார் இயர்சன். கண்ணுக்கு வெளிப்படையாகத் தெரியாத உண்மைகள். உலகின் பல கண்டுபிடிப்புகள் வெளிப்படையாகத் தெரிந்து வரவில்லை. தொழிற்புரட்சியைத் துவக்கிவைத்த ஜேம்ஸ்வாட்டின் கண்டுபிடிப்பு ஓர் உதாரணம். தன் வீட்டுக் கெட்டிலில் கொதித்த நீராவி, அதன் மூடியை மேலெழச் செய்வதைக் கவனித்தார். நீராவி இன்ஜினுக்கான ஐடியா தோன்றியது. இதே நீராவிக் கெட்டிலை யுகம்யுகமாகப் பலர் பார்த்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அதனுள் பொதிந்திருந்த சக்தி வெளிப்படையாகத் தோன்றவில்லை.

ஆராய்ச்சியாளர்கள் பல வருடங்களாக 'பெனிசிலியம்' என்கிற காளான், பாக்டீரியா நுண்கிருமிகளை வளரவிடாமல் தடுக்கிறது என்பதை ஆராய்ச்சிச்சாலையின் கண்ணாடித் தட்டுகளில் பார்த்திருக்கிறார்கள். அது மனித உடலில் இருக்கும் பாக்டீரியாக்களைச் சாகடிக்கிறதா பார்க்கலாம் என்று யாருக்கும் தோன்றவில்லை. அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங்குக்கு மட்டும் தோன்றியிருக்கிறது. விளைவு - பென்சிலின், ஆன்டிபயாட்டிக்ஸ். நோபல் பரிசு!

நூற்றாண்டின் ஆரம்பத்தில் மோட்டார் வாகனங்களைப் பல திறமைகள் படைத்த தொழிலாளர்கள் செய்து வந்தார்கள். முழு மோட்டாரையும் ஒரு ஆளே அல்லது ஒரு சிறிய குழுவினரே செய்து முடித்தார்கள். ஹென்றி ஃபோர்டு, அதில் மறைந்திருந்த உண்மையைக் கண்டுகொண்டார். அது - ஒரு தொழிலாளிக்கு ஒரு திறமை போதும், அடுத்த தொழிலாளிக்கு மற்றொரு வகைத் திறமை... இப்படிப் படிப்படியாக வாகனத்தைத் தயாரிக்கும் 'அசெம்பிளி லைன்' முறையைக் கொண்டுவந்து, குறைந்த செலவில் அதிக ஆற்றலுடைய சீரான, தரமுள்ள மோட்டார் வாகனங்களைக் கட்ட முடியும் என்று கண்டு கொண்டார். அதிலிருந்து நவீனத் தொழிற்சாலை உருவானது ஃ போர்டை 'நூற்றாண்டின் சிறந்த தொழிலதிபர்' என்கிறார்கள்.



ஹென்றி ஃபோர்டு

மறைந்திருக்கும் உண்மைகள், வாழ்வின் பல துறைகளில் உள்ளன. கவிதையிலும் உண்டு.

'காலடிப்பதிவை
கவிதையாக்கிப் போகும்
கொலுசுச் சிணுங்கல்...'


'மழை பற்றிய பகிர்தல்கள்' என்ற தொகுப்பில் உள்ள சே.பிருந்தாவின் இந்த 'ஹைக்கூ'வில் மறைந்திருக்கும் உண்மை என்ன என்று யோசித்துப் பாருங்கள்.

**சை**பருக்குச் சரியான தமிழ் வார்த்தை கேட்டிருந்தேன். எனக்கு

அவ்வப்போது சுவாரஸ்யமாகக் கடிதம் எழுதும் பேராசிரியர் பொன்முகிலன், கிராமப்புறங்களில் இன்னும் முதியவர்கள் பயன்படுத்தும் 'சுழியம்' என்பதுதான் சைபருக்குச் சரியான சொல். எனவே, 'சுழி' அல்லது 'சுழியம்' இரண்டில் ஒன்றை வைத்துக் கொள்ளலாம் என்று எழுதியிருந்தார். 'சுழி' சரியாகவே தோன்றுகிறது. பரீட்சையில் சுழிச்சுட்டான் என்பது இப்போதும் பயன்படும் வார்த்தை, கம்பராமாயணம் (சுழியும் குஞ்சி), சீவகசிந்தாமணி (சுழித்து நின்று அறாத கற்பிற்கநந்தை) காலத்திலிருந்து பத்துப் பதினைந்து பொருள்களில் பயன்படும் இந்தச் சொல்லின் ஆதாரச் சொல், வளைவு அல்லது வட்ட வடிவம்தான். அதனால், சைபருக்கு இனி சுழி போடுவோம். சுழியம்..? சைபர் தன்மைக்குத் தனிப்பட்ட பெயர்ச் சொல்லாக வரும்போது பயன்படுத்தலாம் என்று தோன்றுகிறது.



# கோபத்தைச் சொல்லுங்கள்!



கமல்ஹாசனின் பிறந்தநாளை இந்த வருடம் நாடே பட்டாசு வெடித்துப் புத்தாடை அணிந்து கொண்டாடியது. அவருக்கு நான் என் புத்தகம் கொடுக்க (தீண்டும் இன்பம்), எனக்கு அவர் Reversing Heart Disease - Dr. Dean Ornish புத்தகத்தைக் கொடுத்து, "இந்த மாதிரி ஒரு புத்தகம் தமிழ்ல கொண்டு வாங்களேன்.." என்றார்.

டாக்டர் ஆர்னிஷ் - இதயநோயை நிறுத்த முடியும், திருத்த முடியும், ஏன்.. திருப்பி அனுப்பவும் முடியும் என்று புள்ளிவிவரங்களுடன் சொல்லியிருக்கிறார். இது எல்லோருக்கும் சாத்தியமோ இல்லையோ, அவர் சொல்லும் அறிவுரைகளில் மேஜிக், மும்போ ஜம்போ, முயல் ரத்தம், மீன் விழுங்குதல் சமாசாரங்கள் ஏதும் இல்லை. 'ரௌத்திரம் பழகு' என்று பாரதி சொன்னார். 'கோபத்தை அடக்க வேண்டும், அதுதான் இதயநோய்களில் பாதிக்குக் காரணம், மீதிதான் கொலஸ்ட்ரால், பிபி (BP), டயாபடிஸ் போன்றவற்றைக் குற்றம்சாட்ட முடியும்' என்கிறார்.

வில்லியம் ப்ளேக்கின் அருமையான வரிகளை மேற்கோள் காட்டுகிறார்.

I am angry with my friend
I told my wrath,
my wrath did end
I am angry with my foe
I told it not,
my wrath did grow

அர்த்தம்:

'நண்பன்மேல் கோபப்பட்டேன்.
கோபத்தைச் சொன்னேன்.
கோபம் முடிந்தது.

எதிரி மேல் கோபப்பட்டேன். அதைச் சொல்லவில்லை. கோபம் வளர்ந்தது.

எதிரிகள் இல்லையேல் கோபம் இல்லை. கோபத்துக்கு வடிகால் வேண்டும். அது இல்லையேல் ஹார்ட் அட்டாக் வரும்.

'உன் பாத்திரத்தில் கொட்டிக்கொண்டே இரு. அது நிரம்பி வழியும். உன் கத்தியைத் தீட்டிக்கொண்டே இரு. அது மழுங்கும்.

பணத்தையும் பத்திரத்தையும் துரத்து.
உன் இதய இறுக்கம் நீங்காது.
மற்றவர் அங்கீகாரம் விரும்பு.

அவர்களின் கைதியாவாய்.

கடமையைச் செய், விலகிக் கொள்.

அதுதான் நிம்மதிக்கு ஒரே வழி..'

என்ற டாவ் டே சிங் என்பவரின் கருத்து நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டது. கீதையும் இதைத்தான் சொல்கிறது.

உணர்ச்சிவசப்பட்டு, அதனால் ஏற்படும் மனஅழுத்தம் (Stress) இருவகைப்பட்டது என்கிறார் டாக்டர் ஆர்னிஷ். டாக்டர் பாஷையில் 'அக்யுட்', 'க்ரானிக்'. உடனடி, அடிக்கடி என்று எளிமையாகச் சொல்லலாம். உடனடி அழுத்தம் எப்போது ஏற்படுகிறது..? நீங்கள் ஒரு சாலையைக் கடந்து கொண்டிருக்கிறீர்கள். திடீரென்று ஒரு பஸ்ஸோ, காரோ, மீன்பாடியோ உங்களை நோக்கி வேகமாக வருகிறது. இடித்து விடும்போல உள்ளது. இந்தவித அபாயத்துக்கு நாம் ஆதிமனித காலத்திலிருந்தே தயாராக இருந்திருக்கிறோம். அப்போது கார் இல்லை. ஆனால், தாக்க வரும் புலி, சிங்கம், மற்றொரு மனிதன். இந்தச் சங்கட வேளையில் என்ன செய்கிறீர்கள்..? சட்டென்று பிளாட்பாரத்தில் பெட்டிக் கடைக்குள் பாய்ந்து தப்பிக்கிறீர்கள். அப்போது உங்கள் கையைத் தகரம் வெட்டிவிடலாம். பரவாயில்லை. உயிர் தப்புவது

முக்கியம். இந்த நெருக்கடிக்கு நம் உடலமைப்பு எப்படித் தயார்நிலை அடைகிறது பார்க்கலாம்.

இந்த மாதிரியான உயிர் தப்பல் தேவைகளை 'fight or flight response' என்று சொல்கிறார்கள். 'எதிர்கொள் அல்லது ஓடிப்போ' இதுதான் ஆதாரம். இதற்கு உங்கள் உடம்பு இரண்டுவிதத்தில் தயாராகிறது.

உங்கள் இதயத்துக்கும் மூளைக்கும் நேரடியான தொடர்பு இருக்கிறது. 'சிம்பத்தெட்டிக் நெர்வஸ் சிஸ்டம்' என்ற அமைப்பில் இந்த மாதிரியான அபாயகரமான சூழ்நிலைகளில் இதயம் வேகமாகத் துடிக்க, மூளையிலிருந்து ஆணை பெறுகிறது. இதனால் இதயத்துக்கு உண்டான கரானரி ரத்தக்குழாய்கள் குறுகலாகின்றன. அதே சமயம், அட்ரினலின் சுரப்பிக்குச் செய்தி செல்கிறது. அது அதிகப்படியாக அட்ரினலினைச் சுரக்கிறது. கார்ட்டிசால் என்ற ஸ்டிராய்டையும் சுரக்கிறது. பொதுவாக, உடனடித் தேவைக்கு அட்ரினலின் அதிகம் சுரக்கும். நீண்டகாலத் தேவை என்றால் கார்ட்டிசால். இவற்றால் நம் உடலில நிகழும் மாற்றங்களை அணுஅணுவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

1. நம் தசைகள் இறுகுகின்றன - அடிபட்டால் அதிகம் காயப்படாமல் இருப்பதற்கு.

2. இதயத்துடிப்பின் வேகமும் ஒவ்வொரு துடிப்பிலும் ரத்தத்தின் அளவும் அதிகரிக்க, நம்மால் தற்காலிகமாக அதிக வலுவும் சக்தியும் பெற முடிகிறது. ரத்தம்தானே எல்லாவற்றுக்கும் ஆதாரம்.

3. ஜீரண உறுப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றன. காரணம், சாப்பாட்டை ஜீரணிக்க அதிக ரத்தம் தேவைப்படும். அதற்கெல்லாம் இப்போது அவசரமில்லை!



4. கண்களின் பாப்பா விரிந்து விடுகிறது. அபாயத்தைத் தெளிவாகப் பார்ப்பதற்கு.

5. மூத்திரம், கொல்லைப்புறம் வரும். காரணம், அடிவயிற்றில் எங்காவது காயம் பட்டால் விஸர்ஜனம் தேங்கியிருந்தால் இன்ஃபெக்ஷன் வரும் அபாயத்தைக் குறைப்பதற்கு.

6. கை, கால்களில் உள்ள ரத்த நாளங்கள் குறுகுகின்றன. அடிபட்டால் ரத்த சேதம் குறைவதற்கு.

7. கைகள் சில்லென்று ஆகி, வியர்ப்பதை உணர்கிறோம். (இதன் அடிப்படையில் 'ஸ்ட்ரெஸ் கார்டுகள்' அழுத்த அட்டைகள் தயாரிக்கிறார்கள். கை உஷ்ணத்துக்கேற்ப நிறம் மாறும் பொய் சொல்லும்போதும் நிறம் மாறும்).

8. ரத்தம் வேகமாக உறைந்துவிடும். அடிபட்டால் அதிக ரத்தம் இழக்காமலிருக்க.

ஒரு விபத்தின் அவசரத்துக்கு இவையனைத்தும் தேவை.

நவீன வாழ்க்கையில் இந்த மாதிரி சந்தர்ப்பங்கள் அரிதாகிவிட்டன. ஆனால், வேறுவிதமான மனஅழுத்தங்கள் நம்மை தாக்குகின்றன.

உதாரணமாக, காலை எழுந்திருக்கிறோம். அலாரம் அடிக்கவில்லை. லேட்... ஆபீஸில் முக்கியமான மீட்டிங். ஷேவ் பண்ணிக் கொள்ளும்போது ஒரு வெட்டு... ரத்தம். 'ஷிட்' என்று அலுத்துக்கொள்கிறோம். ரேடியோ போட்டால், நாளை நீங்கள் பிடிக்கப்போகும் ரயிலோ விமானமோ விபத்துக்குள்ளாகியுள்ளதாகச் செய்தி... பேப்பரைப் பார்த்தால், பங்குச் சந்தை வீழ்ச்சி.. ஸ்டாக்கை விற்று பையனுக்கு காலேஜ் ஸீட்டுக்குப் பணம் கட்டலாம் என்று உத்தேசித்திருந்தீர்கள். அவசர அவசரமாக இட்லி, காபியை நின்றுகொண்டே விழுங்கிவிட்டு காரில் அல்லது பைக்கில் புறப்பட... தண்ணீர் லாரி கவிழ்ந்து ஒரு மைலுக்கு வாகனங்கள் தடைபட்டிருக்கின்றன.

ஆபீஸுக்கு ஒரு மணி நேரம் லேட்டாகப் போனால், எம்.டி. மீட்டிங்கை முடித்துவிட்டு பிரமோஷனுக்கு உங்களுக்குப் போட்டியாக இருக்கும் பிரேம்குமாருடன் சிரித்துக்கொண்டே வெளி வருகிறார். உங்கள் கேபினுக்குப் போனால், இன்கம்டாக்ஸ் அதிகாரி ஒருவர் போன் செய்ததாகக் குறிப்பு வைத்திருக்கிறது. அது, ஒரு சாதாரண தினம் அப்போதுதான் துவங்குகிறது!

இதைத்தான் 'க்ரானிக் ஸ்ட்ரெஸ்' என்கிறார் ஆர்னிஷ். நொய் நொய் அழுத்தம்! படிப்படியாக நம்மேல் மனஅழுத்தங்கள் அடுக்கப்படும்போது... நம்மை உயிர்காப்பாற்றும் அதே அட்ரினலின்,


கார்டிசோன் சமாசாரங்கள்தான் இப்போதும் சுரக்கின்றன. ஆனால், இப்போது உயிரைக் காப்பாற்ற அல்ல.. கேடு விளைவிக்க!

இதைச் சமாளிக்க என்ன செய்ய வேண்டும்..? சாமியாராக இமாலய மடியில் போய் உட்காரலாம். சம்பாதிப்பது யார், எங்ஙனம்..?

மன அழுத்தம் தரும் இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் உடனடியாகச் செயல்படுவது முக்கியம்தான். ஆனால், செயல்பட்ட உடனே சுதாரித்துக்கொள்ள வேண்டும் என்கிறார் ஆர்னிஷ்.

எப்படி என்பதை அமெரிக்கா போய்த் திரும்பியதும் சொல்கிறேன். அவசரத்தில் உள்ளவர், ஆரம்பத்தில் குறிப்பிட்ட புத்தகத்தைப் படிக்கலாம் அல்லது ஆபீஸில் ஒரு தங்கமீன் தொட்டியும் ஒருசில நிஜமலர்களும் வைத்தால்கூடப் போதுமாம்!

# ஒன்றுதான் உண்மை!



விடைபெறப் போகும் நூற்றாண்டில் அறிவியலின் முன்னேற்றம் பற்றிப் பேசலாம். இந்த நூற்றாண்டு துவங்குமுன் நிகழ்ந்த இயற்பியல் கண்டுபிடிப்புகள் சில நூற்றாண்டு முழுவதையும் பாதித்தன. எக்ஸ்-ரே கதிர்கள், ரேடியோ ஆக்டிவிட்டி என்னும் கதிர் இயக்கம், அணுத்துகளான எலெக்ட்ரானைப் பிரித்தது. ரிலேட்டி விட்டி என்னும் சார்பியல் தத்துவம், க்வாண்டம் இயற்பியல் இவை அனைத்தும் சக்தி, பொருள் (Matter) இரண்டையும் பற்றிய புதிய பார்வைகளை ஏற்படுத்தின. வேதியியல், வானவியல், புவிஇயல், உயிரியல், மருத்துவம், தொழில் நுட்பம் எல்லாவற்றையும் இந்தக் கண்டுபிடிப்புகள் பாதித்தன. இதன் உச்சகட்டமாக 1945-ல் முதல் அணுகுண்டு வெடித்து, மனிதனின் சரித்திரத்தையும் மனப் பாங்கையும் திருத்த முடியாதபடி மாற்றிவிட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவியல் ஆராய்ச்சியில் ஆழ்ந்திருந்தவர்கள் ஒரு சிலரே. இருபதாம் நூற்றாண்டில் அந்த நிலை மாறியது. மனித சரித்திரத்தில் அதுவரை வாழ்ந்த விஞ்ஞானிகளைவிட இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானிகளின் எண்ணிக்கை அதிகம் அறிவியல் ஆராய்ச்சியின் தன்மையும் வேகமாக மாறி, கூட்டு முயற்சியாகிவிட்டது. ஐன்ஸ்டைன், ரூதர்ஃபோர்டு, போர் (Bohr) போன்ற தனிப்பட்ட மேதைகள் மட்டுமின்றி எண்ணிறந்த சிறுசிறு ஆராய்ச்சியாளர்களாலும் துளித்துளியாக முன்னேறியது. பல பெரிய கண்டுபிடிப்புகள் செங்கல் செங்கல்லாகக் கட்டிய மாளிகைகள் போல உயர்ந்தன. 19-ம் நூற்றாண்டின் பல கண்டுபிடிப்புகளுக்கு இருபதில் சரியான விளக்கங்கள் கிடைத்தன. உதாரணம்: மெண்டலேவின் 'பீரியாடிக் டேபிள்' என்னும் வேதியியல் தனிமங்களின் அட்டவணையில் உள்ள ஒழுங்கு, மைக்கல்சன் மார்லேயின்

பரிசோதனைகளில் ஒளியின் வேகம் எந்த திசையிலும் மாறாமல் இருப்பது போன்றவை எல்லாம் சரியாக விளக்கப்பட்டன.

சமுதாயத்தின் மேல் விஞ்ஞானத்தின் தாக்கமும் விரிவடைந்தது. சென்ற நூற்றாண்டில் விஞ்ஞானம் சமுதாயத்தின் மேல் அதிக பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் சமுதாயத்தின் முக்கியக் கவலை ஆயிற்று. பல்கலைக்கழகங்களும் தொழிற்சாலைகளும் ஆராய்ச்சியின் முக்கியத்தை உணர்ந்து அதற்காகச் செலவழிக்க ஆரம்பித்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முறைகளில் குறை இல்லை. அவை இருபதாம் நூற்றாண்டில் உன்னதப்படுத்தப்பட்டன. உதாரணம்; மைக்ராஸ்கோப் என்னும் நுண்ணோக்கி நுட்பமாகி நோய் பரப்பும் கிருமிகளைக் கண்டுபிடிக்க உதவியது. பழைய வேதியியல் முறைகள் புதிய செயற்கைப் பொருட்களையும் கூட்டணுக்களையும் வடிவமைக்கப் பயன்பட்டன.


பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவியல் அதன் கண்டுபிடிப்புகள் மூலம் சமுதாயத்தைப் பாதித்தது. உதாரணங்கள்: மின்சார விளக்கு, பஞ்சாலை, மோர்ஸ் தந்தி போன்றவை. இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் நேரடியாக சமுதாயத்தை மாற்றத் துவங்கியது.

ஒரு கண்டுபிடிப்புக்கும் அதன் பயன்பாட்டுக்கும் உள்ள கால இடைவெளி குறைந்தது. எலெக்ட்ரான் என்ற பெயர் கிரேக்கர்கள் காலத்தில் இருந்து இருக்கிறது. அந்த எலெக்ட்ரானைத் தனிப்படுத்தி உற்பத்தி செய்ய ஏறத்தாழ இரண்டாயிரம் வருஷமாயிற்று. ஆனால், அதன்பின் இருபது வருஷத்தில் எலெக்ட்ரானிக் வால்வு கொண்டுவரப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்குள் அது செய்தி ஒலிபரப்புத் தொடர்புக்குப் பயன்படுத்தப்பட்டது. அதிலிருந்து டிரான்சிஸ்டர் உருவாயிற்று. உடனே ஐசி-க்கள்.. உடனே சிலிக்கன் சில்லுகள்... உடனே மைக்ரோப்ராசஸர், இந்த அவசரம்தான் நூற்றாண்டு விஞ்ஞானத்தின் அடையாளச் சீட்டு ஆரம்பத்தில் ஜெர்மனிதான் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் முன்னோடியாக இருந்தது. ஐம்பது வருஷமாக அந்த நாடு வேதியியல் முறைகளைத் தொழில் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்துவதில் முதன்மையாக இருந்தது. சாயங்கள், மருந்துப் பொருள்கள் தயாரிப்பில் தலைசிறந்திருந்தது. ஆனால், ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததும் ஜெர்மனியின் அறிவியல் தலைவிதி மாறியது. ஐரோப்பிய விஞ்ஞானிகள் பலபேர் குடியேறியதால் அமெரிக்கா விஞ்ஞானத்தில் முதல் இடத்தைப் பறித்துக்கொண்டது.

1932-லிருந்து 38 வரை 28 நோபல் விஞ்ஞானிகளில் 8 பேர் அமெரிக்கர்கள். அனைவரும் அமெரிக்காவில் பிறந்தவர்கள். 1938-க்குப் பின் பரிசு பெற்றவர்கள் பெரும்பாலும், ஜெர்மனியில் இருந்து குடிபோனவர்கள். அதே காலகட்டத்தில் சோவியத் யூனியன் ஜெர்மானியர்கள் வருவதைத் தடுத்தது. அதனால் அந்த நாட்டுக்கு இரண்டு நோபல் பரிசுகள்தான் கிட்டின.

முதல் உலகப்போர் விஞ்ஞானத்தில் யுத்தம் வெல்ல முடியும் என்பதை நிரூபித்தது. ஜெர்மனியில் யுத்தம் சார்ந்த ஆராய்ச்சி சாலைகள் மட்டும் நூறு இருந்தன. அவற்றில் கண்டுபிடிக்கப்பட்ட தளவாடங்களினால் பலபேர் செத்தார்கள். அதேசமயம் விஞ்ஞானமும் முன்னேறியது. இறுதி விளைவாக, உச்சகட்டமாக அணுகுண்டு விஞ்ஞானத் தத்துவங்கள்.

இந்த நூற்றாண்டின் முதல் பாதியில் இயற்கையின் ஆதாரவிதிகளையும் அமைப்பையும் விளக்குவதில் விஞ்ஞானம் நல்ல வெற்றி கண்டது. ரசாயன மாற்றங்களின் ரகசியங்கள், உயிரின் ரகசியம், பிரபஞ்சத்தின் ஆரம்பம் போன்ற விஷயங்களை விளக்க முற்பட்டது. இந்த விளக்கங்கள் மனிதர்களுக்கு இயற்கையின்மேல் இருந்த கண்ணோட்டத்தில் ஆதார மாறுதல்களைக் கொண்டுவந்தன. திடீர் என்று ரகசியங்கள் வெளிப்பட்டதும் சிருஷ்டியின் உண்மைக்கு மிக அருகே வந்துவிட்டதில் கர்வமும் பயமும் ஏற்பட்டன. சி.எஸ்.பியர்ஸ், வில்லியம் ஜேம்ஸ் போன்ற தத்துவ ஞானிகள் ப்ராக்மாடிசம் pragmatism என்னும் கொள்கை அமைத்து உண்மை என்பதை அனுபவத்தால் மட்டுமே அறிந்துகொள்ள முடியும் என்றார்கள். அதேசமயம், விஞ்ஞானம் என்பது குறிப்பாக கணித விஞ்ஞானம் தர்க்க ரீதியானது.. விதிகளுக்குள் வரக்கூடியது என்பதையும் உணர்ந்தார்கள். புதிய யதார்த்தம் (New Realism) என்கிற தத்துவப்படி விஞ்ஞானத்துக்கு வெளிப்படையாகத் தெரிவதுதான் உண்மை. முன் தீர்மானித்த (a priori)விதிகளின்படிதான் உண்மையை உணரமுடியும் என்று மாக், ஹெகல் (Mach, Hegel) போன்றவர்கள் சொன்னார்கள். எல்லாமே தீர்மானித்த உலகம் என்றும் குறிப்பாக, ஆதார தத்துவங்கள் விஞ்ஞானத்துக்கு இருப்பதாகவும் நம்பினார்கள். விஞ்ஞான முறைகள் தத்துவ விளக்கங்களை இந்த நூற்றாண்டில் ஆக்கிரமித்தன. டார்வினின் பரிணாம தத்துவம் இருபதாம் நூற்றாண்டு சிந்தனா முறைகளை மிகவும் பாதித்தது. இயற்கையின் தேர்ந்தெடுப்பு என்னும் Natural Selection அடிப்படை சமூக இயல், மனோதத்துவ இயல் எல்லாவற்றையும் பாதித்தது.



ஐன்ஸ்டைன்

க்வாண்டம் தியரி என்பதும் இந்த நூற்றாண்டின் சிந்தனா முறைகளை மிகவும் பாதித்த ஒன்று. நியூட்டனின் தத்துவங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மதிப்பிழக்கத் துவங்கின. அதை வைத்துக்கொண்டு பல புதிய கண்டுபிடிப்புகளை விளக்க முடியவில்லை. அதற்காக நியூட்டன் தத்துவங்களைத் துறந்து உல்ஃப்காங் பாலி, எர்வின் ஷ்ரோடிங்கர் போன்றவர்கள் க்வாண்டம் இயற்பியலைக் கொண்டு வந்தார்கள். இதன்படி எலெக்ட்ரான் என்பது ஓர் இடத்தில் குவிந்த திடப்பொருள் அல்ல. அது ஓர் அலைத்தொடர் அல்லது ஒரு சாத்தியக்கூறுதான் (Probability) இந்த இடத்தில் இருக்கலாம் அவ்வளவுதான். லூயிஸ் டி ப்ராக்லி (Louis de Broglie)என்பவர் தான் திடப்பொருளை ஓர் அலைத்

தொடராகவும் பார்க்க முடியும் என்று சொன்னார். எலெக்ட்ரான்கள் ஸ்படிகங்களின் ஊடே செல்லும்போது அலை, ஒளி அலைகள் போலச் சிதறுவதைக் கண்டார்கள். 1927-ல் ஹைஸன்பர்க் என்பவர் இந்த நூற்றாண்டின் மிகப் புரட்சிகரமான அநிச்சயத் தன்மை (Uncertainty Principle) சித்தாந்தத்தைக் கொண்டுவந்தார். அது இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த மனித சிந்தனையின் அடிப்படைகளைக் கலைத்துவிட்டது. அவர் சொன்னது எலெக்ட்ரான் போன்ற துகளின் வேகத்தை மதிப்பிட முயன்றால் அதன் இருப்பிடம் மாறிவிடும். இடம், வேகம் இரண்டையுமே ஒரே சமயத்தில் நிர்ணயிக்க இயலாது. உண்மையை அறிந்து கொள்ளும் முயற்சியே, பரிசோதனையே உண்மையை மாற்றிவிடும். துகள்களாலான உலகத்தில் ஏதாவது ஒன்றுதான் உண்மை. அலை அல்லது துகள், இடம் அல்லது வேகம் இரண்டுமே ஒரே சமயத்தில் உண்மையாக இருக்க முடியாது. காம்ப்ளிமெண்டாரிட்டி என்னும் இத்தத்துவத்தை நியல்ஸ் போர் என்னும் இயற்பியல் விஞ்ஞானி சொன்னார்.

இதுதான் இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய தத்துவம். இதனால் இயற்பியல் காட்டும் உண்மை என்பது சந்தேகத்துக்கும் குழப்பத்துக்கும் இடமாயிற்று. விஞ்ஞானிகளுக்கு எல்லாம் தெரியும் என்கிற ஆணவம் ஆட்டம் கண்டது.

# மீண்டும் அமெரிக்கா!




**எல்**.ஏ. விமான நிலையத்தில் இமிக்ரேஷனைக் கடப்பதற்கு முன் கேள்விகளுக்குத் தயாராகிறேன். எதற்காக வந்திருக்கிறாய்? யார் அழைத்தார்கள்? எத்தனை நாள் வாசம். எங்கே உன் விலாசம். என்ன அத்தாட்சி. என்ன சாட்சி... சென்ற முறை சான் ஃபிரான்சிஸ்கோவில் இதைத்தான் கேட்டதனால் முன்கூட்டிய பதில்களுடன் அதிகாரிகளை மெள்ள அணுகினேன். அவர் என்னை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் 'சப்பக்' என்று பாஸ்போர்ட்டில் முத்திரை குத்தி அனுப்பினார். பற்ற வைத்து வெடிக்காத ஒற்றை வெடி போல உணர்ந்தேன். அமெரிக்காவில் எதையும் எதிர்பார்க்க முடியாது. அதன் ஆச்சரியங்களும் அபத்தங்களும் அளவில்லாதவை. விநிலைய வாசலில் ஜெட் தேக்கத்தால் கனத்த கண்களுடன் பார்க்கிங் கிடைக்காமல் மூன்றாவது சுற்றுக்குப் போய் திரும்பக் காத்திருக்கிறேன். நல்ல வெயில். ஓட்டலுக்கு வந்ததும் லக்கேஜ் எடுத்து வைக்க ஆளில்லை. சப்பரம் போல பெரிய தள்ளுவண்டியைக் காட்டி 'நீயே தள்ளிக்கோ' என்கிறார்கள். குடித்தனம் பண்ணலாம் போல பெரிய லிஃப்ட் அமெரிக்காவில் எல்லாமே பெரிசு. ஏர்போர்ட் பெரிசு கார் பெரிசு திராட்சைப்பழம் பெரிசு (மாங்காய் அளவு). கடலைக் கொட்டை, பலாக் கொட்டை சைஸுக்கு. ரொட்டி நம்ம ஊர் ரொட்டியைவிட இரண்டு மடங்கு புஷ்டி, நாலு மடங்கு நீளம். இரண்டு டைலினால் கேட்டால் குறைந்தபட்சமே ஐம்பது காப்ஸ்யூல் கொண்ட பாக்கெட்தான். பெண்களின் அங்கங்கள், கோக், பாப்கார்ன், செல்லப் பூனைக்கு செலவழிக்கும் பட்ஜெட்... எல்லாமே கிங்சைஸ். அதனால் நம் இந்திய மென்பொருள் இன்ஜினியர்கள் சில சமயம் கண்ணுக்கே தெரிவதில்லை.

சென்ற விஜயத்துக்குப் பின் இப்போது என்ன என்ன மாறுதல்கள் என்று கவனிப்பது எனக்கு வழக்கம்.

ஒவ்வொன்றாக பார்க்கலாம்.

**1.** திரை: Blairwich Project என்னும் திரைப்படம் 35 ஆயிரம் டாலர் செலவில் டேனியல் மைரிக், எடுவர்டோ ஸான்செஸ் என்ற இரு டைரக்டர்கள் எடுத்த படம். இருவருமே இளைஞர்கள். கை காமிராவை எடுத்துக் கொண்டு மூணு பேரை காட்டில் தொலையவிட்டு, அலையவிட்டு கதை, வசனம் ஏதும் எழுதாமல் என்ன வேண்டு மானாலும் பேசு, பண்ணு என்று எட்டு நாட்களில் எடுத்த சஸ்பென்ஸ் படம். நூறு மில்லியன் டாலர். அதாவது பத்து கோடி டாலர் இதுவரை வசூல்.

காரணம் என்ன என்று மண்டையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். காட்டில் காணாமல் போகும் அச்சம்தான் அதன் மையக் கருத்து. Hanse and Grete போன்ற குழந்தைக் கதைகளிலிருந்து இது அலுக்காத ஒரு சப்ஜெக்ட், அமெரிக்கர்கள் திரைப்படங்களில் பிரமாண்டமும் அலங்காரமும் ஸ்பெஷல் எஃபெக்டும் சயின்ஸ் ஃபிக்ஷனும் பார்த்துப் பார்த்து களைத்துப் போய் ஏதாவது புதுசாகக் காட்ட மாட்டார்களா என்று ஏங்குகிறார்கள். அதற்கு இந்தப் படத்தின் வெற்றி அத்தாட்சி என்கிறார்கள்.

'என்னதான் மோசமாக எடுக்கப்பட்டாலும் காட்டில் காணாமல் போவது நிஜமாகவே இருக் கிறதே. அது போதும் என்கிறார்கள். ஆனால், இது மாதிரி இன்னொரு படம் தாங்குமா.. சந்தேகம். நைட் சியாமளனின் 'ஆறாவது அறிவு' இன்னமும் 'டாப் டென்'னில் இருக்கிறது. அவருடைய அடுத்த படத்துக்கு வால்ட் டிஸ்னி எத்தனையோ மில்லியன் கொடுத்திருக்கிறது. ஸ்பீல்பெர்க்குக்கு அடுத்தபடியாக இந்தப் பாண்டிச்சேரி தமிழர் (சிலர் இவரை கேரளக்காரர் என்கிறார்கள். இந்தியர்.. அதில் சந்தேகமில்லை).

**2.** சிறார்: போக்கிமான் சீட்டுகள் (Pokemon cards) தான் சிறுவர் சிறுமியரிடம் இன்றைய வெறி 'பாக்கெட் மான்ஸ்டர்' என்பதன் சுருக்கம். போக்கிமான் ஜப்பானிய கார்ட்டூன் காரெக்டர் (பைக்குள் பூதம்). இதில் நல்ல போக்கிமான், அரிதான போக்கிமான் கெட்ட போக்கிமான் என்ற பலவகை இருக்கிறது. இந்த சீட்டுக்கு பண்ட மாற்றாக இதைக் கொடுக்கலாம், பெறலாம், மாற்றலாம் என்று சிக்கலான வசதிகளும் மதிப் பெண்களும் உள்ளன. அதைச் சார்ந்த பொம்மைகள் லட்சக்கணக்கில் விலை போகின்றன. போக்கிமான் கார்ட்டூன் திரைப்படம் ஒரு மெகாஹிட் அமெரிக்க நாட்டில் அத்தனை

சிறுவர் சிறுமியரும் அவரவர்கள் பெற்றோரும் போக்கிமானுக்கு அலைகிறார்கள். ஜப்பானில் இருந்து புதிய போக்கிமான் கார்டுகள் வந்தபோது அவற்றுக்கு ராணுவப் பாதுகாப்பு தரப்பட்டதாம்.

இந்த போக்கிமான் பைத்தியம் பெரியவர்களால் தொலைக்காட்சி சானல்களில் அலசப்படுகிறது. இது நல்லது என்று சிலரும் கெட்டது என்று சிலரும் வாக்குவாதம் செய்கிறார்கள். இது ஒன்றும் புதுசல்ல. முன்பொரு முறை வந்திருந்த போது 'பெட்ராக்' செல்லக்கல் என்று ஒரு கூழாங்கல்லுக்கு அலங்காரம் பண்ணி ஆடை அணிவித்து வேளாவேளைக்கு சாப்பாடு போட்டு வளர்த்தார்கள். சின்ன வயசில் ஸ்ரீரங்கத்தில் தீப்பெட்டி லேபிள்களும் ஃபிலிம் துண்டுகளும் சேர்த்ததுதான் ஞாபகம் வருகிறது.

வெட்டும்புலி எல்லாரிடமும் இருக்கும். வெட்டுக்கிளி, இரட்டைக்கிளி கிடைக்கவே கிடைக்காது. திருமஞ்சனக் காவேரி பாச்சு ஒரு இரட்டைக்கிளி வைத்திருந்தான். நூறு வெட்டும்புலியும் ஐந்நூறு புளியாங்கொட்டை களும் கொடுத்தால் பத்து செகண்டு பார்க்க அனுமதிப்பான்.

இதே விளையாட்டுதான் போக்கிமான் சீட்டுகள். இதுபோல் ஃபிலிம் துண்டுகளும் சேர்ப்போம். ஜகதலப்பிரதாபன் படத்தில், 'அஞ்சு கச்சேரி' என்று ஒரு ஃபிலிம் உண்டு. பி.யு. சின்னப்பா பாடுவார், வயலின் வாசிப்பார், மிருதங்கம், கடம், கொன்னக்கோல், மோர்சிங் எல்லாமே ஒரே மேடையில் உட்கார்ந்தபடி வாசிப்பார். 'நமக்கினி பயமேது' என்று பாடல். இந்த ஃபிலிம் திருச்சி ஜில்லாவிலேயே ஏழோ எட்டோதான் இருந்தது. நங்கவரம் பண்ணையில் ஒருவர் வைத்திருந்ததாக வதந்தி. இடது கையை வெட்டிக் கொடுத்தால்தான் கிடைக்கும்.

ஜப்பான், இந்த போக்கிமான் கார்டுகளாலும் மோட்டார் கார்களாலும் சண்டையில் இழந்ததை சமாதான காலத்தில் பிடிக்கிறது. அமெரிக்கர்களிடம் பழி வாங்குவது போல தோன்றுகிறது.

சிறுவர் சிறுமியரிடையே பண்டமாற்று வியாபாரம், பேரம் பேசும் திறமைகளை வளர்ப்பது நல்லதுதான் என்று பெரியவர்கள் வாதாடுகிறார்கள்.

**3.** தொலைக்காட்சி: 'ரியல் டிவி.' என்பது பிரபலமாகி இருக்கிறது. நிஜமான போலீஸ் துரத்தல், நிஜமாகவே கணவன், மனைவிக்குத்

துரோகம் செய்துவிட்டு செக்ரெட்டரியை தொடை தடவல், நிஜமாகவே ஒருவர் தெருவில் ஒன்றுக்கு போவது, பீட்ஸா டெலிவரி கொடுக்க வந்தவன் வாசலில் அதை தவறிக் கீழே போட்டுவிட்டு அதன் மேல் எச்சில் துப்பி துடைத்து விட்டு லேசாக ஒரு கடி கடித்துவிட்டு டெலிவரி பண்ணுவது - இவற்றையெல்லாம் மறைந்திருந்து படம் பிடித்து அதற்காகவே ஒரு சானல் நடத்துகிறார்கள்.

வழக்கம் போல பழைய விளையாட்டுகளான 'ப்ரைஸ் இஸ் ரைட்' போன்றவை. இன்னும் ஓடிக் கொண்டிருந்தலும் 'Who wants to be a millionaire?' என்ற நிகழ்ச்சிதான் மிகப் பிரசித்தம். முதலில் சில எளிய கேள்விகள் கேட்டு பதில் சொல்லச் சொல்ல பரிசுத் தொகை இரட்டிப்பு ஆகிறது. இறுதியில் ஒரு சுற்று கஷ்டமான கேள்விகள். பதில் சொன்னால் பத்து லட்சம் டாலர்! நான் இருந்தபோது செய்திகளை ஆக்கிரமித்தது எகிப்திய போயிங் 767 விமானம் ஒன்று கடலில் விழுந்து இருநூறுக்கு மேற்பட்டவர் இறந்துபோய் கடலுக்குள் கஷ்டப்பட்டு ப்ளாக் பாக்ஸ் என்னும் பெட்டியை மீட்டு டேப் ரிக்கார்டரைப் போட்டுப் பார்த்ததில் பதௌதி என்கிற கோ-பைலட் (உப வலவன்) விமானம் விழுவதற்கு சற்று முன் 'வாகிலத் அலா அல்லா' (கடவுள் மேல் நம்பிக்கை வைக்கிறேன்) என்று எதற்காக தொழுகை செய்தார்... தற்கொலை முயற்சியா என்று அதிகாரிகள் கேட்கப் போய் அது பெரிய சர்வதேசப் பிரச்னை ஆகிவிடாமல் இருக்க அடக்கி வாசித்தார்கள். இன்னமும் விமானம் விழுந்ததற்கு காரணம் கண்டுபிடிக்கவில்லை.

**4.** மற்றவை: சன்னிவேலில் 'முதல்வன்' ஓடிக் கொண்டிருக்க, கோமளவிலாஸில் எட்டு டாலருக்கு ஐயங்கார் சாப்பாடு கிடைக்கிறது. மென் பொருளாளர் தமிழர்கள் பலர் ஸ்டாக் ஆப்ஷன் தயவில் மில்லியனராகியிருக்கிறார்கள். சிவசங்கரன் அவர்களின் ஃப்ரீமாண்ட் மலை உச்சி வீட்டுக்கு 'லிமோசின்' பயணம். லாஸ்வேகாஸில் பார்த்த அருமையான 'மிஸ்டியர்' என்னும் பிரெஞ்சு (மிருகம் இல்லா) சர்க்கஸ், காம்டெக்ஸ் என்னும் உலகின் மிகப் பெரிய கம்ப்யூட்டர் விழா (இரண்டாயிரம் கம்பெனிகள் காட்டிய எல்லா சாதனங்களும் வெப் வலை சார்ந்தவை). என் பேரன் சித்தார்த்தின் மழலைச் சிரிப்பு.

மறக்க முடியாத இருபது தினங்களுக்குப் பின், வரும் வழியில் சிங்கப்பூரில் இரண்டு தினங்கள். தொலைக்காட்சி அதிகாரி ராஜசேகர், பிரமிட் அதிபர்கள், ஷா சாம்ராஜ்ய வாரிசுகள், அரவிந்தன், கனிமொழி எல்லோரையும் சந்தித்து விடைபெறுமுன் அண்மைக்கால சிங்கப்பூர்

கவிதைகளிலிருந்து சில சாம்பிள் வரிகள் -



ஆருடம்
சொன்னவனை நம்பி
அனைத்தையும்
அடகு வைத்து
இங்கு வந்து சேர்ந்தவனுக்கு
ரோடில்
தார் போடும் வேலை –

- ராஜசேகர்

அன்றொரு நாள்
ஹாய் சொன்னவனுக்கு
கழுத்தை நீட்டினாள்
...
...
(இ)ப்போதும் இவள்
தேடுவது
அன்றொரு நாள்

ஹாய் சொன்ன
அவனை....

- இந்திரஜித்
நன்றி: தமிழ்முரசு

# விடு கவிதைகள்!



**லா**ஸ்வேகாஸ் நகரத்தில் காம்டெக்ஸ் (Comdex) என்னும் உலகிலேயே பெரிய கணிப்பொறிக் கண்காசி மற்றும் கருத்தரங்கத்துக்குப் போயிருந்தேன். பில்கேட்ஸ், ஸ்காட் மக்நீலி போன்ற பெருந்தலைவர்கள் வந்து உரையாற்றிய அரங்கங்களில் கூட்டம் அம்மியது. பில்கேட்ஸ் சமீபத்தில் கேஸ் தோற்று, மைக்ரோசாஃப்ட் நிறுவனம் ஒரு மானோபொலி (பிரத்தியேக உரிமை) கம்பெனி என்று நீதிபதி தீர்ப்பளித்த சூழ்நிலையில், அந்த மகாமெகா கம்பெனி என்ன செய்யப் போகிறது என்பது பற்றிப் பலவிதமான சர்ச்சைகள் இருக்கும் நேரத்தில், பில்கேட்ஸ் சிரித்துக்கொண்டே எதுவுமே நடக்கவில்லைபோல, "உங்களில் யாருக்காவது வக்கீல் பற்றிய ஜோக் ஏதாவது தெரியுமா..?" என்று உரையை ஆரம்பித்தார். அவருடைய பரமவைரியான சன் நிறுவனத் தின் ஸ்காட் மக்நீலி இரண்டு நாள் கழித்து பேசும்போது, "உங்களில் யாருக்காவது மானோபொலி பற்றிய ஜோக்குகள் தெரியுமா..?" என்று துவங்கினார்.

பின்னணியில் கணிப்பொறி உலகில் ஒரு ஹைடெக் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. மைக்ரோசாஃப்ட் நிறுவனம் விண்டோஸ் 2000, ஆபீஸ் 2000 போன்ற 'பிசி' சார்ந்த மென்பொருள்களை உலகின் மேல் திணிக்க முற்படுகிறது. சன் நிறுவனமும் ஆரக்கிள் போன்ற அதன் சகாக்களும் ஜாவா என்னும் கணிமொழி சார்ந்த லினக்ஸ், யூனிக்ஸ் ஓ.எஸ். மென்பொருள்களின் உதவியுடன் நெட் வொர்க் கம்ப்யூட்டிங் என்னும் மாற்றுப் பாதை போட்டுக் கொண்டு மைக்ரோசாவின் கிடுக்கிப் பிடியிலிருந்து உலகை விடுவிக்க, விலக வைக்க முற்பட்டு வருகிறது. யார் ஜெயிப்பார்கள் என்பதை முடியவில்லை. "இப்போது பிரச்னை ஒய் டு கே இல்லை. டபுள்யு டூ கே-யும் ஓ டூ கே-யும்தான் (W2K, O2K)" என்றார் மக்நீலி. அர்த்தம் புரியாதவர்கள், கணிப்பொறியாளர் களைக்

கேட்டுப் பாருங்கள்.

லாஸ்வேகோஸ் நகரம் நெவாடா மாநிலத்தில் உள்ளது. அது சூதாட்டத்துக்கும் அவசரக் கல்யாணம், டிவோர்ஸுக்கும் பெயர் போனது. இந்த இமேஜை துறந்து கம்ப்யூட்டர் நகரமாக மாற்ற விரும்பி, அதற்கான பலவிதமான சலுகைகளைச் செய்து கொடுக்க நகரத்தின் மேயர் திருமதி ஜேன் லெவர்ட்டி ஜோன்ஸ் பாடுபடுகிறார். முக்கியமாக இன்கம்டாக்ஸ், கார்ப்பரேட்டாக்ஸ் இரண்டும் கிடையாது. குறைந்த விலை நிலம், எளிதான கடன் வசதி.. இப்படி இந்த நகரத்தை, அமெரிக்காவில் வாழச் சிறந்த நகரம் என்று அடிக்கடி கருத்துக் கணிப்பில் சொல்கிறார்கள். உண்மை என்று தோன்றுகிறது. நகரத்தில் நிறைய கிழவர்-கிழவிகளைப் பார்த்தேன். துள்ளி விளையாடுகிறார்கள். காஸினோக் களில் ஸ்லாட் மெஷின்களில் உற்பத்தியின் போதே ஒரு கிழவியைக் கூட அனுப்புகிறார்களோ என்று எண்ணத் தோன்றியது. பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட, வசதி படைத்த மூதாட்டியர் அதிகாலை எழுந்து பல் தேய்த்த உடன் வந்து உட்கார்ந்து பின்னிரவு வரை அதில் காசு போட்டுச் சக்கரங்களைச் சுழற்றிக் கொண்டிருக்க, அவ்வப்போது ஏதாவது ஒரு மெஷினிலிருந்து காசு 'டங். டங்..' என்று குவளையில் கொட்டும் சத்தம்தான் இந்த நகரத்தின் பிரதான ஒலி. நான் ஒரு டாலர் விளையாடிப் பார்த்தேன். 'தொர... தொர...' என்று காசு கொட்டியது - பக்கத்து மெஷினில்!

நான் தங்கியிருந்த 'எக்ஸ்காலிபர்' ஓட்டலில் ஐயாயிரம் அறைகள். செக் இன் பண்ணும் இடம் ரயில்வே ஸ்டேஷன் போலிருந்தது. நெவாடா பல்கலைக் கழகத்தில் இந்திய மாணவர்கள் பலர் படிக்கிறார்கள். மொத்த நகரமே 'ஸ்ட்ரிப்' என்பதில் அடங்கிப் போய் எம்.ஜி.எம். கிராண்ட் போன்ற பிரசித்திப் பெற்ற ஓட்டல்களின் சூழலில் பகலிலும் வெளிச்சம் போட.. நகரமே ஒரு மாயத் தோற்றமாக, கண்சிமிட்டினால் காணாமல் போய் விடும் போல இருக்கிறது.

Brush up your Shakespeare (Michael Macrone) என்கிற புத்தகத்தை இந்த முறை என் மகன்களிடமிருந்து கடத்திக் கொண்டு வந்துவிட்டேன். ஷேக்ஸ்பியரின் மிகப் பிரசித்தமான வரிகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் கிடைக்கும் உபரித் தகவல்கள் சுவையானவை. உதாரணமாக, foregone conclusion, wild goose chase, rhyme or reason, the be all and the end all, assassination போன்ற இன்றைய ஆங்கிலத்தில் சரளமாகப் பயன்படுத்தும் சொற்கள் நூற்றுக்கணக்கானவை ஷேக்ஸ்பியரில்

இருந்து வந்தவை என்று அறிய ஆச்சரியமாயிருக்கிறது. இந்த நோக்கில் திருக்குறளை ஆராய்ந்தால், சில நூறு சொற்கள் இன்றும் புழக்கத்தில் இருக்கின்றன.

இவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் - பொருள் மாறாமல் இருப்பவை. காலப்போக்கில் பொருள் மாறியவை. உதாரணமாக - அல்லல், தூய்மை, பெருமை, உடம்பு, மனநலம், மோப்பம், உள்ளம், மனம், உறுதி, பண்பு, மெய், வணிகம், நட்பு (நட்பு என்கிற பயன்பாடு மறைந்துவிட்டது).

இவையெல்லாம் அர்த்தம் மாறாமல் இன்றும் பயன்படும் குறள் வார்த்தைகள்.

கழகம், கண்ணோட்டம், நாகரிகம், கடன், சோர்வு, இசை, காமம் போன்றவை பொருள் மாறிவிட்டன. இதில் 'கழகம்' என்கிற சொல்லைக் கொஞ்சம் ஆராயலாம். வள்ளுவர் காலத்தில் 'கழகம்' என்பது சூதாடும் இடம் என்கிற அர்த்தத்தில்தான் பயன்பட்டிருக்கிறது. புறப்பொருள் வெண்பா மாலையிலும் சூது என்கிற பொருளில் பயன்பட்டிருக்கிறது. 'திவாகரம்' என்னும் நிகண்டு (எட்டாம் நூற்றாண்டு) இதன் பொருள் படை, மல் முதலியின பயிலும் இடம் என்று கூறுகிறது. அதாவது ஒரு ஜிம்னேசியம் போல. புலவர்கள் கூடிய சபை எனவும் திவாகரம் கூறுகிறது. கம்பர் காலத்தில் கழகம் சற்று மாறி, கல்வி பயிலும் இடமாயிற்று (கந்தனை அனையவர் கலை தெரி கழகம்). மெள்ள மெள்ள கழகம் ஒரு குழு, ஒரு கட்சிக்கு அல்லது ஒரே செயல் திறமுடைவரின் அமைப்புக்கு இன்று பயன்படுகிறது. அரசியல் ஒரு சூதாட்டம் என்ற இன்றைய நிலையில், கழகம் என்பதற்குத் திருவள்ளுவர் காலத்துப் பொருள் கூடச் சொல்லலாம் போல.



அமெரிக்காவில் சில புத்தகங்களை வாங்கவும் செய்தேன். என் அபிமானக் கட்டுரையாளரான மார்ட்டின் கார்டனரின் Whys and Wherefores அதில் ஒன்று. உலகத்திலேயே மிகச்சிறிய திகில் விஞ்ஞானக் கதை எது என்பதற்கு கார்டனர். உதாரணம் கொடுத் திருக்கிறார். ஒரு வரிதான் கதை:

'உலகின் கடைசி மனிதன் தனியாக அறையில் உட்கார்ந்திருந்தான். கதவு தட்டப்பட்டது.

இதை ரான்ஸ்மித் என்பவர் சற்றே திருத்தி, கதவு பூட்டப் பட்டது என்று மாற்றினார்.

ஃபாரஸ்ட் ஆக்கர் மேன் என்பவர், இதைவிடச் சின்னதாக ஒரு கதை எழுதியிருக்கிறார்.

'பிரபஞ்சப் பள்ளியில் உலகின் ரிப்போர்ட் கார்டு' என்று தலைப்பு கொடுத்து, F என்று ஒரு எழுத்து மட்டும் கொடுத்தார் (புரியும் என்று நம்புகிறேன்). இதற்கு நூறு டாலர் சன்மானம் பெற்றாராம். சிறுசிறு கதையில் என்னுடைய ஃபேவரைட் இது: பிரபஞ்சத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்தபோது தரையில் எழுதியிருந்தது. 'இதுதான் பிரபஞ்சத்தின் எல்லை' என்று தலைகீழாக!

கார்டனரின் பாணியில் இல 'விடுகவிதைகள்' தர விரும்புகிறேன்.

ஒரு புதிய வகைப் பாடல்

ஒருவிதமாய் யோசித்துப்பார்
புதிதாய்க் கவிதை எழுத
யவனர் என்ற வார்த்தையைக்
கைப்பட எழுதிப்
பாடல் வேண்டும்

பன்னிரண்டு இருக்கைகளும் நிரம்பிய மினிபஸ்ஸில் என் சகப்பயணிகளின் சகர வரிசைப் பட்டியல் தரும் கவிதை:

சங்கரன், சாகேதராமன்
சிக்கந்தர், சீனிவாசன்
சூர்யா, செந்தில், சேரன்
சைனுலாபிதீன், சொக்கலிங்கம்
சோமசுந்தரம், சௌந்தர்யா
(பன்னிரண்டாவது யார்?)

விடையை யோசித்துப் பாருங்கள். புரியவில்லை என்றால் கடைசியில் தந்திருக்கிறேன்.

அண்மையில் நான் தமிழில் ரசித்த கவிதை நீண்ட நாட்களாக கவிதை பழகும் ஆண்டாள் பிரியதர்ஷினி எழுதிய 'எலிப்பொறிக்குள் மனிதர்கள்', ஒரு நீண்ட கவிதையிலிருந்து சில வரிகள்:


எல்லாருமே
பிள்ளையார் ஆகிவிட்டோம்
உலகமே
எலி வாகனத்தில்
பயணிக்கிறது

சிவ பார்வதியைச் சுற்றிய
பிள்ளையாராக
வாமன வாரிசுகள்
ஓரடிப் பெட்டிக்குள்
உலகைச் சுற்றுகிறார்கள்.

கால்களைக் கழற்றிவிட்டுக்
கைவிரல்களால்
ஊழித் தாண்டவம்
ஆடுகிறோம்
அரூபச் சிலந்தி வலையை
எலியால் பிறாண்டிப்
பிறாண்டிப் பிரபஞ்சம் தாண்டித்
தேடுகிறோம்

எலிக்கு மனித வாகனம்
இருபத்தொன்றில்
வாழ்க எலி சாம்ராஜ்யம்!

நன்றி: தினமலர்




'எலிமயமான எதிர்காலம்' பற்றிய இக்கவிதை, புதுக்கவிதைக் குப்புதுசாக விஷயம் கிடைத்துக் கொண்டுதான் இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

விடுகவிதைகளின் விடைகள்:

முதல் கவிதையின் ஒவ்வொரு வரியின் முதல் இரண்டு எழுத்துக்களையும் கோத்துப் பார்த்தால், கவிதையின் தலைப்பு மறுபடி வரும்.

இரண்டாவது கவிதையில் சகர வரிசையில் சகப் பயணிகள் பட்டியல் என்பதால், பதினோரு பெயர்கள் உள்ளன. பன்னிரண்டாவது நபர் சுஜாதா.

# மில்லினிய பொருட்கள்!



மில்லினிய எல்லையை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் நூற்றாண்டின் மிகச் சிறந்த உற்பத்திப் பொருள்கள் என்னென்ன என்று பார்ப்போம். (ஃபார்ச்சூன் இதழுக்கு நன்றியுடன்).

**1.** பொழுதுபோக்கு**:**

லெகோஸ் (legos) என்ற ஒன்றுடன் ஒன்று செருகிக் கொள்ளும் வண்ண வண்ண பிளாஸ்டிக் அடிப்படைத் துண்டுகள் 1949-ல் டென்மார்கைச் சேர்ந்த கிறிஸ்டியான்ஸன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டன. உலகெங்கும் சிறுவர்கள் இவற்றைக் கூட்டி வைத்து பொம்மை நகரங்கள் கட்ட உதவிய இந்தத் துண்டங்கள் இதுவரை இரண்டாயிரம் கோடிக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டு விட்டன. இன்றும் மாறாத முதலிடம் பெற்றிருக்கும் சிறுவர்களுக்கான இந்த விளையாட்டுப் பொருள்களில் இரண்டாயிரம் வகைத் துண்டுகள் உண்டு.


நூற்றாண்டின் பொழுதுபோக்கை ஆக்கிரமித்த மற்ற சாதனங்கள் கோடாக் பெட்டிக் காமிரா (1900), கோடாக்ரோம் ஃபிலிம் (1935), போலராய்டு காமிரா (1948), 1978-ல் ஜேவிசி விடியோ ரிக்கார்டர், 1982-ல் பிலிப்ஸ் சோனி கொண்டு வந்த வாக்மன் மற்றும் சிடி.

**2.** அலுவலகம்**:**

அலுவலகத்தில் எண்ணற்ற நூதனங்கள் வந்துவிட்டாலும் நூற்றாண்டின் மிக முக்கியமான அலுவலகக் கண்டுபிடிப்பாகக் கருதப்படுவது சாதாரண பேப்பர் க்ளிப்! நார்வே தேசத்தைச் சேர்ந்த

ஜான் வாலர் குண்டூசியால் காகிதங்களைக் குத்திக் குத்தி நொந்து போனவர், அதையே குத்தாமல் வளைத்துப் போட்டு இடைவெளியில் செருகினால் என்ன என்று யோசனை செய்து அதன் 'பேட்டண்ட்' உரிமையை ஜெம் கம்பெனிக்கு சகாயவிலைக்கு விற்றுவிட்டார், பாவம்.





அகியோ மோரிட்டா

இன்றும் 'ஜெம் க்ளிப்' என்று அழைக்கப்படும் இந்த பேப்பர் க்ளிப்புகள் இதுவரை எத்தனை கோடானுகோடி உற்பத்தியாகியிருக்கின்றன என்பதற்குக் கணக்கே இல்லை.

அலுவலகத்தில் அதிகம் பயன்படும் மற்ற கண்டுபிடிப்புகள் ஜெராக்ஸ் போட்டோ காப்பியர் (1959), ஜெராக்ஸ் கம்பெனியின் ஃபேக்ஸ் மெஷின் (1966), இன்டெல் கம்பெனியின் மைக்ரோப்ராஸஸர் சில்லு (1971), திரீ எம் கம்பெனியின் 'போஸ்ட் இட்' என்னும் பசை தடவிய குறிப்புச் சீட்டுக்கள் (1980), ஆப்பிள் கம்பெனியின் மாக்கின்டாஷ்

கணிப்பொறி (1984) - இவை இந்த நூற்றாண்டில் அதிகம் பயன்பட்ட ஆபீஸ் சாதனங்கள்.

**3.** பயணம்**:**

பயணத்தில் டக்கோட்டா என்னும் டிஸி-3 விமானம் - டக்ளஸ் கம்பெனி 1936-ல் முதலில் தயாரித்தது - நூற்றாண்டின் முதலிடத்தைப் பெறுகிறது. இதுவரை மொத்தம் பத்தாயிரம் விமானங்கள் தயாரித்தது. இன்றும் டக்கோட்டா உலகில் எங்கேயாவது ஒரு மூலையில் பறந்து கொண்டிருக்கிறது (கமல் 'ஹே ராமு'க்காக ஒரு டக்கோட்டாவைத் தேடிக் கொண்டிருந்தார்). இருபதாம் நூற்றாண்டில் அதிகம் பயன்பட்ட மற்ற பயணச் சாதனங்கள்: மோட்டார் சைக்கிள் ஹார்லி டேவிஸ் கம்பெனி (1903), ஃபோர்டு கம்பெனியின் மாடல் டி மோட்டார் கார் (1908), 1950-ல் வந்த ஸ்கேட்போர்டு சறுக்கும் பலகை. போயிங் கம்பெனியின் 707 விமானம் (1957).

**4.** வீட்டுக்குள்

1907-ல் முதன் முதல் அறிவிக்கப்பட்ட வாஷிங்மெஷின் ஜேம்ஸ் முர்ரே ஸ்பாங்க்ளர். ஹூவர் என்பவருடன் இணைந்து உருவாக்கியது. நூற்றாண்டின் முதல் பரிசைப் பெறுகிறது. முதல் ஃப்ரிஜ் 1916-ல் வந்தது. முதல் ஏ.ஸி. 1926-ல். 'பெர்மாசெல்' என்னும் ஸ்காட்ச் டேப் 1949-ல். முதல் மைக்ரோவேவ் ஓவன் 1967-ல்.

**5.** தகவல்**,** செய்தி**:**

செய்தித் தொடர்பில் நூற்றாண்டின் மிக முக்கியமான பொருள் குறைந்த விலை பேப்பர்பேக் புத்தகம்தான். பிரிட்டன் தேசத்து ஆலன் லேன் என்பவருடைய பதிப்பகம்தான் 'பெங்குவின்' என்று பெயரிட்டு மலிவுவிலைப் புத்தகங்களைக் கொண்டு வந்தது. முதல் பத்து பேப்பர்பேக் புத்தகங்கள் ஜூலை 30, 1935-ல் வெளிவந்தன. அகதா கிறிஸ்டி, ஹெமிங்வே போன்றவர்களின் புத்தகங்கள் எல்லாம் முதல் பத்தில் இருந்தன.

1921-ல் ரேடியோ பெட்டி ஆர்.சி.ஏ. கம்பெனி கொண்டு வந்தது. 1939-ல் முதல் தொலைக்காட்சிப் பெட்டி. இதுவும் ஆர்.சி.ஏ. கம்பெனிதான். 1991-ல் இன்டர்நெட்டில் உலகளாவிய வலைப்பின்னல் www வையக விரிவு வலை.

**6.** மற்ற விஷயங்கள்**:**

முதல் ரேஸர் பிளேடுகள் 1903-ல் கில்லெட் என்பவர் 'பயன்படுத்திப் புறக்கணிக்கும்' ரேஸர்க்கான ஐடியாவை எட்டு வருஷமாக யோசித்துக் கொண்டுவந்தார். முதல் உலகப் போரின் போது கில்லெட் முப்பத்தைந்து லட்சம் ரேஸரும் மூன்றரைக் கோடி பிளேடும் தயாரித்து அமெரிக்க சோல்ஜர்களுக்கு விற்றார். இதுதான் நூற்றாண்டுக்கு இந்தப் பிரிவில் முதல் இடம் பெறுகிறது. அதுபோல் ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் கம்பெனியின் பேண்ட் எய்டு பிளாஸ்திரிகள் 1921-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பெனிசிலின் 1928-ல் கண்டுபிடிக்கப்பட்டது. பெண்களுக்கான டாம்பான்கள் 1931-ல். கர்ப்பத்தடை மாத்திரைகள் ஸார்ல் கம்பெனி 1960-ல், ப்ரோஸாக் மாத்திரை 1988-ல். ஜிப் 1913-ல், ப்ரா 1921-ல்.

வெலக்ரோ 1954. பாப்பாக்கள் சப்பும் நிப்பிள் 1961-ல், ப்ராக்டர் அண்ட் காம்பிள் கம்பெனி கொண்டு வந்தது. 1939-ல் நைலான் வந்தது. அறிமுகமான முதல் வருடமே ஆறு கோடி நைலான் ஸ்டாக்கிங்குகள் பெண்களிடம் விற்றுத் தீர்த்தனவாம். இவை அனைத்தும் இருபதாம் நூற்றாண்டில் மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தின என்று சொல்லத் தயக்கமாக இருக்கிறது. பாதித்தன.

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த தொழிலதிபர்கள் ஐவர். ஹென்றி போர்டு (ஃபோர்டு மோட்டார் கம்பெனி), ஆல்ஃப்ரெட் ஸ்லோன் (ஜெனரல் மோட்டார்ஸ்), தாமஸ் வாட்ஸன் (ஐ.பி.எம்.), பில்கேட்ஸ் (மைக்ரோஸாஃப்ட்), அகியோ மோரிட்டா (சோனி).

**7.** மானேஜ்மெண்ட் என்னும் மேலாண்மையில் நூற்றாண்டின் திருப்புமுனைகள் இவை**:**

ஃப்ரெட்ரிக் டெய்லரின் டைம் ஸ்டடி ஒரு தொழிலாளியை மெஷின் போல பாவித்து கடிகாரத்தை வைத்துக் கொண்டு அவனது உற்பத்தித் திறமையை அளக்கும் மனிதாபிமானம் அற்ற முறை, ஃபோர்டு கொண்டுவந்த அசெம்பிளி லைன் கூட்டு உற்பத்தி வரிசைத் திறன், ப்ராண்ட் ஈக்விட்டி என்று நுகர்பொருள்களுக்குப் பெயர் அடையாளம் வைத்து விளம்பரத்தின் மூலம் வேண்டாத குப்பைகளை வாங்கி வைப்பது (எல்லா ஜீன்ஸும் ஒன்றுதான் என்றாலும் லீ கொஞ்சம் ஒஸ்தி. இவ்வகையில் கோக், ரீபாக், அடிடாஸ், பெப்ஸி கலாசாரம்...), பீட்டர் டிரக்கரின் மானேஜ்மெண்ட் உபதேசங்கள். டெம்மிங்கின் தரக்

கட்டுப்பாட்டு முறைகள் ஜப்பானின் க்வாலிட்டி சர்க்கிள் என்னும் தர வட்டங்கள். 'ரீ-இன்ஜினீயரிங்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைப் பொறுப்புள்ளதாக மாற்றியமைக்கும் உத்திகள் மற்றும் இன்டர்நெட்டின் மூலம் அறிவையும் தகவலையும் நிறுவனத்துக்குப் பயன்படுத்துவது.





நூற்றாண்டின் மிகப் பெரிய விஞ்ஞான ஆதாரக் கண்டுபிடிப்புகளாக நான் கருதுவது இரண்டு. பிரபஞ்சம் விரிவடைந்துகொண்டே வருகிற வேகத்தையும் தூரத்தையும் இணைக்கும் 'ஹப்பிளின் விதி' எட்வின் ஹப்பிள் என்பவர் கண்டறிந்தது. இதிலிருந்து பிரபஞ்சம் 10-லிருந்து 20 ஆயிரம் கோடி வருடங்களுக்குமுன் ஒரு மகா வெடிப்பில் (big bang) துவங்கியது என்பதை யூகிக்க முடிந்தது. இரண்டாவது வாட்சன், க்ரிக் இருவரும் கண்டுபிடித்த டிஎன்ஏ (DNA) அமைப்பில் உயிரின் ரகசியம் மரபுத் தொடர்ச்சியாகப் பதிந்திருப்பதை அறிந்தது.

# இண்டர்நெட் எழுத்து!



அமெரிக்காவில் சிறு பத்திரிகைகளை 'ஸ்மால் பிரஸ்' என்கிறார்கள். சென்ற இருபத்திரண்டு வருடங்களாக புஷ்கார்ட் பிரைஸ் (Pushcart Prize) என்ற பெயரில் சிறு பத்திரிகைகளிலிருந்து சிறந்த படைப்புகளைத் தேர்ந்தெடுத்து வருடா வருடம் நேர்த்தியாகப் புத்தகம் வெளியிடுகிறார்கள். உதாரணமாக, 1997-ல் நாற்பத்துநான்கு பத்திரிகைகளிலிருந்து அறுபத்தொன்பது படைப்புகளைத் தேர்ந்தெடுத்துப் பிரசுரித்திருக்கிறார்கள். இப்போதெல்லாம் இன்டர்நெட் வந்த பிறகு, அதில் மிக அதிகமாக படைப்புகள் தரப்படுகின்றன. புஷ்கார்ட் தொகுப்பாசிரியர் பில் ஹெண்டர்ஸன் இன்டர்நெட் படைப்புக்கள் பற்றிச் சொல்லியிருப்பது கருத்தாழமிக்கது.




" 'சைபர்வெளியில் உலவும் ஆரவாரங்களையும் படித்துத் தேர்ந்தெடுத்து வெளியிட வேண்டும்..' என்று போன வருடம் ஒருவர் சொன்னார். நம்முடைய கலாசாரத்தை ஆக்கிரமிக்கும் இந்த எலெக்ட்ரானிக் புரட்சியின் 'ப்ளக்'கைப் பிடுங்கி விட விரும்புகிறேன். ஏதோ ஒரு வேர்டு ப்ராசசரில் (சொல் தொகுப்புக்கான மென் பொருள்) எதையாவது எழுதி அடுத்த நிமிஷமே அதை இன்டர்நெட்டில் போட்டுவிட்டுத் தங்கள் படைப்பு பிரசுரமாகிவிட்டதாக முதுகைத் தட்டிக்கொள்பவர்கள் தம்மை மோசமாக ஏமாற்றிக்கொள்கிறார்கள். இலக்கியத்தில் உடனடி திருப்தி என்பது முடியாது, கிடையாது. அற்புதமாக, சிறப்பாக எழுத சிறப்பாக பழக வேண்டும். எழுதி எழுதித் திருத்தி எழுதி, பிரசுரத்துக்கு அனுப்பி, நிராகரிக்கப்பட்டு அந்த வேதனைக்குப் பின்தான் நல்ல இலக்கியம் உருவாகும். மாக்கின் டாஷ் கணிப்பொறியில் எதையாவது எழுதிப் பதிப்பிப்பது இலக்கிய அந்தஸ்துக்கு உத்தரவாதமில்லை. வார்த்தைகளைத் தொகுப்பது அவற்றுடன் விளையாட அல்ல. வார்த்தைகள் நமக்குக் கிடைத்த சிறந்த

பரிசுப் பொருள்கள். நாம் பேசவும் பிரார்த்திக்கவும் பயன்படுத்தும் அற்புதங்கள். அவை மூலம் உண்மையை அணுகுகிறோம். வார்த்தைகள் சாப்பிடும் பண்டங்கள் அல்ல. ஒரு இயந்திரம் உங்கள் வார்த்தைகளைத் தொகுக்க முடியாது. உங்கள் கனவுகளையும் காட்சிகளையும் உண்டாக்க முடியாது. மெஷின்கள் உங்கள் படைப்புகளைப் பிரசுரத்துக்கேற்றவாறு மாற்ற முடியாது. எதையாவது எழுதி இன்டர்நெட்டில் உடனடியாகப் பதிப்பது சுலபம்தான். ஆனால், அவ்வளவும் சைபர்காஸ் (cybergas)."

ஹெண்டர்ஸன் சொல்வதன் சாரம் இதுதான்: கணிப்பொறியில் சொல் தொகுப்பது, இன்டர்நெட்டில் பதிப்பிப்பது எல்லாம் நல்ல நூதனமான பேனாக்கள் போல. நல்ல பேனா மட்டும் போதாது நல்ல எழுத்துக்கு... 'அம்பலம்' போன்ற இணைய மின் இதழில்கூட ஆசிரியர் குழு ஒன்று பிரசுரத்துக்குத் தகுதியானதா என்று பார்த்துதான் வெளியிடுகிறது. ஊடக வடிவம் மாறலாம். உள்ளடக்கம் மாறாது. புஷ்கார்ட்டில் வெளியான ஒரு கவிதையை மொழி பெயர்த்திருக்கிறேன்.

ஜப்பான்
பில்லி காலின்ஸ்
(ஜார்ஜியா ரெவ்யு பத்திரிகையில் இருந்து...)

இன்று நான்
எனக்குப் பிடித்தமான ஹைக்கூவை
திரும்பத் திரும்ப
படித்துப்
பொழுது போக்குகிறேன்.
ஒரு சிறிய அழகான
திராட்சையை
திரும்பத் திரும்ப உண்பது போல்.
அதன் எழுத்துக்களை
அறைக்கு அறை உதிர்த்துக்கொண்டு
வீட்டுக்குள் நடக்கிறேன்.
பியானோவின் மௌனத்தின் அருகில் நின்று
அதைப் பேசுகிறேன்.
கடற்கரை ஓவியத்தின் முன் நின்று அதைப் பாடுகிறேன்.
அலமாரித் தட்டுகளில்
அதன் தாளத்தைத் தட்டுகிறேன்.
நாய் என்னை நிமிர்ந்து பார்க்கும்போது

குனிந்து அதன் நீண்ட காதுகளில்
முணுமுணுக்கிறேன்.

அதை நானே பேசிக் கேட்டுக்கொள்கிறேன்.
பேசாமலும் கேட்கிறேன்.
அந்தக் கவிதை
ஒரு டன் மணியின் மேல் தூங்கும்
வண்ணத்துப் பூச்சியைப் பற்றியது.

ஒவ்வொரு முறை அதைச் சொல்லும் போதும்
அந்தப் பூச்சியின் மணிமேல் அழுத்தத்தை உணர்கிறேன்.
சன்னலருகே அதைச் சொல்லும்போது
உலகம் மணி, நான் அந்தப் பூச்சி
கண்ணாடி முன் அதைச் சொல்லும்போது
நான்தான் மணி
வாழ்க்கைதான் அந்த பேப்பரிறக்கைப் பூச்சி
பிறகு இருளில் உன்னிடம் அதைச் சொல்லும்போது
நீதான் மணி, நான் அதை ஒலிக்க வைக்கும் நாக்கு.
அப்போது
பூச்சி அந்தக் கவிதை வரியிலிருந்து பறந்து போய்
நம் படுக்கைக்கு மேலே அசைகிறது.

ஒரு பிரசித்தமான ஹைக்கூ கொடுக்கும் அனுபவம் பற்றிய கவிதை இது. Haiku happen என்று சொல்வது எவ்வளவு பொருத்தம்.

'முதல்வன்' விசிடியும் விடியோவும் மதுரையில் கேபிளில் திரும்பத் திரும்ப காட்டப்பட்ட நிகழ்ச்சிகளையும் அவற்றின் உள்நோக்கம் பற்றியும் செய்திகள் பல பத்திரிகைகளில் வந்துவிட்டன. எனக்கு இதில் வியப்பாக இருந்தது. சினிமாவில் சொன்னது மிகையில்லை... ஏறக்குறைய அதே பாணியில் சினிமாவுக்கு வெளியிலும் சம்பவங்கள் நடந்ததுதான். விடியோ, விசிடி (இனி டிவிடி) தொந்தரவை நீக்க தமிழ் சினிமா தயாரிப்பாளர்களும் டைரக்டர்களும் அடிக்கடி எதிர்ப்புத் தெரிவித்து, கூட்டம் போட்டு பேட்டி கொடுப்பதிலும் அடையாள உண்ணா விரதங்கள் மேற்கொள்வதிலும் பயனில்லை. அண்மையில் சிங்கப்பூர் சென்றிருந்தபோது மலேசியாவிலேயே திருட்டு விசிடி தயாரிப்பதற்கு என்று ஆறு ஃபாக்டரிகள் இருப்பதாக பிரமிட் அதிபர் சொன்னார். எங்கெல்லாம் 'டெலிசினி' இருக்கிறதோ, அங்கெல்லாம்

திருட்டு விடியோ சாத்தியம் உள்ளது. எனக்குத் தெரிந்து சென்னையிலேயே பத்து இடங்களில் இருக்கிறது. மும்பை, டெல்லியிலும் வெளிநாடுகளிலும் உள்ளன. அவை அனைத்தையும் கண்காணிப்பது அசாத்தியம். டெலிசினி இல்லாமல் காமிரா பிரிண்ட் என்று தியேட்டர் ஓட்டையிலிருந்து விடியோ காமிரா வைத்து எடுத்து படத்தில் தெரிவது மனீஷாவா... வடிவேலுவா என்ற சந்தேக பிரிண்டுகளைக்கூட ஜனங்கள் பார்க்கத் தயாராக இருக்கிறார்கள். இந்த நாட்களின் அற்புதமான டெக்னாலஜியில் படம்வெளிவருவதற்கு முதல் நாளே அதன் விசிடி வந்துவிடுவது யதார்த்தம். அதற்கான ப்ளேயர்களும் தினம் சிங்கப்பூரிலிருந்து நூறு இறக்குமதியாகின்றன. எந்தப் படத்தையும் எளிதாக வீட்டில் பார்க்கலாம். நம் தயாரிப்பாளர்கள் இதைத் தடுக்க முடியாது. ஆனால், கேபிள் மூலம் பல இல்லங்களில் பரப்புவது சட்டப்படி குற்றமே. அதற்கு போலீஸில் புகார் கடிதம், அவர்கள் அதை எடுத்துக்கொண்டாலும் கொள்ளாவிடினும் கொடுக்க வேண்டியது அவசியம் - நியாயம் எப்போதாவது வெல்லும் என்ற நம்பிக்கையில.

அமெரிக்காவில் இந்தப் பிரச்னை இல்லை. இதற்கு முக்கிய காரணம் அமெரிக்கர்களின் மனப்பாங்கு. சட்டத்தை மீறுவது அங்கு கண்டுபிடிக்கப்பட்டால் அபராதத் தொகைகள் பயங்கரமானவை. மேலும் அவர்கள் திரைப்படம் பார்ப்பதையும் விடியோ பார்ப்பதையும் தனிப்படுத்திவிட்டார்கள். அமெரிக்காவில் திரைப்படம் பார்ப்பது ஒரு தனி அனுபவம். 'சினிப்ளெக்ஸ்' என்று ஏழெட்டு தியேட்டர்கள். அவற்றுக்கு பொதுவான டிக்கெட் கௌண்ட்டர். படங்கள் எப்போதும் ஓடிக்கொண்டிருக்க, இஷ்டப்பட்ட நேரத்தில் பார்க்கலாம். ஃபோயர், லாபி போன்றவை பௌ பௌ என்று கார்ப்பெட் போட்டு அற்புதமாக இருக்கும். காபி ஷாப் இருக்கும். உற்சாகமான சூழ்நிலை. முந்தைய காட்சி முடிய, படிகளில் உட்கார்ந்திருக்க வேண்டாம். உள்ளே போனால் நல்ல சவுண்டு, துல்லியமான காட்சிகள். சின்னத் திரையில் பார்ப்பதைவிட பெரிய திரையில் பார்ப்பதை மாறுபட்ட அனுபவமாக்கி இருக்கிறார்கள். தியேட்டருக்குப் போய் படம் பார்ப்பது ஒரு சமூக நிகழ்ச்சியாகிறது.

மேலும் அவர்கள் திருட்டு விடியோவை எடுத்து வருவதே இல்லை. 'ப்ளாக்பஸ்டர்' போன்ற விடியோ விநியோக கம்பெனிகள் அதை ஆதரிப்பதே. இல்லை. மழை பெய்து அவ்வப் போது பீடி குடிக்கச் செல்பவர் தலை தெரியும் காமிரா பிரிண்டுகளை அவர்கள்

பார்க்கமாட்டார்கள். தியேட்டர்களுக்குச் சென்று படம் பார்ப்பது என்பது தனிப்பட்ட ஒரு உற்சாகமான உரையாடலும், சந்திப்பும், சாப்பாடும், உல்லாசமுமான அனுபவமாக மாற்றப்பட்டால்தான் சினிமா இந்த மாதிரி திருட்டுக்களை எதிர்கொள்ள இயலும், பெண்டாஃபோர் போன்ற நிறுவனங்கள் இந்த மாதிரி சினிப்ளெக்ஸ் அனுபவத்தைக் கொடுப்பதையும் டிஜிட்டல் சினிமாவைப் பற்றியும் இப்போதே யோசித்து வருகின்றன.



இறுதியாக: இந்த வார ஹைக்கூ -
போக்குவரத்து நடுவில்
போலீஸ்காரர் கையில்
ஆட்டோரிக்ஷாவின்
பின் ஸீட்டு!

# கவிழ்ந்த் கோப்பை!



தினம் ஏதாவது ஒரு சிறு பத்திரிகையாவது எனக்கு வருகிறது. அண்மையில் வந்தவைகளில் 'ஏழை தாசன்' (அடப்பன் வயல் எட்டாம் வீதி, புதுக்கோட்டை - 622002) இதழில் நூறு ஹைக்கூ கவிதைகளில் குறிப்பிடும்படியாக மூன்று இருந்தன.

என்னருகில் அமர்ந்திருப்பவர்
எழுந்திருக்கிறவராய்த் தெரியவில்லை
கர்ப்பிணி நிற்கிறாள்

- எல். இளங்கோ

நிமிர்ந்து நின்றது புல்
வளைத்துக் காட்டியது
ஒரேயொரு மழைத்துளி

- ப. ஆனந்தன்

சாலை மழை நீர்
ஆடை தூக்கச் சேறானது
மனசு

- சிவதாசன்

அடியேன் அண்மையில் பார்த்து யாத்த ஹைக்கூ -

சிவப்பு மாருதியில்
டிரைவர் உட்பட

நான்கு குடுமி சாஸ்திரிகள்

வாரம் ஒரு கவிதைத் தொகுப்பாவது கூரியரில் அல்லது நேரியரில் கொண்டு கொடுக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றியுடன் நான் சொல்லிக்கொள்வது - டி.வி. பார்க்காமல் எப்படியாவது உங்கள் கவிதைகளைப் படித்து முடித்துவிடுவேன். நல்ல கவிதை என்று எனக்குப் பட்டால் நிச்சயம் ஏதாவது ஒரு அவகாசத்தில் குறிப்பிடுகிறேன். இதை ஒரு அன்புக் கட்டாயமாகவே, கடமையாகவே எண்ணுகிறேன்.

சே. பிருந்தாவின் 'மழை பற்றிய பகிர்தல்கள்' (பூங்குயில் பதிப்பகம், கோட்டை தெரு, வந்தவாசி-604 408) அண்மையில் வெளிவந்த சிறந்த தொகுப்புகளில் ஒன்று.

இரவு பற்றிய ஒரு சாதாரணக் காட்சியைக்கூட நல்ல கவிதையாக்க முடியும் என்பதற்கு சாட்சியாக -

'எங்கோ தொலைவில்
லாரி ஹாரன்
அணைந்து போன தெருவிளக்கு
வெளிச்சமாய் நக்ஷத்திரங்கள்
தென்னையின் சலசலப்போடு
சில்லிட்ட காற்று
இருளில் கிசுகிசுப்பாய்
இரண்டு குரல்கள்

அந்தகாரத்தில்
மனதைத் தொலைக்க வந்த எனக்கு
குரல்களை இனம் கண்டு தெளிதலே
முக்கிய முதல் பணியாயிற்று.'

அழகாக அச்சிடப்பட்டிருக்கும் கலை இலக்கியக் காலாண்டுப் பதிவான 'ஆரண்யம்' பெயருக்கேற்ப உள்ளடக்கத்தில் ஒரு காட்டின் அத்தனை அம்சங்களும் கொண்டதாக இருக்கிறது (370, ராமச்சந்திரா லேஅவுட், ராம் நகர், கோயம்புத்தூர்-641 009). சிறு பத்திரிகைகளில் வழக்கமாக காணப்படும் அதே விஷயங்கள், அதே எழுத்தாளர்கள். ஒவ்வொரு இதழிலும் ஒரு திரைக்கதை கொடுப்பதாகச் சொல்லியிருப்பது புதுசு. இந்த இதழில் பத்மராஜனின் 'ஒரு ஊரில் ஒரு

பயில்வான்' என்னும் திரைக்கதை.

கிரிகோரியன் காலண்டர் முறைப்படி 1-1-2000 என்பது நூற்றாண்டின் ஆரம்பமோ ஆயிரமாண்டின் ஆரம்பமோ இல்லையாம். இருபதாம் நூற்றாண்டின் கடைசி வருடமும் இரண்டாவது (இல்லை மூன்றாவதா?) மில்லினியத்தின் கடைசி வருடமும்தான் அந்த தேதியில் துவங்குகிறது என்று விளக்கி எனக்கு ('இதுகூட சுஜாதாவுக்குத் தெரியவில்லையா' என்று பின்குறிப்புடன்) கடிதம் எழுதியவர்களுக்கெல்லாம் நன்றி. இன்னும் இருபத்தோராம் நூற்றாண்டு ஆரம்பிக்கவில்லை என்று சூடம் அணைத்து ஒப்புக்கொள்கிறேன். 1.1.2000 என்பது ஜி.நாகராஜன் சொன்னது போல 'நாளை மற்றுமொரு நாளே'. அன்று மட்டும் சூரியன் பச்சையாக உதித்தால், சென்னைவாசிகள் சுவரொட்டாமல், தெருவில் ஒன்றுக்கிருக்காமல் இருந்தால் அதை வேறுபட்ட தினமாக பாவிக்கத் தயார்.

இருபதாம் நூற்றாண்டின் இந்திய மேதைகள் என்று ஒரு போட்டி வைத்து ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்கள் என நான்கு ஐந்து பெயர்கள் கொடுத்து (என் பெயரைத் தேடிப் பார்த்தேன். குதிரைப் பந்தய ரசிகர்கள் சொல்வது போல 'போர்டுக்குக்கூட வரவில்லை') மக்களைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி ஒரு விளம்பரம் செய்தித் தாள்களில் வந்தது. ஜனவரி 26 அன்று இவர்களுக்கு விழா எடுத்து அவார்டு கொடுக்கப் போகிறார்கள். எனக்கு நூற்றாண்டின் சிறந்த இழந்தவர்களுக்கும் ஒரு பரிசு (கவிழ்ந்த கோப்பை?) கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. அதற்கு என் பரிந்துரைகளையும் காரணங்களையும் கொடுத்துள்ளேன்-

**1.** **இசை, நடனம், நாட்டியம் போன்ற நுண்கலைகள்:**

திரு மல்லிகாபுரம் மனோகர் - தொடர்ந்து கச்சேரிகளில் அபசுரமாகப் பாடியதுடன் பந்துவராளிக்கும் புன்னாகவராளிக்கும்கூட வித்தியாசம் தெரியாமல் பாம்புக்கடி பட்டதற்காக, அவருடன் ஐ.ஏ.எஸ். மனைவியான திருமதி ராஜநந்தினி ராகேஷ்குமார் (உ.பி. காடர்) பரதநாட்டியம் நாற்பத்தைந்து வயதில் அரங்கேறி, தில்லானாவின்போது மேடைபூரா வியர்வையால் நனைத்ததற்காக பரிசைப் பங்குகொள்கிறார்.



**2.** அரசியல்வாதி**:**

மருதூர் கோவிந்தசாமி - எட்டு தடவை கட்சி மாறியும் அல்பம் ஒரு வாரியத் துணைத் தலைமை கூட கிடைக்காமல் எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவாக மாநில மாநாடுகளுக்கு லாரி, தொண்டர்கள், பிரியாணிப் பொட்டலம், கட்சிக் கொடிகள் ஏற்பாடு பண்ணும் தொழிலைத் துவங்கியதற்காக.

**3.** விஞ்ஞானம் தொழில் நுட்பம்**:**

ஏத்தாக்குடியைச் சேர்ந்த ஆர்.ஜே.இ. கிருஷ்ணசாமி - டிரான்சிஸ்டர், ரேடியோ, டி.வி. கண்டுபிடித்ததற்காக, அவருக்கு முன் வில்லியம் ஷாக்லி, மார்க்கோனி, பெயர்டு போன்றவர்கள் கண்டுபிடித்து விட்டதாகச் சொன்னாலும், 'அவர்கள் எல்லாம் என்னிடம் இருந்து ஐடியாவைத் திருடிவிட்டார்கள்' என்று சொன்னதற்காக.

**4.** விளையாட்டு**:**

சென்னை மண்ணடி எஸ். நல்லபெருமாள் - தொடர்ந்து மூன்றாவது டிவிஷன் கிரிக்கெட் மாட்சில் நாற்பத்தொன்பது தடவை 'டக்' அடித்ததற்கும் (ஐம்பதாவது முறை ஒரு ரன்) அவர் டீம்மேட் சரவணகுமாரின் 'ஹேட்ரிக்' காட்ச்சை கையில் வாங்கி சிந்தியதற்காகவும்.

**5.** இலக்கியம்**:**

நெல்லை இலா பூனைக்கண்ணன் (புனைபெயர்) 'வெண்மையும் பெண்மையும்' என்ற மிகச் சிறந்த அறுநூறு பக்க நாவல் எழுதி, அதை நோபல் பரிசுக் கமிட்டியிலிருந்து 'ப்ரைம்க்ரைம்' என்னும் மாசநாவல் வரை அனுப்பி பிரசுரிக்கப்படாமல் பெண்டாட்டி நகையை விற்று சுயமாக பதிப்பித்து, ஆயிரம் காப்பியில் 965-ஐ வீட்டில் அடுக்கிவைத்து இறுதியில் ஒரு வாஷிங்பவுடருக்கு இலவச இணைப்பாக அதைத் தரலாம் என்று சொன்ன விளம்பரக் கம்பெனிக்காரரை கோபித்துக்கொண்டு விரட்டியதற்கு ('என் இலக்கியத்துக்கு இன்னும் வேளை வரல').

**6.** தொழில் நுட்பம்**:**

கொட்டிவாக்கம் நா. நலங்கிள்ளி - ரப்பர் உதிரி பாகங்கள் முதல் ஏரோப்ளேன் வரை பண்ணுவதற்காக ஒரு ஃபாக்டரி அமைக்க ப்ராஜெக்ட் ரிப்போர்ட் எழுதி கடையில் வட்டிக்கு கடன் வாங்கி கொட்டிவாக்கத்தில் வேலி போட்டு தடுத்த நிலத்தில் பகலில் ஆடு மேய.. இரவில் இப்போது சாராயம் காய்ச்சுவதற்காக.

**7.** சினிமா**:**

டைரக்டர் ராகநந்தன் - எட்டுப் படம் 'ஊத்திக் கொண்ட' பெருமையுடன் இப்போது நாகராஜகுமார் என்பவருடன் தனியார் தொலைக்காட்சியில் 'நத்தை' என்கிற மெகா சீரியலுக்குக் கதை எழுத பாம்குரோவில் ரூம் போட்டிருப்பதற்காக.

# பாட்டியின் 'சிக்ஸ்த் சென்ஸ்'!



**நா**ன் அவ்வப்போது இந்தப் பகுதியில் எழுதிய சுயசரித்திரக் குறிப்புகளை ரசித்ததாக எழுதிய அன்பர்களுக்கு நன்றி. இவை ஏன் அடிக்கடி வருவதில்லை என்று பலர் கேட்கிறார்கள். காரணம், என் இளவயதில் பரபரப்பான சம்பவங்கள் எதுவும் இல்லை. சிறுவயதில் காதல் பிஸினஸ், இடிபஸ் காம்ப்ளெக்ஸ், எலெக்ட்ரா காம்ப்ளெக்ஸ் ஷிட்ஸோ என்று ஒரு புண்ணாக்கும் கிடையாது. சுதந்திரப் போராட்டத்துக்கு என்னை யாரும் கூப்பிடவில்லை. பள்ளியில் கொடியேற்றும் போது சாக்லெட் வாங்கிய தோடு சரி. வெள்ளையனை எதிர்க்கலாம் என்று யோசிப்பதற்குள் வெள்ளையன் வெளியேறி விட்டான். இந்தியை எதிர்த்து எதையாவது எரிக்கலாம் என்றால் எங்கள் பள்ளியில் நான் படித்தபோது இந்தியே இல்லை. ஆங்கிலம் உள்பட எல்லாம் தமிழில்தான் சொல்லித் தந்தார்கள். எவளையும் கடத்திக்கொண்டு மலைக்கோட்டைக்குப் போய் 'அடியே வா, நாம் கல்யாணம் செய்து கொள்வோமடி... இல்லையென்றால் குதித்து விடுவேன்' என்றெல்லாம் அழிச்சாட்டியம் பண்ணவில்லை. அதற்கு அருகதையான பெண்களும் கீழ்ச்சித்திரை வீதியில் இல்லை. எல்லாம் வத்தலான புரோட்டீன் குறைந்த பெண்கள். 'வாழ்க்கை' வைஜயந்திமாலா மாதிரி மாவட்டத்திலேயே யாரும் இல்லை. தெற்கு வாசலில் மாலதி என்று ஒரு பெண்ணைப் பற்றி ரங்கன் கடையில் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால், அவளை யாராவது அசகோதர எண்ணங்களுடன் பார்த்தால், பேசினால் பள்ளி கிரிக்கெட் காப்டன் ஜகதீசன் சுளுக்கு எடுத்து மளுக்கென்று கையை உடைத்துவிடுவான் என்றும் தெரிந்தது.


ஸ்ரீரங்கத்தில் வாசல் திண்ணையில் படித்துக் கொண்டிருக்கும்போது இளம் பெண்கள் எங்கள் வீட்டுப் புறக்கடையில் இருந்த நல்ல தண்ணீர்

முனிசிபல் குழாயில் ஜலம் பிடிக்க ஜடை பில்லையுடன் பவுடர், தாழம்பூ வாசனையுடன் வரும்போது வாரிச் சுருட்டிக்கொண்டு மாடிக்குப் போய்விடுவேன். சுலபமாக பின்னால் தள்ளி கதவைச் சாத்தி 'பச்சக்' என்று முத்தம் கொடுத்திருக்கலாம். அந்தப் பெண்களில் சிலரும் அதை எதிர்பார்த்தார்களோ என்று இப்போது (65 வயதில்) தோன்றுகிறது. நான் படித்தது ஸ்ரீரங்கம் பாய்ஸ் ஹைஸ்கூல், கேர்ள்ஸ் ஹைஸ்கூல் என்பது பாகிஸ்தான் போல தனியே காம்பௌண்ட் பிரிக்கப்பட்டு தனிவாசல் அமைத்து அந்தப் பெண்கள் எங்கிருக்கிறர்கள் என்பதே புலப்படாத வகையில், தூரத்தில் புள்ளியாகத்தான் தெரிவார்கள். அதனால் அவர்களில் யாரும் வந்து பாடத்தில் சந்தேகம் கேட்கவோ, நோட்ஸ் கேட்கவோ வாய்ப்புகள் ஏற்படவில்லை. சந்தேகம் கேட்டாலும் சொல்லிக் கொடுக்கிற அளவுக்கு இல்லை. நானே சந்தேக கேஸ். ஒருமுறை என் கண்ணில் தூசி விழுந்து, வேலைக்காரப் பெண்ணைப் பாட்டி ஊதச் சொன்னபோது, அவள் என் கண்ணுக்குக் கிட்டே வந்து ஊதிய போது, என் மனமும் கைகளும் சும்மா இருந்தன. இதுபற்றி நான் வெட்கமோ, வருத்தமோ படவில்லை. பெரும்பாலான யுவயுவதிகள் அப்போது அப்படித்தான் வளர்ந்தார்கள். படிப்பும் விளையாட்டும்தான் முக்கியம். பெண்களை ஆண்களும், ஆண்களைப் பெண்களும் ஏதோ வேற்று கிரகவாசிகள், ஆரோக்கியக்கேடு என்றுதான் எண்ணி வந்தோம். பிராமணப் பெண்களை அடைய வளைஞ்சான் ரவுடிகள் சைட் அடிக்க மேலும் கீழும் சைக்கிள் ஓட்டும்போது, 'ஏண்டா இப்படி அலையறாங்க...' என்று புரியாமல் வியந்தோம். செக்ஸ் உணர்ச்சிகளை அதனதன் காலம் வரும்போது மலர விட்டோமே தவிர, வலுக்கட்டாயமாக அவற்றை அழைக்கவில்லை. அந்தச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டவன். தந்தைவழிப் பாட்டிதான் என்னை வளர்த்தாள்.

அவளுக்கு ஒரு 'சிக்ஸ்த் சென்ஸ்' இருந்தது. சமையல் அறையில் (தளிப்பண்ற உள்) இருந்துகொண்டே நான் கூடத்தில் படிப்பது பாடப் புத்தகமா, கதைப் புத்தகமா என்று கண்டுபிடித்து விடுவாள். அதுகூட 'கொக்கோகம்' படிக்கவில்லை... லா.ச.ரா., தி.ஜானகி ராமன்தான். 'அலை ஓசை' படித்ததற்காக 'நாளைக்கே உனக்கு டிக்கெட் வாங்கி உங்கப்பாகிட்டே அனுப்பிடறேன். உன்னை வெச்சு மாளாது. நீயாச்சு, உங்கப்பனாச்சு... ஓடிப்போ' என்று பயமுறுத்துவாள். ஒரு தடவைகூட நான் 'அனுப்பிடு பாட்டி' என்று சொன்னதில்லை. சென்னைக்கு வந்து படித்திருந்தால் கொஞ்சம் கெட்டுப்போய், ஒருவேளை இன்னும் கொஞ்சம் சுவாரஸ்யமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம். தமிழ் இலக்கியம் ஒரு sleaZy நாவலிலிருந்து தப்பியது. திருச்சி சென் ஜோசப்

கல்லூரியில் படித்தேன். அங்கே குப்பை பெருக்குகிறவர்கள்கூட ஆண்கள்தான். மாதம் ஒருமுறை லாலி ஹாலில் படம் போட்டுக்காட்டுவார்கள். உதாரணம்- தாமஸ் ஆல்வா எடிசனின் குழந்தைப் பருவம்.

பிள்ளைப் பிராயத்தில் என் மனத்தை பாதித்த ஒரே பெண் விஜி. மாநிறம், கரிய கண்கள். 'நான் கறுப்பு, ரங்கராஜனும் கறுப்பு' என்பாள். காதில் அவல் சைஸுக்கு லோலாக்கு அசைய, வாய் ஓயாமல் பேசுவாள். இரண்டு பேரும் வாக் போவோம். அவளைப் பார்க்கவில்லை என்றால் எனக்கு இருப்புக் கொள்ளாது. நான் வரும் வரை காத்திருப்பாள். பவுடர் போட்டு நல்ல வாசனையாக இருப்பாள், பாடுவாள், அழுவாள். ஒருநாள் என்னை அந்தப் பாட்டி (அம்மாவின் அம்மா) அவசரமாக அழைத்தாள். போய்ப் பார்த்தால், விஜியை ஒரு வாழை இலையில் கிடத்தியிருந்தார்கள். 'ராத்திரி என்னவோ ஆச்சு... ரெண்டு தடவை வாந்தியெடுத்தா. கார்த்தாலை பிராணன் போய்ட்டது' என்று பாட்டி அழுதாள். எனக்கு அப்போது பதினோரு வயசு, என் தங்கை விஜிக்கு மூன்று வயது. குழந்தை என்பதால் கையிலேயே தூக்கிப் படித்துறைக்கு கொண்டுசென்று கொள்ளிடக்கரையில் புதைத்தது ஞாபகம் இருக்கிறது. முதன்முறையாக ஆற்றாமை, சோகம் க்ரீஃப் என் நடைமுறையை பாதித்தது. எப்படி?



அதுவரை யார் கூப்பிட்டாலும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு அற்ப தூரமாக இருந்தாலும் ஒரே ஓட்டமாகத்தான் ஓடுவேன். விஜி இறந்தபின் அவ்வாறு ஓடுவதை நிறுத்திவிட்டேன்.

இந்த வார ஹைக்கூ:

குப்பை பொறுக்கும்
சிறுமியின் கையில்
ஃப்ளாப்பி டிஸ்க்

# மிதந்த முதுகு!



சோளிங்கநல்லூரின் அருகில் செம்மஞ்சேரியில் இருக்கும் ஆசியவியல் நிறுவனம் அதிகம் ஆரவாரம் இல்லாமல் தீவிரமாக திராவிட மொழிகளுக்குச் சேவை செய்துவருகிறது. அதிபர் ஜான் சாமுவேல் மிகச்சிறந்த திட்டங்கள் பல வைத்துள்ளார். அதில் சங்க இலக்கியங்களை மற்ற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டம் முக்கியமானது (தமிழிலும் மொழி பெயர்க்க வேண்டுகிறேன்). அண்மையில் அவர்கள் வெளியிட்ட பல புத்தகங்களில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் சம்பிரதாயத்துக்காக கணிதநூல் பாகம் ஒன்றின் பிரதியைப் பெற்றுக்கொண்டேன்.

ஓலைச் சுவடிகளிலிருந்து சிரமப்பட்டுப் பெயர்த்து எடுத்து திருத்தி பி.சுப்ரமண்யம், .ே சத்தியபாமா, இ.எஸ். முத்துசாமி மூவரும் ஒத்துழைத்துப் பதிப்பித்த இந்த நூல், அந்தக் காலத்து கணிதம் பற்றி 'கருவை நஞ்சையன்' என்பவர் இயற்றிய 89 பாடல்கள், கணக்குகள் கொண்ட கணித நூல். ஆசிரியரின் காலம் 1693.

தமிழில் கணிதம் பொதுவாக 'மென்ஸுரேஷன்' என்று வணிகத்துக்கான கோலளவு, காலளவு, துலா அளவுகளுக்குத் தேவைப்பட்டிருக்கிறது என்பது இந்த நூலிலிருந்து தெரிகிறது. இலக்கியச் சுவையுடன் மகடூ முன்னிலையில் (ஒரு பெண்ணை முன்வைத்து) சொல்லித் தரப்படும் கணக்குப் பாடங்கள். அந்தப் பெண் நிச்சயம் குழம்பியிருப்பாள்.

ஒன்று முதல் பத்து வரை தமிழில் எண்களுக்கு குறியீடுகள் இருந்திருக்கின்றன. சைபருக்கு இல்லை. மிகச்சிறிய எண்களுக்கும் (இம்மி) மிகப் பெரிய எண்களுக்கும் சொற்களும் குறியீடுகளும் இருந்திருக்கின்றன. 'இம்மி' என்பது 1-ன்கீழ் 1075200 பாகம். இந்த

பின்னம் ஏன் தேவைப்பட்டது என்பதைப் பற்றியே ஒரு பிஹெச்.டி. பண்ணலாம். இதன் சூத்திரங்களை கம்ப்யூட்டர் 'அல்காரிதம்'களாக மாற்ற இயலும்.

பி.எஸ்ஸி. படிக்கும்போது என் தந்தை டிவிஷனல் இன்ஜீனியராக திருச்சிக்கு மாற்றப்பட்டார். ஸ்ரீரங்கத்தில் என் கிரிக்கெட் டீமுக்கு பிரியாவிடை கொடுத்து திருச்சிக்கு குடிபெயர்ந்தேன். புத்தூர் ஆஸ்பத்திரி அருகில் உய்யக்கொண்டான் வாய்க்காலை ஒட்டி லாசன் ரோட்டில் ஜயம்பாளையம் ஜமீன் வீடு. ரெண்ட் கண்ட்ரோலர் மூலம் அரசு அதிகாரியான என் தந்தைக்கு அலாட் ஆகியிருந்தது. தோப்பும் துரவுமான பெரிய வீடு. நாற்பது ரூபாய் வாடகை குறைவுதான். வீட்டுக்காரர் சம்மதிக்கவில்லை. என் தந்தை முதல் தேதி தவறாமல் அடுத்த பங்களாவில் இருந்த வீட்டுக்காரருக்கு மணி ஆர்டர் அனுப்புவார். அவர் அதை மாதம் தவறாமல் திருப்பி அனுப்புவார். என் தந்தை திரும்பி வந்த மணி ஆர்டர் ஃபாரங்களைச் சேர்த்து வைத்திருந்தார். டிபார்ட்மெண்ட்டில் - தீர்மானித்த வாடகைக்கு மேல் ஒரு பைசா கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டு பணத்தை கோர்ட்டில் கட்ட உத்தரவு கேட்டிருந்தார்.

இந்தச் சூழ்நிலையில் எப்போதும் ஒரு அபத்திரமான நிலையில்தான் தங்கினோம். ஆனால், எங்களை யாரும் பயமுறுத்தவில்லை.. விரட்டவில்லை. ஜமீன்தாருக்குப் பணம் முக்கியமல்ல. அவருடைய கூற்று - அரசு தீர்மானித்திருக்கும் வாடகை குறைவு. அப்பாவுடைய கூற்று - அரசு நிர்ணயித்தால் அதிக வாடகை கொடுப்பேன் என்பது. இருவருக்கும் அது ஒரு தர்மயுத்தம். அதனால் ரிப்பேர் எதுவும் செய்யாமல் வாய்க்கால் தண்ணீர் அவ்வப்போது காம்பௌண்டைச் சுற்றியும் ஓடும். அப்பா அடிக்கடி டூர் போவார்.

ஒரு முறை நான் காலேஜிலிருந்து திரும்பி வந்தபோது வீட்டு வாசலில் காம்பௌண்ட் சுவரை ஒட்டிய வாய்க்கால் தண்ணீரில் எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் உற்றுப் பார்த்து "யாருய்யா குளிக்கிறது... இந்த வேளையில்?" என்று கேட்டேன்.

"குளிக்கலைங்க... மெதக்குது."

"மாடா?"

"இல்லைங்க, மனுசன். பிணம்!"

நான் அடுத்த மில்லி செகண்டில் உள்ளே ஓடிவந்து அம்மாவிடம் உளறினேன். அம்மா, "இரு... இந்த தேன்குழலைப் பிழிஞ்சுட்டு வந்து பாக்கறேன்" என்றாள்.

"பிணம்மா.. வாசல்ல பிணம்! டெட்பாடி, ஸ்டிஃப்... மிதக்கறது."

"என்ன பண்ணச் சொல்றே..? மிதக்கட்டுமே. கைக்காரியத்தை விட்டுட்டு வரமுடியுமா? அதுக்கு வேளை வந்துட்டுது... பகவான் அழைச்சுண்டு போயிட்டார். ஜலசமாதி. வீட்டுக்கு வெளிலதான் மிதக்கறது. உனக்கு ஏன் கையெல்லாம் இப்படி நடுங்கறது?" என்றாள் அம்மா. எதற்கும் லேசில் அதிரமாட்டாள். பைக்காரா க்ளென்மார்கனில் அப்பா பணிபுரிந்தபோது காட்டு நடுவில் மலைச்சரிவில் செருகினாற் போன்ற தனி வீடுகளிலெல்லாம் குடித்தனம் செய்தவள். ஒருமுறை லீவுக்குச் சென்றிருந்தபோது புறக் கடையில் பம்பளிமாஸ் காய் பறித்துக் கொண்டிருந்தேன். அம்மா "அப்படியே இரு.. நகராதே" என்று சொல்லி அப்பாவின் டென்னிஸ் ராக்கெட்டை எடுத்துவந்தாள்.

"என்னம்மா... டென்னிஸ் ஆடப்போறியா இந்த வயசுல?"

"பாம்புடா" என்று ஒரு ஒரு சாத்து சாத்தினாள். என் காலடியில் நெளிந்து கொண்டு இருந்த பாம்பு துடித்துச் செத்ததும், என்னை ஒரு முறை தன்னுடன் அணைத்துக் கொண்டு அதற்குத் தகனத்துக்கு ஏற்பாடு செய்தவள். அதனால் இந்த லாசன் ரோடு பிணம் அவளை அதிகம் கலக்கவில்லை. முனிசிபாலிட்டியை போனில் கூப்பிடச் சொன்னாள்.

"நீயே போன் பண்ணும்மா... எனக்கு படிக்கணும்."

அம்மா என்னை 'பயந்தாங்கொள்ளி' என்றாள்.

"பயம் இல்லைம்மா.. கலக்கம்."

"ரெண்டும் ஒண்ணுதான்... சிநேகிதரையாவது கூப்பிடு."

ராம் மாமாவுக்கு போன் செய்தேன். "உடனே வருகிறேன்... யாரும் எதையும் தொடாதீங்க. வீட்டாளா பாத்து யாரையும் உள்ளேவிடு" என்றார். "தொடும் படியா இல்லை மாமா... வீட்டுக்கு வெளியே

வாய்க்கால்ல மிதக்கறது... தண்ணில இறங்கினாத்தான் தொடலாம்" என்றேன்.

"அப்படியா, வீட்டுக்குள்ள வரலியே... அப்படியே இருந்துட்டு போகட்டுமே."

"நீங்க வாங்க மாமா... பயமா இருக்கு."

"இரு வந்துர்றேன்" - அவர் குரலிலும் லேசான தயக்கம் இருந்தது. அம்மா ஒரு ஒட்டடைக் குச்சியை எடுத்து வந்து - "இதை எடுத்துண்டு போய் அதை லேசா மெயின் வாய்க்கால் பக்கம் தள்ளிடு. அப்படியே மிதந்துபோய் குளித்தலைக்குப் போயிடும்."

"இந்தப் பக்கம் குளித்தலையா... கல்லணைன்னா இருக்கு."

"ஏதோ ஒண்ணு... தள்ளிப் பாரேன். பிணமெல்லாம் சுலபமா தள்ளலாம்."

"என்னம்மா... விளையாடறியா? போலீஸ் நம்ம மேல சந்தேகப்படுவா."

"அப்ப போலீஸுக்குச் சொல்லு."

"எதுக்கும் மாமா வந்துடட்டுமே."

"ஏண்டா இப்படித் தொடை நடுங்கியா இருக்கே!"

"சேச்சே.. எனக்கு டயம் இல்லைம்மா. பிராக்டிக்கல் எழுதணும்."

ராம் மாமா வந்தார். அவர், "பயப்படாதீங்க. நான் வந்தாச்சில்லை... பயமே வேணாம்" என்று சொன்ன குரலே யோடலிங் செய்தது.

"முதல்ல பாக்கறீங்களா அதை...?"

"அந்தக் கண்றாவியை எதுக்குப் பார்க்கறது... மாளய அமாவாசையும் அதுவுமா...? பயப்படாதீங்க, நான் பாத்துக்கறேன்... நான் பாத்துக்கறேன்" என்று எங்களைவிட அதிகமாக பயந்தார்... "ஏரியால கொலை நிறைய விழறது." முனிசிபாலிடிக்கு போன் செய்தார்.

"ஹலோ, இங்க உய்யக்கொண்டான் வாக்கால்ல ஒரு பிரேதம் கெடக்குதுங்க."

"என்ன கெடக்குது?"

வார்த்தை அவருக்குச் சொல்ல வரவில்லை, "டெட்பாடிங்க.. பிணம்."

"இருங்க... ஆபீஸ்ல யாரும் இல்லைங்க... வண்டிகூட ரிப்பேரு."

"எப்ப வருவீங்க..?"


"காலைலதாங்க."

ராத்திரி எனக்குத் தூக்கம் வரவில்லை. போலீஸ்காரர்கள் வந்து என்னைக் கைது செய்தார்கள். எதிரேயே இருந்த ஹைகோர்ட்டுக்குக் கூட்டிப் போனார்கள். 'மைலாட்... இந்தப் பிணத்துக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. அது ஆண் பிணமா பெண் பிணமா என்றுகூடத் தெரியாது' என்றெல்லாம் சாட்சி உளறினேன். ராம் மாமாவே ஜட்ஜாக இருந்தார். 'இந்தப் பையனைப் பார்த்தால் சந்தேகமாக இருக்கிறது. சிறையில் தள்ளி தீர விசாரிக்கவும்' என்று சொல்ல... போலீஸ்காரர்கள் என்னை அழைக்கும்போது அம்மா, 'அடை பண்ணிருக்கேன். தேன் குழலும் இருக்கு எடுத்துண்டுபோ... ஜெயில்ல போது போகணுமே?' என்று வழியனுப்பினாள். கண் விழித்து ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தபோது, அதிகாலையில் அதை எடுப்பதை வேடிக்கை பார்க்க மக்கள் சீவிச்சிங்காரித்து ஒரு திருவிழாக் கூட்டமே கூடியிருந்தது. முனிசிபாலிட்டியின் தள்ளுவண்டியில் அதை ஏற்றிச் சென்றார்கள். அந்த வண்டிக்கு நம்பர் இருந்தது.

ஆணா , பெண்ணா... தற்கொலையா, கொலையா, விபத்தா... எதும் தெரியாது. ஆனால், அந்த முதுகு இன்னும் என் மனத்திலும் கனவுகளிலும் மிதக்கிறது.



# முதல் சைக்கிள்!



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தை அண்மையில் அவர் இல்லத்தில் சந்திக்க நேர்ந்தது. 'காயத்ரி', 'ப்ரியா' காலத்தில் இருந்தே, ஏன்... அதற்கு முன்பு புட்டண்ண கனகல் கன்னடத்தில் எடுத்த 'கதாசாகரா' மூன்று சிறுகதைகளில் ஒன்றில் நடித்த காலத்திலிருந்தே அவரைத் தெரியும். சென்னை வாய்ப்புகளைத் தேடி அவர் அடிக்கடி பிருந்தாவனில் பயணம் செய்தபோது ஒரு முறை உடன் பயணித்திருக்கிறேன். காயத்ரியின் 'ரஷ்'ஷை அவருடன் தனியாக ப்ரொஜெக்ஷன் தியேட்டரில் பார்த்திருக்கிறேன். 'ப்ரியா'வின் முதல் ஷாட்டுக்காக அவர் தனிமையில் திரும்பத் திரும்ப ஒரு வரியை ஒத்திகை பார்த்ததை கவனித்திருக்கிறேன் (ஒரு பூகோள உருண்டையைச் சுழலவைத்து 'ஜெயிச்சு காட்டறேன்' என்கிற வரி). 'தப்புத்தாளங்க'களில் சைக்கிள் செயினைச் சுழற்றிவிட்டு, ராத்திரி விமானத்தைப் பிடித்து 'ப்ரியா'வுக்காக சிங்கப்பூர் செல்ல வேண்டியபோது விமானத்தில் பேசியிருக்கிறேன். அதன்பின் அவர் பிரபலமென்னும் உயரசுழற்சிப் பயணத்தில் க்யுமுலோ நிம்பஸ் மேகம் போல மேலெழுந்தபோது ஒதுங்கி நின்று அவ்வப்போது தான் சந்தித்தேன். பெங்களூர் ஹாலிடே இன்னில் ஒருமுறை குமுதம் ஆசிரியராக ஒரு பேட்டி, பரத்பாலாவின் காஸெட் வெளியீட்டின்போது ஒரு முறை, அப்புறம் இப்போது...

பஞ்சு அருணாசலத்துக்கு இன்னும் நன்றி சொல்கிறார். 'அவராலதான் வில்லன் ரோல்லருந்து தப்பினேன்' என்றார். தமிழ்நாட்டின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் அளவுக்குப் பிரபலமாகி அவருடைய ஆணைக்காக ஒரு படையே காத்திருக்க, இன்றும் ரசிகர் மன்றங்கள் 'தமிழ்நாட்டின் வருங்கால முதல்வரே' என்று போயஸ் சாலை போஸ்டர்களில் பிடிவாதமாக அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் 'காவியத் தலைவி', 'கழகக் காவல் தெய்வம்'

போஸ்டர்கள் அதன் மேல் ஒட்டப்பட்டாலும், சளைக்காமல் உரித்து மேலொட்டுகிறார்கள். அவர் புகழ் ஜப்பான் வரை பரவியிருக்கிறது (என் மருமகள் ஹொகேடோவில் ரஜினி படம் பார்த்ததாகச் சொன்னாள்). இவை எதையும் தலைக்கு ஏற விடாமல், அடக்கமாகவே இருப்பது அவருடைய சிறப்பு. சினிமாவில் நிரந்தர நண்பர்கள் அரிதானவர்கள். முந்தைய படம் ஊத்திக்கொண்டாலும் புகழின் உச்சத்திலும் பழைய நட்பை மறக்காதவர்கள் மட்டும் சினிமாவில் எனக்கு நண்பர்களாக இருக்கிறார்கள்.

" 'முதல்வன்'ல நீங்க நடித்திருக்கலாமே?" என்றேன்.

"ஐயோ, வேண்டாங்க... அர்ஜுன் நடிச்சதுக்கே இவ்வளவு ஸ்ட்ராங்கா ரியாக்ஷன் இருந்திருக்கு. பத்து நாளா யோசிச்சு தான் வேண்டாம்னேங்க. நான் நடிச்சிருந்தா என்ன ஆகியிருக்கும்!"

"நிஜமாவே சி.எம். ஆகியிருப்பீங்க" என்றேன்.

சிரித்து, "அது ஒண்ணு மட்டும் நிச்சயமா வேணாங்க!" என்றார்.

"இருபத்தைந்து வருஷம் நடிச்சாச்சு, டயர்டா இருக்குதுங்க. ஒண்ணரை வருஷத்துக்கு ஒரு படம் பண்றதே கொஞ்சம் ஆயாசமா இருக்கு. ஒவ்வொரு படத்துலயும் முந்தின படத்தைவிட எதிர்பார்ப்புங்க அதிகமாயிட்டு போறது.."

"உங்களைச் சுற்றி ஒரு இண்டஸ்ட்ரியே இயங்குது. நிறைய பேருக்கு சம்பாத்தியம். டிஸ்ட்ரிப்யூட்டருங்க, தியேட்டர் ஓனருங்க, அவங்களைச் சார்ந்தவங்க எல்லாருமே 'படையப்பா' மாதிரி ஒரு வெற்றிப்படம் அப்பப்ப வந்தாத்தான் இண்டஸ்ட்ரி உயிர் வாழ முடியும். இல்லை, டி.வி-யும் திருட்டு விடியோவும் இதை சாப்ட்ரும்" என்றேன்.

"பார்க்கலாம்... கடவுள் புண்ணியத்தில்" என்றார்.

புறப்படும்போது கார் வரை வந்து வழியனுப்பிய அந்த எளிய மனிதருக்கு நான் சொன்ன இரண்டு அறிவுரைகள்:

"படம் பண்ணுவதை நிறுத்தாதீர்கள். Keep your options open."

சிறு வயதிலிருந்தே வாகனங்கள் மேல் அலாதி பிரேமையுடன்

வளர்ந்தேன். கோயம்புத்தூரில் அப்பா ஒரு முரட்டு மோட்டார் சைக்கிள் வைத்திருந்தார். அவர் டூர் போயிருக்கும்போது நாள் முழுவதும் அதன் மேல் ஏறி வாயாலேயே ஓட்டி சிங்காநல்லூர், அரவங்காடு எல்லாம் போவேன். மூன்று சக்கர சைக்கிள் ஒன்று இருந்தது. அதை ஓட்டி ஓட்டி அலுத்த பின், அதனுடன் என் தம்பியின் நடைவண்டி, ஸ்டூல் போன்றவற்றை இணைத்து ரயில் பண்ணி ஓட்டினேன். அதுவும் அலுத்துப்போய் கொஞ்சம் பெரிய மேஜையையே இணைத்து ஓட்டிப் பார்த்தேன். அதற்கான ஆற்றல் பற்றாமல் லோடு தாங்காமல் ஒரே இடத்தில் முன் சக்கரம் வழுக்கி வழுக்கி ஒரு நாள் அந்த சைக்கிள் என் இம்சை தாங்காமல் உடைந்து போனது.

ஸ்ரீரங்கத்தில் பள்ளிப் படிப்பின் போது ஆளுக்கு காலணா செலுத்தி இரண்டனா கொடுத்து வாடகை சைக்கிள் எடுத்து எட்டுப் பேர் கற்றுக் கொண்டதை எப்போதோ கட்டுரையாக எழுதியிருக்கிறேன். கற்றுக் கொண்டதைவிட மற்றவர்களே ஓட்ட பின்ஸீட்டை பற்றிக்கொண்டு, 'நேரப்பார்றா நேரப்பார்றா' என்று சொல்லிக்கொண்டே நாக்கு வெளியே வர ஓடினதுதான் அதிகம். முதன் முதல் சைக்கிளில் 'பாலன்ஸ்' கிடைத்தது முதல் முத்தத்துக்கு ஈடானது என்பதில் ஆண், பெண் இருபாலாரிடமும் அபிப்பிராய பேதம் - ஸாரி, கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதற்காக எத்தனை தயிர்க்காரிகள் மேலும் மோதலாம். எத்தனை முழங்கால் சிராய்ப்புகளையும் எச்சில்வைத்து ஊதலாம். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கையில் வி.எஸ்.வி-யிடம் கணக்குப் பாடம் டியூஷன் போக வேண்டியிருந்தது. அவர் அம்மா மண்டபத்தின் அருகில் இருந்தார். தினம் டியூஷன் போவதற்கு எனக்கு கஷ்டமாக இருந்தது. சைக்கிள் வாங்கிக் கொள்ளலாமா என்று யோசித்தேன். எம்.என். வரதன் தன் பழைய சைக்கிளை எனக்கு விற்பதாக சொன்னான். "ராலே மாடல்... இங்க்லாண்டுல ஷெஃபீல்டுலருந்து எங்க மாமா வரவழைச்சது."

"என்ன விலை?"

"ஓட்டிப் பாரேன் முதல்ல.."

சைக்கிள் நல்ல கண்டிஷனில் இருந்தது. கதவுக்கு எண்ணெய் போட்டது போல சென்றது. பச்சை பெயிண்ட் அடித்து, மணி அடித்தால் தேவகானம் கேட்டது. சித்திரை உத்தர வீதிகளை ஒரு வெள்ளோட்டம் பார்த்துவிட்டு ஸ்டைலாக இறங்கினேன்.

"என்ன விலை சொல்லு?"

"நீ என் ஃப்ரெண்டுங்கறதுக்காக அம்பது ரூபாய். எனக்கு எண்பதுக்கு ஆஃப்பர் இருக்கு" என்ற எம்.என்.வி., "புதன்கிழமை வரைக்கும் வெயிட் பண்றேன்" என்று அந்த பச்சை தேவதையின் ஸீட்டைத் தட்டிவிட்டு அவள் மேல் ஆரோகணித்து அடுத்த கணம் காணாமல் போனான்.

பாட்டியிடம் கேட்டதில், "உங்கப்பா என்னைப் பார்க்க ஞாயிற்றுக் கிழமை வர்றான். அப்ப நீயே கேட்டுரு."

"வாங்கித் தருவாளா பாட்டி?"

"தராம என்ன? மென்னு முழுங்காம கரெக்டா சொல்லிடு - 'டியூஷன் போறது கஷ்டமா இருக்குப்பா... ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்தா நன்னா படிக்கறேன். தவறாம போவேன்'னு... படிக்கறதுக்குத்தானே கேக்கற... ஊர் சுத்த இல்லையே... தருவான். வந்த உடனே கேக்காதே. சாப்ட்டுட்டு எட்டு எடமும் குளுந்திருக்கறப்ப கேளு."

நான் பலவிதங்களில் அந்தக் கணத்துக்கு ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தேன். நடுவே ப்ரில்லியண்டாக ஒரு ஐடியா. ராமன்தான் சொன்னான். தவறாமல டியூஷன் சென்றால் கணக்கில் நூற்றுக்கு நூறு வாங்கும் சாத்தியக்கூறுகள் அதிகம் என்பதையும் அப்பாவுக்கு எடுத்துரைக்கச் சொன்னான்... 'எந்த அப்பாவும் இதுக்கு மாட்டேன்னு சொல்லமட்டார்.'

அப்பா வந்தார். காபி சாப்பிட்டார். பாட்டியுடன் பேசிக்கொண்டிருந்தார். பாட்டி, அவ்வப்போது கண்ணைக் காட்டினாள் - 'இப்ப கேக்காதே' என்று. ராத்திரி அப்பாவுக்கு வெந்தியக் குழம்பும் கீரையும் பண்ணியிருந்தாள். அப்பா ரசித்து சாப்பிட்டுவிட்டு வெற்றிலையும் அசோகா பாக்கும் வாங்கிவரச் சொன்னார். அதைப் போட்டுக்கொண்டு வாசலில் முழு நிலவில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்துகொண்டிருந்தார்.

அதுதான் சரியான கணம் என்று தீர்மானித்தாள் பாட்டி. "துரைசாமி, ரங்கராஜன் என்னமோ கேக்கணும்ங்கறான்."

"என்னடா?"

"ஒரு சைக்கிள் வேணும்பா... டியூஷன் போறதுக்கு.."

"புதுசா?"

"செகண்ட் ஹாண்ட்ப்பா."

"என்ன வெலை?"

"அம்பது ரூபாதாம்பா."

"முடியாது. டியூஷனுக்கு நடந்து போ. இல்லை, கீழச் சித்திரை வீதிலயே யார்கிட்டயாவது டியூஷன் வெச்சுக்கோ."

"இல்லைப்பா... வந்து...'

"வந்தும் இல்லை.. போயும் இல்லை. உள்ள போய்ப் படி.."

அந்த கணத்தில் என் கனவுலகம் கலைந்துபோனது. இந்த மனுசனைப் போல ஒரு கிராதகன் இருப்பானா... இவன்லாம் ஒரு அப்பாவா என்று மனசுக்குள் கேட்டுக்கொண்டு உள்ளே போனேன்.

அப்பா ஊருக்குப் புறப்படும் வரை அவருடன் பேசவே இல்லை. அவர் அதை கவனித்ததாக தெரியவில்லை.

அதன் பின்னர் படித்து, பாஸ் பண்ணி, வேலை கிடைத்து, அலகாபாத் சென்று ஏரோப்ளேன் கற்றுக் கொண்டு, பின்னர் டெல்லியில் ஸ்கூட்டர் கற்றுக் கொண்டு, பெங்களூர் வந்து அங்கு முதல் கார் வாங்கி, கார் மாற்றி, எழுத்தாளனான அனுபவத்தால் டிராக்டர், ரோடு இன்ஜின், லாரி, ரயில் இன்ஜினில்கூட ஒரு முறை என்று எத்தனையோ வாகனங்கள்... எத்தனையோ பயணங்கள்... ஆனால், அந்தப் பச்சை ராலே சைக்கிள் மட்டும் ஒரு நிறைவேறாத இச்சையாகவே தேங்கியிருந்தது. அப்பா இறந்து போவதற்கு சில மாதங்களுக்கு முன் தன் பழைய நாட்களை ஒரு நண்பனுக்குச் சொல்வது போல சொல்லிக் கொண்டு வந்தார். அப்போது அதைக் குறிப்பிட்டார், "நீ எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறப்ப ஒரு சைக்கிள் வாங்கித்தான்னு கேட்டியே, ஞாபகம் இருக்கா?"

"இருக்குப்பா."

"வாங்கித் தரலைன்னு கோவிச்சுண்டு புறப்படற வரைக்கும் என்கூட பேசாம இருந்த..."

"ஏம்பா வாங்கித் தரலை?"

"எங்கிட்ட அப்ப அம்பது ரூபா இல்லைடா" என்றார்.

# 'போன் இன்' ஆபாசம்!




**வை**ரல் ஃபீவர் வந்து ஒரு வாரம் வீட்டிலேயே இருந்தேன். படிக்க முடியவில்லை. தனியார் தொலைக்காட்சி சானல்கள் அனைத்தையும் மாதிரி பார்த்தேன். தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவர்களுக்கு - குறிப்பாக பெண்மணிகளுக்கு சிறிய பரீட்சை வைக்க தமிழ்நாடு த.கொ.த. (தமிழ் கொலை தடுப்பு) கழகத்தின் சார்பில் ஒரு வேண்டுகோள்

மிக எளிய பயிற்சி - அவர்களை இரண்டு வாக்கியங்கள் படிக்கச் சொல்லி விடியோ-ஆடியோ எடுக்கவும். அவை இவை:

*1.* கண்ணன் வெண்ணெய் தின்னச் சொன்னாலும் மண்ணைத் தின்னச் சொன்னாலும் என்ன சொன்னாலும் பெண்கள் உண்ணத் தயங்கமாட்டார்கள்.

இந்த வாக்கியத்தை சுமார் 80 விழுக்காட்டினர் 'கண்ணன் வென்னை திண்ணச் சொன்னாளும் மன்னைத் திண்ணச் சொன்னாளும் என்ன சொன்னாளும் பெண்கல் உன்னத் தயங்க மாட்டார்கல்' என்றுதான் உச்சரிப்பார்கள்.

*2.* குரல் வளம் மிக்க பல பாடகர்கள் சரியான உச்சரிப்பு இல்லாததால் முன்னுக்கு வர முடியவில்லை.

இதை 'குறள் வலம் மிக்க பள பாடகர்கல் சரியான உச்சரிப்பு இள்ளாததாள் முண்ணுக்கு வர முடியவிள்ளை' என்று உச்சரிக்காமல் இருந்தால் பரீட்சை வெற்றி. சிவப்பு லோலாக்கைக் கழற்றிவிட்டு பஞ்சு மிட்டாய் கலர் பட்டுப் புடவையை விட்டு ஒரு சாதாரண புடவையைச் சுற்றிக் கொண்டு உடனே செய்தி வாசிக்க துவங்களாம். மன்னிக்கவும்

துவங்கலாம்.

தமிழின் உச்சரிப்புகளில் ஒசைப்படாமல் ஒரு Transposition நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ல -ள உச்சரிப்புகளும் ன - ண, ர - ற உச்சரிப்புகளும் இடம் மாறிக் கொண்டிருக்கின்றன. அதை மொழி இயலாளர்கள் ஆராய வேண்டும்... நாக்கு சௌகரியமா, நாக்கு புரள மறுக்கிறதா, இல்லை ஏதாவது பொதுவான பல்மருத்துவக் காரணமா, இல்லை பள்ளியில் நேர்ந்த தப்பா? (அசோகமித்திரனின் 'ரிக்ஷா' என்கிற சிறு சிறுகதை ஞாபகம் வருகிறது.)



ரபி பெர்னார்ட்

தொலைக்காட்சியில் இப்போது செய்தி படித்துக் கொண்டிருப்பவர்கள் மேற்சொன்ன இரண்டு வாக்கியங்களையும் நீங்களே டேப்பில் பதித்துவிட்டு ஒரு முறை கேட்டுவிடுங்கள். மற்றொரு வேண்டுகோள்.. செய்தி படிப்பதற்கு அரைமணி முன் மேக்-அப், டச்-அப், புடவை பார்டர், கிராப்பு, டை, கன்னத்து ரூஜ் சரியாக இருக்கிறதா என்ற அலங்கார காரியங்களுக்கு முன் படிக்கப் போகும் செய்தியை ஒரு முறை மனசில் படித்துவிடுங்கள். சில மேல்நாட்டு, வடநாட்டு இடங்களின் தலைவர்களின் பெயர்கள் வந்தால் அதன் ஆங்கில

வடிவத்தைச் சற்று பார்த்துவிடுங்கள்.

உதாரணமாக, நம் பிரதமரின் பெயர் என்ன என்பது எனக்கே சந்தேகமாகி விட்டது. வாஜ்பாய், பாஜ்பாய், வாஜ்பை என்று இறுதியில் வாஜ்பேயி என்று ஆவி ரேஞ்சுக்குப் போய்விட்டார். தூர்தர்ஷன் அவருடைய பெயரின் அங்கீகரித்த தமிழ் உச்சரிப்பை அறிவிக்கலாம். அதேபோல் ஜோதிபாசு. வடகிழக்கு எல்லை மாநில முதல்வர்கள் பெயர்கள் எல்லாம் கண்டமேனிக்கு உச்சரிக்கப்படுகின்றன. டெல்லி குட்டிகளிடம் யாராவது சொல்ல வேண்டும் - அமைச்சரின் பெயர் 'முராசொலி மரான்' அல்ல என்று. வெளிநாட்டுப் பெயர்களை கேட்கவே வேண்டாம். அண்மையில் தற்காலிகப் பதவியேற்று இருக்கும் Vladimir Putin ஜனாதிபதியின் பெயர்... இதை புடிங் என்று சாப்பிடுகிற சமாசாரம் மாதிரி உச்சரிக்கிறார்கள். சிங்கப்பூர் பிரதமர் Goh Chok Tang பெயரை கோ சா தாங் என்று உச்சரிப்பதை அவர் கவனித்தால் முதலீடு செய்வதை நிறுத்திவிடுவார். கேபிள் டி.வி-யில் பி.பி.சி. இருக்கிறது. ஒவ்வொரு மணி நேரமும் வருகிறது. வாரம் ஒரு முறையாவது அதைப் பார்த்தால் போதும்... செய்தி எப்படி வாசிக்கிறார்கள், தலையை ஏன் அவர்கள் ஆட்டுவதில்லை, அவர்கள் ஆடை உடுத்திக்கொள்ளும் பாங்கு.. எல்லாம் செய்தி வாசிப்பவர்கள் மேல் இல்லாமல் செய்தியின் மேல் கவனம் செலுத்த வைக்க எளிய முறைகள்.

'போன் இன்' என்று ஒரு ஆபாசம் எல்லா சானல்களிலும் இப்போது ஓடிக் கொண்டிருக்கிறது. தமிழக மக்கள் மேல் செய்யப்படும் டாப் டென் மோசடிகளில் இது நான்காவது இடத்துக்கு உயர்ந்திருக்கிறது.

"அலோ..."
"அலோ..."
"அலோ..."
"சொல்லுங்க."

"நான் மதுரைலருந்து கவிதா பேசறேன். உங்களை காலைலருந்து ட்ரை பண்ணிக்கிட்டிருகேன்."

"சொல்லுங்க கவிதா... எப்படிருக்கிங்க?"

"நீங்க எப்படி இருக்கிங்க?"

"நான் நல்லா இருக்கேன். நீங்க?"

"நானும் நல்லா இருக்கேன்."

"கவிதா, நீங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கிங்க?"

"நான் வந்து ஹவுஸ் வைஃப்."

"என்ன ஹாபிஸ்?"

"ஹாபிஸ்னு எதும் இல்லை. குளந்தைககளை பாத்துக்கறதுக்கு டயம் இருக்கறதில்லை."

"எத்தன குளந்தைங்க?"

"நாலுங்க. டி.வி. பார்ப்பேங்க. உங்க ஹாபிஸ் என்ன?"

"நான் வந்து பாராடைவிங், பங்கி ஜம்பிங் போயிட்டிருந்தேன். இந்த ப்ரொக்ராம் பண்றதால போறதில்லை."

"இருங்க... எங்க ஊட்டுக்காரருகிட்ட பேசுங்க."

"மேடம், டி.வி-ல சூப்பரா இருக்கிங்க மேடம். டக்கரா இருக்கிங்க. அதும் நீல கலர் சுடிதார்ல டக்கரா இருக்கறிங்க. போனவாரம் ஒரு அதென்ன... கக்குரா டிரஸ்ல வந்திங்க பாருங்க... கலக்கிட்டிங்க."

ஒரு மாதிரி 'மொட்' என்று சத்தம் கேட்க,

"கவிதா? கவிதா?"

"ஏதோ கம்யூனிகேஷன் ப்ராப்ளம். அடுத்து நாம் பேசப் போவது..."

"அலோ, நான் திருநெல்வேலில் இருந்து பேசறேங்க. காலைலருந்து ட்ரை பண்ணிக் கிட்டிருக்கேங்க."

"உங்க பேரு"

"கவிதா?"

"இப்பதான் ஒரு கவிதாகூட பேசி முடிச்சேன்."

"நான் பாக்கலைங்க. போன்லயே சுழட்டிக்கிட்டு இருந்தங்க... விரல் வீங்கிருச்சு. எங்க வீட்டுக்காரரை கூப்பிடறேன்."

பரபரப்பாக - "வேண்டாங்க!"

இது கற்பனை உரையாடல்தான் என்றாலும் இந்த மாதிரி வெத்து நிகழ்ச்சிகள் மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் நேர விரயத்தை மக்களும் தொலைக் காட்சியினரும் உணர வேண்டும்.

போன் இன் என்பதை நடத்தி வைக்க ஒரு தனித்திறமை வேண்டும். காமிராவைப் பார்த்து ஆயில் மேக்-அப்பில் புன்னகைத்தால் மட்டும் போதாது.

சாதாரணமாக போன் இன் என்பதை அவர்கள் சில நிபுணர்களை ஸ்டூடியோவுக்கு அழைத்து வந்து அவர்களிடம் நாட்டு நடப்பு பற்றியும் அரசியல், கலாசாரம், சினிமா, விளையாட்டு பற்றியும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள பயன்படுத்துகிறார்கள்.



யூகிசேது

டேவிட் லெட்டர் மேனில் 'டுநைட்' ஷோ போல, யூகி சேது நடத்தும் பேச்சுக் காட்சி ஓரளவுக்கு ரசிக்க முடிகிறது. காரணம், விருந்தினர்களாக வரும் பலதரப்பட்டவர்களின் குணாதிசயங்கள். ஆரம்பத்தில் அவர் உதிர்க்கும் அறிமுக ஜோக்குகள் ஓரளவுக்கு மேல் அலுத்துவிடுகிறது.

சேதுவிடம் ஒரு உறுத்தாத முகத்தோற்றம். தமிழ்நாட்டில் நான் இது வரை பார்த்த இரண்டு டெலிவிஷன் பர்சனாட்டி- ரபி பெர்னார்டும் சேதுவும். சேகர் சுமன் போல சேதுவும். வரமுடியும். அதற்கு முதலில் செய்ய வேண்டியது. அவர்கள் பயன்படுத்தும் செயற்கை கைதட்டல், சிரிப்பு சத்தத்தை மாற்ற வேண்டும். எத்தனையோ காமெடி ஷோக்கள் இருக்கின்றன. எத்தனையோ வகை சிரிப்புகள். இதற்கான 'சிடி'க்கள்கூட இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தலாம். ஸ்டூடியோ ஆடியன்ஸ் இல்லாத பட்சத்தில் தினம் ரிக்கார்டிங் நடக்கும்போது சென்னைக்கு வரும் டூரிஸ்ட்டுகளை சேர்த்துக் கொள்ளலாம். ஒரு நூறு பேராவது வருவார்கள் இல்லை, ஆடியன்ஸ் பத்து பேரை வைத்துக் கொண்டு டிஜிட்டலாக ஐந்நூறாக்கி விடலாம்.

மாலன் நடத்தும் 'கேள்வி நேரம்' பகுதியில் கொலு வைத்தது போல, எதிரே உட்கார்ந்திருக்கும் நபர்கள் எதற்காக அங்கே வந்திருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. தப்பித் தவறி அவர்களிடமிருந்து ஒரு கேள்வி அனுமதிக்கப்பட்டால், அது குறுக்கே வெட்டப்பட்டு மற்ற பேர் பேசி மாய்கிறார்கள். நிபுணர்கள் தங்கள் பிடிவாதங்களைச் சின்னத்திரையில் தொடர்கிறார்கள்.




மேலும் ஸ்டூடியோ ஆடியன்ஸ் உட்கார்ந்திருக்கும் அபத்திரமான நிலையில் கேள்வி கேட்கத் தோன்றாது.

சன் டி.வி. நிறைய சம்பாதிக்கிறது. இந்த மாதிரியான நிகழ்ச்சிகளுக்கெல்லாம் கொஞ்சம் விஸ்தாரமான ஹால் தேவை. இந்த நிகழ்ச்சியை போன் இன் நிகழ்ச்சியாக மாற்றுவது சுலபம்.

இந்த வார கவிதை: 'அப்பாவுக்கு
அறுபதினாயிரம் மனைவிகள்
இருந்தும்
சந்தேகம் இல்லை.

ராமனுக்கு ஒரு மனைவி
ஆயிரம் சந்தேகங்கள்.'

- கபிலன்

'தெரு ஓவியம்', யாளி பதிப்பகம். கார்ப்பரேஷன் காலனி, சென்னை-34.

# காதல்!



இந்த வாரம் காதலர் தினம் வருகிறது என்று சொன்னார்கள். சுமார் ஐந்நூறுக்கும் குறைவில்லாத மோசமான கவிதைகள் தமிழிலேயே எழுதப்படும். வாலண்டைன் அட்டைகளில் இதயங்களின் மேல் அம்புகள் தைக்கும். எல்லையற்ற நேரவிரயம் காத்திருத்தல்களிலும் மூத்தவர் மறுப்பிலும் நிகழும். ஓரிரு தற்கொலைகள் நடைபெறலாம்.

காதல் தேவையற்ற ஒரு எமோஷன் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கைகளில் ஒன்று. என் வாழ்நாளில் நான் பார்த்த காதல்கள் எல்லாம் சந்தேக கேஸ். அவை நிஜமாகவே காதல்தானா.. இல்லை, இன்ஃபாச்சுவேஷனா என்பதே தெளிவில்லை (ஒரே ஒரு உதாரணத்தைத் தவிர.. அது பற்றி இறுதியில்).

சிறுவயதில் காதல் எங்களுக்கு ஏறக்குறைய கெட்ட வார்த்தையாகத்தான் இருந்தது. அந்தக் காலத்தில் அருராமநாதனின் 'காதல்' பத்திரிகையில் சீனிவாசனின் கதை வந்தபோது எல்லோரும் அவனை ஒரு மாதிரி நாய் கொண்டு வந்த வஸ்துவைப்போலப் பார்த்தோம். பள்ளிக்கூடத்தில் ஏதேனும் மாணவன் பெண்களிடம் காதல் செய்தான் என்று தெரிந்தால் பிரேயர் மீட்டிங்கின் போது அவனை ஒரு மேஜை மேல் நிற்க வைத்து பிரம்பால் அடிப்பார்கள். இவ்வகையிலான அபாயகரமான சூழ்நிலையில் காதல் பற்றிப் பேசுவதற்கு அசட்டு தைரியம் தேவைப்பட்டது. ஜனோபகார சாசுவதநிதியின் கேஷியர் பெண்ணுக்கு செல்லம் ஒரு காதல் கடிதம் எழுதி அதை எங்கள் 'நாம் ஐவர்' சர்க்குலேஷன் லைப்ரரி புத்தகத்தில் வைத்து என்னிடம் கொடுத்துவிட்ட கதையை ('ஸ்ரீரங்கத்து தேவதைகள்' தொகுப்பில்) எழுதியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட தகப்பனார் அதைக் கண்டுபிடித்து 'இனிமே இந்த மாதிரி கடுதாசி எழுதினா முட்டியைப் பேத்துருவேன்' என்று அதட்டியதும் 'சரி மாமா' என்று அக்காதல் அக்கணமே

கைவிடப்பட்டு செல்லம் தெருவில் சடுகுடு ஆடுவதற்கு சென்றுவிட்டான்.

ஓவர்சியர் பெண் மாலா காதல் செய்து ஒரு நாள் ஓடிப்போய் விட்டதாக வந்த செய்தி கீழச் சித்திரை வீதி முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இத்தனைக்கும் அந்தப் பையனைப் பார்த்தால் சாதுவாக அவள் தம்பி போல இருப்பான். "வீதியில் இத்தனை பேர் இருக்கச்சே போயும் போயும் இந்தக் கறிவேப்பிலைக் கொத்தைப் பிடிச்சு இவன்கூட ஓடிப்போனா பாருடா.. அதாண்டா எனக்கு ஆத்து ஆத்து போறது" என்று ரங்கு ஆதங்கப்பட்டான்.

"காதலுக்கு கண் இல்லைங்கறது இதாண்டா.."

அந்தப் பெண் ஓடிப்போனதும்தான் அவளைப் பற்றி தீவிரமாக யோசிக்கத் துவங்கினோம். 'இவளா' என்று ஆச்சரியப்படும்படி சாதாரணத் தோற்றம் கொண்ட பெண். மாநிறமாக இருப்பாள். ஒல்லியான கைகளுக்கு பஃப் வைத்து ரவிக்கை. டி.எஸ்.ஆர். சந்தனாதி தைலம், குட்டிக்யுரா வாசனையுடன் தன் தோழிகளுடன் பேசிக் கொண்டே தண்ணீர் பிடிக்க வருவாள். நாலைந்து பெண்களுடன் சாயங்கால வேளைகளில் சைக்கிளில் குரங்கு பெடல் பழகுவாள்.

அந்த பையன் சம்பத் தூரத்து உறவு போலும். திருவானைக்காவலிலிருந்து வாராவாரம் வருவான். வீட்டுக்கு ஒத்தாசை செய்வான். ஓட்டடை அடிப்பான். எலி பிடிப்பான். ரங்கன் கடையில் நாங்கள் உட்கார்ந்திருக்கும்போது சிம்னி விளக்கு திரிவாங்க வருவான்.


'மாலு எப்டிரா இருக்கா?' என்று நக்கலாக கேட்டால், பதிலே சொல்ல மாட்டான்.

'சம்பத்து.. நீயே கணக்கு பண்ணா எப்படிரா? ஒரு தடவை அவளை எங்கிட்டயும் விட்டுப் பாரேன்' என்று பாச்சா கேட்டபோது ஆக்ரோஷமாகப் பாய்ந்து இரண்டு பேரும் புழுதியில் புரண்டார்கள். சண்டையில் பாச்சாவின் இடுப்பு வேஷ்டி கழண்டு போய் அன்றைக்குப் பார்த்து அவன் கோவணம் கட்டாததால், இடுக்குப்பு கீழ் ஒன்றுமில்லாமல் உள்ளே ஓடியது மறக்க முடியாத நிகழ்ச்சி (அவனைப் பிற்காலத்தில் ஏ.ஜி. ஆபீஸில் பெரிய ஆபீஸராக நினைத்துப் பார்க்க முடியவில்லை. அந்தக் கணத்தின் வேடிக்கைதான் மனசில் தங்கி

இருந்தது).

ஒரு நாள் மாலாவையும் அந்த சம்பத் பையனையும் காணோம்.. என்ன என்னவோ வதந்திகள். இரண்டு பேரையும் - திருச்சி ராஜா டாக்கீஸில் பேக் பெஞ்சு டிக்கெட்டில் பார்த்ததாக சிலரும், தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் ஒரே சால்வையை இரண்டு பேரும் போர்த்திக்கொண்டு பயணித்ததைப் பார்த்ததாக சிலரும் சொன்னார்கள். ஓவர்சியர் எதும் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்ததாகத் தெரியவில்லை. 'எங்களை யாரும் தேடவேண்டாம்' என்று எழுதியிருந்த கடிதத்தைக் கண்ணால் பார்த்தேன் என்று ராமன் சத்தியம் பண்ணிச் சொன்னான். ஓவர்சியர் வெளியே தைரியமாக இருந்தாலும் உள்ளே மருகிப் போய்விட்டார் என்று சொன்னார்கள். மாமி இந்த அவமானத்துக்குப் பிறகு வெளியே வருவதே இல்லை. இந்தக் காதல் கதை சட்டென்று சப்பென்று முடிந்துவிட்டது.

ஒரு நாள் மாலை, மாலா எப்போதும் போல கையில் பித்தளைக் குடத்துடன் தண்ணீர் பிடிக்க வந்தாள். எதுவுமே நடக்காததுபோல் என்னைப் பார்த்து 'சௌக்கியமா' என்றாள். முகத்தில் ஒன்றிரண்டு பருக்கள் புதுசாக வந்திருந்தன. நான் காதோரம் சிவந்து அவசரமாக பாட்டியிடம், "பாட்டி.. அந்தப் பொண்ணு வந்திருக்கு" என இதை அறிவிக்க, "ஏண்டி.. நீ ஓடிப்போயிட்டேனு எல்லோரும் பேசிண்டாளே.." என்று பாட்டி கேட்டேவிட்டாள்.



"இல்லை பாட்டி... லால்குடில மாமாவுக்கு சீரியஸா இருந்தது. பார்க்கப் போனேன்" என்று சொன்னாள், அறியாத விழிகளுடன்.

சாயங்காலம் அவள் வீதியில் வழக்கம்போல் குரங்கு பெடல் பழகுவதை நாங்கள் ரங்கு கடையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். "ஒண்ணுமே நடக்கலை போல இருக்கா பாரு.. என்ன நெஞ்சழுத்தம் இவளுக்கு?"

"மாமாவுக்கு உடம்பு சரியில்லையாம். அதுக்குத்தான் போயிருந்தாளாம்."

"டேய் பித்துக்குளி... இவளுக்கு மாமாவே கிடையாது, தெரியுமா?" என்று ரங்கு அடித்துச் சொன்னான்.

சம்பத்தை கொஞ்ச நாளாகவே காணோம். அவனை மணச்சநல்லூரில் ஆள்வைத்து அடித்துப் போட்டுவிட்டதாக பேசிக்கொண்டார்கள். மாலா நிஜமாகவே லால்குடிக்கு போனாளா, ஓடிப்போனாளா என்கிற மர்மம் விடுபடவே இல்லை.

உண்மையான காதலை நான் சந்திக்கவே இல்லையா? காதலர் தினம் என்பது வாலண்டைன் கார்டு விற்பவர்களுக்காக ஏற்பட்ட மாயையா?

என்னுடன் மீனம்பாக்கத்தில் பணிபுரிந்த மார்ட்டின் என்கிற ஒரு ஆங்கிலோ இந்திய கம்யூனிகேஷன் ஆபீஸர் ஒரு பெண்ணைக் காதலித்தார். அந்தப் பெண் அவரைவிட இளமையும் தகுதியும் பெற்ற மற்றொருத்தரைக் காதலித்தாள். அவரிடம் 'ஸாரி மார்ட்டின்.. நான் உங்களைக் காதலிக்க வில்லை' என்று சர்ச்சில் வைத்து சொல்லி விட்டாள். மார்ட்டின் மனம் தளராமல், 'அதனால் என்ன.. நான் உன்னைக் காதலிக்கிறேன். அதுபோதும்' என்று சொல்லிவிட்டார். அவள் கணவனிடம் அவளுடன் கடிதத் தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதி கேட்டார்.

அந்தப் பெண் கல்யாணத்துக்குப் பின் ஆஸ்திரேலியா சென்றுவிட்டாள். அங்கே அவளுக்கு ஐந்து பெண் குழந்தைகள் பிறந்தன. மிக அழகான கையெழுத்தில் வாராவாரம் ஆஸ்திரேலியாவுக்குக் கடிதம் எழுதுவார். 'என் ரோஸி எப்படி இருக்கிறாள். என் ஏஞ்சல் நன்றாக சாப்பிடுகிறாளா.. ஜெனிஃபர் படிக்கிறாளா?' என்று குழந்தைகளை விசாரிப்பார். அவர்களை இவரிடம் லீவுக்கு அனுப்பினாள். அவர் அவர்களுக்குப் படிப்பதற்கு பணம் அனுப்பினார். பல வருடங்கள் கடந்து அந்தப் பெண்ணின் கணவன்

ஆஸ்திரேலியாவில் இறந்துபோனான். ஐந்து குழந்தை களையும் கூட்டிக்கொண்டு பல்லாவரம் வந்துவிட்டாள். மார்ட்டின் தான் காதலித்த பெண்ணை அவள் ஐந்து குழந்தைகளுடன் தன்னுடைய ஐம்பத்தாறாவது வயதில் கல்யாணம் செய்துகொண்டார். நான் வாழ்நாளில் சந்தித்த ஒரே ஒரு உண்மைக் காதலாக இதை ஒரு மனோதத்துவ நிபுணரிடம் சொன்னபோது அவர் 'ஹி இஸ் நாட் நார்மல்' என்றார்.

# காணாமல் போன கையெழுத்து!



**த**மிழில் நல்ல கவிதைகள் இப்போது சிறிய தொகுப்புகளில் ஒளிந்துகொண்டிருக்கின்றன. அண்மையில் எனக்கு அனுப்பப்பட்டவற்றில் பறவைகள் பற்றிய குறிப்பிடும்படியான சில வரிகள்:

'பறவை
சிறகை மீறின ஆகாயத்தை
அளந்து ஓய்ந்து
அலகை மீறின வனத்தை
உண்ண அமர்ந்தது'

(எம்.யுவன் 'வேறொரு காலம்' மையம். ராகவன் காலனி, சென்னை-33)

'எந்தப் பறவை எதனிடம் சொல்கிறது
பறந்ததை, பார்த்ததை, கூட்டை, நிழலை,
சிறகொடிந்ததை..'

(ப.கல்பனா, 'பார்வையிலிருந்து சொல்லுக்கு'. காலக்குறி, 18, 2-வது தெரு, அழகர்நகர் சென்னை-26).

செ.பிருந்தா, கனிமொழி, வத்சலா கிருஷாங்கினி. பெருந்தேவி, தாமரை, வெண்ணிலா, பொன்மணி, ரோகிணி போன்றவர் கொண்ட சிறிய சிறப்பான பெண் கவிஞர்களின் குழுவில் ப.கல்பனாவும் சேர்கிறார். இவருக்கு ஆணாதிக்க உலகத்திலிருந்து நல்வரவு. அதனுடன் ஒரு சிறிய அறிவுரை -

'கதவைச் சாத்தினால்
பின்னிய வலை கலையும் என்பது
சிலந்திக்கா தெரியாது'

என்பதை (பக்கம் 39)

'கதவைச் சாத்தினால்
கலைந்துவிடும்
சிலந்திவலை'

என்று மாற்றி அமைத்தால் அற்புதமான ஹைக்கூவாகிறது என்பது உங்களுக்குத் தெரியவேண்டும்.


'**உ**ங்கள் பேனாவில் அப்படி என்ன மாய சக்தியை ஊற்றியிருக்கிறீர்கள்?' என்று என்னைக் கேட்கும் அன்பர்களுக்கு 'ஐயா, நான் பேனாவே பயன்படுத்துவதில்லை' என்று சொன்னதும் சந்தாவை நிறுத்திவிடுகிறார்கள். ஏறத்தாழ இருபது வருடங்களாக நான் பேனாவால் எழுதுவதில்லை. ஆரம்பத்தில் ரூல் போட்ட தாளில் கைப்பட எழுதி அனுப்பிக் கொண்டிருந்தேன். 'உங்கள் கதையே குழப்பம்.. உங்கள் கையெழுத்தும் குழப்பம்' என்று உதவி ஆசிரியர்களைச் சந்திக்கும்போதெல்லாம் புகார் செய்தார்கள். ஒவ்வொரு பத்திரிகையிலும் சுஜாதாவின் கையெழுத்தைப் புரிந்துகொள்வதற்கே ஒரு ஸ்பெஷலிஸ்ட் தேவைப்பட்டார். அதனால் டைப் அடித்து அனுப்பிவிடலாம் என்று முதலில் ஒரு டைப்ரைட்டர் வாங்கினேன். லிஃப்கோவின் டைப்ரைட்டர் ஆசானைப் பார்த்து வாரம் பூரா 'யளனகபக' தட்டி ஒருவாறு தட்டச்சு பழகி விட்டேன். அதிலும் சில சங்கடங்கள் இருந்தன. 'ணு'வை இரண்டு தடவை அடிக்க வேண்டும். 'ஹ'-வுக்குச் சிக்கனம் பண்ணிவிட்டார்கள். உ ற இரண்டையும் தனித்தனியே அடிக்க வேண்டியிருந்தது. ஒருமுறை என்னுடைய பம்பாய் கதாபாத்திரம் ஒன்று 'ஹான் ஹான்' என்று இந்தியில் ஆமோதித்தது... ஒரு பத்திரிகையில் ஹான் ஹான் என்று அச்சாகியிருந்ததை திருப்பூர் நண்பர் சந்திரமௌலி எப்போது சந்தித்தாலும் குறிப்பிடுவார்.

அமெரிக்கா சென்றிருந்தபோது டல்லஸ் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக நண்பர் பால் பாண்டியன் ஒரு 'பிசி'யை அன்பளித்தார். அதை பெங்களூரில் கஸ்டம்ஸில் பிடித்து வைத்திருந்தார்கள். சொத்தையே எழுதி வை என்று ட்யூட்டி கேட்டார்கள். அந்த கஸ்டம்ஸ் அதிகாரியைச்

சந்திக்கச் சென்றேன். என் அதிர்ஷ்டம், அவர் ஒரு மராத்தி எழுத்தாளராம். தமிழ்ச் சங்கத்தில் எனக்குப் பரிசு கொடுத்ததற்கு அத்தாட்சியாக எதாவது 'போட்டோ கீட்டோ' காட்டச் சொன்னார். அமெரிக்காவில் சுள் சுள் என்று எடுத்த போட்டோக்களையெல்லாம் தேடிப் பார்த்தேன். அங்கங்கே நின்றுகொண்டு பேப்பர் தட்டுகளில் டிபன் சாப்பிடுகிறாற்போல இருந்தனவே தவிர, கம்ப்யூட்டர் பரிசளித்த போட்டோ எதையும் காணோம்.

அதற்குள் 'உங்கள் முகத்தைப் பார்த்தாலே நம்பிக்கையாக இருக்கிறது ('அப்படிப்பட்ட முகம் இவருக்கு.. கூசாமல் பொய் சொன்னாலும் மற்றவர்கள் நம்பிவிடுவார்கள்' என்பாள் என் மனைவி). போட்டோ தேவையில்லை' என ஒரு எட்டாயிரம் டியூட்டி போட்டு விட்டுவிட்டார். ஒரு முறை வீட்டுக்கு வந்தால் தன் மராத்தி கவிதைகளைப் படித்துக் காட்டுவதாகச் சொன்னார் (1986). நான்தான் இன்னும் போகவில்லை.

கம்ப்யூட்டர் வந்ததும் அதில் என் பெங்களூர் நண்பர் எஸ்.ஆர்.ஜி. முத்துகிருஷ்ணன் 'பாரதி' என்னும் தமிழ் மென்பொருளை அமைத்துக் கொடுத்தார். முதன்முதலாக 'பதவிக்காக' என்கிற தொடர் கதையை கணிப்பொறியில் எழுதினேன். அந்த கம்ப்யூட்டர் ஒரு பிஸி எக்ஸ்டி டாஸ் வகை. 110 வோல்ட்டுக்கான லோக்கல் டிரான்ஸ்ஃபார்மர் கணிப்பொறியைவிட பெரிசாக இருந்தது. அதன் டிஸ்க் முழுவதும் என் நாவல்களும் சிறுகதைகளும் நிரம்பிவிட, ஒரு நாள் அது லோடு தாங்காமல் பூட் பண்ண மறுத்தது. உள்ளேயிருந்து கிர்கிர் என்று வண்டுச் சத்தம் மட்டும் வந்தது. வயிற்றில் ஜிலீர் என்று ஒரு கவலை. உடனே அதைத் திறந்து குடலாப்பரேஷன் பண்ணி அதன் வின்செஸ்டரைக் கெஞ்சிக் கூத்தாடி உள்ளிட்டதையெல்லாம் எப்படியோ காப்பாற்றி விட்டேன். அதன்பின் அந்தக் கணிப்பொறியை எந்த இடத்தில் திருகினால் வேலைசெய்யும் என்பதையும் அறிந்துகொண்டேன்.



இன்று, பிரிண்ட் அவுட் எடுக்கக்கூடத் தேவையில்லாமல் அமெரிக்காவிலிருந்து தட்டியே இன்டர்நெட்டில் கதை, கட்டுரைகள் அனுப்பும் வரை வந்துவிட்டேன்.

கணிப்பொறியில் நேரடியாக எழுதுவதால் கற்பனை வளம் பாதிக்கப்படுகிறதா என்றால் ஒரு புடலங்காயும் இல்லை. மனம் ஒன்றுதான். மூளையிலிருந்து வரிவடிவங்களாக விரல்கள் மூலம் மாறுவதற்குப் பதிலாக விசைப் பலகைத் தொடுகைகளாக மாறுகின்றன . அவ்வளவே!

ஆனால், கணிப்பொறி வந்ததால் கையெழுத்துக்கலை Caligraphy மெள்ள அழிந்து வருகிறது என்பது உண்மைதான். இப்போது நகர்ப்புற மக்கள் பலர் கடிதம் எழுதுவதில்லை. தபால் இலாகா பெரும்பாலும் டி.வி. போட்டி விடைகளுக்கும் வக்கீல் நோட்டீஸுக்கும் தான் பயன்படுகிறது. தொலைபேசியும் ஓரளவுக்கு ஈமெயிலும்கூட இதற்குக் காரணம். வாய்ஸ் மெயில் என்று பேச்சையே இப்போது இன்டர்நெட்டில் அனுப்பலாம். கையெழுத்துக்கலை தேவையற்றுப் போகிறது. ஆனால், டெக்னாலஜி அதை அழித்துவிட்டதாகக் குற்றம் சொல்ல முடியாது. பேனாவில் எழுதி வந்தோம். தட்டச்சு வந்தது. அதன் பின் சொல் தொகுப்பு மென்பொருள்கள் வந்தன. மீண்டும் - இப்போது 'பென்' கம்ப்யூட்டிங் என்று கையெழுத்தில் எழுதும் சிறு குறிப்புகளை ஓஸிஆர் போன்ற இயல் மூலம் பரிச்சயம் பண்ணிக்கொண்டு அழகாக அச்சடித்துக் கொடுக்கும் திறமை கணிப்பொறிக்கு மாறிவிட்டது. அதனால், கணிப்பொறி வந்ததால் கையெழுத்துக்கலை அழிந்துவிட்டது என்பதில்லை. அந்தக் கலை இன்னமும் உங்களுக்குத் தேவையா என்று கேட்கிறது. தேவையென்றால் அதற்கான மென்பொருளை உண்டாக்கிப் பழையபடி கையெழுத்துப் போலவே அச்சடிக்க இயலும். ஏன்... ஓலைச்சுவடிகளைக்கூடத் திரும்பக் கொண்ட வரலாம் - தேவைப்பட்டால்.

மனித அடையாளங்களை அழித்தால் அந்த டெக்னாலஜி நீண்டநாள் தாங்காது. அது கணிப்பொறிக்குள் ஒளித்துவைக்கப்படும்.

எதிர்காலத்தில் கணிப்பொறியே ஒளிந்து கொண்டுவிடும் என்கிறார்கள்.


உதாரணமாக... எதிர்காலத்தில் ரெப்ரிஜிரேட்டர்களுக்குள் பொதிந்திருக்கும் மைக்ரோ கம்ப்யூட்டர் தானே கறிகாய், பால் இவற்றின் கையிருப்பு நிலையை அறிந்து இன்டர்நெட் மூலம் ஆர்டர் கொடுத்துவிடும் ஸ்டோருக்கு.. 'அஞ்சு லிட்டர் பால், ஒரு கிலோ பச்சைப் பட்டாணி, ஒரு கிரேட் பியர் அனுப்பிருங்க' என்று.

# ஆகா.. அந்தப் பத்து!




சில வாரங்களுக்கு முன்னர் தொலைக்காட்சி 'போன் இன்' நிகழ்ச்சிகளை விவரித்தபோது அது தமிழர்கள்மேல் செய்யப்படும் டாப் டென் மோசடிகளில் நான்காவது இடத்தைப் பெற்றிருப்பதாக எழுதியிருந்தேன். ஏராளமான அன்பர்கள் அந்த டாப்டென் லிஸ்ட்டை முழுவதும் தரும்படி என்னை போனிலும் நேரிலும் ஈ-மெயிலிலும் கேட்டுக் கொண்டதால் (உண்மையாக என்னை அப்படிக் கேட்டுக் கொண்டவர்கள் இரண்டு பேரே. இரண்டு பேரை ஏராளமான பேர் என்று சொல்வது கலிங்கத்துப் பரணி காலத்திலிருந்து தமிழர்களின் தொன்றுதொட்ட வழக்கம். 'வரலாறு காணாத கூட்டம்' என்றால் மைக்காரரையும் சேர்த்து ஆறு பேர் என்று அர்த்தம். இந்த 'மிகைக் கலாசாரம்' ஒரு தனி, மினி மோசடி) என்னுடைய 'டாப்-டென்' பட்டியலை வாசகர்களுடன் பங்குகொள்ள விரும்புகிறேன்.

பத்தாவது இடத்தில் இருப்பது பத்திரிகை செய்தித் தாள்களில் வரும் ஜோசியம், ராசிபலன், வாரபலன் இத்யாதிகள்.. இவை பற்றிய என் கருத்துக்களை த.கூ. நல்லுலகத்துக்கு அவ்வப்போது எழுதி வந்திருக்கிறேன். இவற்றுடன் கிளை மோசடிகளாக நியூமராலஜி, வாஸ்து, சனிப்ரீதி, ஆவிகளுடன் பேசுவது, நாடி, பரிகாரங்கள், கலர்த்துண்டுகள் போன்ற மற்றொரு பெரிய உபப் பட்டியலே இருக்கிறது. இதன் பொது அம்சம் - எல்லாவற்றிலும் ஒருவழிப் பாதையில் பணம் கைமாறும். Distribution of wealth.





ஒன்பதாவது இடத்தில் இருப்பது தமிழணங்கு, தமிழ் அன்னை, தமிழ்த் தாய் என்று மொழியை வைத்து மக்களை உணர்ச்சிவசப்படவைத்து மொழியை வளரவிடாமல் சாகடிப்பது.. மொழி ஒரு செய்தித் தொடர்பு சாதனம் என்பதை மக்களுக்குப் புரிய விடாமல் 'தாயைப் பழித்தாலும் தமிழைப் பழித்தால் தாங்கமாட்டேன்' போன்ற அபத்தங்களுடன் மொழித் தூய்மை. முதல் குரங்கு பேசினது தமிழ், தொல்காப்பியம் கி.மு. ஐயாயிரம் ஆண்டில் எழுதப்பட்டது போன்ற அபத்தங்களை வைத்து உசுப்பப்படுகிற ஜல்லியடி.. இதற்கேற்றபடி எழுதப்படுகிற ஆராய்ச்சிக் கட்டுரைகள், மேடைப் பேச்சுக்கள்.

எட்டாவது மோசடி, கிருஷ்ணா நதி நீர் வரும் என்று வாய்க்கால் வெட்டிக் காத்திருப்பது. இதனுடன் இதற்குமுன் போடப்பட்ட பல குடிநீர் திட்டங்கள்.. வீராணம், புலிக்காட் ஏரியை உப்பு நீக்குவது, கடல் நீரைக் குடிநீராக்குவது போன்று வருஷா வருஷம் புறப்படும் புதிய பூதங்களை நம்பி தமிழ் மக்கள் மில்லினிய வாசலில் இன்னமும்

பிளாஸ்டிக் குடங்களுடன் காத்திருப்பது. இன்று குடிநீர்ப் பிரச்னை இல்லாத ஒரு தமிழ்நாட்டு நகரம் இருந்தால் அதன் பெயரை எனக்கு ஒரு காம்பெட்டிஷன் போஸ்ட் கார்டில் எழுதினால் குலுக்கல் முறையில் ஒரு சவரன் தங்கநாணயம் (யாராவது ஜுவல்லரின் குடுமி அகப்பட்டால்) பரிசு. ஒரு புள்ளிவிவரம் - தமிழ்நாட்டில்தான் தண்ணி லாரிகளின் ஜனத்தொகை மிக அதிகமாம்.

ஏழாவது, காவிரிப் பிரச்னைக்கு கர்நாடகா தன்னிச்சையாக தண்ணீர் தரும் என்று எதிர்பார்த்து பருவமழை அதிகமானால் அவர்கள் வெள்ளத்தில் முழுகாமல் இருக்க நம் பக்கம் தள்ளும் சிவசமுத்திர டி.எம்.சி-க்களை கணக்குக் காட்டுவது. அந்தத் தண்ணீர் - யாருக்கும் பயன்படாமல் கடலில் கலப்பது.. விளைச் சலுக்கு வேண்டும் சமயங்களில் பயிர்கள் வாடுவது.. காவிரி டெல்டாவில் எந்தவித நவீன வேளாண்மை முறைகளும் கொண்டுவராமல் சங்ககால விவசாய முறைகளையே இன்றும் பயன்படுத்துவது.. 55 லட்சம் டன்தான் அரிசி உற்பத்தியாவது.

ஆறாவது இடத்தில் இருப்பது லாட்டரி. ஒருவர் சிறக்க ஒரு கோடிப் பேர் ஏமாற்றமடைவது. அதிலிருந்து கிளைத்தெழும் உடனடி உரசல் லாட்டரிகள், ஒற்றை நம்பர் லாட்டரி, மட்கா, ஹவாலா போன்ற மெகா மோசடிகள். இதனால் தமிழ்நாட்டில் உலவும் கறுப்புப்பணம்.



ஐந்தாவது இடத்தில் இருப்பது, ஐந்து பட்டுப்புடவை வாங்கினால் ஒரு காகித பென்சில் இலவசம் போன்ற பரிசுத் திட்டங்கள். குறிப்பாக

தீபாவளி, பொங்கல் சமயங்களின்போது வீட்டுமனை, மாருதி கார், ஸ்கூட்டர், வெட்கிரைண்டர் என்று மக்களுக்கு ஆசைகாட்டி தமிழ் தெரியாதவர்களை எல்லாம் கூப்பனுக்காக தமிழ் பத்திரிகைகள் வாங்கச்செய்வது (நல்லவேளை.. தேக்குமரத் திட்டங்களும் சிட் ஃபண்டுகளும் மெள்ள இந்த லிஸ்ட்டிலிருந்து விலகிவிட்டன).

நான்காவது இடம் - தொலைக்காட்சியில் போன் இன்... இதைப் பற்றி விகடனில் விலாவாரியாக (பைதிவே.. விலாவாரி என்றால் என்ன?) எழுதியுள்ளேன். அன்பர்கள் படிக்கவும்.. இதனுடன் மெகா சீரியல்களும் அதே இடத்துக்குப் போட்டிப் போடுகின்றன. கதையே இல்லாமல் எபிசோடு 345... ஐந்து நிமிஷம் டைட்டில் சாங்க், ஐந்து நிமிஷம் 'ரிகாப்' கதை, ஐந்து நிமிஷம் 'ஃப்ராஞ்ச் ஆயில் என் எச் எங்கப்பா' போன்ற அதட்டல் விளம்பரங்கள், ஐந்து நிமிஷம் யாராவது யாரையாவது ஆட்டோ ரிக்ஷா பிடித்துத் தேடும் கால் இன்ச் கதை, அதன்பின் மீண்டும் டைட்டில் சாங்.. மக்களை குறிப்பாக இல்லத்தரசிகளை புத்தகம் படிக்காத சோம்பிகளாக்கும் மோசடி.

மூன்றாவது இடத்தில் கம்ப்யூட்டர் கல்வி. ஒரு மாசத்தில் ஜாவா, இன்டர்நெட் எச்.டி.எம்.எல், எக்ஸ் எம்.எல், வெப்டிசைன், கோர்பா டிகாம், லி ப்ளஸ் ப்ளஸ், விபேசிக், ஆரக்கிள் என்று இந்த இயலில் அத்தனையும் சொல்லித் தருவதாக முப்பதாயிரம் வரை பணம் வாங்குவது.. கோர்ஸ் முடித்தவுடன் வேலை ஏற்பாடு செய்து கொடுப்பதாகச் சொல்வது... நடுத்தர குடும்பப் பெற்றோர்கள் நகைகளை விற்றுப் பணம் கட்டுவது... அவர்கள் முப்பதாயிரத்துக்குப் பின்னர் கற்றுக் கொள்ளும் ஒரே பாடம், 'கம்ப்யூட்டர் அவ்வளவு சுலபமல்ல.'

இரண்டாவது இடத்தில் ஏழ்மை ஒழிப்புத் திட்டங்கள்.. ஜவகர் ரோஜ்கர், ஐ.ஆர்.டி.பி. போன்ற கிராமப்புற முன்னேற்றத்துக்கான நாற்பத்தாறு மைய, மாநிலத் திட்டங்கள். எல்லாத் திட்டங்களும் நன்னோக்கங்கள் கொண்டவை. அவை மக்களைப் போய்ச் சேராமல் நடுவில் இருப்பவர்கள் வருஷா வருஷம் சுருட்டுவது... இதனால் கிரானைட் இழைத்து வீடுகட்டிய பத்து விரல் மோதிரப் பணக்காரர்களின் எண்ணிக்கை கூடுவது.. ஏழைகள் ஏழைகளாகவே இருப்பது.

முதல் இடத்தில் முப்பது வருஷமாக இருப்பது... வேறு தேர்ந்தெடுப்பு இல்லாத அஜனநாயக சூழ்நிலை. மாறி மாறி பழைய

ஊழல்காரர்களையே மீண்டும் பதவிக்குக் கொண்டுவரும் ஞாபகமறதி சார்ந்த அரசியல். மற்றவற்றை யாவது ஓரளவுக்கு மாற்ற முடியும் என்று தோன்றுகிறது. இந்த நந்தி விலகவே இல்லை.

பட்டியலில் புகுந்துகொள்ள இன்னும் ஐந்து ஆறு விஷயங்கள் காத்திருக்கின்றன.. தனியார் இன்ஜினீயரிங் கல்லூரிகள், விசாரணை கமிஷன்கள், போலிமருந்துகள், மத நல்லிணக்கம், மதிய உணவுத் திட்டம், துபாயில் வேலை போன்றவை.



# நல்லன பத்து!



சென்ற இதழில் டாப்டென் மோசடிகளைப் பற்றி எழுதி இருந்தேன். 'தமிழ்நாட்டில் நல்லதே இல்லையா..?' என்று கேட்கிறவர்களுக்கு டாப்டென் நல்லவைகளையும் சொல்ல விரும்புகிறேன். இதில் கிண்டல், பொடி எதுவும் கிடையாது - உண்மையாகவே நல்லவை என நான் கருதுபவை. 'இன்னா நாற்பது' எழுதினால் 'இனியவை நாற்பது' எழுதும் தமிழ் இலக்கிய மரபில் இதோ நல்லன பத்து'.

**10-**வது இடத்தில் இருப்பது - தமிழ்நாட்டின் சம சீதோஷ்ண நிலை. அதிக குளிர் இல்லை. வெயிலும் வடநாட்டில் போல 44, 45-டிகிரிக்கெல்லாம் போகாது. அப்படி அதிகரித்தால் மழையோ தென்றலோ வந்து ஆறுதல் தரும். எளிய உடைகள் போதும். கோடைகாலத்தில் மலைவாசஸ்தலங்களும் ஓரளவுக்கு குளிர் உள்ள நகரங்களும் உள்ளன. அவற்றுக்குச் செல்ல மாநிலம் முழுவதும் வலைப் பின்னல் போல சாலைகளும், தனியாரும் அரசும் போட்டியிடும் பஸ் வசதியும் உள்ளது.

**9-**வது இடத்தில் தமிழ் மொழி என்னதான் அணங்கு, அன்னை என்று பண்டிதர்கள் முயற்சித்தாலும் தெய்வபீடத்தில் ஏற மறுத்து இரண்டாயிரம் ஆண்டுகளாக 'என்றுமுள தென் தமிழா'க உயிருடன் இருக்கும் எளிய, சிறந்த நம் மொழி. சிக்கலான கருத்துக்களையும் தெளிவாகச் சொல்ல ஏற்பட்ட அதன் இலக்கணம், சொற்சிக்கனம்... இரண்டு லட்சம் வார்த்தைகளின் கருவூலம். (கணிப்பொறி யுகத்தில் இன்று தமிழ் மொழியில்தான் வலமைனைகளும் இணைய இதழ்களும் அதிகம்.) இன்டர்நெட்டில் அகநானூறு போன்ற பழசு வேண்டும் என்றால் பழசும் கிடைக்கிறது... அதே சமயம், மிகப் புதிதும் உருவாகிறது. இரண்டாயிரம் வருட பழமை வாய்ந்தும் மரபுத்

தொடர்ச்சியுள்ள ஒரே உலக மொழி. 'எழுத் தெனப்படுவது அகர முதல் னகர இறுவாய் முப்பது' என்கிற தொல்காப்பிய சூத்திரம் இன்றும் புரிவது. வாணிபம், பரஸ்பர உறவுகள், காதல் கதை, கட்டுரைகள், நகைச்சுவை, சச்சரவு, வட்டார வேறு பாடுகள், மேடை முழக்கம்... அத்தனைக்கும் ஈடு கொடுக்கும் ஜீவ மொழி தமிழ்.

**8-**வது இடத்தில் இருப்பது தமிழக விவசாயி. காவிரி நீர் திறந்துவிடாமல் அண்டை மாநிலத்தார் கழுத்தறுத்தாலும் எப்படியோ தாளடி, குறுவை, சம்பா என்று இருக்கிற தரையடி நீரில் புராதன விவசாய முறைகளை வைத்துக் கொண்டு திறமையாகப் பயிரிட்டு போதிய அளவுக்கு உணவு உற்பத்தி செய்து பஞ்சம் என்கிற வார்த்தையையே மறக்கச் செய்தது. தமிழக விவசாயியிடம் டிராக்டர்களையும் ஹார்வெஸ்டர்களையும் கொடுத்தால் சட்டென்று அவரால் உணவு உற்பத்தியை இரட்டிப்பாக்கக் கூடிய சாத்தியம். இதன் பின்னணியில் உள்ள கடும் உழைப்பு.

**7-**வது இடத்தில் மற்ற மாநிலங்களில் வெட்டு, குத்து, துப்பாக்கி கலாசாரம் போன்றவை தாராளமாகப் பரவியிருக்கிறபோது, அவர்களுடன், ஏன்... உலகத்தில் பல இடங்களுடன் ஒப்பிட்டால் தமிழ்நாட்டில் தின வாழ்க்கை பத்திரமானதாக இருப்பது... பெரும்பாலான சமயங்களில் ஓரிரு சம்பவங்களைத் தவிர, அமைதி நிலவும் மாநிலமாக இருப்பது. நான் அகர்தாலா, குவாஹத்தி, கோஹிமா, ஸ்ரீநகர், கொழும்பு, சிகாகோ, நியூயார்க், லண்டன் போன்ற நகரங்களுக்குச் சென்றிருக்கிறேன். எப்போதும் காற்றில் ஒரு பயம், மறைமுக எச்சரிக்கை இருக்கும். ஐந்து மணிக்கு கடையை மூடிவிடும் மரண அமைதியும் பயமும் தமிழகத்தில் இல்லாமல் அதன் எல்லா நகரங்களும் ஓரளவுக்கு பத்திரமாக இருப்பது.

**6-**வது இடத்தில் இருப்பது புதிய பொருளாதாரக் கொள்கையையும் சென்னை போன்ற துறைமுகங்களின் ஏற்றுமதி, இறக்குமதி சாத்தியங்களையும் பயன்படுத்திக்கொண்டு மாநிலத்தின் தொழில் முன்னேற்றம் ஏறுமுகமாக இருப்பது. ஃபோர்டு, ஹூண்டாய், நியூ ஹாலண்ட், அசோக் லேலண்ட், இந்துஸ்தான் மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள் சேர்ந்து முதலீடு செய்து கார், டிராக்டர், டிரக் உற்பத்தியில் ஆசியாவிலேயே தலைசிறந்து விளங்கப் போவதும், கணிப்பொறி மென்பொருள் தயாரிப்பிலும் முன்னேற்றம் அடையப் போவதும் ஆரோக்கியமான விஷயங்கள்.

**5-**வது இடத்தில் இருப்பது - தமிழக நடுத்தர, கீழ்நடுத்தர வர்க்க பெரும்பான்மையினரிடம் எஞ்சியிருக்கும் மனிதாபிமானம், உதவி செய்யும் ஆர்வம். மற்றவர் மேல் பரிவுள்ள எளிய மக்கள். பணக்காரர்களையும் மேல்தட்டு மக்களையும் நீக்கி விட்டாலும் அறுதிப் பெரும்பான்மையினரான மௌன மக்கள்தொகையினரிடம் நான் காணும் இயல்பான நேச குணம். சம்பாத்தியம் குறைவாக இருந்தாலும் சந்தோஷம் குறையாமல் இருப்பது. போதும் என்ற மனம்.

**4-**வது இடத்தில் நினைத்த மாத்திரத்தில் பஸ் பிடித்து சில நூறு ரூபாய்க்குள் பல நூறு ஆண்டுகள் பின்னோக்கி சரித்திரத்தில் உலவ முடிவது. நம் முன்னோர்களுடன் அவர்கள் விட்டுச்சென்ற கல்வெட்டுகளிலும் சிற்பங்களிலும் கோயில்களிலும் வாழ முடிவது. அழுத்தமான பக்தி மரபில் உருவான கோயில் சார்ந்த கர்னாடக சங்கீதம், பரத நாட்டியம் போன்ற நுண்கலைகள்... அதில் இருந்தும் மக்கள் வாழ்விலிருந்தும் கிடைத்த கூத்தும் பாட்டும் நாட்டுப்புறக் கலைகளும்.

**3-**வது இடத்தில் இருப்பது, நம் அபார இலக்கியங்கள்... அவற்றை நாம் படிக்கும்போது ஏற்படும் பிரமிப்பு. 'பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதினினும் இலமே' போன்ற வரிகளில் வெளிப்படும் தன்னம்பிக்கை. சிக்கலான யாப்பு விதிகளின்படி எழுதப்பட்ட எளிமையான ஆயிரமாயிரம் இலக்கிய வரிகள். அந்த யாப்பை மீறும் தைரியம் பெற்று கருத்தாழமிக்க புதுக்கவிதைகளைப் படைத்த தீர்மானம். நாளைய சிந்தனையைக் கூட தெரிவிக்க அனுமதிக்கும் இதன் மகத்தான இலக்கிய மரபு. பத்திரிகை படிக்கும் வழக்கம்... அதிலிருந்து எழுப்பப்படும் ஆயிரக்கணக்கான வார்த்தை மாளிகைகள்.



**2**-வது இடத்தில் இருப்பது, தமிழர்களின் தொழில்நுட்பத் திறமை. பணம் படைத்த தொழிலதிபர்கள் அதிகமாக இல்லாவிடினும் இன்று இந்தியா முழுவதிலும் மேல் நாட்டிலும் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து படித்த தமிழர்கள் திறமையின் அடிப்படையில் சிறந்து பணிபுரிவது. இண்டோ - திபெத் எல்லையில் ரோடுபோடுவது, பெங்களூரில் வீடு கட்டுவது, கலிஃபோர்னியாவில் சாஃப்ட்வேர் எழுதுவது, சின்தசைஸரில் சீக்வென்சர் அமைப்பது, பாலங்கள் கட்டுவது... எதிலும் தமிழர்கள் சளைத்தவர்கள் அல்ல. மதுரையிலும் திருநெல்வேலியிலும் சேலத்திலும் வேலூரிலும் காஞ்சியிலும் சாதாரண குடும்பங்களில் பிறந்தவர்களுக்கு உலகெங்கும் பரவ வாய்ப்பு தரும் இந்த மாநிலம் தரும் கல்விச் சூழ்நிலையும் தமிழனின் ஆதார புத்திசாலித்தனமும் எதையும் எளிதில் கற்கும் திறனும்.

முதல் இடத்தில் இருப்பது - தேர்ந்தெடுப்பு இல்லை யென்றாலும் தேர்தல் வரும்போது கட்டாயமாக வோட்டுப் போட்டு ஆட்சியை மாற்றுவது. ஜனநாயகத்தைக் குறை சொல்லாமல் ஏதோ ஒருவிதத்தில் மக்களின் கோபத்தை வெளிப்படுத்தும் பாங்கு. இரண்டும்கெட்டான் கூட்டணி வல்லடிகள் இல்லாமல் அரசாள்பவரைத் தீர்மானமாகப் புரட்டிப்போடும் மக்கள் சக்தி. இதனால் ஊழலின் அளவு தேசிய சராசரியைவிட குறைவாக இருப்பது. என்றாவது ஒரு நாள் தேச நலனை

நேசிக்கும் உண்மையான தலைவர்கள் முன் வருவார்கள்... வந்தால் தேர்ந்தெடுப்போம் என்று கொடுக்கும் நம்பிக்கை.

**வை**ரல் ஃபீவர் முடிந்தபின் எனக்கு காது இரண்டும் அடைத்துக் கொண்டுவிட... யாராவது, 'இன்றைக்கு என்ன கிழமை?' என்று கேட்டால் 'உருளைக்கிழங்கு' என்றெல்லாம் பதில் சொல்லும் ரேஞ்சுக்கு போய்விட... 'இனி தாங்காது' என்று பாரதிதாசன் சாலையில் ஈ.என்.டி. சர்ஜன் டாக்டர் பாபுவைப் போய்ப் பார்த்து திரும்பும் போது சாலையைக் குறுக்கே கடக்கையில் இருட்டில் லைட் இல்லாமல் வந்த ஒரு மோட்டார் சைக்கிள் இளைஞன் மோதிவிட, இந்த வாரம் கறுப்புக் கட்டடத்திலிருந்து தப்பினேன்.

அந்த இளைஞன் கையைப் பிசைந்துகொண்டு நின்று கொண்டிருந்தான். அவனை விளித்து ஒரே ஒரு அறிவுரை சொன்னேன். 'ஒரு சாலை விபத்துக்கு இரண்டு முட்டாள்கள் தேவைப்படுகிறார்கள். குறுக்கே செல்லும் நடை முட்டாள், அநாவசிய வேகத்தில் வரும் வாகன முட்டாள். குருட்டு யோசனையில் இருக்கும் தமிழ் எழுத்தாளர்கள் திடீர் என்று குறுக்கிடலாம். எனவே, அடுத்த முறை வரும் போது லைட் போட்டுக் கொண்டு பார்த்து ஓட்டு' என்று சொன்னேன். அவன் 'ஸாரி' என்று ஒரே வார்த்தையுடன் இரு சக்கரமேறி 60 கிலோமீட்டரில் புறப்பட்டுச் சென்றுவிட்டான். எனக்கு படுக்கையிலிருந்து எழுந்திருக்க பத்து நாளாச்சு. இன்னமும் முழங்கால் வலி போகவில்லை. டாக்டர் பார்த்தசாரதியிடம் போக வேண்டும். அந்த இளைஞன் கி.பி. 2030-ல் இந்த சம்பவத்தை யோசிக்கும்போது ஒருக்கால் ஹெட்லைட் போட்டுக் கொண்டு மெள்ளப் போயிருக்கலாமோ என்று யோசிக்கலாம்.

**பி**ப்ரவரி மாதம் 17-ம் தேதி பேராசிரியர் எஸ். வையாபுரி பிள்ளை அவர்களின் நினைவுதினம். அவருடைய ஆராய்ச்சி முறைகளையும் முடிவுகளையும் மேல்நாட்டு பல்கலைக்கழகங்களில் கொண்டாடுகிறார்கள். தமிழ்நாட்டில் இப்போது அவரை மறந்துவிட்டதற்கு காரணம்- அவர் ஆணித்தரமான ஆதாரங்களுடன் தொல்காப்பியம், திருக்குறள் போன்றவற்றின் காலத்தை சில நூற்றாண்டுகள் தள்ளிப்போட்டதுதான். திருக்குறளின் காலத்தை அவர் ஆறாம் நூற்றாண்டு என்று சொன்னதற்கு காரணங்கள் இவை: குறள் ஒரு கீழ்க்கணக்கு நூல். 'கள்' விகுதி தொல்காப்பியத்தில் அஃறிணைக்கு மட்டும் பயன்பட்டது. திருக்குறளில் உயர்திணையிலும் பயன்படுகிறது. 'ஒப்பாரி', 'அப்பர்' போன்ற புதுச் சொற்கள். 'போழ்து', 'ஆயினால்'

போன்ற பிரயோகங்கள், 'பாக்கியம்', 'பூசனை', 'மந்திரி', 'ஆசாரம்' போன்ற 123 வடமொழி வார்த்தைகள், 'ஒருவந்தம்' போன்ற கலவைச் சொற்கள் - இவற்றையெல்லாம் வைத்துச் சொல்கிறார். மறுப்பது கஷ்டமாக இருக்கிறது.

# மர்ம தீவு!



இந்த வாரம் அன்பளிப்பாக வந்த புத்தகம், 1998-ம் ஆண்டின் சிறந்த சயின்ஸ் ஃபிக்ஷன் விஞ்ஞானக் கதைகளின் தொகுப்பு. சிறுகதை வடிவம் மேனாட்டில் உயிருடன் இருப்பது விஞ்ஞானக் கதைகள் மூலம்தான் என்று சொல்லத் தோன்றுகிறது. மற்றபடி, 'பெஸ்ட் செல்லர்ஸ்' என்னும் தலைகாணி நாவல்கள்தான் அதிகம் பதிப்பாகி விற்கின்றன. சம்பிரதாயச் சிறுகதை, சிறு பத்திரிகைகளுக்குத் தள்ளப் பட்டுவிட்டது. அதுவும் மாஜிக் ரியலிஸம், மைக்ரோ ஃபிக்ஷன் என்று திசைதவறி அலைகிறது.

ஆங்கிலத்தில் சயின்ஸ் ஃபிக்ஷனுக்கென்று சுமார் பத்துப் பத்திரிகைகள் இருக்கின்றன. பெரும்பாலும் அமெரிக்காவில்தான் அதிக ஆதரவு. பிரிட்டனில் ஒன்றும் ஆஸ்திரேலியாவில் ஒன்றும் தொடர்ந்து கஷ்டப்பட்டு வெளி வருகின்றன. இந்தியாவில், மராத்தியில் மட்டும் ஒரு பத்திரிகை இருப்பதாகக் கேள்வி. ஆங்கிலத்திலேயே பத்தாயிரம், இருபதாயிரம் பிரதிகள் விற்றாலே பெரிதாகச் சொல்கிறார்கள்.

இன்டர்நெட்டில் சயின்ஸ் ஃபிக்ஷன் சார்ந்த பல வலைமனைகள் உள்ளன. புதிதாக மின் புத்தகங்கள் 'ஈ-புக்ஸ்' என்னும் வகையில், ஏறக்குறைய நூறு புத்தகங்கள் வலையில் உள்ளன. இவற்றை இன்டர்நெட் இணையம் மூலம் இறக்கிப் படிக்கலாம். ஆனால், பலருக்கு ஒரு கணித் திரையில் முழுப் புத்தகத்தையும் படிக்கப் பொறுமை இல்லை. அதனால், புதிதாக உடனடிப் புத்தகங்கள் print on demand என்கிற, தேவையான புத்தகத்தைக் கடையில் கேட்டால், அவ்வப்போது உடனடியாக அச்சிட்டுப் புத்தக வடிவில் கொடுக்கும் முறையும் மெள்ள வந்துகொண்டிருக்கிறது. இதனால், புத்தகத்துக்குப் புத்தகமும் கிடைக்கிறது... எவ்வளவு தேவையோ, அவ்வளவே அச்சிடப்படுகிறது.

அலமாரி அலமாரியாக அடுக்க வேண்டாம்.

இந்தப் புதிய முறையில் காகித விரயம் தடுக்கப்படுகிறது. இதை பார்ன்ஸ் அண்ட் நோபிள் போன்ற பெரிய நிறுவனங்கள் பரிசோதித்துக் கொண்டிருக்கின்றன.

வி.க. வலைமனைகளில் சிறந்த இரண்டு: sfwa.org, locusmag.com. இவற்றிலிருந்து மற்ற வலைமனைகளைப் பிடித்துவிடலாம்.

விஞ்ஞானக் கதைகளில் hard science fiction எனக்குப் பிடிக்காது. தினவாழ்வில், நிஜவாழ்வில் நடப்பவை போன்ற சம்பவங்களில் சற்றே உறுத்தும் ஓர் அதிசயத்தைப் புகுத்தும் வகைதான் என்னால் எழுத முடிந்தவையும் (உ-ம்: 'மஞ்சள் ரத்தம்'). தியோடோர் ஸ்டர்ஜியன், க்ளிஃபோர்டு சைமாக், ரே ப்ராட்பரி, ப்ரையன் ஆல்டிஸ், உர்சுலா லா க்வைன், டக்ளஸ் ஆடம்ஸ் போன்ற பல உதாரணங்கள் சொல்ல முடியும்.

அஸிமோவ் பிடிக்காது. அவர் ஒரு அருமையான விஞ்ஞான விளக்குநர். கதைகள் சுமார்தான்.

1998-ம் ஆண்டுக்கான சிறந்த கதைகளின் தொகுதியில் 24 கதைகள். 600 பக்கங்கள் இருக்கின்றன. எந்த மாதிரியெல்லாம் எழுதுகிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணமாக, Ursula Le Guin - உர்சுலா லா க்வைன் (என்னுடைய உச்சரிப்பு) என்ற மிகப் பிரபலமான ஆசிரியையின் முத்தான ஒரு சிறுகதையின் சாரத்தைத் தருகிறேன். பெயர்: The Island of the Immortals. சைஃபியில் எத்தனை கற்பனை சாத்தியங்கள் உள்ளன என்பதற்கு ஓர் உத்தம உதாரணம்.

"எண்டியன்' என்னும் பிரதேசத்தில் சாகாவரம் பெற்றவர்கள் இருக்கிறார்களாமே..?' என்று ஒருத்தி டிராவல் ஏஜெண்டைக் கேட்டபோது, 'அங்கேயா போகிறீர்கள்..? அது கொஞ்சம் ஒரு மாதிரியான இடம்' என்று எச்சரிக்கிறார்கள். ஈக்கள் அதிகம் மொய்க்கும். கடிக்கக்கூடக் கடிக்கும். ஆனால், நோய் பரவும் ஆபத்து இல்லை. போகலாம்' என்கிறார்கள்.

இவள் அங்கே போக விரும்புகிறாள். எப்போதோ 'கலிவர்ஸ் டிராவல்ஸ்' படித்த ஞாபகத்தில் அந்த இடத்துக்குப் போயே ஆகவேண்டும் என்கிற பிடிவாதம் அவளுக்கு அதிகமாகிறது. அதைப்

பற்றி நூலகத்துக்குச் சென்று குறிப்பெடுத்துக் கொள்கிறாள். அந்தத் தீவில் சிலர் சாவதே இல்லை என்று ஒரு பழங்கதை உண்டு என்று போட்டிருக்கிறது.

கப்பலேறுகிறாள். காப்டனிடம் தீவைப் பற்றி விசாரிக்கிறாள். 'உண்மைதான். இந்தத் தீவில் இறவாது சாசுவதமாக வாழ்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். சாகாவரம் என்று இல்லை. அந்தத் தீவில் உள்ள ஒரு வகையான ஈ கடித்ததால், அவர்கள் சாகாமல் இருக்கிறார்கள். நீங்கள் எதற்கும் எச்சரிக்கையாக இருங்கள். அந்த ஈயில் உள்ள ஏதோ ஒரு வைரஸ்தான் சாகாத்தன்மையை உண்டாக்குகிறது. வலை போட்டுக் கொண்டு அலைவது நல்லது' என்கிறார் காப்டன்.

'இது ஏன் வெளியே அதிகம் தெரியவில்லை..? உலகத்தில் பலர் சாகாமல் சாசுவதமாக வாழ விரும்பமாட்டார்களா..?' என்று கேட்கிறாள். அதற்குச் சிக்கனமாக, 'போய்ப் பார், தெரியும்' என்கிறார் காப்டன். இனம் தெரியாத பயத்துடன் தனியாக அந்தத் தீவில் இறங்குகிறாள். ஊரில் இருந்த ஒரே ஒரு லாட்ஜில் தங்குகிறாள். எல்லா அறைகளும் காலி. ஜன்னல்களில் வலை போட்டிருக்கிறது. சின்ன, பழுப்பான ஈக்கள் மொய்க்கின்றன. அவை வலையால் தடுக்கப் பட்டிருக்கின்றன.

மறுதினம் ஒரு படகோட்டியிடம் விசாரித்த போது, 'வைரம் பொறுக்க வந்திருக்கிறாயா..? ஒரு காலத்தில் இந்த இடத்தில் நிறைய வைரம் கிடைத்தது' என்கிறான். சாகாதவர்களைப் பற்றிக் கேட்டபோது, 'இருக்கிறார்கள்... ஒன்றிரண்டு பேர்' என்கிறான் சுவாரஸ்யமில்லாமல். இவளுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

'இவர்களை நான் பார்க்க முடியுமா..?'

ஒரு கிராமத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறாள். ஈக்கள் மொய்க்கின்றன. குழந்தைகள் பயந்து ஓடி மறைகின்றன. ஒரு பெண் வந்து, 'சாகாதவரைப் பார்க்க வந்திருக் கிறாயா..? இரண்டரை வெள்ளி' என்று பணம் கேட்டு வாங்கிக்கொண்டு, 'வா...' என்று அழைத்துச் செல்கிறாள்.

ஒரு மூலையில், குட்டை நாற்காலியில் அந்த உருவம் உட்கார்ந்திருக்கிறது. முகத்தைப் பார்ப்பதற்குமுன், மொண்ணையாக இருக்கும் கைதான் இவள் கவனத்தைக் கவர்கிறது.

ஒரு டூரிஸ்ட் கைடு போல, அந்தப் பெண்மணி பேசுகிறாள்: 'நீங்கள் பார்ப்பது சாகாத மனிதனை. இது எங்களுடன் சில நூற்றாண்டுகளாக இருக்கிறது. ரோயா குடும்பத்தைச் சேர்ந்தது. இதற்கு நாங்கள் வேளா வேளை உணவளித்து வளர்க்கிறோம். காலையிலும் மாலையிலும் ஆறு மணிக்கு உணவளிப்போம். பாலும் பார்லியும் சாப்பிடும். நல்ல ஆரோக்கியம். வியாதி எதும் கிடையாது. ஆயிரம் வருஷம் முன்னால், இது ஒரு பூகம்பத்தில் கால்களை இழந்தது. எங்களிடம் வருவதற்குமுன், தீ விபத்தில் கொஞ்சம் சேதப்பட்டு விட்டது. இது பல நூற்றாண்டுகளுக்கு முன், ஓர் அழகான இளைஞனாக இருந்ததாம். வேட்டையாடிப் பிழைத்து வந்ததாம். இப்போது இதற்குக் கண் தெரியாது, காது கேட்கவில்லை. நீங்கள் இதற்காகப் பிரார்த்தனை செய்யலாம். எதாவது நன்கொடை கொடுத்தாலும் மகிழ்ச்சி. கேள்வி எதாவது இருந்தால் கேட்கலாம்...'

'இது சாகவே சாகாதா..?'

'ஆம்.'

'நீங்கள் எல்லாம் ஏன் ஈ வலை அணியவில்லை..?'

'ரொம்பத் தொந்தரவு. மேலும், அது ஒன்றுதானே..?'

'அப்படியென்றால்... இது ஒன்றுதான் சாகாததா..?'

'இல்லை, இல்லை. மற்றவர்களும் இருக்கிறார்கள். அவர்களைத் தேடிப் போக வேண்டும். அவர்கள் எல்லாம் ரொம்ப வயதானவர்கள். எல்லோருக்கும் இளசு இதுதான்!''

'வைரங்கள் சாசுவதமானவை என்கிறார்களே..?'

'இருக்கலாம். சில காலத்துக்குமுன் ஒரு விஞ்ஞானி வந்தார். இந்த சாகாதவர்களைப் புதைத்துவிட்டால், பல்லாயிரம் வருடங்களில் வைரங்களாகி விடலாம் என்றார். ஆனால், எங்கள் குடும்பத்தில் உயிரோடு ஒருவரைப் புதைப்பது தப்பு என்று நம்புகிறோம்...'



குழப்பமான எண்ணங்களுடன் திரும்புகிறாள் இவள். ஒருக்கால் அந்தத் தீவில் சாகாத மனிதர்கள்தான் நாளடைவில் வைரங்களாக மாறி விட்டார்களோ என்று எண்ணுகிறாள். வீடு திரும்பும்போது யோசிக்கையில், அந்த கைடு பெண் 'அது ஒன்றுதானே...' என்றபோது, தீவில் இருக்கும் ஈக்களில் ஒன்றே ஒன்றுதான் கடித்தால் சாகாவரம் வரும் என்று சொல்ல வந்தாளோ என்று நினைக்கிறாள்.

இவ்வாறு முடியும் இந்த அபாரமான கதையை, ஒரு வாரம் யோசியுங்கள். இதன் அடிநாதம் என்ன என்று ஈ-மெயில் அனுப்பலாம்.

# போட்டியல்ல, வியாபாரம்!



நடுநிசியில் டி.வி-யில் சோனியோ ஒல்லியோ ஏதோ ஒரு சானலைத் தொட்டபோது, அழகழகான இளம்பெண்கள் தம் தம் திறமைகளை வெளிக்காட்டும் வகையில் அடிமேலடி வைத்து மிகையாக இடுப்பசைத்து நடந்துகொண்டிருந்தார்கள். சபையில் ஜட்ஜுகள் தலா ஒரு கணிப்பொறி முனையத்தில் வீற்று, அவர்களுக்கு மதிப்பெண்கள் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அனைவரும் பணக்காரவர்க்கப் பெண்கள். அந்த நடை வரை வருவதற்கு பெற்றோர்கள் ஏகதேசம் ஐந்து லட்சம் செலவழித்து இருப்பார்கள். நுனிநாக்கு ஆங்கில வனிதாமணிகள். பெயர்களே விநோதமாக, நவீனமாக இருந்தன. ராவி, மேக்கா, ஹிமானி, யோகினி, ஷிவாங்கி, பாயல், சாவி, இஷானி, ட்யுலிப், வாலுஸ்சா, தியா, நிஹா ரிகா, இவிதா. பிறக்கும் போதே ஃபெமினா 'மிஸ் வோர்ல்டு' போட்டிக்குத் தயாராகிறார்கள் என எண்ணத் தோன்றுகிறது. பெயரைக்கூட வித்தியாசமாக வைக்க வேண்டியது முதல் ரூல் போல. அங்காள பரமேஸ்வரி என்றால் ரியோடிஜெனிரோவில் உச்சரிக்கக் கஷ்டப்படுவார்கள் என்று 'அங்கா' அல்லது 'ங்கா' என்று நாமம் சூட்டப்படுகிறார்கள்.


Palmolive
FEMINA MISS INDIA

அழகிப் போட்டி பூனாவில் நடந்தது. ஷாரூக்கான், பிரித்திஷ் நந்தி, வஹிதா ரெஹ்மான், அசாருதீன் போன்றவர்கள் ஜட்ஜுகள். சம்பிரதாய கேள்விகள்... சம்பிரதாய பதில்கள்...

"நீ மறுஜென்மம் எடுத்தால், யாராகப் பிறக்கப் பிரியப்படுகிறாய்?"

பதில் - "மதர் தெரசா..."

விளம்பரதாரர்கள் கொடுத்த விதவித ஆடைகளில் சிறிய மார்பகங்களைக் கோடி காட்டிக் கொண்டு, புன்னகையைக் கழற்றவே கழற்றாமல் நெர்வஸாகவே எச்சரிக்கையுடன் கேள்விகளுக்குப் பதில் அளித்தார்கள். "நீங்கள் மிஸ் வோர்ல்டாக, மிஸ் யூனிவர்ஸாகத் தேர்ந்தெடுக்கப் பட்டால் என்ன செய்வீர்கள்..?" என்பது தவறாமல் கேட்கப்பட்ட மற்றொரு கேள்வி. அதற்குத் தவறாமல், "சேரிக் குழந்தைகளுக்கும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முதியோருக்கும் சேவை செய்வேன்..." என்ற கையிருப்பு பதில் - இந்திய கலாசாரத்தை அத்தனை பேரும் பாதுகாக்க விரும்புவதாகத் திறந்த மார்புடன், ஸாரி... மனதுடன் சொன்னார்கள். மொரீஷியஸ் தீவில் இருந்து வந்த கலைஞர்கள் பாடி ஆடினார்கள். நியூயார்க், லண்டனில் செல்லாத பாப் பாடகர்கள் படுத்தினார்கள். உள்ளூர் பாப் குழுவொன்று ஸாண்டானாவையும், எ லிட்டில்பிட் ஆஃப் மோனிகாவையும் எஃப்.எம். மைக் வைத்து அங்குமிங்கும் ஊடாடிக் கொண்டே பாடியது. கன்னாபின்னாவென்று வெட்டிய லேசர் வெளிச்சத்தில் இந்திய கலாசாரத்தைக் கண்விழித்திருந்து கடைசிவரை தேடிப் பார்க்க வேண்டியிருந்தது. தென்பட வில்லை.

அழகிப் போட்டி நமது நகரங்களில் ஒரு மிகப் பெரிய வியாபாரமாகிவிட்டது. சோப், சானிட்டரி நாப்கின், குட்கா, குளிர்பானக்காரர்களிடம் நிறையக் காசு இருப்பதால், ஒரே இரவில் குட்டிகளை நடக்கவிட்டு ஒழித்துக் கட்டலாம் என்று வயதான அதிபர்களின் 'வாயரிச'த்துக்கு வடிகால் இவை. டெல்லி, மும்பை, பெங்களூர் போன்ற நகரங்களில் இதற்கென்றே பள்ளிகள் உள்ளன. கல்யாண சமையல் போல காண்ட்ராக்ட் விட்டுவிடலாமாம். அவர்கள் இந்தப் பெண்களைத் தட்டிக் கொட்டி, தடுக்காமல் நடக்க வைத்து, சிரிக்க வைத்து, இங்கிலீஷ் உச்சரிப்பைச் செப்பனிட்டு, எல்லா அநாவசிய பாகங்களையும் திருத்தி, காற்று சற்று வேகமாக அடித்தால் பறந்து போகிற ரேஞ்சுக்குக் கொண்டு வந்துவிடுவார்கள். முதலில் தங்கள் பேட்டையில், தங்கள் நகரத்தில், ரீஜினல், நேஷனல்,

இன்டர்நேஷனல் என்று பதினெட்டு வயசுக்குள் உலகை வெல்லும் ஆசை இந்தப் பெண்களுக்கு ஊட்டப்படுகிறது.



'மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம் செய்யாதன செய்யோம்' என்று சொன்ன ஆண்டாளுக்கு நேர் எதிர்! முதலில் இருபத்தாறு. பெண்களை இந்தியா முழுவதும் வலைவீசித் தேடி, வண்டிச் சத்தம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அவர்களைப் பதின்மூன்றாக்கி, ஒன்பதாக்கி, மூன்றாக்கி நுட்பமாகச் சீவுகிறார்கள். இறுதியில், மூவர் போட்டிக்குத் தயாராகிறார்கள். மற்றவர் வீட்டுக்கு... ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் இதே சமாசாரம்தான்.

இந்த ஆண்டு போட்டியின் கடைசி கட்டமாக, ஒன்பது பெண்களையும் ஒரே ஒரு கேள்வி கேட்டு, அதற்குப் பதிலாகக் குட்டியாக ஒரு கட்டுரை எழுதச் சொன்னார்கள்.

'Ignorance is bliss என்றால், எதற்காக நாம் அறிவைத் தேட வேண்டும்..?' என்று ஒரு நீதிபதி கேட்டார். அதற்கு அழகிகள், 'அறியாமையை அறிவதற்கே அறிவு வேண்டும்!' என்றெல்லாம் என்னென்னவோ குழப்படி, ஜல்லியடி பண்ணிப் பதில் எழுதிப் படித்தார்கள்.

கேள்வி கேட்டவர், பதில் அளித்தவர் இருவருக்கும் தெரியாத விஷயம் ignorance is bliss என்கிற வாக்கியம் எப்போது, எந்தச் சூழ்நிலையில் யாரால் எழுதப்பட்டது என்பதே.

இன்று உலகெங்கும் தப்பாக மேற்கோள் காட்டப்படும் இந்த வரி, தாமஸ் கிரே (Thomas Gray) என்ற ஆங்கிலக் கவிஞரின் 'ode on a distant prospect of Eton college' என்னும் கவிதையில் வருகிறது. கிரே பொதுவாகச் சோக மித்ரன். அவருக்கு வாழ்வின்மேல் என்ன வெறுப்போ... இரங்கல் வருத்தப் பாடல்களாகவே எழுதி வருத்தினார். ஈட்டன் கல்லூரியில் பேராசிரியராக இருந்தார். தூரத்தில் இளைஞர்கள் ஓடி ஆடுவதைப் பார்த்தவர், 'விளையாடட்டும்... வாழ்வில் அவர்களுக்குப் பிற்காலத்தில் காத்திருக்கும் சோகம் தெரியாதிருக்கட்டும். எல்லோரும் ஒரு காலத்தில் வருத்தப்படவே போகிறார்கள். இப்போதே ஏன் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் அறியாமையே இன்பம்' என்ற தொனியில் எழுதப் பட்ட கவிதை அது -

'... why should they know their fate
Since sorrow never comes too late
And happiness too swiftly flies
Thought would destroy their paradise
No more, where ignorance is bliss
Tis folly to be wise'

இந்த வரிகளை இயல்பாக மொழி பெயர்த்தால்,

'எதற்காக அவர்கள் தம் விதியை அறிய வேண்டும்
துக்கம் நிச்சயம் தாமதிக்காமல் வந்தே தீரும்
சந்தோஷம் அதி வேகமாகப் பறந்து செல்லும்
சிந்தனை அவர்கள் சொர்க்கத்தைக் கலைத்துவிடும்
வேண்டாம், அறியாமைதான் இன்பம்
அறிவது பெரும் தப்பு...'

# சர்ப்ரைஸ் செக்!



சிறுவனாக கோவையில் வளர்ந்தபோது என் ஜாதகத்தைப் பார்த்த அப்பாவின் ஜோசிய நண்பர், நான் பிறந்த கிரக பலன்களை வைத்து 'இந்தப் பையன் வளர்ந்ததும் சிறிய தேக அமைப்போடு இருப்பான். குரு சந்திரனையோ யாரையோ பார்ப்பதால் வாதாடும் திறமை நிறைய இருக்கும். வக்கீலாகவும் பிறகு ஜட்ஜாகவும் வருவான்' என்று எழுதியிருந்தார். எனக்குப் பத்து வயதிருக்கும்போது அந்தக் குறிப்புகளை அம்மா என்னிடம் காட்டி... வக்கீலுக்குப் படிக்கிறாயா என்று கேட்டிருக்கிறாள். சீரங்கத்தில் கீழச் சித்திரை வீதியில் நான் பார்த்த இரண்டு வக்கீல்கள் அப்படி ஒன்றும் சிலாக்கியமாகவோ... உதாரண புருஷர்களாகவோ இல்லை. ஒருவர் கோர்ட்டுக்கே போகமாட்டார். என்றாவது ஒரு நாள் பதினோரு மணிக்குப் போகத் தீர்மானித்தால்... தெருவில் இறங்கி நாலு தப்படி நடந்ததும் சகுனம் சரியாக இல்லை என்று திரும்பி வந்து "அலமேலு... எலையைப் போடு" என ஆணையிடுவார். "ஆமாம்... இவர் கோர்ட்டுக்குப் போய்த்தான் என்ன கிழிக்கப் போறார்..." என்பாள் அலமேலு. பிறிதொருவர் கன்றுக்குட்டி திருட்டு போன்ற 'ஸ்மால் காஸ்' வக்கீல். இந்தக் காரணங்களால் எனக்கு அப்பாவின் ஜோசிய நண்பரின் ஹேஷ்யத்தை மெய்ப்பிப்பதில் உற்சாகம் ஏற்படவில்லை.

அந்த ஜோதிடர் 'இவன் ஏரோப்ளேனுடனும் சங்கீதக் கருவிகளுடனும் சம்பந்தப்பட்டிருப்பான்' என்று எழுதியிருந்தால் எனக்கு ஜோசியத்தில் நம்பிக்கை வந்திருக்கும். இவை இரண்டும் பற்றிச் சொல்கிறேன்.

ஏரோப்ளேன்களுடன் என் தொடர்பு சிறுவயதில் துவங்கியது. தீபாவளிக்கு ஏரோப்ளேன் வாணம் ஒன்று வரும், சின்ன தகர டப்பி போல இருக்கும் அடிப்பாகத்தில் திரி சொருகி இருக்கும். தொட்டால் வெளியே வந்துவிடும். அதை ஜாக்கிரதையாக சொருகிப்


பற்றவைத்தால், இந்தப் பக்கம் நாலு பொறி அந்தப் பக்கம் நாலு பொறி போட்டு விட்டு சும்மா இருக்கும். எப்போது கிளம்பப் போகிறது என்று சஸ்பென்ஸ் தரும். கிட்டப்போய் அலட்சியமாகக் காலால் அதை உதைப்போம். அதுதான் வீரம். அப்போது அது உசுப்பப்பட்டு, ஒரு பைத்தாரக் கோணத்தில்... ஆங்கில ZZ ஒலியுடன் புறப்படும். ஒரு முறை இப்படி ஏறாத ஏரோப்ளேனை நான் உதைக்கப் போய், அது விஸ்ஸென்று புறப்பட்டு, கெடிகார ராமையா வீட்டுக்கு எதிரே எச்சுப் பாட்டி என்கிற மூதாட்டியின் வீட்டுக் கூரையில் போய்ச் சொருகிக் கொள்ள, உடனே கூரை லேசாகப் புகைய ஆரம்பித்தது. "கடங்காரா... கட்டைல போறவனே... வீட்டைக் கொளுத்தறீங்களே..." என்று எச்சுப்பாட்டி (இயற்பெயர் லட்சுமி) அலற... தண்ணீர், மணல் என்று என்ன என்னவோ போட்டுக் கூரைக்குப் பதில் பாட்டியை அபிஷேகம் பண்ணி நனைத்தோம்.

அன்றிலிருந்து நான் ஏரோப்ளேன் வாணம் விடுவதில்லை என சபதம் பூண்டு இன்றுவரை காப்பாற்றி வருகிறேன்.

காகிதத்தை மடித்து சக நண்பர்கள் மைக்கூடு பட்டாம்பூச்சி, கத்திக் கப்பல், பறவை எல்லாம் பண்ணுவார்கள். அது என்னவோ எனக்கு ஏரோப்ளேன் மட்டும்தான் பண்ணவரும். இன்றைய தேதியிலும் ஒரு காகிதத்தைக் கொடுத்தால் மூலையை மடக்கிச் சதுரமாகக் கிழித்துக்கொண்டு வாலுக்குத் தனியாக எடுத்து வைத்துக்கொண்டு, சதுரப் பகுதியைக் குறுக்கே மடித்து, மையத்தில் ஒரு சின்ன குளறுபடி பண்ணி, வாலை மடித்துச் சொருகி, மூக்கைச் சாமர்த்தியமாக மடித்துக் கூர்மையாக்கி, இறக்கையை நீவி விட்டு ஒரு நிமிஷத்தில் ஏரோப்ளேன் பண்ணிவிடுவேன். வானில் செலுத்தினால் பெரும் பாலான சமயங்களில் ஒரு சின்ன ரவுண்ட் அடித்துவிட்டுக் காலடியில் வந்து விழும். ஒரே ஒரு முறை விடுதலைப் பறவை போலப் பறந்து... உயர்ந்து... தாழ்ந்து... டைவ் அடித்து, காலட்சேபத்துக்குச் சென்று கொண்டிருந்த ஜானகி மாமியின் ரவிக்கையின் பின்பக்கம் போய், அந்த ஏரோப்ளேன் செட்டில் ஆகியது. அதை எம்பி எடுக்க எங்களுக்குத் தைரியம் வராததால், அதனுடனேயே அம்மாது தொண்டரடிப்பொடி ஆழ்வார் சந்நிதிக்குப் போய் உட்கார்ந்தாள். அதற்கப்புறம் என்ன ஆச்சு என்கிற விவரமில்லை.

அதன்பின் நான் அதிகம் காகித ப்ளேன் பறக்கவிடவில்லை. பட்டங்களுடனும் எனக்கு ராசியில்லை. இதெல்லாம் பாலகாண்டம்! அதன் பின் நா.மே, பொ. வண்ணமுமாக வளர்ந்து ஜோதிடர்

சொன்னதுக்கு ஓர் எதிராக ஆறடி ஓடக்கோல் போல உயரமாகி... இன்ஜினீயரிங் படிப்பு முடிந்து சீரங்கம் வந்து ஜாலியாக கிரிக்கெட் ஆடிக்கொண்டிருந்தவனை... அப்பாதான், 'நீ வேலை தேட வேண்டும்' என்று நினைவு படுத்தி, அப்ளிகேஷன் போட வைத்து, டெல்லி இன்டர்வியூவுக்கு அனுப்பினார். சிவில் விமான இலாகாவில் வேலை கிடைத்தது. அலகாபாத்தில் அதற்கான பயிற்சிக்குச் சென்றேன். எந்த ரயில், எங்கே மாற்ற வேண்டும் என்பதெல்லாம் தெரியாமல் சென்னை வந்தேன். ஜி.டி. ஒன்று தான் அப்போது வடக்கே போகும் ரயில். அதில் ஏறிக்கொண்டு இட்டார்சியில் மாறி அலகாபாத் வந்து சேர்ந்ததும்தான் தெரிந்தது, என் வேலை டெக்னிக்கல் இல்லை. விமானப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் ஆகாய கான்ஸ்டபிள் வேலை என்று. ஏர் டிராஃபிக் கண்ட்ரோல் ஆபீஸர். அதற்கான பயிற்சியின் பகுதியாகச் சுமார் பதினெட்டு மணி நேரம் விமானம் ஓட்டக் கற்றுக்கொடுத்தார்கள். சிப்மங்க் என்னும் இதுவா பறக்கப் போகிறது எனத் தோன்றும் விமானம். விழுந்தாலும் அதிகம் அடிபடாது போல சிநேகிதமாக இருந்தது. அந்த விமானத்தில் பறக்கக் கற்றுக்கொண்டதும், கற்றுக்கொடுத்த கேப்டன் ராயும் என் வாழ்வில் மறக்க முடியாத விஷயங்கள். அது பற்றிப் பல வருடங்களுக்கு முன் ஒரு கட்டுரை எழுதி உள்ளேன். அதை இன்னும் சில நல்ல மனிதர்கள் ஞாபகம் வைத்துக் கொண்டு குறிப்பிடுகிறார்கள். அவர்களுக்கு சிக்கிம் லாட்டரியிலோ ஸ்ரீலக்ஷ்மியிலோ பத்து லட்சமும் எதிர்த்துப் பேசாத பிள்ளைகளும் கிட்டட்டும்.



அதன்பின் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் முதல் போஸ்டிங். இருபத்துநான்கு வயது. உலகத்தைத் திருத்தும் உத்தேசங்களும் உற்சாகமும் எல்லா நாளங்களிலும் பிரவகிக்க... நைட் டியூட்டியில் தூங்க மறுத்தேன். துல்லிய வெண்மையில் சீருடை அணிந்தேன். ஜீப்பில் அடிக்கடி விமான நிலையத்தை ரோந்து வந்தேன். கண்ட்ரோல் டவரில் இருந்த ஜாம்பவான்கள் எல்லாம் இது எத்தனை நாளைக்கு என்று இளமுறுவலுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போதெல்லாம் மீனம்பாக்கத்தில் அதிகம் விமானப் போக்குவரத்து இல்லை. ஆடிக்கு ஒன்று அமாவாசைக்கு ஒன்று வரும். வைக்கிங், காரவெல், ஸ்கை மாஸ்டர் போன்ற ப்ளேன்கள். அவர்களுடன் ரேடியோ தொடர்புகொண்டு 'க்ளியர் டு லேண்ட், க்ளியர் ஃபார் டேக் ஆஃப்' போன்ற ஒன்றிரண்டு வாக்கியங்களிலேயே வேலை முடிந்துவிடும். மற்ற சமயங்களில் கண்ணாடி உச்சியிலிருந்து வானை நோக்கிக்கொண்டிருக்க வேண்டும். படித்தாலும் ஏவியேஷன் வீக்தான் படிப்பேன். அவ்வளவு கடமை உணர்ச்சி.

அந்த கண்ட்ரோல் டவரில் ஒரு சிவப்புக் குமிழி இருந்தது. அது எதற்கு என்று விமானம் வந்தால் கொடியேற்றும் முனுசாமியிடம் கேட்டேன்.

"தெரியாதுங்க..." என்றான். எப்போதும் அவன் போதையில் இருப்பான்.

"இதை யாராவது பயன்படுத்தியிருக்கிறார்களா?"

"நான் இந்த ஏர்போர்ட்ல முப்பது வருஷமா இருக்கிறேன். யாரும் இதைத் தொட்டதில்லைப்பா... சேஷாத்ரி சாரை கேளுப்பா..." என்றான்.

நான் சேஷாத்ரி வருவதற்குள் என்னதான் இது என்று அறிய குமிழை அழுத்தினேன்.

டவரின் உச்சியில் இருந்த சைரன் அலறியது. தீ வண்டி, ஆம்புலன்ஸ், ஜீப் எல்லாம் சரேலென தத்தம் ஷெட்டுகளிலிருந்து புறப்பட்டன. ஏர்போர்ட் ஹெல்த் ஆபீஸர் எங்கே விபத்து, யாருக்கு அடி.. எத்தனை பேர் செத்தார்கள் என்று ஓடி வந்து விசாரித்தார். ஏரோட்ரோம் ஆபீஸர் கண்ட்ரோலர், ஏரோட்ரோம்ஸ் என்று அடுத்தடுத்து போன் செய்தார்கள். என்ன ஆச்சு, என்ன ஆச்சு என பத்திரிகை நிருபர்கள் விரைந்தார்கள். போலீஸ் அவுட்போஸ்ட் கான்ஸ்டபிள் ஓடிவந்தார். விமான விபத்து ஏற்பட்டால் இயக்கவேண்டிய குமிழாம் அது! உதவியாளர் சேஷாத்ரி கான்டீன் போயிருந்தவர் மேலே ஏறி வந்துத, "என்ன சார்... இப்படிப் பண்ணிட்டீங்க... சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டின்னு..."

"சேஷாத்ரி... தெரியாம அமுக்கிட்டேன்... இப்ப என் வேலை போயிடுமா..?"

"பயப்படாதீங்க... காப்பாத்தறேன்..." என்றார் சேஷாத்ரி.

செங்கல்பட்டு கலெக்டர் உட்பட அனைத்து அதிகாரிகளும் ஸ்பாட்டுக்கு விரைந்து வந்து எங்கே க்ராஷ் என்று விவரம் கேட்க மேலேறி வந்தார்கள்.

சேஷாத்ரி, "ஒண்ணுமில்லை சார்.. சர்ப்ரைஸ் செக் பண்ணணும். எல்லாரும் எச்சரிக்கையா இருக்காங்களானு பார்க்கணும்னாரு. இது ஸ்டாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்ல பத்தாவது பக்கத்துல இருக்கு சார்...

இப்ப டிராஃபிக் அதிகமில்லை. அதான் சைரனை இயக்கிப் பார்த்தார்..." என்றார்.

என்னைக் கூர்வேல் பார்வை பார்த்த உயரதிகாரிகள் சற்றே டென்ஷன் குறைந்தாலும், "சர்ப்ரைஸ் செக் பண்ணப்போறேன்னு எங்களுக்கெல்லாம் சொல்லிட்டு பண்ணுப்பா..." என்றார்.

"அப்ப, அது சர்ப்ரைஸ் செக் ஆகாதே சார்..." என்றேன் அடக்கத்துடன்.

"சபாஷ், சரியான பதில். நீயல்லவோ ஆபீஸர். இப்படித்தான் இருக்கணும்..." என்று பாராட்டிவிட்டுச் சென்றனர்.


# பூனை இல்லை புல் புல் தாரா!



'ஏரோப்ளேன்களும் நானும்' இரண்டாம் பாகத்தைப் பிறிதொரு சமயத்தில் விவரிக்கிறேன். இப்போது சங்கீத வாத்தியங்கள்.

எம்.ஐ.டி. படிக்கிறபோது ஹார்மோனிக்கா, புல்லாங்குழல் போன்றவற்றை ஹாஸ்டல் அறையில் பழகினேன். அவ்வப்போது பாராட்டாக எதிர்பாராத திசைகளிலிருந்து எதிர்பாராத பொருள்கள் அறைக்குள் வந்துவிழும். மனம் தளராமல் ஊதித்தள்ளினேன்.

மெஸ்ஸில் வெள்ளிக்கிழமை திறந்தவெளி டின்னரின்போது போனால் போகிறது என்று "இப்போது ரங்குஸ்கி (இந்தப் பெயரின் பின்னணியில் ஒரு கதை உள்ளது) ஹார்மோனிக்கா வாசிப்பான்" என்று அறிவிப்பார்கள். 'பாபுஜி தீரே சல்னா' என்று வரும் ஓ.பி. நய்யாரின் இந்திப் பாட்டு வாசிப்பேன். "நல்லா வாசிக்கிறே... ஆனா, ஏன் ஒரே பாட்டையே வாசிக்கறே?" (காரணம் அது ஒன்றுதான் தெரியும்). ஹாஸ்டலின் ஆஸ்தான வித்வான் நிலை, எனக்கு சீனியரான முரளி கிருஷ்ணா இண்டஸ்ட்ரியல் டூரிலிருந்து திரும்பி வரும் வரைதான் நீடித்தது. முரளி அக்கார்டியன், புல்லாங்குழல், ஹார்மோனிக்கா எல்லாம் -விதம்வித மாக வாசித்துக்காட்ட, நான் வணங்கி விடை பெற்றேன்.



அதன்பின் படம் வரைவதைத் தொடர்ந்தேன் 'தென்றல் 'என்கிற எங்கள் கீழச் சித்திரை வீதி கையெழுத்துப் பத்திரிகைக்குத் தமிழன்னை, குத்து விளக்கு கொங்கை மடவார் எல்லாம் போட்டுப் பழகியிருந்தேன். கைவிரல்கள் தான் உதைக்கும். அதனால் என் சித்திரப் பெண்கள் அத்தனை பேரும் கைகளைப் பூச்செடிகளின் பின்னால் மறைத்துவைத்திருப்பார்கள். 'தென்றல்' மூன்றாவது இதழோடு நின்றுபோனதும் என் கலையார்வத் துக்கு வடிகால் தேவைப்பட்டது.

செகண்ட் ஹேண்டில் புல்புல்தாரா வாங்கினேன். இந்த வாத்தியத்தை அசப்பில் பார்த்தால் அவசரத்தில் இருக்கும் டைப்ரைட்டர் போல இருக்கும்... இப்போதும் வடநாட்டிலும் பாகிஸ்தானிலும் கவ்வாலியின்போது இதை வாசிக்கிற விற்பன்னர்கள் இருக்கிறார்கள். திருச்சியில் லீவுக்குச் சென்றிருந்த போது ஒரு குருநாதர் கிடைத்தார். 'மகா சுகிர்த ரூபசுந்தரி' என்கிற கிட்டப்பா பாட்டை அட்டகாசமாக வாசிப்பார். மெய்மறக்க வைக்கும். ஆனால், அவரிடத்தில் ஒரே ஒரு சிக்கல்... அவரே வாசித்துக்கொண்டிருப்பார். அதைக் கேட்டு நான் வீட்டில் வாசித்துப் பழக வேண்டுமாம். வீட்டில் என்ன முயன்றாலும் பூனை பிரசவிப்பது போலத்தான் சத்தம் வந்தது. அடிக்கடி கம்பிகள் அறுந்தன. இருந்தும் விடாமுயற்சியாக அதன் பித்தான்களில் குறித்திருக்கும் எண்களில் ஒவ்வொரு பாட்டையும் ஒண்ணு- ஒண்ணு ரெண்டு - மூணு - மூணு - ஒண்ணு - ரெண்டு என்கிற வடிவில் எழுதிவைத்து வாசிப்பேன். அந்த நாட்களில் பிரபலமாக இருந்த

'உன்னழகை கன்னியர்கள் கண்டதினாலே...'

என்கிற ஜிக்கி பாட்டை நாள் பூரா அசுர சாதகம் பண்ணி ஒரு ஷேப்புக்கு கொண்டு வந்தேன். மாடியில் சாதகம் செய்ததாலும், அதிலிருந்து அதிகம் சத்தமெழாததாலும் பாட்டி அதைக் கவனிக்கவில்லை.

ஒரே ஒரு முறை "மாடில பூனை குட்டி போட்டிருக்கா பாரு" என்று பார்த்துவரச் சொன்னாள்.

"பூனை இல்லை பாட்டி... புல்புல்தாரா. நான் வாசிக்கிறது."

"நீ மாடிக்கு படிக்கப் போறேன்னு நினைச்சேன்."

"அது வந்து... படிப்பேன்... அப்பப்ப வாசிப்பேன்."

"ஒண்ணு படி... இல்லை, மோர்சிங் வாசி."

"மோர்சிங் இல்லை... புல்புல்தாரா."

"பேரைப் பாரு! உங்கப்பாவுக்கு லெட்டர் போட்டுர்றேன்... எனக்குக் கவலையா இருக்கு. இன்னிக்கு புல்புல் வாசிப்பே... நாளைக்கு புகையிலை போடுவே... நாளைன்னிக்கு தேவடியா வீட்டுக்குப் போவே."

இது என்ன லாஜிக் என்று புரியவில்லை.

"கூத்தாடியாத்தான் வரப்போறேன்னா ஒரு காரியத்தை உருப்படியா பண்ணு... உங்கப்பா காசைக் கரியாக்காதே."

அதில் நியாயமில்லையெனினும் எனக்கு புல்புல்தாரா வராது என்று ஒரு மாதத்தில் தெரிந்துவிட்டது. 'உன்னழகை'த் தவிர வேறு எந்தப் பாட்டும் வாசிக்க இயலவில்லை. வாத்தியத்தை ஒரு முறை பாட்டி இல்லாதபோது பழைய பேப்பர் காரனை விளித்து விற்றுவிட்டேன். ("வீணை இருக்குதுங்களா...")

முதன் முதலில் சம்பாதிக்க ஆரம்பித்தது டெல்லியில். இன்ஜினீயரிங் படிப்பு முடித்து டெல்லிக்கு ஆல் இண்டியா ரேடியோவில் டிரெய்னியாகப் போனபோது நூற்றைம்பது ரூபாய் ஸ்டைபண்டு கொடுத்தார்கள். ஏராளம். அதில் சவுத் இண்டியா போர்டிங் ஹவுசில் சாப்பாடு. கட்டில் இரண்டுக்கும் எழுபது ரூபாய். மிச்சம் எண்பது ரூபாயை என்ன செய்வது என்று தெரியாமல் கனாட் ப்ளேஸில் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த ஒரு மாண்டலின் வாங்கினேன். ஆல் இண்டியா ரேடியோவின் வாத்ய வ்ருந்தாவில் இருந்த மாண்டலின் மேதை கற்றுத் தருவதாகச் சொன்னார். அவரும் திருச்சி மாஸ்டரைப்

போல் அட்டகாசமாக வாசித்துவிட்டு காணிக்கை வாங்கிக்கொண்டு செல்வார். நான் அவர் போனதும் பிராக்டீஸ் செய்ய வேண்டுமாம். சரிப்பட்டுவரவில்லை. குருநாதரை ஏதோ அற்ப காரணங்கள் சொல்லிக் கழற்றிவிட்டேன்.


நிரந்தர வேலை கிடைத்து சென்னை மீனம்பாக்கத்தில் போஸ்டிங் ஆனபோது ஒரு கித்தார் வாங்கி 'லேர்ன் கித்தார் இன் தர்ட்டி டேஸ்' புத்தகத்தைப் பார்த்துப் பழகினேன். கொக்கிக் கொக்கியாக இங்கிலீஷ் நோட்ஸாகப் போட்டிருந்ததை வைத்து மன்றாடியதில் விரல்கள் வலிக்க... மீண்டும் பழைய சிநேகிதி புல்புலுக்குத் திரும்பினேன். இதனிடையே ஆயில் பெயிண்டிங்கில் கொஞ்ச நாள் இறங்கிப் பார்த்தேன். வீடு பூராலின்ஸீடு ஆயில் வாசனை விரவியிருக்கும். அம்மா இதையெல்லாம் சகித்துக் கொண்டிருந்ததை எண்ணி வியக்கிறேன். சகித்துக் கொண்டது மட்டுமின்றி யார் வந்தாலும், "எங்க ரங்கராஜன் எது எடுத்தாலும் சட்டுனு கத்துண்டுடுவான். ஒரு வாத்தியத்தைப் பாத்த உடனே வாசிப்பான். படம் போடுவான் பாருங்கோ... கண்ல ஒத்திக்கறா மாதிரி இருக்கும்" என்று பெருமைப் பட்டுக்கொள்வாள் அவர்களும் 'க்ளக் க்ளக்' என்று நாக்கில் தகுந்த சத்தமிட்டுப் போதுமான வியப்புடன் என்னைப் பார்ப்பார்கள்.

கல்யாணம் ஆன புதிதில் என் மனைவி என் அத்தனை முயற்சிகளையும் பொறுமையாகக் கவனித்து விட்டு சில மாதங்களுக்குப்பின் ஒரு நாள் ஒரே ஒரு கேள்வி கேட்டாள் - "ஏன் எந்தப் பாட்டையும் முழுசா வாசிக்க மாட்டேங்கறீங்க?" இதை யாரும் அதுவரை குறிப்பிடாததால் எனக்கு போதிசத்துவர் போல ஞானம் பிறந்தது. முழுசாகக் கற்றுக்கொள்ள பொறுமையில்லை எனக்கு. இதில் கொஞ்சம், அதில் கொஞ்சம் என்று ஐந்து நிமிஷத்துக்கு மேல் தங்காத ரெஸ்ட்லஸ்னஸ்தான் என்னை அலைக்கழிக்கிறது.

சினிமா, எழுத்துலகம் இவற்றில் இருக்கும் பலரிடம் இந்த மாதிரியான false Starts இருந்ததைப் பார்க்கிறேன். படம் போடுவதிலோ அல்லது த்ரீஃபேஸ் மோட்டார் ரிப்பேரிலோ அல்லது ரேடியோ ரிப்பேரிலோ துவங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய உண்மையான திறமைகள் வெளிப்பட ஒரு சாதனம் கிடைக்கும் வரை பலவற்றையும் முயன்று பார்க்கிறார்கள்.

நானும் இந்தப் பரிசோதனைகள் எல்லாம் முடிந்தபின் என் ஆரம்பக் காதலான எழுத்தார்வத்துக்குத் திரும்பினேன்... முதல் சிறுகதை, முதல்

தொடர்கதை, முதல் சினிமாக் கதை, முதல் நாடகம், முதல் திரைக் கதை, முதல் தொலைக்காட்சித் தொடர், விஞ்ஞானக் கதை என்று பல விதங்களில் விரியத்துவங்கிவிட்டேன். நான் எழுதியவைகளுக்காக என் கையை முத்தமிட்டார்கள்... வெட்ட வந்தார்கள். எதை எழுதினாலும் ஏதோ ஒரு விதத்தில் ஏதோ சில மனங்களைப் பாதித்து விட்டேன். முப்பத்தேழு வருஷ எழுத்துக்குப் பிறகு இப்போது மெரீனாவில் நடக்கும்போது முன்பின் தெரியாதவர்கள் என்னைப் பார்த்து புன்னகைக்கிறார்கள். அவர்கள் வாழ்வை கொஞ்ச நேரமாவது சந்தோஷப்படுத்தியிருக்கிறேன் என்று தோன்றுகிறது. இது தற்பெருமைக் கட்டுரையல்ல. என் பயணத்தை யோசிக்கும்போது ஆதாரமான கேள்வி ஒன்று மிஞ்சுகிறது. ஆங்கிலத்தில் இதை Nature or Nurture என்பார்கள். எழுத்துத் திறமை பிறப்பால் வருகிறதா, வளர்ப்பால் வருகிறதா...? என் உதாரணத்தில் தாய் - தந்தையர், முன்னோர் யாரிடமும் கலையார்வம் இல்லை. என் தாத்தா சிங்கமையங்கார் சினிமா எடுத்திருக்கிறார். அதை ஆர்வம் என்று சொல்லலாமா... தெரியவில்லை.





வளர்ந்த விதத்திலும் தனிப்பட்ட ஊக்கம் யாரும் தரவில்லை. பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லவில்லை. எந்த எழுத்தாளருக்கும் வேஷ்டி துவைத்துப் போடவில்லை. முதல் கதை வெளிவந்தபோது அப்பா "நீ எழுதுவியா என்ன..." என்று கேட்டார். ஒரு எழுத்தாளன் எப்படி உருவாகிறான் என்பது எனக்கு இன்னமும் புரியாத புதிராகத்தான் இருக்கிறது. 'தோரணத்து மாவிலைகள்' என்கிற கட்டுரையில் இதை நான் ஆழ்ந்து ஆராய்ந்திருக்கிறேன். என் எழுத்தை உருவாக்க தற்செயலாகச் சில காரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. பள்ளியில் மற்ற பிராமண மாணவர்கள் போல் சம்ஸ்கிருதம் எடுத்துக்கொள்ளாமல் தமிழ் எடுத்துக்கொண்டது (அதுவும் சம்ஸ்கிருத வாத்தியாரைக் கண்டால் பயமாக இருந்ததால்). தேசிகர், சேது மாணிக்கம், ஐயம்பெருமாள் கோனார் போன்ற சிறந்த தமிழ் ஆசிரியர்கள், கல்லூரியில் ஆங்கில ஆசிரியர் ஜோசப் சின்னப்பா, என் அண்ணனின் கவிதைப் பற்று, சீரங்கத்தின் பிரபந்த சூழ்நிலை, விளையாட்டில் சகாக்களால் ஒதுக்கப்பட்ட தனிமை என்று பல காரணங்களை இப்போது பின்னோக்கில் சொல்ல முடிகிறது... ஆனால், இந்த நிமிஷத்தில், இந்த கணத்தில் இருந்து நான் எழுத்தாளனானேன் என்று விரல் வைத்துச் சொல்ல முடியவில்லை. இதே சூழ்நிலையில் வளர்ந்த என் பள்ளி, வகுப்புத் தோழர்கள் எவரும் எழுத்தாளனாக மாறவில்லை. ஒருவன் ரயில்வே போர்டு மெம்பரானான். ஒருவன் பொருளாதார விரிவுரையாளனானான். மற்றொருவன் மளிகைக்கடை வைத்தான்.

இதனால்தான் பிறப்பா சூழ்நிலையா என்கிற கேள்விக்குப் பதிலாக

நவீன விஞ்ஞானம் இப்போது ஜெனட்டிக் காரணங்களைக் கூறுகிறது.

# வேட்டி கஷ்டங்கள்!



'கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன்' திரைப்படத்தின் ஒலிநாடா வெளியீட்டு விழாவில் படத்துடன் சம்பந்தப்பட்டவர்களை ராஜீவ்மேனன் வேட்டி-சட்டையில் வருமாறு கேட்டுக் கொண்டிருந்தார். பல வருடங்களுக்குப் பிறகு ஒரு பொதுநிகழ்ச்சியில் வேட்டியில் வரும் அனுபவம் சற்று அபத்திரமானதாக இருந்தது. படியில் தடுக்கி மேடையில் உள்ளவர்களை அநாவசியமாக விழுந்து சேவிக்கும் சாத்தியம் இருந்தது.

நினைத்தாலே வியப்பாக இருக்கிறது... இடுப்பு என்கிற சமாசாரமே இல்லாவிட்டாலும் கல்லூரிப் பருவம் வரை வேட்டி தான் அணிந்திருக்கிறேன். ஒரு முறை கூட நழுவியதில்லை. இன்ஜினீயரிங் சேர்ந்ததும்தான் முதல் பாண்ட். அதுவும் காக்கி பாண்ட் - வொர்க் ஷாப்புக்காக. எம்.ஐ.டி-யில் 'சைபர்னெட்டிக்ஸ்' பற்றிய செமினாரில் கூட வேட்டி கட்டிக்கொண்டுதான் பிரசங்கித்த ஞாபகம். வேட்டி அப்போதெல்லாம் சௌகரியமான, எளிய உடை, கேரளா பாணி டப்பா கட்டுக்கும் அமெரிக்காவில் பிரபலமாக இருக்கும் பெர்முடாஸ்க்கும் அதிக வித்தியாசமில்லை.



தமிழ்நாட்டில் லுங்கி அதிகம் புழங்குகிறது. வெள்ளை வேட்டி அருகி வருகிறது. மியான்மார், தாய்லாந்து போன்ற கிழக்காசிய நாடுகளில் பல உடைகள் வேட்டி போல் இருக்கின்றன. சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானப் பணிப்பெண்கள் வேட்டி மாதிரி பூப் போட்ட ஸ்கர்ட் அணிந்திருப்பார்கள். அவ்வப்போது பிரிந்து பளிச்சிடும் வாழைத்தண்டுக் கால்கள் 'குருவி'களைக் கிறங்கவைக்கும்.

பிராமணக் கல்யாணங்களில் மாப்பிள்ளை வேட்டி கட்டி ஆகவேண்டும்... அதுவும் பஞ்சகச்சம். பஞ்சகச்சம் என்றால் ஐந்து இடத்தில் செருகுவது என்று அர்த்தம். எந்த ஐந்து என்று வாத்தியாருக்கே சரியாகத் தெரியாது. ஏதோ ஏற்ற இறக்கமாக முடித்து விசிறி செருகி ஒரு சைடு தூக்கலாகவும் மற்றது இறக்கமாகவும்

கட்டிவிடுவார். கல்யாண மாப்பிள்ளையைப் பண்ணுகிற பல இம்சைகளில் இதுவும் ஒன்று. கோமாளி மாதிரி வேட்டி கட்டிவிட்டு கையில் குடை, விசிறி, காலுக்குப் புதுச் செருப்பு, கண்ணுக்கு மை, நெற்றியிலும் கன்னத்திலும் சாந்துப் பொட்டு, கழுத்தில் சந்தனம்... இந்த மாதிரியான அவமானங்களையெல்லாம் தாங்கிக்கொள்வதன் ஒரே காரணம் அவ்வப்போது கிடைக்கும் அந்த மென்மையான கரத்தின் (பலருக்கு முதல்) ஸ்பரிச சந்தோஷம்தான்.

வேட்டி எப்போதிலிருந்து உடுத்த ஆரம்பித்தார்கள் என்று யாராவது ரிஸர்ச் செய்தால் குறைந்தபட்சம் எம்ஃபில் வாங்கலாம்.

'வேட்டியும் தாழ்வடமும் வெண்ணீறும்' என்று 'ஒழிவிலொடுக்கம்' என்னும் நூலில்தான் முதல் வேட்டி வருகிறது என எண்ணுகிறேன். நீண்ட துணியை வெட்டிக் கட்டிக் கொள்வதால் வேட்டி என்று பெயர் வந்ததாம். வேட்டிதம் என்றால் சூழ்வது, மடிப்பு என்று பழைய இலக்கியச் சொல்லகராதி குறிப்பிடுகிறது. கலிங்கம் என்ற சொல் பொதுவாக ஆடை என்கிற பொருளில் சங்கப் பாடல்களில் வருகிறது (கலிங்கம் பகர்ரநரும்-மதுரைக் காஞ்சி). பட்டினப் பாலையில் பட்டு வருகிறது. பருத்தி நெசவும் பழைய காலத்திலிருந்திருக்கிறது.

விலங்குகள் - எலியின் முடியைக் கூட நெய்திருக்கிறார்கள் ('பை மட்டும் எலிமுடில வச்சுருங்க'). துணி நெய்பவர்கள் காருகர் இருக்கை என்று தனித் தெருவில் வாழ்ந்திருக்கிறார்கள். கைம் பெண்களை ஏனோ பருத்திப் பெண்டிர் என்று குறிப்பிட்டார்கள். குளத்தில் துணி மிதந்து சென்றுவிட, 'இக்கலிங்கம் போனாலென்ன மாமதுரைச் சொக்கலிங்கம் உண்டே துணை' என்று இரட்டைப் புலவர்கள் ஒரு வெண்பாவை முடித்த தனிப்பாடல் உள்ளது.

இன்று வேட்டி அன்றாட அந்தஸ்தை இழந்துவிட்டது. யாராவது எலாஸ்டிக் கரை வைத்து வெலக்ரோ பொருத்தினால் அடிக்கடி நழுவிடும் அபாயத்தை நீக்கலாம். வேட்டி கட்டிக்கொண்டு ஓடுவது கஷ்டம், நவீன வாழ்க்கையில் பல தருணங்களில் ஓட வேண்டி இருக்கிறது - பஸ் துரத்த டிரெய்னில் தொத்த பஸ்களைக் கொளுத்துபவர்களிடம் இருந்து தப்பிக்க, கண்ணீர்ப் புகை, தடியடி, கல்வீச்சு, மதக் கலவரங்கள் எல்லாவற்றிலும் தப்ப ஓட்டத் தேவைகள் அதிகமிருப்பதால், நாளடைவில் பாண்ட்கூட அடிக்கடி உரசுவதால் வழக்கொழிந்து பட்டா பட்டி டிராயர்தான் வசதியாக இருக்கும் என்பது என் தாழ்மையான கருத்து. புரோட்டீன் குறைவினால் குச்சிக் கால்கள்

தெரிந்தால் என்ன... உயிர் முக்கியமில்லையா?

பெண்களிடம் புடவை கட்டும் பழக்கம் நகரங்களில் குறைந்து வருகிறது. இன்று சென்னையில் ஸ்கூட்டரின் பின்னால் செல்லும் மனைவிகள் பட்டுப்புடவை அணிந்திருந்தால் நிச்சயம் முகூர்த்த நாள். ஒரு ஊரில் பெண்கள் பாவாடை தாவணி அணிகிறார்கள் என்றால் அவ்வூரில் மக்கள்தொகையும் நாகரிகத் தாக்கமும் குறைவு என்றும் அனுமானிக்க முடிகிறது.

'வடாம் வறுக்கும்போதும் கடுகு தாளித்துக் கொட்டும்போதும் கூலிங்கிளாஸ் அணியவும்... கண்ணுக்குப் பாதுகாப்பு' போன்ற பயனுள்ள குறிப்புக்கள் கொண்ட பெண்கள் பத்திரிகை ஒன்று புடவை கட்டுவதற்கும் சுடிதார் அணிவதற்கும் ஆகிற நேரத்தை ஒப்பிட்டு 'பின்னதில் ஐந்து நிமிஷம் மிச்சமாகிறது... இதனால் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆண்டுக்கு முப்பத்தாறு மணி நேரம் கிடைக்கிறது' என்று புள்ளி விவரம் கொடுத்திருந்தது. அந்த உடைகளைத் தேர்ந்தெடுப்பதிலும் வாங்குவதிலும் அவர்கள் வருடத்துக்கு நாற்பத்துநான்கு மணி நேரம் செலவழிக்கிறார்கள் என்கிற புள்ளி விவரம் அந்தப்பத்திரிகையில் இல்லை.



'ஸ்னேகா'வின் பத்தாவது ஆண்டு நிறைவை யொட்டி நான்கு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுப் பேசினேன். 'சுயம்' (வத்ஸலா), 'ஒரு கிராமத்துப் பெண்ணின் தலைப் பிரசவம்' (இரா. முருகன்), 'நதியின் கால்கள்' (நாகூர் ரூமி), 'மஹா வாக்கியம்' (பிரம்மராஜன்) நான்கு தொகுப்புகளும் தமிழில் புதுக் கவிதையின் தற்காலப் போக்கையும் வீச்சையும் அறிந்து கொள்ள உதாரணங்கள். நாகூர் ரூமியின் இந்தக் கவிதையில் மூன்றாவது வரி தேவையில்லை என்று பட்டது-

'பஸ்ஸில் போனபோது
சாலையோரம் இரண்டு செம்பாறைகள்
ஒன்றையொன்று கேலிசெய்து கொண்டன
ஒன்று உறுதியளித்தது
இயேசு சீக்கிரம் வருகிறார்

இன்னொன்று சொன்னது
***hmt*** வரட்ச்சுகள்
உங்கள் நேரத்தைச்
சரியாகக் காட்டும்'

பிரம்மராஜன் வகைக் கவிதைகளில் கவிஞரின் மனபிம்பமும் வாசிப்பவரின் பிரதிமன பிம்பமும் ஒத்துப் போகவேண்டிய கட்டாயமில்லை. ஒரு சர்ரியலிஸ்ட் சித்திரத்தின் வண்ணங்களைப் போல வரிகளை அமைக்கிறார்கள்.

கடல் உறங்கிய காலப் பொழுதினை
சாமம் என்று சொல்வது அர்த்தம் திரிந்ததாகிவிடும்
உறங்க வைத்தபோது
உலர்த்தாத அரக்கிக் கூந்தலுடன்
குறுக்காக வைத்த பூக்கள் அச்சிட்ட தலையணை ஒரு முலை மறைக்க
மின்னி மின்னி எரியும் குழல் விளக்கின் ஒளியில்
மல்லாந்து கொண்டிருக்கிறது
குல் கொள்ளாக் கடல் குதிரைகள்

இம்மாதிரி கவிதைகள் முழுவதும் புரியவேண்டும் என்பதும் அவசியமில்லை.

மாறாக சேலம் ஒவியர்- எழுத்தாளர் மன்றத்தின் முதல் வெளியீடான 'இயல்பு' என்னும் கவிதைத் தொகுப்பில் முன்னுரையில் தமிழ்நாடன் குறிப்பிடும் 'அனுபவ வெளிப்பாட்டு நேர்மை' பொன் குமாரின் பல கவிதைகளில் இருக்கிறது.

வண்ண விளக்குகள்
மின்னும் நகைகள்
அர்த்த ஜாமத்தில்
உறக்கம் கெடுக்கும்
ஊர்வலம் வருகிறாள் அம்மன்
பக்தியுடன் கும்பிட்டாலும்
ஆசையுடன் மனம்
முன்னால் ஆடிச்செல்லும்
கரகாட்டக்காரியின் பின்னே.

# எல்லாம் தமிழ்!




**ஸ்ரீ** ரங்கம் உயர்நிலைப் பள்ளியில் எனக்குப் பாடங்கள் தமிழில்தான் சொல்லிக் கொடுக்கப்பட்டன. சௌரிராஜ ஐயங்கார் ஆங்கிலத்தையும் தமிழில்தான் போதித்தார். ஆங்கிலத்தில் சில நல்ல வார்த்தைகளும் தமிழில் பல கெட்ட வார்த்தைகளும் அவரிடமிருந்து தான் கற்றேன். 'நான்-டீடெய்ல்டு' என்று எங்களுக்கு எஸ்.எஸ்.எல்.ஸி-யில் அலெக்ஸாண்டர் டுமாவின் 'த்ரீ மஸ்கெட்டியர்'ஸின் சுருக்க வடிவம் இருந்தது. அதில் எல்லாம் பிரெஞ்சு பெயர்கள். D'Artagnan என்பது வந்தியத் தேவன் மாதிரி ஒரு வீரன். சௌரிராஜ ஐயங்கார் டீஆர்டக்னன் என்றுதான் உச்சரிப்பார். ரொம்ப வருஷம் கழித்துத்தான் அந்தப் பெயரின் சரியான உச்சரிப்பு 'டார்ட்டாக்ஞான்' என்று தெரிந்தது. அதில் Milady - மிலடி என்று கல்கியின் நந்தினியைப் போல ஒரு பெண் பாத்திரம் உண்டு. வகுப்பில் ஒவ்வொருவராக எழுந்து வாசிக்க வேண்டும். என் முறை வந்தபோது அவளை மை லேடி என்று வாசித்துவிட "இந்த வயசில உனக்கு லேடி கேட்கிறதா?" என்று பெஞ்சு மேல் நிற்கச் சொன்னார். கெமிஸ்ட்ரியை அப்ஜ ஹரிதக அமிலம், கந்தகிகஜம், சஜம் என்றெல்லாம்தான் பயின்றோம். அதே போல்தான் பிஸிக்ஸ், கணிதம். இருந்தாலும் விளக்கம் தமிழில் இருந்ததால், பிற்காலத்தில் நாங்கள் சோடை போய்விடவில்லை. இன்று க்வாண்டம் இயற்பியலின் சிக்கலான தத்துவங்களைப் புரிந்து கொள்வது என் ஆரம்ப கால விஞ்ஞானத்தை தமிழில் படித்து அஸ்திவாரம் சரியாக இருந்ததால் சுலபமாகவே உள்ளது. தமிழில் கல்வி கற்பது பற்றி என்னிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பன்னிரண்டு:

**1.** தமிழில் கற்பதால் மாணவர்களின் வேலை வாய்ப்புகளைக் குறைக்கிறோமா**?**

இல்லை. வேலைவாய்ப்புகளுக்கும் தாய்மொழியில் கற்பதற்கும்

சம்பந்தமில்லை.

**2.** எப்படிச் சொல்கிறீர்கள்**?**

நான் அடிக்கடி சொல்லும் உதாரணம் இது - அமெரிக்கா சென்றபோது, என்னுடன் பயணித்தவர்களில் பலர் சீன இளைஞர்கள். அனைவரும் கலிஃபோர்னியா சிலிக்கன் பள்ளத்தாக்கில் கணிப்பொறி மென்பொருள் எழுதச் சென்று கொண்டிருந்தார்கள். பேச முயன்றதில் அவர்களுக்குத் தெரிந்த இரண்டே ஆங்கில வார்த்தைகள் 'சாஃப்ட்வேர், ஓகே' அவ்வளவுதான். மற்றதெல்லாம் ஐயாயிரம் பட எழுத்துக்கள் கொண்ட சீன மொழியில் கற்றவர்கள். தாய்மொழியில் பயின்றது வேலைவாய்ப்பை பாதிக்கவில்லை.

**3.** பின் ஏன் இந்த பயம்**,** எதிர்ப்புக் குரல்கள்**,** கோர்ட்**,** கேஸ் எல்லாம்**?**

தேவையற்ற பயம். தமிழில் கற்பதால் மாணவர்களுக்கு அமெரிக்கா செல்லும் வாய்ப்பு போய்விடாது. அவர்கள் கேட்பதெல்லாம் (TOEFL) டோஃபெல். அதாவது புரிந்துகொள்ளும் அளவுக்கு ஆங்கில பரிச்சயம் இருக்கிறதா என்பதைத் தான் சோதிக்கிறார்கள். வேதியியலும் இயற்பியலும் கணிதமும் ஆங்கிலத்தில்தான் படித்தாக வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துவது இல்லை.

**4.** ஆங்கிலம் மூலம் கற்பதால் என்ன சங்கடம்**?**

மூன்று சங்கடங்கள். ஆசிரியருடைய ஆங்கிலப் புலமையின் குறைகள், மாணவனின் குறைகள், விளக்கங்களை பில்ஹணன் திரை போல் ஆங்கிலத்தின் வழியே வாங்கிக்கொண்டு மனசில் தமிழாக்கம் செய்து புரிந்துகொள்ள வேண்டிய தேவை என்று இந்தப் பாதையில் மூன்று வழுக்கல்கள் இருக்கின்றன. 'cool as cucumber' என்று ஒருவனை வர்ணித்தால், வெள்ளரிக்காய் போல ஜில் என்று இருப்பான் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளாமல், 'அலட்டிக்கவே மாட்டான்' என்று கலாசார மாற்றம் செய்துகொள்ள வேண்டிய சிக்கல் பல சமயம் புரிதலை பாதித்துவிடும்.

**5.** ஜி.ஆர்.ஈ. போன்றவற்றை எப்படி பாஸ் செய்வதாம்**?**

அறிவியலின் ஆதார கோட்பாடுகள் உங்களுக்குச் சரியாகப்

புரிந்திருந்தால் ஜி.ஆர்.ஈ மற்றும் மருத்துவ அனுமதிக் கேள்விகளுக்கும் சுலபமாக பதிலளிக்க குறைந்தபட்ச ஆங்கிலம் போதும். ஆதார விளக்கங்கள் தமிழில் கற்றால்தான் தெளிவு வரும். அல்ஜிப்ரா, கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ் போன்றவற்றின் குறியீடுகளை (symbols) மாற்றக்கூடாது. எல்லாமே தமிழில் வேண்டும் என்கிற அடாவடிக்காரர்களிடமிருந்து தமிழைக் காப்பாற்ற வேண்டும்.

**6.** பேசிக், ஸி, ஜாவா போன்ற கணிமொழிகள்**?**

அவற்றைத் தாய்மொழிப்படுத்துவது முட்டாள்தனம். உலகில் யாரும் செய்வதில்லை.

**7.** ஆதார விளக்கம் என்றால் என்ன**?** கொஞ்சம் விளக்குங்களேன்**.**

ஓர் உதாரணம் பார்ப்போம் 'சோஷியாலஜி' - சமூகவியல் பாடப் புத்தகம் ஒன்றை எடுத்துக்கொள்கிறேன். அதில் ஒரு பாடத்தின் முதல் வரி இவ்வாறு இருக்கிறது.

"In the foregoing chapters we have stated in various ways that the individual looks to others for cues that enable him to structure and organize his environment to give it meaning'



இப்படிப் படிப்பது புரியுமா... அல்லது,

'முந்தின பாடங்களில் நாம் பலவிதமாகச் சொன்னது தனிமனிதன் தன் சூழ்நிலையை அமைக்கவும் ஒழுங்குபடுத்தவும் அதற்கு அர்த்தம் தரவும் மற்றவர் உதவியை எதிர்பார்க்கிறான் என்பதே' - இப்படிப் படிப்பது புரியுமா... யோசித்துப் பாருங்கள்.

**8.** தமிழில் நல்ல பாட புத்தகங்கள் இல்லையே?

அவை வந்தே தீரும். பாட புத்தகங்கள் எழுதுவதற்கு தூண்டுதல் இதுவரை இல்லாததுதான் காரணம். கலைச்சொற்களும் அப்படியே.

**9.** மற்ற மாநிலத்தவர்கள் இங்கு வந்தால் என்ன ஆவது?

தமிழ்நாட்டுக்கு வந்திருப்பதால் தமிழில் படிக்க வேண்டும். இயலாது என்றால் அவர்கள் மாநிலத்தில் போய் படிக்க வேண்டும்.

**10.** இது நியாயமா... தேசிய மொழி என்று இந்தியைப் பற்றி...?

எல்லா மொழிகளும் தேசிய மொழிகளே. ஆந்திரப் பிரதேசத்தின் பரப்பு 2,75,000 சதுர கிலோமீட்டர். பிரிட்டன் 2,45,000 சதுர கிலோமீட்டர். தமிழ்நாடு பல ஐரோப்பிய நாடுகளின் அளவுக்கு விஸ்தீரணம் உள்ளது.

**11.** ஆங்கிலமே வேண்டாமா?

அப்படிச் சொல்லவில்லை. அதன் இலக்கியத்துக்கும் சர்வதேசத் தன்மைக்கும் மற்றொரு மொழியாகக் கற்றுக்கொள்ளலாம் - பிரெஞ்சு போல, ஜெர்மன் போல.

**12.** இதில் பலர் உங்களுடன் கருத்து வேறு படுகிறார்களே?

அவர்களுக்காக ஸ்ரீரங்கநாதனைப் பிரார்த்திப்போம்.

டெல்லியில் ஊருக்கு வெளியே ஒரு சினிப்ளெக்ஸ் கட்டியிருக்கிறார்களாம். மிகவும் பிரபலமாகி ஜனங்கள் பிக்னிக் போலப் போய் சினிமா கொண்டாடிவிட்டு வருகிறார்களாம். அந்த மாதிரி சினிப்ளெக்ஸ் ஒன்றை மகாபலிபுரம் ரோட்டில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் . இந்த வருஷம் முடிந்துவிடும். சினிப்ளெக்ஸ் என்பது டிரைவ்-இன் போல அல்ல. அமெரிக்க மால் போல ஒரே வளாகத்தில் சிறிதும் பெரிதுமாக ஏழெட்டு திரை அரங்கங்கள் – டிஜிட்டல் ப்ரொஜெக்ஷன், உணவகங்கள், ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்... டிக்கெட் வாங்கி எந்தப் படத்தில் வேண்டுமானாலும் போய் உட்காரலாம். வாகனங்களை நிறுத்தும் பிரச்னை இல்லை. நல்ல சவுண்டு, நவீன ப்ரொஜெக்டர்கள், கம்ப்யூட்டர்கள், இன்டர்நெட்

மேய்ச்சல், நல்ல சினிமாக்கள்... இப்படி ஒரு சந்தோஷமான குடும்ப அனுபவமாகச் செய்வதால் திருட்டு வி.சி.டி-யினாலும் டெலிவிஷனாலும் பாதிக்கப்பட்ட சினிமாவுக்குப் புத்துயிர் கொடுக்க இது ஒன்றுதான் வழி. அமெரிக்காவில் தியேட்டர் சினிமா அனுபவங்களை டெலிவிஷனிலிருந்து மாறுபட்டதாக்கித்தான் கேபிள் தாக்கத்தைச் சமாளித்திருக்கிறார்கள். அங்கு திருட்டு விடியோ கிடையாது.

இந்த முயற்சிகளுக்கு அரசு ஆதரவு வேண்டும். மேலும் நல்ல படங்கள் எடுக்க தயாரிப்பாளர்கள் தைரியம் பெறவேண்டும். 'Life is beautiful' இத்தாலிய மொழியில் எடுத்து சப்-டைட்டில் கொடுத்து வெளியிடப்பட்டாலும் ஆதார உணர்ச்சியான தந்தை மகனிடமிருந்து தங்கள் தலைமுறையின் கோரங்களைக் கடத்தாமல் மறைப்பது இதனுடன் எந்த நாட்டிலும் ஒன்றிப்போக முடிந்தது. இது போன்ற படங்கள் நம்மாலும் எடுக்க முடியும். 'அஞ்சு சாங், மூணு ஃபைட், தாலி, மதர் சென்டிமெண்ட் வெளிநாட்டு படப்பிடிப்பு, ஸி.ஜி. போன்ற அரைத்த புளித்த மாவுகளில் மிகச் சிறந்த திறமையாளர்களைக் கரைத்துக் கொண்டிருக்கிறோம். "இது ஒரு விஷஜுரம்... ராத்திரி போனால்தான் சொல்ல முடியும்" என்று கண்ணாடி கழற்றி விட்டு விலகும் டாக்டர்களுக்குப் பதிலாக தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள் நமது நகரங்களில் சந்தோஷம் நிறைந்த சினிப்ளெக்ஸ்கள் கட்ட முன்வரலாம். வருவார்கள்.

# மார்க்கெட்டில் மரண தேவதை!



**வி**க்ரம் சேத்தின் 'தி கோல்டன் கேட்' (The Golden Gate) என்னும் நாவல் முன்னுரை, சமர்ப்பணம் உள்ளிட்ட எல்லாமே 'சானட்' (Sonnet) என்னும் கவிதை வடிவத்தில் எழுதப்பட்டது. ஒவ்வொரு செய்யுளும் பதினான்கு வரிகள் கொண்டது. சில அடிகள் அடுத்தடுத்து 'ரைம்' பண்ண வேண்டும். சில ஒன்றுவிட்டு ஒன்று. சில நான்கு வரி தள்ளி. உதாரணம் - இதை எளிதாக விளக்கும் நாவலின் முதல் செய்யுள் இது.

To make a start more swift than weighty,
Hail Muse. Dear reader. once upon
A time, say, circa 1980,
There lived a man. His name was John.
Successful in his field though only
Twenty-six, respected, lonely
One evening as he walked across
Golden Gate Park, the ill-judged toss
Of a red frisbee almost brained him.
He thought, "If I died, who'd be sad?
Who'd weep? Who'd gloat? Who'd be glad?
Would any body?" As it pained him,
He turned from his dispiriting theme
To ruminations less extreme.

கடைசி சீர்களின் எதுகை அமைப்பையும் சரளத்தையும் நீங்கள் கவனித்திருக்கலாம். முழு நாவலையும் இது போன்ற சுமார் அறுநூறு சானட்களில் எழுதியிருக்கிறார் விக்ரம் சேத். ஷேக்ஸ்பியருக்குப் பின் இத்தனை சானட்டுகள் எழுதி சாதித்திருப்பது ஓர் இந்தியர் என்பதில்

பெருமைப்பட வேண்டிய விஷயம் - இவருடைய திறமையை மேல்நாட்டு விமரிசகர்கள் மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்கள். ஒரு மொழியில் நன்றாகத் தேர்ந்தவனுக்குக் கவிதை வடிவம் தடையல்ல. தமிழில் சானட் வடிவத்தை பரிதிமாற்கலைஞர் முயன்றார். பாரதிதாசன் 'பாண்டியன் பரிசு', 'குடும்ப விளக்கு' போன்றவற்றை விருத்தத்தில் சொல்லியிருக்கிறார். பாரதியின் குயில் பாட்டும் பாஞ்சாலி சபதமும் இந்த வகையில் சேரும். இந்த நாட்களில் யாராவது ஒருவர் ஒரு முழு நாவலை எண் சீர் விருத்தத்தில் எழுதும் நாளை எதிர் பார்த்திருக்கிறேன். யாரும் முன்வரவில்லையென்றால், நானே-

அனிதாவைக் கல்யாணம்
செய்து வைக்க
அவள் தந்தை சொக்கலிங்கம்
தீர்மா னித்தார்
இனிதாமதம் செய்ய இஷ்டம் இல்லை
இருபத்தாறுனக்கு எழுபதெனக்கு
வனிதாவும் உனக்கடுத்துக் காத்திருக்காள்
வாசுகியும் வயசுக்கு வந்துவிட்டாள்
மனிதாபிமானம் மரியாதை ரெண்டுமுள
மாப்பிள்ளை பாத்திருக்கேன் அமெரிக்காவில்

என்று ஆரம்பித்துவிடுவேன்.

கவிஞர்களுக்கு அன்பு கலந்த எச்சரிக்கை... நான், மரபுக் கவிதை விசுவாசி. பல கவிஞர்கள் மரபு தெரிந்து, பின் புதுக் கவிதைகளுக்குப் போனதற்கு மரபில் பாசாங்கில்லாமல் எழுதுவது கஷ்டம் என்கிற ஒரே காரணம்தான். பாசாங்கும் மிகை வார்த்தைகளும் இன்றி மரபு எழுதுவது மிகப் பெரிய சவாலாக எனக்குத் தோன்றுகிறது. அதற்குத் தமிழறிவு, வார்த்தை வீச்சு எல்லாம் வேண்டும். பாரதி, பாரதிதாசனுக்குப் பின் கண்ணதாசன், சுரதா, தமிழ்ஒளி, குலோத்துங்கன் போன்றவர்களிடம் அந்தச் சரளத்தைப் பார்க்கிறேன். மரபைத் தெரிந்துகொள்ளாமல் புதுக்கவிதை எழுதக் கூடாது என்று தமிழக அரசு ஒரு அவசரச் பிறப்பிக்க வேண்டும் - மரபுக் கவிதை எழுதுவது உரைநடை எழுத்தாளர்களுக்கும் நல்ல பயிற்சி. சொற்சிக்கனமும் ஓசை நயமும் தொனியும் கதையில் வரும் ஒரு எல்லைக்கும் சில விதிகளுக்கும் உட்பட்டு கால்பந்து ஆடுவது போலத் தான் இது . மைதானத்துக்கு உள்ளேயே எத்தனை திறமையைக் காட்டுகிறார்கள்... சங்க பாடல்கள்

அனைத்தும் சிக்கலான திணை, துறை மரபுகளுக்கு உட்பட்டன. இருந்தும் உலக இலக்கியத்தில் வைக்கும் வரிகளை எழுதினார்கள். 'எத்திசை செலினும் அத்திசை சோறே' என்கிற ஔவையார் வரி இன்னும் ஞாபகம் இருப்பதற்குக் காரணம், அதன் கருத்து மட்டுமல்ல... எதுகையும் தான்.



மரபுக் கவிதை செத்துவிட்டது என்று சொல்பவர்களுக்கெல்லாம் என் ஒரெழுத்து பதில் - "ஹ!"

மரபுக் கவிதைபோல, நான் ஒரு ரேடியோ பிரியன். கர்னாடக சங்கீதம் கேட்பதற்கு அதைவிடச் சிறந்த ஊடகம் எதுவுமில்லை. ஏன்... சில நல்ல சினிமாப் பாடல்களையும் துல்லியமாக வலிப்பு நடனத்தின் கவனக் கலைப்பு இல்லாமல் ரசிக்க முடிகிறது. உதாரணம் - நித்யஸ்ரீயின் 'சௌக்கியமா?'. மேலும் ஜானகி வெங்கட், சித்ரா கௌதம் போன்ற ரேடியோ அறிவிப்பாளர்களின் குரலும் உச்சரிப்பும் சிறப்பாகவே இருக்கின்றன.



ஒரு பக்கக் கதை என்று என்ன என்னவோ எழுதுகிறார்கள். இதைவிட சுவாரஸ்யமான கதை கிடைப்பது அரிது.

ஜெஃப்ரி ஆர்ச்சரின் புதிய சிறுகதைத் தொகுப்பில் இதைக் கொடுத்திருக்கிறார். 'மரணம் பேசுகிறது' என்ற தலைப்பு. அராபிக்கிலிருந்து மொழி பெயர்த்தது. இதன் ஆதி கர்த்தா யாரென்று தெரியவில்லை. சாமர்செட் மாம், ஜான் ஓ ஹரா போன்றவர்களும் இந்தக் கதையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கதை இதுதான்:

பாக்தாத்தில் ஒரு வியாபாரி, தன் வேலைக்காரனை மார்க்கெட்டுக்குச் சரக்கு வாங்கிவர அனுப்பினான். போனவன், சிறிது நேரத்தில் வெளிறிய முகத்துட னும் நடுங்கும் கைகளுடனும் திரும்பி வந்து விட்டான். 'எஜமானே, மார்க்கெட்டுக்குச் சென்றபோது கூட்டத்தில் ஒரு பெண், என்மேல் இடித்தாள். திரும்பிப் பார்த்தால்... அது மரண தேவதை. என்னைப் பயப்படுத்தும் சைகை செய்தாள். உங்கள் குதிரையை உடனே கொடுங்கள். நான் என் விதியில் இருந்து தப்பிக்க, இந்தக் கணமே நகரத்தை விட்டு சமாராவுக்கு ஓடிப் போய்விடுகிறேன்' என்றான். வியாபாரி தன் குதிரையை அவனுக்குக் கொடுக்க, வேலைக்காரன் பாய்ந்து ஏறிக்கொண்டு, குதிரையை இரண்டு குதிகால்களாலும் தூண்டி விரட்டித் தலைதெறிக்க

சமாராவை நோக்கிச் சென்றுவிட்டான். அதன் பின் வியாபாரி மார்க்கெட்டுக்கு வந்தான். அங்கே கூட்டத்தில் என்னைப் பார்த்தான். 'இன்று காலை என் வேலைக்காரன் வந்தபோது, ஏன் பயமுறுத்துவது போல சைகை காட்டினாய்...?' என்று கேட்டான். அது பயமுறுத்தும் சைகை இல்லை... ஆச்சரியம். அவனை நான் பாக்தாத்தில் பார்த்து ஆச்சரியப்பட்டேன். நான் அவனைச் சந்திக்க வேண்டியது சமாராவில் அல்லவா..?'

'இந்திய அரசு பணிக்கு மட்டும்' என்று மகுடமிட்டு, பழுப்பாக ஒரு கடிதம் வந்தது. 'தமிழ் இலக்கிய சங்கப் பலகை குறள் பீடத்தில் பொதுக் குழுவில் தாங்கள் அமர்த்தப்பட்டுள்ளீர்கள்' என்பதை அன்புடன் தெரிவிக்கும் கடிதம். முனைவர் ச. நாகராசன், தனி அலுவலரிடமிருந்து வந்தது. உடன் இணைக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசாணையில் இருந்த முப்பத்தைந்து பெயர்களில் என் பெயரும் இருந்ததற்குத் தமிழக முதல்வருக்கும் அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் நன்றி சொல்லும்போது, என்னை எந்த வகையில் சேர்ப்பது என்று தெரியாமல், மையமாக 'இதழ்த் தொடர்பாளர்' என்று போட்டிருக்கிறார்கள். தயவுசெய்து படைப்பிலக்கியத்தில் இடம் இல்லை, நிறைந்துவிட்டது என்றால்... தமிழ் இணை யத்துக்கு மாற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன். காரணம், இதழ்த் தொடர்பாளர் என்றால் என்னவென்றே எனக்கு விளங்கவில்லை. பிரஸ் ரிலேஷன்ஸ் என்றால், அதற்கு நான் தகுதி இல்லை!



# உண்மைக்கு மிக அருகில்!



"முழுவதும் கற்பனையில் ஒரு கதையை தப்பித்தவறி எழுத முடிந்தால் அந்தக் கதை சீக்கிரமே நிஜமாகிவிடும்" என்று சொல்லியிருக்கிறார்கள். என் எழுத்தாள வாழ்க்கையில் இது அடிக்கடி நிகழ்ந்திருக்கிறது.

'வானமென்னும் வீதியிலே' எழுதியபின் பாகிஸ்தானுக்கு ஒர் இந்திய விமானம் கடத்தப்பட்டது. 'பதவிக்காக' எழுதியபின் சமகால அரசியல் நிகழ்வுகள் அதைப் போல நடந்தன.

மூன்று வருஷத்துக்கு முன் நான் விகடனில் எழுதிய 'கறுப்பு குதிரை' என்னும் சிறுகதை (மாட்ச் ஃபிக்ஸிங்) ஏறக்குறைய அப்படியே ஹான்ஸி குரோனியே விவகாரத்தில் நடந்திருக்கிறது. இதனால் நான் ஒரு தீர்க்கதரிசி என்று சொல்லிக்கொண்டு டாக் ஷோ (talk show) ஆரம்பிக்க மாட்டேன். உண்மைக்கு மிக அருகில் கதைகளை அமைப்பதால் வரும் இயற்கையான விளைவு இது. கேயாஸ் தியரிப்படி என்றாவது ஒரு நாள் அது நடந்தே தீரும். இதில் எனக்கு ஒன்றுதான் பயமாக இருக்கிறது. பன்னிரண்டு வருடத்துக்கு முன் 'ஜில்லு' என்று ஒரு கதை எழுதியிருக்கிறேன்- இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அணு ஆயுதப் போருக்குப் பின் நிகழ்வது பற்றி!

தமிழ் சினிமாவில் முக்கியமானவர்கள் அனைவரும் 'அலைபாயுதே' தேவி தியேட்டர் ப்ரீமியர் ஷோவுக்கு வந்திருந்தார்கள். அத்தனை பத்திரிகைகளிலும் இதன் விமரிசன அலை பாய்ந்துகொண்டிருப்பதால் ப்ரீமியர் ஷோவில் கவனித்த இரண்டு விஷயங்களை மட்டும் சொல்கிறேன். 1. சொன்ன சமயத்துக்கு ஆரம்பித்தார்கள், 2. படம் முடிந்ததும் இயல்பாக அனைவரும் கை தட்டினார்கள். இரண்டுமே கோடம்பாக்கத்தில் அரிதான விஷயம். சாதாரணமாக அரை மணி,

முக்கால் மணி தாமதமாகத்தான் ஆரம்பிக்கும். ப்ரீமியர் ஷோவின் முடிவில் ஒரு மரண அமைதி நிலவும். கைதட்ட விரும்பினாலும் கட்டைவிரல் நகத்தால்தான் தட்டுவார்கள். இல்லை, ஷங்கர் சொன்னது போல மருதாணி அப்பிய கைத்தட்டல். படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது மையமாகத் தலை ஆட்டிவிட்டு விலகுவார்கள். 'அலை பாயுதே' நிறைவில் அவர்களை கைதட்ட வைத்தது மணிரத்னத்துக்கு மற்றொரு வெற்றி. வாழ்த்துக்கள். கோடம்பாக்கம் போட்டி பொறாமைகளை ஒத்திப் போட்டுவிட்டு தன் திறமையாளர்களை மனம் திறந்து பாராட்டிக்கொள்ள வேண்டிய வேளை வந்திருக்கிறது. Survival!

'அலைபாயுதே' படத்தில் சபர்பன் ரயிலில் காதலர்கள் சந்திக்கும் உற்சாகமும் வீட்டை விரோதித்துக்கொண்டு பிரிந்தவள் தாயையும் தமக்கையையும் சந்திக்கும் உருக்கமும் தந்தையின் மரண சோகமும் சுவாரஸ்யமான காட்சிகள்.

ரயில் - மாறுதல்களின், திருப்பங்களின் அடையாளம். பாரீஸ் மெட்ரோ தரையடி ரயிலில் ஒரு சந்திப்பை - ஜெஃப்ரி ஆர்ச்சர் எழுதிய கதையை மொழிபெயர்த்துள்ளேன்.

லேட்டாகிவிட்டது. ஆண்ட்ரூவுக்கு போக்குவரத்து நெரிசலில் டாக்ஸி கிடைக்கவில்லை. வீடு திரும்பும் ஜனநெரிசலின் ஊடே புகுந்து புறப்பட்டு, மெட்ரோவின் எஸ்கலேட்டரில் சரிந்து தரையடி ரயிலைப் பிடிக்க இறங்கினான்.

ஆண்ட்ரூ வீடு திரும்ப வில்லை. அவனுக்கு எலை ப்ளூமைச் சந்திக்கவேண்டி இருந்தது. ப்ளூம் பாரீஸ் சேஸ் மான்ஹாட்டன் வங்கியின் தலைமை ஆதிகாரி. ஆண்ட்ரூ அவரை இதற்கு முன் சந்தித்தது இல்லை. ஆனால், அவரைப் பற்றித் தெரியும். பெரிய அதிகாரி. லேசில் சந்திக்க முடியாது. ப்ளூமின் காரியதரிசி அவனைக் கூப்பிட்டு, வரச் சொன்னதிலிருந்து நாற்பத்தெட்டு மணிநேரமாக அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். எதற்காக என்னை அழைத்திருக்கிறார்?

அவன் தற்போது பணிபுரியும் க்ரெடிட் ஸ்விஸ் வங்கி வேலையை விட்டுவிட்டு மான்ஹாட்டன் வங்கிக்கு வரச் சொல்லப் போகிறாரா..? அதற்கு அத்தனை பெரிய அதிகாரி பேசத் தேவையில்லை. பாரீஸில் இரண்டு வருஷம் இருந்தாயிற்று... நியூயார்க் அனுப்புவாரா..? அவன்

மனதில் கேள்விகள் மிதந்தன. எதற்கு யூகங்கள்? எல்லாமே ஆறு மணிக்குத் தெரிந்து விடப் போகிறது.

ஆண்ட்ரூவுக்குத் தன் மதிப்பு நன்றாகவே தெரியும். க்ரெடிட் ஸ்விஸ் வங்கியில் அந்நிய செலாவணியில் விற்பன்னன். அவனொத்த மற்ற அதிகாரிகளைவிட அதிகம் சாதித்தவன். பிரெஞ்சு வங்கிகள் அக்கறை காட்டாவிட்டாலும் அடிக்கடி அமெரிக்க வங்கிகள் அவனை வேலைக்கு அழைத்தன. ஆனால், அவர்கள் என்ன சம்பளம் தருவதாகச் சொன்னாலும் க்ரெடிட் ஸ்விஸ் வங்கி அதே அளவுக்கு அவன் சம்பளத்தை உயர்த்த சம்மதிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த பன்னிரண்டு மாதங்களில் ஏராளமான வாய்ப்புகள் வந்தன. புன்னகைத்து மறுத்திருக்கிறான். எலை ப்ளூமிடம் அது முடியாது. அவன் மறுக்க முடியாதபடி ஒரு வாய்ப்பு தருவார். அதுவும் பாரீஸில், வருடாந்தர போனஸ் வேளை இது. இந்தச் சமயத்தில் இவன் ப்ளூமை சந்திக்கிறான் என்கிற செய்தியே போதும். நிச்சயம் இவனது மேலதிகாரிகளுக்குச் சில மணி நேரத்தில் தெரிந்துவிடும்.

பிளாட்பாரத்தில் அதிகக் கூட்டமாக இருந்தது. ஆண்ட்ரூவுக்கு முதல் டிரெயின் கிடைக்குமா... சந்தேகமாக இருந்தது. ஆறு மணிக்குள் போய்ச் சேர முடியுமா என்று கவலைப்பட்டா. மணி 5.36. அங்கங்கே கும்பலின் மத்தியில் கிடைத்த சந்தில் முண்டியடித்துக் கொண்டு பிளாட்பார விளிம்புக்கு வந்துவிட்டான். அடுத்த டிரெயினைத் தவறவிட விருப்பமில்லை. ப்ளூம் கொடுக்கும் வேலையை அவன் எடுத்துக்கொள்கிறானோ இல்லையோ... சொன்ன நேரத்தில் அவரைச் சந்திப்பது, அவர் எலை ப்ளூம் என்பதால், முக்கியம். வங்கி உலகத்தில் வரும் வருடங்களில் ஒரு முக்கிய மனிதராகப் போகிறவரை சந்திக்க தாமதமாகச் சென்றால் முதல் அபிப்பிராயம் சரியாக இருக்காது.



அடுத்த டிரெயின் சுரங்கத்திலிருந்து வெளிவர பொறுமையற்று காத்திருந்தான். எதிர் பிளாட்பாரத்தை வெற்றாகப் பார்த்துக்கொண்டு கேள்விகளுக்குத் தயாரானான் -

இப்போது உன் சம்பளம் என்ன?

உன் வங்கியுடன் ஒப்பந்தம் ஏதாவது உண்டா? போனஸ் உண்டா?

நியூயார்க் போக விருப்பமா?

எதிர் பிளாட்பாரத்திலும் கூட்டம் அதே அளவில் இருந்தது. ஆண்ட்ரூவின் கவனம் சற்றே கலைந்தது. எதிர் பிளாட்பாரத்தில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தாள். அவளுக்கும் ஏதோ அவசரம் போலும். அவள் நிமிர்ந்தாள். அந்தக் கணத்தில் ஆண்ட்ரூ எலை ப்ளூமை மறந்தான். அந்த ஆழ்ந்த கண்களைப் பார்த்தான். அவள் இவன் பார்ப்பதை உணரவில்லை. ஐந்தடி எட்டங்குலம் இருப்பாள். மிக அழகான முகம். மேக்-அப் தேவையே இல்லாது ஜொலிக்கும் சருமம். எந்த சிகை அலங்கார உதவியுமின்றி இயற்கையாகச் சுருண்ட முடி. வெளிர் மஞ்சள் நிற மழைக்கோட்டு அணிந்திருந்தாள். அதன் பெல்ட் இறுக்கம் எத்தனை மெலிய இடை என்பதைக் காட்டியது. கொஞ்சம் தெரிந்த கால்கள் சித்திரத்தை நிரப்பின. எலை ப்ளூமால் தரமுடியாத கவர்ச்சிகரமான சித்திரம்.

அவள் மீண்டும் தன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள். ஒரு முறை

சட்டென்று நிமிர்ந்தாள். அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தாள். அவன் அவளைப் பார்த்து புன்னகைத்தான். அவள் வெட்கப்பட்டாள். இதற்குள் இரண்டு ரயில்களும் எதிர் எதிர் திசையிலிருந்து வந்து நின்று மறைத்தன. ஆண்ட்ரூவுக்குப் பின்னால் இருந்தவர்கள் எல்லாம் தள்ளித்தள்ளி டிரெயினில் ஏறிக்கொண்டார்கள். ஆண்ட்ரூ நகரவில்லை. டிரெயின் மெள்ள பிளாட்பாரத்தை விட்டு விலகியபோது அவன் மட்டும் தனியே நின்றுகொண்டிருந்தான். எதிர்பக்க டிரெயின் இன்னும் விலகவில்லை. அதை வெறித்துப் பார்த்தான். சற்று நேரத்தில் அதுவும் மெள்ளப் புறப்பட... ஆண்ட்ரூ புன்னகைத்தான். அந்தப் பெண் எதிர் பிளாட்பாரத்தில் தனியாக நின்றுகொண்டிருந்தாள். இந்த முறை அவள் பதிலுக்கு புன்னகைத்தாள்.

இந்தக் கதை உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்களா..? ஆண்ட்ரூவுக்கும் க்ளேய்ருக்கும் பத்தாவது திருமண ஆண்டு நிறைவின்போது எனக்குச் சொன்னார்கள்.

இந்தச் சிறுகதை. To cut a long story short என்ற புத்தகத்திலிருக்கிறது. இரண்டு பக்கம்தான் என்றாலும் முழுக்கதையின் நேர்த்தியும் முடிவில் ஒர் ஆச்சரியமும் கிடைக்கிறது. இந்த வகைக் கதைகள் பன்னிரண்டுக்கு குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். எழுதியே காட்டிவிட உத்தேசம். அடுத்த வாரத்திலிருந்து அவ்வப்போது அடியேனுடைய பன்னிரண்டு சிறுசிறு கதைகள் வெளிவரும்.

# திரை



என் சின்னஞ்சிறு கதை வரிசையில் முதல் கதை -

ஸ்ரீராமநவமியின்போது பல இடங்களில் பானகக் கச்சேரிதான் நடத்துகிறார்கள். பெங்களூரில் ராமநவமி, சென்னையில் டிசம்பர் சீஸன் போல. பிரபல பாடகர்கள் அனைவரும் ஃபோர்ட் ஹைஸ்கூலிலும் சேஷாத்திரிபுரத்திலும் பெரிய பந்தல்களில் பாடுவார்கள். கூட்டம் அலைபாயும். எல்லாம் இலவச கச்சேரிகள். சந்திரகூடனால் அந்த பெங்களூர் நாட்களில் கேட்ட ஜான் ஹிக்கின்ஸ், எம்.டி. ராமநாதன், டி.ஆர். மகாலிங்கம் கச்சேரிகளை மறக்க முடியவில்லை. வருஷம் தவறமாட்டான்.

கர்னாடக சங்கீத ரசிகர்கள் எத்தனை பேர் தியாகராஜ கீர்த்தனைகளின் அர்த்தத்தை உணர்ந்து ரசிக்கிறார்கள்... தெலியலேது. சந்திரகுடனும் முதலில் அவற்றின் ராக சுகத்துக்குத்தான் ரசித்து வந்தான். அர்த்தம் புரிந்துகொள்ள முயலவில்லை. ஒரு ராமநவமிக்கு டி.எஸ். பார்த்தசாரதி வெளியிட்ட தியாகராஜர் கீர்த்தனைகள் புத்தகத்தை வாங்கி அடிக்கடி கேட்கும் பாடல்களின் அர்த்தத்தைப் பார்த்ததும் ஆச்சரியமும், சிலசமயம் ஏமாற்றமும் அடைந்தான். உதாரணமாக 'பக்கல நிலபடி' என்பது ஏதோ நெல் அளக்கிற சமாசாரம் என எண்ணிக்கொண்டிருந்தான். 'இராமபிரானுக்குப் பக்கத்தில் நின்றபடி அவருக்குச் சேவை செய்யும் மர்மத்தை எனக்குச் சொல்லக்கூடாதா' என்று இலட்சுமணனிடமும் சீதையிடமும் தியாகராஜர் கேட்கிறாராம்.

"புரியாத தெலுங்கில் பாடுவதைவிட புரிகிற தமிழில் அல்லது கன்னடத்தில் பாடுவது மேல் என்பதை சஞ்சய் சுப்பிரமணியன் 'குலம் தரும் செல்வம் தரும்' என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தை அல்லது

புரந்தரதாசரைப் பாடிக் கேட்டவர்கள் ஒப்புக்கொள்வார்கள்" என்று யசோதாவிடம் சொல்லியிருக்கிறான். அவளானால் 'எனக்கு ராகம், சாகித்தியம் எல்லாம் முக்கியமில்லை. பாட்டு கேட்க நன்றாக இருக்க வேண்டும்' என்பாள். ரஞ்சனி, ஹம்சாநந்தி, அமிர்தவர்ஷினி போன்ற ராகங்கள் அவளுக்குப் பிடிக்கும். ராமநவமி கச்சேரிக்கு இணைந்து முன்பே போய் ஜமுக்காளத்தில் இடம் பிடித்துவிடுவார்கள். இவன் ஆண்கள் பக்கத்திலும் அவள் பெண்களுடனும் உட்கார்ந்து கொண்டு மத்யதிமாவதி வரை கேட்பார்கள். வீட்டுக்குத் திரும்பும்போது பாடிக்கொண்டே நடப்பார்கள். 'கணவன் - மனைவிக்குள் என்ன ஒற்றுமை..!' என்று அக்கம் பக்கத்தார் வியந்திருக்கிறார்கள்.

இந்த சீஸன் திருஷ்டிபட்டாற்போல் ஆகிவிட்டது. யசோதாவுக்கு உடம்பு முடியவில்லை. கச்சேரிக்கு வருவதை நிறுத்திவிட்டாள். டாக்டர் ரத்தசோகையாக இருக்கலாம் என்று, இரும்பு கலந்த டானிக்குகள் கொடுத்தார். ஒருவாறு தெம்பானலும் கச்சேரிக்கு வர மறுத்தாள். "நீங்க போயிட்டு வந்து எனக்குச் சொல்லுங்க. நிறைய கேட்டாச்சு கொஞ்சம் அலுக்கறது" என்றாள்.

கர்னாடக சங்கீதம் அலுப்பதாவது ? மனசுக்குள் ஏதோ வைத்துக்கொண்டு சொல்லத் தயங்குகிறாள் என்று தோன்றியது சந்திரசூடனுக்கு. அவர்களுக்கு குழந்தை இல்லாத ஏக்கமா என்று அவன் கேட்க விரும்பவில்லை. கேட்கவே மாட்டான். 'தூங்கும் நாய் தூங்கட்டும்' என்கிற தத்துவம் அவனுடையது. ஒரு முறை ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்ளலாம் என்று அவள் வற்புறுத்த, செயிண்ட் மைக்கல்ஸுக்கு போனார்கள். என்னவோ சரியில்லை... குழந்தையின் நிறமா, பெண்குழந்தை என்பதாலா அல்லது கல்யாணமில்லாமல் பிறந்த பாவக் குழந்தையாக இருக்கலாம் என்பதாலா..? சம்மதம் சொல்லாமல் திரும்ப வந்துவிட்டார்கள்.



இதையெல்லாம் நினைத்துப் பார்த்துக்கொண்டு தனியாக இந்த முறை கச்சேரியில் உட்கார்ந்தான். பிரபல பாடகர் சுருட்டி ராகத்தில் 'கீதார்த்தமு, சங்கீதார்த்தமு' போன்ற தெரிந்த பாட்டுப் பாடிவிட்டு 'தெர தீயகராதா' என்று ஒரு தெரியாத பாட்டை எடுத்தார். அதன் ராகமும் அவனுக்குச் சட்டென்று பிடிபடவில்லை. கச்சேரியை ஆழ்ந்து ரசிக்க முடியவில்லை. மண்டைக்குள் ராகம் இருந்தது. ஆனால், சட்டென்று மேலே வராமல் ஞாபகம் கண்ணாமூச்சி காட்டியது. என்ன என்னவோ யோசித்துப் பார்த்தான். இந்த ராகமும் பாட்டும் ஒரு முறை கேட்டிருக்கிறேன்... அர்த்தம்கூடப் பார்த்திருக்கிறேன்... ம்ஹூம். சட்டென்று தீர்மானித்து எழுந்து விட்டான்.



சேஷாத்ரிபுரம் ராமநவமி பந்தலிலிருந்து அடுத்த தெருவுக்கு அடுத்த தெருவில்தான் ஸ்வஸ்திக் பக்கத்தில் வீடு.

அலமாரியில் தியாகராஜ கீர்த்தனைகளின் புத்தகம் இருக்கிறது. ஒரு நடை ஓடிப்போய் பார்த்துவிட்டு திரும்ப வந்துவிடலாம்.

யசோ கதவைத் திறந்தவள் "என்ன சீக்கிரம் வந்துட்டீங்க... கச்சேரி முடிஞ்சுடுத்தா?" என்றாள். "அது எங்க முடியறது... மறுபடியும் போறேன். ஒரு பாட்டு ராகம் தெரியாம படுத்தறது. புஸ்தகத்தை ஒரு கிளான்ஸ் பாத்துரலாம்னுட்டு.." அவள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கே... உடம்பு சரியில்லையா?"

"இல்லையே..."

"வேர்த்திருக்கே" ஃபேனைப் போட்டான்.

அலமாரியிலிருந்து புத்தகத்தை எடுத்து தேடிப் பார்த்தான்.

"அ! கௌளி பந்துன்னு ஒரு ராகம். 'தெர தீயகராதா லேர்கி திருப்பதி வேங்கடரமணா' - 'திருப்பதி வேங்கட ரமணா... திரையை விலக்கலாகாதா'ன்னு அர்த்தம். கதவைச் சாத்திக்கோ... நான் போறேன். முழுக்க கேட்டுட்டு வரேன். ஒன்பதே முக்கால் ஆகும்..." என்று புறப்பட்டான்.

அருமையான பாட்டு. 'திரை விலகக்கூடாதா... மனமென்னும் திரை'.

திரை!

ஹாலிலிருந்து படுக்கை அறையை மறைத்திருத்த திரை. அது காற்றில் அலைந்ததே... அப்போது தெரிந்த அந்த மாதிரி பூட்ஸ் அவனிடம் இல்லையே! நின்றான். திரும்பச் செல்ல நினைத்தான்.

தோடி அவனை ஈர்த்தது. 'பலுவிதமுல தலபுல ரோஸி நிலவரமகு பக்தியு ஜேஸி' 'பலவகைப்பட்ட எண்ணங்களை வெறுத்து நிலையான பக்தியை மேற்கொள்பவர்களுக்கு சரிசமானம் யார்' என்று பாடகர் மூலம் தியாகராஜர் கேட்டுக் கொண்டிருந்தார். அதை நோக்கி நடந்தான்.

# தற்செயல் பயணி!



ஏரோப்ளேன் தொடர்பான அனுபவங்களின் இரண்டாம் பாக விவரணம் மிச்சம் இருக்கிறது.

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரி வேலை எனக்குச் சீக்கிரமே அலுத்து விட்டது. விமான வலவர்களுடன் 'கிளியர் டு லாண்ட், கிளியர் ஃபார் டேக் ஆஃப்' போன்ற சிக்கனமான உரையாடல்களில் சுவாரஸ்யமில்லை. இன்ஜினீயரிங் படிப்பு விரயம் ஆகிறது. அதனால் மைய அரசின் இன்ஜினீயரிங் சர்வீஸஸ் பரீட்சை எழுதி அகில இந்திய அளவில் நான்காவது ராங்க் பெற்றதைச் சொல்ல என் அவையடக்கம் தடுக்கிறது. அதே சிவில் விமான இலாகாவில் டெக்னிக்கல் ஆபீஸராகப் பொறுப்பேற்க டெல்லிக்கு வந்தேன். சப்தர்ஜங் விமான நிலையத்தில் ரன்வேக்கு பின்வேயில் இருந்தது ஆபீஸ். விமானங்களுக்கு சிக்னல் அனுப்பும் வி.ஓ.ஆர்., ஐ.எல்.எஸ்., டி.எம்.இ. போன்ற சாதனங்களை விமான நிலையங்களில் நிறுவுவதும் அவற்றை 'காலிப்ரேஷன்' என்று சோதித்துப் பார்ப்பதும் வேலை.

முதலில் என்னை அந்த காலிப்ரேஷனுக்கு உண்டான சிக்கலான கருவிகள் பொருத்திய டக்கோட்டா (Dakota) விமானத்தில் செல்லுமாறு பணித்தார்கள்.

டக்கோட்டா என்பது இரண்டாவது உலக யுத்த காலத்து விமானம். டக்ளஸ் கம்பெனியின் செக்குமாடு என்று அதைச் சொல்வார்கள். நன்றாக உழைக்கும். அறுபது ஆண்டுகளுக்கு முன் அறிமுகப்படுத்தப் பட்ட இந்த விமானங்களில் சில இன்றும் பறக்கின்றன. 'ஹே ராம்' படத்தில் இந்த விமானம் வருகிறது.

தரையில் நிற்கும்போது தவக்களை போல மூக்கை வான் நோக்கி

நீட்டிக்கொண்டிருக்கும். பெட்ரோல் விமானம். ப்ரொபெல்லர் இன்ஜின்கள் இரண்டு. கட்டுப்பாடு எல்லாம் பைலட்டிடமிருந்து இழுத்த கம்பிகள், சக்கரங்கள் மூலமாகத்தான். சிக்கலான ஹைட்ராலிக்ஸ் ஏதும் இல்லை. பத்தாயிரம் அடி வரை பறக்கும். ஏ.சி. சமாசார மெல்லாம் கிடையாது. தூக்கித் தூக்கிப் போடும். அவ்வப்போது காற்றுப் பொட்டலங்களில் மாட்டிக்கொண்டு - சரேல் சரேல் என்று சரியும். இளம் வயதாக இருந்தாலும் பறந்துகொண்டே... கருவிகளை இயக்கிக்கொண்டே ரேடியோ தொடர்புகொள்வது சற்றுக் கடின காரியம்தான். என்னுடன் வந்த சீனியர், "பறக்கும்போது வயிற்றைப் பிரட்டி வாந்திவரும்.. ஆவோமின் மாத்திரைகள் வைத்துக்கொள்" என்று அறிவுரைத்தார். "உங்களுக்குத் தேவையில்லையா?" என்று கேட்டபோது "ஹா! விமானம் தலைகீழாகப் பறந்தாலும் எனக்கு ஒன்றும் ஆகாது" என்றார்.

முதல் டக்கோட்டா பயணத்துக்காக உள்ளே நுழைந்ததுமே பெட்ரோல் வாசனை குமட்டியது. டெல்லி.. கோடைகாலம். காற்றில் அங்கங்கே அழுத்தக் குறைவுப் பொட்டலங்கள். தாழ்வாக விமானநிலையத்தைச் சுற்றிச்சுற்றி வரும் கடினமான பறப்பு.. பெரும்பாலும் நின்றுகொண்டே இயங்க வேண்டும். விமான நிலையத்தின் திசைகாட்டும் கருவி சரியாக இருக்கிறதா என்று சோதிக்கும் வேலை. முதலில் வயிற்றைப் பிரட்டினாலும் வேலை சுவாரஸ்யத்தில் வாந்தியெடுக்க மறந்து போய்விட்டேன். என்னுடன் வந்து எனக்குத் தொழில் கற்றுத்தர வேண்டிய சீனியரை விமானம் புறப்பட்ட கொஞ்ச நேரத்தில் காணவில்லை. அவரைத் தேடிக் கண்டுபிடித்ததில், ஓரத்தில் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். "உனக்கு வாந்தி வரவில்லையா?" என்றார்.

"இல்லையே... ஏன்?"


"காலைல என்ன சாப்ட்டே?"

"இட்லி, பூரி, மசால் தோசை, தக்காளி சட்னி.."

"சொல்லாதே" என்று வாய் பொத்திக் கொண்டு பாத்ரூமுக்கு ஓடினார்.

அந்த விமானத்தில் சென்று வாந்தி எடுக்கவில்லை என்கிற புகழ் பரவி... என் டெக்னிக்கல் திறமைகளை விட அதிகம் மதிக்கப்பட்டது. யாராவது தெரியாத்தனமாக அதில் செல்ல 'ஃப்ரீ ரைடு' கேட்பார்கள்.

இப்படித்தான் கிருஷ்ணசாமி என்னும் மும்பை நண்பர் மாட்டினார். அதே டக்கோட்டாவில் மும்பைக்கு ஒரு முறை டூர் போயிருந்தபோது பி.டபிள்யு.டி. இன்ஜினீயரான கிருஷ்ணசாமி "விமானம் காலியாகத்தானே பறக்கிறது. நானும் வரலாமா? நான் ஏராப்ளேனில் போனதே இல்லை" என்றார்.



"கொஞ்சம் தலைச்சுற்றல் இருக்கும்.. பரவாயில்லையா?"

"அதெல்லாம் பிரச்னை இல்லை. நான் குடை ராட்டினம், ஜயண்ட் வீல் எல்லாம் போயிருக்கிறேன்" என்றார்.

"தாராளமா வாங்க" என்று அவரை அழைத்துச் சென்றோம்.

விமானம் புறப்பட்ட முதல் அரை மணி உற்சாகமாக ஜன்னல் வழியே எட்டிப்பார்த்து "இட்ஸ் ப்யூட்டிஃபுல்" என்று சொல்லிக்கொண்டிருந்தார் . அப்புறம் "நாம் இறங்க எத்தனை நேரமாகும்?" என்றார்.



"இன்னும் மூன்று மணி நேரமாகும்" என்றேன்.

"ஏன்... ஒரே இடத்தையே சுற்றி வருகிறது?"

"இது பரிசோதனைக்கானது... அப்படித் தான் சுற்றி வரவேண்டும்."

"சார்... எங்கள் வீட்டில் கவலைப்படுவார்கள். சீக்கிரம் இறங்காவிட்டால் சிக்கலாகிவிடும். எனக்கு உடம்பு சரியில்லை... என்னவோ தெரியவில்லை. அடிக்கடி வாந்தி வருகிறது" என்றார்.

"இந்த விமானத்தில் அப்படித்தான் இருக்கும்னு சொன்னேனே.."

"இவ்வளவு போட்டு உலுக்கும் என்று சொல்லவில்லையே நீங்கள்.."

அவர் கவலையுடன் உட்கார்ந்தார். குதித்துவிடுவார் போல இருந்தது. அப்போது தொடங்கி விமானம் தரையிறங்கும் வரை விமானத்தின் சிறிய பாத்ரூமில் விமானச் சத்தத்தையும் மீறி இரைச்சலாக வாந்தியெடுத்துக்கொண்டே வந்தார். ஒருவழியாக தரையிறங்கியதும் கண்களில் ஆனந்த பாஷ்பத்துடன் காணாமல் போனார். மறுநாள் அதே ஃப்ளைட் நிமித்தமாகப் புறப்பட்டபோது அவரைச் சந்தித்தேன். "என்ன சார் போலாமா?" அவர் தலைக்கு மேல் கைகூப்பி "வேணாம் சார்.. ஜென்மத்துக்கும் வேணாம்.. அது ஏரோப்ளேனே இல்லை" என்றார் கோபமாக. "சொன்னேனே.. இந்த ப்ளேன் கொஞ்சம் முரடு" என்று.

"நான் என்னவோ போயிங் மாதிரி பவ் பவ்னு இருக்கும்னு எதிர்பாத்தேன்.."

"வேணும்னா அதிலயும் அரேஞ்ச் பண்றேன்.. எனக்குத் தெரிஞ்ச ஒரு பைலட் இருக்கார்.. ஏர்இண்டியாவில்" என்றேன். எனக்கு அவருக்கு நல்லது செய்ய வேண்டும் என்கிற கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

"ஏர்இண்டியா பைலட்டுகள் லைசென்ஸ்களைப் புதுப்பிக்க சர்க்யுட் அண்-லாண்டிங் என்று பத்துப் பன்னிரண்டு தடவை ஏறி இறங்க வேண்டும். போயிங் விமானம் காலியாகத்தான் போகும். ஏற்பாடு செய்யவா?"

"பிரட்டாதே..?"

"சேச்சே... ஸ்மூத்தா சில்க் மாதிரிபோகும்.."

உற்சாகத்துடன் ஒப்புக்கொண்டார். ஏர்இண்டியாவில் சொல்லி அதற்கு ஏற்பாடு செய்து அவரை அனுப்பி வைத்தேன்.

பெரிய போயிங் விமானத்தில் முன்னால் பைலட்டும் டெஸ்ட் பைலட்டும்.. நம் இன்ஜினீயர் கிருஷ்ணசாமி ஒரு ஒற்றைப் பயணி. 350 இருக்கைகளும் அவருடையது.. ஆகாகான் போல உணர்ந்திருக்கிறார்.. ஒரே ஒரு சிக்கல்தான்!

இரண்டு மூன்று முறை தரை தொட்டு மீண்டும் உயர்ந்து சென்றது விமானம். அதுதான் பயிற்சி.. நான்காவது முறை இறங்க வந்தபோது

திடீர் என்று மழை வந்துவிட்டது. மும்பையின் பருவமழை தெரியுமே.. கருமேகங்கள் திரண்டு மழைத்திரை... பத்தடிகூட முன் தெரியாமல் பெய்யும். பைலட் இருமுறை முயன்று பார்த்தார். எரிபொருள் குறைந்துவிடுவதால் சீக்கிரமே அவர் தீர்மானிக்க வேண்டியிருந்தது. இந்த மாதிரி நெருக்கடிகளுக்காக மாற்று விமான நிலையத்துக்கு அவர்கள் போய்விட வேண்டும். போயிங் ரக விமானங்களுக்கு மும்பையின் மாற்று விமான நிலையம் டெல்லி! பைலட் டெல்லி நோக்கித் திசை திருப்பிவிட்டார். இந்த விவரங்கள் எதுவுமே தெரியாமல் ஜன்னலருகே கால்மேல் கால்போட்டுக் கொண்டு வீற்றிருந்தார் சாமி. பைலட்டுகள் டெல்லியில் இறங்கினதும் அடுத்த ஃப்ளைட்டைப் பிடித்து மும்பை திரும்பிவிட்டார்கள். பின்னால் இருந்த தற்செயல் பயணியை மறந்தேவிட்டார்கள். கிருஷ்ணசாமி வெளிவந்ததும் 'என்ன மும்பை இரண்டுமணி நேரத்தில் இப்படி மாறிவிட்டதே' என்று வியந்தார். அவர் கையில் இருந்தது ஐந்து ரூபாய். அது டெல்லி என்கிற விவரம் அறிந்து பதறிப்போய் யார் யாரையோ கெஞ்சிக் கடன் வாங்கி ரயில் டிக்கெட் வாங்கி ஐந்து நாள் கழித்துதான் திரும்ப மும்பை வந்தார். என்னை மறுபடி பார்த்தபோது "சார். அது என்ன ஆச்சுன்னா..." என்று நான் தொடங்குவதற்கு முன், சரேல் என்று ஸ்பாட்டிலிருந்து விலகினார். அதன் பின் என்னுடன் அவர் பேசவே இல்லை!

# ஒரு வித்தியாசமான பரிசு!




உலகத்திலேயே மிகவும் அகழ்வாராயப்பட்ட இடத்துக்கு ஒரு கின்னஸ் இருந்தால் அது எங்கள் தெருவுக்குக் கிடைக்கும். 1993-ல் நான் பெங்களூரைத் துறந்துவிட்டு குடிபுகுந்ததிலிருந்து இந்தச் சாலையை இடைவிடாமல் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். தப்பித் தவறி தோண்டுவது நின்று போனால் கடப்பாரை பயிற்சி விட்டுப் போகாமலிருக்கத் தோண்டுவார்கள். முதன்முதலாக குடிநீர் வடிகால் வாரியர்கள் வந்து வெட்டிப்போட்டு சிமெண்ட்டில் அனார்கலி ரேஞ்சுக்கு சமாதி போல ஏதோ கட்டிமுடித்து மூடினார்கள். அது மூடின மறுநாள் டெலிபோன்காரர்கள் நீண்ட ஃபைபர்கிளாஸ் குழாய்களை அடுக்கி எதிர்ப்பக்கம் தோண்டி கேபிள் போட்டார்கள். அதன்பின் சிறு மேம்பாலர்கள் பாதாளச் சாக்கடை எதையோ பிழைதிருத்தும் காரணத்துக்காக நடுவே வெட்டிப் போட்டார்கள். அவர்கள் முடித்ததும் இப்போது மின்வாரியர்கள் ஹைடென்ஷன் கேபிள் போடுவதற்கு தோண்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு தோண்டலும் குறைந்தபட்சம் ஆறு மாதம் நீடிக்கிறது. தோண்டும் கூலியாட்கள் குடிசை போட்டு, டிரான்சிஸ்டர் அருகில் சமைத்து, அவர்கள் மனைவியர் தலைசீவி சோறாக்கி பிள்ளை பெற்றுக்கொண்டு மறு தோண்டலுக்குப் புறப்படும் வரை ஒரு வாழ்க்கையே நடத்திவிட்டுச் செல்கிறார்கள். இப்போதெல்லாம் கார்ப்பரேஷன், டெலிபோன், மின்வாரிய வட்டாரங்களில் தினம் காலை கீழ்க் காணும் உரையாடல் நிகழும் என்று நினைக்கிறேன்-

இன்ஜினீயர் - "ஏம்பா இன்னிக்கு என்ன வேலை?"

காண்ட்ராக்டர் - "எதும் வேலை இல்லீங்க."

இன்ஜினீயர் - "அப்ப ஒண்ணு பண்ணு... ஆழ்வார்பேட்டைல

அம்புஜம்மாள் தெருனு ஒண்ணு இருக்கு. அங்க போய் தோண்டு."



காண்ட்ராக்டர் - "எதுக்குங்க?"

இன்ஜினீயர் - "சும்மாய்யா... இனிமேல வேலை இல்லைனு மட்டும் சொல்லாதே."

சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற முன்னேற்ற நாடுகளில் கேபிள் போடுவதில்லையா... சாக்கடை வெட்டுவதில்லையா என்று கேட்கலாம். நிச்சயம் தோண்டுகிறார்கள். நானே பார்த்திருக்கிறேன். ராத்திரி பன்னிரண்டு மணிக்கு ஆள் படையுடன் வருவார்கள். அதிபிரகாசமாக மின்சிமிட்டும் மஞ்சள் விளக்குகளை வைப்பார்கள். அது என்ன மாயமோ... அதிகாலைக்குள் தோண்டி வேலையை முடித்து இடம் தெரியாமல் அடைத்து சமன்படுத்திவிட்டுப் போவார்கள். ஒரே நாள்தான். இங்கு? பகவான் விட்டவழி. வள்ளுவர் இன்றிருந்தால்.


வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு நீண்டநாள் தோண்டல் இலை

என்று எழுதியிருப்பார்.

**வா**ஷிங்டனில் வசிக்கும் எழுத்தாயினி காஞ்சனா தாமோதரன் கர்ட் வானகட்டின் (Kurt Vonnegut) அண்மைக்கால சயின்ஸ் ஃபிக்ஷன் நாவலான 'டைம்க்வேக்' (Timequake) என்பதை அன்பளித்தார். வானகட்

நவீன அமெரிக்க இலக்கியத்தின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவர். அவருடைய Player Piano, Breakfast of Champions, Slaughterhouse Five போன்றவற்றை நமது எழுத்தாளர்கள் படிக்க வேண்டும். வயசாகி விட்டது எழுதித்தான் ஆக வேண்டுமா என்ற ஆதார சந்தேகத்துடன் துவங்கினாலும் பிரமிப்பூட்டும் வகையில் இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறார். உதாரணம்... இந்தக் கதை பிப்ரவரி 13, 2001-ல் பிரபஞ்சம் விரிவடைவதை கொஞ்சம் நிறுத்திக் கொள்கிறது. கால ஓட்டத்தில் ஒரு கொப்பளம் ஏற்பட்டு எல்லாமே பத்து வருஷம் பின்வாங்கிக் கொள்கிறது. அதாவது, பிப்ரவரி 1991-க்கு. அங்கிருந்து உலகின் எல்லா மனிதர்களும் அந்தப் பத்து வருஷங்களை மறுபடி வாழ வேண்டும். ஆனால், எதையும் மாற்றக்கூடாது. அதே சினிமா பார்க்கவேண்டும், அதே முதுகுவலிக்கு அதே டாக்டரிடம் போக வேண்டும். அதே தவறான கல்யாணங்கள், தப்பான குதிரைமேல் பணம் கட்டல் எல்லாமே பத்து வருஷத்துக்கு எவ்வித மாறுதலும் தேர்வும் இன்றி திருப்பி வாழவேண்டும். பத்து வருடம் கழித்தபின் மீண்டும் நிகழ்காலத்துக்கு வந்ததும் மனச் சுதந்திரமும் செயல் சுதந்திரமும் திரும்பப் பெறுகிறார்கள். என்ன ஆகிறது? பத்து வருஷமாக ரோபாட் வாழ்க்கை வாழ்ந்து மக்களுக்குப் பழகிப் போய் மறுபடி சுதந்திரம் வந்ததும் பயன்படுத்தத் தெரியவில்லை. குழம்பிப் போகிறார்கள். விபத்துகள் நடக்கின்றன. கவனமில்லாமல் சாலைகளைக் கடந்து செத்துமடிகிறார்கள். தொழிற்சாலை மெஷின்களில் மாட்டிக் கொள்கிறார்கள். இப்படி ஒரு வினோதமான கற்பனைக் கதை.

'சயின்ஸ் ஃபிக்ஷன்' சாத்தியக்கூறுகளுக்கு எல்லையே இல்லை.



எழுத்தாளனுக்குச் சரியான அன்பளிப்பு புத்தகம்தான் என்பதை ஏன் பலர் உணரவில்லை என்று ஆச்சரியப்படுகிறேன். நான் செல்லும் கூட்டங்களில் எல்லாம் கடைசியில் நெட்டி ஜரிகை மாலை அணிவித்து விட்டு பூப்போட்ட காகிதத்தால் மூடி , செல்ஃபேன் டேப் ஒட்டின ஒரு சமாசாரம் 'மெமெண்டோ' என்ற பெயரில் தருவார்கள். மற்றொரு பிள்ளையாரா, தஞ்சாவூர் தட்டா, கடிகாரமா என்று வயிற்றைக் கலக்கும். என்னிடம் இதுவரை 18 கடிகாரங்கள் மிஞ்சியுள்ளன. 48 பிள்ளையார்கள் சிறிசும் பெரிசுமாக அலமாரியில் இருக்கிறார்கள். தஞ்சாவூர் அலங்காரத் தட்டுகளை மாட்ட இடமில்லை. இவ்வகை கூட்டங்களில் மற்றொரு 'யுஃபெமிஸம்' பாத்ரூம் டவலிலிருந்து பவானி பெட்ஷீட் வரை போர்த்தப்படும் 'பொன்னாடை'. இவை அத்தனையையும் என்ன செய்வது என்று திகைத்துக்கொண்டிருந்தேன். எனக்குத் தெரிந்த பட்டிமன்றப் பேச்சாளர் மார்க்கம் சொன்னார். பொன்னாடையை விழாவிலேயே விழாத் தலைவருக்கோ அல்லது ஏற்படுத்தினவருக்கோ உடனுக்குடன் போர்த்தி விடுவது. அல்லது ஒரு வாரத்துக்குள் மற்றொரு விழாவில் மற்றொருவருக்கு அதைப்

போர்த்திவிடவேண்டும் என்றார். பெண்கள் வெற்றிலைப் பாக்குடன் ரவிக்கைத் துணி வைத்துக் கொடுக்கும் போது இதே 'ரீசைக்ளிங்' உத்தியைத்தான் கடைப்பிடிக்கிறார்கள் என்றார். ஒரே ஒரு முறைதான் எனக்கு மிக வித்தியாசமான, மிக கனமான ஒரு அன்பளிப்பு கிடைத்தது. ஒரு அட்டைப் பெட்டி நிறைய எவர்சில்வர் சாப்பாட்டுத் தட்டுகளும் டிபன் தட்டுகளும் டம்ளர்களும் டபராக்களும். கொடுத்தது யார் என்று யூகிக்க முடிந்தால் ஒரு தபால் கார்டில் சரியான விடையான சேலம் ஸ்டீல் நிறுவனம் என்பதை எழுதியனுப்புபவர்களுக்கு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்துப் பரிசு அனுப்புகிறேன். என்ன பரிசு? புத்தகம்தான்!

சின்னஞ்சிறு கதை வரிசையில் இரண்டாவது கதை -



அறைக்குள் நுழைந்ததுமே பானுமதி, பிரபாகர் சார் கையில் தன் புகார் கடிதத்தைப் பார்த்துவிட்டாள். இது எப்படி இங்கே வந்தது**?**

ஈ.டி பாஸ்கர் பட்டாச்சார்யாவும் எச்.ஆர்.டி. மானேஜர் பட்டாபியும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள். கம்ப்யூட்டர் வெற்றாக ஒடிக் கொண்டிருந்தது. கோப்பைகளில் காபி காத்திருந்தது. கண்ணாடிக்கு அடியில் ரமணர் படம். மௌனமான ஏஸி... அவர்கள் பார்வை அவள் மேல் படிந்திருந்தது.

"உக்காருங்க ப்ரபாவதி..."

"பானுமதி சார்..."

"ஸாரி... பானுமதி. உக்காருங்க. இந்த லெட்டரை சேர்மனுக்கு நீங்கதானே எழுதினீங்க?"

பார்க்காமலே, "ஆமா சார்..." என்றாள். "இது எப்படி உங்ககிட்ட..?"

"ப்ரெஸிடெண்ட்கிட்ட புகார் கொடுத்தாலும், கடைசில

எங்கிட்டதாம்மா வந்து தொலைக்கும். நீங்க எனக்கு முதல்ல லெட்டர் கொடுக்காதது ஆச்சரியமா இருக்குது..."

"கொடுத்தேனே சார்! உங்களைச் சந்திக்க அப்பாயின்ட்மெண்ட்கூட கேட்டேன். பி.ஏ. தரவே இல்லை. எப்ப கேட்டாலும், மீட்டிங்ல இருக்கார் என்பார்."

"அப்படியா..? விசாரிக்கிறேன். நெவர் மைண்ட், நீங்க இதுல எழுதியிருக்கிற குற்றச்சாட்டுகளைக் கவனிக்கலாம்..." - கடிதத்தில் அடிக்கோடிட்டிருந்த வரிகளைப் படித்தார், "சேர்மனே அண்டர்ஸ்கோர் பண்ணி இருக்கார். 'பெண் என்கிற ஒரே காரணத்துக்காக எனக்குப் பதவி உயர்வு கொடுக்காமல், பாரபட்சம் காட்டு கிறார்கள். எல்லா தகுதியும் உள்ள என்னைப் புறக்கணித்துவிட்டு ஆர்.கே. மனோகருக்குப் பதவி உயர்வு கொடுத் திருக்கிறார்கள். அவர் மேலிடத்தில்...' இதை கேளுங்க பட்டாபி... 'ஹைலி கனெக்டட்' என்று தெரிகிறது' " மூவரும் எதிர் பார்த்தபடி சிரித்தார்கள். "வெரி ஃபன்னி" - பிரபாகர் அவளைச் சாந்த மாகப் பார்த்த கண்களைச் சந்திக்கத் தயங்கினாள். "இதெல்லாம் என்னம்மா? இவ்வளவு அபாண்டமா புகார் கொடுக்கறதுக்கு முன்னாடி உண்மை தெரிஞ்சுக்க வேண்டாமா? மனோகர் உங்களுக்கு சீனியர் தெரியுமில்லையா?"

பானுமதி படபடப்பாக, "இல்லை சார்! மனோகருடைய ஜாய்னிங் டேட் இருபத்தஞ்சு ஜூன். என் ஜாய்னிங் டேட் பதினெட்டு ஜூன் சார்! ஜூலை பதினெட்டுன்னு தப்பா ரெக்கார்ட்ஸ்ல இருக்குது."

"திருத்தறதுக்கு அப்ளை பண்ணீங் களாம்மா?"

"இதுவரை இருபது அப்ளிகேஷன் போட்டிருக்கேன் சார்... ஹெட் ஆபீஸ்லேருந்து பதிலே வரலை..."

"அதுக்கு நாங்க என்னம்மா செய்ய முடியும்? பட்டாபி. பழைய ரெக்கார்ட்ஸ் எல்லாம் பாத்தியா?"

"சார்.. ஐ நோ திஸ் கேஸ்... இவங்க ஜாய்ன் பண்ணது திருச்சி பிராஞ்ச்ல. அங்க கேட்டோம். அந்த ரெக்கார்ட்ஸ் எல்லாம் ஒரு தடவை மழைல டிஸ்க் கரப்ட் ஆயி வீணாயிடுச்சு. நம்ம ஆபீஸ்ல இருக்கற எண்ட்ரிபடி ஜூலைதான்!"



"உங்க குற்றச்சாட்டு, நீங்க ஒரு பெண்ங்கறதால நாங்க பிரமோஷன் கொடுக்கலைங்கறீங்க. டு யு ரியலி மீன் தட்?" என்றார் பிரபாகர், பாழாய்ப் போகிற புன்னகையுடன்.

"அப்படித்தான் சார்! உங்களுக்குத் தெரியாது... இந்த ஆபீஸ்ல என்னவெல்லாம் பேச்சு கேட்க வேண்டியிருக்கு தெரியுமா? 'பேசாம வீட்ல இருந்துகிட்டு புருஷனையும் மாமியாரையும் குழந்தையை யும் பாத்துக்காம இங்க வந்து கழுத்தறுக்கறாளுகப்பா'னு இதோ இவரே பேசியிருக்கார்."

"நானா..?" என்றார் பட்டாபி அதிர்ந்து - "பொய்... பொய்..."

"ஆமா சார்... நீங்கதான் என் ரூம்ல... நல்லாவே கேட்டுது. இவர் யார் சார் என் வீட்டு விஷயத்தைப் பேசறதுக்கு. நீங்க எல்லோருமே ஆணாதிக்கம் பண்றீங்க, பெண் களுக்கு ஓவர்டைம் கிடையாது.

பாத்ரூமுக்கு லொங்கு லொங்குனு மாடி ஏறிப் போகணும். எனக்கு பிரமோஷன் கிடைச்சாலும் கிடைக் காட்டாலும், சொல்லியே தீருவேன்... பெண் பிள்ளைகளுக்கு மேம்போக்கான அனுதாபம்தான் தருது. இந்த சமூகமே அதான் சார். சுரண்டினா எல்லோரும் மேல்ஷாவினிஸ்ட்டுங்க. 33 பர்சன்ட் ரிசர்வேஷன் பார்லிமெண்ட்ல பேசறீங்களே... வரும்ங்கறீங்களா? வரவே வராது! பேசிப் பேசி மாய்வீங்க."

# சமநீதி

"ஆச்சா... இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா? எங்க ஆரம்பிச்சு எங்க போய்ட்டீங்க. இதுக்கெல்லாம் நாங்க என்னம்மா செய்ய முடியும்?"

"எல்லோருமே செய்ற சதி. எனக்கு பிரமோஷனும் வேண்டாம். ஒரு எழவும் வேண்டாம். ரிஸைன் பண்ணித் தொலைக்கிறேன். தினம் ராத்திரி கிரைண்டர்ல மாவு அரைச்சுட்டு, காலைல அஞ்சு மணிக்கு எழுந்து மாமியா ருக்குப் பத்திய சாப்பாடு சமைச்சு எடுத்து வெச்சுட்டு, பிள்ளைங்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிட்டு, புருஷனுக்கு கைக்குட்டை, மாத்திரை எல்லாம் எடுத்துக் கொடுத்துட்டு, எல்லா துணியையும் உலர்த்திட்டு ரெண்டு பஸ் பிடிச்சு ஆபீஸுக்கு வந்தா. இப்படி நியாயமா கொடுக்கவேண்டிய பிரமோஷனை கொடுக்கிறதில்லை" - அவள் கண்ணீர் உகுத்தாள். கைப்பையிலிருந்து சின்ன கைக் குட்டையை எடுத்து துடைத்துக் கொண்டாள். ஒரே நிமிஷத்தில் சுதாரித்துக்கொண்டாள். அவர்கள், அழுது முடிக்கும் வரை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"ஐம் ஸாரி... நான் வரேன்" என்று எழுநதாள்.

" ஒரு நிமிஷம் பானுமதி. உக்காருங்க. உணர்ச்சிவசப் படறீங்க. பிரமோஷன்ல இமோஷன் கூடாது. வீட்ல பிரச்னை எல்லோருக்கும் இருக்கு. எனக்கு இல்லையா... பட்டாச்சார்யாவுக்கு இல்லையா?"

"யு ஆர் டெலிங் மீ?" என்று கண்ணைச் சுழற்றினார் பட்டாச்சார்யா.

"ஆபீஸ்ல அநியாயம் நடந்திருந்தா திருத்தவேண்டியது ஈ.டி-ங்கற வகையில் என் கடமை. இதில் ஆண், பெண் வித்தியாசம் எதுவும் கிடையாது. நீங்களா கற்பனை பண்ணிக்கிட்டா எங்களால எதுவும் செய்ய முடியாது. வி கோ பை தி ரூல்ஸ். நீங்க சேர்மனுக்கு த்ரூ ப்ராபர் சேனல் இல்லாம நேரடியா எழுதினது கம்பெனி ரூல்ஸ்படி தப்பு. அதுக்காக உங்களுக்கு காஷன் மெமோ கொடுக்கணும். நான் அப்படிச் செய்யப் போற தில்லை. அதுக்குப் பதிலா சேர்ந்த தேதி ரெக்கார்ட்ல தப்பா இருக் குனு நீங்க சொல்றதை நம்பறோம். அதை ஏத்துக்கிட்டு உங்களுக்கு பிரமோஷன் கொடுக்கறோம். ஆபீஸ்னா உங்களுக்கு டேபிள், லெட்ஜர் கம்ப்யூட்டர் டெர்மினல் இதோட சரி... என்னுடைய

ஆங் கிள்ல இந்த ஆபீஸ் ஒரு ஆலமரம் போல. எல்லோருக்கும் நிழல் கொடுக்கணும். எல்லோரையும் திருப்திபடுத்தணும். பதவி உயர்வு தர்றப்ப ஆல் இண்டியா சீனியா ரிட்டி, லோக்கல் சீனியாரிட்டி ரிசர்வேஷன் எல்லாத்தையும் மனசுல வெச்சுக்கிட்டு இயங்கணும்."

"எனக்கு நடந்த அநியாயத்தை சொல்லாம இருக்க முடியுமா சார்.."

"அநியாயம் இல்லைம்மா... க்ளெரிக்கல் எர்ரர். திருத்தியாச்சு. போங்க. உங்களுக்கு பிரமோஷன் ஆர்டர் காலைல டேபிள்ல இருக்கும்."

பானுமதி கண்களைத் துடைத்துக் கொண்டு, "தாங்க்ஸ் சார்! மனசு புண்படும்படியா படபடப்புல பேசிட்டேன். மன்னிச்சுக்கங்க."

"மன்னிப்பு எல்லாம் வெறும் வார்த்தை. பெண் என்கிறதால பாரபட்சம் காட்டறோம், அலட்சியப் படுத்த்றோம்னு மட்டும் தயவுசெய்து சொல்லாதீங்க. பெண்களைப் பெரிசா மதிக்கற எங்களுக்கு அதுதான் மனசு புண்படுது. அந்த மாதிரி எண்ணம் யாருக்கும் கிடையாது . சந்தோஷமா போங்க. எல்லோருக்கும் ஸ்வீட் கொடுங்க."

அவள் சென்றதும் பட்டாபி, "தட் வாஸ் சூப்பர் சார்!" என்றார்.

பிரபாகர், "வெவகாரம் புடிச்ச பொம்பளய்யா... ஃபெடரேஷன் ஆசாமியா..."

"கொஞ்சம் வாயாடி. வேலை நல்லா செய்யுது. சி.ஆர். நல்லா இருக்கு."

"தர்ட்டி எய்ட் இருக்கும்."

"வயசா..."

"இல்லை. பட்டாபி... நீதான் அங்கயே பாத்துக்கிட்டு இருந்தியே.. பிரமோட் பண்ணலாம் இல்லையா.."

"தாராளமா. ரெண்டு வேக்கன்ஸி இருக்கு சார்... ஒண்ணு, ஹெட் ஆபீஸ்ல. மற்றது, அகர்தாலாவில..."


"அகர்தாலா எங்கய்யா இருக்குது?"

"திரிபுராவில..."

"அவங்கள அங்க போஸ்ட் பண்ணிடு..."



# டாட்காம் எச்சரிக்கை



**வை**கோ, கமல்ஹாசன் இருவருடனும் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தின் தனித்திரையாடலில் பங்கு கொண்டேன். வைகோ-வை முதலில் அருகில் சந்திக்கிறேன் (இதற்கு முன்பு டி.டி.கே. சாலையில் நாள் முழுவதும் தொடர்ந்த எழுச்சிப் பேரணியின் இறுதியில் பார்த்தது. போன வாரம் ஸ்டார் டி.வி-யின் Big Fight நிகழ்ச்சியில் அவர் தமிழ் ஈழத்தை ஐர்லாந்து பாலஸ்தீன கோரிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பேசியது மனதில் பதிந்தது)! க.கொ. படத்தில் தெரியும் கவிதை ரசனையையும் நல்ல தமிழையும் வைகோ பாராட்டினார். 'நல்லவேளை... சீட்டு கம்பெனிக்காரனுக்கு அந்தப் பெண்ணைக் கல்யாணம் கட்டாமல் முடித்தீர்கள்' என்றார்.



கமல் தமிழ்ப் படங்கள் வெற்றிபெற வேண்டிய தன் அவசியத்தைக் குறிப்பிட்டு, மற்றவர் படம் பண்ணுவதற்குத் தைரியம் அப்போதுதான் கிடைக்கும் என்றார். Mis-en-Scene பற்றி ஒரு விளக்கம் தந்தார். 'கண்டு கொண்டேன்' தமிழ் சினிமாவின் ஆறு ஸாங், ஃபாரின் லொக்கேஷன் (ஒரு ஃபைட்கூட உள்ள) ஃபார்முலாவுக்கு உட்பட்டும் ஒரு அடர்த்தியான கதையை சுவாரஸ்யமாகச் சொல்ல முடியும் என்பதற்கு உதாரணம்.

தியோடோர் பாஸ்கரன் இதை ஐம்பதுகளின் ஃபார்முலாவுக்கு இரண்டாயிரத்தின் வடிவம் என்றார். காலித் முகம்மது, கனிமொழி போன்றவர்களும் விமரிசனத்தில் இதைக் குறிப்பிட்டிருந்தார்கள். கவிதை, கர்னாடக சங்கீதம் எல்லாமே கதையின் அம்சமாக இருக்கும்போது அது திணிக்கப்பட்டதாக உணரவில்லையென்றால் மக்கள் சம்மதம் பெறுகிறது. இந்தப் படத்தில் நாங்கள் வைத்திருந்த 'சப்டெக்ஸ்ட்'களையும் பலர் கண்டு கொண்டார்கள். இன்டர்நெட்டிலும் உருக்கமான பாராட்டுக் கடிதங்கள் வந்தன. ஒரு சில பத்திரிகைகள் மட்டும் படத்தை நாராகக் கிழித்திருந்ததில் கிழித்தவர் யார் என்பது தெரிந்ததும் ஆச்சரியம் விலகியது. சினிமா உலகில் பல டைரக்டர்களுக்குப் படம் பிடித்திருந்தது (உதாரணம் ஷங்கர்). சில டைரக்டர்கள் உதட்டைப் பிதுக்கினார்கள்.

கடுமையாக விமரிசித்த ஒரு பத்திரிகை ஆசிரியையை விசாரித்தபோது, "விமரிசனம் செய்த பெண்மணிக்குத் தமிழ் தெரியாது... ஸாரி" என்றார். விமரிசன நேர்மை எல்லோரிடமும் இருக்கும் என்று சொல்ல முடிவதில்லை. படத்தில் எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தால் தியேட்டரில் நுழையும்போதே இறுக்கமான மனோபாவங்களுடன் படத்தை அழித்தே தீருவது என்ற தீர்மானத்துடன் சிலர் நுழைகிறார்கள். இதற்கு சினிமாவுக்கு அப்பாற்பட்ட காரணங்கள் பிரதானமாக இருக்கின்றன. இந்தப் படத்தை ஒரு செலுலாய்டு காவியம் என்று சொல்ல மாட்டேன். ஆனால், முன் தீர்மானம் இல்லாமல் திறந்த மனதுடன் பார்த்தவர்களுக்குப் படம் பிடித்திருந்தது தெளிவாகத் தெரிந்தது.

**ஆ**ங்கில இண்டியா டுடே இதழ் 'தி ந்யூ நிர்வாணா' என்ற இன்டர்நெட் இணையத்தைப் பற்றி ஒரு சிறப்பிதழ் கொண்டுவந்திருக்கிறது. (விலை ரூபாய் 50). அச்சுக்கலையில் இந்தியத் தொழில் நேர்த்தியின் ஒரு முக்கிய உதாரணம் என்று இதைச் சொல்லலாம். விளம்பரங்களின் பராமரிப்பில்


அழகான வடிவமைப்பு.

உலகெங்கிலும் இன்டர்நெட்டில் இணைந்தவர்களின் எண்ணிக்கை நேற்றுச் சாயங்காலம் வரை 22 கோடி. இந்தியாவில் 30 லட்சம். ஆனால், மேலை நாடுகளை வலையில் இணைப்பதில் இந்தியர்களின் பங்கு கணிசமானது. போராசிரியர் இந்திரேசன் அண்மையில் சொன்னது போல் முன்னேற்ற நாடு என்பதற்கு அடையாளம் பின்னேற்ற நாடுகளின் மூளை சக்தியைப் பயன்படுத்துவதே. ஜெர்மனி, அமெரிக்கா, ஏன் கொரியா கூட இந்திய மென்பொருள் திறமையை உணர்ந்துகொண்டு வெயிலையும் சிறு மேம்பால அவஸ்தைகளையும் பொருட்படுத்தாமல் சென்னைக்கு வந்து நம் ஜாவா எச்டிஎம்எல் மென்பொருளாளர்களை அள்ளிச் செல்கின்றன. அண்மையில் நடந்த ஐடி சந்தையில் ஒரே நாளில் நாலாயிரம் பேருக்கு வேலை கிடைத்ததாம்.

இப்போதெல்லாம் கல்யாணகாலம் வருமுன் பெண்கள் பரதநாட்டியத்துக்குப் பதில் கம்ப்யூட்டர் (ஜாவளிக்குப் பதில் ஜாவா) கற்றுக்கொள்கிறார்கள். ஆண்கள் தத்தம் ஆதார இளங்கலைப் படிப்பை மறந்து வலையில் விழுந்து அமெரிக்க கான்சல் வாசலில் எச் ஒன் தவம் கிடந்து ஜிஆர்ஈ டோஃபெல் விமானம் பிடித்து மற்றொரு ஸுபீர் பாட்டியாவாகும் கனவுடன் ஸாண்டா கிளாரா போகிறார்கள். இன்டர்நெட்டில் விளம்பரம் செய்து அதிலேயே விடியோ அனுப்பி பேசி கல்யாணத்தைத் தவிர, மற்ற தெல்லாம் முடிவு செய்துவிட்டு இருவரும் ஒரு வாரம் தத்தம் மினரல் வாட்டர் பாட்டில்களுடன் திரும்பி வந்து உட்லண்ட்ஸில் விவாகிக்கிறார்கள். முதல் பூரண இன்டர்நெட் திருமணம் நம் நூறாவது கோடி பிரஜை பிறந்த கையோடு நிகழ்ந்ததாம் (வர்ச்சுவல் தாலி, ரியல் ஆடியோவில் மாங்கல்யம் தந்துனானே).

இந்தியா டுடே மலரில் ஐடி பெருந்தலைகளான அஷோக் ஸூஅட்டா (முன்னாள் விப்ரோ, இந்நாள் மைண்ட் ட்ரீ), நாராயணமூர்த்தி (இன்ஃபோசிஸ்), அஜித் பாலகிருஷ்ணன் (ரிடிஃப்) போன்றவர்கள் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். நாராயண மூர்த்தியின் கட்டுரையில் சுவாரஸ்யமான பல விஷயம் இருக்கிறது. தன் அலுவலகத்துக்கு அருகே உள்ள ஏடிஎம் (ATM) தானியங்கி காசியந்திரத்தில் எண்களை ஒத்திப் பணம் பெறும் கடைநிலை ஊழியரை, "இதில் என்ன பலன்?" என்று கேட்டபோது, ஒரு புரட்சிகரமான கருத்தை தெரிவித்தாராம். "இந்த மெஷின் வாடிக்கையாளர்களிடையே பாரபட்சம் காட்டுவதில்லை. மனிதர்கள் பணிபுரியும் வங்கியில் போல டை கட்டினவர்களை முதலில்

கவனிப்பதில்லை. அது எனக்குப் பிடித்திருக்கிறது" என்றாராம். இன்டர்நெட்டும் அப்படித்தான். பில்கேட்ஸும் பிச்சைக்காரரும் அதற்கு ஒன்று. நம் நாட்டில் அரசு செயல்பாட்டைத் திறந்து காட்டி லஞ்சம் நீக்க அது பயன்படும். இணையம் இளைஞர் ராஜ்யம். வாயிலிருந்து நிப்பிள் பிடுங்கப்பட்ட கையோடு வலையுலவும் காலம் இது. பதினைந்து வயசு ரிஷிபட் பத்து வயசிலிருந்து அமைத்த தன் இன்டர்நெட் கம்பெனியை அண்மையில் விற்று ஏழரை லட்சம் டாலர் (32 கோடி ரூபாய்) செய்தானாம். இன்றைய தாரகமந்திரம் dot com.





ஒரு எலி, ஒரு கோக், ஒரு பீட்ஸா போதும் டாட்காம் கம்பெனி வைப்பதற்கு. உயர்வுநவிற்சிகளை மீறிய ஒரே ஒரு சிறிய எச்சரிக்கைக் குரல் கொடுக்க நான் விரும்புகிறேன். இணையத்தில் நிஜமாகப் பணம் பண்ணியவர்கள் சொற்பமே. எல்லோரும் ஒரே உதாரணத்தைச்

சொல்கிறார்கள் (அமேஸான்). பணம் பண்ணுவதாகச் சொல்லி ஐ.பி.ஓ. ஆஃபர் செய்து பங்குகளைத் தக்க தருணத்தில் விற்று அக்கடா என்று ஒரு வருஷத்தில் பெயர் மாற்றி அடுத்த கம்பெனி ஆரம்பிப்பவர்கள்தான் அதிகம். ஒரு ராத்திரியில் உலகிலேயே அதிக பணக்காரராகலாம், மறுநாளே சரியலாம். 'வேப்பர் வேர்' அதிகம்.

இந்த இயலின் நிஜமான இன்பங்களான க்ரிப்டாலஜி, டிஎஸ்பி கம்ப்ரெஷன், ரூட்டிங் அல்காரிதம்கள், ப்ரோட்டொகால்கள், டிஸிபிஐபி, ஏடிஎம் (இது வேறு ஏடிஎம்), டேட்டா வேர் ஹவுஸிங், டேட்டா மைனிங் போன்றவற்றைக் கற்க ஒரு மாசம் போதாது. எனக்கு சுயவிலாசமிட்ட ரிப்ளை கார்டு அனுப்பினால் இன்டர்நெட்டில் பயன்படும் எக்ஸ்எம்எல், கோல்ட் ஃப்யூஷன், விபி ஸ்க்ரிப்ட் போன்ற முப்பது வார்த்தைகள் அனுப்புகிறேன். வார்த்தைகளை மட்டும் கற்றுக்கொண்டு ஆறு மாசம் ஜல்லியடிக்கலாம். ஒரு டாட்காம் கூடத் துவங்கலாம் (தவறாமல் பிறந்த தேதியையும் ஒரு பூ பெயரும் குறிப்பிடவும்).

எனக்கு வந்த ஹைக்கூ தொகுப்புகளில் பிடித்த இரண்டு கவிதைகள் இவை-


'நீண்ட அலகு நாரை
நீரைக் கொத்தினாலும்
நீங்காத நிலா'

(அமுதபாரதி - 'நூறு நிலா')

'கலவரத்திலும்
புன்னகை மாறாமல்
சிலைகள் -

(ஜி. மாஜினி - 'கடைசி நேரக் கையசைப்பு)'

# மாட்ச் ஃபிக்ஸிங்!



மனோஜ் பிரபாகர், கபில்தேவ் எல்லாம் பிறப்பதற்கு முன்பே, நாற்பதுகளிலேயே 'மாட்ச் ஃபிக்ஸிங்' இருந்திருக்கிறது. எங்கள் கீழச்சித்திரை வீதி கிரிக்கெட் டீமுக்கும் வடக்கு அடைய வளைஞ்சான் டீமுக்கும் நடைபெற்ற அந்தச் சரித்திரப் பிரசித்திபெற்ற மாட்ச்சில், இருதரப்பிலும் ஃபிக்ஸிங் நடந்ததைதான் சொல்கிறேன்.

சாதாரணமாக நாங்கள் வடக்கு அடைய வளைஞ்சான் பக்கம் மாட்ச் விளையாடப் போகமாட்டோம். முரடர்கள். தோற்க ஆரம்பித்தால் திட்ட ஆரம்பிப்பார்கள். அங்கே போய் ஆடுவது, அபாயத்தை விலைக்கு வாங்குவதாகும். தவிர்க்க முடியாவிட்டால், கழுதை மண்டபம் போன்ற 'நியூட்ரல்' மைதானத்தில் ஆடுவோம். அவர்கள் வீதியில் அவர்களை ஜெயிக்கவே முடியாது!

அந்த வருஷம் (1948) எங்கள் டீமில் வீரராகவன், சீமாச்சு என் அண்ணன் கிச்சாயி போன்ற ஸ்டார் பிளேயர்களும் என் போன்ற இளம் ரத்தங்களும் சேர்ந்திருந்ததால், பழைய எதிரியான அவர்களைச் சீண்டிப் பார்க்கலாம் என்று டீமின் போர்டில், தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து, மானேஜர் ராமுவைத் தூதுவிட்டோம். 'எக்காரணம் கொண்டும் அவர்கள் வீதியில் போய் ஆடச் சம்மதிக்கக்கூடாது. மற்றதெல்லாம் பரவாயில்லை' என்று முடிவு எடுக்கப்பட்டது. "வேணுமென்றால், கோரதமுட்டியில் இருக்கும் பிட்ச் சுமாராக, அங்கங்கே சாணித்திட்டாக இருந்தாலும் ஆடத் தயாராக இருக்கிறோம்..." என்று சொல்லி நானும் உபதூதனாக அனுப்பப்பட்டேன்.

அங்கே தோள்மேல் கை போட்டுக்கொண்டு போன போது, மதிலை ஒட்டிய அரசமரத்தடியில் கேரம் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

காராம்பசுக்கள் அகத்திக்கீரையை மென்று கொண்டிருக்க, சம்பிரதாயப்படி மேலும் கீழும் அசுவமேதக் குதிரை போல நடந்தோம்.

கால்சராய் போட்டிருந்தவன் எழுந்து வந்து, "என்னடா..?" என்றான்.

"மாட்ச் வரீங்களா..?"

"கிரிக்கெட்டா, கிட்டிப்புள்ளா..?"

"கிரிக்கெட்... கையெழுத்து மாட்ச்..!"

கையெழுத்து மாட்ச் என்றால் என்ன என்பதை சற்றே விளக்குகிறேன். வில்ஸ், பெப்ஸி கோப்பை போல, மாட்ச்சில் ஜெயித்ததற்குப் பெரிய அங்கீகாரம்... தோற்ற டீம் காப்டன், ஜெயித்த டீமின் ஸ்கோர்ஷீட்டில் கையெழுத்திட வேண்டும். புறநானூற்றுக் காலத்துப் புறமுதுகுக்கு ஈடான அவமானம் இது. கையெழுத்துப் போடும் நேரத்தில் தள்ளிவிடுவது, அசக்குவது அல்லது இருப்பதிலேயே குழந்தையாக இருப்பவனைக் கையெழுத்துக்கு மட்டும் காப்டனாகப் போடுவது... இப்படிப் பல இடர்ப்பாடுகள் அதற்கு உண்டு.

"எங்க டீம் பத்தித் தெரியுமில்லை..? கோபால் ஆடறான்..."

"தெரியும்! ஸ்டம்பு, பந்து நாங்க பாத்துக்கறம். உங்க பேட்டு, நீங்க கொண்டுவாங்க.... எங்க பேட்டு நாங்க..."

"கார்க் பாலா..?"

"இல்லை... டென்னிஸ் பால்! கார்க் பால் படாத எடத்துல பட்டுடும். அதெல்லாம் நாங்க பாத்துக்கறோம். நீங்க வந்து ஆடினா போதும்..."

"நாங்க வரணுமா..? என்ன கதை இது..?"

"நாங்க வரமாட்டம்..."

"ஏன்..?"

"எங்க டீம் ரூல்ஸ் அப்படி..."

இதற்குள் திறந்த பட்டன் தங்கராசு வந்து, "பாரு தயிர்வடைங்களா...

எங்க வாணா வந்து ஆடறம். தங்கச்சிங்கள்லாம் பார்க்க வருவாங்கல்ல..? வைத்தி பொண்ணு மாலா இருக்குதா, ஊருக்குப் போயிருச்சா..?"

"அதெல்லாம் தெரியாது... நாங்க பேச வந்தது கிரிக்கெட்..."


"உங்க தெருவுக்கு வரதுக்கு ஒரே கண்டிஷன்... எங்க அம்பயர், எங்க ஸ்கோரர்..."

பேச்சுவார்த்தை அங்கேயே முறிந்தது. நாங்கள் திரும்பிவந்து, நடந்ததைச் சொல்ல, மிகுந்த மந்திராலோசனைக்குப் பிறகு ஒரு 'லெக் அம்பயர்' வைப்பதாகவும் அவர்கள் ஸ்கோரருக்கு அருகிலேயே எங்கள் தணிக்கை அதிகாரி ஒருவனை நியமிக்கலாம் என்றும் தீர்மானித்து ஒப்புக்கொண்டோம்.

அந்த மாட்ச் மாலை நாலு மணிக்குத் துவங்கியது. டாஸ் போட்டு விழுந்த காசைப் பார்க்க விடவில்லை. "ஜெயிச்சாச்சு" என்று குதித்துக் கொண்டு சென்றார்கள். அங்கேயே 'ஃபிக்ஸிங்' துவங்கியது. பேட்டிங் எடுத்துக் கொண்டார்கள். முதல் ஓவரிலேயே ஒரு அப்பட்டமான ரன்-அவுட் அவர்கள் அம்பயர் கொடுக்கவே இல்லை. பாதி பிட்ச்சில் பேட்ஸ்மேன் வரும்போதே, ஸ்டம்ப்பை வீழ்த்திவிட்டோம். பந்து படவில்லை என்று அவுட் தரவில்லை. பௌலர் மறைத்துவிட்டான் என்று மற்றொரு ரன்-அவுட் தரவில்லை. இந்தத் தைரியத்தில், தொட்டுத் தொட்டு ஓடினார்கள்.

எங்கள் 'மொரேல்' கவிழ்ந்தது. அந்த நாட்களில் ஆக்ஷன் ரீ-ப்ளே, தேர்ட் அம்பயர் எதுவும் இல்லை. நாங்கள் வெளிநடப்பு செய்ய விரும்பினோம். "கையெழுத்துப் போட்டுவிட்டுப் போ" என்றனர். வேறு வழியின்றி மாட்ச்சைத் தொடர வேண்டியிருந்தது. எல்லோரையுமே போல்டு செய்து அவுட் ஆக்கினால்தான் உண்டு. அதிலும் சிக்கல் வந்தது. போல்டானதும் "நோபால்" என்று அவர்கள் அம்பயர் கத்துவான். அதற்காகவே இன்னொரு க்ரீஸ் கீறிக்கொண்டோம்.

இத்தனை எதிர்ப்புகளுக்கும் இடையில் மூன்று விக்கெட் வீழ்த்தினோம். வீரராகவன் அப்படி ஃபாஸ்ட் போடுவான். எங்கள்



இத்தனை எதிர்ப்புகளுக்கும் இடையில் மூன்று விக்கெட் வீழ்த்தினோம். வீரராகவன் அப்படி ஃபாஸ்ட் போடுவான். எங்கள்

கணக்கின்படி நாற்பது ரன் எடுத்திருந்தார்கள். கோபால் என்பவன் அப்போதுதான் இறங்கியிருந்தான். பத்து ரன் எடுத்திருப்பான். அவர்கள் தரப்பு ரசிகர்கள் "கோபாலு அம்பது... கோபாலு அம்பது..." கைதட்டினார்கள்.

"என்னய்யா இது அநியாயம்... மொத்த ஸ்கோரே அம்பது ஆகவில்லை..." என்று விசாரித்தால், "ஸ்கோர்ஷீட்டைப் பாரு... உங்க ஆளுதான் பக்கத்திலேயே இருக்கானே, கழுகாட்டம் பார்த்துக்கிட்டு..."

பிச்சுவைக் கேட்டபோது, "அப்பப்ப எனக்கு எதையாவது கொடுத்துட்டு, அநியாயமா ஸ்கோர் ஏத்திடறாண்டா... இந்த மாட்ச்சுக்கு ஒப்புத்துண்டிருக்கவே கூடாதுடா..." என்றான்.

அவர்கள் எல்லா விக்கெட்டும் விழ, சூரியன் விழுந்துவிட்டது. வெளிச்சம் போதவில்லை, டிரா என்று சொல்வதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

அவர்கள் மொத்தம் நூற்றைம்பது ரன் என்றார்கள். அநியாயம்... நாங்கள் ஆடிப் பார்த்தோம். வெளிச்சம் கம்மி. எங்கள் மனோநிலையும் தாழ்ந்திருந்தது. இப்போது எதற்கெடுத்தாலும் கைதூக்கத் தயாராக, அவர்கள் அம்பயர். நான் மண்டியிட்டு அடித்த பந்தை எல்பிடபிள்யூ கொடுத்தான்.

எல்லாம் சேர்ந்து, கீழச்சித்திரை வீதி சரித்திரத்திலேயே குறைந்த டோட்டலான இருபத்தைந்து ரன்னுக்கு எல்லோரையும் கவச குண்டலங்களுடன் இழந்தோம்.

இறுதியில், அவர்கள் ஆரவாரமாக அரசியல் கட்சி போல் ஊர்வலம் கிளம்பி, சாவுக்காரச் சத்திரத் திண்ணையில் வைத்து எங்கள் காப்டன் பட்டம்பியிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு, "தோத்தாங்குள்ளி... தோலைப்புடுங்கி..." என்று கெரஸின் டின்னில் தாளம் போட்டுக்கொண்டே ஓடினார்கள். அவமானத்தால் நான் குன்றிப் போனேன். ராத்திரி சாப்பாடு, தூக்கமில்லை. லட்டு மாதிரி ஒரு காட்ச்சை வேறு கோட்டைவிட்டிருந்தேன்.

பட்டம்பிதான் சமாதானப்படுத்தினான்.

"ரங்கி, உன்கிட்ட ஒரு ரகசியம் சொல்லட்டுமா..?" என்றான்.

"என்ன..?"

"கையெழுத்துப் போட்டேனே... அது என்னுது இல்லை!"

"பின்ன..?"

"லாலா லஜ்பத்ராய்னு போட்டுட்டேன்..." என்றான்.

யோசித்துப் பார்த்தால், மகாபாரத காலத்திலிருந்தே மாட்ச் ஃபிக்ஸிங் இருக்கிறது.

# மூன்று துறவிகள்!



ஒரு டால்ஸ்டாய் சிறுகதை...

ஒரு பாதிரியார் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடன் தேவாலயங்களுக்குச் சென்று தரிசிக்கப் பலர் பயணம் செய்தனர். வானிலை மென்மையாக இருந்தது. யாத்திரிகர்கள் மேல்தளத்தில் சின்னக் கும்பல்களாகப் பேசிக்கொண்டு பயணம் செய்தனர். பாதிரியார் அங்கு வந்து நடை பழகியபோது, சிலர் ஒரு மீனவன் பேச்சை சுவாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருப்பதைக் கண்டார். அவன் கடலைக் காட்டி, ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான்.

கடலலையில் சூரிய சரிகையைத் தவிர, எதுவும் தென்படவில்லை. அருகே சென்றார். அவரைப் பார்த்ததும் அவர்கள் தத்தம் தொப்பிகளைக் கழற்றிவிட்டு மரியாதை செய்தார்கள். பாதிரியார் "குறுக்கிட விரும்பவில்லை. இந்த நல்ல மனிதர் என்ன பேசிக் கொண்டிருந்தார் என்று அறியவே வந்தேன்..." என்றார். சற்றுத் தைரியமான ஒரு வியாபாரி முன்வந்து, "இந்த மீனவன் துறவிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்..." என்றார்.

"துறவிகளா..? எனக்கும் சொல்லுங்களேன்..." என்று அருகே இருந்த பெட்டிமேல் உட்கார்ந்தார்.

மீனவன், "அய்யா... அதோ, தூரத்தில் தெரிகிறதே சிறிய தீவு... அதில்தான் அந்த மூன்று தனியர்களும் இருக்கிறார்கள். ஆன்மாக்களைக் காப்பாற்றுகிறார்கள்..."

பாதிரியார் கவனமாகப் பார்த்தார். ஜொலிக்கும் கடல்பரப்பைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை.

"எனக்குத் தெரியவில்லை. ஆனால், யார் அந்தத் துறவிகள்..?"

"புனிதர்கள். அவர்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டேன். போன வருஷம்தான் சந்திக்க முடிந்தது. மீன்பிடிக்கச் சென்றிருந்தபோது இரவில் திசைதவறி அந்தத் தீவில் ஒதுங்கினேன். காலை எழுந்து மணலில் திரிந்தேன். ஒரு மண்குடிசையைப் பார்த்தேன். ஒரு முதியவர் வெளியே வந்தார். அவரை இருவர் தொடர்ந்தனர். எனக்கு உதவி செய்தார்கள்..."

"அவர்கள் எப்படி இருந்தார்கள்..?"

"ஒருவர் சிறிய வடிவத்தினராக, முதுகு வளைந்து பாதிரியாரின் அங்கி அணிந்து, நூறு வயசுக்கு மேலிருக்கலாம்... தாடியின் நிறம் ஏறக்குறைய பச்சை சாயல் பெற்றுவிட்டிருந்தது. சதா புன்னகைக்கும் தேவதை போல முகம். இரண்டாமவர் சற்று உயரம். அவரும் வயசானவர்தான். உழவனின் கந்தலான அங்கி அணிந்திருந்தார். தாடி மஞ்சள் பழுப்பு. வலுவான மனிதர். நான் வருவதற்குள் என் கவிழ்ந்த படகை ஒரு வாளியைப் போல நிமிர்த்தி விட்டார். மூன்றாமவர் மிக உயரம். வெண்தாடி முழங்கால் வரை நீண்டு இருந்தது. தொங்கும் புருவங்கள். இடுப்பில் பாய் மட்டும் கட்டியிருந்தார்.."

"உன்னுடன் பேசினார்களா..?"

"மௌனமாகவே இருந்தனர். ஒருவருக் கொருவர்கூடச் ஜாடையில்தான் பேசினார்கள். உயரமானவரிடம் 'இந்தத் தீவில் அதிக நாள் வாழ்கிறீர்களா..?' என்று கேட்டதற்கு, அவருக்குக் கோபம் வந்துவிட்டது. மிக வயதானவர் அவர் கையை எடுத்துச் சமாதானப் படுத்தினார். 'எங்களை மன்னித்துவிடுங்கள்' என்று சொன்னார். மீண்டும் புன்னகைதான்..."

" மீனவன் பேசிக்கொண்டிருக்க, கப்பல் அந்தத் தீவை நெருங்க... கறுப்பாக, தீற்றலாக ஒரு தீவு தெரிந்தது. கப்பலின் மாலுமியை விசாரித்தார்.

"அதுவா... அதற்குப் பெயர் கிடையாது. இம்மாதிரி பல தீவுகள் இங்குள்ளன..."

"அங்கே மூன்று துறவிகள் வாழ்கிறார்கள் என்பது உண்மையா..?"

"மீனவர்கள் சொல்கிறார்கள். கதையாகவும் இருக்கலாம்..."

"நான் அவர்களைச் சந்திக்க என்ன செய்யவேண்டும்..?"

"அருகில் கப்பல் போக முடியாது. படகை இறக்கி, அதில் போகலாம். அதற்கு நீங்கள் கப்பலின் காப்டனுடன் பேசவேண்டும்..."

காப்டன், "ஏற்பாடு செய்யலாம். பயணம் தாமதமாகும். ஆனால், எதற்கு..? அந்த முட்டாள் கிழவர்கள் அதிகம் பேசமாட்டார்களாம். தங்களைப் போன்ற புனிதர்கள் சந்திக்க லாயக்கு இல்லாதவர்கள்..."

"நான் அவர்களைப் பார்க்க வேண்டும். தாமதத்துக்கு நான் பணம் கொடுத்துவிடுகிறேன். ஒரு படகு ஏற்பாடுசெய்யுங்கள்..." என்றார் பாதிரியார். காப்டன் ஒப்புக்கொண்டு கப்பலைத் திசைதிருப்பி, அந்தத் தீவை அணுக... மெள்ள மெள்ளத் தீவும் அதன் பாறைகளும் தெரிந்தன. அருகே சென்றதில் துறவிகளில் ஒருவர் தெரிந்தார். நங்கூரம் பாய்ச்சி, பாய்மரங்களைச் சுருட்டி, கப்பலை நிறுத்திப் படகை இறக்கினார்கள். பாதிரியார் ஏணி வழியே இறங்கிப் படகில் உட்கார, படகோட்டிகள் துடுப்புப் போட, படகு தீவை அடைந்தது. துறவிகள் மூவரும் கடற்கரையில் காத்திருந்தார்கள். வயசானவர்கள். மூவரும் பாதிரியாரை வணங்கினார்கள். அவர்களை ஆசீர்வதித்துவிட்டு பாதிரியார் சொன்னார்:

"உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன். நான் கிறிஸ்து பெருமானின் பணிவான சேவகன். கடவுளின் கருணையில், அவருடைய குழுவுக்குப் போதிக்க ஏவப்பட்டவன். உங்களைப் பார்க்கவும் உங்களுக்குப் போதிக்கவும் விரும்பினேன்.."

மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு மௌனமாகப் புன்னகைத்தார்கள்.

"ஆத்மாக்களைக் காப்பாற்ற, நீங்கள் மூவரும் என்ன செய்கிறீர்கள்..?" என்றார் பாதிரியார்.

"கடவுளின் சேவகரே, எங்களுக்குக் கடவுளுக்கு எப்படி சேவை செய்வது என்பது எதுவும் தெரியாது..." எனறனர்.

"நீங்கள் கடவுளை எப்படிப் பிரார்த்திக்கிறீர்கள்..?"

"இப்படித்தான்..." மூவரும் வானத்தை நோக்கிச் சேர்ந்து சொன்னார்கள் - "நீங்களும் மூவர்... நாங்களும் மூவர்... எங்களுக்குக் கருணை காட்டுங்கள்..."


பாதிரியார் புன்னகைத்தார்: "பிதா, சுதன், பரிசுத்த ஆவி மூன்றையும் பற்றி அரைகுறையாகக் கற்றிருக்கிறீர்கள். கடவுளை மகிழ்விக்க விரும்புகிறீர்கள். எப்படிச் செய்வது என்பது தெரியவில்லை. உங்கள் மனம் தூய்மையானது. பிரார்த்தனை முறைதான் தப்பு. நான் கற்றுத் தருகிறேன். உலகில் அனைவரும் கடைப்பிடிக்கும் வேதாகமத்தில் சொல்லியிருக்கும் பிரார்த்தனை இது. சொல்லுங்கள்... பரமண்டலத்தில் இருக்கும்..."

மூவரும் ஒவ்வொருவராக 'பரமண்டலத்திலிருக்கும்..." என்றார்கள். "பரமபிதாவே..." முதலில் சரியாகச் சொல்ல வரவில்லை. வார்த்தை குழறியது. தாடி தடுத்தது. பல் இல்லாததால் சொல் தெளிவில்லை. பேராயர் மறுபடி உச்சரித்தார். மூவரும் கஷ்டப்பட்டு உச்சரிக்க முயன்றார்கள். கல்லில் உட்கார்ந்து கொள்ள, அவர்கள் அருகில் நிற்க... திரும்பத் திரும்ப அந்த எளிய பிரார்த்தனையை அவர்களுக்கு நாள் முழுவதும் நூறு முறைக்குமேல் கற்றுக்கொடுத்தார்.

அவர்கள் கஷ்டப்பட்டார்கள். பாதிரியார் விடவில்லை. முழுவதையும் கற்றுக்கொடுத்து, அவர் சொல்வது போலவே சொல்ல வைத்து, அது நெட்டுருவாகித் தாமாகவே சொல்லவும் இருட்டிவிட்டது. திருப்தியோடு புறப்பட்டார் பாதிரியார். மூவரும் அவரை வணங்க, வாழ்த்திவிட்டு "நான் சொல்லிக் கொடுத்தது போல்தான் நீங்கள் பிரார்த்தனை செய்யவேண்டும். அதுதான் சரியான முறை. மறந்துவிடாதீர்கள்..." என்று சொல்லி விடைபெற்றுப் படகில் ஏறிச்சென்று கப்பலை அடைந்தார்.

கப்பல் புறப்படும்போது, தீவிலிருந்த மூவரும் மீண்டும் மீண்டும் ஒத்திகை பார்த்துக்கொண்டு இருப்பதைக் கண்டு ஆனந்தப்பட்டார். கப்பல் தீவிலிருந்து மெள்ள விலகியது. கடல்மேல் நிலவொளி பிரதிபலித்தது. பாதிரியார் திடீரென்று கடலில் ஏதோ பளபளப்பாகத் தெரிவதைப் பார்த்தார். கடற் பறவையா, சிறுபடகா என வியந்தார். 'வேகமாக நம்மை அணுகுகிறதே... ஆச்சரியம்' என்று எண்ணினார். அருகில் வர வர, படகாகத் தெரியவில்லை. மீனும் இல்லை. பறவையும் இல்லை. பின் என்னதான் அது..? உற்றுப்பார்த்ததில், மூன்று துறவிகளும் வெண்தாடி பறக்க, கப்பலை நோக்கி ஓடிவந்து

கொண்டிருந்தார்கள்.



நீர்மேல்!

மாலுமி அதைப் பார்த்துச் சுக்கானைக் கைவிட்டுவிட்டான்.

"கடவுளே! மூவரும் நம்மை நோக்கி கடல் மேல் ஓடி வருகிறார்கள்..."

மூவரும் கைகோத்துக்கொண்டு அணுகி, கப்பலை நிறுத்த சைகை செய்வதைப் பார்த்தார்கள். மேல்தளத்துக்கு வந்து, "கடவுளின் சேவகரே... நீங்கள் சொல்லிக்கொடுத்த பிரார்த்தனை மறந்துவிட்டது. மறுபடியும் சொல்லிக்கொடுக்க வேண்டுகிறோம்.."

பாதிரியார் மண்டியிட்டு, "உங்களுக்கு நான் சொல்லித்தர எதுவும் இல்லை. உங்கள் எளிய பிரார்த்தனைதான் கடவுளைப் போய்ச் சேரும். நீங்கள்தான் எங்களைப் போன்ற பாவாத்மாக்களைக் காப்பாற்ற வேண்டும்..." என்றார்.

இப்போது அவர்களைப் பாதிரியார் வணங்க, மூவரும் தீவை நோக்கித் திரும்பச் சென்ற பாதை இரவில் ஒளிர்ந்தது.

# ரிசப்ஷன் 2010



**எ**ன் சிறு சிறுகதை வரிசையில் ஒரு விஞ்ஞானக் கதை**.**

**ஆ**றரைக்கு ரிசப்ஷன் என்று ராமலிங்கத்தின் வி-மெயில் அறிவித்தது. ஏழரைக்கு ஏர்போர்ட்டில் ஒரு ஐகான் இருந்ததால், ஆறு பதினாலு நாற்பத்தேழுக்கே புறப்பட்டுவிட்டேன். ஹாலந்தில் இருந்து ட்யுலிப் மலர்க்கொத்து காரில் காத்திருந்தது. ராமலிங்கத்துக்குப் பிடித்த பானமான மே 22 ஒரு காஸ்க் கொள்ளை விலை கொடுத்து வாங்கி வைத்திருந்தேன். கல்யாணத்துக்குப் பொருந்தாத பரிசுப்பொருளோ என்று யோசித்தேன். வேறு என்ன கொடுப்பது..?

எல்லா புத்தகங்களும் வலையில் உள்ளன. ராஜேஸ்வரியருகில் பார்க்கிங் இருப்பதாக ஜிபிஎஸ் சொன்னது. மாடி எண்ணை பைக் கணினி மனப்படம் செய்துகொண்டதுக்கு அறிகுறியாக பீப்பியது. லிஃப்ட்டில் இறங்கி க-மண்டபத்தில் நுழையும்போது Aruna weds Ramalingam என்று பாலிமர் எழுத்துக்கள் பொருத்திக்கொண்டிருந்தார்கள். சீக்கிரம் வந்துவிட்டதால் மெள்ள நடந்தேன்.

மணமக்களின் மேடை காலியாக இருந்தது. ஆர்க்கெஸ்ட்ரா ஸின்தரானைச் சுருதி பார்த்துக் கொண்டிருந்தார்கள். நிச்சயம் 'ரொமான்ஸிங் ராமானுஜா'வும் 'உயிரா உடலா'வும் வாசிப்பார்கள். அதுதான் இப்போது பேய் விற்பனை.

ரிசப்ஷன் பெண்கள் நீலரோஜா மலர்களையும் லோ காலரி கல்கண்டையும் தட்டில் அமைத்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருத்தி குஜராத்தி உடையில் சூப்பராக இருந்தாள். பழக்கதோஷத்தில் "நீங்க

ராமலிங்கத்துக்கு உறவா..?" என்று கேட்டேன்.

"இல்லைங்க... நாங்க கண்ட்ரோல்ல டைனமிக்ஸ் ஹாஸ்டர்ஸ்ங்க..."

போச்சுடா, ரோபாட்!

இப்போதெல்லாம் மனிதர்களுக்கும் இயந்திரங்களுக்கும் வேறுபாடே இல்லை. கன்னக்குழிகூட அப்படியே செய்கிறார்கள். உரித்துப் பார்த்தால் தான் அந்தரங்க முடி அக்ரிலிக் என்று தெரியும். ஒருமாதிரி லூபாயில் வாசனை வரும்.

அந்தப் பெண் 'களுக்' என்று சிரித்தாள். அதைப் பார்த்தால் கவியரசு கணிதாசன் சொன்னது போல, "ஏமாந்த கவிஞர்கள் எழுநூறு கவிதை செய்வர்!"

ஏகதேசம் காலியாக இருந்த ஹாலில் போய் வீற்றேன். வந்தாகி விட்டது. ராமலிங்கத்தைச் சந்தித்து வாழ்த்திவிட்டுத்தான் போகவேண்டும். சரவணா போய், சின்னதாக ஒரு ரம்பா போட்டுவிட்டுத் திரும்ப வரலாம். மறுபடி பார்க்கிங் அவஸ்தைகள். மாடியிலிருந்து இறங்கினால், மெரீனாவில்தான் யூ வளைவு. அல்கஹாலாசையைத் துறந்தேன். அதற்குள் ராமலிங்கமே வந்துவிட்டான்.

"ஹாய்ஸ்ஸத்யா... என்ன இவ்வளவு சீக்கிரம்..?" கருநீல சூட் அணிந்து, ஸ்ப்ரே தெளித்து வாரியிருந்தான். கல்யாணத்துக்கென்று முடியை வைக்கோல் நிறத்துக்கு மாற்றியிருந்தான். மூக்கைத் திருத்தியிருந்தான்.

"எங்கே வாழ்க்கைப்படகில் - உன்னோடு துடுப்புப் போடப்போகிற அருணா..?"

"அருணாவுக்குத்தான் காத்துக்கிட்டிருக்கேன். கமான்... வாழ்க்கைப்படகு, துடுப்பு... என்னடா 'ரொமான்டிக்'காயிட்டிருக்கே..? நீயும் கல்யாணம் பண்ணிக்கணுமா..? அம்மாகிட்ட சொல்லவா..?"

"ச்சே! 'ராமலிங்கம் கல்யாணத்துக்கு ஒப்புக்கிட்டானா'ன்னு அம்மா ஆச்சரியப்பட்டுப் போயிட்டா. முதல்ல எப்ப சந்திச்ச..?"

"போன வாரம் நம்ம வெங்கி கல்யாணத்துல 'லவ் அட் ஃபர்ஸ்ட் மில்லி செகண்ட். ஒரே ரசனை, ஒரே சாப்பாடு, ஒரே கணிபாஷை எல்லாம். பிடித்த கவிஞர்கள்கூட ஒரே ஒரே... நூறாண்டு காலம் ப்ராஸ்தெட்டிக் வாழ்க்கை வாழ உத்தேசம்... எக்ஸ்க்யூஸ்மீ, அலங்காரமெல்லாம் ஆயிடுச்சுனு நினைக்கிறேன். நீ நேர்ல வர முடிஞ்சதுக்குச் சந்தோஷம். எல்லோரும் வி-மெயில்லயே நழுவறாங்க. ஒரு நிமிஷம்... அழைச்சுட்டு வந்துர்றேன்..."

மெள்ள மெள்ளக் கூட்டம் சேர ஆரம்பிக்க, ராமலிங்கம் அதில் மறைந்தான். வாசலை நோக்கி விரைந்தான். நான் அருணாவைப் பார்க்க ஆவலாகக் காத்திருந்தேன். ராமலிங்கத்தின் மனதைக் கவர்வது அத்தனை எளிதல்ல. எல்லாவற்றிலும் வித்தியாசமானவன். கணிமேதை. மேடைக்குச் செல்லும் முன் ஒரு முறை தெரிந்தான்.

கடிகாரம் 'ஆறு நாற்பது முப்பது' என்றது. 'காலம் பொன்னானது' என்று போதனை வேறு.

"ஷட் அப்..." என்றேன்.

"ஏர்போர்ட்டில் ஏழரைக்கு இருந்தாகணும். ப்ளேன் லேட்டாவதில்லை. என் கடமை சொல்ல வேண்டியது..."

"வர வர உனக்குப் பிரசங்கம் அதிகமாகி விட்டது. ஒரு நாள் உன் ஆக்ஸிலியரி மெமோரியை நோண்டிவிடப் போகிறேன்..."

"நஷ்டம் உனக்குத்தான்... நானூறு ஷா, இன்னும் தவணையே முடியவில்லை..." என்றது.

ராமலிங்கம் நண்பர்கள் சூழ வந்தான். அவன் பின்னால் மறைந்திருந்த அருணாவைப் பார்த்தேன். கண்ணுக்கு மைதீட்டி, கன்னத்தில் சிவப்பு ஒத்தி, ஒரு வாட்டசாட்ட தேவதை போல... வெயிட் எ மினிட்!

"அருணா... சொன்னேன் பார்த்தியா, இது என் அருமை நண்பன் சத்யா..."

நெருங்கினேன்.

"ஹாய், ஐம் அருணாசலம்!"

அவன் கைகுலுக்கல் மென்மையாக இருந்தது.

★ ★ ★



**ஊ**ட்டி. தேயிலைப் போராட்டத்தினால் கூட்டம் கம்மி. லோக்கல் சுற்றுலா வருகை குறைந்து, வடக்கத்தி இளைஞர்களும் மெகந்தி கலையாத புதுமனைவிகளும் காதிலிருந்து செல்போனைக் கழற்றாத மும்பை தொழிலதிபர்களும் அவர்களின் குழந்தைகளான சோட்டு, சோனு, முன்னு, நன்னுவும் 'எக்ஸ்க்யூஸ்மீ' யாலேயே அதட்டும் பணக்காரச் சிறுவர்களும் 'ஒட்டல் கலிஃபோர்னியா'வையும் 'ரூப் தேரா மஸ்தானா'வையும் சேர்த்து வாசிக்கும் பாண்டுக்கு (Band) பால்ரூம் நடனமாடும் கட்டக் கடைசி பிரிட்டிஷ் பழக்க மிச்சமும் லவ்டேல் , க்ளென்மார்கன் போன்ற பிரிட்டிஷ் பெயர்களும் பெய்யத் தீர்மானிக்காத மழையும்...

இரண்டு வருஷம் முன்பு 'முதல்வன்' டிஸ்கஷனுக்கு வந்தபோது, மாவட்டத்தில் இருந்த கட்டட அனுமதி பிரச்னை இன்னும் தீரவில்லை என்பது சுவரெழுத்துக்களிலிருந்து தெரிந்தது. மட்டக் குதிரைகள்

குழந்தைகளுக்காகக் காத்திருந்தன.

ஒரு டைம் வார்ப்பில் (Time Warp) ஸ்தம்பித்துப் போன நகரம் ஊட்டி. கோடைக்கானல் அளவுக்குக் கொச்சைப்படவில்லை என்றாலும், சீக்கிரமே மங்குஸ்தான் பழங்களும் மலர்க்காட்சிகளும் ஸெரூலியன் நீலவானமும் மறைந்துவிடும் அபாயம் உள்ளது.

★ ★ ★

சில வாரங்களுக்கு முன் இந்தக் கட்டுரைத் தொடரில், 'எனக்கு எவர்சில்வர் பாத்திரங்கள் பரிசளித்த நிறுவனம் யாது..?' என்று கேட்டுப் பதிலையும் கொடுத்து, சரியான விடையை கார்டில் எழுதுமாறு விளையாட்டுக்குச் சொன்னதை நிஜமாக எடுத்துக்கொண்டு மெனக்கிட்டு வாசகர்கள் எழுதி அனுப்பிய கார்டுகளைப் பார்த்ததும் தமிழர்களுக்கு நகைச்சுவை உணர்ச்சி குறைவோ என்று சந்தேகப்பட்டேன். சில கார்டுகளைப் படித்ததும் சந்தேகம் தீர்ந்தது. 'கஷ்டப்பட்டு எப்படியோ விடையைக் கண்டுபிடித்தேன்' என்று ரீல் சுற்றின தேனி சு. மதன்லாலும் (சுமலா), 'நானே யூகித்துக் கண்டுபிடித்தது' என்று புளுகிய கோவை வி. நடராஜனும் என்னுடைய 'வீட்டுக்குள் வரும் உலகம்' லேட்டஸ்ட் பதிப்பை, அவர்கள் நகைச்சுவை உணர்ச்சிக்காகப் பரிசாகப் பெறுகிறார்கள்.

★ ★ ★

அதேபோல், விக்ரம்சேத்தின் 'கோல்டன் கேட் ஸானட்' நாவல் பற்றி எழுதியபோது, 'எண்சீர் விருத்தத்தில் ஒரு நாவல் எழுதலாம்' என்று சொன்னது வம்பாகப் போச்சு. தமிழில் இத்தனை எண்சீர் விருத்தர்கள் இருக்கிறார்களா..? தினம் எனக்குக் கவிஞர்கள் தங்கள் எசீவி காவியங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்றைய தினம் வந்தது - ஜின்னாஹ் ஹரிபுதீன் எழுதிய 'புனித பூமியிலே', 'மஹ்ஜபீன் காவியம்', இரா. வரதராசனின் எமன் எலிபிடிக்க வந்ததைப் பற்றி எண்சீர் விருத்தம் (வேணும்டா உனக்கு). இந்தக் கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் - ஸாரி என்னை முழுமையாகத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள். நான் கேட்டது காவியங்களோ,

எமன் எல் பிடிக்கும் கதைகளோ அல்ல. விருத்தத்துக்கு காய் - காய் மா-மா என்று ஒரு 3-3-2-2 வடிவம் உள்ளது. மேலும், விருத்தத்திலேயே சொல்லப் போனலு -

'விருத்தங்கள் எழுதுவது சலபம் அல்ல.
வீணான வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும்
வருத்தாத விஷயத்தை எடுத்துக்கொண்டு
'வார்முலைகள்', 'தமிழன்னை' எதுவும் இன்றி
நிறுத்தாத பஸ் பிடித்தல், காதல் செய்தல்,
நீண்ட முடி, நகங்கடித்தல் போன்றவற்றை
பொறுத்திருந்து பார்த்தமைத்து அனுப்பினீரேல்,
பொழுதிருந்தால் படித்துவிட்டு எழுதுகின்றேன்.'

# மாரத்தான் கவிஞர்



**வா**லியின் 'பாண்டவர் பூமி'க்குப் பாராட்டு விழா மூப்பனார் தலைமையில் பாரதிய வித்யாபவனில் நடந்தது. நான் போனபோது, உள்ளே நுழைய முடியாதபடி கூட்டமாக இருந்ததால் கற்பகாம்பாள் மெஸ்ஸில் காபி சாப்பிட்டுவிட்டு மெரீனாவில் வாக் போகும்போது வாலியைப் பற்றிய நினைவுகளில் ஆழ்ந்தேன்.

வாலி என் சிறுவயது ஸ்ரீரங்கத்து சிநேகிதர். என் அண்ணன் கிச்சாயிக்கு கொஞ்சம் சீனியர், மேலச்சித்திரை வீதிக்காரர். அவரை நான் கெடிகார ராமையாவின் வீட்டில் ஜனனி சீனிவாசனைச் சந்திக்க வரும்போது பார்த்திருக்கிறேன். கொஞ்சம் ஜூனியர் என்பதால் எங்களையெல்லாம் அவர்கள் இலக்கிய சர்ச்சையில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். வாலியைப் பற்றி அதிகம் அறியப்படாத இரண்டு விஷயங்கள்... அவர் பெயரும் ரங்கராஜன், நன்றாகப் படம் போடுவார் என்பவை (ஆர்ட் ஸ்கூலில் படித்ததாகப் படித்த ஞாபகம்). எங்கள் 'தென்றல்' கையெழுத்துப் பத்திரிகைக்கு ஒரு மலர் போட்டபோர்து அவர் வரைந்த சித்திரம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. நாங்கள் பகுதி நேரத்தில்தான் இலக்கியமும் கலையும் பேசினோம். வாலி அப்போதே எதாவது சாதிக்க வேண்டும் என்கிற வைராக்கியத்தில் இருந்திருக்கிறார். ஸ்ரீரங்கம் ஹைஸ்கூலில் நாடகம் போடுவார். திருச்சி வானொலி நிலையத்துக்கு அடிக்கடி நாடகங்கள் எழுதுவார். நடிப்பார். அப்போதே பாடல்களும் எழுதியிருக்கலாம். பின்னர் சென்னை சென்று கிருஷ்ணா பிக்சர்ஸ், கே.எஸ்.ஜி. போன்றவர்களின் ஆரம்ப ஆதரவுடன் கஷ்டப்பட்டு முன்னேறியதை 'புதியபார்வை'யில் விஸ்தாரமாக எழுதியிருக்கிறார். அந்த நாட்களில் அவருடன் எனக்குத் தொடர்பு விட்டுப்போனது. டெல்லியில் இருக்கும் போது 'கற்பகம்' படத்தில் 'அத்தைமடி மெத்தையடி' என்ற தாலாட்டுப் பாட்டு மூலம் அவர் முதலில்

பிரபலமானது ('டேய், இவரை எனக்குத் தெரியும்டா' வகையில்) பெருமையாக இருந்தது. கண்ணதாசன் கொடிகட்டிப் பறந்த காலத்திலும் தனக்கென அடையாளம் தேடிக்கொண்டதும், எம்.ஜி.ஆரின் நாட்களில் ஏறக்குறைய கழகத்துக் கொள்கை விளக்கமாக 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்' போன்ற எளிய பாடல்களை எழுதியதும், அரசியல் மாறுதல்களை எதிர்பார்த்தோ என்னவோ... அந்த மூன்றெழுத்தும் கடமை என்று பின் குறிப்பிட்டதால் அந்தப் பாட்டு காலம் கடந்ததும், கண்ணதாசனுக்குப் பின் திரை இசையில் மற்ற கவிஞர்கள் கொண்டுவந்த மாறுதல்களையும் மக்கள் ரசனையில் ஏற்பட்ட திருப்பங்களையும் சமாளித்துத் தான் தாடி வளர்த்தாலும் தன் பாடல்களுக்குத் தாடி வளராமல் பார்த்துக் கொண்டதும், மகாதேவனிலிருந்து ரஹ்மான் வரை தாக்குப்பிடித்ததும் மாரத்தான் கவிஞர் வாலியின் சாதனைகள், புதுக்கவிதையும் மரபுக் கவிதையும் இல்லாத பகுதி நேர எதுகைகள் கொண்ட ஒர் எளிய கவிதை வடிவத்தை தனக்கே அமைத்துக் கொண்டார். அதன் லேசான சந்தத்துடன் ராமாயண, மகாபாரதங்களை எழுதியது அவர் வாழ்வின் முத்தாய்ப்பான சம்பவங்கள், வாலியின் இதிகாச முயற்சிகளை நம் நாட்டுப்புறக் கதைப் பாடல்களுக்கு ஒப்பிடத் தோன்றுகிறது. புராணக் கதைகளைக் காவ்ய வடிவில் சொல்லாமல் இன்றைய உடனடித் தமிழனும் புரிந்து பகிர்ந்து கொள்ளும்படி, கொச்சைப்படுத்தாமல் எளிமைப் படுத்தியிருக்கிறார். இந்த முறை நம் பாரம்பரியத்தில் உள்ளதே. 'ஐவர் ராசாக்கள் கதை' போன்ற நம் நாட்டார் கதைப் பாடல்கள் இதையேதான் செய்தன.

'ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்,
தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்க அருந் தவம் மேற்கொண்டு
பூழி வெங் கானம் நண்ணி புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ் - இரண்டு ஆண்டின் வா என்று இயம்பினன் அரசன்'


என்று கம்பன் விஸ்தாரமாக அறுசீர் விருத்தத்தில் சொன்னதை 'பரதனுக்கு ராஜ்யம், ராமனுக்கு பூஜ்யம்' என்று இரண்டே வரிகளில் சொன்னார் வாலி. வாழ்த்துக்கள்.

**அ**ரசு கடிதம் 4059-தவ 2-1ல் கண்டுள்ள தமிழ் இலக்கிய சங்கப் பலகையின் குறள்பீடம் உறுப்பினர் நியமனக் குறிப்பில் என்னை இனம் 21 'இதழ் தொடர்பாளர்' என்ற தலைப்பிலிருந்து 'படைப்பிலக்கியமும் இதழியலும்' என்பதற்கு மாற்றிவிட்டார்கள், கூட்டம் ஐந்து மணிக்குத்தான் என்று யாரோ தூய தமிழில் போன் செய்ததால் சற்றுத்

தாமதமாகத்தான் போய்ச் சேர்ந்தபோது தொலைக்காட்சியினர் புறப்பட்டிருந்தனர். குறள்பீடத்தின் முதல் பொதுக்குழுக் கூட்டம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் தமிழ்க் குடிமகன் தலைமை தாங்க, பல்வேறு துறைகளிலிருந்து முப்பத்தைந்து தமிழறிஞர்களும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

மத்திய சாகித்ய அகாடமியின் டாக்டர் சச்சிதானந்தன் ஆங்கிலத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தார். சுற்றிலும் பரிச்சய முகங்களைக் கண்டு சுதாரித்துக்கொண்டேன். முப்பத்தைந்து பொதுக்குழு உறுப்பினர்கள் தலா ஐந்தாறு வாக்கியங்கள் பெரும்பாலும் முதல்வரைச் சிலாகித்துப் பேசியபின் ஒரு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. இவர்கள் பரிந்துரைக்க, பொதுக்குழு சம்மதிக்க, குறள்பீடம் என்னும் உச்ச விருது ஆண்டு தோறும் தமிழில் ஒரு சிறந்த இலக்கியவாதிக்கு வழங்கப்படும். மற்ற விருதுகளும் உண்டு. இந்த ஆண்டுக்கான விருதுகள் வரும் பொங்கலில் அறிவிக்கப்படும் . அதனுடன் நலிந்த எழுத்தாளர்களின் பிள்ளைகளுக்கு படிப்பு உதவி (கவனிக்கவும்: பிள்ளைகளுக்கு), பாமர மக்களுக்கு மொழி விழிப்பு உணர்ச்சி ஊட்டும் முகாம்கள் (இது சில அ-பாமர மக்களுக்கும் தேவை), பெண் எழுத்தாளர்கள் மாநாடு ( ராஜம் கிருஷ்ணன் , அரசு மணிமேகலை இருவருமே வர வில்லை), நூலகம் அமைத்தல் போன்ற இருபத்திரண்டு திட்டப் பணிகளும் செயல்படுத்தப்படும். இவை பற்றிய தெளிவான குறிப்புகள் கூட்டத்தை வழிநடத்தப் பெரிதும் உதவின. நல்ல உத்தேசங்களுடன் துவக்கப்பட்ட இந்தச் சங்கப் பலகையில் இரண்டு முக்கிய அபாயங்களைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். அரசியலைக் கடந்து இது நீடிப்பதற்கான பாதுகாவல்கள் வேண்டும். (ராஜராஜன் விருது ஞாபகமிருக்கிறதா?). உறுப்பினர்கள் பல்வேறு துறைகள், பல்வேறு கொள்கைகளைச் சார்ந்தவர்கள். அவர்களின் பிடிவாதங்களை மீறி தமிழுக்கு நல்லது நடக்க வேண்டும். இரண்டு தமிழறிஞர்களிடமே கருத்து ஒற்றுமை தேடுவது கடினம். முப்பத்தைந்து பேரிடம் பெறுவது நடைமுறைக்கு ஒவ்வாத விஷயம். மாற்றுக் கருத்துக்களுக்கு இடம் கொடுத்து வேற்றுமையில் ஒற்றுமை காணும் சாகசத்தை முனைவர் தமிழண்ணல் அவர்களுக்கு அளிக்க அரங்கனைப் பிரார்த்திக்கிறேன். ஆரம்ப கூட்டத்திலேயே இந்த வேறுபாடுகள் தலைதூக்கி 'ஸாக்கரின்' போல ஓரத்தில் கொஞ்சம் கசந்தது. இவற்றையெல்லாம் தமிழ் சமுதாயத்தின் அங்க அடையாளங்களாக அரவணைத்துக்கொண்டு தகுதி, இலக்கியத்தர அடிப்படையில் விருதுகள் பரிந்துரைக்கப்பட்டால் பெரிய

சாதனை, குறள்பீடத்தின் மேல் நோக்கங்கள் அனைத்தும் உத்தமமானவை. உள்நோக்கங்கள்தான் தவிர்க்க வேண்டியவை. ஆங்கிலத்தில் hidden agenda என்பர்.



அந்தப் பொதுக்குழுக் கூட்டத்தில் நான் பேசியபோது, தமிழில் முப்பது நல்ல சிறுகதைகளின் பட்டியல் தருவதாக அறிவித்தேன். தனி அலுவலர் முனைவர் ச. நாகராசன் சுறுசுறுப்பாக உடனே பட்டியல் கோரிக் கடிதம் எழுதிவிட்டார். இருபத்திரண்டு இந்திய மொழிகளிலும் வெளியிடுவதற்கான தமிழ் சிறுகதைத் தொகுப்பு ஒன்றைத் தயார்செய்யவும் ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட ஒன்று அல்லது இரண்டு தமிழ் புதினங்களை ஒரு வார காலத்துக்குள் உறுப்பினர்களிடமிருந்து கேட்டிருந்தார். நான் பரிந்துரைத்த முதல் பட்டியல் இதோ... புதுமைப்பித்தன் - மனித இயந்திரம், கு.ப. ராஜகோபாலன் - விடியுமா, தி. ஜானகிராமன் - சிலிர்ப்பு, லா.ச.ராமாமிருதம் - கொட்டுமேளம், கு. அழகிரிசாமி - அன்பளிப்பு, சுந்தர ராமசாமி - பிரசாதம், அ. மாதவன் - நாயனம், ஜெயகாந்தன் - அக்கினிப் பிரவேசம், ஜெயமோகன் - பல்லக்கு, வண்ணதாசன் - நிலை. கிருஷ்ணன் நம்பி - மருமகள் வாக்கு, நாஞ்சில் நாடன் - வாக்குப் பொறுக்கிகள், அசோகமித்திரன் - புலிக்கலைஞன், கிருஷ்ணமூர்த்தி - மனிதர்கள், இந்திரா பார்த்தசாரதி - அசலும் நகலும், இரா. முருகன் - உத்தராயணம், சு. சமுத்திரம் - நான்காவது குற்றச்சாட்டு , ரா.கி.ரங்கராஜன் - செய்தி தங்கர்பச்சான் - குடிமுந்திரி, சிவசங்கரி - செப்டிக், ராஜம் கிருஷ்ணன் - மாவிலைத் தோரணம், பிரபஞ்சன் - மீன், கி. ராஜநாராயணன் - கதவு, சுந்தர பாண்டியன் - களவு, வண்ணநிலவன் - எஸ்தர், திலீப்குமார் - கடிதம், சோ. தருமன் - நசுக்கம், நாகூர் ரூமி - குட்டியாப்பா, ராமச்சந்திர வைத்தியநாதன் - நாடாக்காரர்கள், பாமா - அண்ணாச்சி, சுஜாதா - மகாபலி.

உடனே நினைவுக்கு வந்த கதைகள் இவை. கொஞ்சம் அவகாசம் கொடுத்தால் இன்னும் ஒரு முப்பது தேறும். புதினங்களைப் பொறுத்தவரையில் 'மோகமுள்' கொஞ்சம் எடிட் செய்தால் சேர்க்கலாம். ஜி.நாகராஜனின் 'நாளை மற்றுமொரு நாளே' நல்ல மொழி பெயர்ப்பாளர்கள் கிடைத்தால் செய்யலாம். சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை', ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' போன்றவையும் கருதப்படலாம். பழைய நாவல்களில் மாதவையாவின் 'கிளாரிந்தார்'.

# ஜல்லியடிக்க எழுபது வார்த்தைகள்!



இன்டர்நெட்டில் ஜல்லியடிக்க முப்பது வார்த்தைகள் போதும் என்று 4-6-2K இதழில் எழுதியிருந்தேன். எவை அவை எனக் கேட்டு இத்தனை கார்டுகளை எதிர்பார்க்கவில்லை. ஒவ்வொருவருக்கும் தனியாகப் பட்டியலைப் படியெடுத்து எழுத இயலாத நிலையில் தமிழ் கூறும் நல்லுலகமே அறிந்து பயன்பெறும் நல்லெண்ணத்துடன் அந்த வார்த்தைகளை இந்த வாரம் லிஸ்டுகிறேன். இவற்றுக்கு விளக்கமென்ன என்று அறிந்துகொண்டு, தேவைக்கேற்ப ஜல்லியடிக்க வேண்டியது உங்கள் பாடு!

இன்டர்நெட், வெப், ஈ-காமர்ஸ், டாட்காம், பி-டு-பி (B to B or B2B and B to C) அல்லது பி2பி, பி2ஸி, சர்ஃப், வெப் டிஸைன், வெப் ஆதரிங், எச்டிஎம்எல், எக்ஸ்எம்எல், விஎம்எல், ஊப்ஸ், பவர்பில்டர், டிஎச்டிஎம்எல், விபிஸ்க்ரிப்ட், ஆர்எம்ஐ, கோர்பா, டிகாம், ஏஎஸ்பி, ஸிஜிஐ, பெர்ள், ஜாவா பீன்ஸ், ஜாவா த்ரெட், ஜாவா ஸ்க்ரிப்ட், ஜாவா ஆப்லெட் (ஆம்லெட் இல்லை), க்ளையண்ட் சர்வர், சர்வ்லெட், சோப், ஜேப் (JAP), ஃபயர்வால், ஆரக்கிள் 8ஐ, டெவலப்பர் 2000, டிபிஏ (DBA), ஸைபர், டிஸிபிஐபி, ஓஎஸ்ஐ, ரௌட்டர், க்ரிப்டாலஜி, டேட்டா மைனிங், டேட்டா வேர்ஹவுசிங், போர்ட்டல், ஈ-பிஸினஸ், லினக்ஸ், வி-பேஸிக், வி-ஸிப்ளஸ்ப்ளஸ், ஈஆர்பி, லான், வைர்லஸ் லான், ப்ளூ டுத், ஃபைபர் ஆப்டிக்ஸ், டிஎஸ்எல், ஏடிஎஸ்எல், எக்ஸ்டிஎஸ்எல், ஈ-மெயில் - விண்டோஸ் என்டி, விண்டோஸ் 2000, யூனிக்ஸ், செட்டாப் பாக்ஸஸ், ப்ளாட்ஃபார்ம், இன்டிபெண்டண்ட், கோல்டுட்ப்யூஷன் ஆக்டிவ் எக்ஸ், ஆர்எஸ்ஏ, டிஎஸ்பி, ஏடிஎம் செக்யூரிட்டி, ஆக்ஷன், எம்பி3, நாஸ்டா, ரியல் ப்ளேயர், கேட்வே, பாண்ட்விட்த், வென்ச்சர் காப்பிடல், ஐபிஓ - இவற்றில் நம்பர் 1 எக்ஸ்எம்எல். இரண்டாவது இடத்தில் மைக்ரோசாஃப்ட்டின் சோப்.

எழுபதுக்குமேல் வந்து விட்டது. தற்போதைக்கு ஒரு டாட்காம் கம்பெனி ஆரம்பிக்க இவை போதும். ஒரு லாப்டாப் வாங்கிக் கொள்ளுங்கள். பவர் பாயிண்ட் தெரிந்திருக்க வேண்டும்.

ஜல்லியடிப்பதை விட்டுவிட்டுக் கணிப்பொறிகளின் நிஜ உலகத்துக்கு வந்து, க்வாண்ட்டம் கம்ப்யூட்டிங் பற்றிக் கொஞ்சம் செப்பலாம். Quantum computing என்பது இப்போது தீவிரமாக ஆராயப்படுகிற அடுத்த கட்டம் என்று சொல்கிறார்கள். 1970-களில் கேயாஸ் தியரி... எண்பதுகளில் ஸூப்பர் கண்டக்டிவிட்டி... இப்போது க்வாண்ட்டம் கம்ப்யூட்டிங்.



கணிப்பொறிகளில் உள்ள சில்லுகளில் ஆதாரமான சங்கதி ஒரு சுவிட்ச். இல்லங்களில் உள்ள லைட் சுவிட்ச் போல இவையும் ஏற்றி - அணைக்கக்கூடிய இருநிலை சாதனங்கள். ஆனால், மிகச் சிறியவை. இதை ஃபீல்டு எஃபெக்ட் டிரான்ஸிஸ்டர் என்பார்கள். அவற்றின் ஊடே மின்சாரம் பாய்வது, தடுப்பது என இரண்டு நிலைகள் உண்டு. அதை 1, 0 என்று இரு இலக்கங்களாகக் குறிப்பிடு கிறார்கள். ஆதாரமாக, இந்த இருநிலை சுவிட்சுகளை வைத்துக்கொண்டுதான் கணிப் பொறியின் மகத்தான சாம்ராஜ்யமே அமைக்கப்பட்டிருக்கிறது. கால்-அங்குல சதுரத்தில் லட்சக்கணக்கில் ஏன், கோடிக்கணக்கில் சுவிட்ச் அமைக்கக்கூடிய எல்எஸ்ஐ டெக்னாலஜியை அவர்கள் உன்னதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்டெலின் பெண்டியம் போன்ற சில்லுகளில் உள்ளே பார்த்தால் இப்படி லட்சக்கணக்கான சுவிட்சுகள்தாம். இதன் நுட்பத்துக்கு ஓர் எல்லை உண்டு. அதைக் கண்டுபிடிக்க மூர் விதி (Moore's Law) என்பதைப்

பயன்படுத்துகிறார்கள்.

இன்டெல் கம்பெனியின் ஸ்தாபகரில் ஒருவரான கார்டன்-மூர் எண்பதுகளிலேயே அறிவித்த விதி இது. ஒவ்வொரு 18 மாதமும் சில்லுகளின் அடர்த்தி இரட்டிப்பாகிக் கொண்டே போகும். க்வாண்ட்டம் கம்ப்யூட்டிங் என்பதில் லட்சக்கணக்கான எலெக்ட்ரான்களின் ஒட்டு மொத்தமான மின்போக்கைக் கட்டுப் படுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொரு எலெக்ட்ரானையும் இரு நிலைப்படுத்த இயலுமா என்று யோசித்து வருகிறார்கள்.

எலெக்ட்ரான் மிகமிக நுட்பமான ஒரு மின்துகள். ஒரு சக்தித்தீற்றல். அதற்கு ஸ்பின் என்று ஒரு குணம் இருக்கிறது. பம்பரம் போல் சுழற்சி. அந்தச் சுழற்சி வலப்புறச் சுழற்சியாக இருக்கலாம்... கடிகார முள்போல. அல்லது இடப்புறமாக இருக்கலாம். இந்தச் சுழற்சியை எப்படியாவது கட்டுப்படுத்த முடிந்தால் வலம், இடம் என்பதை 1, 0 என்று எலெக்ட்ரான்களிலேயே பதிக்கலாம். இதன் விளைவு என்ன... ஒரு அணுவில் அல்லது மாலிக்யூல் என்னும் கூட்டணுவில் - கோடிக்கணக்கான பிட்டுகளை, உலகையே எழுத முடியும், மாற்ற முடியும். இதுதான் க்வாண்ட்டம் கம்ப்யூட்டிங்கின் ஆதாரத் தத்துவம்.



இந்த ஐடியாவை முதலில் கொடுத்தது ரிச்சர்டு ஃபேய்ன்மன் என்னும் நோபல் விஞ்ஞானி. 1981-லேயே இதன் சாத்தியங்களைச் சொல்லியுள்ளார். இதுவரை, அது நடைமுறையில் இல்லாத சித்தாந்தமாகவே, தியரியாகவே இருந்து வந்தது. இந்த ஆண்டுகளில் சாத்தியம் ஆகும் போலத் தெரிகிறது. ஃபோட்டான் என்னும் வெளிச்சத் துணுக்குகளுக்குக்கூட இந்த ஸ்பின் சுழற்சி உண்டு. எனவே, ஒரு அணுவின் அல்லது கூட்டணுவின் - எலெக்ட்ரானை காந்தப்புலத்தின் வழியாக அனுப்புவதன் மூலமும் போலரைஸ் செய்யப் பட்ட கண்ணாடி வழியாக அனுப்புவதன் மூலமும் அவற்றின் சுழற்சியை மாற்ற முடியும்,

எம்.ஆர்.ஐ. (MRI) மாக்னெட்டிங் ரெஸனன்ஸ் இமேஜிங் என்னும் மருத்துவக்கருவியின் தத்துவங்களைக் கணிப்பொறி இயலுக்குத் திசை திருப்பும் இந்தச் சாகசம் பிரமிக்க வைக்கிறது.

இதற்குமேல் விவரித்தால் புத்தகத்தைக் கீழே போட்டுவிட்டு, நத்தை என்னும் மெகா சீரியலில் 655-வது எபிசோடுக்குப் போய்விடுவீர்கள். எனவே மேலும் விவரம் வேண்டுவோர் அருகிலுள்ள இன்டர்நெட் இணைய மேய்ச்சல் நிலையத்துக்குச் சென்று http://www.techreview.com/ articles/may00/waldrop.htm என்னும் வலைதளத்தை அணுகிப்பார்க்க வேண்டுகிறேன்.

கவிஞர் வைரமுத்துவின் பத்தொன்பது வயது மகன் வை. கபிலனின் முதல் கவிதைத் தொகுப்பான 'உலகம் யாவையும்' (திருமகள் நிலையம், வெங்கட் நாராயணா சாலை, சென்னை-17) புத்தக வெளியீட்டு விழாவில் பல பெரியவர்கள் இளம் கவிஞரைச் சிலாகித்துப் பேசினார்கள். கபிலன், வைரமுத்துவின் மகன் என்பதிலிருந்து வைரமுத்து, கபிலனின் தந்தை என்று சொல்லுமளவுக்குத் தனி அடையாளம் பெறச் சில பிரார்த்தனைகள்:

ஆரம்ப காலத்தில் உலகத்தை ஏன், சூரியனையே திருத்தி அமைக்கும் (ஜோதி வளர்த்திட வா) ஆசைகளுடன் துவங்குவது பாராட்டுக்குரியதே. நாங்கள் எல்லாம் அப்படித்தான் துவங்கினோம்.

நாளடைவில் நிஜவாழ்வின் யதார்த்தங்கள் புரியும்போது உலகத்தை என்ன, ஒரு மண்புழுவைக்கூடத் திருத்த முடியாது என்பது தெளிவாகி, திருத்தாமல் இருப்பதே ஒருவேளை நல்லதோ என்று சந்தேகம்

எழும்போது, உங்கள் கவிதை உள்ளத்தையும் ஆர்வத்தையும் இழக்காமல் வைத்திருக்கப் பிரார்த்திக்கிறேன். மேலும்


'செங்கல் சுமந்து
சாலை கடந்த
ஏழைச்சிறுவன்
சுவர் சுமந்த எழுத்துக்களைப்
படித்துவிட்டுச் சிரித்தான்
'இளமையில் கல்'...'

என்கிற கவிதையை

'சுவரில் 'இளமையில் கல்'
அருகே செங்கல் சுமக்கும்
சிறுவன்...'

என்று சொன்னால் மட்டும் போதும். மற்ற கருத்துக்களை வாசகன் நிரப்பிக் கொள்வான் என்பதையும் 'மசூதியும் விபூதியும் இணையட்டும்' போன்ற புத்திசாலி வார்த்தை அமைப்பை மீறினது கவிதை என்பதையும் இந்த இளைஞன் விரைவிலேயே உணர்ந்து கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

# வாழ்க்கையின் பக்கங்கள்!



**ம**னித சரித்திரத்தில் ஒரு மிக மகத்தான சாதனை சென்ற வாரம் நிகழ்ந்திருக்கிறது. இதை சந்திரனில் மனிதன் காலடி வைத்ததற்கு ஈடானதாகச் சொல்கிறார்கள். 'ஜெனோம்' என்பது ஒரு மானுடனை அமைப்பதற்கு உண்டான அத்தனை குறிப்புகளையும் உள்ளடக்கியது. ஒரு மனித உயிரின் ஒவ்வொரு செல்லின் உட்கருவிலும் இருக்கிறது. இதன் முழு அமைப்பை விஞ்ஞானிகள் ஓரளவுக்கு அறுதியிட்டுவிட்டார்கள். ஒவ்வொரு ஜெனோமும் டி.என்.ஏ (DNA) என்கிற மரபணுக்களின் தொகுப்பு. டி.என்.ஏ. என்பது ஒரு கூட்டணு, டை ஆக்ஸி ரபைோ நியூக்ளிக் ஆஸிட் என்று பெயர் படைத்தது.

நீங்கள், நான், எங்கள் ஃப்ளாட் மாடியில் நேற்று பிறந்திருக்கும் இரட்டைக் குழந்தைகள் இப்படி உலகத்தில் அனைவரும் ஆரம்பத்தில் சூலுற்றபோது இருபத்து மூன்று ஜோடி 'குரோமோஸோம்'களாக ஆரம்பிக்கிறோம். ஒரு செட் அம்மாவிடமிருந்தும் ஒரு செட் அப்பாவிடமிருந்தும் பெறுகிறோம்.


ஒவ்வொரு குரோமோஸோமும் இந்த டி.என்.ஏ. எனும் மிக நீளமான, சுருட்டி வைக்கப்பட்ட நூலேணி போன்ற அமைப்புக் கொண்டது. சுருட்டியதை நீட்டினால் ஐந்து அடி கூட வரும். ஆனால், அகலம் முடியில் பல லட்சத்தில் ஒரு பகுதிதான் இருக்கும். இந்த நுட்பத்தில்தான் உயிரினங்களைக் கட்டுவதற்கும் காப்பாற்றுவதற்கும் வளர்ப்பதற்குமான எல்லா சங்கதிகளும் நம் ஒவ்வொரு செல்லிலும் பதிந்திருக்கின்றன. உயிர்வாழத் தேவையான புரோட்டினை வெளிப்படுத்துகின்றன. அவை நைட்ரஜன் சார்ந்த நான்கு அடிப்படை ரசாயனப் பொருட்களால் ஆனவை. அவற்றை நியூக்ளியோடைடுகள் என்கிறார்கள். சர்க்கரையும் பாஸ்பேட்டும் அதன் முதுகெலும்பு.

அடினைன், தையமைன், சைடோஸைன், குவனைன் என்று சொல்கிறார்கள். இவை ஜோடி சேர்ந்து டி.என்.ஏ-யின் ஏணிப்படிகளாகின்றன. அடினைன் எப்போதும் தையமைனுடனும் குவானைன் எப்போதும் ஸைடோசைனுடனும் ஜோடி சேருகிறது.

உயிர் என்பது இந்த நான்கு (AT, CG) எழுத்துக்களால் - திரும்பத் திரும்ப எழுதப்பட்ட புத்தகம் போன்றது. இந்த வாழ்க்கைப் புத்தகத்தின் வாக்கியங்கள் அல்லது பக்கங்கள் போல ஜீன் என்னும் மரபணுவைச் சொல்லலாம். எத்தனை பக்கங்கள்? முப்பத்திரண்டாயிரத்திலிருந்து ஒரு லட்சத்துக்கு மேல் வரை எண்ணிக்கை சொல்கிறார்கள். அர்த்தமுள்ள பக்கங்கள், அர்த்தமற்ற பக்கங்கள். எத்தனை எழுத்து ஜோடிகள்? ஜெனோம் என்பது முந்நூறு கோடி ஆதார ஜோடிகளால் (base pairs) ஆனது என்று சொல்கிறார்கள்.

சரம் சரமாக அமைந்த அவற்றின் ஜீன்கள் சிலவற்றை அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார்கள். பொதுவாக முந்நூறு கோடி ஆதார ஜோடிகளை இப்போது அப்படியே அர்த்தம் புரியாமல் படித்திருக்கிறார்கள். இதுதான் 1990-ல் துவங்கி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் விஞ்ஞானிகள் ஒத்துழைத்து அரசும் தனியாரும் தந்த நன்கொடையில் ஆராய்ச்சி செய்து சென்ற வாரம் வரை சாதித்தது. வாழ்வெனும் புத்தகத்தின் எழுத்துக்களைப் படித்துப் படி எடுத்துவிட்டார்கள். சில பக்கங்களைப் புரிந்துகொண்டும் இருக்கிறார்கள். இந்தச் சாதனையின் எதிர்கால ச(ா)த்தியங்களைக் கண்டு சந்தோஷப்படுகிறார்கள். பயப்படுகிறார்கள்.

சந்தோஷம் இதனால் - மனிதனைப் பீடிக்கும் பல வியாதிகள் மரபணு சார்ந்ததாக இருக்கின்றன. மரபணுக்கள் சரியாக வேலைசெய்யாததால் உயிர் வாழத் தேவையான புரதங்களை வெளிப்படுத்தாததால் அல்லது தப்பாக வேலை செய்து விபரீதமாகப் பெருகுவதால் வியாதிகள் வருகின்றன. அதனால் அவற்றை வெட்டி ஒட்டி நிவர்த்தி செய்யும் சாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. இதை ஜீன் தெரபி, மாலிக்யூலர் மெடிஸின் என்று சொல்கிறார்கள்.



ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் இந்த இயல் வரும் வருஷங்களில் உன்னதப்படுத்தப்பட்டால் புற்றுநோய், ஆல்ஸைமர் என்னும் கொடிய மறதி வியாதி. ஸிஸ்டிக் ஃபைப்ரோஸிஸ் என்னும் நெஞ்சில் கோழை பை பையாக கட்டிக் கொள்ளும் வியாதி, இதய நோய்கள், டயாபடிஸ் என்னும் சர்க்கரை வியாதி, மஸ்குலர் டைஸ்டராஃபி போன்ற இளவயதிலேயே தசைகள் சக்தி இழக்கும் வியாதி, சில மனநோய்கள் இவையனைத்தும் மருத்துவப் பாடப் புத்தகங்களிலிருந்தே நீக்கப்பட்டுவிடும். மேலும் எந்த குரோமோஸோம் எந்த வியாதிக்குக் காரணி என்றும் கண்டுபிடித்துள்ளார்கள். உதாரணம் - கான்ஸர். 11, 17, 18-வது குரோமோ ஸோம்களின் பிழைகளால் வருகிறது என்று சொல்கிறார்கள். இதய நோய்களுக்கு 19 காரணமாம். மனிதனுக்கு வயசாவதற்கு ஜெனட்டிக் காரணங்களைக் கண்டுபிடித்து அதற்கான ஜீன்களை ரிப்பேர் செய்து வாழ்நாளை நீடிக்க முடியும்... ஆரம்பத்தில்

120 ஆண்டுகளாக, போகப் போக 1200! பெட்ரோலியம் போன்ற எரிபொருள்களை ஜெனட்டிக் முறையில் தயார் செய்ய முடியும். சுற்றுச்சூழலையும் கழிவுப்பொருள்களையும் சுத்தம் செய்ய முடியும்.

பிறக்கும்போதே பிற்காலத்தில் வியாதி வரும் சாத்தியங்களை அறிந்து கொண்டு அவற்றைத் தடுக்க முற்படலாம். மேலும் மானுடவியல், குற்றவியல் போன்ற பல துறைகளில் ஜெனட்டிக் முறைகள் பயன்படும்.

இவையெல்லாம் நன்மைகள். தீமைகள் என்னவென்றால், பிறந்த உடனேயே எல்லோரையும் டி.என்.ஏ. அலசிப்பார்த்து யாருக்கு, என்ன வியாதி, எப்போது வரும் என்பதைத் தெரிந்துகொள்வது. அந்த வியாதிகளுக்கு முழு நிவாரணம் கண்டுபிடிக்காதவரை ஆரம்ப ஞானம் அபாயகரமானது. இன்ஷூரன்ஸ்காரர்கள் கைவிட்டு விடுவார்கள். தயங்குவார்கள். மனிதரிடையே சாதி வேறுபாடு போய், வியாதி வேறுபாடு வந்துவிடும். ஜீன் தெரபி பணக்காரர்களுக்கானதாகி, வசதி இல்லாதவர்கள் செத்துமடியவும் ஓர் இனமே மறைந்துபோகும் சாத்தியங்களும் உள்ளன. இந்த அசுர சாத்தியத்தை உணர்ந்து உலக நாடுகளில் தகுந்த சட்டங்கள் இயற்றத் தேவைப்படும். மனிதனின் மிகப் பெரிய மர்மம் மரணம். அதற்கான தேதி அல்லது வருஷம், பிறந்த உடனே அறிந்துகொள்வதை நாம் விரும்புவோமா தெரியவில்லை. பாரங்களை நிரப்பும்போது பிறந்த தேதியுடன் இறக்கப் போகும் தேதியையும் நிரப்ப விருப்பமா? தலையெழுத்துக்குப் பதில் மரபெழுத்து. இதை அரசு போன்ற பல நிறுவனங்கள் ஆஸ்பத்திரியில் குழந்தை பிறந்ததும் தெரிந்துகொண்டுவிடலாம்.

மற்றொரு சங்கடம் - 1200 ஆண்டு வாழலாம் என்று வந்தால் மரணத்தின் அவசரம் போய் வாழ்க்கையில் சாதிக்க வேண்டிய விஷயங்கள் பல ஒத்தி வைக்கப்படும். இதுவும் விரும்பத்தக்க தல்ல. மனித வாழ்வை 1200 ஆண்டுகளும் சுவாரஸ்யமாக்க கலாசாரம், கேளிக்கை போன்றவற்றில் தக்க மாறுதல்கள் தேவைப்படும்.



இப்போதே எல்லாமே ஐந்து நிமிடத்தில் போரடித்து சேனல் மாற்றி விடுகிறோம். (இந்தக் கட்டுரையை முந்நூறு பக்கம் எழுதினால் படிப்பீர்களா?)

ஆண் - பெண் சேர்க்கையின்றி மனிதனைப் பிரதியெடுக்கும் 'க்ளோனிங்' என்னும் முறையும் அதிக சாத்தியம் பெறுகிறது. இது ஏற்பட்டால், மனிதன் முயல் போலவோ ஒரு கடற்பறவை போலவோ ஆகிவிடுவான். முயல்களில் ராமசாமி, கோவிந்தசாமி, ராபர்ட் எல்லாம் கிடையாது. முயல், அவ்வளவு தான். அதுபோல மனிதன். கோடி மனிதர்கள் ஒரே நிறம், ஒரே முகம், ஒரே குரல். எல்லோருமே அழகாக இருந்து காதலுக்கும் மோதலுக்கும் வேதனைக்கும் சோதனைக்கும்

வேலை இல்லாமல் போய்விடும். தேவைதானா?

வெ.மு. பொதியவெற்பனின் பொன்விழா மலரில் த. பார்த்திபனின் கட்டுரையில் ஈழத்துப் பெண் கவிஞர் சிவரமணியின் கவிதைகள் சிலவற்றை முதன் முறை படித்து பிரமித்தேன்:

யுத்த கால
இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்
தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவது
தடியையும் பொல்லையும்
துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக்
கொல்வதும்
எமது சிறுவர் விளையாட்டானது
யுத்த கால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
வளர்ந்தவர் ஆயினர்

யுத்த கால இரவையே பார்த்திராத நம் மெயின் லாண்ட் கவிஞர்கள் இன்னமும் 'காதலும் கானமும் கண் மையையும் இதழ்ப்பூச்சையும்' எழுதிக் கொண்டிருக்கிறோம்.

சிவரமணி, 'இந்த முடிவுக்காக என்னை மன்னித்துவிடுங்கள். மன்னிக்கா விட்டாலும் பரவாயில்லை. எனது கைக்கெட்டியவரை எனது அடையாளங்கள் யாவற்றையும் அழித்துவிட்டேன்' என்று குறிப்பு எமுதி விட்டு தற்கொலை செய்துகொண்டு விட்டராம். அவ்வளவு சுலபமாக அழிவதில்லை.

# நாடே பெருமைப்படுது!



சின்னஞ் சிறுகதை வரிசையில் ஐந்தாவது -

காலையிலேயே டி.வி-க்காரர்கள் வந்து காமிரா, ட்ரைபாடு, கேபிள் எல்லாவற்றையும் கடைபரப்பினார்கள். வீடே தனது போல ப்ளக் பாயிண்ட் தேடினார்கள். சென்டர் டேபிளை நகர்த்தி வைத்தார்கள். "ஏம்மா... சோபாவைக் கொஞ்சம் தள்ளிவைக்கலாமா? மீன்தொட்டி பின்னால தெரிஞ்சா அருமையா இருக்கும்."

அவர்கள் கேட்டவாறே எல்லாம் செய்தாள் காவேரி. கௌதமை டி.வி. திரையில் பார்க்கப் போகிற ஆவல். ஷீல்டு, பி.வி.சி. மெடலை எல்லாம் வெளிச்சத்தில் வரும்படி செய்தாள். டெலிபோன் ஆசாமிகள் வந்து, "ரெண்டு சானலையும் ஸ்விட்ச் பண்றாப்பல வெச்சிருங்க ஜானி... பாதில கட்டாயிருச்சுன்னா வேலை போயிரும்" என்றார்கள்.

"நாயைக் கட்டிப்போடறீங்களா?" என்றார் காமிரா.

ஸ்க்ரிபிள், காமிராக்காரரின் பாண்ட் முனையைக் குதறிப்போட விரும்பியது. அதற்குப் புது ஆசாமிகள் வீட்டுக்குள் வந்து கொட்டமடிப்பது கட்டோடு பிடிக்காது. இந்த வேளையில் அதற்கு நடுக்கூட சோபாவில் மல்லாந்து படுத்துக்கொண்டு ஏ.ஸி-யின் க்ரில்லில் கூடு கட்டியிருக்கும் அணிலை நோண்டி எடுப்பதாகக் கனவு காண வேண்டும்... ஒளித்து வைத்திருக்கும் எலும்புத்துண்டை இடம் மாற்ற வேண்டும்.

"நாய் எப்படி இருக்குனு கௌதம் நிச்சயம் கேப்பாருங்க."

இதனிடையே மது மெள்ள கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்து

வந்து காவேரியின் கன்னத்துக்குக் கீழே தலை வைத்து அழுத்தி மடியில் உட்கார்ந்து, "இவங்கள்லாம் யாரும்மா?" என்றாள்.

"கண்ணு, அப்பா கூட பேசப் போறம்மா... கனெக்ஷன் கொடுக்கப் போறாங்க."

"டி.வி-லயா?"

"டி.வி-லயும் தெரிவார்... பேசவும் பேசுவோம்."

"ஸ்பேஸ் வாக் பாக்கப் போறமா?"

"நிச்சயமா பாப்பா. அட, ஸ்பேஸ் வாக் பத்தி தெரிஞ்சுருக்குதே!"

"யார் பொண்ணு அது!"

"அப்ப நான் ஸ்கூல் போக வேணாமா?"

"எப்படியாவது மட்டம் போடப் பார்க்கறல்ல போக்கிரி!"

"பாப்பா இருக்கட்டும்மா... ஃபேமிலியையே காட்னாத்தான் இந்தியா பூரா எத்தனை அருமையான குடும்பம்னு..."

"யோவ்! வளவளன்னு பேசிட்டிருக்காதே. ஃபிப்டீன் ஏம்ப் ஃப்யூஸ் பத்தாது.. புடுங்கிக்கும். போர்டுலருந்து கனெக்ஷன் கொடு. ஏம்மா, இந்தக் கட்டடத்துக்கு மெயின் ஸ்விட்ச் எங்கருக்கு?"

"அண்ணே, வேணாங்க... ஜெனரேட்டர் போட்ருவம்."

அவ்வப்போது இணைக்கப்பட்ட ஆர்க் வெளிச்சப் பிரகாசம் நடுக்கூடத்தில் அசந்தர்ப்பமாக இருந்தது. "மது, நாயை அழைச்சுக்கிட்டு பெட் ரூமுக்குப் போய் இரு."

"இல்லைங்க... பாப்பாவும் வேணுங்க. அது அப்பா கூடப் பேசப்போவுது."

"அப்பா பேசப்போறாங்களா?"

"ஆமாம். உங்கப்பா விண்கலத்துக்கு வெளியே வந்து ஒரு ரிப்போர்

பண்ணப் போறாரு!"

"விழுந்துருவாங்களா?" என்றாள் காவேரி.

மது சிரித்து, "விழமாட்டாங்கம்மா. அங்க கிராவிட்டியே கிடையாதில்லை!"

காவேரி வியந்தாள்.

"எப்ப வீட்டுக்கு வருவாங்க?"

"மது, நீயே கேட்டுறேன்... எப்ப பூமிக்கு வருவீங்கன்னு. சூப்பரா இருக்கும்."

"தேசமே உருகிரும் சென்டிமெண்ட்டுப்பா! டேய், சாவுகிராக்கி... டிஜிபீட்டாலதான் எடுக்கற..."

"ம்ஹூம்... இன்ஜின்ல எடுத்து அப்படியே நேரா ரிலே மைக்ரோவேவ்ல போவுது... அங்க தான் ஹைபாண்டுல - ரிக்கார்ட் பண்றாங்க."

"ப்ரொக்ராம் லவைா ஓடப் போவுது."

"லிங்க் எல்லாம் செக் பண்ணியாச்சா?"

"காலைலருந்து அதானங்க வேலை... ஒரு காபி குடிக்க அனுப்பலை... இவன்லாம் மானேஜரு."

"அம்மா, சின்னச் சின்னதா கட்டம் இல்லாம பளிச்சுன்னு புடவை கட்னீங்கன்னா நல்லாருக்கும்மா... இதுல மாயர் பாட்டர்ன் வந்துரும். இந்த லேப்பல் மைக்கை ஜாக்கெட்ல செருகிக்கங்கம்மா. நாயைக் குரைக்காம இருக்கச் சொல்லுங்கம்மா... ப்ரொக்ராம்போது குரைச்சா பிரச்னை ஆய்ரும். ராமலிங்கம்... பக்கத்து வீட்டில மரம்கிரம் இருந்தா அழைச்சுட்டுப் போய்க் கட்டிரு."

இந்தச் சனியனை என்பதை அடைப்புக் குறிக்குள் சொன்னான்.


"அவருக்கு இந்த நாய் உயிருங்க... கேப்பாரே?"

"கேட்டா கொணாந்துக்கலாம்."

டெலிபோன் ஓயாமல் அடித்தது. அக்கம் பக்கத்தினர் எட்டிப்பார்த்துக்கொண்டிருக்க, கேபிள் சுருள்களையும் காமிராக்களையும் கைசொடக்கல்களையும் பதம் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். சட்டென்று எல்லாம் மௌனமாகியது.

"இங்க வந்து உக்காருங்கம்மா... பாப்பா சைடுல உக்காரட்டும். மானிட்டர்ல தெரியறாரு பாருங்க... சைகை செய்வேன். அப்ப காமிராவைப் பார்க்கலாம்."
..

எதிரே மானிட்டர் திரையில் முதன்முறை கௌதம் தெரிந்தான். அது கௌதம்தான் என்பது கிட்டத்தில் மிதந்து வந்ததும்தான் அவனுடைய சன்வைசருள் - தெரிந்தது. விண்வெளிக்கலத்துக்கு வெளியே கரிய இருண்ட வானின் பின்னணியில் 'பளீர்' என்ற சூரிய வெளிச்சத்தில் அவன் முழங்கால்களை மடக்கி மடக்கி ஒரு டவைரைப் போல மிதந்தான்... அருகே வெளியே ஒரு பானலி-ல் திரவம் கசிந்துகொண்டிருந்தது. கொட்டவில்லை, சின்னச்சின்ன கோளங்களாக வெளியே விடுபட்டு மிதந்தன... அதுதான் அவற்றின் ஸ்திர நிலை. கௌதம் அந்தக் கசிவை அடவைதற்கே ஐந்து நிமிஷமாயிற்று. எலாஸ்டமர் ஒட்ட வைத்ததும் எதோ திருகாணியை பவர் ஸ்க்ரூடிரவைரால் முடுக்கியதும் முதுகு மறைத்ததால் சரியாகத் தெரியவில்லை.



திரும்பியபோது ஸ்பேஸ் சூட்டின் தடிமனான கட்டைவிரலை உயர்த்தினான்.

"வணக்கம்... நம் பாரத நாட்டின் தவப்புதல்வரான விண் விஞ்ஞானி கமாண்டர் கௌதம் அவர்கள் விண்வெளியிலிருந்தும் அவர் குடும்பத்தார் சென்னையிலிருந்தும் பேசிக்கொள்ளப் போகிறார்கள்!"

"ஹலோ கௌதம்... டு யு ஹியர் மி சார்!"

"லவ்டு அண் க்ளியர்!"

"பேசுங்கம்மா."

"என்னங்க அங்கருந்து இந்தியா எப்படித் தெரியுது?" சற்று நேரம் கழித்து, கரகரப்பான குரலில் "இந்தியா இல்லை... உலகம் தெரியுது" என்று பதில் வந்தது.

"எப்படி இருக்க காவேரி?"

"நல்லாருக்கங்க... நீங்க?"

"நல்லாதான் இருக்கேன்... மது நீ?"

"மது, அப்பாகூடப் பேசு."

"அப்பா, எப்ப வருவீங்க திரும்பி?"

"வேலை முடிஞ்சப்றம் கண்ணு..."

"வேலை எப்ப முடியும்?"

"இன்னும் ஒரு நாள் இருந்து லீக்கு சரியா அடைச்சிருக்கா பார்க்கணும்"

"என்ன வேலைப்பா அது?"

"கண்ணு, ஹைட்ரஸின்னு ஒரு திரவம் இருக்குது... அதுதான் சின்னச் சின்ன மோட்டார்களைச் செலுத்துது. அதன் டாங்க்ல ஒரு லீக்கு. அதைத்தான் இப்ப ஒட்டினேன். இன்னும் சின்ன அஸைன்மெண்ட் ரெண்டு இருக்குது. அது நெறஞ்சப்றம் வந்துருவேன்!"

"உங்களைக் கண்டு இந்தியாவே பெருமைப்படுது கௌதம். நீங்க எதாவது சொல்ல விரும்பறீங்களா?"

"நாட்டின் பெருமைதான் வீட்டின் பெருமை!"

"நல்லா சொன்னீங்க!"

முடிந்ததும் அவர்கள் எல்லோரும் தங்கள் ஹைடெக் சாதனங்களைச் சேகரித்துக்கொண்டு விலகும்போது காவேரி -

"சரியாவே பேச முடியலை" என்றாள்.

"ரொம்ப நல்லா இருந்துச்சும்மா... மறுபடி ஒன்பது மணி நியூஸ்ல வரும்மா... தொலைக்காட்சி சார்பாக நன்றிம்மா."

"எனக்கு ஒரு உதவி செய்யணும் நீங்க?"

"சொல்லுங்க."

"எங்க வீட்ல கிச்சன் ஸிங்க் குழா ஒரு மாசமா ஒழுகுதுங்க. ஒரு ப்ளம்பரை அனுப்பறீங்களா?"

"அம்மா, அப்பா வந்து ரிப்பேர் பண்ணுவாரு..."

"உங்கப்பாவா? போறதுக்கு முன்னால ஒரு மாசமா சொல்லிச் சொல்லி அலுத்துப்போச்சு!"

# 'கடி'க்குத் தடை!



நண்பர் சீதாராமனும் சேகரும் தொடர்ந்து நடத்தும் ஹ்யூமர் கிளப்பின் மாதாந்திரக் கூட்டத்துக்காக மயிலை சாஸ்திரி ஹாலில் அத்தனை பேர் சிரிக்க வந்திருந்தது சிரிப்பாக, ஸாரி, சந்தோஷமாக இருந்தது.

ஒரு குட்டிக் குழந்தை எட்டாத மைக்கில் 'ப்ரிஜ்ஜுக்குள் யானை போகாது ஏன் தெரியுமா? அதுக்கு ஜலதோஷம்' போன்ற ஜோக்குகளுடன் தொடங்கி வைக்க, நான் பேசத் துவங்குவதற்கு முன் பதினைந்து ஜோக்காளர்கள் தத்தம் சிரிதொழில் திறமையைக் காட்டினார்கள்.

சபையோர் சில சமயம் வாய்விட்டு, வாய்க்குள், புன்னகையாக, உதட்டோரத்தில்... சில சமயம் ஒரே ஒரு தோள் குலுக்கலாக, சில சமயம் மனசுக்குள் என்று உசிதப்படி சிரித்தார்கள். ஒவ்வொரு வகை சிரிப்புக்கும் ஆங்கிலத்தில் வார்த்தை இருக்கிறது. ஸ்மைல், லாஃப், கஃபா, ஸ்னிக்கர், க்ரின் என்று. தமிழிலும் பல சொற்கள் இருந்திருக்கின்றன. நகை, முறுவல், பகிடி, புன்சிரிப்பு, சிரிப்பாணி என்று. சிரிப்பாணி என்பதற்கு ஆதிகால அர்த்தம் பெரிசாக சிரிப்பதாம். இப்போது அது அவமானப்பட்டு விட்டது. முறுவலுக்கு தொல்காப்பியப் பொருளதிகார உரை மூன்று வகை சொல்கிறது. 'முறுவலித்தலும் நகுதலும் அளவே சிரித்தலும் பெரிதாகச் சிரித்தலும் என மூன்றென்ப'.



நகைச்சுவைப் பட்டிமன்றங்களில் டெண்டுல்கரான பேராசிரியர் ஞானசம்பந்தன் ஒருமுறை கண்ணகி என்பதற்கு கண்ணால் சிரிப்பவள் என்று பொருள் சொன்னார் (இளங்கோவடிகள்தான் அவளை அதிகம் சிரிக்கவைக்கவில்லை).

தமிழ்ப் பத்திரிகைகளில் வரும் நகைச்சுவையைச் சுலபமாகப் பத்துப் பன்னிரண்டு தலைப்புகளுக்குள் அடக்கிவிடலாம். சரிதானா பாருங்கள்.

ஓட்டலில் பணம் கொடுக்காமல் மாவாட்டுவது, கணவன் சமைப்பது, ஆபீஸில் தூங்குவது, வேலைக்காரி சகவாசம், மச்சினி சகவாசம், வேலைக்காரி டி.வி. கேட்பது, போலீஸ்காரர் மாமூல் கேட்பது, வார்த்தைகளை சந்தர்ப்பம் மாற்றிப் போடுவது (சர்ஜன் - அறுவை; பேப்பர் ரோஸ்ட் - நியூஸ் பேப்பர்), ஆங்கிலத் தமிழ் தடுமாற்றங்கள் (மேல் வேஷ்டி, ஃபீமேல் வேஷ்டி), பீச்சில் காதலியுடன் சுண்டல், மனைவியிடம் சம்பளத்தை ஒப்படைப்பது, கல்யாண வீட்டில் செருப்பு திருடுவது. தீபாவளிக்கு வந்த மாப்பிள்ளை ஊருக்குப் போகாதது, பிச்சைக்காரர் பணக்காரனாக இருப்பது, அரசியல்வாதிகள் நிஜம் பேசுவது... இப்படிச் சொற்பமான பட்டியலுள் அடங்கிப் போகிறது. கடிஜோக்குகளை ஆறு மாசத்துக்குத் தடைசெய்தால்தான் தமிழில் நகைச்சுவை பிழைக்கும் என்று சொன்னேன்.

உண்மையான நகைச்சுவை எழுத்து தமிழில் அருகிக்கொண்டு வருகிறது. தேவன், எஸ்.வி.வி, நாடோடி, கல்கி, சாவி போன்றவர்களின் தரத்துக்கு இப்போது ஓரிரு எழுத்தாளர்கள்தான் நகைச்சுவையே எழுதி வருகிறார்கள். அவர்களும் உற்சாகமிழந்து வருகிறார்கள். நகைச்சுவைக் கட்டுரைகளைப் பத்திரிகைகள் ஆதரிப்பதில்லை. அதற்கு நான் சொன்ன பரிகாரம் - ஹ்யூமர் கிளப் போன்றவர்களுடைய ஆண்டு விழாவில் புதிய

நகைச்சுவை எழுத்தாளர்களுக்குப் போட்டி வைத்து சிறந்த நகைச்சுவைக் கதை, கட்டுரை, கவிதைகளுக்குப் பரிசளிக்க வேண்டும். சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்கவும் அவற்றை ஏதாவது ஒரு பத்திரிகையில் பிரசுரம் செய்யவும் உதவுவதாகச் சொன்னேன். மேலும் ஒவ்வொரு மாதாந்திரக் கூட்டத்திலும் ஆங்கிலத்திலோ தமிழிலோ ஒரு நல்லநகைச்சுவைக் கட்டுரையைப் படித்துக் காட்டி அதன் நுட்பங்களை எடுத்துக் காட்ட வேண்டும்.

நகைச்சுவை எழுத்து அவ்வளவு சுலபமல்ல. 'பன்ச்' பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய மால்கோம் மக்கரிட்ஜ் ஒரு புத்தகத்தின் தலைப்பில் 'என் ஜோக்குகள் மிதிபடுகின்றன. பைய நடந்து வாருங்கள் (tread softly for you are treading on my jokes)' என்று அழைக்கிறார். தமிழில் நான் விரும்பிப் படிக்கும், எழுத விரும்பும் நகைச்சுவை நேரடி அனுபவம் சார்ந்ததே.

வாழ்க்கையில் பல சம்பவங்களில், உரையாடல்களில் நகைச்சுவை இருந்து அதைக் கவனித்து உண்மையாக அல்லது சற்றே மிகைப்படுத்தி எழுதுவதில்தான் சவால் (ஜெ.வி-யின் 'டயலாக்' உதாரணம்). என் இந்த உதாரணத்தைப் பாருங்கள் - சுய சரித்திரத்தில் ஓர் ஏடு:

அப்போது எனக்கு எட்டு வயசு. கிரிக்கெட்டில் பெரிய பையன்கள் பந்து பொறுக்கச் சொல்வார்கள், சிறியோர் 'சைடு கட்டாது' என்பார்கள். அதனால் நானே தேரடித் தெரு வீட்டுவாசல் திண்ணையில் சுவர்பால் கவர்பால் போட்டு நானே பௌலர், நானே பேட்ஸ் மேனாக ஆடிக் கொண்டிருப்பேன். ரன்னிங் காமெண்ட்டரியும் நானே. 'ஃபாஸ்டர் பால். ரங்கராஜன் ஹிட்ஸ் இட் ஃபார் ஃபோர்! ஹியர் இஸ் ஹிஸ் ஃபிஃப்ட்டி!' என் மானசீக ரசிகர்களின் கரவொலி மனசுக்குள் கேட்க, தினம் செஞ்சுரி அடிப்பது வழக்கம். ஒருமுறை நான் 97 ரன் எடுத்திருந்த போது பந்து கண்ணில் பட்டு வீங்கிவிட்டது. அப்பா ஆபீஸ் புறப்படும் அவசரத்தில் கவனித்து 'ஏண்டா உனக்கு?' என்று அதட்டிவிட்டு திருவல்லிக்கேணி, சிங்கராச்சாரி தெருவில் டாக்டர் லட்சுமணராவ் கிளினிக்கின் முன்னறையில் உட்கார வைத்து 'டாக்டர் மாமாகிட்டே காட்டிட்டு மருந்து போட்டுண்டு தெருவோரமா ஆத்துக்குப் போ' என்றார். தலையில் கார்க் வைத்த பட்டை பாட்டில் எல்லார் கையிலும் இருந்தது. டாக்டர் மாமாவிடம் எனக்குப் பயமில்லை. 'உஊஉ' என்று ஒலிக்கும் ஹாரன் சத்தத்துடன் சிட்ரன் கார் வைத்திருந்தார். சிகரெட் குடிப்பார். நிறைய சிரிப்பார். அப்பாவுக்கு நல்ல சிநேகிதர். முன்னறையில்

பரிபாலித்த கம்பௌண்டர் கோவிந்தராவ்தான் எனக்குப் பயம். 'இந்தக் கண்ணையும் நோண்டறேன் பாரு, விஷமமா பண்றே?' என்று காரணம் விசாரிக்காமல் திட்டினார். 'மாமா... ரொம்ப வலிக்கிறது மாமா...' எனக்குத் திரும்பச் சென்று அந்த சதத்தை நிறைவேற்ற வேண்டும். 'இத்தனை பேர் காத்திருக்காளே... அவாளுக்கெல்லாம் குடுமியா?' என்றார். புரியவில்லை. அவரருகே பெரிய கண்ணாடி ஜாடிகளில் கண்ணாடி மூடி போட்டு ரோஸ், பச்சை, நீல கலர் திரவங்கள் இருந்தன. பேஷண்டுகள் வெளியே வர வர டாக்டரின் சீட்டைப் பார்த்து அதில் கொஞ்சம், இதில் கொஞ்சம் எனக் கலக்கி ஊற்றி ஒரு லேபிளில் பெயர், வேளை எல்லாம் எழுதி முதுகில் கோந்து தடவி லாகவமாக ஒட்டி சலவைக்கல் கிண்ணியில் மாத்திரைகளைப் பொடி பண்ணி சொகுசாகப் பொட்டலம் மடித்துக் கொடுத்துவிட்டு நோட்டுப்புத்தகத்தில் கணக்கு எழுதிக் கொள்வார்.



அப்போது ஒரு தாட்டியான பெண்மணி கதறிக்கொண்டு ஓடிவந்தாள். இரண்டு மூக்கிலும் பேஸ்திரி பளிச்சிட்டது. நடு பாகம் சிவந்திருந்தது.

'டாக்டரைப் பாத்தே ஆகணும்.'

'விஷயம் என்ன சொல்லு... டாக்டரை எத்தனை தரம் பாக்கறது? இப்பதான மருந்து வாங்கிண்டு போன...'

அவள் கையில் இருந்த மருந்து பாட்டிலைக் காட்டினாள். 'லேபிள்ல என்ன பேர் போட்டிருக்குப் பாருங்கோ, கோவிந்தராவ்.'

அவர் கண்ணாடி மாட்டிக்கொண்டு மகாலட்சுமினு போட்டிருக்கு. நீ

அலமேலு, சாப்ட்டுட்டியா இதை?'

'ஒரு வேளை சாப்ட்டாச்சு, படபடன்னு வரது. வயத்தை என்னவோ பண்றது. தலைசுத்தறது. டாக்டரைப் பாக்கணும் எனக்கு. இப்படித்தான் எச்சுமிப் பாட்டிய தப்பு மருந்து சாப்ட்டு கிஷ்ணாம்பேட்டை வரை கொண்டு போய்ட்டா. அய்யோ.. நான் என்ன சேவேன், ஏது சேவேன் பாரும். ஓய்! மாட்டுப்பொண்ணு பாத்திருக்கா. கமுக்கமா அவுன்ஸ் கிளாஸ்ல ஊத்திப் பரிவா 'சாப்டுங்கோ அம்மா'னு கொடுக்கறா.'

'கூவாதே. கூவக்கூடாது. அந்த பாட்டிலைக் கொடு'

கொடுத்தாள். அதில் இன்னும் இரண்டு வேளை பச்சையாக பாக்கியிருந்தது. 'அய்யோ.. கண் இருட்டறதே! என்ன ஆகுமோ?'

'ஒண்ணும் ஆகாது. உம் பேரு அலமேலுதானே?' கோவிந்தராவ் தன் பேனாவை எடுத்தார். மகாலட்சுமி என்று எழுதியிருந்ததை அடித்து அதன் மேலேயே அலமேலு என்று எழுதினார்.

'இந்தா... சரியாப்போச்சு. இனிமே தலைசுத்தல் வராது.'

அந்தப் பெண்மணி இதைப் பிரமிப்புடன் பார்த்து, 'அப்படியா சொல்றேள். நல்லவேளை தப்பு மருந்தை சாப்ட்டிருந்தேன்னா இத்தனை நேரம் மாட்டுப்பொண் பச்சை மூங்கிலுக்கு சொல்லி இருப்பா' என்று புன்னகைத்துக்கொண்டே சென்றாள்.

# சுடிதாரில் தமிழன்னை!



சிங்கப்பூரில் தமிழ் இணையம் 2000 மாநாட்டுக்கு சென்றிருந்தேன். ஒரு வருஷத்தில் சிங்கப்பூரில் மாற்றங்கள். மேலும் ஒழுங்கு, மேலும் ஒப்பனை மரங்கள், புல்வெளிகள், மேலும் கட்டடங்கள், பாலங்கள், மேலும் கடல் தூர்த்து நிலமாக்கி ஏறத்தாழ இந்தோனேஷியா வரை சென்றுவிடும் சாத்தியம்! ஹூம்... (ஏக்கப் பெருமூச்சு!)

இந்த முறை நான் கவனித்த புதிய ஹைடெக் மாற்றம் - டாக்ஸி விளிக்கும் இயந்திரம். ஐம்பது செண்ட் போட்டால் வட்டாரத்தில் உலவும் அருகாமை டாக்ஸியை 'ஜி.பி.எஸ்.'-ஸில் பிடித்து ஒரு சீட்டில் டாக்ஸி நம்பரையும் எத்தனை நிமிஷங்களில் வந்து சேரும் என்பதையும் அச்சிட்டுக் கொடுக்க, கிழித்துக்கொண்டு வெளியே வந்தால் டாக்ஸி காத்திருக்கிறது.

மாநாட்டின் முதல் தினத்தில் சிங்கப்பூரின் அதிபர் திரு.எஸ்.ஆர். நாதன் பங்குகொண்ட விருந்தில் குழந்தைகள் தலையாட்டிக் கொண்டே, வீணை, கீபோர்டு பின்னணி யுடன் தமிழ், சீன, மலாய் பாடல்கள் பாட, இடையே ஒரு பெண்மணி ஹார்ப் ('இதாங்க சகோட யாழ்') வாசிக்க, வெஜிடேரியன் என்று கொண்டுவந்த என்னவோவை ஓரத்தில் கடித்துப் பார்த்தபோது யோசித்தேன். சங்ககாலத்தில் முறத்தால் புலி விரட்டிய தமிழ் இப்போது கணிப் பொறியால் எலி விரட்டுகிறது. மாநாட்டின் ஆதார 'டைலம்மா'- தமிழைக் கணிப்பொறிக்கு ஏற்றவாறு மாற்றுவதா அல்லது கணிப்பொறியைத் தமிழுக்கு ஏற்றவாறு மாற்றுவதா என்பதே..! முதல் அயிட்டம் தேவையில்லை என்பது என் கருத்து. காரணம், கணிப்பொறி எந்த மொழியையும் எந்த சிக்கலையும் சமாளிக்கவல்லது. எனவே, 'தமிழ் ஜாவா', 'தமிழ் லினக்ஸ்' எல்லாம் நேர விரயம் என்று நான் எண்ணுகிறேன். உலகில் ஜப்பானியர்களோ, ஜெர்மானியர்களோ

யாரும் இவ்வாறு செய்வதில்லை.




காலை எட்டிலிருந்து இரவு எட்டு மணி வரை தொடர்ந்து மூன்று அரங்கங்களில் ஓ.ஸி.ஆர். - எழுத்து அடையாளம், வாய்ஸ் ரெகக்னிஷன் என்னும் பேச்சடையாளம், மெஷின் மொழி பெயர்ப்பு, பிரௌஸர், மேய் பொருள்கள், ஸர்ச் இன்ஜின் என்னும் தேடியந்திரங்கள் போன்ற பொருள்களில் 'டெமில் கம்ப்யூட்டிங்' பற்றி தலைகலைந்த, டை தளர்ந்த அறிஞர்கள் ஆங்கிலத்தில் விவாதிக்க, உலகெங்கும் பரவிய தமிழ் மென்பொருள்களை இணையத்தில் வைக்கத் தீர்மானித்தார்கள்.

ஸ்ரீலங்கா அரசு ஏறக்குறைய ஒரு லட்சம் கணிப்பொறி வார்த்தைகளைத் தமிழில் 'வலைத்து'ப் போட்டிருக்கிறது. அவற்றின் பொருத்தத்தைப் பற்றி கருத்துக் கூற கெடு வைத்திருக்கிறார்கள். இப்பட்டியலைத் தமிழ்ப் பண்டிதர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும். கீபோர்டுக்கு 'குழுமி' என்றால் பயந்துகொள்வார்கள் (மௌஸ் என்பதற்கு எலியா, சுட்டியா, காட்டியா... இப்படியெல்லாம் தமாஷாக இருந்தது).

தமிழ் எழுத்து சீர்திருத்தம் பற்றியும் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இகர ஈகாரங்களுக்கும் உகர ஊகாரங்களுக்கும் பொதுவான குறியீடுகள் அமைப்பது வ.செ. குழந்தைசாமியின் நீண்டநாள் கருத்து. அதாவது 'து' என்பது 'த ு' என்றும் 'தூ' என்பதை 'த ூ' என்றும் எழுத வேண்டுமாம். அரங்கத்தில் மேல் வரிசையில் வீற்றிருந்த தமிழன்னை புன்னகை செய்து கொண்டிருந்தாள் - 'நேரம்டா' என்று! தமிழ் எழுத்துக்களைக் கணினியிலும் இணையத்திலும் தகவல் தளங்களிலும் வைக்க உள் குறியீடுகள் இதுவரை இருபத்திரண்டு இருந்தன. இந்த மாநாட்டில் இரண்டுக்கு குறைந்திருக்கிறார்கள் - டிஸ்கி, டாப் (TSCII, TAB) என்று. தமிழக அரசு ஒப்புக்கொண்டது டாப்.


மற்றதை பிடிவாதமுள்ள வெளிநாட்டுத் தமிழர்கள் பயன்படுத்துகிறார்கள். எது வெல்லும் என்பதைக் காலம் சொல்லும்.

INFITT என்ற தமிழ் மொழித் தகவல் தொழில்நுட்பத்துக்கான சர்வதேச மன்றம் ஒன்று அமைக்கப் பட்டது. அதில் அடியேனைச் சேர்த்து இந்தியாவுக்கு பதினாறு பொதுக்குழு அங்கத்தினர்கள். இரண்டு வருடத்துக்கு சிங்கப்பூரிலிருந்து அருண் மகிழ்னன் மேற்பார்வையில் இயங்கும். 'தமிழன் என்றொரு இனம் உண்டு. தனியே அதற்கொரு குணம் உண்டு' என்பது சிங்கப்பூர் கருத்தொற்றுமைக்குப் பின்னர் 'பொதுவாய் அதற்கொரு குணம் உண்டு' என்று மாறியது. அடுத்த மாநாடு கோலாலம்பூரில். அதற்கடுத்து அமெரிக்காவில். தமிழன்னை சுடிதார் அணிந்துவிட்டாள்.

முனைவர் ம.ரா.போ.குருசாமியின் எண்பதாம் ஆண்டுத் தொடக்கத்தில் அவர் தொகுத்துப் பதிப்பித்த 'கபிலம்' என்கிற நூலைப் படித்து ரசித்தேன். திருக்கோவிலூர் பண்பாட்டுக் கழகத்தையும், மோகன் ப்ருவரிஸ் (ராயலா டவர்ஸ் அண்ணா சாலை சென்னை-2)ஐயும் இணைத்து யோசிப்பது சிரமமாக இருந்தாலும், தமிழுக்கு ஒரு நல்ல நூலைத் தந்ததற்கு பாராட்ட வேண்டும்.

சங்க இலக்கியங்களில் நூறு பாடல்களுக்கு மேல் பாடிய ஐந்து பேரில் முதன்மையானவர் கபிலர். எட்டுத் தொகை, பத்துப் பாட்டுகளில் மொத்தம் 235 பாடல்கள் அகம் - புறம் இரு துறைகளிலும் பாடியுள்ளார். அவருக்கும் பாரிவள்ளலுக்கும் இருந்த நட்பும், பாரி இறந்த பின் அவனுடைய இரண்டு பெண்களுக்கும் கல்யாணம் செய்துவைக்க இவர் செய்த முயற்சிகளும் சங்க காலத்தின் உருக்கமான, உண்மையான வரலாறுகளில் ஒன்று.

அந்தண குலத்தவரான கபிலர், பாரி மகளிரைத் தம் மகள்கள் என்று சுவீகரித்து புலிகடிமால் என்னும் அரசனிடம் சென்று 'இந்தப் பெண்களை மணந்து கொள்' என்று இறைஞ்சும் புறநானூற்றுப் பாடல் என்னைப் பாதித்த பாடல்களில் ஒன்று. கபிலரின் ஒரு பாடலை இன்றைய தமிழில் தருகிறேன். சேர மன்னன் செல்வக் கடுங்கோ என்பவன் கபிலரின் கையைத் தொட்டுப் பார்த்து 'புலவரே, உம் கை பூப்போல மென்மையாக இருக்கிறது' என்று சொல்ல, அவர் பாடிய பாடல் இது -



முரட்டு யானையை இழுத்துப் பிடித்து
அங்குசத்தால் அடக்கும் கை,
ஆழமான நீர்ப் பரப்புகளைக் கடந்து
விரையும் குதிரைகளை அடக்கும் கை,
தேரில் ஏறி முதுகில் அம்பறாத்துரணியிலிருந்து
வில்லம்பு எடுத்துச் செலுத்தும் கை,
பரிசு கேட்பவர்களுக்கு அரிய நகைகள் தரும் கை,
அத்தகைய வலுவானது உன் கை.
எங்கள் கைகளிலோ புலவு, பூ, புகை நாற்றம்.
சோறுண்ணுவது தவிர
வேறு தொழில் இல்லாததால்
எங்கள் கை மிகவும் மெல்லியன.

பெண்களுக்கும் பகவைர்களுக்கும்
முறையே, அழகாலும் அகலத்தாலும்
வருத்தம் தரும் மார்பனே!

உலக இலக்கியத்தில் சேர வேண்டியது சங்க இலக்கியங்கள் என்பதற்கு மற்றொரு சான்று இப்பாடல். கபிலரின் ஐங்குறுநூறு 292-ம் பாடல் தற்காலத்து ஃபெமினிஸ்ட்டுகளுக்கும் சங்க காலத்தை பொற்காலம் என்று சொல்பவர்களுக்கும் சங்கடம் தரும்.

மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிர
தண்மழை தழீஇய மாமலை நாட
நின்னினும் சிறந்தனள் எமக்கே நீநயந்து
நன்மனை அருங்கடி அயர
எம்நலம் சிறப்ப யாம் இனிப் பெற்றோளே


வாரிசு வேண்டி இரண்டாம் திருமணம் செய்து கொண்ட தலவைனை நோக்கி அவன் முதல் மனைவி பாடுவதாக அமைந்தது இது.

"மயில்கள் ஆடவும் தேனீக்கள் பாடவும் குளிர்ந்த மேகங்கள் தழுவும் பெரிய மலை நாட்டுக்கு உரியவனே... நீ விரும்பி இந்தப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வந்து விட்டாய். (என்ன செய்வது) என்னுடைய இல்லற வாழ்க்கை சிறப்பாக அமவைதற்காக எனக்குத் துணையாக வந்திருக்கும் இவள் எனக்கு உன்னை விட நல்லவள்!"

Strange!

ஸ்ரீராம பாரதி நாலாயிர திவ்ய பிரபந்தத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தமிழ் மூலத்துடன் அழகான கிளேஸ் காகிதப் பதிப்பாக பைபிள் போல போட்டிருக்கிறார். விலை குறிப்பிடவில்லை. பெற விரும்புவோர் அவருடைய 'சடகோபன் திவ்ய பிரபந்த பாடசாலை, சென்னை-601 302' என்ற விலாசத்துக்கு நன்கொடை அனுப்பினால் அனுப்புவார்.

# அமெரிக்காவுக்கு அனுப்பினார்!



**ஆ**னந்த விகடனில் முதலில் சிறுகதைகள் தான் எழுதினேன். முதல் கதை 'சில வித்தியாசங்கள்'. அதன்பின் 'ஒரே ஒரு மாலை', 'ரஞ்சனி' போன்ற சிறுகதைகளை அந்த வருடத்திலேயே எழுதினேன். ஆனந்த விகடனுக்கு சிறுகதைகளை அனுப்பினால், அது பரிசீலனையில் இருக்கிறது என்று முதலில் கடிதம் வரும். ஒரு மாதத்துக்குள் அது பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டால் மற்றொரு கடிதம் வரும். அதன் பின் கதை வெளிவரும். இது 68 - 69-களில். விரைவிலேயே நான் அந்தக் கட்டத்தைத் தாண்டி விட்டதால், இப்போது அப்படியெல்லாம் செய்கிறார்களா என்று தெரியவில்லை.

'ஒரே ஒரு மாலை' கதையில் ஒரு புதிய உத்தியைக் கடைப்பிடித்தேன். கதையின் சோகமான முடிவை பாதியில் குறுக்கே புகுந்து சொல்லி விட்டு கதையைத் தொடர்ந்தேன். அதனால் அந்தக் கதையின் பிற்பகுதியின் உருக்கம் அதிகமாகியது. இருவரும் செத்துப் போகப் போகிறார்கள். 'உனக்கு எத்தனை சம்பளம்..? என்ன கலர் பிடிக்கும்?' என்றெல்லாம் அற்ப விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறார்களே என்ற 'அய்யோ பாவம்' கிடைத்தது.

க.நா. சுப்ரமண்யம் அவர்கள் இந்தக் கதையைப் படித்துவிட்டு ஒரு விமரிசனக் கட்டுரையில் இதைக் குறிப்பிட்டு 'இந்தப் பையன் பின்னால் பெரிசாக வருவான்' என்று எழுதி இருந்தார். அதன்பின் க.நா.சு. அவர்களைக் கவரும்படியான கதைகள் நான் எழுதவில்லை. நல்ல எழுத்தும் ஜனரஞ்சகமான எழுத்தும் விரோதிகள் என்ற பிடிவாதமான எண்ணம் கொண்டவர்களில் ஒருவர் அவர். மக்களுக்குப் பிடித்தால், அது நல்ல இலக்கியமல்ல என்று இன்றும் சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஓர் எழுத்தாளன் எப்போதும்

நெற்றியைச் சுருக்கிக்கொண்டு நான்கு நாள் தாடியுடன் தையல் பிரிந்த சட்டையுடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அது எனக்குச் சரிப்பட்டு வரவில்லை. விகடனில் நான் எழுதிய 'ஒரு லட்சம் புத்தகங்கள்', 'மகாபலி', 'அச்சம்தவிர்', 'ரேணுகா' போன்ற கதைகளை இன்னமும் ஞாபகம் வைத்துக்கொண்டு என்னை வழிமறித்துப் பாராட்டுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் குழாயில் தினம் நல்ல தண்ணீர் வரவும் கூட்டமில்லாமல் பஸ்கள் கிடைக்கவும் பிரார்த்திக்கிறேன்.

விகடனில் நான் எழுதிய முதல் தொடர்கதை 'ஜன்னல் ம்லர்'. தொடர்கதை என்பதைவிட குறுநாவல் என்று சொல்லலாம். அப்போது விகடனில் துணை ஆசிரியராக இருந்த பரணீதரன் எனக்கு ஒரு முறை போன் செய்து, 'இந்தக் கதையின் முடிவில் ஒரே ஒரு வார்த்தை சேர்த்துக்கொள்கிறேன்' என்று சொன்னார். நான் 'தாராளமாக' என்று அனுமதி கொடுத்தேன். அந்த ஒரு வார்த்தை கதைக்கு மெருகூட்டியது.




எழுத்து ஒரு தவம், வேதவாக்கு, நான் எழுதியதை ஒரு அட்சரம்கூட மாற்றக்கூடாது என்கிற ஜல்லியடியெல்லாம் எனக்கு எப்போதும் கிடையாது. சில எழுத்தாளர்கள் ஒரு வரியை எடுத்தாலும் 'கையை ஒடிப்பேன்' என்பார்கள். தனிப்பட்டு வெளியிடப்படும் நாவலில் அல்லது சிறுகதைத் தொகுப்பில் இந்தப் பிடிவாதம் செல்லுபடியாகலாம். பத்திரிகையில் எழுதும்போது அதன் ஆசிரியர் நம்மைவிட தம்

வாசகர்களை அதிகம் அறிந்தவர் என்பதை அறியவேண்டும். டி.எஸ்.ஈலியட்டின் 'வேஸ்ட்லாண்ட்' (Wasteland) என்கிற நவீன ஆங்கில இலக்கியக் காவியம் எஸ்ரா பவுண்டினால் பல இடங்களில் திருத்தப்பட்டது, சுருக்கப்பட்டது பலருக்குத் தெரியாது.

அடுத்து ஆனந்த விகடனில் 'கரையெல்லாம் செண்பகப்பூ' எழுதினேன். நாட்டுப்புறப் பாடல்களின் பின்னணியில் கிராமத்தில் வைத்து ஒரு த்ரில்லர் (இந்த யோசனை இளையராஜா தந்தார்). வாசகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. மக்கள் த்ரில்லரை மறந்துவிட்டார்கள். நாட்டுப்புறப் பாடல்களை இப்போதும் ஞாபகம் வைத்திருக்கிறார்கள். 'செண்பகப்பூ' முடிந்த உடனே ஆசிரியர் பாலன் அவர்கள் என்னை மற்றொரு தொடர்கதை ஆரம்பிக்கச் சொன்னார். அப்போது கமல்ஹாசன் எனக்குப் பழக்கமாகியிருந்தார். அவர் மூலம் சினிமா உலகத்தை அருகில் பார்க்க முடிந்தது. 'கனவுத் தொழிற்சாலை' எனப் பெயரிட்டுவிட்டு ஒரு அத்தியாயம் எழுதிக் கொடுத்துவிட்டு சேலத்துக்கு அப்பாவைப் பார்க்கப் போயிருந்தேன். அங்கே ஒரு மளிகைக் கடையில் பேட்டரியோ ஏதோ வாங்கிக்கொண்டிருந்தபோது அரிசி மூட்டை மேல் வைத்திருந்த போன் ஒலித்தது. அதை கடைக்காரர் எடுத்துக் கேட்டு, "இங்கே சுஜாதான்னு எழுத்தாளர் யாருங்க?" என்றார்.

அதை வாங்கிக் கேட்டதில், ஆசிரியர் பாலன் அவர் கள் உடனே சென்னைக்கு டைரக்டர் மகேந்திரன், நடிகை லட்சுமி அவர்களுடன் டிஸ்கவுன் செய்ய வருமாறு அழைத்தார். சினிமா சம்பந்தமான கதை என்பதால், கனவுத் தொழிற்சாலைக்கு மவுண்ட்ரோட்டில் சினிமா போலவே பானர் வைத்தார். இன்றுவரை அவர் எப்படி என்னை சேலத்தில் அந்த மளிகைக்கடை போனில் பிடித்தார் என்பது மட்டும் மர்மமாகவே இருக்கிறது. பாலன் அவர்களுடன் நட்பு அப்போதிலிருந்து இப்போது வரை தொடர்ந்திருக்கிறது என் வாழ்வில் ஒரு பாக்கியம்.

அதன்பின் விகடனில் 'பிரிவோம் சந்திப்போம்' என்று ஒரு தொடர்கதை எழுதினேன். அதன் முடிவில் மதுமிதா அவசரமாகத் திருமணம் செய்துகொண்டு ரகுவின் மனசை ஒடித்துவிட்டு அமெரிக்கா போய்விடுகிறாள். பாலன், "நீங்களும் அமெரிக்கா போய் அவர்கள் என்ன ஆனார்கள் என்பதை இரண்டாம் பாகமாகத் தொடருங்களேன்" என்று அமெரிக்காவுக்கு டிக்கெட்டையும் கொடுத்து அனுப்பினார்.

அடுத்து 'என் இனிய இயந்திரா' என்கிற சயின்ஸ்ஃபிக்ஷன் எழுதினேன். அதையும் இரண்டாம் பாகம் எழுதச் சொன்னார். அதில்

வரும் ஜீனோ என்கிற ரோபாட் நாய் பிரபலமாகி இரண்டாம் பாகத்தில் நாட்டை ஆளத் துவங்கிவிட்டது.

'நிறமற்ற வானவில்', 'வாய்மையே சில சமயம் வெல்லும்' தொடர்கதைகளை அடுத்தடுத்து எழுதினேன். 'ஆ' கதையில் ஒவ்வொரு அத்தியாயமும் ஆ என்கிற எழுத்தில் முடியுமாறு எழுதச் சொன்னார். அண்மையில் 'தீண்டும் இன்பம்'.

இவ்வாறு நான் விகடனில் எழுதிய தொடர்கதைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வகையாக எழுதியதற்கு ஆசிரியர் பாலன் கொடுத்த உற்சாகம்தான் காரணம். "உங்களால் இது முடியும்... எழுதிப் பாருங்கள்" என்பார். ஒரு வரி, ஒரு வார்த்தை மாற்றினாலும், போன் பேசி 'இப்படி இருப்பதை இன்ன காரணத்துக்காக மாற்றுகிறேன்' என சம்மதம் கேட்டுத்தான் செய்வார்.

'கற்றதும்.. பெற்றதும்..' கட்டுரைத் தொடரை எழுதச் சொன்னதும் அவர்தான். "சுயசரித்திரமாக எழுதுங்கள்" என்றார். "சுயசரித்திரம் சம்பந்தப் பட்டவர்கள் உயிரோடு இருக்கும்போது, உண்மையாக எழுதுவது ஆபத்து. எல்லாம் சுகம் என சாக்லெட் தடவி எழுதினால், அது பொய்யாகும். அதனால் அவ்வப்போது சில சம்பவங்களை மட்டும் எழுதுகிறேன் . பொதுவான சில விஷயங்களையும் எழுதுகிறேன்" என்றேன். உடனே ஓகே சொல்லிவிட்டார். ஒரு வருஷமாக அதைத்தான் எழுதி வந்திருக்கிறேன்.

இப்போது இந்த அருமையான வாய்ப்பை ஒத்திப்போட்டு விட்டு ஒரு தொடர்கதை எழுதலாமா என்று கேட்டேன். அதற்கும் சம்மதித்தார். பத்திரிகாசிரியர்களில் பாலன் அவர்கள் ஒரு தனிப்பிறவி என்பதை அவருடன் பழகியவர்கள் அனைவரும் அறிவார்கள். ஆங்கிலத்தில் 'ஸினர்ஜி' என்பார்கள். இசைந்த சக்தி. எழுத்தாளனும் பத்திரிகை ஆசிரியரும் எப்படி இணைந்தியங்க வேண்டும் என்பதற்கு உதாரணம்.

# முதல் கதை!



"இன்னும் சில ஆண்டுகள் கழித்து ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஒரு மாணவனுக்கு இத்தகைய ஆதாரங்கள், ஒன்று குழப்பம் தரும் அல்லது தவறான முடிவுகளுக்கு இட்டுச்செல்லும்." - இந்த வாக்கியத்தில் இலக்கணப் பிழை இருக்கிறது. என்ன என்று யோசியுங்கள்.

மைசூரைச் சார்ந்த இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், சென்னை மொழி அறக் கட்டளை, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மூன்றும் இணைந்து அழகாக வெளியிட்டிருக்கும் 'தமிழ் நடைக் கையேடு' என்னும் புத்தகம் தமிழில் எழுத விரும்பும் எல்லோருக்கும் பயன்படும். இத்தனை நாள் தமிழ் எழுதிக்கொண்டிருக்கிறேன். என்னை அறியாமலேயே பல பிழைகள் செய்து வந்திருக்கிறேன் (தமிழ்த்தாய் மன்னிப்பாளாக) என்பது இதைப் படித்ததும்தான் புரிந்தது. உதாரணமாக எனது மனைவி என்று சொல்லக்கூடாது. என் மனைவி என்றுதான் சொல்ல வேண்டும். எனது பேனா என்று சொல்லலாம். இது எப்படி? இதையும் யோசியுங்கள்.

தியோடோர் பாஸ்கரன் அவர்களை ஒரு பார்ட்டியில் சந்தித்தபோது என் முகவரி வாங்கிக் கொண்டு இதை அனுப்பி வைத்தார்.

தமிழில் புத்தகங்களை அச்சிடுவதில் நேர்த்தியும் திறமையும் கூடியிருக்கிறதைப் பார்க்கிறேன். சமீபத்திய உதாரணங்கள் இந்திரனின் 'தேடலின் குரல்கள்' என்னும் தமிழக ஓவிய சிற்ப இயக்கத்தின் புத்தகம், ரவி சுப்ரமணியன், கலாப்ரியா இவர்களின் கவிதைத் தொகுப்புகள், சிவசங்கரியின் 'இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு' போன்றவை.

புதிய எழுத்தாளர்கள் பலர் எனக்கு எழுதும் போது 'உங்கள் கதைகள்

ஆரம்ப காலத்தில் நிராகரிக்கப் பட்டனவா?' என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்கு எல்லா எழுத்தாளர்களும் யோக்கியமாகப் பதில் சொல்ல மாட்டார்கள். குறிப்பாக பெண் எழுத்தாளர்கள் ஒரு ஸ்டாக் பதில் வைத்திருக்கிறார்கள். "என்னவோ தோணிச்சு... நாலு கிறுக்குக் கிறுக்கினேன். அதை அனுப்பி வெச்சேன். உடனே பிரசுரமாயிருச்சு. எனக்கே தெரியாது. யாரோதான் சொன்னாங்க - 'உன் கதை விகடன்ல வந்திருக்கு'ன்னு. அப்பதான் என்கிட்ட எழுத்துத்திறமை இருக்குன்னு கண்டு பிடிச்சேன். அப்பலருந்து இப்ப வரைக்கும் அப்படித்தான். நான் அனுப்பிச்ச ஒரு கதைகூடத் திரும்ப வந்ததில்லை" என்பார்கள்.

எல்லாம் புளுகு. முதல் கதை திரும்பிவராத ஒரே எழுத்தாளன் ஆதிமனிதன் மட்டும்தான்.

ஸ்ரீரங்கத்தில் 'தென்றல்' கையெழுத்துப் பத்திரிகையில் இருந்தே என் கதைகளின் நிராகரிப்பு துவங்கிவிட்டது. 'கள்வர் தலைவன்' என்ற ஒரு கதை எழுதிக் கொண்டுபோய் 'தென்றல்' ஆசிரியருக்குக் காட்டியபோது (மொத்த சர்க்குலேஷன் பத்து) 'ஏம்பா... நாங்க தரமான இலக்கிய பத்திரிகை நடத்தறோம். பாப்பா மலர் இல்லைன்னு தெரியாதா?' என்று நிராகரித்து விட்டார். அதன்பின்தான். வல்லபாய் படேல் பற்றிய என்னுடைய பிரசித்திபெற்ற அறுசீர் விருத்தத்தை எழுதிக் கொண்டு கொடுத்தேன். அதுவும் நிராகரிக்கப்பட்டது. 'கவிதை போடற தில்லைப்பா.. தமிழ்ல நல்ல கவிதைகள் எல்லாம் எழுதிட்டாங்கப்பா' என்றார் ஆசிரியர் ஜனனி.

பி.எஸ்ஸி. படிக்கும்போது ஒரு கதை கலைமகளுக்கு அனுப்பினேன். அது ஒரு கவிஞனின் கதை. தபாலில் சேர்த்துவிட்டு வீட்டுக்கு வருவதற்குள் திரும்பி வந்து விட்டது. அப்புறம் ரேடியோ நாடகம் ஒன்று எழுதி திருச்சி வானொலி நிலையத்துக்குக் கொண்டுபோய்க் கொடுத்தேன். 'பார்வையற்றோர் பற்றிய டிராமா ரேடியோவில் எடுபடாது' என்று சொல்லி நிராகரித்துவிட்டார்கள். அதன்பின் திருலோக சீதாராமின் 'சிவாஜி' பத்திரிகையில் என் முதல் கதை வெளிவந்தது. அதைப் பற்றி தனிப்பட்ட கட்டுரையே எழுதியுள்ளேன். பத்திரிகை வந்த கையோடு தெப்பக்குளம் கடைகளில் எல்லா காப்பிகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன (பத்து காப்பியையும் நானே வாங்கினதால்). அடுத்த நாளே மற்றொரு கதை எழுதி சிவாஜி அலுவலகத்துக்குக் கொண்டுபோய் கொடுத்தேன். அது வெளிவரவே இல்லை. என்ன கதை என்றும் நினைவில்லை.

அதன்பின் குழந்தை எழுத்தாளனாக மாறி விடத் தீர்மானித்தேன். அந்த நாட்கள் குழந்தைப் பத்திரிகைகளின் பொற்காலம். அணில், ஆடு என்றெல்லாம் பத்திரிகைகள் வந்தன. காலணாவுக்கெல்லாம் (சுமார் ஒரு பைசா) பத்திரிகைகள் கிடைக்கும். அவற்றில் 'ஜிங்லி', 'கண்ணன்' போன்ற பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பினேன். நல்லவேளை, அவர்களும் திருப்பி அனுப்பி விட்டார்கள். ரெகுலர் எழுத்தாளனா, குழந்தை எழுத்தாளனா, கவிஞனா என்ற அடையாளக் குழப்பம் தீர்ந்து மூன்றும் இல்லை என்பது தெளிவாயிற்று. இருந்தும் கதை எழுதும் நப்பாசை பல்லிடுக்கில் மாட்டிக்கொண்ட உணவு வஸ்து போல அவ்வப்போது தொந்தரவு செய்தது.

எம்.ஐ.டி. படிக்கிறபோது 'குமுதம்' பத்திரிகை ஒரு சிறுகதைப் போட்டி நடத்தியது. பரிசு ரூபாய் நூறு. அதற்கு ஒரு.. ஸாரி.. ஓர் அற்புதமான கதை எழுதினேன் (எனக்கு மட்டும் அற்புதம்). அது போர்டுக்குகூட வரவில்லை. முதல் பரிசு கிடைத்த கதையைப் படித்து 'இந்த அடாசுக்குப் போய் கொடுத்திருக்கிறார்களே.. என் காவியத்தை நிராகரித்துவிட்டார்களே...' என்று பத்திரிகை உலகத்தின் மேல் ஹோல்சேலாக வெறுப்பு ஏற்பட்டு ஆத்திரத்தில் ரயில்பாதையைக் கடந்து பங்க் கடைக்குப் போய் முடிவெட்டிக் கொண்டேன். குரோம்பேட் ஸ்டேஷனில் சுண்ணாம்பு தடவித்தடவி சோனியாகப் போன மரத்தின் அடியில் எனக்கு ஞானோதயம் ஏற்பட்டது. 'உனக்குப் படிப்புத்தான் முக்கியம். முதலில் படிப்பை முடி. தமிழ் இலக்கியத்தை அப்புறம் காப்பாற்றலாம். அதுவரை கோமாளிகள் எழுதிக்கொண்டிருக்கட்டும். போனால் போகிறது' என்ற தீர்மானத்துக்கு வந்தேன். இருந்தும் குடத்தில் இட்ட விளக்காக என் பிரகாசம் பத்து சென்டிமீட்டருக்கு மேல் எட்டாதது வருத்தமாக இருந்ததால் கதை எழுதுவதையே நிறுத்திவிட்டு கிரிக்கெட் ஆடத் தீவிரமானேன்.

எம்.ஐ.டி. டீமில் ரிசர்வ் பிளேயராக சீஸன் பூரா ஒரு மாட்ச்கூட ஆடாமல் சாதனை படைத்தேன். பின்னர் படம் வரைந்தேன். கித்தார் பழகினேன். புல்லாங்குழல் வாசித்தேன். என்னென்னவோ பண்ணிப் பார்த்தேன். என் உள்மனதின் படைப்பு ஆசைகளுக்கு வடிகால் தேவைப்பட்டது என்று ஜல்லியடிக்க விரும்பவில்லை. Restless mind. அவ்வளவுதான்.

டிகிரி பாஸ் செய்து வேலைக்குப் போகும் வரை எழுதாமலேயே நான்கு ஐந்து வருஷம் வாழ்ந்தேன்.



வேலை கிடைத்து டெல்லியில் நண்பன் சீனிவாசனுக்கு ஒரு கதையைத் திருத்திக் கொடுத்தேன். அது பிரசுரமானதும் நாமே எழுதிப் பார்த்தால் என்ன என்று அனுப்பினேன். அது திரும்பி வந்தது.

அதன் பின்னர் குமுதத்தில் 'சசி காத்திருக்கிறாள்' என்று ஒரு கதை வந்தது. அப்போது எல்லாம் குமுதத்தில் தாராளமான 25 ரூபாய் அனுப்புவார்கள். மற்றொரு 25 ரூபாய்க்கு செக் அனுப்பி வைத்து எஸ்.ஏ.பி. அவர்கள் 'அடிக்கடி எழுதுங்கள்' என்று குறிப்பிட்டிருந்தார்.

அதன்பின் என் கதைகள் திரும்ப வரவில்லை.

ஓர் எழுத்தாளன் உருவாவது எப்போது என்பது பற்றிய உண்மை எதாவது மேற்சொன்னதில் எங்கேயாவது தென்பட்டால் எனக்குத் தகவல் (காம்பெட்டிஷன் போஸ்ட்கார்டில்) தெரிவியுங்கள். பரிசனுப்புகிறேன்.

கட்டுரையின் ஆரம்பத்தில் கொடுத்திருந்த வாக்கியத்தை மறுபடி பார்ப்போம். "இன்னும் சில ஆண்டுகள் கழித்து ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஒரு மாணவனுக்கு இத்தகைய ஆதாரங்கள், ஒன்று குழப்பம் தரும் அல்லது தவறான முடிவுகளுக்கு இட்டுச்செல்லும்" இதில் பிழை.. இதுதான்.

இந்த நீண்ட வாக்கியம் ஒரு மாணவனைப் பற்றியது. அவனுக்கு

இரண்டு காரியங்கள் (வினைகள்) நிகழ்கின்றன. ஒன்று குழப்பம் ஏற்படுவது. மற்றது தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்வது. இவ்விரு வினைகளுக்குமான வேற்றுமைகள் வேறு வேறு மாணவனுக்கு என்பதில் உள்ள 'கு' வேற்றுமை இரண்டு வினைகளுக்கும் பொதுவாக இருப்பதால் இந்தத் தவறு வருகிறது. இதைத் தீர்க்க ஒரே வழி பிரித்து எழுதுவதே. உதாரணம் - மாணவனுக்கு இத்தகைய ஆதாரங்கள் ஒன்று குழப்பம் தரும், அல்லது அவனைத் தவறான முடிவுகளுக்கு இட்டுச்செல்லும்.

இரண்டாவது கேள்விக்கு விடை: 'அது' என்பது அஃறிணைக் குறிப்பு. அதை பெட்ரூமில் தவிர வேறு இடத்தில் மனைவிக்குப் பயன்படுத்தினால் கோபித்துக் கொள்வாள். எனவே 'எனது மனைவி' தப்பு, என் மனைவிதான் சரி.

Ogden Nash சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த எனக்குப் பிடித்தமான அமெரிக்க ஹாஸ்ய கவி. கவிதையின் சம்பிரதாய வடிவத்தில் நிறைய சுதந்திரம் எடுத்துக்கொண்டார். சிறிதாக ஒரு வரி எழுதுவார். அதனுடன் 'ரைம்' என்னும் எதுகை வரும் வரைக்கும் அடுத்த வரியை இழுத்துக் கொண்டே போவார். இதையே தன்னுடைய பாணியாக மாற்றி பல கவிதைகள் எழுதினார். ஆக்டபஸ் மீனைப் பார்த்திருப்பீர்கள். அதைப் பற்றிய நாஷின் சின்னஞ்சிறு கவிதைக்கு ஓர் உதாரணம்.

ஒரு சிறுவன் ஆக்டபஸை இலக்கணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கேட்கிறான்.

Tell me O Octopus I begs
Is those things arms or is they legs
I marvel at thee Octopus
If I were thou, I will call me us!

ஆங்கிலத்தின் கட்டுக்கோப்பும் ஓசைநயமும் வேண்டாமெனில் இதைத் தமிழில் இவ்வாறு சொல்லலாம்.

"கெஞ்சுகிறேன் சொல்லுங்கள் ஆக்டபஸ்
அவை கைகளா கால்களா?
தங்களை வியக்கிறேன் ஆக்டபஸ்

*நீங்களாக இருந்தால் நான், 'நாங்களா'!"*

- சுஜாதா

# ஹைக்கூ ஹிம்சை!



அமெரிக்காவுக்குச் சென்றிருக்கும் சாஃப்ட்வேர் மென்பொருளாளர்கள் பலரை அந்த நாட்டின் பொருளாதாரப் பின்னடைவில் பங்குமார்க்கெட் சரிந்ததால் திருப்பி அனுப்புகிறார்கள் என்று தெரிகிறது. இதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள். குறிப்பாக, புஷ் வந்ததனால் ஏற்பட்ட விளைவு இது என்கிறார்கள். இந்தியர்கள் பலர் ஸ்டாக் மார்க்கெட்டில் எளிதாகக் கிடைத்த கணிசமான சொத்துக்களை இழந்திருக்கும் இந்தக் கஷ்டகாலத்திலும் தங்கள் நகைச்சுவை உணர்ச்சியை இழக்கவில்லை. இதை இன்டர்நெட்டில் பல உதாரணங்களில் பார்க்கிறேன்.

எனக்குப் பிடித்தது e-poems@tamil.com-ல் ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினீயரின் 'கடைசிகானம்' எனபது -

'வீடு வரை விண்டோஸ்
வீதி வரை என்டி
காடு வரை யூனிக்ஸ்
கடைசி வரை யாரோ

தொட்டிலுக்கு பேசிக்
கட்டிலுக்கு யாஹூ
பட்டினிக்கு பாப்கார்ன்
கெட்டபின்பு யு.எஸ்.'

இதுபோல B2B, B2C போன்று பரபரப்பாகப் பேசப்பட்ட பிஸினஸ் டு பிஸினஸ், பிஸினஸ் டு கஸ்டமர் போன்ற ஜல்லியடி விரிவாக்கங்களைப் புரட்டிப் போட்டு Back to Bangalore, Back to Chennai, Bull to Bear, Back to Clinton (please), Back to Basic, Back to College என்று மாற்றிச் சொல்லிச் சிரிப்பில் ஆறுதல் தேடுகிறார்கள்.

அன்புள்ள நண்பர்களே, திரும்பி வாருங்கள். இங்கே சாதிக்க வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன. அரை டிராயரையும் அமெரிக்க உச்சரிப்பையும் எதைக் கண்டாலும் புகாரையும் துறந்து விட்டு வாருங்கள். உங்களை வரவேற்கக் காத்திருக்கிறோம். இந்தியாவில் ஜாவா தாண்டி Wap-ஐத் தாண்டி 'சோப்' வரை வந்துவிட்டோம்.

கூரியரார் எங்கள் வீட்டுக் கதவைச் சத்தமிட்டுக் கொடுத்துவிட்டுப் போகும் போது மற்றொரு கவிதைத் தொகுப்பா என்று அச்சத்துடன் ஸ்டேப்பிள் பின்களைப் பிரிக்கிறேன். தினம் இரண்டு கவிதைத் தொகுப்பாவது வருகிறது. ஓரிரவில் தமிழ்நாட்டில் கவிதைக்கான காரணங்கள் பெருகி விட்டனவா அல்லது கவிதை எழுதுவது சுலபம் என்று யாராவது ஒரு புண்ணியவான் சொல்லி விட்டுப் போனாரா... என்ன இது என்று திகைப்பாக இருக்கிறது. எனக்கு வரும் தொகுப்புகள் அனைத்தையும் படித்து முடிக்க நேரமில்லாததால், சில சமயம் என் நண்பர்களான அரவிந்தன், கனிமொழி போன்றோரிடம் கொடுத்து இதில் எதாவது நல்லதாக இருந்தால் சொல்லுங்கள் என்று வேண்டிக்கொள்வேன். அவர்களுக்கு இது கடுமையான தண்டனைதான். இருந்தாலும், நட்புக்காக மனமுவந்து செய்கிறார்கள். அவர்களுக்கு நன்றி. என் குறிக்கோள் - நல்ல கவிதை ஏதாவது ஒரு மூலையில் இருந்தாலும், அதைத் தவறாமல் குறிப்பிடவே விரும்புகிறேன்.




நாற்பதுக்கு மேற்பட்ட கவிஞர்கள் எழுதிய 'ஹைக்கூ'க் களின் தொகுப்பு 'உடைந்த இருட்டு', எனக்கு அவ்வாறு வந்த புத்தகங்களில் ஒன்று (வாசகன் பதிப்பகம் வெள்ளச்சி மண்டபம், திருவையாறு - 613204).

ஹைக்கூ என்பது தமிழில் ஹிம்சை அளவுக்குப் போய் விட்ட பாடல் வகை. மூன்று வரிக் கவிதை என்கிற ஒரே ஒரு வரையறைதான் இப்போது மிச்சமிருக்கிறது. மற்றதெல்லாம் காற்றில் போய்விட்டது சோகம்தான். ஹைக்கூவுக்கு உருவகம் ஆகாது. கற்பனை ஆகாது. பார்த்த காட்சியாக இருக்க வேண்டும். அதில் ஓர் அற்புதம் இருக்க வேண்டும். சமூக விமரிசனம் இருந்தால், தற்செயலாக மறைந்து இருக்க வேண்டும். 'The Strangeness concealed behind the banal' என்றெல்லாம் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டது. இந்தத் தோற்கும் யுத்தத்தில் ஒரே ஒரு கிணற்றுக் குரலாக அவ்வப்போது எனக்கு நல்ல ஹைக்கூ என்று தோன்றுவதை எடுத்துக்காட்டி வருகிறேன். திருவையாறு தொகுப்பில் ஹைக்கூவுக்கு அருகில் வரும் வரிகள் 'ஆசுரா'வின் இரண்டு கவிதைகளில் உள்ளன. அவற்றை சற்று எடிட் செய்து கொடுத்திருக்கிறேன்.

★ 'குடைபிடித்தே
ஆகவேண்டும்
மழையில் மலர்'

★ 'இன்னும் யாரும்
விழிக்கவில்லை
திருவிழா மேடை'

கண்ணைத் திறந்துகொண்டு சுற்றிலும் அன்றாடத்திலேயே கிடைக்கும். அண்மையில் டாக்டர் ரமேஷின் கிளினிக்கில் காத்திருந்தபோது இரண்டு பெண் குழந்தைகள், ஒருவருக்கொருவர் மழலையில் பேசிக்கொண்டிருக்க, அவர்கள் தாய்மார்கள் அதை ரசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு குழந்தை ஏதோ விஷமம் செய்ய, மற்றவள் யாரும் எதிர்பாராமல் 'அடிப்பாவி!' என்றாள். இது ஒரு ஹைக்கூ சம்பவம். இதன் பின்னணியில் குழந்தைகளின் அறியாமை இழப்பு, டெலிவிஷன் தாக்கம் (நிச்சயம் அந்த வார்த்தையை அந்தக் குழந்தை 'சித்தி'யிலோ, 'கிருஷ்ணதாசி'யிலோ கேட்டிருக்க வேண்டும்). இது போன்ற பல செய்திகள் வரிகளுக்கு அப்பாலும் சிந்திக்க வைக்கின்றன.. இது ஹைக்கூவுக்கு முதல் தேவை. அதுபோல மெரீனாவில் நடந்து செல்கையில் உயரத்தில் வானில் ஒரு விமானம் கடக்கிறது. கணவன் - மனைவி குழந்தையுடன் நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். தாய் தன் குழந்தைக்கு 'மேலே பார் கண்ணு.. ஏரோப்ளேன்' என்று காட்டுகிறாள். அது உடனே டாட்டா காட்டுகிறது.

'மெரீனா, உயரே விமானம்
குழந்தை டாட்டா காட்டுகிறது
பார்க்காமலேயே!'


என்று மூணு வரியில் சொல்ல முடிந்தால் ஹைக்கூ. இதன் பின்னணியில் அந்தக் கணவன் - மனைவியின் அடிக்கடி விமான நிலைய விஜயங்களும் அர்த்தம் புரியாமல் டாட்டா காட்டப் பழகி விட்ட குழந்தையும் விரிகின்றனர்.

Haiku happen.

எல்லா தொலைக்காட்சியிலும் 'டாப்டென்' வருகிறது. நான் கொடுக்கப் போகும் டாப்டென் வேறு விதமானது. அறிவியலின்

டாப்டென் கவலைகளின் பட்டியல். இவற்றை எதிர்காலத்தில் அக்கறை உள்ளவர்கள் படித்தே தீர வேண்டும். குறிப்பாக இளைஞர்கள். காரணம் - அவர்கள் வாழ்நாளில் இந்தக் கவலைகள் தெளிவாக்கப்படலாம் அல்லது மேலும் குழப்பப்படலாம். இதோ Top Ten problems in Science:-

1. பிரபஞ்சம் இருப்பதே ஏன், இல்லாமலேயே ஏன் இல்லை? 2. மரபணுவின் மூலம் சிகிச்சை அளிக்கும் ஜீன் தெரப்பியின் எதிர்காலம் என்ன? 3. 'நான்' என்பதை நாம் முழுவதும் அறிய முடியுமா? 4. வயசாவது ஏன்? 5. மனிதனின் குணம் எந்த அளவுக்குப் பிறப்பு சார்ந்தது? 6. உயிர் எப்படித் துவங்கியது? 7. மூளை வேலை செய்வதைப் பார்க்க முடியுமா? 8. வைரஸ் கிருமிகள் அனைவரையும் அழித்துவிடுமா? 9. எப்போது உடல் நிலைக்கு ஏற்ப மருந்துகள் (designer drugs) அவரவரே தயாரித்துக் கொள்ள முடியும்? 10. பிரபஞ்சத்தில் எல்லாவற்றையும் விளக்கும் ஒரே ஒரு தத்துவம் (Theory of everything) உள்ளதா?



இவற்றை அவ்வப்போது கூடிய வரை எளிதாகச் சொல்லப் போகிறேன்.

அமெரிக்காவிலிருந்து இப்போது எல்லாம் பதினைந்து நாள் வந்து பெண் பார்த்துக் கல்யாணம் பேசி விடுகிறார்கள். இம்மாதிரி உடனடிக் கல்யாணம் செய்துகொள்ள வந்த ஓர் இளைஞனை அண்மையில் சந்தித்தேன். பெண்பார்த்துப் பிடித்துப் போய் எல்லா ஏற்பாடுகளும் பண்ணிவிட்டார்கள். பையன் அமெரிக்கா போய் தை மாதம் லீவில் வந்து புயல் வேகக் கல்யாணம் செய்துகொண்ட மறுநாளே பெண்ணை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு.

புறப்பட இருக்கும்போது அவனை சரவணபவனில் பார்த்தேன். சோர்வாக இருந்தான்.

"என்னப்பா... என்னிக்குக் கல்யாணம்?"

"கான்சல் ஆயிடுச்சு அங்கிள்."

"என்ன ஆச்சு?"

"ஒண்ணுமில்லை அங்கிள்.. சிம்பிள் மேட்டர். ஒரே ஒரு தடவைதான் பார்த்தேனா.. அந்தப் பெண்ணுக்குப் புருவம் ரெண்டும் சமமா இல்லையோன்னு ஒரு சந்தேகம் வந்துச்சு. அதனால இன்னொரு முறை பாத்துரலாம்னு போய் பார்த்தேன். ஒரு புருவம் மத்ததைவிட சின்னதாத்தான் இருந்தது. நான் வாழ்க்கை பூரா சரிசமமா இல்லாத இந்தப் புருவத்தையே பாத்துக்கிட்டே இருக்கணுமான்னு யோசிச்சேன்."

"அதனால என்னப்பா.. மை தடவிக்கிறது அல்லது மற்ற புருவத்தை ஷார்ட் பண்ணிக்கிறது."

"அதேதான் நானும் தீர்மானிச்சேன், மற்ற விஷயங்கள்ல எல்லாம் சரியாத்தானே இருக்குன்னு. எம்.சி.ஏ. படிச்சிருக்கு. வீணை வாசிக்குது. அதனால ஒரு அரை மணி உத்துப் பார்த்து கடைசில சமாதானம் ஆயிட்டேன். கல்யாணத்தை வெச்சுக்கலாம்னுட்டேன்."

"பின்ன ஏன் கான்சல் ஆச்சு? மண்டபம் கிடைக்கலையா?"

"அதெல்லாம் இல்லை அங்கிள். அந்தப் பெண் வேண்டாம்னுருச்சு. வாழ்நாள் பூரா இந்த மாதிரி என்னையே உத்துப் பாத்துக்கிட்டு இருந்தா சரிப்பட்டு வராதுன்னுடுச்சு!"

# பின் தொடர்ந்த கார்!



சென்ற கட்டுரையில் அறிவியலின் 'டாப் டென்' கவலைகளின் பட்டியல் தந்திருந்தேன். முதல் கவலையை இந்த வாரம் பார்த்துவிடலாம். அறிவியல் சிந்தனையாளர்களின் ஆதிமுதல் கேள்வி இது - 'நாம் இருப்பதே ஏன்..?'

நம்மைச் சுற்றிலும் பார்க்கும் அனைத்துலகும் காலத்தின் ஆரம்பத்தில் சூனியத்திலிருந்து 'ஒன்றுமில்லை'யில் இருந்து புறப்பட்டதென்றால் சிக்கல் இதுதான். பிரபஞ்சத்துக்கு ஆரம்பம் இருந்தால், அதற்குமுன் என்ன இருந்தது என்ற கேள்வி தானாகவே வருகிறது. ஒன்றுமே இல்லை, சூனியம் என்றால் அதைக் கற்பனை பண்ணிக்கொள்ள இயலவில்லை.

காலம்கூட இல்லாத ஒரு சூனியம் எப்படிச் சாத்தியம் என யோசிக்க முடிகிறதா பாருங்கள். காலியான விண்வெளி என்பதை ஒருவாறு புரிந்துகொள்ள ஏலும். அதில் ஏதோ ஒரு பொருளை, அது ஒரு கிரிக்கெட் பந்தையோ அல்லது கல்லையோ, ஏதோ ஒரு பொருளை வைத்தால் சுற்றிலும் விண்வெளி பரவியிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க முடியும். ஒன்றுமே இல்லாததை எப்படிக் கற்பனை பண்ணுவது..? முடியாது. இது மனித மனத்தின் குறைபாடு.

கற்பனை செய்துகொள்ள முடியாத ஒன்றுமில்லாததில் இருந்து, திடப்பொருள்கள் தோன்றின என்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்..? முடியும் என்று சொல்கிறது நவீன க்வாண்டம் இயற்பியல். ஒன்றுமில்லாத சூனியத்திலிருந்து திடப்பொருள் matter தோன்ற முடியும். எப்போது..? தோன்றும். அதே சமயம், அதன் எதிர்ப் பொருளான antimatter அ-பொருள் தோன்றி அவையிரண்டும் சேரும்போது ஒன்றை ஒன்று ரத்து செய்து கொண்டு ஒன்றுமில்லையாகலாம். இந்த நிகழ்வு

நம்மால் அளக்க முடியாத விரைவில் நிகழலாம் என்கிறது க்வாண்டம் இயற்பியல்.

ஒரு மணற்பரப்பில் பிடிமணலை எடுத்துப் பக்கத்தில் குவித்தால் ஏற்படும் பள்ளம் antimatter. குவியல் matter. மீண்டும் மணலை நிரப்பிவிட்டால் பரப்பு சூனியம்!

இதுபோலத்தான் பிரபஞ்சத்தில் அவ்வப்போது பொருளும் எதிர்ப் பொருளும் சூனியத்திலிருந்து தோன்றி அழிந்து கொண்டிருக்கின்றன என்கிறார்கள். இந்த நிகழ்வு வெறும் தத்துவம் மட்டுமல்ல, எலெக்ட்ரான் என்னும் மின்துகள், சூனியத்தில் இருந்து பொருளும் அ-பொருளும் தோன்றும் சமயத்தில் அருகில் இருந்தால், அதன் பாதை சற்று மாறுகிறது என்பதைப் பரிசோதனைகளில் கண்டறிந்திருக்கிறார்கள். எனவே, சூனியம் என்பது பொருளும் அ-பொருளும் தோன்றி மறையும் களம் என்கிறார்கள்.

இதில் கடவுள்..?

சிவவாக்கியர் சொன்னதுபோல் - 'வெட்ட வெளியதன்றி மற்று வேறு தெய்வம் இல்லையே!'

**எஸ்**.எஸ்.எல்.சி. புத்தகத்தில் என் பிறந்தநாள் 13, ஏப்ரல். இதேதான் பாஸ்போர்ட் மற்ற எல்லா ஆவணங்களிலும். ஆனால், நான் பிறந்தது மே 3. அப்பா முதன்முதல் என்னைப் பள்ளியில் சேர்க்க சிறுவனான என்னை அழைத்துச் சென்றிருக்க வேண்டும். 'எப்படா பொறந்தே..?' என்று என்னைக் கேட்டு, நான் சரியாகப் பதில் சொல்லாததால், சட்டென்று ஞாபகமில்லாததால் குத்துமதிப்பாகச் சொல்லியிருக்கலாம். அவரைக் குற்றம் சொல்ல முடியாது. நான் பிறந்த தேதியில் எதும் சரித்திரம் புரளவில்லை.

பிறந்தநாள் கொண்டாடுவதே ஒரு அலட்டல் என்று எண்ணுகிறேன். பிறந்தநாள் கார்டு தயாரிப்பவர்களுக்குப் பொருளாதார நோக்கம் உள்ளது தவிர, மற்றவருக்கு வெத்து. ராஷ்டிரபதி, பிரதமர், முதல்வர்கள், கட்சித் தலைவர்கள் இவர்கள் பிறந்தநாளைக்கு எல்லோரும் வரிசையாகச் சென்று மலர்க் கொத்து கொடுத்துக் கையைப் பிடித்துவிட்டு, ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு வருவது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஆனால், அது அவர்களுக்கு

அவசியம். அங்கே அட்டெண்டன்ஸ் மார்க் பண்ணவில்லையேல் பதவி போய்விடும்.

சினிமா நடிகர்களிலிருந்து லோக்கல் வார்டு கவுன்சிலர்கள் வரை போஸ்டர் ஒட்டிக் கொள்வதிலும் அர்த்தமிருக்கிறது. ஒட்டிக்கொள்ளா விடில் அவர்களை மறந்துவிடுவார்கள். ரசிகர் சங்கங்களுக்கும் அடியாட்களுக்கும் காசு கிடைக்காது. பின்னி சாலையில், ரயில்வே அலுவலகத்தின் ஏறத்தாழ அரை கிலோமீட்டர் சுவரில் நெருக்கமாக போஸ்டர்கள் ஒட்டப் பட்டிருக்கும்.

தினம் கடக்கிறேன். அதேபோல், அண்ணா மேம்பால அடிவார சிக்னல் மூலைச் சுவரில், சென்னையின் சரித்திரமே தினம் எழுதப்படும். தலைவர்கள் பெயர்கள் மட்டும் பெரிசாக இருக்கும். அதன்பின், நூறு பெயர்கள் இருக்கும். கட்சியில், அவரவர் ஊழிய மட்டத்துக்கு ஏற்ப இரண்டு இன்ச், ஒரு இன்ச், அரை இன்ச் எழுத்திலிருந்து எறும்பு சைஸ் எழுத்து வரை, பரீட்சை ரிசல்ட் போல நெருக்கமாக அச்சடித்திருக்கும். இதையெல்லாம் அச்சடிக்க சிந்தாதிரிப் பேட்டையில் லித்தோ பிரஸ் தெருவே இருக்கிறதாம்.



புத்தர், யேசு பிறந்தநாள் என்றால் மனித சரித்திரம் மாறியது.. கொண்டாடலாம். என் போன்றவர்கள் பிறந்தநாள் கொண்டாடுவதில் எதும் பிரயோஜனம் இல்லை. எனவே, பிறந்த நாள் ஞாபகம் இருந்தால் கோயிலுக்குப் போவேன், பெருமாள் பெயரில் ஓர் அர்ச்சனை பண்ணுவாள் என் மனைவி, அவ்வளவுதான். இந்த அளவுக்குமேல் எந்த ஊரிலும் எந்த வயதிலும் கொண்டாடியதில்லை. காரணம், ஒரு வருஷம் சாகாமல் தொடர்ந்து வாழ்ந்தது. இந்த நவீன மருத்துவ யுகத்தில் அவ்வளவு பெரிய சாதனையாக எனக்குப் படவில்லை. வியாதிகளை மனசுக்குள் வைத்திராமல் வெளிப்படையாகச் சொல்லிவிட்டால் பரிகாரங்கள் அலோபதியில் ஏராளமாக உள்ளன.

ஆதிமனிதனாக இருந்தாலோ, காட்டு மிருகங்கள் தின்னாமல் அண்டை மனிதருடன் சண்டையில் மண்டை உடையாமல் ஒரு வருஷம் உயிர் வாழ்ந்ததைப் பெரிய சாதனையாகச் சொல்லலாம். நாம் என்ன செய்தோம்..? ஆபீஸ் போனோம், சினிமா பார்த்தோம், எழுதினோம், படித்தோம், முதுகு சொரிந்துகொண்டோம், பேசினோம், பழகினோம், பிளாட்பாரம் ஓரமாக ஜாக்கிரதையாக நடந்தோம். அவ்வளவுதானே... இது என்ன பெரிய சாதனை. இதை என்னவோ, உலகை அசைக்கும் தினமாகக் கொண்டாடுவது அபத்தமாகப் படுகிறது. பிறந்தநாள் என்பது மற்றுமொரு நாள்.

'உண்டதே உண்டு, உடுத்ததே உடுத்து, அடுத்தடுத்து
உரைத்ததே உரைத்து,
கண்டதே கண்டு கழிந்தன கடவுள் நாட்கள்...'

பெங்களூரில் ஒரே ஒரு பிறந்த நாள் மட்டும் எனக்குத் தெளிவாக ஞாபகம் இருக்கிறது. கமர்ஷியல் ஸ்ட்ரீட்டில் காரை பார்க் செய்து, கொஞ்ச தூரம் நடந்து, நான், மனைவி மகன்கள் நால்வரும் ஒரு உட்லண்ட்ஸ் ஓட்டலில் அடை நன்றாக இருக்கும்.. சாப்பிட்டுவிட்டு அவர்களை வாசலிலேயே நிற்க வைத்துவிட்டு காரைக் கொண்டுவர மெள்ள நான் மட்டும் அதை நிறுத்தியிருந்த இடத்துக்கு நடந்து சென்று கொண்டிருந்தேன்.

எனக்குப் பின்னால் ஒரு கார் என்னையே மந்த கதியில் தொடர்ந்தது. நான் நின்றால், அது நின்றது. நடந்தால், அது கல்யாண ஊர்வலம் போலத் தொடர்ந்தது. எனக்குப் புரியவில்லை. ஏதாவது தப்பு செய்து விட்டேனோ..? என்ன குற்றம் செய்தேன்..? ஒரு அடை மட்டும்தானே சாப்பிட்டேன். மஃப்டியில் இருக்கும் போலீஸ்காரா என்று என்னென்னவோ யோசித்தேன். மீண்டும் வேகமாக நடந்து பார்த்தேன், வேகமாகத் தொடர்ந்தது.

'என்ன இது! பெங்களூர் எப்போது ஹாலிவுட் டாகியது' என்று வியப்புடன் நான் நின்றேன். அந்த காரும் நின்றது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அணுகி, "எக்ஸ்க்யூஸ் மீ" என்று அதன் கறுப்பேறிய ஜன்னலை மணிக்கட்டால் தட்டி னேன். கண்ணாடி இறங்கியது. கறுப்புக் கண்ணாடி அணிந்து கறுப்புச் சட்டை போட்டிருந்தார்.

"எதற்கு இவ்வளவு பெரிய காரை வைத்துக் கொண்டு நடைபயிலும் என்னைத் தொடர்கிறீர்கள்..?" என்று கேட்டுவிட்டேன்.

அவர் தன் பைக்குள் கைவிட்டு ஒரு துப்பாக்கியை எடுப்பார் என்று எதிர் பார்த்தேன். சிகரெட் எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார்.

"நீங்கள் உங்கள் காரை எடுத்ததும் உடனே அங்கே பார்க் செய்யத்தான்!" என்று பதில் வந்தது.


கமர்ஷியல் ஸ்ட்ரீட்டில் பார்க்கிங் கிடைப்பது அவ்வளவு கஷ்டம்!

# எங்கே இருக்கிறது அந்த உலகம்?



ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்குமுன் குமுதம் இதழில் 'பரூர் பரிசோதனை' என்று ஒரு கட்டுரை எழுதினேன். கேரளத்தில் கொச்சியிலிருந்து ஆல்வாய்க்குப் போய் பெரியாறு பாலத்தைக் கடந்து, சுமார் பதினாலு கிலோ மீட்டரில் உள்ள பரூர் என்னும் டவுன் கிராமத்தில் தான் முதன் முதல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் தன் பயணத்தைத் தொடங்கியது. அப்போதே இந்த இயந்திரத்தின் கோர்ட் பயணமும் தொடங்கிவிட்டது. மெஷின்கள் பயன்படுத்துவதை உடனே நிறுத்த எல்.டி.எஃப்., இடதுசாரி வேட்பாளர் ரிட் போட்டார். ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் சுகுமாரனின் சேம்பரில் போய் இயந்திரத்தை இயக்கிக் காட்டினேன். நீதிபதி ரிட் மனுவைத் தள்ளுபடி செய்து, 'இயந்திரத்தை உபயோகிக்கலாம்' என்று சொன்னார். இயந்திரங்களில் தேர்தல் நடந்தது. இரவே முடிவு அறிவிக்கப்பட, கேஸ் போட்ட இடது சாரி வேட்பாளரே ஜெயித்திருந்தார். 'எலெக்ட்ரானிக்ஸ் வென்றது' என்று எழுதியிருந்தேன். கதை அத்துடன் முடியவில்லை. இப்போது தோற்றுப்போன காங்கிரஸ் வேட்பாளர் ஏ.ஸி. ஜோஸ் கேஸ் போட்டார். கேரளா ஹைகோர்ட்டில் மறுபடி சாட்சி சொல்லப் போயிருந்தேன். ஜஸ்டிஸ் கொச்சுதோமன் அருமையான ஒரு தீர்ப்பு அளித்திருந்தார். அதில், இந்த இயந்திரங்கள் மிகுந்த சிரத்தையுடன் நம் நாட்டுத் தேர்தலுக் கேற்ப வடிவமைக்கப்பட்டவை. இவற்றை நாடெங்கும் பயன்படுத்தும் நாள் வந்தே தீரும்' என்று அப்போதே சொல்லியிருந்தார். ஏ.ஸி. ஜோஸ் மேல் முறையீடு செய்தார். சுப்ரீம் கோர்ட்டில் ஜஸ்டிஸ் ரங்கநாத் மிஸ்ரா, ஜஸ்டிஸ் வரதராஜன் இவர்கள் சேம்பரில் இயக்கிக்காட்டச் சென்றிருந்தேன். சுப்ரீம் கோர்ட் 'இயந்திரங்களில் பழுதில்லை. ஆனால், தேர்தல் சட்டத்தை மாற்றி, இயந்திரங்களையும் பயன்படுத்தலாம் என்று வெளிப்படையாகச் சொன்னால்தான் உபயோகிக்கலாம்' என்று தீர்ப்பளித்தது.

இதனிடையே ராஜீவ் காந்திக்கு ஒரு முறை இயந்திரத்தை விளக்கிச் சொல்ல அக்பர் ரோட்டுக்குச் சென்றிருந்தேன். ராஜீவ் சொன்ன ஒரு அருமையான யோசனை எனக்கு வியப்பு அளித்தது. அதை டிஸைனில் செயல்படுத்தியிருக்கிறோம். டெல்லி ஐ.ஐ.டி. மெஷினைப் பரிசோதித்து, உத்தமச் சான்றிதழ் கொடுத்தது. இதன் பிறகு அரசுகள் மாறின. கவிழ்ந்தன. ஒரு பிரதமரின் படுகொலை நிகழ்ந்தது. இந்த அல்லல்களின் பின்விளைவுகள் அடங்கும்வரை யாரும் சட்டத்தை மாற்ற முன்வரவில்லை. இடையே தேர்தல் கமிஷன் இயந்திரங்களை ஆர்டர் செய்ய நான் ஜப்பான் போய் வந்தேன். ஒன்றரை லட்சம் மெஷின்கள் பாதி பி.இ.எல்-லிலும் பாதி ஈ.ஸி.ஐ.எல்-லிலும் செய்து, அவற்றை சப்ளை செய்தோம். சட்டம் மாற்றப்படாததால், அவை பயன்படுத்தாமல் கலெக்டர் ஆபீஸ்களில் உறங்கின. எம்.எஸ். கில்தான் இவற்றுக்குப் புத்துயிர் அளித்துப் பயன்படுத்தத் துவங்கினார். அதன் சௌகரியத்தை உடனே உணர்ந்து, எல்லா மாநிலங்களிலும் பயன்படுத்தலாம் என்று தீர்மானித்த போது, சென்னை ஹைகோர்ட்டில் மறுபடி இதற்கு எதிராக மனுதாக்கல் செய்யப்பட்டு. அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டு, சுப்ரீம் கோர்ட்டுக்கு மற்றொரு ரவுண்ட் போய் வந்து... கோர்ட் யுத்தம் இதனுடன் முடிந்து விட்டது என எண்ணுகிறேன்.



இத்தனை நடைபெற்றும் இந்த மெஷினின் நம்பகத்தன்மை பற்றிய சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. அதன் வடிவமைப்பில் பங்கு கொண்டவன் என்கிற தகுதியில், எல்லா அரசியல் தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த இயந்திரத்தின் உள்ளே இருப்பது ஒரு மைக்ரோ கம்ப்யூட்டர். ஜப்பானிய ஹிட்டாச்சி நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது. இயந்திரத்துக்கான கட்டுப்பாட்டு ஆனைத் தொடர் கண்ட்ரோல் ப்ரோக்ராம் இதை வடிவமைக்கும்போதே தீர்மானிக்கப்பட்டு, அதன் ஒவ்வொரு வார்த்தையும் எழுத்தும் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டு, அவை கல்லெழுத்தில் பொறித்தது போல் அதன் ராம் என்னும் ரீட்ஒன்லி மெமொரியில் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு முறை எழுதியதை ஈசன் வந்தாலும் மாற்ற முடியாது. அதற்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஒரு எழவும் தெரியாது. இந்த நம்பருக்கு இத்தனை வோட்டு என்று போடப் போடக் கூட்டிக் கொண்டே செல்லும். இறுதியில், இன்னின்னாருக்கு இத்தனை வோட்டு என்பதைத் துல்லியமாக அறிவிக்கும். வேட்பாளரின் கட்சியெல்லாம் அதற்குப் பொருட்டல்ல. சீரியல் நம்பர்தான் முக்கியம்.

இந்த சீரியல் நம்பர் ஆங்கில அகர வரிசைப்படி கொடுக்கப்படும். இதன் செயல்பாட்டை எந்தக் கட்சியும் தனக்குச் சாதகமாக மாற்ற முடியாது. காரணம் - அந்தக் கட்சி வேட்பாளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் வேறு வேறு நம்பரில் இருப்பார்கள். இந்த மெஷினை ஒரு தட்டுத் தட்டினாலே வேறு ஒருத்தருக்கு வோட்டுப் போய்விடும் போன்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் கோர்ட்டில் சொன்னபோது சிரிப்புதான் வந்தது. மிக எளிமையாக வடிவமைக்கப்பட்ட இந்த இயந்திரத்தின் பயன்கள் பலப்பல. செல்லாத வோட்டு என்பதே கிடையாது. ஒவ்வொரு முறையும் இயந்திரம் செயல்படுத்தும்போது, யாருக்காவது ஒரு வோட்டுப் போட்டுத்தான் ஆகவேண்டும். அப்புறம்தான் அடுத்த முறை செயல்படுத்த முடியும். வெளியே அதிகாரியும் உள்ளே வாக்காளரும் மாற்றி மாற்றி இந்த மெஷினைச் செலுத்துவார்கள். வோட்டுப்பதிவு முடிந்த மறு கணமே சீலை உடைத்து, ரிசல்ட் பட்டனை அழுத்தினால் தேர்தல் முடிவுகள் தெரிந்துவிடும் வசதி உண்டு. அடுத்த முறை நாடு தழுவிய தேர்தலில் இயந்திரங்களைப் பயன்படுத்தினால், தேர்தல் முடிந்த அன்றிரவே ஒன்பது மணிக்குள் முடிவுகளை அறிவிக்க இயலும். இந்த வகையில், இது அமெரிக்கத் தேர்தலைவிடத் துரிதமானது.

மேலும், இந்த மெஷின் பொய் சொல்லாது. கொஞ்சம் கூட வஞ்சமோ, லஞ்சமோ கிடையாது. அரசியல்வாதிகளும் டி.வி-க்காரர்களும் மெஷினைக் குறைசொல்வதை விட்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் மறக்காமல் நன்றி சொல்ல வேண்டியது தேர்தல் கமிஷனின் முன்னாள் செக்ரெட்டரி கணேசன் அவர்களுக்கு.

**டி**.வி. விளம்பரத்தில் வருபவர்களைப் பார்த்துப் பொறாமையாக இருக்கிறது. அவர்கள் வாழ்க்கையில் தான் எத்தனை சந்தோஷங்கள்... குறிப்பிட்ட நல்லெண்ணெய் அல்லது அப்பளம் உபயோகிப்பதால் மாமியார் - மருமகளுக்குள் எவ்வளவு உற்சாகம்! சமையலறையில் அந்த டிடர்ஜெண்ட் கேக் பயன்படுத்துவதால், கணவனும் மனைவியும் எவர்சில்வர் தட்டில் முகம் பார்த்துக் கொண்டு எத்தனை அன்பு. பரிவு. குளிர்பானத்தின் மூடியைத் திறந்தாலே எப்படிக் குதிக்கிறார்கள்? யுவதி சிவப்பழகுக்கான க்ரீமைத் தடவினாலே கல்யாணம் ஆகிவிடுகிறது. ஆரஞ்சு பானத்தைச் சாப்பிட்டாலே காதல் மலர்கிறது. பாலில் கலந்து எதையோ குடித்த உடனே பையன் கம்ப்யூட்டர் விற்பன்னன் ஆகித் தன்னுயர வெள்ளிக்கோப்பையுடன் வேலி தாண்டி அம்மாவிடம் சொல்ல ஓடிவருகிறான்(அப்பா இதில் எப்போதும் வெத்து!). பச்சை மாத்திரை சாப்பிட்டவுடனே விஸ்வநாதன் ஆனந்த்தை செஸ்ஸில்

ஜெயிக்க முடிகிறது. அந்த மோட்டார் சைக்கிளை உதைத்தவுடனே, ஒரு ஜீன்ஸ் யுவதி பின்ஸீட்டில் ஏறி மார்போடு ஒட்டிக் கொள்கிறாள்.



உற்சாகம் நீரூற்றுப் போல் பொங்க இதே பானங்களையும் வெவ்வேறு களிம்புகளையும் ஸ்கூட்டர்களையும் ராப்பகலாகப் பயன்படுத்திக்கொண்டு பேந்தா மாதிரிப் பார்த்துக்கொண்டு இருக்கும் நமக்கு ஒரு கேள்வி எழுகிறது. நமக்கு ஏன் இப்படி நடப்பதில்லை..? இவர்கள் எல்லோரும் குட்டைப் பாவாடை அணிந்து வாலிபால் ஆட கடலலைகளிடம் ஓடும் உலகம் எங்கே இருக்கிறது..?

Hidden Persuaders (மறைமுக வற்புறுத்துவோர்) என்ற தலைப்பில் ரொம்ப நாள் முன்னால் ஒரு புத்தகம் படித்தது ஞாபகம் வருகிறது. அதில் ஒரு பரிசோதனையை வர்ணிக்கிறார் வான்ஸ் பக்கார்டு (Vance Packard). ஒரு வெற்றிப்பட சினிமாவில் ஒரே ஒரு ஃப்ரேம் மட்டும் ஒரு கோலா பானத்தை முக்கியமான ஸீனிலிருந்து விலகிக் காட்டினார்கள். ஒரு ஃப்ரேம் என்றால் செகண்டில் 24 பாகம். கண்ணால் பார்க்கக்கூட இயலா தது. பிம்பம் பதிவதற்குள் போய்விடும். இருந்தும் அந்தப் பானத்தின் வியாபாரம் அந்த வாரம் கூடியதாம். ஹக்ஸ்லியின் ஹிப்னோபீடியா உலகில் விளம்பர ஏஜெண்டுகளும் மாடல்களும் கோடிக்கணக் கில் பணம் பண்ண, நம் உல்லாசமற்ற வாழ்க்கையில் பத்து கிராம் உற்சாகம் பெற அவர்கள் காட்டும் குப்பைகள் அனைத்தையும் தடவிக் கொண்டும் உண்டுகொண்டும் காத்திருக்கிறோம்.

# தேர்தல் பொன் மொழிகள்!



'டாப் டென்' அறிவியல் கவலைகளில் இரண்டாவது ஜீன் தெரபி பற்றிக் கொஞ்சம் கதைக்கலாம்.

நவீன மருத்துவத்தின் ஆதார அணுகுமுறை மருந்து மாத்திரைகளைக் கொடுத்து உபாதைகளைக் குறைப்பது.. உடல் தானாக நலமாகும் வரை மருந்து சாப்பிடுவது. மூன்று சமாசாரங்களில்தான் நவீன மருத்துவம் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஒன்று - Public health என்னும் பொதுமக்கள் சுகாதாரம். இரண்டு - மயக்க மருந்து கொடுத்து பத்திரமாக அறுவை சிகிச்சை செய்வது. மூன்றாவது பென்சிலின் போன்ற 'ஆண்ட்டி பயாடிக்ஸ்' கண்டுபிடிப்புகள்.

நான்காவது முன்னேற்றமாக ஜீன் தெரபி என்னும் மரபணு சார்ந்த சிகிச்சையைச் சொல்லலாம். இந்த இயல் ஆரம்ப நிலையில் உள்ளது. இன்னும் பத்து வருடங்களில் இது சூடு பிடிக்கும் என எதிர்பார்க் கிறார்கள்.

ஜீன் தெரபி என்பது என்ன? நம்முடைய உயிர் அணுக்கள், செல்களின் தவறான செயல்பாட்டை திருத்த அல்லது அவற்றுக்குப் புதிய செயல்பாட்டைத் தர ஒரு அந்நிய மரபணுவை அதனுள் செலுத்துவது.

இது முதன்முதலாக 1990-ல் அமெரிக்க தேசிய சுகாதார ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டது. அரிதான ஒரு புரதத்தைத் தயாரிக்கும் சக்தியை இழந்த ஒரு நோயாளியின் உடலிலிருந்து ரத்தம் எடுத்தார்கள். அந்த ரத்தத்தின் வெள்ளை அணுக்களில் ஒரு புதிய அந்நிய ஜீனைச் செலுத்தினார்கள். செலுத்தி அதைச் சில நாள் பெருக விட்டு மறுபடி நோயாளியின் உடலில் அந்த ரத்தத்தைத் திரும்பச் சேர்த்தார்கள். இந்தப் புதிய ஜீன் கிடைத்ததால் அந்த நோயாளி

இதுவரை உற்பத்தி செய்ய முடியாத புரதத்தை உற்பத்தி செய்யும் திறமை பெற்றுக் குணமாகிவிட்டார்.

இதில் 'செலுத்துவது' என்பது பெரிய செப்பிடு வித்தையில்லை. சில 'வைரஸ்' நுண்கிருமிகள் தினம் தினம் நம் உடலில் இதைச் செய்கின்றன. இவற்றை 'ரெட்ரோ வைரஸ்' என்பார்கள். இந்த வைரஸ்களை ஆராய்ந்தால் இவை சில ஆர்.என்.ஏ. சரங்கள் கொண்டு அவற்றை டி.என்.ஏ. மரபணுக்களாக மாற்றக் கூடிய என்ஸைம்களும் பெற்றிருக்கும். அவை நம் உடலில் குறிப்பிட்ட டி.என்.ஏ-க்களை நாடிப் புகுந்து கொண்டு அதைப் போல் நடிக்கக் கூடியவை.

முதல் பரிசோதனைக்குப் பிறகு சுமார் நூறு வியாதிகளுக்கு ஜீன் தெரபி ஆராய்ச்சி செய்யலாம் என்று அனுமதித்திருக்கிறார்கள். கான்சர், சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ், மூளைக்கட்டி இவற்றுக்கெல்லாம் ஜீன் தெரபியை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஜீன் தெரபியின் எதிர்காலம் தகுந்த 'ரெட்ரோ வைரஸ்'களைக் கண்டுபிடிப்பதில்தான் இருக்கிறது. கண்டுபிடித்து அவற்றைச் சாதாரண இன்ஜெக்ஷன் போலக் கொடுத்துவிட்டால் அவை தாமாகவே பழுதுபட்ட செல்களை நாடி அடைந்து அவற்றில் நுழைந்து அந்த செல்லின் மற்ற செயல்பாடுகளைப் பாதிக்காமல் குறைகளை மட்டும் நீக்கக் கூடியவையாக இருக்க வேண்டும். இது கொஞ்சம் சிக்கலான வேலையாக இருந்தாலும் இதைப் பல வைரஸ் கிருமிகள் எல்லாச் சமயத்திலும் செய்து வருகின்றன. ஹெப்படைட்டிஸ் பி என்னும் வைரஸ் நம் உடலுக்குள் புகுந்தவுடன் நேராக கல்லீரல் (liver) செல்களுக்கு போய்ச் சேர்ந்து தன்னை ஊடுருவிக்கொள்கிறது. (இது எப்படி என்று விளக்க செல்லின் கெமிஸ்ட்ரியில் உள் நுழைய வேண்டும்).

வியாதி தராமல் குணம் தரும் வைரஸ்களை சிகிச்சை வைரஸ், 'தெராப்பட்டிக் வைரஸ்' என்கிறார்கள். இவற்றைக் கண்டுபிடிப்பதில் தான் ஜீன் தெரபி கவனம் செலுத்துகிறது. இன்று ஜுரம் வந்தால் டாக்டரிடம் போய் ஒரு இன்ஜெக்ஷன் போட்டுக்கொள்கிறோம். இரண்டு மூன்று நாளில் ஜுரம் சரியாகி விடுகிறது.

ஜீன் தெரபி வந்ததும் இதே சிகிச்சை முறை புற்றுநோய்க்கும் வரலாம்.

"டாக்டர் எனக்கு நேத்திலருந்து கான்சர்."

டாக்டர் ஒரு இன்ஜெக்ஷன் போட்டு தேய்த்து விட்டு "ரெண்டு நாள்

வீட்டில படுத்திருங்க. டி.வி. பாத்துக்கிட்டு லைட்டா சாப்பிட்டுக்கிட்டு இருங்க.. மூணு நாள் கழிச்சு குணமானதும் போன் பண்ணுங்க" என்பார்.

தமிழறிஞர் அ.கி. பரந்தாமனாரின் நூறாவது பிறந்த தினம் இந்த ஆண்டு வருகிறது. பாரி நிலையத்தினர் வெளியிட்டிருந்த அவரது இரண்டு நூல்களை எனக்கு அனுப்பியதற்கு அ.ப.சோம சுந்தரனுக்கு நன்றி. பரந்தாமனாரின் 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா' என்கிற நூலைக் கட்டாயப் பாடமாக்கிவிடலாம். உதாரணமாக "அந்த ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது." இந்த வாக்கியத்தில் என்ன தப்பு? கடைசியில் சொல்கிறேன்.

பரந்தாமனாரின் 'கவிஞராக' என்னும் நூல் யாப்பிலக்கணத்தைத் தெளிவாக விரிவாகச் சொல்லித் தருகிறது. தமிழில் கவிதை எழுத வருபவர்கள் அனைவரும் யாப்பிலக்கணம் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஏன், கதை எழுதுபவர்களுக்குக்கூட யாப்பு தெரிந்திருப்பது ஒரு சௌகரியம். எனக்கு உத்தரவாதமாக இது உதவியிருக்கிறது.

யாப்புக்குப் பயப்பட வேண்டியதே இல்லை. தமிழ் மொழியின் யாப்பு ஓர் அழகான கட்டடம் போன்றது. யாப்பில் எழுதுவது ஒரு விளையாட்டுப் போல. சில விதிகள் கொண்ட விளையாட்டு. இதை சுவாரஸ்யமாக ஆட முடியும். உதாரணமாக இந்தப் பாடலைப் பாருங்கள்,



'முன்னை அத்தனை பொய்களைக் கேட்டபின்

மூடரான நாம் இன்றும் திருந்திலோம்
இன்னும் எத்தனை எத்தனை தேர்தலோ
இன்னும் எத்தனை பச்சைத் துரோகமோ
அன்னை மீண்டுமோர் வருடம் ஆள்வரோ
அதற்கு முன் கலைஞர் வருவரோ
என்ன கட்சி இடம் பிடிக்குமோ நம்
இன்னல்கள் கொஞ்சமேனும் குறையுமோ'

இது தமிழிலேயே மிகக் கடினமான யாப்பமைப்பைக் கொண்ட நேரிசைக் கட்டளைக் கலிப்பா. இதன் இலக்கணம் ஒவ்வொரு அரை அடியிலும் ஒற்றெழுத்து (புள்ளி வைத்த எழுத்து)களை நீக்கிவிட்டு எண்ணிப் பார்த்தால் 11 எழுத்துக்கள் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட கடினமான விதியிருந்தாலும் 11 நிமிடத்தில் என்னால் இதை எழுத முடிந்தது. இத்தனைக்கும் நான் கவிஞனல்ல.

மே மாதம் 5-ம் தேதி தேவனின் நினைவு நாள். தமிழின் மிகச் சிறந்த மூன்று நகைச்சுவை எழுத்தாளர்கள் எஸ்.வி.வி., கல்கி, தேவன். தேவனின் பல திறமை ஏறக்குறைய கல்கிக்கு ஈடாகச் சொல்லக்கூடியது. விஸ்தாரமான சரித்திரக் கதைகளைத் தவிர மற்றதெல்லாம் முயன்றிருக்கிறார்.

தேவனின் நகைச்சுவைக்கு உதாரணமாக அவரது 'உயர்தர பாடங்க'ளில் ஒன்று இது:

இந்தியா**:** இதை ஏன் கண்டம் என்று சொல்லக் கூடாது? இந்தியா வாழைப் பூவைப் போல் இருக்கிறது. இங்கிலாந்து ஒரு பாட்டி காலை நீட்டிக் கொண்டிருப்பதுபோல் இருக்கிறது. மேற்படி பாட்டி முற்கூறிய வாழைப்பழத்தின் கும்பாரத்தை மட்டும் ஒடித்து எடுத்துவிட்டது போலும் இருக்கிறது.

விளைபொருள்கள்**:** வெயில் காலத்தில் வெயில், பனிக்காலத்தில் பணி, மிராசுதார்கள் துயரம், வாஜபேய யாகங்கள்.

இறக்குமதி**:** பெரிய பெரிய வெள்ளைக்கார உத்தியோகஸ்தர்கள், சீமையில் விலை போகாத வஸ்துக்கள், ஐ.ஸி.எஸ். படிக்கச் சென்றவர்கள்.

ஏற்றுமதி**:** தங்கம், வெள்ளி, சுதேச ராஜாக்கள்.

30.6.1935-ல் தேவன் இவ்வாறு எழுதியுள்ளார்.

தேவனின் நூல்களில் என்னுடைய செல்லம் 'ஸ்ரீமான் சுதர்சனம்'.

இறுதியாக தேர்தல் சமயத்துக்கு ஏற்ற சில பொன்மொழிகளும் கருத்துக் கணிப்புக்கான யோசனைகளும்:

"ஒரு அரசியல்வாதியையும் விலைமகளையும் ஒப்பிடக் கூடாது. அரசியல்வாதி அதிகம் சம்பாதிக்கிறார்" - எட்வர்டு ஆபி.

"அரசியல் என்பது கொள்கைப் போர்வை போர்த்திய சொந்தச் சச்சரவுகள். சுயநலத்துக்காக நடத்தப்படும் பொதுநலம்" - ஆம்ப்ரோஸ் பியர்ஸ்.

"எல்லோரையும் எப்போதும் முட்டாளாக்க முடியும் என்று நம்பும் அரசியல்வாதிகள் இந்த நாட்டில் நிறையப் பேர் இருக்கிறார்கள்" - ஃப்ராங்லின் ஆடம்ஸ்.

பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் கருத்துக் கணிப்பு எடுக்கும் போது ஒரு 30 சதவிகிதத்தினர் 'கருத்து இல்லை' என்று சொல்கிறார்கள். இவர்கள் யாருக்கு வோட்டு என்பதை தங்களுக்குள்ளே வைத்திருப்பவர்கள்.. வெளியே விடமாட்டார்கள். இவர்கள்தாம் இந்தத் தேர்தலின் போக்கைத் தீர்மானிக்கப் போகிறவர்கள் என்று தேர்தலாலஜிஸ்டுகள் சொல்கிறார்கள்.

இவர்களிடம் யாருக்கு வோட்டுப் போடுவீர்கள் என்று கேட்கவே கூடாது. மாறாக கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கச் சொல்லுங்கள். போதும்!

*"உங்களுக்குப் பிடித்த நிறம் மஞ்சளா, அரக்கு கலரா?"*

*"பிடித்த நடிகர் நெப்போலியனா, ராமராஜனா?"*

*"பிடித்த சூப்பர் ஸ்டார் கமலா, ரஜினியா?"*

*"பையில் என்ன நோட்டு வைத்திருக்கிறீர்கள்? நூறு ரூபாயா, ஒட்டுப் போட்ட ஐந்து ரூபாயா?"*

"ஸ்கூட்டரா, சைக்கிளா? எது உங்கள் வாகனம்?"

"ஜாவா என்பது என்ன? ஒரு நாடா? கணிமொழியா?"

"உங்கள் ஞாபகசக்தி எப்படி?(ஒரு ஏழு இலக்க டெலிபோன் நம்பரை ஆரம்பத்தில் கொடுத்து சற்று நேரம் கழித்து திருப்பிச் சொல்ல வைக்கவும்).

"நீங்கள் தற்போது பார்க்கும் டி.வி. சேனல்? ஜெயா, சன்?"

"மகாமகக்குளம், சிமெண்ட் இதில் எது உங்களுக்கு அலர்ஜி?"

"கல்யாணத்துக்கு நகை போடத்தான் வேண்டுமா?"

"தமிழ்க்குடிமகனின் இயற்பெயர் என்ன?"

இந்தக் கேள்விகளுக்குப் பதில்களை வைத்து அவர் யாருக்கு வோட்டுப் போடுவார், தி.மு.க-வுக்கா, அ.தி.மு.க-வுக்கா என்று நீங்களே கண்டு பிடித்துவிடலாம்!

'அந்த ஊரைச் சுற்றி' வாக்கியத்தில் என்ன பிழை?

'ஊரை' அல்ல, ஊர் சுற்றிப் பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது என்பதே சரி.

# நான்!



தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் சித்திரைத் 'திரை' விழாவில் முக்கியமான பல இயக்குநர்களும் தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும் திரையரங்க உரிமையாளர்களும் ஒருங்காக மேடையில் அமர்ந்திருந்தது வியப்பாக இருந்தது. தமிழ் சினிமாவைக் காப்பாற்ற வேண்டும் என்கிற பொதுக் கவலைதான் அத்தனை பேரை அந்த மேடைக்கு ஈர்த்திருந்தது. ஆனால், அவரவர் கவலைகள் வேறுபடுகின்றன. தமிழ் சினிமாவின் தற்போதைய அவலநிலைக்கு காம்பௌண்ட் வரிகள், டெலிவிஷனின் தாக்கம், படச்சுருளை விரயம் செய்வது, 'மீட்டர் போட்ட பின்'தான் கதை பண்ணுவது போன்ற பல காரணங்கள் சொல்லப்பட்டன.

சிறு முதலீட்டுப் படம் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டபோது அவர்களையே சிறு முதலீட்டுப் படம் என்றால் என்ன என்று கேட்டேன்.

சற்று நேர கருத்துப் பரிமாற்றங்களுக்குப் பின் வெளிப்பட்ட வரையறை இது. சிறு பட்ஜெட் என்பதற்கும் சிறு முதலீடு என்பதற்கும் வேறுபாடு உள்ளது. தயாரிப்பாளரின் முதலீடு சிறு பட்ஜெட் படங்களுக்கு அதிகமாகவே இருக்கும். காரணம், இவற்றுக்கு பெரிய படங்கள் போல அட்வான்ஸ் வாங்க முடியாது.

சிறு பட்ஜெட் படம் என்பது செலவு ஒரு கோடிக்குள் இருக்க வேண்டும். ஒரு நாள் படப்பிடிப்புக்கு அதிகபட்சமாக ஐம்பதாயிரம் ரூபாய் தான் செலவழிக்க வேண்டும். நாற்பத்தைந்து நாள் ஷூட்டிங், நாற்பத்தைந்து சுருளுக்கு மேல் ஃபிலிம் செலவழிக்கக் கூடாது. இருபத்தைந்திலிருந்து முப்பத்து ஐந்து பிரதி போட்டால் நான்கு வாரத்துக்குள் போட்ட பணம் வந்து விடும் என்றார்கள். இம்மாதிரியான

ஒரு வரையறை ஏற்படுவதே பெரிய விஷயம் என்று சொல்வேன். படம் ஆரம்பிப்பதற்கு முன் அதன் திரைக் கதை தெளிவாக எழுதப்பட்டாலே நஷ்டத்துக்குரிய முக்கியக் காரணம் நீங்கிவிடுகிறது என்பதை யாரும் சொல்லவில்லை. திட்ட மிட்ட செலவில் குறிப்பிட்ட நாட்களில் முடித்தால் மற்ற காரணங்கள் விலகிவிடுகின்றன. மிச்சமிருப்பது டரைக்டரின் திறமை மட்டுமே. திறமையுள்ள பல டரைக்டர்கள் இருக்கிறார்கள்.



டெலிவிஷனை இவர்கள் ஓர் எதிரியாக அல்லாமல் வாய்ப்பாகவே கருத வேண்டும். 'தமிழில் இதுவரை ஆரம்பத்திலிருந்து வந்த மொத்தப் படங்கள் எத்தனை?' என்று சபையில் இருந்த 'பிலிம் நியூஸ்' ஆனந்தனைக் கேட்டேன். சென்ற வருட இறுதிவரை வெளியான படங்கள் 5233 என்றார். ஐந்து டி.வி. சானல்களில் தினம் ஆறு மணி நேரமாவது திரைப்படம் காட்டுகிறார்கள். தினம் முப்பது மணி நேரம். ஒரு வருஷத்தில் இதுவரை வெளிவந்த திரைப் படங்கள் அனைத்தும் ஒரு ரவுண்டு வந்துவிடும். இதனால் இவர்களுக்குத் தீனிபோட புதிய

திரைப்படங்கள் தேவையாகவே இருக்கின்றன. மக்கள் நத்தை வேக மெகா சீரியல்களைப் பார்ப்பதற்கு ஒரே காரணம் - அவை நடுக்கூடத்தில் இலவசமாக வருவதாலும், பிடிக்கவில்லை என்றால் சேனல் மேய விரல் இருப்பதாலும். திரைப்படம் வேறு மிருகம். Trapped audience. காசு வாங்கிக்கொண்டு இருட்டில் உட்கார வைப்பதால் எதிர்பார்ப்பு அதிகம். அவர்களை மகிழ்விப்பது அவசியம். இல்லையேல் நாற்காலி கிழிபடும். எச்.பி.ஓ. போல டி.வி. சேனல்கள் திரைப்படங்களை தாமே தயாரித்து அளிக்கும் காலம் வந்துகொண்டிருக்கிறது. டி.வி-யும் சினிமாவும் சக்களத்திச் சண்டை போடாமல் வாழ முடியும். டிஜிட்டல் சினிமா வந்ததும் இந்தக் கணக்குகள் எல்லாம் தலைகீழாக மாறிவிடும் என்று தோன்றுகிறது. இந்த முறை NAB-ல் பார்க்கோ, சோனி, ஷார்ப், டெக்ஸஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் போன்றவர்கள் அசத்தலாக டிஜிட்டல் சினிமா போட்டுக் காட்டினார்கள் என்று பெண்டாமீடியா சந்திரசேகர் சொன்னார். எதிர்காலம் இதில்தானோ என்று தோன்றுகிறது. பொறுத்திருக்கலாம் அதுவரை சண்டை போடாமல்.

புதிய தமிழக அரசுக்கு மற்ற மாநிலங்களைப் போல் தியேட்டர்களுக்கு டிக்கெட் கட்டணத்தை உயர்த்தவோ தாழ்த்தவோ உரிமை கொடுத்து காம்பௌண்டிங் என்பதை நீக்கிவிட்டால் வருமானம் கூடும்... சிறு படங்களும் பிழைக்க முடியும் என்கிற உண்மையைத் தெளிவுபடுத்தலாம். முடிக்குமுன் பாரதிராஜா அவர்களைக் கேட்டேன்- 'பதினாறு வயதினிலே'க்கு எவ்வளவு செலவாயிற்று என்று. பக்கத்தில் ஏதாவது ஸ்டூல் இருந்தால் பிடித்துக்கொள்ளுங்கள் - நாலே முக்கால் லட்சம்!

அறிவியலின் டாப் டென்னில் மூன்றாவது 'நான்' என்கிற தத்துவம் பற்றியது. டெஸ்கார்ட்டெ - Descartes (1596-1650) 'நான் நினைக்கிறேன் அதனால் நான் இருக்கிறேன் 'I think therefore I am' என்றார். அப்போது ஆரம்பித்த விவாதம் இன்னும் முற்றுப் பெறவில்லை. ஒரு மனிதனாக இருப்பது, நினைப்பது, சிந்திப்பது, உணர்வது இதெல்லாம் என்ன என்று கேட்கிற இந்தக் கேள்வியே சரிதானா என்பதையும் அவர்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை. 'நானெனும் பொய்யை நடத்துவேன் நானே' என்றார் பாரதி. நான் என்பது என்ன பொய்யா? நான் உணரும் உலகமும் நீங்கள் உணரும் உலகமும் ஒன்றா? அதை எப்படிச் சொல்ல முடியும்? ஒரு சாக்லெட்டைக் கடிக்கும்போது, ஒரு பாட்டைக் கேட்கும் போது, ஒரு படத்தைப் பார்க்கும்போது உங்களுக்கும் எனக்கும் உள்ளுக்குள் ஏற்படுவது ஒரே மாறுதல்களா..? எப்படி இதை நிரூபிக்க

முடியும்?



அறிவியலின் மற்ற இயல்களில் கேள்வியைத் தெளிவாக கேட்க முடிகிறது. உதாரணமாக பிரபஞ்சவியலில் உலகின் சக்தி துகள், எல்லாவற்றையும் விளக்கும் ஒரு தத்துவம் இருக்கிறதா என்று கேட்க முடிகிறது. இந்தக் கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என்றாலும் பதில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் தெளிவு இருக்கிறது. அந்தத் தத்துவம் பிரபஞ்சத்தின் எல்லா விசைகளையும் துகள்களையும் ஒரே சமன்பாட்டால் விளக்க வேண்டும்.

ஆனால், மனம் என்பது என்ன என்கிற கேள்விக்கு பதில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதே தெளிவாகவில்லை. காரணம், எண்ணங்களைக் கருவி கொண்டு அளக்க முடியாது. மனதே மனதைப் பற்றி நினைக்க வேண்டியிருக்கிறது. பதில், கேள்வி இரண்டும் பிறப்பது ஒரே இடத்தில்... நீதிபதியே குற்றவாளி என்பதுபோல். மூன்று வகையில் இந்தக் கேள்வியை அலச முடிகிறது. மனம் என்பது நம் மூளையின் உள்ள ந்யுரான்களின் ரசாயன மின்மாற்றங்களா அல்லது மூளையின் ஒட்டு மொத்தமான செயல் அமைப்பா அல்லது உபநிஷதுகளில் போல சித்தாந்த தத்துவ விசாரங்களா? தற்போது இந்தக் குழப்பத்தை நீக்கும் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறார்கள். ந்யுரோபிஸியாலஜிஸ்டுகள் மனம் என்பது நம்முடைய அனுபவங்கள் அத்தனையும் நம் மூளையில் உள்ள ந்யுரான்களின் இணைப்பில் ஏற்படும் மாலிக்யுலர் மாறுதல்கள் என்கிறார்கள். டிஎன்ஏ ரகசியத்தைக் கண்டுபிடித்த ஃப்ரான்சிஸ் க்ரிக் (Francis Crick) என்பவர் இதைத் தீவிரமாக நம்புகிறார்.

இன்பமோ துன்பமோ கோடிக் கணக்கான ந்யுரான்கள் உங்கள் மூளையில் ஒருங்கிணைந்து செயல்படும் விளைவு என்கிறார்கள். ராஜர் பென்ரோஸ் (Roger Penrose) போன்றவர்கள் 'மூளையின் அடித் தளத்தில் இயங்குவது சிறிய சிறிய அணுக்களே. அவை க்வாண்டம் இயற்பியல்படி இயங்குகின்றன... அவற்றுக்கும் வெளியுலக செயல்களுக்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடித்தால்தான் மனதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்' என்கிறார்கள். மூன்றாவது குழுவினர் மனதை மனதால் அறிந்துகொள்ளவே முடியாது அறிந்துகொள்ளக் கூடாது என்று கூடச் சொல்கிறார்கள். சில விஷயங்கள் நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டவை ஜென் பௌத்தம், கேனோபநிஷது போன்றவை மனதை அறிவதற்காக வழிகாட்டுகின்றன.

முழுவதும் அறிவது சாத்தியமில்லை என்கிறார்கள். மனித மனம் என்பது வெறும் ந்யுரான்களின் இயக்கம் மட்டும் அல்ல.. அதற்கு மேலே என்கிற முடிவுக்குத்தான் வருவார்கள் என்பது தற்போது தெரிகிறது.

**ந**கைச்சுவையாக எழுதுவதில் ஓர் அபாயம்-நகைச்சுவையை உண்மையாக எடுத்துக்கொண்டு விடுவது. இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. 'எழுத்தாளன் உருவாவது எப்படி என்பது நான் எழுதியதிலிருந்து தெரிந்தால் ஒரு காம்பெட்டிஷன் போஸ்ட் கார்டில் எனக்கு எழுதவும்' என்று ஏற்கெனவே இந்தப் பகுதியில் சொல்லி இருந்தேன். நிஜமாகவே பலர் எனக்கு விசுவாசமாக காம்பெட்டிஷன் போஸ்ட்கார்டுகள் அனுப்பி இருந்தார்கள். அதே போல் முதல் கட்டுரையில் எனக்கு தினம் எனக்கு கவிதைத் தொகுப்பு வருகிறது என்று வேடிக்கைக்கு அலுத்துக் கொண்டதற்கு சில கவிஞர்கள் வருத்தப்பட்டதாகத் தெரிந்தது. தமிழர்களின் நகைச்சுவை உணர்ச்சி குறைந்து வருகிறதோ என்று சந்தேகம் வருகிறது.



ஒரு ஜோக் ஞாபகம் வருகிறது.

"மகனே, நீ பெரியவர்களிடம் பேசும்போது எக்காரணம் கொண்டும் இரண்டு வார்த்தைகளை மட்டும் பயன்படுத்தாதே. ஒன்று, கண்றாவி. மற்றது கசுமாலம்."

"சரியப்பா - பயன்படுத்தவில்லை அப்பா. அந்த வார்த்தைகள் என்ன என்ன?"

# வயதின் ரகசியம்!



டாப்டென் கவலைகளில் நான்காவது மூப்பு, வயோதிகம் ஏன் வருகிறது? ஏன் வயசாகிறோம்? புத்தர் காலத்திலிருந்து கேட்கப்பட்ட கேள்விக்கு நவீன அறிவியல் என்ன பதிலைத் தேடுகிறது?

தோரு (Thoreau) சொன்னது போல் இளமை நிலவுக்குப் பாலம் கட்டவோ, பெரிய அரண்மனை கட்டவோ பொருள்களை சேகரிக்கிறது. மூப்பு அதை வைத்துக்கொண்டு ஒரு சின்ன குடிசைதான் கட்டுகிறது.

நாம் எப்படி வயோதிகம் அடைகிறோம் என்பது தெளிவாகவே தெரிகிறது. அதன் படிப்படியான கட்டங்கள் முதல் நரை, முதல் தொப்பை, வழுக்கை, முதல் திரை, முதல் மூட்டு வலி, கண்ணுக்குக் கீழ் குளுப்பை இவையெல்லாம் அடையாளங்கள். ஆனால், நம் உடலில் எந்தப் பகுதி இதைச் செயல்படுத்துகிறது.. ஏன் செயல்படுத்துகிறது.. எல்லோரும் மூப்படையாமல் இருந்துவிட்டால் என்ன என்கிற கேள்வி எழுகிறது ஆல்டஸ் ஹக்ஸ்லியின் 'After many a summer dies the swan' என்னும் நாவலில் ஒரு பணக்காரர், சாவை மிக மிக சந்தோஷமானதாக்க வேண்டும் என்று கல்லறையில் எல்லாம் நியான் விளக்குகள் போட்டுக் கேளிக்கைகள் அமைத்துக் கொண்டாடுகிறார். எல்லோருமே மூப்படைவதைப் பற்றி நடுவயசில் கவலைப்படத் துவங்குகிறோம். நமக்குப் பின் நம்மை ஞாபகப்படுத்த எதாவது செய்ய விரும்புகிறோம்.

மூப்புக்கான காரணத்தை இரண்டு தத்துவங்களின் அடிப்படையில் ஆராய்கிறார்கள். Planned obsolescence, accumulated accident. திட்டமிட்டபடி வயசாவது, விபத்துகளின் தொகுப்பால் வயசாவது. திட்டமிட்டபடி வயசாவது என்பது அறுபதுகளில் கொண்டு வந்த சித்தாந்தம். ஒரு கார் அல்லது ஸ்கூட்டர் இருக்கிறது.. அதற்கு எத்தனை வாழ்நாள்.. பத்து வருடமா.. அதன் பின் புதிய மாடல்

கொண்டுவருவதற்கேற்ப அது வடிவமைக்கப்படுகிறது. ஸ்பேர்பார்ட் கிடைக்காது.. பெட்ரோல் குடிக்கும்.. மழையில் நின்றுபோகும்.. புகை வரும். அது போல மனித உடம்பும் அதிகபட்சம் 100 அல்லது 110 வருஷத்துக்கு மேல் தாங்க முடியாதபடி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்துக்கு முக்கியமான பக்கபலமாக அவர்கள் ஹேய்ஃப்ளிக் எல்லை (Hayflick limit) என்று ஒன்று சொல்கிறார்கள். மனிதக் கருவிலிருந்து செல்களை எடுத்து அவற்றுக்குச் சரியான சீரான போஷாக்கு கொடுத்து வளரவிட்டால் என்ன ஆகும் என்று ஹேய்ஃப்ளிக் ஆராய்ந்தார். செல்களின் ஆதாரச் செயல் என்ன? இரட்டிப்பாவது. எத்தனை முறை அது இரட்டிப்பாகிறது என்பதை ஆராய்ந்தார். ஐம்பது முறை ஆனதும், ஏதோ சுவிட்ச் போட்டாற் போல நின்று போகிறதாம். இதனால் மனித உடலும் ஒரு தருணத்தில் 'போறுண்டா ஆட்டம் க்ளோஸ்' என்று எல்லா கதவுகளையும் மூடி விடுகிறது. அது மனிதன் வாழ்ந்த வாழ்வைப் பொறுத்து எழுபதிலிருந்து நூறு, நூற்றுப்பத்து வரைகூடப் போகலாம். அதற்கு முன் செத்தால் அது அவன் வாழ்வில் செய்த தவறுகளால் என்கிறார்கள்.

ஆர்.கே. நாராயண்



இரண்டாவது , 'விபத்துகளின் தொகுப்பு' சித்தாந்தத்தில் ஒவ்வொரு

உயிரணுவும் ஒரு ரசாயனத் தொழிற்சாலை போல அதனுள் நடக்கும் காரியங்களில் கழிவுப் பொருள்கள் ஏற்படுகின்றன. இந்தக் கழிவுப்பொருள்களும் செல்களை வெளியுலகில் இருந்து தாக்கும் பல ரசாயனப் பொருள்களும் சேர்ந்து ஒரு கட்டத்தில் செல்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தியை இழக்கச் செய்கின்றன. வெளியுலக ரசாயனப் பொருள்கள் மட்டுமின்றி செல்லுக்குள் இருந்தே வெளிவரும் கழிவுப் பொருள்களும் சேதம் விளைவிக்கக் கூடியவை. இதனால் தான் நாம் மூப்படைகிறோம், சாகிறோம் என்கிறார்கள்.

இந்த இரண்டாவது தத்துவம்தான் தற்போது பிரபலமாகி வருகிறது. ஒரு செல்லின் செயல்பாட்டில் வெளிப்படும் கழிவுப் பொருள்களை மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள். இதில் வில்லன் என்னும் சுதந்திரமான ராடிக்கல்ஸ் (free radicals) என்னும் கழிவுப்பொருள் என்று கண்டுள்ளார்கள். இவை எப்படிச் செயல்படுகின்றன என்று கண்டுபிடிப்பதில் வயசாவதின் ரகசியம் பொதிந்திருக்கிறது என்கிறார்கள். கண்டுபிடித்துத் திருத்தி விட்டால் நம் வயசு கூடும் என்று சொல்லத் தயங்குகிறார்கள். 100 அல்லது 110 வருடத்துக்குமேல் மனித உடம்பு தாங்காது. ஆனால், ஆரோக்கியமாக நன்றாக வாழ முடியும் என்கிறார்கள்.

நீண்ட நாள் வாழ்வு, அநாயாச மரணம் இதைத்தானே நாம் எல்லோருமே விரும்புகிறோம்!

குமுதம் பத்திரிகையில் ஆசிரியராக இருந்தபோது ஆர்.கே. நாராயணைச் சந்தித்துப் பேட்டியெடுத்து எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. வாசகர் வட்டம் லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தியின் வீட்டில் சந்தித்தேன். என்னைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன் என்று சொன்னதே எனக்குப் பெருமையாக இருந்தது. "என்ன வேணா கேளுங்க" என்றார். அப்போது வெளியாகியிருந்த 'The world of Nagaraj' என்னும் நாவலை முதல் நாள்தான் படித்து முடித்திருந்தேன். "அதில் நாரதரை ஒரு காரெக்டரா போடணும்னு எப்படி உங்களுக்குத் தோன்றியது?" என்று கேட்டேன்.

நாராயண் "கொஞ்சம் இருங்க" என்று சொல்லி உள்ளே போய் தன்னுடைய ஹியரிங் எய்டை அணிந்து கொண்டு வந்தார். "சாதாரணமா பேட்டிகாண வர்றவங்க என்னைச் சரியா படிக்காம மேம்போக்கா சம்பிரதாயமா கேப்பாங்க. உன்னிப்பா கேட்டுப் பதில் சொல்லணும்னு அவசியம் இல்லை. அதனால ஹியரிங் எய்டு

மாட்றதில்லை. இப்படித்தான் டைம் பத்திரிகையிலிருந்து ஒரு இளம் பெண் வந்து நான் என்னவெல்லாம் எழுதிருக்கேன்னு என்னையே கேட்டுட்டு என்கிட்டயே புத்தகம் வாங்கிட்டுப்போய் என்னையும் ஒரு பழைய நாற்காலியையும் மத்யானம் நடுவெயில்ல மெரீனாவுக்குக் கொண்டுபோய் உட்கார வெச்சு போட்டோ எடுத்துப் பாடாபடுத்தினா. நீ கேக்கற கேள்வியைப் பார்த்தா தீவிரமா படிச்சிருக்கேன்னு தெரியறது. உன் கேள்விகளை உன்னிப்பா கவனிக்க விரும்பறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

இந்த லேசான குறும்பும் எளிமையாக தெளிவாக கதை சொல்லும் திறமையும் நாராயணின் முக்கியப் பண்புகள். ஜான் அப்டைக், கிரஹாம் க்ரீன் போன்றவர்கள் அவரைப் பற்றி எழுதியிருப்பதை நாம் படிக்க வேண்டும். உலகத்தரம் வாய்ந்த எழுத்து அவருடையது என்பது புரியும். அவர்கள் எல்லாம் ரசித்தது நாராயணின் உரை நடையின் Deceptive Simplicity-யைத்தான், சிக்கலாக எழுதுவது, யாருக்கும் புரியாமல் எழுதுவது மிக சுலபம். பேட்டி குமுதத்தில் வெளிவந்தது. நான் அவருக்கு என்னுடைய 'ஸ்ரீரங்கத்து தேவதைகள்' என்ற புத்தகத்தைக் கொடுத்தேன்.

அதை அவர் படித்திருப்பார், கொஞ்சமாவது அவரை நான் சிரிக்க வைத்திருப்பேன் என்று நம்புகிறேன். என் வாழ்வில் அவர் கொடுத்த அத்தனை சந்தோஷத்துக்கு ஓர் எளிய கைம்மாறு.



# ஸீட் வேட்டை!



பொறியியல் கல்லூரி அனுமதித் தேர்வுகளும் ப்ளஸ் டூ பெற்றோர்களின் கவலைகளும் நிறைந்த இந்த ருதுவில், 1952-ல் என் இன்ஜினீயரிங் ஸீட் வேட்டையைப் பற்றி நினைவு கொள்கிறேன்.

என் அப்பா, கிண்டி பொறியியல் கல்லூரியில் எலெக்ட்ரிக்கல் இன்ஜினீயரிங் படித்தவர். அரசாங்க மின்சார இலாகாவில் டிவிஷனல் இன்ஜினீயராகத் திருச்சியில் பணிபுரிந்து வந்தார். மூன்று மகன்களில் ஒருவனையாவது இன்ஜினீயராக்க வேண்டும் என்று விரும்பினார். என் அண்ணன் பாட்டனி எடுத்திருந்ததால், மெடிக்கல் ஸீட் கிடைத்துச் சேர்ந்துவிட்டான்.

அப்போதெல்லாம் ப்ளஸ் டூ கிடையாது. எஸ்.எஸ்.எல்.சி-க்குப் பிறகு இரண்டு வருடம் கல்லூரிகளில் 'இன்டர் மீடியட்' என்னும் இடை நிலை வகுப்பு படிக்க வேண்டும் ('அந்தக் காலத்து இன்டர், இந்தக் காலத்து எம்.ஏ. போல' என்று மாமாக்கள் புளுகுவார்கள். நம்பாதீர்கள்!).

இன்ஜினீயரிங்குக்குத் தனிப்பட்ட நுழைவுத் தேர்வுகளும் கிடையாது. இன்டர்மீடியட் மதிப் பெண்களை வைத்துக்கொண்டு தேர்ந்தெடுப்பார்கள். நான் செயின்ட் ஜோசப்பில் படித்தேன். சுமாராக மார்க் வாங்கியிருந்தேன். சராசரியாக எழுபதோ என்னவோ ஞாபகம்-ஃபிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, மேத்ஸில். அதை வைத்துக் கொண்டு அப்பா, "கிண்டிக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கும் போட்டுப் பார்..." என்று சொன்னார்.

கிண்டியில் கூப்பிடவில்லை. அண்ணாமலையிலிருந்து இன்டர்வியூ கார்டு வந்தது. இன்டர்வியூவுக்காக அப்பா ஒரு புதிய செருப்பு வாங்கித் தந்தார். பெல்ட் போட்ட செருப்பு. பில் போட்ட கணத்திலிருந்து கடிக்க

ஆரம்பித்ததால் நொண்ட வேண்டியிருந்தது. இன்டர்வியூவுக்கு அப்பாவும் கூட வந்தார். ஸ்ரீரங்கத்திலிருந்து திருச்சி ஜங்ஷனில் மெயின் லைனுக்கு மாறி, சிதம்பரத்தில் ஓட்டலில் ரூம் எடுத்துத் தங்கினோம். இன்டர்வியூ காலை பதினோரு மணிக்கு நடந்தது. அப்பா வெளியே காத்திருக்க, உள்ளே சென்றேன். இருட்டாக இருந்தது. "வாட்ஸ் யுர் நேம்..?" என்று யாரோ கேட்டார்கள். சொன்னேன். "யு மே கோ..." என்றார்கள்.

வெளியே வந்ததும் அப்பா "எப்படிடா இருந்தது இன்டர்வியூ..? எல்லாக் கேள்விக்கும் பதில் சொன்னியா..?" என்றார். "ஈஸியா இருந்ததுப்பா. ஒரு கேள்வி மட்டும் கேட்டார்கள். சரியா பதில் சொல்லிட்டேன்..."

"என்னடா கேள்வி..?"

"பேர் கேட்டார்ப்பா ஒருத்தர்..."

அப்பாவின் முகம் விழுந்தது. "உனக்குக் கிடைக்காது, வா..."

ஏமாற்றத்துடன் திரும்பினோம். நடுராத்திரியில் திருச்சி ஜங்ஷனில் வந்து, ஸ்ரீரங்கம் போக வண்டிக்கு பிளாட்பாரத்தில் காத்திருக்கும்போது செருப்பு உச்சஸ்தாயியில் கடித்ததால், அதைக் கழற்றி வைத்துவிட்டுச் சற்றே கண்ணயர்ந்தேன். விழித்தால், செருப்பை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அப்பா என்னைச் சோகமாகப் பார்த்து, "ஒரு செருப்பைப் பத்திரமா வெச்சுக்கத் தெரியலை. நீ என்னடா இன்ஜினீயராகிக் கிழிக்கப்போறே...?" என்றார். எனக்கு உள்ளுக்குள் கோபம் வந்தது.

காலையில் அம்மாவிடம் தனியாக, "எப்படியாவது நான் சம்பாதிக்க ஆரம்பிச்சப்பறம், முதல்ல அந்தச் செருப்புக்கான காசை அவரிடம் திருப்பிக்கொடுக்கத்தான் போறேன்..." என்றேன். அம்மா சிரித்து, என் தலையில் தட்டினாள்.

இன்ஜினீயரிங் கிடைக்காததால், அப்பா பி.எஸ்ஸி. சேரச் சொன்னார். அது முடித்ததும் க்ரோம்பேட் எம்.ஐ.டி-யில் இடம் கிடைத்தது. அப்போதெல்லாம் அது சுலபம். காரணம், அது புதிதாகத் துவக்கப்பட்ட தனியார் நிறுவனமாக இருந்ததால், கொஞ்சம் கட்டணம் அதிகம்.


அப்பா பி.எஃப்-ல் கடன் வாங்கிச் சேர்த்துவிட்டார். கோர்ஸ் முடிகிற வரைக்கும் திணறினார். இதெல்லாம் பின்னால்தான் தெரிந்தது. ஒரு முறை அப்பாவுடன் பேசிக் கொண்டிருக்கையில், "அண்ணாமலையில் உன்னை இன்டர்வியூ எடுத்தவனை எனக்கு நன்றாகத் தெரியும். ஆப்த நண்பன்..." என்றார். அவரை அப்பா ஒரு முறை சந்தித்தபோது, "என்ன சீனிவாச ராகவன்... சொல்லவே இல்லையே, எத்தனையோ பேருக்கு ஸீட் கொடுத்தேனே... ஏன் கேக்கலை..?" என்றாராம்.

"என்னவோ கேக்கணும்னு தோணலைடா..." என்றார்.

நானும் 'ஏன் தோணலை..?' என்று அப்பாவிடம் கேட்கவில்லை. அந்தக் கடிமாஸ்டர் செருப்புக்கான பணத்தையும் அவருக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை. யோசித்துப் பார்த்தால், அப்பாவுக்கு நான் வாங்கிக் கொடுத்தது ஒரு சிலவே. ஒரு டிரான்சிஸ்டர் வாங்கித் தந்தேன். அதைக் கொஞ்ச நாளைக்குப் பின் திருப்பிக்கொடுத்து விட்டார். டெல்லியில் இருக்கும்போது 'வேதிக் கன்கார்டன்ஸ்' என்ற புத்தகத்தை பனாரசி தாசிலிருந்து வாங்கி அனுப்பச் சொன்னார். அதுபோல் திலக்கின் 'கீதா ரகஸ்யா'.

1982-ல் இறந்துபோவதற்கு முன், சேலத்தில் ஒரு சட்டை வாங்கிவரச் சொன்னார். பத்துப் பதினைந்து நாள் போட்டுக்கொண்டிருந்தார்.

அறிவியலின் டாப்டென்னில் ஐந்தாவது மனித குணங்கள் உருவாவது பிறப்பாலா, வளர்ப்பாலா என்கிற கேள்வி.



சென்ற இருபதாம் நூற்றாண்டின் பாதிவரை விஞ்ஞானிகள் 'எல்லாமே சூழ்நிலைதான். சூழ்நிலை சரியாக அமைந்தால், ஒரு நல்ல மனிதனை உருவாக்க முடியும். பிரச்னையே இல்லை' என்று நம்பினார்கள். இந்த நம்பிக்கை டி.என்.ஏ. ஆராய்ச்சி வலுப்பட்டதும் கொஞ்சம் பின்வாங்கிவிட்டது. மெள்ள மெள்ளப் 'பிறப்பில் நம் வியாதிகள் மட்டுமல்ல, குணாதிசயங்களின் காரணங்களும் இருக்கின்றன' என்று கண்டுகொண்டிருக்கிறார்கள்.

பல ஈக்கள் , எலிகளிலிருந்து மானுட இரட்டையர்கள் வரை கவனிக்கும்போது பல ஆச்சரியங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. ஒரே தோற்றமுள்ள இரட்டையர்கள் ஒரே சமயத்தில் பிறந்து, தோற்றத்தில் வேறுபட்ட - Fraternal Twin – இரட்டையர் இவ்விரு வகையினரையும் ஒரே சூழ்நிலையிலும் வேறுபட்ட சூழ்நிலையிலும் வளர்த்துக் கிடைத்த விவரங்களிலிருந்து தெரியும் தகவல்- நம் பிறப்பு, நம் குணாதிசயங்களை முப்பதிலிருந்து எழுபது சதவிகிதம் வரை நிர்ணயிக்கிறது என்பதே.

ஆனால், ஒரு குணத்துக்கு ஒரு ஜீன் என்று சொல்ல முடியவில்லை. ஒரு வியாதிக்கு ஒரு ஜீன் என்று சொல்ல முடிகிறது. உதாரணம் , சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ், ஆனால், குடிப்பழக்கத்துக்கு என்று ஒரு ஜீன் இருக்கிறதா, கோபத்துக்கு ஒரு ஜீன் உண்டா..? இப்படித் திட்டவட்டமாகச் சொல்ல முடிவதில்லை.

இந்தப் பழக்கங்களுக்குக் காரணம் பிறப்பும் வளர்ப்பும் கலந்தது என்று சொல்கிறார்கள். இருபத்துமூன்று க்ரோமோசோம்களில் எந்த க்ரோமோசோம் எந்தக் குணத்தை நிர்ணயிக்கிறது என்பதைக் குத்துமதிப்பாகத்தான் சொல்ல முடிகிறது. உதாரணம், 'ஆட்டிசம்' என்னும் ஒரு மனோவியாதிக்குக் காரணம் க்ரோமோசோம் என்பது தெரிகிறது.

இந்த ஆராய்ச்சி ஆரம்ப நிலையில் இருக்கிறது - மாலிக்யுலர் பயாலஜியின் உதவியுடன். இதில் தகவல் வங்கி சேரச் சேர, எதிர்காலத்தில் ஒரு ஆள் உங்களைக் கடக்கும் போது காரணமில்லாமல் விரல்களை முறுக்கி முஷ்டியை உயர்த்தி '...த்தா டேய்' என்றால், 'உன்னுடைய பதிமூணாவது க்ரோமோசோம் சரியில்லைப்பா' என்று சொல்ல முடியும் என எதிர்பார்க்கிறார்கள்.

# கட் இருந்தால் சௌகரியம்!



அறிவியலின் டாப் டென்னில் ஆறாவது கவலை உயிர் எப்படி முதலில் வந்தது என்பது.

இன்றைக்கு சற்றேறக்குறைய 4500 கோடி வருஷங்களுக்கு முன் பூமி ஓர் உருகின கற்பிழம்புப் பந்தாக இருந்தது. அந்த நிலையில் உயிர் என்ற ஒன்று இருப்பதற்கே வாய்ப்பில்லை இன்று பூமியில் உயிரினங்கள் இல்லாத இடமே இல்லை. எப்படி அங்கிருந்து இங்கு வந்தோம் என்ன ஆயிற்று. இதற்கு விடை ஓரளவுக்கு நமக்குத் தெரிகிறது. இன்று எந்த அருங்காட்சியகத்துக்குப் போனாலும் டினோசர்களின் முழு வடிவ உருவாக்கங்களைப் பார்க்கலாம்... ஃபாஸில் அடையாளங்களை வைத்து வடிவமைக்கப்பட்டவை. ஃபாஸில்கள் நம் கடந்த காலத்தின் சுவடுகள். பூமியின் அடியில் பல தளங்களில் படிந்து இறுகிப்போன அடையாளச் சீட்டுகள் போல. 60 கோடி ஆண்டு களுக்கு முன் இவை இருந்தன என்பது நவீன விஞ்ஞான முறைகளின் மூலம் தெரிகிறது, பார்த்து வருகிறோம். டினோசர்கள் மட்டுமல்ல... பலவித எளிய உயிரினங்களின் ஃபாஸில்கள் ஏறத்தாழ 3500 கோடி ஆண்டுகள் வரை ஆரம்ப காலத்துக்குக் கொண்டு போகின்றன. இதற்கு முன்தான் முதல் உயிர் தோன்றி இருக்க வேண்டும். முதல் உயிர் எப்படித் தோன்றியிருக்க வேண்டும் என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆதிகாலத்தில் பூமியில் இருந்த எளிய ரசாயனப் பொருட்களை இன்றும் நம் ஆராய்ச்சிசாலைகளில் தயாரித்துப் பார்க்க முடிகிறது இவற்றின் ஊடே மின்சாரம் பாய்ச்சினால் உயிரினங்களில் காணப்படும் சில கூட்டணுக்கள், மாலிக்யூல்கள் உண்டாவதைக் கவனிக்க முடிகிறது.

நாளடைவில் இம்மாதிரி கூட்டணுக்கள் சேர்ந்து போய் ஆதிகாலத்துக்

குழம்பு ஆகிறது. இதை primordial soup என்கிறார்கள்.இந்த சக்தி நிரம்பிய குழம்பிலிருந்து உயிர் எப்படித் தோன்றியது என்பதற்கு இரண்டு, மூன்று சித்தாந்தங்கள் சொல்கிறார்கள். அனைத்தையும் சொல்கிறேன். உங்களுக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்ளவும். அதற்கு முன் உயிர் என்பது என்ன என்று கவனிப்போம். ஒரு கல்உப்புக்கு உயிர் இல்லை. பாக்டீரியாவுக்கு உயிர் இருக்கிறது. இரண்டுக்கும் வேறுபாடு என்ன? உயிர் என்பது அடிப்படையில் தன்னை இரட்டிப்பாக்கி கொள்ளும் குணம் படைத்த ஒரு சிக்கலான கூட்டணு. இந்த அடிப்படையான உயிரணுவை 'செல்' என்று சொல்கிறார்கள். உயிரின் அடையாளம் 'செல்'லும் அதன் replication இரட்டிப்பாக்கும் தன்மையும்தான்.

இனி உயிர் வந்த விதத்தைப் பார்ப்போம்.

1. ஆர்.என்.ஏ. உலகம், ஆர்.என்.ஏ. என்பது ரிபோ ந்யுக்ளிக் அமிலம் என்ற சற்று நீண்ட சரமான அமைப்பிலுள்ள கூட்டணு. டி.என்.ஏ. உயிரணு தன்னை இரட்டிப்பாக்கிக் கொள்ள உதவும் முக்கியமான சரம். ஒரு இடைத்தரகர் போல அது. சில சமயங்களில் இந்த ஆர்.என்.ஏ. சரங்களைச் சோதனைச் சாலையில் உருவாக்க முடிகிறது. எனவே, முதலில் ஆர்.என்.ஏ. வந்து அதன் பின் டி.என்.ஏ உயிரணு வந்திருக்கலாம் என்கிற சித்தாந்தம் ஒன்று உலவுகிறது.

2. சேறு. சேற்றிலிருந்தும் உயிர் மலர்ந்திருக்கலாம். சில வகைச் சேறுகளுக்கு மின்சார குணம் கொஞ்சம் இருக்கிறது. இந்தச் சேற்றை நாம் முன் சொன்ன ஆதாரக்குழம்புடன் சேர்த்துக் குழப்பினால் முதல் உயிர் உருவாகியிருக்கலாம் என்பது மற்றொரு சித்தாந்தம்.

3. எண்ணெய்க் குட்டை. ஆரம்ப கால சூப் குழம்பை உண்டாக்கிய அதே சக்திகள் ஒரு துளி கொழுப்புச் சக்தியையும் உண்டாக்கியிருக்கலாம். இதிலிருந்தும் ஒருவிதமான வழவழவென்ற எண்ணெய்க் குட்டை ஏற்பட்டு, அதிலிருந்து உயிர் பெற்றிருக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. உயிர்பெறுதல் என்னும் சம்பவம் என்ன குட்டையோ குழம்போ அதில் உள்ள மாலிக்யூல்கள் ஒன்றுடன் ஒன்று காலம் காலமாகச் சேர்ந்து கலைந்து ஒரு தருணத்தில் தன்னையே இரட்டிப்பாக்கும் செல் குணம் பெற்ற ஒரு மாலிக்யூலாக தற்செயலாக அமைவதே.

இந்த மூன்று விதங்களில் ஒன்றில்தான் ஆதிகால உயிரணு தோன்றி

இருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள்.

இதனுடன் மற்றொரு கேள்வி எழுகிறது. முதல் உயிர் தோன்றுவது இத்தனை எளிமை என்றால் இன்றும் ஆராய்ச்சி சாலையில் முழு உயிரணு ஒன்றை உற்பத்தி செய்ய முடியாதா?

இதை முயற்சி செய்து வருகிறார்கள். விரைவிலேயே முதல் செயற்கை உயிரணு அறிவிக்கப்படலாம். அது ஓர் எளிய செல்லாகத் தான் இருக்கும். க்ளோனிங் என்பது அந்த நிலைக்கு முதல் படி.

ஆனால், ஒரு ராத்திரியில் கடவுள் தீர்மானித்து உயிரினங்கள் அத்தனையும் படைத்தார் என்பதை அறிவியல் ஒப்புக்கொள்வதில்லை.

பதினோரு பரிமாணங்கள் கொண்ட 'சூப்பர் ஃபோர்'ஸிலிருந்து தான் பிரபஞ்சமே துவங்கியது என்று தற்போது அறிவியல் நம்புகிறது. அதன்பின் காலக்ஸிகள். அதன்பின் பால்வீதி, அதன்பின் சூரியக் குடும்பம். பூமி அதில் முதல் உயிரணு தற்செயலாக வந்தபின் பல கோடி வருடங்கள் எளிய முறையில் தன்னை இரட்டிப்பாக்கிக் கொண்டு பல்கிப் பெருகி, டார்வினின் பரிணாம தத்துவத்தின்படி சூழ்நிலையைச் சமாளிக்கும் அந்தஸ்து பெற்ற உயிரணுக்கள் மட்டும் பிழைத்து, இரட்டிப்பாக்குவதில் சிறுசிறு தவறுகள் ஏற்பட்டு குணம் மாறி, நிறம் மாறி, மெள்ள மெள்ள மீனாகி, மானாகிப் புல்லாகிப் புழுவாகி, நானாகி, நீயாகி... இப்படித்தான் அறிவியல் சொல்கிறது. எனவே, நம் எல்லோருக்கும் ஆதிகாலத் தாத்தாத்தா சமுத்திரத்துக்கடியில் ஒரு பாசியில் புறப்பட்ட பாக்டீரியாவாக இருக்கலாம்.



'சொன்னது நீதானா' என்று ஒரு பழைய பாடல் உள்ளது. நம்மை அறியாமலேயே பல வார்த்தைகள் சொல்லிவிட்டு, மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்று தவிக்கிறோம். அதைவிடத் தாட்சண்யத்துக்காக எதையாவது சொல்லிவிட்டு மாட்டிக்கொள்கிறோம். இப்படித்தான் ஒரு கல்யாணத்தில் ஒரு நண்பர் "நான் எழுதிய கதையைப் படித்தீர்களா?" என்று கேட்டார். நான் மையமாகத் தலையாட்டினேன்.

"எப்படி இருந்தது?"

"குட்! நல்லா இருந்தது."

"எந்தப் பகுதி உங்களுக்குப் பிடித்திருந்தது?"

"மொத்தமா பொதுவாகவே எல்லாம் சரியா இருந்தது."

"வெய்ட் எ மினிட் என்னுடைய இரண்டு கதை சமீபத்தில் பப்ளிஷ் ஆச்சு. அதில எதைச் சொல்றீங்க?"

"அதான் சார்... இதுல வந்ததே அது."

"எதுல?"

மாட்டினேன்.

சினிமாவில் போல் 'கட் கட் கட்' என்று சொல்லித் திருப்பி எல்லாவற்றையும் நடிக்கும் வசதி வாழ்க்கையில் இருந்தால் எவ்வளவு நல்லது.

"கட் கட் கட் கட். மறுபடி கேளுங்க."

"நான் எழுதிய கதையைப் படித்தீர்களா?"

"இல்லை. படிக்கலை!"

தீர்ந்தது மேட்டர்!

கணவன் - மனைவி, தந்தை-மகன் உறவுகளில், நண்பர் உறவுகளில், இந்த 'கட் கட் கட்' இருந்தால் எத்தனை செளகரியம்.


# மூளையில் பளிச்!



அறிவியலின் ஏழாவது கவலை - நம் மூளை செயல்படும் விதத்தை நாம் முழுவதும் இந்த நூற்றாண்டில் அறிந்துகொள்ள முடியுமா என்பது.

மனம் என்று தனியாக ஏதும் இல்லை. நம் மூளையின் ஆயிரம் கோடி நியூரான்களின் இணைப்பைத்தான் ஒட்டுமொத்தமாக மனம் என்று சொல்லலாம். மனிதனை மனிதனாக ஆக்கு பவை நம் எண்ணங்களும் கனவுகளும் நம் படைப்புத் திறமைகளும்தான். இவை அனைத்தும், மேஜைமேல் வைத்தால் ஒரு மீடியம் சைஸ் கைக்குட்டை அளவுக்கு விரிந்துவிடக்கூடிய 'செரிப்ரல் கார்டெக்ஸ்' (Cerebral Cortex) என்று சொல்லப்படும் மூளையின் மேற்போர்வையில் அடக்கம்.

இன்றைய டெக்னாலஜியில் எஃப். எம்.ஆர்.ஐ. (Functional Magnetic Resonance Imaging) என்னும் தொழில்நுட்பத்தின் மூலம் இந்தப் பகுதி எப்படி இயங்குகிறது என்பதைக் கணிப்பொறி உதவியுடன் பார்க்க இயலுகிறது. இதைச் 'செயலாக்க காந்த ஒத்திசைவு பிம்பவியல்' என்று தமிழில் சொன்னால் அடிக்க வருவீர்கள். இது என்ன என்று விளக்குகிறேன். ஒரு மிக வலுவான காந்தத்தின் இடையில் ஒரு பொருளை வைத்தால் அந்தப் பொருளில் உள்ள ஹைட்ரஜன் அணுக்களின் நியூக்ளியஸ் என்னும் உள்கருவில் சுற்றும் ப்ரோட்டான்களில் ப்ரிசெஷன் (precession) ஏற்படுகிறது. ப்ரிசெஷன் என்பது பம்பரம் சுற்றும் போது ஓயுமுன் தலையாட்டுமே அதுபோல.



இந்தத் தலையாட்டல் வேகம் காந்தப் புலத்தின் அளவைப் பொறுத்தது.

இந்தச் சூழ்நிலையில் அந்தப் பொருளின் ஊடே ஒரு ரேடியோ அலையைச் செலுத்தினால் அந்த அலையின் துடிப்பும் தலையாட்டல் வேகமும் ஒத்துப்போகும் போது இரண்டும் சக்தி பரிமாறிக் கொள்கின்றன. இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் அமைந்தது, இன்று எல்லா பெரிய ஆஸ்பத்திரிகளிலும் உள்ள எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி. நம் தலையை ஒரு வலுவான காந்தப் புலத்தின் நடுவே வைத்து ரேடியோ அலைகளை பல கோணங்களில் அனுப்பி ரேடியோ ஊடுருவலுக்கேற்ப வெளிப்படும் ரேடியோ அலைகளின் அளவை வைத்து கம்ப்யூட்டரின் உதவியுடன் மூளைக்குள் இருக்கிற பாகங்களின் முப்பரிமாண பிம்பத்தை உருவாக்குகிறார்கள். 'ஃபங்க்ஷனல்' எம்.ஆர்.ஐ. என்பது மூளைக்குள் ஏற்படும் சின்னச் சின்ன வேறுபாடுகளையும்

அறிந்து கொள்ளக் கூடிய அதிக நுட்பம் படைத்த கருவி. இன்னும் உசத்தி இதற்கு அண்ணன் ஒன்று இருக்கிறது பெட் - PET (Positron emission tomography) என்று. அதைப் பற்றி மற்றொரு சமயம் சொல்கிறேன். இதனால் நம் மூளை என்ன செய்தாலும் எந்தப் பாகத்தில் அதிக ரத்தம் பாய்கிறது என்பதை மிகத் தெளிவாகக் கண்டுகொள்ள முடிகிறது. ஒரு பூவைப் பற்றியோ, ஒரு கவிதையைப் பற்றியோ அல்லது ஒரு பாட்டைப் பற்றியோ எண்ணும் போது மூளையின் எந்த இடத்தில் நடவடிக்கைகள் அதிகமாகின்றன என்பதைக் காண முடிகிறது. இது மூளையைப் பற்றிய ஆராய்ச்சிக்கு உதவும சித்திரம். அதாவது நம எண்ணங்களை எம்.ஆர்.ஐ. மூலம் படித்துவிட முடிகிறது (இதற்கு ஒரு மனைவி போதுமே என்று நீங்கள் வியக்கலாம். மனைவிமார் பொய்களை மட்டும்தான் நன்றாகக் கண்டுபிடிப்பார்கள்). இது அதைவிட நுட்பம். உதாரணமாக, யாராவது 'வெற்றி பெறுவதற்கு வாழ்த்துக்கள்' என்று சொல்லும்போது செரிப்ரல் கார்டெக்ஸில் ஒரு பகுதி விளக்குப் போடுவதை பார்க்கலாம். அந்த வாழ்த்துக்களுடன் 'உனக்கெல்லாம் நேரண்டா' என்று ஒரு பொறாமையும் சேர்ந்தால் செரிப்ரல் கார்டெக்ஸின் வேறு பகுதியிலும் கொஞ்சம் ரத்த ஓட்டம் அதிகமாவதைப் பார்க்க இயலும்.

இந்த முறையை வைத்துக்கொண்டு சில விந்தையான விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். உதாரணமாக - இரண்டு பாஷை பேசும் திறமை படைத்தவர்களை ஆராயும்போது இரண்டு பாஷைகளுக்கான இடங்கள் தனித்தனியாக இல்லை. தெலுங்கோ, தமிழோ ஒரே இடத்தில்தான் ரத்தம் ஓட்டம் அதிகரிக்கிறது என்று கண்டுபிடித்தார்கள். இது சாம்ஸ்கி போன்ற மொழியிலாளர்களின் தற்போதைய நம்பிக்கையை ஊர்ஜிதப் படுத்துகிறது. அவர்கள், நம் மொழித்திறமை என்பது பிறவிக்குணம்... அதைப் பயன்படுத்தி தமிழோ, சிங்களமோ ப்ரொக்ராம் போல உருவாக்கிக் கொள்கிறோம் என்றார்கள்.

அண்மையில் 'டிஸ்கவரி' சேனலில் ஒரு நிகழ்ச்சியில் நகைச்சுவை உணர்ச்சியை எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பண்ணிக்காட்டினார்கள்.

ஒரு ஆசாமி ஒரு ஜோக்குக்குச் சிரிக்கும்போது மூளையில் எல்லாப் பேட்டையிலும் பளிச் பளிச்சென்று வெளிச்சம் போடுகிறதைப் பார்க்க இயலுகிறது. இதனால் அதிகம் சிரிப்பவர்கள் ஆரோக்கியமாக இருப்பார்கள் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறது. ஒரு பச்சை நிறத்தையோ, பாத்ரூமில் பல்லியையோ பற்றி எண்ணும்போது உங்கள்

மூளையில் எந்தப் பாகத்தில் லைட் எரிகிறது என்று இப்போது தெரிந்துகொள்ள முடிகிறது. இதனால் மூளையின் முழு வரைபடத்தையும் வரைய முடியும் என எதிர்பார்க்கிறார்கள். சில வருஷங்களில் நியூரோ சர்ஜனிடம் இந்த உரையாடல் சகஜமாகலாம். "டாக்டர், எனக்கு ஒரு ஆளைப் பார்த்தா மட்டும் அப்படியே கழுத்தை நெரித்து விடலாமான்னு வருது."

"நோ ப்ராப்ளம்.. செரிப்ரல் கார்டெக்ஸ்ல வடமேற்குப் பகுதியில் கொஞ்சம் நியூரான்கள் செய்யற வேலை இது. எடுத்துரலாமா?"

"எதுக்கும் இருக்கட்டும் டாக்டர்."

ஹூஸைனியின் சமையல் குறிப்பு - நான் ரசித்துப் பார்க்கும் சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒன்று. என் நண்பர்களில் சமைக்கும் கணவர்கள் பலர் உண்டு. சிலர் பாடிக்கொண்டே சமைப்பார்கள். சிலர் அவ்வப்போது ருசி பார்த்து 'ஆஹா.. மன்னன்டா நீ', என்று சொல்லிக்கொண்டே சமைப்பார்கள். அவர்கள் எவரும் தம் மனைவியரிடம் பெயர் வாங்கியதில்லை. "சமைப்பார்.. ஆனால், அவர் விட்டுப்போன கிச்சனைச் சுத்தம் பண்ணுவதற்கு மூணு மணி நேரம் ஆகும்" என்பார்கள். நான் வாழ்க்கையில் இரண்டு முறை சமைத்திருக்கிறேன். சின்ன வயசில் என் அம்மா ஜன்னலுக்கு வெளியிலிருந்து சொல்லிச் சொல்லிச் சமைத்தது ஒருமுறை. பெங்களூரில் என் மனைவி ஊருக்குப் போயிருந்தபோது புத்தகத்தைப் பார்த்து அப்பாவுக்கு ரசம் வைத்தது ஒரு முறை. துவரம்பருப்பு எது என்று தெரியாமல் கடலைப்பருப்பைப் போட்டு ரசம் வைத்து விட்டேன் (சமையல் புத்தகம் போடுகிறவர்கள் பதார்த் தங்களின் போட்டோக்களையும் போட மாட்டார்களோ?). அப்பா அதை ரசித்து "இதுகூட நன்னாத்தான் இருக்கு. எதுக்கு உனக்குச் சிரமம்.. மெஸ்லருந்து வாங்கி வந்துரு" என்றார். இதனால் காபி போடுவதுடன் என் சமையல் திறமைகளைக் குறைத்துக் கொண்டுவிட்டேன். ஓர் ஆசாமி எவ்வளவுதான் செய்ய முடியும்!

சில புத்தகங்களின் தலைப்புகளைப் பார்த்தால் உடனே படிக்கத் தோன்றும், அ.வெ. சுப்பிரமணியனின் 'சங்கப் பாட்டில் குறியீடு' என்னும் புத்தகம் அவற்றில் ஒன்று.

குறியீடு என்பதை symbolism என்னும் ஆங்கில வார்த்தைக்கு ஈடாகப்

பயன்படுத்துகிறார். வெளிப்படையாக ஒன்றைக் கூறி அதன் வழியாக அதனுடன் தொடர்புடைய வேறொன்றைத் தொனியால் உணர்த்திக்காட்டுவது குறியீடு. இது நம் அணி இலக்கணத்தில் இல்லை, 'உள்ளுரை உவமம்' என்பது கிட்டத்தட்ட வருகிறது. ஆனால், குறியீடு என்பது உள்ளுரை உவமத்துக்கு மேற்பட்டது என்பதை ஆசிரியர் குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை, அகநானூறு போன்ற சங்க கால அகத்துறை நூல்களிலிருந்து எடுத்துக் காட்டிச் சிறப்பாக விளக்கியுள்ளார். (புறப்பாடல்களில் இல்லையா?)

"அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
குடிய எல்லாம் சிறுபசு முகையே"

என்ற அருமையான குறுந்தொகைப் பாடல் உதாரணம், 'அந்த ஆள் இன்னும் வரவில்லை. முல்லை மலர்கள் பூத்துவிட்டன. பால் கொண்டுவந்து நெல் கொண்டு போகும் பால்காரன் தலையெல்லாம் முல்லைப்பூ!'

இவ்வளவுதான் கவிதை! இதில் குறியீடு - 'போன ஆசாமி மழைக்காலத்துக்குமுன் திரும்ப வந்துவிடுவேன் என்று சொன்னவன்... மழையும் வந்து முல்லை மலர்கள் எல்லாம் பால்காரன் தலையில்கூட உதிர்ந்ததாகி விட்டது... இன்னும் வரலை' என்னும் அந்தக் கவலையை முல்லை மலர்களின் மேல் குறியீடாகச் சொல்லும் பாடல். போனவர் திரும்ப வராத கவலை எல்லாக் கால கட்டத்துக்கும் பொருத்தமானது. " 'சித்தி' கூட ஆரம்பிச்சுடுச்சு. இந்தப் பொண்ணு வீட்டுக்கு வந்து சேரலியே" என்கிற நவீனக் கவலையும் குறியீடுதான்.


# வைரஸ் ராஜ்ஜியம்!




'பழைய கழிதலும் புதியன புகுதலும்' என்பது தொல்காப்பிய வரிகள் என்று நான் சொன்னது தப்பு. நன்னூலில் வருகிறது என்று அதிகாலையிலேயே போன் பண்ணிச் சொன்ன திருப்பூர் கிருஷ்ணன் அவர்களுக்கு நன்றி.

Traffic என்ற ஒரு அற்புதமான படம் பார்த்தேன். இதன் டைரக்டர் ஸ்டீவன் ஸோடர்பெர்க்குக்கு இந்த வருட ஆஸ்கர் பரிசு கிடைத்திருக்கிறது. பெனிசியோ டெல் டோரோ என்னும் போர்ட்டோரிக்கோ நாட்டைச் சேர்ந்த உதவி நடிகருக்கும் கிடைத்திருக்கிறது. இந்தப் படம் அமெரிக்க மெக்ஸிக்கோ எல்லையில் போதைப்பொருள் கடத்தல் பற்றிய த்ரில்லர். இதைப் பல கதாபாத்திரங்களின் கோணங்களில் சொல்கிறார் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கும் பிரதான வாஷிங்டன் அதிகாரி (மைக்கேல் டக்ளஸ்). அமெரிக்க மெக்ஸிக்கோ எல்லையில் சார்ந்த ஒரு லஞ்சம் வாங்காத போலீஸ் அதிகாரி, drug Cartelலின் இருதரப்புக் கடத்தல் மன்னர்கள், போதைக்கு அடிமையான - அதிகாரியின் பெண், போதைப்பொருள் கடத்தலுக்காகக் கைதுசெய்யப்பட்ட கணவன் மனைவி குழந்தைகள் என்ற ஐந்து கோணங்களில் கதை சொல்கிறார் ஸோடர்பெர்க். 1989-ல் Sex, Lies and Videotape என்னும் படத்தின் மூலம் Dogma movement என்னும் முறையில் டாகுமெண்டரிக்கு அருகேயான ஒரு பாணியில் கதை சொல்லும் இவர் , நவீன சினிமாவின் முக்கியமான டைரக்டர்களில் ஒருவர். உயரதிகாரியின் மகளே போதைப் பொருள்களுக்கு அடிமையாகித் தவிக்கும் பரிதாபத்தையும் போதைப்பொருள் கடத்தலை நிறுத்த சட்டம், போலீஸ் மட்டும் போதாது... குடும்பங்களில் அன்பும் நிம்மதியும் சந்தோஷமும் வேண்டும்

என்கிற உண்மையையும் கன்னத்தில் அறைந்தாற்போல் சொல்கிறது படம்.



பெனிசியோ



மைக்கேல் டக்ளஸ்

இதில் வரும் ஒரு உரையாடல் என்னைக் கவர்ந்தது-

போதைப் பொருள் கடத்துபவனை ராப்பகலாக வேனிலிருந்து கண்காணிக்கும் அதிகாரிகள், பொழுதுபோக்காகப் பேசிக்கொண்டிருக்கும் உரையாடல்:

குருஷ்சேவ் பதவி இழந்தபோது தனக்கு அடுத்து பதவிக்கு வந்தவரிடம் இரண்டு கடிதங்களைக்கொடுத்தாராம். 'உன் பதவி பறிபோகும் நிலை வரும்போது முதல் கடிதத்தைப் பிரித்துப் படி. அதன்படி நடந்துகொள். அப்படிச் செய்தும் சங்கடங்கள் தொடர்ந்தால் இரண்டாவது கடிதத்தைப் படி' என்று சொன்னாராம்.

சீக்கிரமே குருஷ்சேவை அடுத்து வந்தவருக்குப் பதவி நிலைப்பதில் சிக்கல் வந்தது. முதல் கடிதத்தைப் பிரித்துப் பார்க்க வேண்டியிருந்தது. அதில் 'எல்லாப் பழியையும் என் மேல் போடு' என்று எழுதியிருந்தது. அதைத் தொடர்ந்து 'குருஷ்சேவ் சரியாக ஆளவில்லை. அதனால்தான்

எல்லாப் பிரச்னைகளும்' என்று சொல்லிக் கொஞ்ச காலம் ஓட்டினார்.

அப்படியும் அவர் பதவிக்கு ஆபத்து வந்தது. இரண்டாவது கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். அதில் எழுதியிருந்தது இது -

'நீயும் இரண்டு கடிதங்கள் எழுதிவை.'

இந்தக் கதை எதையேனும் ஞாபகப்படுத்தினால் நான் பொறுப்பல்ல.

அறிவியலின் எட்டாவது கவலை... 'வைரஸ் கிருமிகள் அனைவரையும் அழித்துவிடுமா?'


வைரஸ் என்னும் நுண்கிருமி , பாக்டீரியாவைவிட சிறிது. அதற்கு உயிர் இருக்கிறதா என்பது உயிர் என்றால் என்ன என்பதைப் பொறுத்தது. பாக்டீரியா போல வைரஸ்க்குத் தன்னைத்தானே இரட்டிப்பாக்கிக்கொள்ளும் தன்மை கிடையாது. ஆனால், அதற்கு ஆர்.என்.ஏ, டி.என்.ஏ. உண்டு. சுற்றிலும் கொஞ்சம் ப்ரோட்டீன் வைத்திருக்கிறது. இந்தப் இல்ஸ் புரதங்களைப் பார்த்து மனிதசெல்கள் ஏமாந்து போகின்றன. என்னடா நம்மிடம் உள்ளது போலவே இருக்கிறதே... நம் ஆள்தான் என்று வைரஸ் கிருமியை உள்ளே அழைத்துக்கொள்கிறது. உள்ளே நுழைந்ததும் இந்தச் சதிகார வைரஸ்க்கு உயிர் வந்துவிடுகிறது. செல்லின் ஊட்டச் சக்திகளைப் பயன்படுத்தித் தன் இஷ்டத்துக்கு இரட்டிப்பாகி, செல்லை மெள்ள மெள்ள அழித்துத் தன் ராஜ்யத்தை நிறுவுகிறது.

வைரஸால் வரும் வியாதிகளுக்கு நிவாரண மருந்து எதும் கிடையாது. தடுப்பு ஊசி, தடுப்பு மருந்துதான் சாத்தியம். பாக்டீரியாவால் வரும் வியாதிகளுக்கு ஆன்டிபயாட்டிக்ஸ் கொடுத்தால் அந்த மருந்து கிருமியை மேலே வளரவிடாமல் தடுக்கிறது காரணம் - பாக்டீரியா என்பது தனியான அடையாளம் கொண்டது. வைரஸ் அப்படியல்ல. செல்லுக்கு உள்ளே நுழைந்து அட்டகாசம் செய்யும் அரக்கன். அதைக் கொல்ல செல்லையே கொல்ல வேண்டும். இதனால் நம்முடைய வைரஸ் தடுப்புசக்திகளை அதிகரிப்பதைத் தவிர, வேறு வழி இல்லை. இப்படித்தான் போலியோ, ஃப்ளூ போன்ற வியாதிகள் வைரஸால் வருபவை. அதற்குத் தடுப்பு மருந்து கண்டுபிடித்து விட்டார்கள். எய்ட்ஸ் - வைரஸால் வரும் மிகப் பயங்கர வியாதி. இதைத் தடுப்பதற்குத்தான் மருந்து கண்டுபிடிக்கக் கோடிக்கணக்கில் செலவழிக்கிறார்கள்.



'டிராஃபிக்' படக் காட்சிகள்..

வைரஸால் வரும் வியாதி மிக வேகமாகப் பரவக் கூடியது. காரணம் - வைரஸ் தன்னை மாற்றிக்கொள்ளும் வேகம் சாதாரண செல்லைவிட மிக அதிகம். ஒரு செல் இரட்டிப்பாகும் போது படியெடுப்பதில் நூறு கோடி முறைக்கு ஒரு தடவைதான் பிழை ஏற்படும். வைரஸ் கிருமியின் இரட்டிப்பில் அப்படியில்லை... மிக அதிகமாகப் பிழைகள். இரண்டாயிரத்துக்கு ஒரு முறை பிழைபட்டு புதிய வைரஸ் வந்துவிடும். இதனால் மனித இனம் புதுப்புது வைரஸ்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. உதாரணமாக, இன்ஃப்ளுயுவென்ஸாவுக்கான வைரஸ் வருடா வருடம் வேஷம் மாறுகிறது. புதுப்புது தடுப்பூசி தொடர்ந்து தேவையாக இருக்கிறது.



எய்ட்ஸ் எப்படி வந்தது என்பது பற்றி பல கருத்துக்கள் உள்ளன. ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குரங்கில் இருந்து வந்திருக்கலாம் என்று சொல்கிறார்கள். அது மனிதனுக்கு வந்தது எப்படியென்றால், எதாவது எய்ட்ஸ் குரங்கைக் கொன்று தோல் உரிக்கும் போது கத்திபட்டு ரத்தம் கலந்திருந்தால் போதும்... வைரஸ் மனிதனின் உள்ளே புகுந்திருக்கலாம் என்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் அதிகம் பயணம் இல்லாததால் ஒரு வியாதி உலகம் முழுக்கப் பரவுவதற்குச் சாத்தியங்கள் கம்மியாக இருந்தன.

சமீபத்தில் 1995-ல் எபோலா என்னும் வைரஸ், ஜெயரே (Zaire) என்னும் நாட்டின் முழு மக்கள் தொகையையும் பாதித்தது. எய்ட்ஸ் அதைவிட பயங்கரம். அது பரவுவது மனித இனத்தின் செக்ஸ், போதைப் பொருள்கள் சம்பந்தமான கலப்பால். இது உலகம் பூரா பொதுவானது. இந்தியராவில் காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி வரை எய்ட்ஸ் பரவியதற்கு முக்கிய காரணம், நம் நேஷனல் பர்மிட் லாரிகளும் வழியில் பாயா குஸ்காவுடன் கிடைக்கும் சந்தோஷங்களும் என்று சொல்கிறார்கள்.



எய்ட்ஸ் வைரஸ்க்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கவில்லையென்றால் உலகம் முழுவதையும் மனிதன் ஆக்கிரமிப்பதற்கு முன் எய்ட்ஸ் கிருமி ஆக்கிரமித்து மனித இனமே அழிந்து விடக்கூடிய அபாயம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நோபல் பரிசு பெற்ற ஜோஷுவா லெடர்பெர்க் சொன்னது -

"உலகத்தை ஆக்கிரமிப்பதில் நமக்கு ஒரே ஒரு போட்டி, வைரஸ்தான்."

மனித இனம் பிழைப்பது முன் நிச்சயித்ததல்ல.

அடுத்த முறை ஓட்டல்களில் தனியாக இருக்கும் போது வீட்டுக்கு போன் போட்டு பெண்டாட்டி பிள்ளைகளுடன் பேசிவிட்டு, ஒரு மெகா சீரியலைப் பத்து நிமிஷம் பார்த்து விடுங்கள். அத்தனை ஆசையும் அடங்கிப்போகும்.

# வெளியே பார்த்தால்...?



கலைஞரை அவர் இல்லத்தில் சமீபத்தில் சந்தித்தேன். உற்சாகமாகத் தான் இருக்கிறார். "பதவியில் இல்லாததால் காலை 'முரசொலி அலுவலகத்துக்குப் போய் எழுத அவகாசம் கிடைக்கிறது. மதியம் வீட்டுக்கு வந்து உணவுக்கும் ஓய்வுக்கும் பின், அறிவாலயத்துக்குச் சென்று கட்சிப் பணிகளை கவனிக்கிறேன்' என்றார்.

தொல்காப்பியத்தை எளிதாக, இனிமையாக விளக்கும் ஒரு நூல் எழுதப்போவதாகச் சொன்னார்.

கலைஞர் கடிதத்தில் எழுதிய கவிதையைக் காட்டினார். பொதுவாக அரசியல் தவிர்த்து, இலக்கியம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

'கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை

நீட்டி அளப்பதோர் கோல்'

என்னும் (நட்பாராய்தல்) அதிகாரக் குறளை நினைவுகூர்ந்தோம். அதற்கு அவர், குறளோவியத்தில் சொன்ன கரடிக் கதையை விவரித்தார். திருக்குறளின் முக்கியமான குறள்களை விளக்கும் ஒரு கையேடு வெளியிடலாம் என்றும் ஒரு 'ஸ்க்ரீன் ப்ளே' எழுதலாம் என்றும் சொன்னேன். தோல்விக்கான காரணங்களைத் தெளிவாக ஆராய்ந்து வைத்திருக்கிறார். தோல்வி என்பது நாணயத்தின் ஒருபக்கம் என்பதிலும் தெளிவாகவே இருக்கிறார்.

பெங்களூர், மைசூர், ஸ்ரீரங்கபட்ணா, பாண்டவபுரா, அங்கிருந்து சிக்கராயஹள்ளி. கே.ஆர்.எஸ். அணையின் அடிவாரத்தில் இருக்கும்

அழகான வாட்டர்கலர் சித்திர கிராமம். அங்கே 'பாண்டவர் பூமி' (எங்கள் 'மீடியா ட்ரீம்ஸ்'க்காக சேரன் எடுக்கும்) படப்பிடிப்புத் தளத்துக்குப் படப்பிடிப்புக் குழுவினரை உற்சாகப்படுத்த ஒரு நாள் சென்றிருந்தேன். கிருஷ்ணமூர்த்தி அங்கே ஒரு தமிழ்நாட்டுக் கிராமத்தை உண்டாக்கியிருந்தார்.

அண்மையில் மற்றொரு படப்பிடிப்பில் கர்நாடகத்தில் நேர்ந்த வன்முறைக்கு இந்தக் கிராமத்தின் பட்டேலர் வருத்தப்பட்டார். அவரிடம் நான் கன்னடம் பேசியதில் சந்தோஷப்பட்டார். கரும்பும் சென்னெல்லும் வளம் கொழிக்கும் கிராமம். அத்தனை பேரும் லிங்காயத்துகளாம். அத்தனை பேரும் சைவமாம். சுருள் ஓட்டு வீடுகளின் உள்ளே போனால், எல்லா வசதிகளும் உள்ளன. கர்நாடகம் மிக வேகமாக மாறியிருக்கிறது!

பெங்களூரில் முக்கியமான மாற்றங்கள்... கண்ணாடி முகப்பு கொண்ட கட்டடங்கள் ஊரெங்கும் முளைத்திருக்கின்றன. ரிச்மாண்ட் சர்க்கிள், சிடி மார்க்கெட் போன்ற இடங்களில் அமெரிக்க ரேஞ்சுக்குப் பெரிய மேம்பாலங்கள் கொண்டு வந்து போக்குவரத்தை எளிதாக்கியிருக்கிறார்கள். மைசூர் போகும் ரோடு தான் அங்கங்கே எலும்புகளைச் சோதிக்கிறது (மலேஷியாவின் திட்டம் என்ன ஆயிற்று..!).



மழை மறைவில் இருக்கும் சென்னையின் சுட்டெரிக்கும் வெயிலையும் குடிதண்ணீருக்கு ஏங்கும் 1,250 பிளாஸ்டிக் குடங்களையும் சதுர டாங்குகளை இழுத்துச் செல்லும் ஆதிமிருகங்கள் போன்ற டிராக்டர்களையும் கடந்து ப்ளேன் ஏறி பெங்களூர் வந்தால், குளிர்காற்றும் மழையும் வரவேற்கிறது. மலர்ச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள். இருபது நிமிஷத்தில் இத்தனை

வேறுபாடா? அநியாயம்!

மாண்டியா ஜில்லாவில் சாலை முழுவதும் தஞ்சை போல் ஈரநெல் கொட்டியிருக்கிறது. காவிரியின் பாசனக் கால்வாயில் பெண்கள் உற்சாகமாக துணி தோய்த்துக்கொண்டும் பாத்திரம் தேய்த்துக்கொண்டும் எருமைகளைக் குளிப்பாட்டிக் கொண்டும் ... ஹூம்! கடவுளின் பாரபட்சத்தைத் தாங்கிக்கொள்ள கஷ்டமாக இருக்கிறது.

சுறுசுறுப்பாக நடக்கும் படப் பிடிப்பை விரோதமின்றி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் சிக்கராயஹள்ளி மக்கள். கன்னட சினிமா, நான் 1993-ல் விட்டுச் சென்றபோது எப்படி இருந்ததோ, அப்படியே இருக்கிறது. உபேந்திரா '$H_2O$' என்ற தலைப்பில் எடுத்த படத்தில் பிரபுதேவாவுடன் சேர்ந்து பாடிய இருமொழிப் பாடல்தான் இப்போது ஹிட்! படங்களில் 'வானத்தைப் போல'யின் ரீமேக் சூப்பர் ஹிட்! அந்த மாதிரி கதை இன்னும் நாற்பது தாங்கும்.

சதாப்தி எக்ஸ்பிரஸில் திரும்பும்போது, விமானத்தில் வெளிநாட்டுப் பயணம் போல அவ்வப்போது தின்னக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். கூரை ஒலிபெருக்கி 'இதுதான் சென்னபட்னா. இதுதான் கெங்கேரி, இது பெங்களூர், ஜோலார்பேட், காட்டுப்பாடி...' என்று அந்தந்த ஊருக்கு அறிமுகம், சரித்திரம் மூன்று மொழிகளில் சொல்லி அமர்க்களம் பண்ணுகிறார்கள்.

ஒரே ஒரு குறை... அவர்கள் ஊர்களைப் பற்றிச் சொல்லும் சிறப்புகள் ஜன்னலுக்கு வெளியே பார்தால் தெரிவதில்லை. பெங்களூர் 'கார்டன் சிட்டி,' இந்தியாவின் தோட்ட நகரம், இந்தியாவிலேயே அழகான நகரம் என்றெல்லாம் சொல்லும்போது எட்டிப்பார்த்தால்... எதிர் ட்ராக்கில் குழந்தைகள் வெளிக்கிருந்து கொண்டிருக்க, தாழ்வான ஓட்டுக் குடிசைகளின் காய்ந்துபோன சைக்கிள் டயர்களையும் கழிவோடைகளையும் ஏக்கர்கணக்கான பிளாஸ்டிக் குப்பைகளையும் கடக்கிறோம்.

ரயில்வேக்கு ஒரு வேண்டுகோள்... இந்த டேப்பை உடனே நிறுத்திவிடவும். மற்றபடி, சதாப்தி ஓர் அற்புத ரயில்!

மாணவர்களின் எழுத்துக்களை அவ்வப்போது கவனிப்பது எனக்குப்

பிடித்த விஷயம். அவர்கள் கவலைகளையும் சந்தோஷங்களையும் திறமைகளையும் அறிய முடியும். கால்நடை மருத்துவக் கல்லூரியின் 'அந்திமழை' காலாண்டிதழ் ஒரு நல்ல உதாரணம். சில வருஷங்களாகத் தொடர்ந்து நடத்தப்பெறும் இந்த இதழின் பருவம் 12 மழை 1 (ஏப்ரல் 2001) இதழில் சில ரத்தினங்களும் பல கடிகளும் கிடைக்கின்றன.

மாணவர்களிடம் கடிஜோக்குகளையும் காதல் கவிதைகளையும் ஒரு ஆறு மாசத்துக்குத் தள்ளிப் போட்டுவிட்டு, சற்றே தீவிரமான இலக்கியம் படைக்க முயலுங்கள் என்று யாராவது சொல்லவேண்டும். காதலும் கடியும் இவர்களுக்கு மிக மிக எளிதாக வரும் கலை. அதாவது, காதல் என்று சொல்கிற சந்தேகத்துக்குரிய, ஹார்மோன் சார்ந்த வஸ்து.

மாணவர்கள் அமெரிக்க பல்கலைக்கழக மாணவர் இதழ்களை ஒரு முறையாவது பார்க்க வேண்டும். எந்தவிதமான கட்டாயமுமின்றி, தங்கள் சிந்தனைகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் கடைசி வாய்ப்பு மாணவர்களுக்குக் கல்லூரி இதழ்களில்தான் கிடைக்கிறது. அதில் வியாபாரப் பத்திரிகைகளைப் போல் எழுதாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'அந்திமழை'யில் சில கவிதைகளும் கட்டுரைகளும் நம்பிக்கையூட்டுகின்றன. ஏ.இலட்சுமணன் இறுதியாண்டு கவிதையில் பேருந்துக்காகக் காத்திருக்கையில், என்கிறார்.

'ஒரு கை கைக்குழந்தையை அணைக்க
இன்னொரு கை என்னை நோக்கி
நீட்டப்பட்டதும்
பையிலிருந்த இரண்டு ரூபாய் சில்லறைகளில்
கால்ருபாய் மட்டும் இடம் மாறுவது
அனிச்சையல்ல...
கருணையைச் சாருமோ..?

இதற்கு இதழாசிரியரின் பின்குறிப்பு: 'மீதி ஒண்ணே முக்கால் ரூபாய் பஸ் டிக்கெட்டுக்கா..?'

இரண்டாம் ஆண்டு பெ. கனகராசு, என்கிறார்.

'கிணற்று நீரில் முகம் பார்த்து
தலைவார

வரப்பில் ஓடி வழுக்கி விழ
'ஏய்யா கண்ணு துரும்பா
இளைச்சுட்டே..?'
விசாரிப்புக்கேனும்
சொந்த ஊருக்குச் சென்று
வரவேண்டும்...'

நான்காம் ஆண்டு ஆர்.ஆர். தயாநிதியின் 'நாலுபேர் நாலுவிதம்' என்ற கட்டுரையில் கொஞ்சம் பாசாங்கான முன்னுரையை மறந்துவிட்டால் கோயில் வாசலில் பிச்சை எடுக்கும் வரலட்சுமி, சி.எம்.எஸ். சிறுவர் இல்லத்தில் இரு சிறுவர்கள், சரவணா ஸ்டோர்ஸ் முதலாளி, காசிமேட்டில் லாடம் கட்டும் வீராசாமி இவர்களைச் சின்னதாக, அற்புதமாகப் பேட்டி எடுத்திருக்கிறார். தயாநிதிக்கு எழுத்தில் நல்ல எதிர்காலம் உள்ளது.

சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த ஆனந்த பாபு, மகேந்திரன் பேட்டி இது:

"எங்க ஊரு அரக்கோணம் பக்கத்துல இருக்கிற பொய்கை நல்லூரு. இவன் என் தம்பி. நாங்க ரெண்டு பேருமே ஏழாங்கிளாஸ்தான் படிக்கிறோம். எங்கப்பாவை நாங்க பார்த்ததில்லை. எப்பவோ கல்யாணத்துக்குப் போறதுக்காக அவசர அவசரமா துணி தோச்சிச்சாம்.. அப்ப கால்ல ஒயரு மாட்டி செத்துப்போச்சுன்னு எங்கம்மா தான் சொல்லிச்சு.



நாங்க நாலாங்கிளாஸ் வரவரைக்கும் எங்கம்மாதான் கூலிவேலைக்குப் போயி எங்களைப் படிக்க வெச்சிச்சு... அந்தச் சாமிக்குக் கண்ணே இல்லை... அப்புறம் எங்கம்மாவுக்கும் கையி, காலு வௌங்காம நடக்கக்கூட முடியாம ரெண்டு வருஷம் அப்படியே

படுத்துக் கிடந்தது. எங்க அம்மாத்தாதான் அப்ப சோறு போட்டுச்சு.

ஒரு நாளு படுக்கையிலயே எங்கம்மா செத்துப் போய்க் கிடந்துச்சு, நாங்கெல்லாம் அழுதோம். அதுலிருந்து எங்கம்மாத்தா அரப்பு ஆட்டறது, நாத்து நடறதுன்னு வேலைக்குப்போய் ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் சம்பாதிக்கும். இப்படி ஒரு வருஷம நாங்க ஊர்லயே படிச்சோம். அப்புறம் எங்கத்தை ஒண்ணு மணலியில இருக்குது. அதுதான் எங்களை இந்தச் சிறுவர் இல்லத்தில சேர்த்து விட்டுச்சு.

மாசத்துல ஒரு நாளைக்கு வந்து எங்களைப் பார்த்துட்டுப் போவும். அரையாண்டு பரிச்ச லீவில எங்கத்தை வீட்டுக்குப் போவோம். முழுப் பரிச்ச லீவில எங்கூருக்குப் போயி, அம்மாத்தா கூட இருப்போம். நாங்க ரெண்டு பேரும் இன்ஜினீயர் ஆயி, எங்கம்மாத்தாவைப் பாத்துக்குவோம். அதை வேலைக்கு அனுப்பாம, சந்தோஷமா வெச்சிக்குவோம்..."


# மருத்துவக் பூட்டு சாவிகள்!



ஒரு சினிமா -நான்கு புத்தகங்கள்-அறிவியலின் ஒன்பதாவது கவலை - இதுதான் இந்த வாரமெனு.

சினிமா

அண்மையில் நான் மிகவும் ரசித்த படம் அமீர்கானின் 'லகான்.' மூணேமுக்கால் மணிநேரப் படம். மிகத்தெளிவாக எழுதப்பட்ட திரைக் கதையும் ஒளிப்பதிவும் ஒலிப்பதிவும் ஏ.ஆர்.ரஹ்மானின் மற்றொரு மைல்கல் சங்கீதமும் திறமையான டைரக்ஷனும் (அஸுடோஷ் கோவாரிகர்) இயல்பான நடிப்பும் படப்பிடிப்பும் இந்த வருஷம் இந்தி சினிமாவுக்குப் புத்துயிர் அளிக்கும். இந்தப் படத்தில் ஒரு 'ஒன்டே கிரிக்கெட் மாட்ச்'சின் பரபரப்பு இருக்கிறது. இதில் கிரிக்கெட் ஒரு 'அலிகொரி' - ஒரு குறியீடு தான். வெள்ளைக்காரனை அவன் ஆட்டத்திலேயே தோற்கடிக்கும் கிராமம். அதன் பின்னணியில் ஒரு சமஸ்தானம். முதுகெலும்பில்லாத ராஜாக்கள், வெள்ளை அதிகாரிகள். இந்த ஆண்டு லகான், கதர் (Gada) ஒரு காதல் கதை, 'முஜே குச் கெஹ்னா ஹை' (எனக்கு கொஞ்சம் சொல்ல வேண்டும்) மூன்று படங்களும் அதல பாதாளத்துக்குச் சரிந்துகொண்டிருந்த இந்தி சினிமாவை நிறுத்தி நிமிர்த்தியுள்ளன. பாலிவுட் குதிக்கிறது. ஆறு பாட்டு, மூணு க்ரூப் டான்ஸ், மூணு ஃபைட் தமிழ்ப் படங்களைப் பார்க்கும் போது வெட்கப்படும்படியாகச் செய்துவிட்டார் அமீர்கான்.



புத்தகம்

அண்மையில் நான் படித்த நான்கு புத்தகங்களை உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். நாலும் தமிழ்ப் புத்தகங்கள். முதலில் பெ.சு. மணி எழுதியுள்ள 'பக்தி இயக்கங்கள் வழியே சமூக சீர்திருத்தம் ஓர் அறிமுகம்' என்னும் நீண்ட தலைப்புள்ள நூல் (பூங்கொடி பதிப்பகம் சித்திரைக்குளம் மேற்கு தெரு, சென்னை-4).

தமிழகத்தில் மட்டுமின்றி இந்திய நாட்டின் பல மாநிலங்களில் பக்தி இயக்கங்களில் சாதி வித்தியாசங்களைச் சாடிய பாடல்களும் வாசகங்களும் எப்பவுமே இருந்திருக்கின்றன. மிகமிகத் தெளிவான தர்க்க நியாயங்களுடன் சாதியை நம் எல்லா மதங்களும் இயக்கங்களும் சாடியிருக்கின்றன என்பதை நிறையப் படித்து இலக்கிய அத்தாட்சிகளுடன் தந்திருக்கிறார் மணி. தமிழில் புறம், திருக்குறள், மணிமேகலை, திருமூலர், சினிமா - நான்கு புத்தகங்கள் - அறிவியலின் ஒன்பதாவது கவலை - இதுதான் இந்த வார ஆழ்வார்கள் சைவ-வைணவ பக்தி இயக்கங்கள், சித்தர் பாடல்கள், கபிலர் அகவல், பாரதி என்று பல மேற்கோள்கள் காட்டியுள்ளார்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்', 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' போன்ற தற்போது மேடைகளில் அடிக்கடி முழங்கப்படும் வரிகளை யாத்தவர் திருமூலர் என்பது எனக்கு லேசான ஆச்சரியம் தந்தது. இதைவிட 'தமிழ்ச்சொல்,

வடசொல் எனும் இவ்விரண்டும் உணர்த்தும் அவனை உணரலுமாமே' என்று எந்த பாஷையிலும் இறைவனை வணங்கலாம் என்று அப்போதே சொல்லி இருக்கிறார். கேரளாவில் நாராயண குரு, கர்நாடகத்தில் வீர சைவ இயக்கம், கபீர், சைதன்யர், பிரம்ம சமாஜம்... இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் சாதி கூடாது என்று வலியுறுத்திய இயக்கங்கள் இருந்திருக்கின்றன. இதனால் சாதி ஒழிந்ததா என்றால், இல்லை என்பது ஞாயிற்றுக்கிழமை 'ஹிந்து மேட்ரிமோனியலை' பார்த்தாலே தெரியும்.

அடுத்து இரண்டு சிறுகதைத் தொகுப்புகள். தமிழில் தற்போது சிறுகதைகள் எழுதிவரும் இளைஞர்களில் கவனிக்க வேண்டிய இருவர் நாகூர் ரூமியும் க.சீ (கன்னிவாடி சீரங்கராயன்) சிவகுமாரும். முன்னவரின் 'குட்டியாப்பா,' பின்னவரின் 'கன்னிவாடி' சிறுகதைத் தொகுதிகளைப் படித்து மகிழ்ந்தேன். நாகூர்ரூமி அலுப்புத் தராமல் நுணுக்கமாக, லேசாகப் புன்னகைக்கும் விவரங்கள் தரும் சிறுகதை எழுத்தாளர். தஞ்சாவூரிலிருந்து பஸ் பயணம் செய்தால் கட்டணக் கழிப்பறையில் வரைந்துள்ள ஆண்-பெண் படங்களிலிருந்து சகபயணிகளின் லேசான முகமாற்றங்கள் வரை நுட்பமாகக் கவனித்து அவ்வப்போது (தேவையில்லாமல்) ஆங்கில வார்த்தை கலந்து முஸ்லிம் வார்த்தைகள் விரவிய நடைச் சித்திரங்கள் போலக் கதைகளை எழுதியுள்ளார். இவருடைய 'குட்டியாப்பா' அண்மையில் தமிழில் எழுதப்பட்ட சிறந்த குறுநாவல்களில் ஒன்று.

தமிழினி (342 - டி.டி.கே. சாலை, சென்னை-14) வெளியீடாக அச்சு நேர்த்தியுடன் வந்திருக்கும் 'கன்னிவாடி' என்கிற சிறுகதைத் தொகுப்பில் சிவகுமாரின் உரைநடையின் நளினத்தையும் கதை சொல்லும் திறமையையும் கவனிக்க முடிகிறது. விடுகதைகளும் புகையிலை நாற்றுகளும் இயற்கைக்கு அருகே கிடைக்கும் சந்தோஷங்களும் மெலிதான ஏழ்மையும் சூழ்ந்த கிராமப்புற உலகத்தை விவரிக்கும் 'நாற்று' போன்ற சில கதைகள் பிரமிப்பூட்டுகின்றன.

நான்காவதாக 'கிருஷ்ணன் நம்பி படைப்புலகம்' என்னும் கட்டுரைத் தொகுப்பு (தமிழாலயம், சாமித்தோப்பு 629704) புத்தகத்தை நம்பி அவர்களின் தம்பி பே. வெங்கடாசலம் அனுப்பி வைத்திருந்தார். கிருஷ்ணன் நம்பி இளம் வயதில் (1932-1976) இறந்துபோய்விட்ட சிறந்த சிறுகதை எழுத்தாளர். அவருடைய 'மருமகள் வாக்கு' பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த கதைகளில் ஒன்று. இவரைப் பற்றிய சில

சுவாரஸ்யமான தகவல்கள் கிடைக்கின்றன. சுந்தரராமசாமி, கி.ராஜநாராயணன் போன்றவர்கள் எழுதிய கட்டுரைகளும் நம்பியின் கவிதைகளும் உள்ள முக்கியமான தொகுப்புப் புத்தகம் இது. கிருஷ்ணன் நம்பியின் குழந்தைப் பாடல்கள் பல எனக்குப் பிடிக்கும். தமிழில் மிகச் சிறந்த குழந்தைப் பாடல் என்று நம்பியின் இந்தப் பாடலைச் சொல்வேன்.

'காற்று மாமா காற்று மாமா கருணை செய்குவீர்
ஏற்றிவந்த ஜோதி என்னை ஏன் அணைக்கிறீர்
சின்னஞ்சிறு குடிசை இது சிறிது நேரம் நான்
பொன்னிறத்துச் சுடரினாலே பொலியச் செய்குவேன்
ஏழைச்சிறுவன் என்னை நம்பிப் பாடம் படிக்கிறான்
ஏழும் மூணும் பத்து என்று எழுத்துக் கூட்டுறான்
காய்ச்சும் கஞ்சி குடிக்க வெளிச்சம் காட்ட வேண்டாமோ
ஆச்சு இதோ ஆச்சு என்னை அணைத்துவிடாதே'

சிறந்த குழந்தை இலக்கியங்கள், பெரியவர்களுக்கும் வேறு அர்த்தம் தொனிக்குமாறு இருக்கின்றன.

## அறிவியல்

அறிவியலின் ஒன்பதாவது ஆராய்ச்சி 'டிஸைனர் ட்ரக்ஸ்' (designer drugs) என்னும் பிரத்தியேக மருந்துகளை வருங்காலத்தில் கொண்டு வருவதே. 'இதில் என்ன பிரச்னை... வியாதிக்கேற்பத்தானே மருந்து கொடுக்கிறார்கள்?' என்று நீங்கள் கேட்கலாம். கொடுக்கிறார்கள். ஆனால், மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் தற்செயலை நம்புகிறார்கள். பென்சிலின் கண்டுபிடிக்கப்பட்டதைப் பற்றி படித்திருக்கிறீர்கள். வேறு எதையோ ஆராயும்போது, தற்செயலாக பக்கத்தில் வைத்திருந்த ஒரு வகைக் காளான் அருகில் பாக்டீரியா எதும் இல்லை என்று கண்டுபிடித்து ஆன்டிபயாட்டிக்ஸ் யுகத்தை ஆரம்பித்தது அறிவியல். இது போலத்தான் பெரும்பாலான மருந்துகளைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். ஏறத்தாழ நம் பழைய கால சித்த மருத்துவர்கள் கண்டுபிடித்த serendipity முறையில்தான் செய்து வந்திருக்கிறார்கள். இந்த இலையைப் பிழிந்தால் தலைவலி போகிறதா பார். போகவில்லையா, இடுப்பு வலிக்கு தோதுப்படுமா பார். இல்லையா, மூலத்துக்கு தடவிப் பார். எரிகிறதா, மூக்கில் வைத்து ஜலதோஷம் குணமாகிறதா பார்! இப்போது கூட சில சர்வரோக நிவாரணிகள்

உள்ளன). எதுவும் இல்லையா, குப்பையில் போடு. இப்படித்தான் - குருட்டாம் போக்கான முறையில்தான் பல மருந்துகளைக் கண்டு பிடித்து வந்திருக்கிறார்கள். இதைத் தடவினால் குணமாகிறது, அதை விழுங்கினால் வலி போகிறது. ஆனால், எப்படி என்று சொல்ல முடியாத நிலை தான் பெரும்பாலும்.

மாலிக்யுலர் பயாலஜி என்னும் இயல் உன்னதப் படுத்தப்பட்டபின் கதை மாறியது. வியாதிகளின் கூட்டணு, மாலிக்யுலர் அமைப்பை ஆராய்ந்து அதைத் தடுப்பதற்கேற்ற கூட்டணு அமைப்புகளை முதலில் கம்ப்யூட்டர் மூலம் அமைத்து, அது அந்த வியாதியின் மாலிக்யுலுடன் பொருந்திக்கொண்டு ரத்து செய்கிறதா என்று பார்த்து, இந்த வகையில் ஆராய்ச்சி இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

எளிதாகச் சொல்லப் போனால், பூட்டப்பட்ட பூட்டு - வியாதி. அதைத் திறக்கக்கூடிய சாவி - மருந்து. முன்பெல்லாம் பூட்டில் ஒவ்வொரு சாவியாகப் போட்டுத் திறக் கிறதா என்று பார்த்தார்கள். அல்லது ஒரு சாவியை வைத்துக்கொண்டு ஏதாவது பூட்டு திறக்கிறதா எனத் தேடிக்கொண்டிருந்தார்கள். இப்போது பூட்டுக்கேற்ற சாவியை ராவிச் செய்கிறார்கள். இதுதான் டிஸைனர் டிரக்ஸ்.

ஜாடிக்கேற்ற மூடி, வியாதியின் நிவாரணத்தின் ஆதார தத்துவத்தை உணர்ந்து, புதுசாக அதற்குப் பொருந்தும் படியான மருந்தைக் கூட்டணு அமைப்பைச் சோதனைச் சாலையில் கம்ப்யூட்டர்களின் 'கேட்' (cad) மென்பொருள் மூலம் முதலில் வடிவமைத்துப் பார்த்து, இந்த அமைப்புக் கொண்ட செயற்கை ரசாயனப் பொருளை இந்த வியாதிக்கு உதவுமா என்று பரிசோதிக்கலாமே! இந்த வகையில்தான் ஆராய்ச்சிகள் துவங்கியுள்ளன.

கம்ப்யூட்டரில் வடிவமைத்து, கம்ப்யூட்டரிலேயே பொருத்தம் பார்த்து, தயாரிக்க உகந்ததா என்று பரிசீலித்து... எல்லாமே கம்ப்யூட்டரில் செய்ய முடிகிறது. மருந்தினால் பக்க விளைவு ஏற்படுகிறதா என்பதை மட்டும் நோயாளிகளிடம் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். அதை கம்ப்யூட்டர் சொல்லாது. இருந்தும் இந்த முறையில் 'ரிஸ்க்' குறைவு. தற்போது பெரும்பாலான வியாதிகளுக்கு மருந்துகளை இயற்கைதான் நமக்கு அளிக்கிறது. முக்கியமான மூலிகைகளும் மருந்துகளும் மரப்பட்டைகளும் நாசமாகிவிடும் என்கிற காரணத்தால்தான் நம் காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்கிற ஓர் வலுவான கருத்து இருக்கிறது. இந்த மருந்துகளைச் செயற்கையாகத் தயாரிக்க முடிந்தால்

காடுகளின் அவசியம் சற்றுக் குறைந்துவிடலாம். இதன் பக்கவிளைவு என்னவோ?

# யாரோ சொன்னது!



அறிவியலின் பத்தாவது கவலையைச் சொல்லி முடித்துவிடலாம். பிரபஞ்சத்தில் எல்லா சக்திகளையும் துகள்களையும் விளக்கும் ஒரே சித்தாந்தம் இருக்கிறதா என்று கண்டுபிடிக்க முயல்கிறார்கள். Theory of everything என்கிறார்கள் கதை. பிரபஞ்சம் அமைப்பில் சிக்கலானது. காலக்ஸி நெபுலா கோடானு கோடி நட்சத்திரங்கள், கிரகங்கள், கரும்பள்ளங்கள் என்று மிக விஸ்தாரமானது என்றாலும் அதை ஆதாரமாகப் பார்க்கும் போது அது எளிமையாகத்தான் இருக்கவேண்டும் என்று கி.மு. கிரேக்கர்கள் காலத்திலிருந்தே நவீன டால்டன் வரை சிந்தித்திருக்கிறார்கள். பிரபஞ்சம் படிப்படியாக எளிமையாகிறது என்பதை அறிவியலாளர்கள் காண்கிறார்கள். உதாரணமாக, ஒரு பெரிய கட்டடத்தை ஆதாரமாகப் பார்த்தால் சில பொதுவான விஷயங்கள் இருக்கும் - ஜன்னல், கதவு, தரை என்று. இன்னும் ஆதாரமாகப் பார்த்தால் எல்லாமே இன்னும் எளிமைப்படும் - செங்கல், சிமெண்ட், மரச் சட்டம் என்று.

இவற்றை இன்னும் நுட்பமாகப் பார்த்தால் அணுக்களாலானவை என்பது தெரிகிறது. அணுக்களை நுட்பமாகப் பார்த்தால் எலக்ட்ரான் ப்ரோட்டான் தெரிகிறது. இவற்றைப் பிரித்துப் பார்த்தால் க்வார்க்குகள் என்னும் ஆதாரத் துகள்கள் தெரிகின்றன. இதேபோல், பிரபஞ்சத்தின் சக்திகளை ஆராய்ந்தாலும் அவை நான்கு ஆதார சக்திகளாக சுருங்குகின்றன. மின்காந்தம், புவிஈர்ப்பு, அணுவின் உட்கருவுக்கும் வெளி எலக்ட்ரான்களுக்கும் உள்ள ஆகர்ஷண மெலிய சக்தி, உட்கருவுக்கு உள்ளே ப்ரோட்டான், நியூட்ரான்களை ஒட்டவைக்கும் வலிய சக்தி. க்வார்க்குகள் பிரபஞ்சத்தின் செங்கற்கள் என்றால் இந்த நான்கு சக்திகளும் அவற்றைச் சேர்க்கும், ஒட்டவைக்கும் சிமெண்ட் போல. க்வார்க்குகளும் சக்திகளும் தமக்குள் பரஸ்பரம் இயங்கும்

விதத்தை ஒரே ஒரு சமன்பாட்டினால் விளக்க முடியுமா என்று யோசித்து வருகிறார்கள். இந்த சக்திகளை ஒருமைப்படுத்தும் தத்துவத்தை unified field theory என்று சொல்கிறார்கள். நான்கு சக்திகளில் இரண்டை - அதாவது, மெலிதான உட்கரு சக்தியும், மின்காந்த சக்தியும் துகள்களை அதிவேக மாகச் செலுத்தும்போது ஒன்றிணைகின்றன என்று கண்டுபிடித்துள்ளார்கள். இதோடு வலுவான உட்கரு சக்தியை இணைக்க முற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாகத்தான் புவி ஈர்ப்பு இவற்றுடன் சேரும் என்று தோன்றுகிறது.

யோசித்துப் பாருங்கள்... பிரபஞ்சத்தின் ரகசியத்தையே ஒரு சமன்பாடாக ஒரு தபால் கார்டுக்குள் எழுதிவிடக்கூடும்! இந்த முயற்சி தற்போது சற்றே பின் வாங்கியிருக்கிறது. காரணம் - அதை நிரூபிக்க மிகமிக சக்திவாய்ந்த பார்ட்டிக்கிள் ஆக்ஸிலரேட்டர் என்னும் கருவி வேண்டும். இப்போது சுவிஸ் நாட்டில் இருக்கும் மிகப் பெரிய ஆக்ஸிலரேட்டர் போதாது. அதைவிட பெரிசாக அமெரிக்காதான் கட்ட முடியும். அவர்களிடம்தான் பணம் இருக்கிறது. மனம் இல்லை. தற்போது இந்தச் செலவு வேண்டாம் என்று ஒத்திப் போட்டுள்ளார்கள்.

நம் வாழ்நாளில் இந்த ஒருமைப்பட்ட பிரபஞ்ச ரகசியம் வெளியாகுமா தெரியவில்லை. வெளிவந்தால்... பிரம்மம் என்று கீதையிலும் உபநிஷத்துகளிலும் சொல்கிறார்களே அதுவா... பார்க்கலாம்.

ஓர் எழுத்தாளரின் தாக்கம்அவருக்கு வரும் பாராட்டுக் கடிதங்களை விட திட்டிவரும் அனாமதேயக் கடிதங்களிலிருந்தே கண்டுகொள்ள முடியும் என எண்ணுகிறேன். நான் எழுத ஆரம்பித்ததிலிருந்தே மொட்டைக் கடிதங்கள் ஆசிரியர்களுக்கு வந்தன - நான் எழுதும் கதைகள் எல்லாம் காப்பி அடித்தது என்று குற்றம்சாட்டி. ஆசிரியர் எஸ்.ஏ.பி., பாலன், சாவி போன்றவர்கள் இந்தக் குற்றச்சாட்டுகளைச் சரிபார்க்க உடனே எந்தக் கதை என்று குறிப்பிட்டிருந்தால் அவற்றைத் தருவித்து படித்துவிடுவார்கள், படித்து திருப்தி கொள்வார்கள். ஒற்றுமை இல்லை என்றால் கடிதத்தை புறக்கணித்துவிடுவார்கள். ஒற்றுமை இருந்தால் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களுக்கு எழுதுவார்கள்.

இரண்டாம் வகைக் கடிதம் எனக்கு வந்ததில்லை. என் எழுத்தில் ஆங்கில நவீன நாவல், சிறுகதைகளின் குறிப்பாக சயின்ஸ்ஃபிக்ஷன் சாயல் இருப்பதால் அது நிச்சயம் ஒரிஜினலாக இருக்க முடியாது என்று முன்தீர்மானித்து சகட்டுமேனிக்கு எழுதப்படும் கடிதங்கள் அவை. பிரபலமாக இருப்பதன் எச்சரிக்கையும் இதுதான். என்ன எழுதினாலும், செய்தாலும் குற்றம் கண்டுபிடிக்க அல்லது கோபித்துக்கொள்ள காப்பி அடித்தது என்று சொல்ல யாராவது காத்திருப்பார்கள். இது எனக்குப் பழகிவிட்டது. மற்றொரு வகை திட்டி எழுதும் கடிதங்கள். ஒட்டுமொத்தமாக சேர்ந்துவிட்ட பொறாமையின் வடிவமாகத் தமிழில் உள்ள கெட்ட வார்த்தைகள் பல எனக்கு பரிச்சயமானது இந்த வசை மடல்கள் மூலம்தான்.



ஏதாவது ஒரு சாதியைப் பற்றி பிராமணனான நான் எதாவது எழுதிவிட்டால் அந்தச் சாதி சங்கங்களும் (பிராமண சங்கம் உட்பட) எனக்கு கண்டனக் கடிதங்கள் எழுதியதுண்டு. குமுதம் ஆசிரியராக இருந்தபோது என் பொறுப்பில் வந்த கதை, கட்டுரைகள் பற்றி நிறைய மொட்டைக் கடிதங்கள் வரும். குறிப்பாக சினிமா விமரிசனங்கள் காட்டமாக இருந்தால் 'நலம் விரும்பி', 'நலங்கிள்ளி', 'உண்மை விளம்பி', 'ஊர்க்குருவி' போன்ற பெயர்களில் ஒளிந்து கொண்டு திட்டுக் கடிதங்கள் வரும். அவற்றைப் பார்த்தவுடன் கிழித்துப் போட்டுவிடுவேன். மொட்டைக் கடிதங்களுக்கு அவ்வளவுதான் மரியாதை கொடுக்க வேண்டும். அது ஒரு கோழைத்தனம். அதைப் படிப்பதே அதற்கு ஒரு சலுகை. தற்போது சினிமாத் துறையில் மீடியா ட்ரீம்ஸ் போன்ற நிறுவனங்களில் பொறுப் பேற்று பணிபுரிவதில் அதனால் நிராகரிக்கப்பட்டவர்கள் எழுதும் அனாமதேயக் கடிதங்களும், பரப்பும் வதந்திகளும் லிஸ்ட்டில் சேர்ந்திருக்கின்றன. கடிதங்களின் தமிழ் நடையையும் வார்த்தைகளையும் உள்ளடக்கத்தையும் பார்த்து யார் எழுதியது என்பதைச் சுலபமாக கண்டுபிடிக்க முடிகிறது. ஆனால், அவை கையெழுத்திடப்படாததால் அவற்றைக் கிழித்து குப்பைத் தொட்டியில் போடுவதுதான் மதிப்பு.

பொறாமை என்பது ஒரு விதமான பாராட்டு என்பதை உணர்ந்ததால் இந்தக் கடிதங்கள் என்னைப் பாதிப்பதில்லை.

'யாரோ சொன்னது' என்று ஆங்கிலத்தில் பல அற்புதமான அனாமதேயப் பொன்மொழிகள் உண்டு. பல பொன்மொழிகள், கிராஃபிட்டி என்னும் சுவர் கிறுக்கல்கள்! சிரிப்பாக, சிறப்பாக இருக்கும்.



சில உதாரணங்கள்:

★ ஞானி பிறர் தப்புகளிலிருந்தும் பாடம் கற்றுக்கொள்கிறான். முட்டாள் தன் தப்புக்களிலிருந்தும் கற்றுக் கொள்வதில்லை.

★ தினம் ஒரு ஆப்பிள், டாக்டரே வேண்டாம். தினம் ஒரு வெங்காயம் யாருமே வேண்டாம்.

★ இருதாரம் என்பது ஒரு தாரம் அதிகப்படி. ஒரு தாரம் என்பது அஃதே.

★ கடன்காரர்களைவிட கடன் கொடுத்தவர்களுக்கு ஞாபகசக்தி அதிகம்.

★ கடவுளே, லாட்டரியில் ஒரு கோடி கிடைத்தால் கூட அலட்டிக்கொள்ள மாட்டேன் என்பதை நிரூபிக்க வை.

★ சுவாரஸ்யமில்லாததால் நாளை என்பது ரத்து செய்யப்பட்டது.

★ சினிமாவைப் பார்த்து புத்தகத்தை மதிப்பிடாதே.

★ எந்த வேலையையும் நாளைக்கு தள்ளிப் போடாதீர்கள். இன்றைக்கே யாரையாவது செய்யச்சொல்லி விடுங்கள்.

★ கடவுளே, அதாவது கடவுள் இருந்தால், என் ஆத்மாவைக் காப்பாற்று... ஆத்மா என்று ஒன்று இருந்தால்.

★ ஒல்லியான சமையல்காரர்களை நம்பாதே.

★ செல்லோ டேப்பில் இரண்டு வகை உண்டு. ஒன்று ஒட்டாதது.

மற்றது ஒட்டினால் பிய்க்க முடியாதது.

★ அறியாமைக்கும் அலட்சியத்துக்கும் வித்தியாசம் எனக்குத் தெரியாது. எனக்குக் கவலையுமில்லை.

★ பெண்களுக்குப் பல குறைகள். ஆண்களுக்கு இரண்டே குறைகள்தாம். அவர்கள் சொல்வது, செய்வது இரண்டுமே.

★ அரசியல்வாதி எப்போது பொய் சொல்கிறான்? அவன் உதடுகள் அசையும்போதெல்லாம்.

★ டாக்டர்: "உங்களுக்கு ஒன்றுமில்லை. எண்பது வயசு வரை வாழ்வீர்கள்."




"எனக்கு வயசு எண்பதுதான் டாக்டர்."

"சொன்னேன் பார்த்தீர்களா..!"


டெலிவிஷன் நடிகர் மோகன்ராம் இந்தியத் திரைப்படத்துறையின் முன்னோடிகளுக்கு தபால் தலைகளும் முதல் நாள் உறைகளும் வெளியிடுவதில் தென்னிந்திய ஃபிலாடலிஸ்ட் அசோஸியேஷனுக்கு உதவுகிறார். அவர் என்னைச் சந்தித்து சில முதல் நாள் கவர்களை அன்பளித்தார். சில சுவாரஸ்யமான விஷயங்கள் கிடைக்கின்றன. அண்ணா சாலை போஸ்ட் ஆபீஸில் இன்றும் இருக்கும் வார்விக் எலக்ட்ரிக்கல் தியேட்டர்தான் முதன்முதலாக திரைப்படம் காட்டிய நிரந்தர கட்டடமாம்.

முதல் தமிழ் சினிமாவை எடுத்தவர் திரு. நடராஜ முதலியார் (1885-1972). அவர் பம்மல் சம்பந்த முதலியாரைக் கேட்டு எடுத்த படம் 'கீசகவதம்'. அதில் செக்ஸ், சென்டிமெண்ட், ஆக்ஷன் எல்லாம் இருந்ததாம் 1916-ல், இன்றும் இதே ஃபார்முலாதானே..! கே. சுப்ரமணியம், எல்.வி. பிரசாத், என்.டி. ராம ராவ் போன்றவர்களுக்கு ஸ்டாம்பு, கவர் போட்டிருக்கிறார்கள். எஸ்.எஸ். வாசனை: விட்டு

விட்டார்கள். இந்த வருஷம் போடப் போகிறார்களாம்.



# கல்லடி!






விகடன் மாணவப் பத்திரிகையாளர் பயிற்சித் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மாணவ மணிகளுக்கு, Observation பற்றி எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். இந்த மாணவர் திட்டம், விகடன் நிறுவனம் பத்திரிகைத் துறைக்கு அளித்திருக்கும் முக்கியமான திட்டம்.

இதன் மூலம் உருவானவர்கள் பலர் இந்தத் துறையிலும் இதைத் தொடர்ந்த சினிமா போன்ற துறைகளிலும் சிறந்திருக்கிறார்கள்.

ஏறக்குறைய ஐந்நூறு பேருக்கு விகடன் இதுவரை பயிற்சியளித்திருப்பதாக பாலன் சொன்னார்.

கவனமும் கவனித்தலும் எழுத்துக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும், கவனித்தது எல்லாவற்றையுமே சொல்ல வேண்டியதில்லை... தேர்ந்தெடுத்து உண்மையை மறைக்காமல், சொந்த விருப்பு - வெறுப்புகள் கலக்காமல் சொல்வது முக்கியம் என்பதையும், அப்படிச் சொல்லும்போது, அதன் சமூக விமரிசனங்கள் மறைமுகமாக இருக்கவேண்டியதன் அவசியத்தையும் சொன்னேன்.

Faber Book of Reportage-லிருந்து ஓர் உதாரணம் சொல்கிறேன்.

Stoning to Death - Jeddah, February 1958... ஆர்.எம். மகால் (R.M.Macoll) என்பவர் லண்டன் டெய்லி எக்ஸ்பிரஸுக்கு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பு. இதன் மொழி பெயர்ப்பைப் படிப்பதற்கு முன் ஓர் எச்சரிக்கை. பலகீன மனசுக்காரர்கள் விலகவும்.

'அமெரிக்க கப்பல் கார்களின் முடிவில்லாத ஊர்வலம் மெள்ளப் புழுதி படர்ந்த தெருவில் ஊர்ந்தது. கடைகளின் கண்ணாடி ஜன்னல்களில் பளபளப்பான வியாபாரப் பொருள்கள் அடைத்திருந்தன. ஃப்ரிஜ், ஏ.சி. போன்ற அமெரிக்க சாதனங்கள், ஜெர்மன் காமிராக்கள், இத்தாலிய மின்சார சாதனங்கள்.

தெருமுனையில் ஒரு நவீன பலமாடி ஆபீஸ் கட்டடத்தை முடித்து, வண்ணம் பூசிக்கொண்டிருந்தார்கள். அங்கங்கே ஜெட்டா துறைமுக நகரின் பல இடங்களில் இவ்வகைக் கட்டடங்களை அவசரமாக முடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அந்தப் பெரிய மௌனமான கூட்டம் இவை எதையும் கவனிக்கவில்லை.

நாட்டின் அரசகுமாரர் - அரசரின் தங்கை மகன் இறுக்கமான முகத்துடன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் முன் ஒரு கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. லாரியிலிருந்து ஒருவனை காக்கி உடையணிந்த இரண்டு போலீஸ்காரர்கள் அழைத்து வந்தனர்.

அவனுக்கு வயது முப்பதுகூட இருக்காது. மிக அமைதியாக இருந்தான். அவன் கைகள் பின்னால் சங்கிலி இடப்பட்டிருந்தன. கணுக் கால்களைச் சங்கிலி தடுக்கியதால் தடுமாறி நடந்தான். கம்பளத்தின் விளிம்பில் அவன் மண்டியிட்டான். போலீஸ், அவனை அரசகுமாரரை

நேராகப் பார்க்கச் சொன்னார்கள்.

அவன் பக்கத்தில் ஓர் அதிகாரி காகிதச் சுருளைப் பிரித்துப் படித்தார். அவன் செய்த குற்றங்களையும் அதற்கான தண்டனையையும் படித்தார். மக்கள் மிக மௌனமாக இருந்தார்கள். போலீஸ்காரர்கள் விலக, தண்டனை தருபவன் பின்னாலிருந்து கையில் வாளுடன் தோன்றினான். மெள்ளப் பூம்பாதங்களால் அணுகினான்.

குற்றப்பத்திரிகை படித்து முடித்ததும் தண்டனைக்காரன் மண்டியிட்டிருந்தவனை முதுகில் விரலால் மெள்ளத் தொட்டான். அவன் சற்றே திடுக்கிட்டு நிமிர்ந்தான். அந்தக் கணத்தில் ஒரு லாகவமான, திறமையான வீச்சில் தண்டனைக்காரன் அவன் தலையைக் கொய்தான். பார்வையாளர்களிடமிருந்து நீண்ட பெருமூச்சு கேட்டது.

இப்போது ஒரு பெண் அழைத்து வரப்பட்டாள். அவளும் அவனும் சேர்ந்து, அவள் கணவனைக் கொன்றிருக்கிறார்களாம். அவள் மெல்லிய உடல்வாகுடன் இருந்தாள். அவளுக்கும் வயது முப்பதிருக்காது. அவள் மண்டியிட, அவளுடைய குற்றமும் வாசித்துக் காட்டப்பட்டது.

தண்டனைக்காரன் இப்போது தன் பலம் முழுவதையும் பயன்படுத்தி, அவள் தோளில் கழியால் நூறு முறை அடித்தான். இது முடிந்ததும் அந்தப் பெண் பக்கவாட்டில் சாய்ந்தாள். அதன்பின் ஒரு லாரி நிறைய கற்கள் கொண்டு வரப்பட, அது பின்வாங்க... கும்பலாகக் கொட்டப்பட்டது. அரசகுமாரர் சைகை செய்ததும் கூட்டத்தினர் கற்குவியலின்மேல் பாய்ந்து, அந்தப் பெண்ணைக் கல்லால் அடித்துக் கொல்லத் துவங்கினர்.

அவள் தன் கடைசி சங்கடத்தை எப்படிச் சமாளிக்கிறாள் என்பதை அறிய இயலவில்லை. பர்தா அணிந்திருந்தாள். அவள் வாயில் துணி அடைத்திருந்தது, அவள் கதறலை மழுப்பியிருக்கும்.

இந்தச் சம்பவம் ஒரு பாலைவனத்தின் நடுவே நடந்திருந்தால்கூட உலுக்கியிருக்கும். ஒரு நவீன நகரத்தின் பிஸினஸ் மையத்தில் நடப்பது குரூரமாக இருந்தது.

துல்லிய நீலவானத்தில் சூரியன் பிரகாசித்தது. எதிரே ஒரு அமெரிக்கக் குளிர்பான விளம்பரம் தன்னைக் குடி என்று வற்புறுத்தியது. விமான கம்பெனி விளம்பரம் ஒன்று 'மத்திய கிழக்கு நாடுகளுக்கு வாருங்கள்'

என்று கெஞ்சியது - 'அதன் அற்புதங்களையும் வண்ணங்களையும் பாரம்பரியத்தையும் அனுபவிக்க...'

கூட்டத்தில் இப்போது அமைதி குலைந்தது. ஆண்கள் கல்லெறியும் போது கோபத்துடன் திட்டிக் கொண்டே ஆரவாரித்தார்கள். அவர்கள் முகங்களை மூர்க்கத்தனம் மூடியிருந்தது.

அந்த ஆண்மகனின் தண்டனை - 1936-ல்தான் பிரெஞ்சுக்காரர்கள் மக்கள் மத்தியில், பொது இடத்தில் மரண தண்டனை தருவதை நிறுத்தினார்கள் என்பதை மறக்க வேண்டாம் - சிரச்சேதமாவது ஒரு கணத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், அந்தப் பெண்ணைக் கல்லடித்துக் கொன்றதைக் கூட்டத்தில் இருந்த ஒருசில ஐரோப்பியப் பார்வையாளர்கள் மறக்கவே மாட்டார்கள். டாக்டர் வந்து, அவ்வப்போது கல்லடியைத் தற்காலிகமாக நிறுத்தி நாடி பார்த்து, அவள் இறந்துவிட்டாளா என்று பரிசோதித்தார். இறந்துவிட்டாள் என்று சொல்ல ஒரு மணி நேரமாயிற்று.

இந்த இரட்டை தண்டனை நேற்றுதான் நடைபெற்றது.!

நேரடி வர்ணனை எப்படி இருக்கவேண்டும் என்பதற்குச் சரியான உதாரணம் இது.

சம்பவத்தில் அத்தனை தீவிரம் இருக்கும்போது, எளிமையான சின்னச் சின்ன வாக்கியங்களில் அதை எழுதுவது முக்கியமானது. கார்களையும் விளம்பரங்களையும் விவரிக்கும்போது, இதன் மறைமுகமான சமூகவியல் செய்திகளை வாசகர்களே உணரவைக்கும் திறமை தேர்ந்த நிருபர்களுக்குத்தான் வரும்.

# ஸ்கூட்டர் ஜோடிகள்!



நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை இரண்டு முறை கல்யாணங்களில் சந்தித்திருக்கிறேன். ஒரு முறை ஆடம்பரமான பெரிய கல்யாணத்தில், நாற்காலியில் ஒரு ஓரத்தில் மௌனமாக உட்கார்ந்திருந்தார். சந்தித்துப் பேசமுடிய வில்லை. மற்றதில் சுமார் ஒரு மணி நேரம் பேச முடிந்தது. நான் பார்த்து ரசித்த சிவாஜி படங்களை மனதில் வேகமாக வரவழைத்துக் கொண்டு பேச்சைத் தொடரத் தடுமாறினேன். எனக்குப் பிடித்த படம் 'அன்னையின் ஆணை' என்றபோது சற்று வினோதமாக என்னைப் பார்த்தார். இந்தப் படம் பல பேருக்கு நினைவிருக்காது. அதுபோல் 'அந்த நாள்' என்று பாட்டில்லாத ஒரு த்ரில்லர். சிவாஜி அவர்களுடன் பேசியபோது அவருக்குள் இருக்கும் மனிதரைக் கண்டுபிடிக்க எனக்கு அவகாசம் போதவில்லை. நடிப்பு என்பது அவருடன் ஒன்றிப்போனதால் அவர் நடிக்கிறாரா, யதார்த்தமாகப் பேசுகிறாரா என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது. அவர் இறந்ததும் ஆளாளுக்கு மாற்றி மாற்றி 'மனோகரா'வும், 'தில்லானா மோகனாம்பா'ளும், 'படிக்காத மேதை'யும், 'ராஜராஜ சோழ'னும் போட்டுக்கொண்டிருக்க, சிவாஜி 'சபாஷ் மீனா', 'ஊட்டி வரை உறவு' போன்ற படங்களில் செய்த தேர்ந்த காமெடி நடிப்பை நாம் புறந்தள்ளிவிட்டோமோ என்று தோன்றியது. அவருடைய கடைசி காலத்தில் 'தேவர்மகன்', 'முதல்மரியாதை' போன்ற படங்களில் அவருடைய இயல்பான நடிப்பைக் காண முடிந்தது. இருந்தும் அவரது மிகையான larger than life பாத்திரப் படைப்புகள்தான் பலருக்கு ஞாபகம் இருக்கிறது. சிவாஜியை மார்லன் ப்ராண்டோ, ரெக்ஸ் ஹாரிசன், அல்பசினோ, ராபர்ட் டிநீரோ போன்ற நடிகர்களுக்கு ஈடாகச் சொல்லலாம். அவருடைய இறுதி அஞ்சலி ஊர்வலத்தில் அழுதவர்கள் கண்ணீரில் உண்மை இருந்தது.

ஆப்சர்வேஷன் - கவனிப்பது பற்றி ஓர் இளைஞர் சந்தேகம் கேட்டிருந்தார். 'இதற்காக குறிப்புப் புத்தகம் வைத்துக்கொள்ள வேண்டுமா... ("இன்று காலை 10.30-க்கு சாமிக்கண்ணு வந்து பார்த்தார் - சட்டைப் பையில் இங்க் கறையுடன்") எதைக் கவனிக்க வேண்டும்... எதை விட வேண்டும்? என்றார்.

எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும். அதைஎழுதும்போது எதை விடுகிறீர்கள் என்பது உங்கள் மன விருப்பங்களையும் திறமையையும் பொறுத்து தீர்மானிக்கப்படும். சென்ற வாரம் அந்த கல்லடி சம்பவத்தில் நிருபர் எதை விட்டார்... எதை, எதற்காக தேர்ந்தெடுத்தார் என்பதில்தான் அவருடைய தனித்தன்மை இருந்தது. இன்னும் சில உதாரணங்கள் சொல்கிறேன். வாரத்தில் நான்கு நாட்கள் மாலை மெரீனாவில் வாக்கிங் போகிறேன். பலர் என்னைப் பார்த்து புன்னகைக்கிறார்கள். சிலர் பேசுகிறார்கள். மிகச் சிலர் வெற்றிலை சைஸுக்கு ஒரு குட்டி நோட்டில் கையெழுத்து கேட்கிறார்கள். தினம் தினம் பல மனிதர்களை, காட்சிகளைச் சந்தித்தாலும் நான் எழுதுவதற்காக இவற்றைத்தான் தேர்ந்தெடுப்பேன் -


★ எடைபார்க்கும் மெஷினை வைத்துக்கொண்டு சோடியம் நிழலில் வீற்றிருக்கும் சலீம்.

"அய்யா, நீங்க யாரு? என்னவோ சொல்றாங்க - 'போறார் பாருய்யா பெரிய எளுத்தாளர்'னு. என்ன எளுதறிங்க?

தாம்பரத்திலருந்து வரனுங்க. நான் ஒரிஜினலா மெக்கானிக்குங்க. நாத்திக்கிளமைங்கள்ல வியாபாரம் நல்லாருக்குங்க. நூறு, நூத்தம்பதுகூட சம்பாதிப்பேன். இன்னிக்கு நீங்க கொடுத்த ஒரு ரூபாதான் போணி. எழுபத்து ஒரு கிலோ இருக்கீங்க. கொரியா மெசினுங்க... ஒஸ்திங்க. என்னத்தை சொல்றதுங்க... போட்டி அதிகமாயிருச்சு எட்டணாக்கெல்லாம் எடைபாக்க வந்துட்டானுங்க."

★ "அயனாவரத்திலிருந்து வரேனுங்க. எனக்கு தொழில் தையல்ங்க. ஃபாக்டரிங்களுக்கு ஓரம் அடிப்பேன். கண்ல கொசு விளுந்து பார்வை மங்கிருச்சு. கண்ணாடி போட்டா கலங்குது... வலிக்குது. ஆபரேஷன் பண்ண முடியாதுன்னுட்டாங்க. அதிகம் தெக்க முடியலை, அதான் இங்க வந்து உக்காந்துட்டேங்க. நீங்க என்ன எளுதிருக்கீங்க. உங்க புக்கு ஒண்ணு தருவீங்களா."

★ "நான் சேலங்க. காண்ட்ராக்ட் சூப்பர்வைசரா சௌதில போய் நிறைய சம்பாதிச்சு, அப்பாவுக்கு அனுப்பிச்சு பத்திரமா வெச்சுக்க சொன்னேன். அவரு எல்லாத்தையும் தொலைச்சுட்டு ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. திரும்ப வந்து ஆட்டோ ஓட்டறேங்க. கைகட்டி சேவகம் பண்ணத் தேவையில்லாத வேலைங்க. உங்க கணேஷ் - வசந்த், இப்ப விகடன்ல எளுதறது எல்லாமே படிப்பேன். கல்யாணமா? கல்யாணம் பண்ணிக்கத்தான் இருபது பவுன் தங்கம் சேகரிச்சு கொண்டாந்திருந்தேங்க. அதையும் அப்பா ஒழிச்சுட்டாருங்க, கொஞ்சம் பணம் சம்பாதிச்சு, அப்புறம்தான் கல்யாணம்."



கடற்கரைக்கு ஸ்கூட்டரில் வரும் இளம் ஜோடிகளை அவர்களைப் பார்த்தாலே வகைப்படுத்த முடிகிறது. ஸ்கூட்டரை பெண் ஓட்ட... ஆண் பின்னால் உட்கார்ந்து அவளுக்கு ஓட்டப் பழக்கிக் கொண்டிருக்கிறான் (அவர்கள் காதலிக்கப் போகிறார்கள்). ஆண் முன்னால், பெண் பின்னால் அவன் கழுத்தில் மாலை போல் கைகளைப் போட்டுக் கொண்டு பசை போட்டது போலச் செல்கிறாள் (காதல் துவங்கி உச்ச கட்டத்தில் இருக்கிறது). ஆண் முன்னால் உட்கார்ந்துகொண்டு பெண் பின்னால் அவன் இடுப்பின் அருகிலோ தொடையிலோ தொட்டுக் கொண்டு செல்கிறாள் (கல்யாணம் ஆகி அதன் முதல் உற்சாகத்தில் இருக்கிறார்கள்). ஆண் முன்னால் பெண் பின்னால் அவன் தோளைத் தொட்டுக் கொண்டு செல்கிறாள் (கல்யாணம் ஆகி ஒரு வருடம் ஆகிவிட்டது). ஆண் முன்னால் பெண் பின்னால் ஒரு கை தோளில்... மடியில் அபத்திரமாக கைக்குழந்தை (கல்யாணம் ஆகி ஒன்றரை வருஷம்) குழந்தை இருவருக்கும் நடுவில் சாண்ட்விச் போல (மூன்று வருஷம்). ஸ்கூட்டர் நின்று போயிருக்க இருவரும் வேறு வேறு திசையைப் பார்த்து நின்று கொண்டிருக்கிறார்கள் (ஐந்து வருஷம்). பெண் நின்றுபோன ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்ய உதைத்துக் கொண்டிருக்கிறாள் (ஆறு வருஷம்). ஸ்கூட்டர் மட்டும் தனியாக ஒரு ஒயின் ஷாப்பில் நிறுத்தி இருக்கிறது (பத்து வருஷம்). ஆப்சர்வேஷன் என்பது மேலே குறிப்பிட்ட காட்சிகளை மட்டும் பார்ப்பது... பிராக்கெட்டில் உள்ளதை வாசகர்களுக்கு விட்டுவிடுவது.

உ. வே. சாமிநாத ஐயரின் 'திருசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்களின் சரித்திரம்' என்னும் புத்தகத்தை எனது சிட்டி பாங்க் நண்பர் டி.ஆர். ரமேஷ் படிக்கக் கொடுத்தார். உ.வே.சா-வின் குருவும் திறமையுள்ள தமிழ் வித்துவானும் புலவரும் 'தியாகராச லீலை' போன்ற நூற்றுக்கணக்கான நூல்களும் பிரபந்தங்களும் விளக்க உரைகளும் எழுதிய மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் உண்மையிலேயே ஒரு மகாவித்வான் என்பது தெரிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் (1815-1876) வாழ்ந்த ஒரு 'ஜயண்ட்'. அவருடைய விஸ்தாரமான சரித்திரத்தை எளிய தமிழில் உ.வே.சா. அவர்கள் பலவிதமான குறிப்புகளுடன் இரண்டு பாகமாக 1938-ல் எழுதியிருக்கிறார். தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகம் 1986-ல் சிறப்பாக மறு பதிப்பித்திருக்கும் இந்தப் (விலை ரூ. 120) அந்தக் கால புத்தகத்தில் கட்டத்தில் அறிவு என்பது தமிழறிவைச் சார்ந்தே இருந்தது என்பது தெரிகிறது. பிள்ளையவர்கள் தன் பதினைந்தாம் வயதில் தந்தையை விரோதி வருடத்தில் இழந்தபோது பாடிய வெண்பா இது:

முந்தை அறிஞர் மொழி நூல் பல நவிற்றும்
தந்தை எனைப் பிரியத்தான்செய்த - நிந்தைமிகும்
ஆண்டே விரோதி எனும் அப்பெயர் நிற்கேதகுமால்
ஈண்டேது செய்யாய் இனி

(எனக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்த தந்தையைப் பிரியச் செய்த விரோதி ஆண்டே... உனக்கு இந்தப் பெயர் பொருத்தமே. மேலும் என்னவெல்லாம் செய்யமாட்டாய் நீ).

உ.வே.சா-வின் எளிய உரைநடைக்கு ஒரு உதாரணம்:

"பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் ஊர்கள் தோறும் பள்ளிக்கூடங்கள் இருந்தன. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் என்னும் பெயரால் அவை வழங்கப்படும். அங்கே தமிழ் நூல்களைப் படித்து இன்புறுதற்குரிய அறிவு பெறுதற்கு கருவிகளாகிய நிகண்டு, நீதி நூல்கள், பிரபந்தங்கள் முதலிய கற்பிக்கப்பட்டன. கணிதத்திற்கு அடிப்படையான எண்சுவடி முதலியவற்றையும் கற்பித்தனர். அவற்றின் உதவியால் மிகச் சிறிய பின்னங்களையும் அமைத்துக் கணக்கிடும் ஆற்றல் மாணாக் கர்களுக்கு உண்டாகும். குடும்பத்துக்கு வேண்டிய வைத்திய முறைகளும் நாள் பார்த்தல், சாதகம் பார்த்தல் முதலிய சோதிட நூல் வழிகளும், ஆலய வழிபாட்டு முறை குலாசாரங்கள் முதலியனவும்

ஞாபக சக்தியை வளர்ப்பதற்குரிய பயிற்சிகளும் கற்பிக்கப்பட்டன. உபாத்தியாயர் கள் மாணவர்களுள் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனித்து தக்க உணர்ச்சி அடையும்படி செய்தார்கள். வாழ்க்கைக்கு இன்றியமையாத பல விஷயங்கள் அத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டன."

இதைப் படிக்கும்போது நாம் மெக்காலே முறையால் பல நல்ல விஷயங்களை இழந்துவிட்டோமோ என சந்தேகம் வருகிறது.

திருச்சி மலைக் கோட்டையின் தெற்கு வீதியில் மகாவித்வான் குடும்பத்துக்குச் சொந்தமாக இருந்த வீடு இவர் குடும்பத்தில் உண்டான பொருள் 'முட்டுப்பாட்டினால்' பிற்காலத்தில் அவருடைய குமாரராகிய சிதம்பரம் பிள்ளையால் விற்கப்பட்டுப் போயிற்று. 'திரிபுரவாசிகள் பலர் அந்த இடத்தை மீட்டும் பெற்று அவர் பெயராலே ஒரு ஸ்தாபனம் அமைக்க வேண்டுமென எண்ணியிருந்தார்கள்' என்கிறார் ஐயர். திருச்சிக்காரர்கள் அந்த வீடு எங்கு, என்ன நிலையில் இருக்கிறது என்று சொல்லலாம்.


# நவீன வியாதிகள்!



"**உ**ம் உள்ளங்காலில் ஒரு மையைத் தடவுகிறேன். அடுத்த கணமே நீங்கள் இமயமலையில் இருப்பீர்."

இந்த வாக்கியத்தின் இலக்கணப் பிழை என்ன? விடை கடைசியில்...

**ப**த்து நிமிஷம் பான் மசாலா விளம்பரங்கள், ஐந்து நிமிஷம் படம் என்ற துன்புறுத்தலின் நடுவில் சேகர் கபூரின் 'பாண்டிட் குயின்' படத்தைப் பார்த்து ரசித்தேன். (சி.சி.சி. சேனல்) விளம்பரங்களுக்கு நேர, தரக் கட்டுப்பாடு வேண்டும். கிரிக்கெட் மேட்சில் அவுட் ஆனால் எப்படி அவுட் ஆனான் என்று காட்டுவதற்கு முன்பே ஆரம்பித்து , அடுத்த ஓவர் மூன்றாவது பந்து போடும் வரை விளம்பரிக்கிறார்கள் நல்ல சினிமா என்றால் கேட்கவேண்டாம். 'கோன் பனேகா க்ரோர் பதி'யில் 'சோட்டா ஸா ப்ரேக்' என்று அமிதாப் பத்து நிமிஷம் காணாமற் போய்விடுகிறார். நல்ல ஷாம்பு தலை அலை பாய்கிறது என்று ஒருமுறை சொல்லி விட்டார்களே எதற்கு திருப்பித் திருப்பி அதையே போட்டு நைய அடிக்கிறார்கள்! வெறுத்துப் போய் அந்த ஷாம்புவையோ பற்பசையையோ குளிர்பானத்தையோ வாங்காமல் போய்விடும் சாத்தியம் இருக்கிறது என்பது ஏன் விளம்பரக் காரர்களுக்குத் தெரிவதில்லை? அதும் அந்த கஷ்கத்தைச் சொறியும் விளம்பரம்... தத்!



'பாண்டிட் குயின்' சில வருடங்கள் கழித்து பூலன்தேவி இறந்து போன இன்றைய சூழ்நிலையில் பார்க்கும்போது, அவள் கொள்ளைக்காரியாக மாறி தன்னை வரிசையாகக் கற்பழித்து பொது இடத்தில் நிர்வாணமாக்கிய தாக்கூர்களை கொன்றதில் ஆச்சரியமே இல்லை என்பது தெரிகிறது. உத்தரப் பிரதேச பள்ளத்தாக்குப் பகுதியில் நடந்த துப்பாக்கி தாக்கூர் சாம்ராஜ்யமும் கொடுமையான உயர்சாதி, தாழ்ந்த சாதி உணர்வுகளும் மிக மிக யதார்த்த மாகச் சித்திரிக்கப்பட்ட இந்தப் படத்தில் ஒரு காட்சி மறக்க முடியாதது. பூலன் தேவி ஒரு கிராமத்தில் கொள்ளையடித்துவிட்டு அவசரமாக ஓடும் வழியில் ஒரு சிறுமியைப் பார்க்கிறாள். போலீஸ் துரத்தலைப் பற்றிச் சிறிதும் பதற்றப்படாமல் 'நீ யார் உன் பேர் என்ன?' என்று கேட்டுவிட்டுத் தான் திருடிய வெள்ளிக் கொலுசை 'இந்தா உன் கல்யாணத்துக்கு வைத்துக் கொள்' என்று கொடுத்துவிட்டு ஓடுகிறாள். இருபது வருட நிஜ வாழ்வுக்குப் பின் இப்போது பூலன் கொலை செய்யப்பட்டு ராணா என்பவர் குற்றத்தை ஒப்புக் கொண்டு அதன்பின் வரும் நிகழ்ச்சிகள் பூலன் தேவி II என்று ஒரு திரில்லர் எடுக்கும் அளவுக்கு மர்மமாக உள்ளன. வாழ்விலும், சாவிலும் இத்தனை Notoriety யாருமே பெற்றதில்லை.

பொது வாழ்வில் அபாரமான நவீன முன்னேற்றங்கள் பல வந்துள்ளன.. டயல் செய்தால் பீட்ஸா விலிருந்து அமரர் ஊர்தி வரை (வாத்தியாருடன்) அனுப்புகிறார்கள். இன்டர்நெட் டில் பாட்டிகள் Chatடத் துவங்கிவிட்டார்கள். சுண்டெலிகளை விட சுட்டெலிகளின் எண்ணிக்கை அதிகரித்து மௌஸுக்கு மவுசு வந்து விட்டது . கேபிள் டி.வி. ஐந்து நிமிஷம் போனால் ஜனங்களுக்கு கை நடுங்க

ஆரம்பிக்கிறது. வாக்மன், ஐஸ்க்ரீம், மோட்டார் சைக்கிள், அழுக்கு ஜீன்ஸ், ஒரு நாளைக்கு நூறு ரூபாய் கைக்காசு போன்ற வஸ்துக்கள் இல்லாமல் நகர இளைஞர்களால் நகர முடியவில்லை. செல்போன் இல்லாமல் சினிமா எடுக்கவோ பாடம் படிக்கவோ முடியவில்லை.. எனக்குத் தெரிந்து ஒரு சில டிவோர்ஸுகள், வீட்டில் ஏ.ஸி. இல்லாததால் நிகழ்ந்திருக்கின்றன.

இந்த நவீன முன்னேற்றங்களால் சில நவீன வியாதிகளும் வந்திருக்கின்றன. அவற்றின் அறிகுறிகளையும், அவற்றுக்கான நிவாரணங்களையும் கீழே கொடுத்திருக்கிறேன்.

1. அடிக்கடி வெற்றுப் பார்வை பார்த்தல், பெருமூச்சு விடுதல், ஒருவிதமான தலையரிப்பு, யாராவது 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்டால் 'இன்று வரை பரவாயில்லை.. பிழைத்திருக்கிறேன்' என்று விரக்தியாகப் பதில் சொல்வது, சில சமயம் 'நான் எப்படி இருந்தால் உனக்கென்னப்யா!' என்று எரிந்து விழுவது. நிவாரணம்: உடனே வீடு மாற்றவும். உங்கள் வீட்டில் வாரம் நாலு சொட்டுக்கு மேல் தண்ணீர் வருவதில்லை.

2. அடிக்கடி கையைச் சேர்த்து வைத்துக் கொண்டு பரதநாட்டியப் பாணியில் ஹரிஸாண்டலாக சேவிப்பது, காற்றில் கத்திக்கப்பல் விடுவதும் அதே கைகளைத் தனிப்படுத்தி மானசீகமாக வட்டம் வரைவது, ஜமக்காளம் சுருட்டுவது போன்ற செய்கைகள், நேர்ப்பார்வை பார்த்தல், பதினைந்து செகண்டுக்கு ஒருமுறை சிரிப்பது - இந்த உபாதைகள் உங்களுக்குப் பற்றிக் கொண்டால்... நிவாரணம்: தொலைக்காட்சியில் போன்-இன் நிகழ்ச்சிகள் பார்ப்பதை உடனே நிறுத்திவிட்டு நூறு தடவை ல,ள,ண,ன என்று உச்சரிக்கவும்.

3. இது ஜுலை, ஆகஸ்டுகளில் நடுத்தர வயதினருக்கு வரும் உபாதை. தினசரி செய்தித்தாளின் ஒரு பக்கத்தை மட்டும் பார்ப்பது, பெய்டு ட், ஃபர்ஸ்ட் ஸீட், செகண்ட் லிஸ்ட், கவுன்சிலிங் காப்பிட்டேஷன் போன்ற பதங்களையும் டோட் (dote) 1,2,3 1845, 1289 போன்ற எண்களையும் அடிக்கடி பிரயோகிப்பது. நிவாரணம்: உடனே கடன் வாங்கி பையனையோ பெண்ணையோ காலியாக இருக்கும் இரண்டாயிரம் 'பெய்டு' ஸீட்டில் அரும்பாக்கத்திலோ அச்சரப்பாக்கத்திலோ இன்ஜினீயரிங் காலேஜில் சேர்ப்பது.

4. இது வருடம் முழுவதும் வரலாம். குறிப்பாகப் பெண்மணிகளுக்கு.

எதைக் கேட்டாலும் எதைச் சொன்னாலும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திபோடுவது, எதைச் சொன்னாலும் ஒரு தத்துவத்துடன் பேசுவது, ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டியதை ஒன்பது வாக்கியத்தில் சொல்வது. உதாரணம் - 'எங்கம்மா போயிருந்தே?' என்று கேட்டா, 'எங்கே போயிருந்தேன்னு எப்படி சொல்றது? எங்க போறது, இதுதான் வாழ்க்கையில மிக முக்கியப் பிரச்னையாயிடுத்து.. பணம் இல்லை, புகழ் இல்லை. நிம்மதி! எங்க போனாலும் நேக்கு மனநிம்மதி கிடைச்சா சரி. நீ என்ன கேட்டே எங்க போயிருந்தேன்னா... தெருக்கோடியில ஒரு நெருப்பு பெட்டி வாங்கப் போயிருந்தேன்' 'நெருப்பு பெட்டியா..?' என்று கேட்டால் மாட்டினோம். இந்த வியாதிக்கு நிவாரணம்: டி.வி-யில் மெகா சீரியல் பார்ப்பதை உடனே நிறுத்த வேண்டும். இது வியாதி முற்றிய நிலை ஆதலால் உடனே கவனிக்க வேண்டும். ஆம்புலன்ஸுக்குச் சொல்வது நல்லது.



5. நடக்கும்போது அடி மேல் அடி வைத்து இடுப்பை ஆட்டிக் கொண்டே நடப்பது, நடுராத்திரி வரை கண் விழித்துக் கண்கள் கலக்கமாக - சிவப்பாக இருப்பது, காதில் டம்டம் என்ற சத்தத்துடன் ஒரே பாட்டு சதா ஒலிப்பதாகச் சொல்வது.

இது ராத்திரிகளில் எஃப்.டி.வி. பார்ப்பதால் வருவது. இரண்டாவது, மூன்றாவது அறிகுறிகள் இல்லாமல் நடை மட்டும்தான் கோளாறு என்றால், கேபிளுக்காகத் தோண்டப்பட்ட சாலையில் விழாமல் இருக்க பதுக்க நடப்பதால் வருவது.

6. உண்மை எது, பொய் எது என்று அடிக்கடி தத்துவ விசாரணையில் ஈடுபடுவது, எந்தக் காட்சியையும் அது தன்னுடைய கல்யாண விடியோவாக இருந்தாலும், பத்து முறை ஸ்லோமோஷனில் ஆக்ஷன் ரீப்ளே பார்க்க விரும்புவது, எதையும் முன்னுக்குப்பின் முரணாகச் சொல்வது.

நிவாரணம்: டி.வி. சேனல்களில் செய்திகள் பார்ப்பதை உடனே நிறுத்தினால் போதும். இவற்றுடன் கீழ்க்காணும் உபாதைகளுக்கும் எம்மிடம் நிவாரணம் உள்ளன: கோகோகோலாவை உடைத்து விட்டுக் குடிக்காமல் இருப்பது, டிஸ்கோ இடுப்பு சுளுக்கு, மணிரத்னம் அல்லது ஷங்கரிடம் அசிஸ்டெண்ட் டைரக்டராக சேர்ந்துவிடும் பிடிவாதம், 'வித்தியாசமான கிராமம்' பற்றிய இதுவரை எடுக்கப்படாத புது சப்ஜெக்ட் கைவசம் இருப்பதான பிரமை, ஒயின் ஷாப் அருகில் கிடைக்கும் வெந்த கடலையால் ஏற்படும் அஜீரணம், ஹைக்கூ கவிதை எழுதியே ஆக வேண்டும் என்கிற கட்டாயம், இரவில் சைலன்சர் இல்லாமல் வண்டி ஓட்டும் உற்சாகம், இது போன்ற நூறு உபாதைகளை நீக்கக்கூடிய அருமருந்து பெற விரும்புவோர், பிரதி மாதம் உங்கள் ஊரில் எங்கள் ஏஜெண்ட் அஜிஸ் மான்ஷனுக்கு வரும்போது பெற்றுக் கொள்ளலாம். 150 குளிகைகள் கொண்ட உயர் ரகம் ரூபாய் 347. மீடியம் 247. மட்ட ரகம் 147.

டிராஃப்ட் எடுத்து அனுப்பவும். வி.பி.பி-யில் அனுப்பப்பட மாட்டாது.

முக்கியக் குறிப்பு- இந்தக் கட்டுரை வெளிவந்த ஒரு வாரத்துக்குள் பணம் அனுப்பும் பத்து பேருக்கு குலுக்கல் முறையில் ஒரு டைட்டன் கடிகாரத்தின் 'ஸ்ட்ராப்' இலவசம்.

ஆரம்பக் கேள்விக்கு விடை: இரண்டாவது வாக்கியத்தில் 'நீங்கள்' என்ற முன்னிலைப் பெயர் வந்திருப்பதால், முதல் வாக்கியத் தில் 'உங்கள்' என்றே இருக்க வேண்டும். 'உம்' என்பதை ஏற்றுக் கொண்டால் இரண்டாவது வாக்கியத்தில் நீர் என்று இருப்பதே பொருத்தம்.

# மூன்று பெண்கள்!





என் வாழ்வில் முக்கியமான மூன்று பெண்களைப் பற்றி யோசிக்கத் தோன்றுகிறது. பள்ளி, கல்லூரி நாட்களில் பத்து வருஷம் ஸ்ரீரங்கத்தில் பாட்டியுடன் கட்டுப்பாடாக வளர்ந்தவன் நான். அப்பாவைப் பணிநிமித்தம் அடிக்கடி மாற்றுவார்கள் என்று சொல்லி படிப்பின் தொடர்ச்சிக்காக பாட்டியிடம் அனுப்பப்பட்டேன். இது ஒரு லேசான காரணம் தான். அப்பாவுக்கு அடிக்கடி மாற்றலும் ஏற்படவில்லை. என் தம்பி பெரும்பாலும் அவர்களுடன் இருந்துதான் படித்தான். பாட்டியின் கவனத்துடன் வளர்ந்தது ஒருவாறு என் பிற்கால மனோநிலைகளையும் குணநலன்களையும் அமைத்தது என்பதில் சந்தேகமில்லை.



'கோதை அம்மாள் என்கிற ருக்குமணி அம்மாள்' என்று மணியார்டர் ஃபாரத்தில் கையெழுத்துப் போடத் தெரிந்த பாட்டி இருபத்தோராவது வயதில் கணவனை இழந்தவள். நான்கு குழந்தைகளுடன் அப்பா

வீட்டில் சரணடைந்தவள். அவர்களை வளர்த்து ஆளாக்கி ஒரு தலைமுறையையே உருவாக்கி அடுத்த தலைமுறையான பேரப் பிள்ளைகளை காலேஜ் போகும் வயது வரை பார்த்தவள். வாழ்வின் பல சந்தோஷங்கள் சீக்கிரமே மறுக்கப்பட்டதால் நிச்சயம் ஒரு தனிப்பட்ட கோபம் அவளிடம் இருந்தது. வெறுப்பு இல்லை. பாசமும் கண்டிப்பும் இருந்தது.

என் சிநேகிதர்களில் யார் பாடம் படிக்க வருகிறார்கள்.. யார் கதை பேச.. என்பதை சுலபமாகக் கண்டுபிடித்துவிடுவாள். அடுத்த அறையில் நான் பாடம் படிக்கிறேனா, கதை படிக்கிறேனா என்பதைக் கண்டு பிடிக்கும் 'டெலிபதி' இருந்தது. பாடம் படித்தால் 'இரைந்து சத்தம் போட்டு படி.. அப்போதுதான் மூளையில் ஏறும்' என்பாள். சாயங்காலம் காலேஜிலிருந்து திரும்பி வர லேட் என்றால் என்ன தான் பிராக்டிக்கல் இருந்தது , வாலிபால் ஆடப்போனேன், நோட்ஸ் எடுக்கப் போனேன் என்று சிலசமயம் உண்மையான காரணங்களைச் சொன்னாலும் சினிமாவுக்குப் போயிருக்கிறேன் என்ற தீர்மானமான முடிவுக்குத்தான் வருவாள். அதற்காக சில ஒற்றர்களையும் நியமித்திருந்தாள்.

"கண்ணா... எங்க ரங்கராஜனை பாத்தியோ காலேஜ்ல..?"

"இன்னும் வரலியா.?"

"ஏதாவது ஸ்பெஷல் கிளாஸா..?"

"இல்லையே மாமி... அவனையும் தம்புவையும் கெயிட்டி தியேட்டர் பக்கம் பார்த்தமாதிரி இருந்தது. ஒருவேளை அங்க பஸ் சுலபமா கிடைக்கும்னு.."

"வரட்டும் அவன்!"

வரும்போது பாட்டி பார்க்கும் பார்வையிலிருந்தே தெரிந்து கொண்டு உண்மையைக் கக்கிவிடுவேன்.. அதுதான் ஒரே வழி. இல்லையென்றால் 'உங்கப்பனுக்கு இந்த க்ஷணம் கடுதாசி எழுதிடறேன்.. உன்னை என்னால வளர்க்க முடியாது.. தத்தாரி ஆயிட்டே..' இத்யாதி அர்ச்சனைகள். பிரபந்தம் படிப்பாள். அர்த்தம் புரியாத விசிஷ்டாத்வைத காலட்சேபங்களில் போய் உட்கார்ந்து கொள்வாள். இந்தச் சூழ்நிலையில் எப்படி என்னால் காதல், கண்ணால் பேசுதல் போன்ற மென்மையான சமாசாரங்கள் செய்திருக்க முடியும்!

பாட்டி தன் அறுபத்திரண்டாவது வயதில் இறந்துபோன போது எத்தனை தூரம் என்னைக் காப்பாற்றி இருக்கிறாள் என்பதை நினைத்துப் பார்த்தேன். ஒரு பெரிய சொத்துக்கு என்னை சுவீகாரம் கொடுப்பதை கடுமையாக எதிர்த்துத் தடுத்திருக்கிறாள். அந்த சுவீகாரம் நடந்திருந்தால் நான் மகேந்திரமங்கலத்திலோ, குவளக்குடியிலோ ஒரு பண்ணையாராக வெள்ளிச் செம்பும், பன்னீர் புகையிலையும் பத்தமடைப் பாயும், இஸ்பேட் ஆட்டமுமாக வளர்ந்திருப்பேன். எழுத்தாளனாகியிருப்பேனா.. சந்தேகம்.

அடுத்தது அம்மா. பலர் என்னைக் கேட்டிருக்கிறார்கள் - 'உன் அப்பாவைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறாய். அம்மாவைப் பற்றி அதிகம் எழுதவில்லையே..' என்று. அம்மா மிகப் பெரிய பணக்காரக் குடும்பத்திலிருந்து வந்து பரிபூரணமாகத் தன்னை அப்பாவின் தேவைகளுக்கும் பிடிவாதங்களுக்கும் இனிமேல் பட்டுப்புடவை கூடாது.. கதர்தான்) அட்ஜஸ்ட் செய்துகொண்டவள். அவள் மிக அழகாக இருந்ததும் அதனால் அவளுக்கு ஏற்பட்ட பிரச்னைகளும் எனக்கு அந்தரங்கமானவை. அம்மா நன்றாக சமைப்பாள். எல்லா காரியங்களும் திறமையாகச்செய்வாள். தையல் (எனக்கு சட்டைகூட தைத்திருக்கிறாள்.. லீவு நாட்களில் மட்டும் போட்டுக்கொள்வேன்), எம்ப்ராய்டரி, கூடை பின்னுவது எல்லாம் கொஞ்சம் செய்வாள். ஊட்டி சிங்காராவில் எங்கள் வீட்டு எருமையில் பால் கறந்திருக்கிறாள். 'நில்லுடா' என்று சொல்லி என்னருகில் இருந்த பாம்பை அடித்திருக்கிறாள் (சாகடித்து சம்ஸ்காரம் பண்ணினாள்). வீணை வாசிப்பாள். ஒரு தடவை அவளிடம் இங்க் பேனாவைத் திறக்கக் கொடுத்தபோது எந்தப் பக்கம் திருகுவது என்று தெரியாமல் நாக்கைக் கடித்துக்கொண்டு அதை டைட் பண்ணியே திறந்துவிட்டாள்.

சின்ன வயசிலேயே கல்யாணம் செய்து கொண்டுவிட்டதால் பள்ளிக்கூட படிப்பு அதிகமில்லை. தமிழில் கவிதை கலந்த ர, ற தப்புக்களுடன் கடிதம் எழுதுவாள். இங்கிலீஷ் கற்றுக்கொள்ள ரொம்ப ஆசைப்பட்டாள். என்னை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தாள். லிஃப்கோ ஆசானை வைத்துக்கொண்டு அப்பாவிடமும் தம்பியிடமும் என்னிடமும் சொல்லித்தா என்று கெஞ்சியிருக்கிறாள். 'போம்மா... உனக்கு வராது' என்று வெத்து அவசரங்களில் அந்த இன்பத்தை இழந்து விட்டோம். சொல்லித்தரலாம் என்று தீர்மானித்த போது இறந்துபோய் விட்டாள்.இப்போது சில நாள் கனவுகளில் சொல்லித் தருகிறேன்.

மூன்றாவது சுஜாதா.

எங்கள் கல்யாணம் நிகழ்ந்து முப்பத்தேழு வருஷமாகிறது. இன்னும் அவளை முழுமையாகப் புரிந்துகொண்டதாகச் சொல்ல முடியாது. அவ்வப்போது வியப்பாக ஏதாவது செய்வாள். இந்த கணந்தோறும் வியப்புதான் திருமண வாழ்க்கையில் எங்களுடன் வளர்ந்தது. டெல்லியில் கல்யாணமான புதிதில் அவளை எதிர்கடைக்குப் போய் ஒரு பல்பு வாங்கிவரச் சொன்னேன். நான் முன் ரூமில் உட்கார்ந்து க்ராஸ்வோர்டு போட்டுக் கொண்டிருந்தேன். அவள் மாடிப்படி ஏறி வரும்போது கால் தடுக்கி அதைப் போட்டு உடைத்துவிட்டாள். அதை ஓடி வந்து மூச்சிரைக்க என்னிடம் சொன்னாள்: "பல்பை உடைச்சுட்டேன். கொடுத்த காசு வேஸ்ட்.."

நான் "போனாப் போறது.. வேற பல்பு வாங்கிண்டு வந்துரு.." என்றேன்.

இந்த பதில் அவள் மனதைப் பாதித்து கண்களில் நீருடன், "அதெப்படி உங்களுக்கு இத்தனை அலட்சியம்" என்றாள்.

"ஏன்..?"

"பல்பு உடைச்சதுக்கு ஏன் என்னைத் திட்டலை.."

இப்படி ஒரு கோபமா!

'வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள் யாருள்ளித் தும்மினீர் என்று'

என்கிற திருக்குறள்தான் ஞாபகத்துக்கு வந்தது.

# மண வாழ்க்கைக்கு பத்து விதிகள்!



**த**மிழிலிருந்து ஹீப்ரு மொழிக்கு நேரடியாக மொழி பெயர்க்கப்பட்ட ஒரேயொரு நாவல் எது? விடை கடைசியில்.

**எ**னக்குக் கல்யாணமாகி முப்பத்தேழு வருஷம் ஆகிறது என்று சென்ற இதழில் சொன்னேன். செய்யாறிலிருந்து ஒரு வாசகர் 'எனக்கு ஒரு வருஷமே அலுத்துவிட்டதே.. உங்கள் திருமண வெற்றியின் ரகசியம் என்ன?' என்று கேட்டு சுய விலாசமிட்ட கவர் அனுப்பியிருந்தார். யோசித்தால் அப்படி எதும் ரகசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்பா-அம்மா சொன்ன பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டதால் இருக்கலாம். அது இந்தக் காலத்துக்கு சரிப்பட்டு வராது. சண்டை போட விஷயங்கள் தீர்ந்து போயிருக்கலாம். இதையும் வெற்றியின் ரகசியமாக சொல்ல முடியாது.

ஜேம்ஸ் தர்பர் எனக்குப் பிடித்த அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர். 'மகிழ்ச்சியான மண வாழ்வுக்கு எனக்கே எனக்கான பத்து விதிகள்' என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்த பத்து மணவாழ்வுக்குப் பொருந்துமா... சோதித்துப் பாருங்கள்.

1. கணவனோ மனைவியோ பரஸ்பரம் மற்றவரின் நண்பர்களையோ உறவினர்களையோ கிண்டல் செய்யாமலிருப்பது.

2. கணவன் மனைவியின் உறவினர்கள் பெயர் களைக் கூடியமட்டும் தெரிந்து வைத்துக்கொள்வது.

3. கணவன் மனைவியை மற்றவர் முன்னால் கிண்டல் செய்யாமல் இருப்பது.

4. எப்பவும் ஆண்களே இப்படித்தான் என்று மனைவியும், பெண்களே இப்படித்தான் என்று கணவனும் பொதுப்படுத்தாமல் இருப்பது.

5. கணவன் எதையாவது முக்கியமானதைப் படித்துக் காட்டும்போது மனைவி பராக்கு பார்ப்பதோ, அடிக்கடி மணி பார்ப்பதோ, நடுநடுவே கொசு அடிப்பதையோ தவிர்ப்பது.

6. வீட்டில் நெருப்புப் பெட்டி, காபிப் பொடி, பனியன் போன்ற சில அத்தியாவசியப் பொருள்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று கணவன் தெரிந்து கொள்வது, மனைவி வரும் வரை காத்திருக்காமலிருப்பது.

7. மனைவியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது கணவன் கவனமின்றி தலையாட்டிவிட்டு பிற்பாடு மாட்டிக்கொள்ளாமல் இருப்பது.

8. கணவன் மனைவியை கண்ணே, கன்னுக்குட்டி, குட்டிநாயி, செல்லப்பாப்பு என்றும் 'டா' போட்டும் கூப்பிடுவதை முதல் வருஷத்துடன் நிறுத்திவிட்டால் அவன் சுயநிலைக்கு வந்துவிட்டான் என்று மனைவி புரிந்துகொள்வது.

9. கணவன் இளவயசுக்காரர்களுடன் கிரிக்கெட், ஓட்டப்பந்தயம், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்கள் மனைவி முன்னிலையில் ஆடாமல் இருப்பது.

10. கணவன், மனைவியின் 'டிரஸ்ஸிங் டேபிள்' என்னும் புனிதப் பிரதேசத்தின் பக்கமே போகாமல் இருப்பது.

இந்தப் பத்து விதிகளைக் கடைப்பிடித்தால் மணவாழ்வு பாலும் தேனும் பெருகும் என்கிறார் தர்பர்.

இன்டர்நெட்டில் என் எழுத்தைப் பற்றிப் பல கலந்துரையாடல்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். என்னைப் பற்றிய சர்ச்சை களில் நான் ஒரு வைணவன் என்று சிலர் சொந்தம் கொண்டாடுகிறார்கள். 'மிகப் பெரிய எழுத்தாளர்... இவருக்கு ஏன் பரிசு கிடைக்கவில்லை? என்று சிலரும், இவர் ஒரு மோசமான எழுத்தாளர்... இவர் எழுதியதெல்லாமே குப்பை' என்று ஒருவரும், எனது விஞ்ஞான எழுத்துக்கள் அற்புதம் என்று சிலரும், அற்பம் என்று சிலரும், தப்பு என்று சிலரும் விவாதிக்கிறார்கள். நெட்டில் ஒரு சௌகரியம் - கருத்துக்களுக்குப் பொறுப்பேற்கவே வேண்டியது இல்லை.

இஷ்டப்பட்டதைச் சொல்லிவிட்டு ஒளிந்து கொண்டுவிடலாம். மாட்டிக்கொண்ட பாத்திரத் திருடனைக் கிராமத்தவர்கள் போல புகுந்தடித்து விட்டு ஓடிப்போய்விடலாம். அதற்கு ஒரு சுவர்க் கிறுக்கல் anonymityயும் பொறுப்பில்லாத கருத்து சுதந்திரமும் உள்ளது. நெட்டில் என்னைப் பற்றிப் படிக்கும்போது எனக்குச் சற்று வியப்பாகவும் சிரிப்பாகவும் இருக்கிறது. இவ்வளவு விரிவாக இத்தனை மனங்களை பாதித்துவிட்டோமா என்பது வியப்பு. தனக்குப் பண்ணப்படும் குடலாப்பரேஷனை சர்ஜன்களுடன் தானும் ஒரு ஓரத்தில் பின்கையைக் கட்டி நின்றுகொண்டு பார்க்கும் கார்ட்டூன் பாத்திரத்தின் ஞாபகம் வரும் போது சிரிப்பு. இந்த விவாதங்களில் நான் கலந்து கொண்டு ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. முடிந்தாலும் கூடாது. எழுதுபவன் ஒருவன்... படிப்பவர் பலர். அவர்கள் ரசனையும் விருப்பங்களும் ஏனைய மனோநிலைகளும் சமூகக் கோபங்கள், வெற்றி-தோல்விகள், பொறாமைகள் போன்றவற்றைப் பொறுத்தவை.

நான் திருப்திப்படுத்த வேண்டிய ஒரே ஒரு வாசகன் எனக்குள் இருக்கும் வாசகன். அவனை என்னால் திருப்திப்படுத்தவே முடியவில்லை. அவனிடம் பொய் சொல்ல முடியவில்லை. பாசாங்கு நடக்காது. அவனை நிராகரித்து எழுதவும் முடியவில்லை. இப்போதுகூட அவனைக் கேட்டால், "எழுதத் தெரியாது என்று கண்டுபிடிக்க உனக்குப் பதினைந்து வருஷமாச்சு என்ன செய்வது... அதற்குள் நீ பிரபலமாகிவிட்டாய்" என்று தான் சொல்கிறான்.

எழுதும் முறையில் எனக்கு ஏற்படும் அனுபவங்கள் - சிலசமயம் நான் ஒரு கருவியாகத்தான் உணர்கிறேன். கதை தன்னைத்தானே எழுதிக் கொண்டு செல்லும் என்றால் நம்பமாட்டீர்கள். இரவில் கம்ப்யூட்டரில் எழுதிக் கொண்டிருப்பேன். தூக்கம் கண்ணைச் சுழற்றும். அந்த அரைத் தூக்க நிலையில்கூட என்னை அறியாமல் சில வாக்கியங்கள் மனதில் இருந்து திரைக்கு நேரடியாக இடம் பெயர்க்கப்படுவதை உணர்ந்திருக்கிறேன். சிலசமயம் கதைகள் முழுசாக கனவில் வரும்.. சிலசமயம் முடிவுகள் வரும்... இது எதும் ஆவி சமாசாரம் இல்லை.



இந்த விவாதங்களில் ஒருவர் அண்மையில் விகடனில் வெளியான 'இரண்டாவது காதல் கதையி'லிருந்து ஒரு வாக்கியத்தை மட்டும் பிரித்துக் காட்டி அது விரசமாக இருந்தது என்று சொல்லிவிட்டு 'சுஜாதா எழுதுவது எல்லாமே விரசம்' என்று சொல்லியிருந்தது தப்பாட்டம்.

ஓர் எழுத்தாளனை இவ்வாறு பொதுப்படுத்தி அபிப்பிராயம் சொல்ல, அவனுடைய எல்லாக் கதைகளையும் படிக்கவேண்டும் என்றில்லை... குறைந்தபட்சம் பத்து கதைகளாவது படித்திருக்க வேண்டும். ஒரு நாவலின் ஒரு அத்தியாயத்திலிருந்து பிடுங்கி எடுக்கப் பட்ட ஒரு வரி மட்டும் போதாது.

**உ**டி ஆலன் "எனக்கு மறுபிறவியில் நம்பிக்கை இல்லை. ஆனால், எதற்கும் ஒரு செட் பனியன், அண்டர்வேர் எடுத்துச் செல்லப்போகிறேன்" என்றார்.

என்னிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி இது - உங்களுக்கு மறுபிறவியில் நம்பிக்கை உண்டா? இதன் கிளையாக ஆத்மா என்று

ஒன்று இருக்கிறதா? அது உடலில் எங்கு இருக்கிறது? சாவை வெல்ல முடியுமா? நாம் சாசுவதமாக வாழ முடியுமா என்பவை அந்தக் கேள்வியின் பல வடிவங்கள். நாற்பது வயசுக்கப்புறம் தரும் விதத்தில் immortality பற்றி ஒரு விஸ்தாரமான அதைப் பற்றி எனக்குத் தெளிவான கருத்துக்கள் உள்ளன. இப்போதைக்கு Edward Young என்பவரின் Night Thoughts on Life, Death and Immortality என்னும் கட்டுரையிலிருந்து ஒரு மேற்கோள் கொடுக்கிறேன்-

"நீங்கள் சாசுவதமாக வாழ முடியும் என்பதை ஏன் சந்தேகிக்கிறீர்கள்? நீங்கள் உயிர்வாழ்வதே ஓர் அதிசயம் அல்லவா, வியப்பல்லவா? உயிரெனும் அற்புதத்தைக் கொடுத்தவனால் அதன் முடிவை ரத்து செய்ய முடியாதா? இதில் என்ன அதிசயம்!"

யோசித்து வையுங்கள் விவாதிப்போம்.

**ஆ**ரம்பக் கேள்விக்கு விடை: சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை'.

# அடுத்த ஐந்து வருடம்!



**க**ணிப்பொறிகளில் கோளாறை 'பக்' (bug) என்று சொல்வதன் சரியான காரணம் என்ன..?

விடை கடைசியில்...

**அ**ண்மையில் இரண்டு கம்ப்யூட்டர் விற்பன்னர்கள் இந்தியா வந்தனர்... இன்டெல் நிறுவனத்தின் தலைவர் க்ரெய்க் பார்ரெட்டும் (Craig Barrett) கார்னெகி மெலன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஆலன் ஃபிஷரும் (Allan Fisher). முன்னவர், மைக்ரோ ப்ராஸஸர் சில்லுகள் தயாரிக்கும் தலைமை நிறுவனத்தின் தலைவர். பின்னவர், 'சாஃப்ட்வேர் குரு'!

அண்மையில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவின் காரணங்களைத் துல்லியமாகச் சொன்னார்கள். பார்ரெட், "இது தற்காலிகமானது. ஒரு வருஷத்தில் சரியாகிவிடும்" என்றார். ஃபிஷர், "இந்தப் பொருளாதார முன்னேற்றம், ஒரு கொப்புளம் போன்றது" என்றார்.

இன்டர்நெட் சம்பந்தப்பட்ட ஒரு அசுரவேக வளர்ச்சியை எதிர்பார்த்த 'டாட் காம்' கம்பெனிகள், அமெரிக்காவில் டிபேஸ் தெரிந்தால் போதும். ஜாவாவுக்கு ஸ்பெல்லிங் தெரிந்தால் போதும்... ஏன், கீ-போர்டில் கை வைத்திருந்தாலே போதும்... உள்ளே வா என்று சகட்டுமேனிக்கு ஒரு கட்டத்தில் ஆள் சேர்த்துவிட்டார்கள்.

கொப்புளம் எதிர்பார்த்தபடி வெடித்து, பங்குச் சந்தை பல காரணங்களால் (ரிபப்ளிகன் அரசு மாறியதும் ஒரு காரணமாம்)

வீழ்ந்ததில் முதன்முதலாக அவர்கள் ஆள் குறைத்தது Out sourcing-ஐயும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வரவழைத்த ஆசாமிகளையும். இங்கே பெற்ற அரைகுறை அவசர ஞானத்துடன் சென்றிருந்த நம் இன்ஜினீயர்கள் தாக்குப்பிடிக்க முடியாமல் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

இந்தப் பின்னடைவினால் இந்தியாவில் இந்த வருஷம் கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்புக்கு மவுசு குறைந்து இருப்பது என்னவோ உண்மை.

அமெரிக்காவில் அவ்வளவு பாதிப்பில்லையாம். காரணம், அவர்களின் கம்ப்யூட்டர் சயின்ஸ் கல்விப் பாடத்திட்டம் ஆதாரமானது. மற்ற துறைகளுக்கும் பொதுவானது. ஈ-காமர்ஸ், எறும்பு காமர்ஸ் போன்ற விட்டில் பூச்சி சமாசாரகளைச் சார்ந்தவை அல்ல.

இன்டெல் இப்போது பெங்களூரில் ஐந்நூறு இன்ஜினீயர்கள் கொண்ட பெரிய கிளை ஒன்றை நிறுவி, நாற்பத்தோரு இந்திய கம்பெனிகளில் முதலீடு செய்ய உள்ளது. ஆண்டுக்கு நூறு கோடி டாலர் லாபக் கணக்கு பார்க்காமல், துறை வளர்ச்சியிலும் ஆராய்ச்சியிலும் செலவழிக்கப் போகிறது.



கவலை வேண்டாம்... இனி கம்ப்யூட்டர் வேலைகள் இங்கேயே கிடைக்கும். சி ஷார்ப், அக்டிவ் எக்ஸ், ஏஎஸ்பி, டாட்நெட் போன்ற அன்றாடங்காய்ச்சிகளை நாடாமல், இந்த இயலின் ஆதாரத்துவங்களைக் கற்பிக்கும் பாடங்களை நாடவேண்டும். அவை மாறுவதில்லை.

இந்த நிலையில், கணிப்பொறி இயலில் அடுத்த ஐந்து வருஷத்தை யோசித்தாலே சயின்ஸ் ஃபிக்ஷன் ஆகி விடுகிறது. அடுத்த இருபது ஆண்டுகளைப் பற்றி யோசிக்கும் Probable Tomorrows என்னும் புத்தகம் 1997-ல் வந்தது. மர்வின் செட்ரன், ஒவென் டேவிஸ் என்ற இருவர் எழுதிய இந்தப் புத்தகத்தில் சொன்னதெல்லாம் ஏழில் இருந்து இருபது வருடத்துக்குள் நிகழ்ந்துவிடும் போலத்தான் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில்தான் ஆறு மாதத்துக்கு மேல் ஹேஷ்யம் சொல்ல

முடியவில்லை. உலக அறிவியலில் சொல்ல முடிகிறது. என்னவெல்லாம் நிகழக்கூடும் என்பதைப் பாருங்கள்.

பிசி என்னும் பர்சனல் கம்ப்யூட்டர்கள் - சொந்தக் கணிப்பொறிகள்தான் எதிர்காலத்தின் சூப்பர் மெஷின்களையும் மனித அறிவின் விஸ்தாரத்தையும் தீர்மானிக்கப் போகின்றன. எதிர்காலத்தில் கீ-போர்டு என்னும் விசைப்பலகை இருக்காது. பேச்சின் மூலமே ஆணைகள் கொடுக்கலாம். சில சமயங்கள் கீ-போர்டு வேண்டும் எனில், வேறு விரல் முறைகள் வரலாம்.

சட்டைப் பைக்குள் அடங்கிவிடக் கூடிய நாளைய கம்ப்யூட்டர், அதனுடைய தற்காலிக ஞாபகத்தில் ஆயிரம் மெகா பைட்டுகளையும் பத்தாயிரம் விகடன் இதழ்கள் அளவுக்குத் தகவல் சேகரித்து வைத்துக் கொள்ள ஸ்திர ஞாபகம் கொண்டு, இன்றைய பெண்டியம் கணிப்பொறியை விட ஐந்து கோடி அதிக வேகமாக இயங்கக் கூடியதாக இருக்கும்.

திரைதான் எப்படி இருக்கும் என்பதில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. நேரடியாக மூளைக்குள் இணைந்து, மண்டைக்கு உள்ளேயே தெரிந்தாலும் ஆச்சரியமில்லை. திறமையைப் பற்றிச் சந்தேகமில்லை.

இன்டர்நெட் போன்ற உலகளாவிய, அதைவிட அகலமான வலைப்பின்னல் அமெரிக்க லைப்ரரி ஆஃப் காங்கிரஸ் புத்தகங்கள் அனைத்தையும் நம் வீட்டுக்கும் சட்டைப்பைக்கும் கொண்டுவரும் (கூடவே, 'படுத்திருந்த ராத்திரிகள்' போன்ற மலையாளப் படங்கள் வேண்டும் என்றாலும் கிடைக்கும்!).

விமானங்கள் நாலு மணி நேரத்தில் உலகைச் சுற்றி வந்துவிடும்.

நுகர்பொருள்கள் அனைத்தும் ஏழைகளுக்கும் கிடைக்குமாறு விலை குறைவாகிவிடும்.

ஓஸோன் ஓட்டையை மூடிவிடுவார்கள். சுற்றுச்சூழலைச் சுத்தமாக்கி, மாசு போன்றவற்றைக் கட்டுப்படுத்திவிடுவார்கள். கனரகத் தொழில்கள் முழுவதும் விண்வெளிக்குச் சென்று, கழிவுப் பொருள்கள் நம் நதிகளைக் கலக்குவது நிறுத்தப்படும். ஜீன் மேப்பிங், மாற்று உறுப்பு சிகிச்சை போன்றவற்றில் அதிமுன்னேற்றம் ஏற்பட்டு, சராசரி மனித வாழ்நாள் நூறுக்கு மேலாகிவிடும்.

இதெல்லாம் தற்கால முன்னேற்றங்களை எதிர்காலத்துக்கு நீட்டிப் பார்க்கும்போது வருவது. ஆனால், நம் மக்களைப் பேரணிகளிலும் துப்பாக்கிச்சூட்டிலும் சங்கிலி கட்டியும் சாவடிப்பதிலும், அறியா மக்கள் மேல் குண்டு வீசுவதிலும், மதச் சண்டைகளிலும் நாம் பின்னோக்கிச் செல்வதை உடனடியாக நிறுத்தினால்தான் இந்த முன்னோக்கம் செல்லுபடியாகும்.

ஆலன் ஃபிஷர்





க்ரெய்க் பார்ரெட்

பொதுவாக, பெண்கள் எழுதும் கவிதைகளில் வரும் ஆண்கள் அவ்வளவு சிலாக்கியமானவர்களாக இருக்க மாட்டார்கள். பயாலஜி கட்டாயங்களினால் வர்க்கக் கோபமும் தார்மீகக் கோபமும் இருப்பதைத்தான் பெண் கவிஞர்களில் பார்த்திருக்கிறேன்.

சிவசுந்தரி போஸ் அவர்களின் 'பயணம்' என்ற கவிதைத் தொகுதியில் இந்தக் கவிதை எனக்கு வியப்பாக இருந்தது (16/2, லாசன் ரோடு,

கண்டோன்மெண்ட், திருச்சி-1).

பெண்ணாய்ப் பிறந்து பெற்றோர் போற்ற
கண்ணின் மணியாய் கருத்தின் ஒளியாய்
அரும்பெரும் கலைகள் அனைத்தும் கற்று - பின்
வரும் மணவாளன் வளமே வாழ்வென
தன்னைத் தனதை தவிர்த்து மாறி
அன்னை வடிவில் அன்பை உணர்ந்து
சேயாய் சதியாய் தாயாய் வாழும்
ஓயா இல்லற அலைகளின் வீச்சில்
எத்தனை அயர்வு, எத்தனை மகிழ்வு
எத்தனை பொறுப்பு, எத்தனை சிலிர்ப்பு
இதை விடுத்து
சூதும் வாதும் சூழ்ந்திடும் உலகில்
ஓதும் சாத்தான் வேதம் என்னும்
நடைமுறை உணர்ந்து நாலும் தெரிந்து
அடைகாப்பதுபோல் பொருளைப் பேணி
அலைந்து திரிந்து அரும்பணியாற்றி
கலையை இரசிக்கக் கணமும் இன்றி
தாயை சதியை சேயைத் தேற்றி
வாயைப் பன்முறை அழுத்தி மூடி
வேண்டாம் சாமி ஆணாய்ப் பிறவி.
மீண்டும் பெண்ணாய் பிறந்து வருவேன்.

யோசித்துப் பார்த்தால், இந்தத் தொனியில் தமிழில் எழுதப்பட்ட ஒரே ஒரு (ஏறக்குறைய) ஆசிரியப்பா இதுதான் என்று தோன்றுகிறது. பெண்ணியலாளர்கள் என்ன சொல்கிறார்களோ தெரியவில்லை... but,she has a point!

ஆரம்பத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு விடை -

இங்கிலாந்து மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் மார்க் 1 என்னும் முன்மாதிரி எலெக்ட்ரானிக் கணிப்பொறி ஒன்று 1948-ல் துவக்கப்பட்டது. அதன் சிக்கலான இணைப்புக்குள் ஒரு ஈசல் பூச்சி (moth) மாட்டிக்கொள்ள, கொஞ்ச நாள் கணிப்பொறியின் செயல்பாட்டில் தடங்கல் வந்தது.

இதிலிருந்து கம்ப்யூட்டர் பிழைகளுக்கு bug என்ற வார்த்தையைப் பயன்படுத்தத் துவங்கினார்கள் என்று கணிப்பொறி சரித்திரவியலாளர்கள் எழுதியிருக்கிறார்கள் (ஆதாரம்: The Timetables of Science - Simon & Schuster).

# அவனைக் கொல்ல வேண்டும்!



இன்ஜினீயரிங் படிப்பு முடித்ததும் வேலை கிடைப்பதில் அக்காலங்களில் சஞ்சலமிருக்கவில்லை. டெல்லியில் சில நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றுவிட்டு இரண்டு வேலை கிடைத்து, அதிக சம்பள வேலையில் சேர்ந்தேன். அலகாபாதில் டிரெய்னிங் வரச் சொன்னார்கள். இந்தியா மேப்பை பார்த்து அப்போதுதான் அலகாபாத் எங்கிருக்கிறது என்று கண்டுபிடித்தேன். அங்கே போனதும்தான் தெரிந்தது - அசிஸ்டண்ட் ஏரோட்ரோம் ஆபீஸர் என்பது என் படிப்புக்கு ஸ்னானப்ராப்தி கூட இல்லாத வேலை என்று.

என்னுடன் அந்த டிரெய்னிங்குக்கு சேர்ந்த பதினைந்து பேரில் ஒரு தபலா வித்வான், ஒரு இந்தி விஷாரத், ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ் போன்ற தேசங்களிலிருந்து பரஸ்பர உதவி ப்ரொகிராமில் வந்த மூன்று பேர், சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்டிலேயே ஆப்பரேட்டராயிருந்த மூன்று பேர் என்று ஹாலிவுட் பாங்க் கொள்ளை படத்துக்கு வேறுவேறு துறைகளிலிருந்து ஆள் சேர்ப்பார்களே, அதுபோல் ஒரு கலந்துகட்டின கும்பல் சேர்ந்திருந்தோம்.

அலகாபாத் அருமையான, அழுக்கான நகரம். 'எக்கா' என்கிற குதிரை வண்டியில் தொத்திக் கொண்டு சவாரி செல்ல சர்க்கலில் பழகியிருக்க வேண்டும். கிரிக்கெட்பால் சைஸுக்கு கொய்யாப் பழமும் எலுமிச்சை சைஸுக்கு நாவற்பழமும் கிடைக்கும். ரேர்டெல்லாம் இறைந்து கிடக்கும் 'மவ்வா'வை அரைத்துச் சாப்பிட்டு ஜனங்கள் சொர்க்க வாசலில் நிற்பார்கள் (மரியுவானா). திரிவேணி சங்கமத்தின்போது லட்சக் கணக்கானவர்கள் ஆற்றில் குளித்து ஆயிரக்கணக்கான பேர் மிதிபட்டு நான்ஸ்டாப்பாக சொர்க்கம் போவார்கள்.

பம்ரோலி விமானநிலையத்தில் பயிற்சி. எங்களுடன் ஒரு ஈடு

பைலட்டுகளும் டிரெய்னிங்கில் இருந்தார்கள். அவர்களுக்கு எங்களைக் கண்டால் தரை ஆசாமிகள் என்று இளப்பம். கடுமையாக ராகிங் செய்தார்கள். அவர்களுக்குப் பயந்துகொண்டு இரவில் நரிகள் ஊளையிடும் வயல்காட்டில் ஒளிந்துகொண்டு அவர்கள் விளக்கணைத்ததும் ரூமுக்குத் திரும்புவோம். ஹோலி பண்டிகையின் போது எங்கள் அனைவரையும் பரிவோடு அழைத்து சமாதானம் என்று சொல்லி 'பர்கோலாக்ஸ்' கலந்த பர்ஃபி கொடுத்தார்கள். ஒரு வாரம் பாத்ரூமிலேயே வாழ்ந்தோம்.

எங்களுக்கும் பதினெட்டு மணி நேரம் விமானம் ஓட்டும் பயிற்சி இருந்தது. சிப்மங்க் என்ற குட்டி விமானத்தில் நான் கற்றுக்கொண்ட அதிசயக் கதையை எழுதிவிட்டேன். அந்த பிலிப்பைன் தேசத்து மாணவனான டாமி மொரால் என்பவனைப் பற்றி இன்னும் எழுதவில்லை. எங்களையெல்லாம் விட சின்னதாக, ஒரு மிட்ஜெட் மாதிரி இருந்தான் மங்கோலிய முக அமைப்பு ஒரு மாதிரியான இங்கிலீஷ் உச்சரிப்பு புரிய எங்களுக்கு ஒரு மாதமானது. பார்த்தால் பாவமாக இருந்தது. ஆப்கானிஸ்தான் மாணவர்கள் குளிக்கவே மாட்டார்கள். கிட்ட வந்தால் மலைஆடு வாசனை வரும். அவர்களுடன் சேர்த்து ஒரு அறையில் டாமியையும் செலுத்தி விட்டோம். இவனும் குளிக்கமாட்டான். அவனுக்கு ஏடிஸி என்னும் ஏர் டிராஃபிக் கண்ட்ரோல் மீட்டியராலஜி - வானிலையில் கோரியாலிஸ் விசை பற்றிய பாடங்கள் எதும் ஒரு அட்சரம் புரியவில்லை. என்னிடம் சந்தேகம் கேட்பான். பொறுமையாக சொல்லித் தருவேன்.



ஒரு முறை டாமிக்கு ஓம்பிரகாஷ் டிங்க்ரா (dingra என உச்சரிக்கவும்) என்கிற பைலட்டுடன் பெரிசாக சண்டை ஏற்பட்டுவிட்டது. அவன் பஞ்சாபியில் திட்டினதுக்கு டாமிக்கு ஒரு ஒற்றன் மூலம் அர்த்தம் புரிந்து விட்டது. டாமிக்கு அது அவன் தங்கை சம்பந்தப்பட்ட திட்டு என்றதும் என் ரூமுக்கு கோபமாக வந்தான், "ரங்கு, அந்த டிங்க்ரா பாஸ்டர்டை பார்த்தாயா?"

"ஏன்... என்ன விஷயம் டாமி?"

"அவனைக் கொல்ல வேண்டும்."

ஏற இறங்கப் பார்த்து "நீயா! டாமி, அவர்கள் எல்லாம் முரடர்கள்" என்று நான் சொல்லிப் பார்த்தேன். சமாதானப்படுத்தினேன். "நாடுவிட்டு நாடு வந்தவன் நீ டிரெய்னிங் முடிய இன்னும் சில வாரங்களே உள்ளன. கொஞ்சம் பொறுத்துக்கொண்டிரு" என்று கீதாசார்யன் மாதிரி பேசிப் பார்த்தேன்.

அப்போது டிங்க்ராவே வந்தான். டாமியைவிட இரண்டு மடங்கு உயரம், அகலம், "என்ன டாமி, என்னை அடிக்கப் போகிறாயாமே..? எங்கே, அடி பார்க்கலாம்... அடி பார்க்கலாம்" என்று அவனை தோளில் தள்ளித் தள்ளி சீண்டினான். டாமியிடம் சில ஆண்மைக்குரிய பாகங்கள் உண்டா... ஏன் முகத்தில் ரோமமில்லை என்றெல்லாம் சந்தேகம் கேட்டான். நான் கலவரமாகப் பார்த்தேன். டாமி தன் விரலில் இரும்பில் ஒரு நாலணா மோதிரம் போட்டிருந்தான். அதை அட்ஜஸ்ட் செய்துகொண்டான். மிகவும் எதிர்பாராதவிதமாக ஒரு தேர்ந்த பாக்ஸிங் சாம்பியன் போல் கை வைத்துக்கொண்டு டிங்க்ராவின் மூக்கில் ஒரு மின்னல் வேகக் குத்து விட்டான்.

ஓம் பிரகாஷ் டிங்க்ரா உசரமும் பருமனுமாக நெடுஞ்சாண்கிடையாக அப்படியே பின் வாங்கி விழுந்தான். அவன் மூக்கிலிருந்து ரத்தம் வழிந்தது. அவன் சகாக்கள் உதவிக்கு வர முயற்சிக்க... டிங்க்ரா "இரு... யாரும் வரவேண்டாம். இது என் காரியம்" என்று எழுந்தான்.

டாமி 'கமான்... கமான்' என்று விரலால் விளித்தான். டிங்க்ரா அவனை காட்டடி அடிக்கப்போய் டாமி ஒதுங்கிக்கொண்டு மற்றொரு குத்து. இப்போது பல்லுக்குள் கடலை உடைப்பது போல சப்தம் கேட்டது. என் மேல் கல்யாண ரிசப்ஷனில் பன்னீர் போல ரத்தம் தெளித்தது.

நான் அங்கே ஒரு பெரிய இந்திய - பிலிப்பைன் யுத்தம் நடக்கப் போகிறது.. டிங்க்ராவின் சகாக்கள் அனைவரும் டாமியைப் போட்டு தொம்சிக்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆச்சரியம்... அது நடக்கவே இல்லை டாமிதான் சொன்னான் - "யாரும் வரலாம். நான் எங்கள் நாட்டில் பாக்ஸிங், கராத்தே சாம்பியன்." அவ்வளவுதான்... மற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் அவசர வேலை இருக்கவே காணாமல் போனார்கள்.

பின்னர் டிங்க்ரா ரெண்டு நாள் முகம் வீங்கிப்போய் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தான். டாமி வழக்கம் போல பாடம் கேட்க என்னிடம் வந்தான். அந்தச் சம்பவத்தைப் பற்றிப் பேசவே இல்லை. நான் எந்த நிமிஷமும் கலவரத்தை, அதிரடிப் பழிவாங்கல் தாக்குதலை எதிர்பார்த்தேன். ஆனால், அடுத்த வாரம் கே.பி.பி. வாரியர் செய்த முயற்சியால் மூக்கில் பிளாஸ்திரியுடன் டிங்க்ராவை டாமியின் கையைக் குலுக்க வைத்து இருவரும் தோள் மேல் தோள் போட்டுக்கொண்டு இணைபிரியா நண்பர்கள் போல அலகாபாத் டவுனில் மெத்தை போட்ட மாடிகளில் கஜல், கவ்வாலி நிகழும் 'நாச்வாலி கர்'க்கு போனார்கள். கோர்ஸ் முடிந்து பிரிவுபசாரத்தில் டிங்க்ராவிடம் டாமி மன்னிப்புக் கேட்டுக்கொண்டான் அவனைப் போல உத்தமன் இல்லை என்றான். டாமி மொரால் - டிங்க்ரா இருவரும் அப்புறம் என்ன ஆனார்கள் தெரியவில்லை.



1992 ஜனவரி முதல் வாரத்தில் பெங்களூர் விமானநிலையத்தில் டிங்க்ராவை ஏர்பஸ் ஏ 320 பைலட்டாகப் பார்த்தேன். மூக்கு சற்று கோணலாக இருப்பதாகத் தோன்றியது.

அதே வாரம் தபாலில் மூஞ்சியெல்லாம் முத்திரை குத்தி எனக்கு ஒரு வெளிநாட்டுக் கடிதம் வந்தது. ஒரு கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை. 'அன்புள்ள ரங்கா, எல்லாவற்றுக்கும் நன்றி. நினைவிருக்கிறதா என்னை நண்பன் டிங்க்ரா எங்கிருக்கிறான்? - டாமி மொரால்'

அந்தக் கடிதத்தின் தலைப்பில் பிலிப்பைன்ஸ் அரசின் சிவில் விமான இலாகாவின் மந்திரி என்ற முத்திரை குத்தியிருந்தது.

*"இற்றைநாள் மகாராச சிரீவசார தராய விசயதிருவேங்கிடப் பிள்ளையவர்களுடைய குமாரனுக்கு சாயங்காலம் 5 16 மணிக்கு விவாக முகிற்தம் முடிந்தது. பிள்ளைக்கு வயது 16. எம்பெருமான் பிள்ளை பேரன் அண்ணா பிள்ளையுடைய குமாரத்தியாகிய பெண்ணுக்கு வயது 10. விவாகம் நடக்கு முன் பன்னிரண்டடித் திரண்டு மணிக்கு வூருகோலம் வரும் பொருட்டால் ஒரு யானையின் பேரில் அம்பாரியும் ஒரு யானை பேரில் நகாறா வேறொரு யானையில் பேரில் கெருடக்கொடி ஆபுதாகிரி ஆலவட்டம் வெண்சாமரை கொமாரவாணக்கொடிகள். சிப்பாய்கள் தம்பூற் பில்லாங்குழர் முதலாயுள்ள சகல சம்பிறமங்களுடன் மாப்பிள்ளை பச்சை பல்லக்கின் பேரில் வூருகோலம் வரப்பட்டது"*


இது 1791-ல் பாண்டிச்சேரியில் வாழ்ந்த இரண்டாம் வீரா நாய்க்கரின் டைரியிலிருந்து ஒரு நாளைக்கான குறிப்பு. இதைத் தொகுத்துப் பதிப்பித்தமா. கோபாலகிருஷ்ணன் (நற்றமிழ் பதிப்பகம், ஹால்ஸ் சாலை, எழுமூர் சென்னை-8) புதுச்சேரியில் 1940-ல் பிறந்து பிரான்ஸில் பொறியியல் பௌதிகம் படித்து, தென்வியட்நாமில் பேராசிரியராக இருந்து, தற்சமயம் பாரிஸில் பணிபுரிந்து வரும், ஆர்வமுள்ள தமிழர்... ஆனந்தரங்க பிள்ளை டைரியின் தொடர்ச்சியைப் போல இருக்கும் இந்த நாட்குறிப்புகளில் புதுச்சேரியின் அன்றாட வாழ்க்கையை உடனிருந்து பார்த்த ஐவிட்னஸ் பாணியில் எழுதியிருக்கிறார் வீராநாய்க்கர். தமிழில்தான் எத்தனை சுவாரஸ்யமான நூல்கள்!

# ஜுனோம்!



'பவந்தர்' மணற்காற்று என்னும் படத்தைப் பார்த்தபோது ஒரு ஆர்ட் ஃபெஸ்டிவல் படத்துக்கும் ஃபார்முலா இருப்பதை அறிய முடிகிறது. 'பாண்டிட் குயின்', 'ஃபயர்', சில மலையாளப் படங்கள் போன்றவற்றைப் பொதுப்படுத்திப் பார்த்ததால் கீழ்க்காணும் விஷயங்கள் தெரியும். படத்தில் ஷப்னா ஆஸ்மி, நந்திதா தாஸ், ரகுவீர் யாதவ் போன்றவர்கள் இருந்தே ஆகவேண்டும். படத்தில் ஒரு ரேப் இருந்தே ஆகவேண்டும். நாலைந்து பேர் ஒத்துழைக்கும் 'கேங் ரேப்'பாக இருந்தால் உத்தமம். அருமையான நாட்டுப்புறப் பாடல்களை முழுத்தொண்டையில் யாராவது ராஜஸ்தானி பாடகி பாட வேண்டும். வசனத்தில் அம்மாளை, ஆத்தாளை போன்ற கெட்டவார்த்தைகள் இருந்தே ஆகவேண்டும். ஆண்பிள்ளைகள் அத்தனை பேரும் கெட்டவர்களாக அல்லது கோழைகளாக இருக்க வேண்டும்.

'பவந்தர்' உருக்கமான உண்மைக்கதை. ஒரு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட குயவர் இனத்தைச் சேர்ந்த பெண்ணை குஜார் என்ற உயர்சாதிக்காரர்கள் ஐந்து பேர் பலாத்காரம் செய்துவிட, அவள் ஒரு சமூக சேவகியின் உதவியுடன் கடைசி வரை போராடி முழு வெற்றி கிடைக்காவிட்டாலும் போராட்டத்தைத் தொடர்கிறாள் என்பது கதை. ரகுவீர் யாதவ், தீப்தி நவால், நந்திதாதாஸ் மூவரும் திறமையாக நடித்துள்ளனர். டைரக்டர் ஜக்மோகன் இந்தப் படத்தைப் பற்றி பெருமையாக பேசிக் கொள்ளலாம்.



அமெரிக்க விஸ்கான்சின் மாகாணத்தில் ஜீனோம் இன்டர்நேஷனல் கார்ப்பரேஷன் என்னும் பயோடெக்னாலஜி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் பெரியண்ணன் சேனாபதி. எனக்கு அவருடைய Independant Birth of Organisms என்னும் புத்தகத்தை அனுப்பியிருந்தார். போனிலும் அதைப் பற்றிப் பேசினார். ஸ்ரீலங்கா ஸ்கோர் மாதிரி 630 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தை மெள்ளப் படித்து வருகிறேன். டாக்டர் சேனாபதி 'டார்வினின் பரிணாம தத்துவத்தில் பிழை இருக்கலாம்' என்று தைரியமாகச் சொல்கிறார். டார்வின் தத்துவத்தின் இன்றைய வடிவத்தில் ஒரு primordial Soup என்னும் ஆதிகாலக் குழம்பில் எளிய, பெரிய மாலிக்யுல்கள் பல காலம் ஒன்றுசேர்ந்தும் பிரிந்தும் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது தற்செயலாக முதல் ஜீனோம் தோன்றி அது தன்னைத்தானே இரட்டிப்பாக்கிக்கொள்ளும் தகுதிபெற்று முதல் உயிர் உண்டாகியது. இதன் பிரதியெடுப்புகளில் பிழைகள் ஏற்பட்டன. பிழைபட்ட பிரதிகள் சில சூழ்நிலையை சமாளிக்கும் தகுதி பெற்றதால் பிழை பிழைத்தது. இப்படி மெள்ள எளிமையாக பாக்டீரியா போன்ற சிறிய உயிரிலிருந்து துவங்கி படிப்படியாக உன்னதம் பெற்று பூவாகிப் புல்லாகிப் புள்ளாகிப் பூண்டாகி, மீனாகி, மானாகி, நானாகி Natural Selection என்னும் இயற்கையின் தேர்ந்தெடுப்பு விதிகளின்படி பரிணாமம் பெறுவதற்குப் போதிய கால அவகாசம், கோடிக்கணக்கான ஆண்டுகள் இருந்திருக்கின்றன. ஆதலால் முதல் ஜீனோமில் இருந்துதான் அத்தனை உயிர்களும் வந்தன என்று டார்வினீயர்கள் சொல்கிறார்கள்.

டாக்டர் சேனாபதி இந்தக் கருத்தை மறுக்கிறார். நவீன கம்ப்யூட்டர் முறைகளை வைத்துக்கொண்டு அந்த ஆதாரக் குழம்பில் ஒரே ஒரு ஜீனோம் மட்டுமல்ல... பல உருவாகி இருக்கலாம் என்பதை அவர் நிரூபித்திருக்கிறார். ஒரே சமயத்தில் பல ஜீன்கள் உண்டாகியிருக்கலாம். அப்படியிருந்தால்தான் உயிரினங்களிடையே உள்ள இத்தனை வேறுபாடுகளை சரியாக விளக்கவே முடியும் என்கிறார்.

டார்வின் சித்தாந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் பலர் பெரும்பாலும் மதவியலாளர்கள். டாக்டர் சேனாபதி அதை எதிர்க்கவில்லை. வேறு முறையில் பரிணா மத்தை விளக்குகிறார். பன்னிரண்டு வருஷம் மாலிக்யுலர் பயாலஜியில் அவர் ஆராய்ந்த முடிவுகளின் ஆதாரத்தில் மிக விரிவாக எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தில் Genetics Primer என்னும் ஓர் அனுபந்தம் உள்ளது. மிகத் தெளிவாக என் போன்ற பாமரனுக்கு புரியும்படி எழுதியிருக்கிறார்.

டாக்டர் சேனாபதி தமிழார்வம் உள்ளவர். இந்த அனுபந்தத்தை மட்டும் ஓர் புத்தகமாக தமிழில் எழுதலாம் அவர்.

Immortality பற்றி நான் எழுதியதற்கு ஓர் அன்பர் கடிதம் போட்டிருந்தார் - உங்களுக்கு மேல்நாட்டு அறிஞர்களை மட்டும்தான் மேற்கோள் காட்ட முடியுமோ... ரமண மகரிஷி போன்றோரைப் படித்ததில்லையா நீங்கள்?

கீழைநாட்டுத்துத் தத்துவங்களில் மறுபிறவி, ஆத்மாவின் அழியாமை போன்றவை பற்றி சந்தேகப்படவே இல்லை. மேற்கத்திய சிந்தனையாளர்கள்தான் சாவுக்குப்பின் என்ன ஆகிறது என்று மண்டையையும் மனசையும் போட்டு உழப்பிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஆதங்கம் - 'நான் இறந்துபோனதும் உலகம் எப்போதும் போலத் தொடர்ந்து இயங்கப் போகிறதே.. பிரம்மசாரிகள் பிரம்மச்சாரிகளாகத் தொடர்வார்கள், 37 என்பது வகுபடாத எண்ணாகவே தொடரும், பாட்டுப் பாடுவதும், நடனம் ஆடுவதும், கிரிக்கெட் பந்தயங்களும், நட்சத்திரங்களும் நிற்கப் போவதில்லை. இது அநியாயம். நானில்லாமல் என்ன உலகம் வேண்டிக்கிடக்கிறது' என்பதே. ஈகோ சாவுக்குப் பின் தொடருமா என்பதே அவர்கள் கேள்வி.

பெர்ட்ரண்ட் ரஸல் 'I believe that when I die I shall rot and nothing of my ego will survive - நான் இறந்ததும் மக்கிப் போவேன். என்னுடைய 'நான்'

எதுவும் தொடர்ந்து வாழப்போவதில்லை' என்றார்.

மார்ட்டின்கார்ட்னர் ஒரு அருமையான குட்டிக் கதை சொல்கிறார் -

ஒரு பெரிய விஞ்ஞானி சாகும் தறுவாயில் இருந்தார். அவரருகே அவருடைய காதலி ரோசாலி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அவர் மேல் மிகுந்த காதல். விஞ்ஞானிக்கு முதல் காதல் விஞ்ஞானம்தான். அப்புறம்தான் ரோசாலி.

"நாம் நிச்சயம் மறுபடி சந்திப்போம்.. எங்கேயாவது, எப்போதாவது.." என்றாள்.

விஞ்ஞானி கஷ்டப்பட்டு இருமிக்கொண்டு சொன்னார்: "அபத்தமாகப் பேசாதே.. உனக்கு விஞ்ஞானம் தெரியாதா..?"

ரோசாலிக்கு நிஜமாகவே விஞ்ஞானம் தெரியாது. "ஆனால், நிச்சயம் நாம் சந்திப்போம் என்று நம்பிக்கை வைக்க மாட்டாயா..?"

விஞ்ஞானி தலையாட்டினார். "எனக்கு ஒரு வாழ்நாள் போதும்.. எளிதாக, அழகாக அது முடிவடைகிறது.. இல்லையேல் பிரபஞ்சம் மிகவும் சிக்கலாகிவிடும்.."

அவர் இறந்துபோனார்.

சில லட்சம் வருடங்கள் கடந்த பின் விஞ்ஞானி திடீரென்று கடவுளுக்கு முன் தான் நிற்பதை உணர்ந்தார். அவருக்குக் குழப்பமாக இருந்தது.

"எனக்குப் புரியவில்லை.. எப்படி விஞ்ஞான விதிகளின்படி நான் மறுபடி வாழ முடியும்?"


'எப்படி விஞ்ஞான விதிகளின்படி விஞ்ஞான விதிகள் வரமுடியும்?' என்று கடவுள் கேட்டார்.

'ஆனால், நான் மறுபடி வாழ விரும்பவில்லையே.. திருப்தியுடன் வாழ்ந்தேன்.. இறந்தேன். ஏன், எதற்காக இங்கே இருக்கிறேன்..?'

"நீ இங்கே இருப்பதற்கு ஒரேயொரு காரணம் ரோசாலி வேண்டிக்கொண்டது தான்" என்றார் கடவுள்.

இந்தக் கதையின் உள்ளர்த்தத்தை இரவின் தனிமையில் யோசித்துப் பாருங்கள்.

டார்வின்



**எ**த்தனை மேடைகளில் பார்த்திருக்கிறோம்... நடுநாயகமாக ஒரு வி.ஐ.பி. உட்கார்ந்திருப்பார். அவரிடம் அடிக்கடி சில சாமானியர்கள் வந்து காதோடு பேசுவதும் அவர்கள் பதில் சொல்ல சாமா சிரிப்பதும்...!

அந்த உரையாடல் என்னவாயிருக்கும் என்று யோசித்தால் -

சாமானியர்: பாப்பாகிட்டருந்து போன் வந்துச்சு. இன்னும் எத்தனை நேரமாகும்?

வி.ஐ.பி.: கிளவன் பேச்சை முடிக்கிறதுக்குள்ள செத்துருவான்போலத் தோணுது.. நிறுத்தினதும் பெறப்பட்டுரலாம்.

சாமானியர் (சிரிப்பை மழுப்பிக்கொண்டே விலகுகிறார்..)

மன்னரைச் சேர்ந்தொழுகல் என்னும் அதிகாரத்தில் ஓர் அரிய குறள் இருக்கிறது..

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும்

அவித்தொழுகல்

ஆன்ற பெரியார் அகத்து!

பெரியவர்களிடம் காதோடு பேசுவதும் அவர்கள் கூடச் சிரிப்பதும் தவிர்க்க வேண்டும். இன்றும் அது தவிர்க்கப்படவில்லை.

திருக்குறளில் அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் குறள்கள், தமிழ் சினிமாப் பாடல்களின் வார்த்தைகள் போல, ஐம்பதுதான் இருக்கும்.. மேற்சொன்ன சில மிக அரிய குறட்பாக்கள் புதுக் கருக்கு அழியாமல் அப்படியே இருக்கின்றன. அதில் மற்றொன்று -

நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு

பணம் பண்ணுவதற்கு நல்லதெல்லாம் கெட்டதாகும். கெட்டதும் நல்லதாகும்! சென்னை உயர்நீதி மன்றத்தில் நடைபெறும் சில வழக்குகளை நினைவுபடுத்தும் குறள் இது.

இதில் 'செல்வம் செயற்கு' (பணம் பண்ணுவதற்கு!) என்கிற பிரயோகத்தையும் தீயவும் என்பதில் உம் விகுதியையும் சிந்திக்கலாம்.

வகுத்தான் வகுத்தவகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

ஒருவனுக்கு விதிப்படி வாய்த்ததை விட கோடி கோடியாகச் சேர்த்தாலும் அனுபவிக்க முடியாது.

அமெரிக்காவில் நிறைய சம்பாதித்து நிறைய நுகர் பொருள்கள் வாங்கிச் சேர்த்து அதை பாலித்தீன் உறை பிரிக்கக்கூட நேரமில்லாமல் காராஜில் போட்டு வைத்திருக்கும் மென் பொருளாளர்களுக்கு என்று எழுதப்பட்ட குறள் இது.

# உடல் கவிதை!



அப்பட்டம், எக்கச்சக்கம், ஏடாகூடம், ஏராளம், ஒய்யாரம், கச்சிதம், கெட்டி, சந்தடி, சரக்கு, சொகுசு, சாகுபடி, தொந்தரவு, நிம்மதி, பண்டிகை, வேடிக்கை, எச்சரிக்கை..

- இந்த வார்த்தைகளுக்குள் உள்ள ஒற்றுமை என்ன..? விடை - கடைசியில்...

இந்தத் தொடருக்கு வரும் இ-கடிதங்களையும் விகடன் அலுவலகத்தினர் அவ்வப்போது அனுப்பி வருகின்றனர். சுருக்கமாக இருக்கும் என்றால், writersujatha@hotmail.com என்னும் மேல் விலாசத்துக்கும் அனுப்பலாம்.

கலிஃபோர்னியாவிலிருந்து ப்ரியா பாலா, இன்பமான மணவாழ்க்கைக்கு உத்தரவாதமாக மேலும் பத்து விதிகளை மெய்லியுள்ளார். அவை:

1. இருவரும் ஒரே சமயத்தில் கோபப்படாதீர்கள்.

2. வீடு பற்றிக்கொண்டால் தவிர கூச்சல் போடாதீர்கள்.

3. வாக்குவாதத்தில் இருவரில் யாராவது வெற்றி பெற்றே ஆகவேண்டுமென்றால், அது மற்றவராக இருக்கட்டும்.

4. அன்போடு விமரிசிக்கவும்.

5. கடந்தகாலத் தப்புகளைச் சொல்லிக் காட்டாதீர்கள்.

6. உலகத்தை நிராகரித்தாலும் ஒருவரை ஒருவர் நிராகரிக்காதீர்கள்.

7. தூங்கப்போகுமுன் சண்டை போட்டு முடித்துவிடுவது உத்தமம். மெகா சீரியல் ரேஞ்ச்சுக்கு இழுக்க வேண்டாம்.

8. தினம் ஒருமுறை பரஸ்பரம் பாராட்டுங்கள்.

9. தப்புச் செய்துவிட்டால், உடனே ஒப்புக் கொள்ளவும் மன்னிப்புக் கேட்கவும் தயாராக இருங்கள்.

10. சண்டைக்கு இரண்டு பேர் தேவை. இருவரில் அதிகம் பேசுபவர் பேரில்தான் தப்பு இருக்கும்.

'ஆயிரத்துள் இந்தப் பத்தையும் கடைப் பிடித்தால், பாலும் தேனும் உத்தரவாதம் என்கிறார் ப்ரியா பாலா. செப்டம்பர் 30 இரவு பன்னிரண்டு மணிவரை கூடுதல் விதிகளை வரவேற்கிறேன்.

எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரியில் கம்யூனிகேஷன் மாணவிகளுக்குத் திரைக்கதை எழுதுவது பற்றி ஒரு வகுப்பு எடுத்தேன். Structure பற்றி மேல்நாட்டு உதாரணங்கள் சொல்லாமல், 'ரோஜா', 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்', 'முதல்வன்', 'தில்சே', 'லகான்', 'தில் சாஹ்தாஹை' போன்ற இந்திய சினிமாக்களிலிருந்தே உதாரணம் கொடுத்தது அவர்களுக்குப் பிடித்திருந்தது.



தற்செயலாக மாணவிகளிடையே 'தற்போது யாரார் hot?' என்று கேட்டபோது ஆச்சரியங்கள் கிடைத்தன. அவர்களுக்கு ஹீரோயின்கள் யாரையும் பிடிக்கவில்லை. ஹீரோக்களில் ஹ்ரித்திக் ரோஷனைப் பிடிக்கவில்லை! கேள்விப்படாத பெயர்கள் எல்லாம் சொல்கிறார்கள். 'அமீர்கான்தான் தற்போது நம்பர் 1' என்று தெரிகிறது!

எம்.ஓ.பி., ஒரு முக்கியமான பெண்கள் கல்லூரியாக உயர்ந்து வருகிறது. "நுங்கம்பாக்கத்தில் சற்று நெருக்கடியான பகுதியில் இருப்பதால், தினசரி அத்தனை இளம்பெண்கள் எப்படி டிராஃபிக்கைச் சமாளித்து வருகிறார்கள்..?" என்று கவலையுடன் கேட்டபோது, அதிகாலை டிராஃபிக்கே இவர்களால்தானாம்! பெரும்பாலானோர் தத்தம் கார்களிலோ, மோட்டார் சைக்கிள்களிலோ வந்திறங்குகிறார்களாம்!

நான் பி.எஸ்ஸி. படித்தபோது, வேகுவேகு என்று ரயிலடியிலிருந்து காலில் செருப்பில்லாமல் ஆண்டார் ஸ்ட்ரீட்டில் நடந்து சென்றது ஞாபகம் வந்தது. காலேஜிலேயே மொத்தம் பத்துப் பேர்தான் சைக்கிளில் வருவார்கள். மற்ற பேர் எல்லாம் ரூட் நம்பர் 11-தான்(நடை)!

சினிமா, டெலிவிஷனின் அடுத்தகட்ட நடிகைகளும் இயக்குநர்களும் எழுத்தாளர்களும் இங்கிருந்து வரலாம் எனத் தோன்றுகிறது. இறுதியில், அவர்களுக்கு ஒரு பயிற்சி கொடுத்தேன்.

"இந்த கிளாஸ் நடந்ததே, இதையே ஒரு பக்கம் திரைக்கதையாக எழுதுங்கள்" என்றேன். பெரும்பாலானோர் 'சுஜாதா உள்ளே வந்தார். பிரின்சிபால் அறிமுகப்படுத்தினார்...' இப்படி நடந்ததை ஒரு கட்டுரை வடிவில்தான் எழுதி இருந்தார்கள்.

ஒரே ஒரு பெண் நேரடியாக பிரின்சிபால் மைக்கில் பேசுவதிலிருந்து ஆரம்பித்து, பேசிக் கொண்டிருக்கும்போது கவனத்தை மாணவிகளின் பக்கம் நகர்த்தி, அவர்களின் விதவிதமான செய்கைகளை எழுதியிருந்தார். ஒரு பெண் Storyboard பண்ணியிருந்தார்.

A set of bright girls!


'நீங்கள் கவிதை எழுதியதில்லையா..?' என்று பலர் கேட்கிறார்கள். 1988-ல் பெங்களூரில் ஒருமுறை கடும் ஜுரத்தில் படுத்திருந்தபோது, சடசடவென்று ஒரு சிறிய நீலநோட்டில் கவிதை எழுதி நிரப்பினேன். அதை 'காவ்யா' சண்முகசுந்தரம் பத்து வருஷமாக அவ்வப்போது வெளியிட்ட, மொழிபெயர்த்த, மேற்கோள்காட்டிய மற்ற கவிதைகளுடன் சேர்த்து, நிறைய இடம் விட்டு, ஓர் ஒல்லியான தொகுப்பாகப் பதிப்பித்தார் (நைலான் ரதங்கள்).


அதில் 'உடல் கவிதை' என்கிற ஒரு கவிதையை இன்னும் சில புண்ணியாத்மாக்கள் நினைவு வைத்துக் கொண்டு சொல்கிறார்கள். அதை எழுதிய சந்தர்ப்பம் விநோதமானது. 'குங்குமம்' பத்திரிகையின் ஆசிரியராக சாவி இருந்த சமயத்தில், ஒரு முறை பாலகுமாரனையும் சுப்ரமண்ய ராஜுவையும் ஓர் இதழ் தயாரிக்கச் சொல்லியிருந்தார். சாவி இம்மாதிரி அடிக்கடி செய்வார்.

அவருடைய 'சாவி' இதழையே ஒரு வாரம் நான் தயாரித்திருக்கிறேன் (இந்தியப் பத்திரிகைகளின் சரித்திரத்தில் முதன்முறையாக ஒரு குழந்தையை அட்டைப்படத்தில் போட்டேன். நடுப்பக்கத்தில் ஒரு nude!). பாலகுமாரன் எனக்குக் கடிதம் எழுதி, 'உங்களிடம் இருந்து கதை வேண்டாம். கதை கமல்ஹாசன் எழுதியிருக்கிறார் (கொப்பளம் என்று ஞாபகம். இன்றைய ஆளவந்தான்). நீங்கள் ஒரு கவிதை எழுதி

அனுப்புங்கள், போதும்' என்று அன்புக்கட்டளையிட...

ஒரு இன்லண்ட் லெட்டரில், சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு பற்றி ஒரு கவிதை எழுதி 'உடன் கவிதை' என்று முன்குறிப்பிட்டு அனுப்பியிருந்தேன். அது 'உடல் கவிதை' என்று கம்போஸ் ஆகிவிட, அந்தப் பெயரே அதற்கு நிலைத்தது. கவிதை என்னவோ குழந்தைகள் ஆண்டைப் பற்றிய சற்றே குறைபட்ட எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் மூன்று பாக்கள்:





'கோயிலுக்குப் பக்கத்தில் கார்துடைக்கக் காத்திருப்பாய்
கூட்டமுள்ள ஒட்டல்களில் சாப்பிட்டவுடன் ப்ளேட்டெடுப்பாய்
பாயின்றிப் படுத்திருப்பாய், ப்ளாட்பாரத்தில் குளிப்பாய்
பட்டறையில் வெட்டிரும்பால் பகலிரவாய்த் தட்டிடுவாய்

சாயங்கால சமுத்திரத்தின் அருகில் சுண்டல் விற்பாய்
சந்துகளில் இருட்டில் பெண்களுக்காய்ஆள் பிடிப்பாய்
வாய்மொழியின் வார்த்தைகளில் வயதை மீறிடுவாய்
வழியெல்லாம் கிடக்கின்ற ப்ளாஸ்டிக் பொறுக்கிடுவாய்.

காஜா அடிப்பாய் கட்டடத்தில் கல்லுடைப்பாய்
காரடியில் படுத்திருந்து கறுப்பாய் எழுந்திருப்பாய்
மேஜை துடைப்பாய் மேட்டினியில் இடிபடுவாய்
மெதுவாக என்னிடத்தில் கறுப்பிலே சீட்டுவிற்பாய்
கூஜா எடுத்துப்போய் 'குடி'தண்ணீர் கொணர்வாய்
கூட்டத்தில் கரைந்து பாக்கெட்டைக் கத்தரிப்பாய்
ராஜாவே உனக்கென்றே நாங்கள் இவ்வருஷம்
ராஜ்யம் முழுவதுமே விழாவெடுக்கப் போகின்றோம்

திரைப்படங்கள் எடுப்போம் தின்பண்டம்

தந்திடுவோம்

தீவிரமாய் உன்நிலையை உயர்த்துவது பற்றி
வரைபடங்கள் வரைந்து, வாதாடி, புகைபிடித்து
வருங்காலக் கனவுகளை வண்ணங்களாய்த்

தருவோம்

குறைப்பட்டுக் கொள்ளாதே கொஞ்சநாள்

பொறுத்திரு

கூட்டங்கள் கூட்டி, குளிர்சாதன அறைக்குள்
சிறைப்பட்டுச் சிந்தித்து சீக்கிரமே

முடிவெடுப்போம்

சில்லறையாக இல்லை, போய்விட்டு அப்புறம்

வா...

இந்தக் கவிதை, என்.பி.இ.எல். நண்பர் கே.எஸ். விசுவநாதன் மொழிபெயர்க்க, மலையாளத்திலும் வந்தது. அதன்பின் கவிதாசையைக் கணிசமாகக் குறைத்துக் கொண்டு, கவிதாலோகம் பிழைத்துப் போகட்டும் என்று விட்டுவிட்டேன். இப்போதும் எப்போதாவது தலை அரிக்கும்போது, சிங்கப்பூர் அரவிந்தன் முஸ்தாஃபாவிலிருந்து

வாங்கிவந்த சிறிய அழகான நோட்டு ஒன்றில் ஹைக்கூ கவிதைகள் எழுதுவேன் அல்லது மயிலாப்பூர் ராயல் சலூனில் முடிவெட்டுக்குச் செல்வேன்.

**ஆ**ரம்பத்தில் கேட்ட கேள்விக்கு விடை - அத்தனையும் தமிழ்ச்சொற்கள் அல்ல, தெலுங்கு!

# ஆரோக்கிய காரணங்ள்!



இசைக்கலைஞர்கள் சசிகிரண், சௌம்யா, அட்வகேட் மோகன் பராசரன் மூவரும் இணைந்து நடத்தும் கர்னாடிக்கா டாட் காம் (carnatica.com), பிரிட்டானியாவால் சிறந்த இசை வலைத்தளம் என்கிற பாராட்டுப் பெற்றது. இதன் ஆண்டுவிழாவில், தேவகாந்தாரி ராகத்தின் (க்ஷீர சாகரா என்னும் உருக்கமான தியாகராஜ கீர்த்தனை இந்த ராகத்தில் மறக்க முடியாதது) ரசானுபவத்தைக் கொடுக்கும் அடர்தகடை (சிடி) ஜஸ்டிஸ் பிரபா ஸ்ரீதேவன் வெளியிட, பெற்றுக்கொண்டேன்.


'டெக்னாலஜி என்பது வரமா, சாபமா?' என்று ஒரு பட்டிமன்றம் நடந்தது. பெரியவர்கள் 'டெக்னாலஜி வேண்டாம்' என்றார்கள். இளைஞர்கள் 'வேண்டும்' என்றார்கள். டெக்னாலஜியைப் பயன்படுத்துவதில் உள்ள அபாயத்தைக் குறிப்பிட்டேன்.

கொஞ்சம் அபசுரமாகப் பாடினாலும் சுமாராகப் பாடினாலும் அதை டெக்னாலஜியை வைத்துச் சரிக்கட்டிவிடுவது எவ்வளவு தூரத்துக்கு விரும்பத்தக்கது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். டெக்னாலஜி இந்தக் கலையை எளிமைப்படுத்துகிறது, சற்றுப் பாமரப்படுத்துகிறது.

குருவுக்கு வேஷ்டி துவைத்துப் போடும் காலங்களை நாம் கடந்து விட்டது என்னவோ நிஜம். இது உப்பா, சர்க்கரையா..?

தினசரி வானத்தில் எரிகற்களைப் பார்க்கிறோம். அண்மையில், அமெரிக்காவில் வானில் விநோதத் தீற்றல்களைக் கண்டு, 'விண்வெளியில் இருந்து யாரோ விஜயம் செய்கிறார்கள்' என்று பயந்து, கடைசியில் 'அது ரஷ்ய விண்கலங்களின் மிச்சம். நம் காற்று மண்டலத்தில் மறுபிரவேசம் செய்யும் போது எரியும் தீற்றல்' என்று

கண்டுபிடித்தார்கள்.



1987-ம் ஆண்டு, பிப்ரவரி 23-24 இரவு இயான் ஷெல்டன் என்ற கனடா தேசத்து வானவியலாளர், தென்அமெரிக்க சிலி நாட்டு ஆண்டிஸ் மலைகளின் உச்சியில் இருந்த ஒரு வான்வெளி ஆராய்ச்சி மையத்தில் வானத்தை நோக்கிக் கொண்டிருந்தபோது, அவருடைய உதவியாளர் விண்வெளியில் 'மெகெல்லன் மேகம்' என்கிற பகுதியில் ஒரு புதிய நட்சத்திரம் இருப்பதைக் கவனித்தார். 'நேற்றுவரை இல்லை. இது எப்படி வந்தது..?' என்று கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தார். செய்தி உலகெங்கும் பரவி, எல்லா வானவியல் ஆராய்ச்சியாளர்களும் மெகெல்லன் மேகத்தை நோக்க... அவர்களும் புதுசாகப் பிறந்த அந்த நட்சத்திரத்தைப் பார்த்தனர்.

அது ஒரு சூப்பர்நோவா.

இது விண்ணில்.

அதே தினங்களில் பூமியில் மண்ணுக்கடியில் ஜப்பானில் காமியோக்கா துத்தநாகச் சுரங்கத்தில் வைத்து இருந்த ஒரு பரிசோதனைச் சாலையில் ப்ரோட்டான் டீகே (Proton decay) என்னும் மிக அரிதான ஒரு நிகழ்ச்சி, ஏறக்குறைய பதினெட்டு தடவை நிகழ்ந்தது. இது இரண்டையும் முடிச்சுப் போடும்போது, அந்த நிகழ்ச்சி தன்னுடைய பாரம் தாங்காது வெடித்து மடிந்த ஒரு நட்சத்திரத்தின் கடைசி நாட்கள் என்று தெரிந்தது.

இம்மாதிரியான சூப்பர் நோவா நிகழ்ச்சிகள் நூற்றாண்டுக்கு ஓரிரு முறை தெரிகின்றன. அந்தச் சமயத்தில் நாம் கோடிக்கணக்கான ந்யூட்ரினோ துகள்களால் தாக்கப்படுகிறோம். இதை நம்மால் கண்டுகொள்ளவே முடியாது. நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்போம். ந்யூட்ரினோ என்பது, எந்தவித மின்சார குணமும் இல்லாத மிகச் சிறிய துகள். இவை வந்து போனது பூமிக்கடியில் ப்ரோட்டான் வீழ்ச்சிகளால்தான் தெரியும்.

நம் சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். இப்படி சூப்பர் நோவா போல வெடித்துச் சாகும் பயம் அதற்கு இல்லை. காரணம், சூரியன் அத்தனை பெரிய நட்சத்திரம் அல்ல. இந்த நடுத்தர வயது நட்சத்திரத்துக்கு இன்னும் சில நூறு கோடி வருஷங்கள் வாழ்வு இருக்கிறது. அதன்பின் அது ஒரு சிவப்பு பூதமாகிக் கொஞ்சகாலம் வாழும். அப்போது பூமி சூடாகி வாழ முடியாமல் போய், நெருப்புப் பிழம்பாகப் பைத்தியம் போலப் பிடிவாதமாகச் சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கும். கடைசியில் சூரியன், பூமி, கிரகங்கள் அத்தனையும் அழிந்துபோகும். இதற்கு நானூறு கோடி வருஷம் இருக்கிறது.

யோசித்துப் பார்த்தால், நம் பிரபஞ்சம் முழுவதும் ஹைட்ரஜன் ஹீலியம்தான். எப்போதாவது இம்மாதிரி பலமான சூப்பர் நோவா நட்சத்திரச் சிதறல்களில் ஹைட்ரஜன், ஹீலியம் தவிர, கார்பன், ஆக்ஸிஜன் என் மற்ற கனமான தனிமங்கள் கொஞ்ச கொஞ்சம் உண்டாகி, அதனால்தான் உயிரே உண்டாயிற்று. இதனால் நாம் எல்லோரும் இறந்த நட்சத்திரங்களின் சாம்பலில் பிறந்தவர்கள். எதற்காகவோ சுப்ரீம் கோர்ட்டில் சின்னச் சின்ன விஷயங்களுக்காக வாதாடுகிறோம்.

எனது மாமனார் ராமரத்னம் அவர்களின் தொண்ணூறாவது பிறந்த தினத்தை அண்மையில் கொண்டாடினோம். அமெரிக்காவிலிருந்து ஆழ்வார்பேட்டை வரை அனைவரும் கூடி, ஆசீர்வாதம் பெற்று போட்டோ எடுத்துக்கொண்டோம்.

ராமரத்னம் அவர்களைப் பார்த்தால், தொண்ணூறு வயசு என்று சொல்ல முடியாது. 1993-ல் எனக்கு இதய ஆபரேஷன் நடந்தபோது, என்னைத் தினமும் மெரீனாவில் 'மாப்பிள்ளை, பார்த்து வாங்கோ' என்று அழைத்துச் செல்வார். 'என்ன சார், தலைகீழாக இருக்கிறது!' என்று வியப்பேன்.

ராமரத்னம் தொண்ணூறிலும் ஆரோக்கியமாக இருப்பதற்கான காரணங்களை யோசித்துப் பார்க்கையில், எனக்கு நான்கு விஷயங்கள் முக்கியமானதாகப் படுகிறது.

1. எதிலும் நிதானம். குறிப்பாகச் சாப்பிடுவது. அவருடன் சாப்பிட உட்கார்ந்தால், அவர் குழம்பு சாதம் சாப்பிடுவதற்குள் நான் சாப்பிட்டு முடித்து, மத்தியான டிபன் ரேஞ்ச்சுக்கு வந்துவிடுவேன்.

2. அவருடைய வாழ்நாளில் வந்த பிரச்னைகள் எதுவும் அவரைப் பாதிக்கவில்லை. கவலையே படமாட்டார். நம்பிக்கை இழக்க மாட்டார்.

3. எதற்கும் பதற்றப்பட மாட்டார். உதாரணம், ஒரு முறை சென்ட்ரல் ரயில்நிலையத்துக்கு போன் செய்தார். 'கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் எப்போது வரும்..?' என்று கேட்டார். 'இருபத்துநாலு மணி நேரம் லேட் சார்' என்று பதில் வந்தது. 'தாங்க்யூ' என்று வைத்துவிட்டார்.



"என்ன சார், உங்களுக்குக் கோபம் வரவில்லையா..? இருபத்துநாலு மணி நேரம் லேட் என்கிறான்... 'என்ன ரயில் ஓட்டுகிறான்கள்' என்று ஒரு திட்டாவது, அலுப்பாவது வேண்டாமா..?"

"அவங்களுக்கு ஏதாவது பிராப்ளம் இருக்கும். வந்துடும்... மேக்-அப் பண்ணிடுவான்!"

பரிபூரண ஆப்டிமிஸ்ட்!

4. அவர் குடும்பத்தில் லாஞ்செவிட்டி இருக்கிறது. அவருடைய தமையனார் நாராயண சாமி அவர்கள் தொண்ணூற்று மூன்று.

நீண்டநாள் வாழப் பாதி காரணம் ஜெனடிக், பாதி காரணம் வாழ்க்கை

முறை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

இருநூறு கவிஞர்களின் இருநூறு ஹைக்கூவுடன் வந்திருக்கும் 'ஏழை தாசன்' மே - ஜூன் சிறப்பிதழில் நான்கு கவிதைகள் எனக்கு ஹைக்கூ அனுபவம் தந்தன:

பகலில் சூரியன்
இரவில் நிலா
தங்கிட ஒரே கிணறு

- பொன். குமார், சேலம்-6.

இரண்டு லாரிகள் மோதல்
இரண்டின் முகப்பிலும்
அம்மன் துணை

- நாகை ஆசைத்தம்பி, கோவை-11.

ஐயனார் தோளில் அமர்ந்து
வாலை ஆட்டும்
குருவி

- வலம்புரி லேனா, திருவாலம்பொழில்.

கயிற்றில் நடப்பவன்
கவனம் முழுவதும்
காவி டப்பாவில்

- கி. செல்வக்குமரன், திருப்பூர்.


இதழிலே சிறந்த (சற்றே திருத்திய) இந்த ஹைக்கூவுக்குப் பாராட்டுக்கள்.

# செப்டம்பர் பதினொன்று!



காட்டராக்ட் என்றால் நீர்வீழ்ச்சி என்று ஒரு அர்த்தம் இருக்கிறது ஆங்கிலத்தில். அதற்கும், வயசாவதால் கண் லென்ஸின் மேல் படியும் திரைக்கும் என்ன சம்பந்தம் என்று யாராவது மொழி இயலாளர்கள் சொல்லலாம்.

சென்ற வாரம் காட்டராக்ட் ஆபரேஷனுக்காக டாக்டர் கே. ரவி அவர்களிடம் சென்றிருந்தேன். இப்போதெல்லாம் இந்த சிகிச்சை மிக மிக சுலபம். காலை எட்டரைக்கு ஆபரேஷன் என்றால் எட்டே காலுக்கு இசபெல்லாவுக்குப் போனேன். 'வாங்க' என்று ஒரு கவுனையும், தலையில் தொப்பியையும் மாட்டி ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தார். கண்ணுக்கருகில் மரத்துப்போக ஊசி போட்டார். மற்ற கண்ணை மூடிவிட்டு இதற்கு மட்டும் ஜன்னல் பண்ணிக் கொண்டு என்னவோ செய்தார். எனக்கு நிறைய மாடர்ன் ஆர்ட் வகை சலன சித்திரங்களும் பிரம்மராஜன் கவிதை வரிகளும் தெரிந்தன. பேசிக்கொண்டே பதினைந்து நிமிஷத்தில் முடித்தார். ஒரு நாள் ரெஸ்ட். மறுநாள் கட்டை நீக்கினார். உலகமே பளிச் சென்று தெரிய ஆரம்பித்தது. 'கொஞ்சம் அதிக பளிச்' என்றேன். 'பழக பதினைந்து நாளாகும்' என்றார்.



டாக்டர் பி. கிருஷ்ணன்

கண் ஆபரேஷன் என்றால் எல்லோரும் தவறாது கேட்கும் கேள்வி... லேசரா என்பது. கண் ஆபரேஷனை லேசரில் செய்து கொள்வதுதான் இப்போது ஃபேஷன் என்பதுபோல் ஆகிவிட்டது. இது ஒரு தவறான கருத்து. லேசர் என்பது கண்ணின் கார்னியாவின் ஷேப்பை மாற்றி லென்ஸின் குவிதூரத்தை (focal length) திருத்துவதற்காக பிரதானமாகப் பயன்படுகிறது. இது எக்சைமர் லேசர் மூலம் செய்யும் PRK என்னும் சிகிச்சை முறை. காட்டராக்ட் போன்ற அறுவைசிகிச்சையில் கத்திக்குப் பதிலாக அதைக் கண்ணில் பயன்படுத்துவதில் பல தயக்கங்கள் இருக்கின்றன. அவை பரிசோதனை முயற்சிகளாகத்தான் இருக்கின்றன. எனவே, எனக்கு டாக்டர் ரவி செய்தது சம்பிரதாயமான, நுட்பமான சர்ஜரிதான்.

டாக்டர் ரவி அவர்களின் தகப்பனார் டாக்டர் பி. கிருஷ்ணன் அண்மையில் இறந்துபோனார். அவர் ஏழைகளுக்கு இலவச வைத்தியம் பண்ணி வீட்டு வேலைக்காரர்களுடன் ஒரே மேஜையில் சாப்பிட்ட கம்யூனிஸ்ட். சடங்குகளில் நம்பிக்கை இல்லாதவர். தான் இறந்ததும் தன்னுடைய உடல் பாகங்கள் அனைத்தும் மெடிக்கல் காலேஜுக்கு பாடத்துக்கும் ஆராய்ச்சிக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் அனுமதி வாங்கி இருந்தார் (தமிழ்நாட்டில் கண்களுக்கு மட்டும்தான் அனுமதியாம்).

அவர் இறந்ததும் சென்னை பொது மருத்துவமனை டீனுக்கு ரவி போன் பண்ணபோது, 'இங்கே ஏராளமான அநாதைப் பிணங்கள்

இருக்கின்றன. அவற்றுடன் உங்கள் அப்பாவையும் சேர்த்துக்கொள்ளச் சொல்கிறீர்களா?' என்று கேட்டார்களாம். கண்களை மட்டும் தானம் செய்துவிட்டு உடலைத் தகனம் செய்தார்களாம்.

இந்திய நாட்டில் உடல்களுக்குப் பஞ்சமே இல்லை... நல்ல உள்ளங்களுக்குத்தான்.

**வி**கடனில் நான் எழுதிய 'சிவந்த செவ்வாய்' கட்டுரை பற்றி தினம் ஐம்பது மின்னஞ்சல்கள் இன்னும் வருகின்றன. விகடன் அலுவலகத்திலும் நிறைய கடிதம் வந்ததாகச் சொன்னார்கள்.

என் இ-மெயில் முகவரிக்கு கடிதம் அனுப்புபவர்களிடம் ஒரு வேண்டுகோள்... சுருக்கமாக எழுதுங்கள். ஒரு ஸ்க்ரீனுக்கு மேல் படிக்க எனக்கு அவகாசம் இல்லை. வைரஸ் அபாயம் இருப்பதால் எந்தக் கோப்பையும் இணைக்காதீர்கள். அவற்றை நானே விருப்பப்பட்டால் நெட்டில் பார்த்துக்கொள்ள முடியும்.

எனக்கு வந்த கடிதங்களில் சில குறிப்பிடத்தக்கவை...

அரபு நாட்டில் வாழும் ஒரு முஸ்லிம் அன்பர் 'ஓக்லஹோமா வெடிகுண்டு விபத்தில் சம்பந்தப்பட்டது ஒரு முஸ்லிம் அல்ல... வெள்ளையர்தான். அவர் அண்மையில் தூக்கிலிடப்பட்டார்' என்று குறிப்பிட்டிருந்தார். உண்மைதான். நான் ஓக்லஹோமாவை உதாரணித்தது வேறு காரணத்துக்காக... அந்த மாதிரியான விபத்து நடந்திருந்தும் ஜாக்கிரதை உணர்வு இல்லாமல் அசால்ட்டாக இருந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவே! 'இஸ்லாமையும் தீவிரவாதத்தையும் எப்போதும் முடிச்சுப் போட முடியாது' என்று நண்பர் கூறிய கருத்துடன் எனக்குச் சம்மதமே. பிரிட்டிஷ் பிரதமர் டோனி ப்ளேய்ர் பார்லிமெண்டில் சொன்னது நினைவுகூரத்தக்கது. 'Do not blame islam' என்றார்.

அமெரிக்காவாழ் இந்தியர்கள் பலர் என்னிடம் கோபித்துக் கொண்டு எழுதி இருக்கிறார்கள். 'இந்தியா என்ன வாழ்கிறதாம்..? இது மட்டும் இந்தியாவில் நேர்ந்திருந்தால் நாறிப் போயிருப்பீர்கள். ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டிக் கொண்டே இருப்பீர்கள்' என்கிற தொனியில் கடிதங்கள் - அத்வானி, லல்லுபிரசாத் சம்பந்தப்பட்ட ஊசிப்போன ஜோக்கெல்லாம் இணைத்து வந்தன. நான்

இந்தியா உசத்தி என்று அந்தக் கட்டுரையில் எங்கும் எழுதவில்லை. அத்தனை பெரிய துர்ச்செயல் அமெரிக்காவில் நடைபெற்றதற்குக் காரணம் கண்டுபிடிக்கத்தான் முயன்றேன். காரணங்களை யோசிக்கக் கூடாதா? மேலும் அமெரிக்காவை சிலாகித்துப் பேச இந்தியாவைத் தாழ்த்திப் பேச வேண்டும் என்பது கட்டாயமில்லை.

இந்த 11-ம் நம்பரை வைத்து எதைக் கூட்டினாலும் பதினொண்ணு வருகிறது. அந்த இரட்டைக் கட்டடமும் பதினொண்ணு வடிவத்தில் இருந்தது போன்ற விநோதமான குறிப்புக்களை ஒரு கோஷ்டி ஓட்டிக் கொண்டிருக்கிறது. நம்பர் தியரிப்படி எண்களை இவ்வாறு கூட்டும்போது கடைசிவரை ஒற்றை இலக்கம் வரும்வரை கூட்ட வேண்டும். அதை டிஜிட்டல் ரூட் என்பார்கள். உதாரணமாக, 342656 என்கிற எண்ணின் டிஜிட்டல் ரூட் 3+4+2+6+5+6=26 என்பதைத் தொடர்ந்து கூட்டி 2+6=8 என்பதுதான். அதன் டிஜிட்டல் ரூட் மாடுலோ அரித்மெட்டிக்கிலும் ஏன், நியூமராலஜியிலும் அப்படித்தான். அதன்படி 11 என்பதன் மூலம் 1+1=2 ஆகிறது. கட்டடம் 2 போல வளைந்து இல்லை. எனவே, 11 பற்றிய அனைத்து செய்திகளும் புரளியாகிறது.





மற்றும் சிலர் 'நாஸ்ட்ரடாமஸ் எல்லாம் சொல்லிவிட்டார். ஒன்பதாவது மாசம் பதினொன்றாம் நாள் இரும்புப் பறவை, இரண்டு சகோதரர்கள், இரண்டு கட்டடங்கள் இடிக்கும். ஒரு பெரிய வல்லரசு கவிழும் என்றெல்லாம் துல்லியமாக பதினாறாம் நூற்றாண்டிலேயே எழுதி வைத்திருக்கிறார்' என்று புரளி செய்கிறார்கள். அவ்வளவு தெள்ளத் தெளிவாக இருந்தால் அமெரிக்கா இந்தத் தாக்குதலைத் தவிர்த்திருக்க முடியுமே. 'பாரப்பா... நாஸ்ட்ரா மாமா இரும்புப் பறவை என்று சொன்னது ஏரோப்ளேன். அதனால் விமான நிலையங்களில் பாதுகாப்பை அதிகரிக்கலாம். 11 என்பது நியூயார்க்கின் ட்வின்

டவர்கள். அதனருகில் ஒரு ஃபைட்டர் ஜெட் விமானத்தை ரோந்து சுற்ற விடலாம்' என ஏற்பாடுகள் செய்திருக்கலாம். தேதி, மாதம் எல்லாம்தான் தெரியும் என்கிறார்களே!

இதைவிட விநோதம், அந்த ஃப்ளைட் நம்பரை மைக்ரோசாஃப்ட் வேர்டில் அடித்து விங்டிங்ஸ் என்று ஃபாண்ட்டைத் தேர்ந்தெடுத்துப் பார்த்தால் ஒரு விமானம், இரண்டு கட்டடங்கள், ஒரு இஸ்ரேல் வகை டேவிட் நட்சத்திரம் தெரிகிறது. எந்த அளவுக்கு வேலை கெட்ட வேலையாக ஜனங்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது மற்றொரு உதாரணம். அவ்வளவு பெரிய சம்பவத்துக்கு அற்பமான காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான காரணம் சரித்திரத்தில் இருக்கிறது. நடந்தது மிகவும் அனுதாபத்துக்கும் வருத்தத்துக்கும் கண்டனத்துக்கும் உரிய விஷயம். அமெரிக்க மக்கள் இவ்வளவு பேரிடியைத் தாங்கிக் கொண்டதும் அதில் காட்டிய தைரியமும் ஒற்றுமையும் தேசப்பற்றும் வியக்கத்தக்கவை. இந்தச் சம்பவத்தின் முக்கியத்துவத்தை நாம் முழுவதும் புரிந்துகொள்ள ரொம்ப நாளாகும். இதன் நிழல் நூற்றாண்டின் இறுதிவரை படியும் என்பதில் சந்தேகமில்லை. தற்போது யாரைத்தான் நோவது என்கிற பிரமிப்பில் இருக்கிறது உலகம்.

# ஹார்ட் அட்டாக்!



இந்த வாரம் வந்த மின்மெயில்களில் மூன்று விநோதமானவை. திருச்செல்வன் அனுப்பிய கடிதத்தில் சில விண்டோஸ் வார்த்தைகளுக்குத் தூய தமிழ் தந்திருக்கிறார். உதாரணம் open - தொற நைனா, close - பொத்திக்கோ, print preview - பார்த்து பிரிண்ட் அடி, view-லுக்கு வுடு, Save-வெச்சுக்கோ, save as -ஐயே இப்படி வெச்சுக்கோ, move -ஜகா வாங்கு, zoom -பெர்சா காட்டு, exit - ஓட்ரா டேய்!

இம்மாதிரி தமிழில் சொன்னால் கணிப்பொறி அறிவு எளிதாகப் பரவும் என்று நம்புகிறார் திருச்செல்வன்.

மற்றொரு கடிதம் 'இதைப்போல் விந்தை உண்டா?' என்று கேட்டு அமெரிக்காவின் இரட்டை நெட்டைக் கட்டடம் இடிந்து விழுவதற்கு இரண்டு செகண்டுகள் முன், அதன் மாடியின் உச்சியிலிருந்து ஒரு டூரிஸ்ட் எடுத்துக்கொண்ட படம் என்று அனுப்பி இருந்தார்கள். ஏரோப்ளேனைக் கவனிக்கவும். இந்தப் படம் 'உட்டாலக்கடி'யோ என்று நினைத்த நேரத்தில் இன்னொரு படம் பார்த்தேன். அதே மாடி.. அதே இடம்.. நின்றிருந்த மனிதர் - பின் லேடன்!

மூன்றாவது மெயிலை பலர் எனக்கு காப்பி அனுப்பியிருந்தனர். 'போரில் தாலிபான் வெற்றிபெற்றால்..?' என்று கேட்டு இரண்டு படங்கள் இணைத்திருந்தார்கள். ஒன்றில், புஷ் தலையில் ஒஸாமா வகை தலைப்பாகை, முகத்தில் வெண்தாடியுடன் தோற்றமளிக்கிறார். மற்றதில் சுதந்திரதேவி சிலையின் முகம் முஸ்லிம் பெண்கள் போலத் திரையிட்டு மூடியிருக்கிறது.

எதைத்தான் தமாஷ் பண்ணுவது என்று விவஸ்தை இல்லாதவர்கள் இன்டர்நெட்டர்கள்.

"அப்பப்போ ஹார்ட் அட்டாக்கைத் தவிர, மற்றபடி நான் நலமாகவே இருக்கிறேன்" என்றார் ராபர்ட் பென்ச்லி. செப்டம்பர் 30 உலக இதய தினம். இதயத்தில் கோளாறு வந்து, இருமுறை ரிப்பேர் பண்ணிக் களம் கண்டு கேடயம் வாங்கினவன் என்கிற தகுதியில் கீழ்க்காணும் விவரங்கள் மெல்லிதயர்களுக்குப் பயனுள்ளவையாக இருக்கும். வால்வு கோளாறுகளுக்கும் இதயத்துக்கு ரத்தம் தரும் கரானரி ஆர்ட்டரி கோளாறுகளுக்கும் வித்தியாசம் தெரிந்து கொள்ளுங்கள். வால்வு உள்ளே. குழாய் வெளியே.

'ஓப்பன் ஹார்ட் சர்ஜரி' என்கிற பதம் எல்லா இதய அறுவைசிகிச்சைக்கும் பொது அல்ல. 'பைபாஸ்' என்னும் மாற்று வழி பண்ணும்போது இதயத்தைத் திறக்க மாட்டார்கள். மார்புக் கூட்டைப் பிரித்து இடம் பண்ணிக்கொண்டு இதயம் அசக்காமல் இருக்க அதை நிறுத்தி வைப்பார்கள். அப்போது வெளியிலிருந்து ஹார்ட்-லங் மெஷின் மூலம் உயிர் வாழ்வீர்கள்... அவ்வளவுதான் (ஆபரேஷன் முடிந்து மெஷினை நீக்கி, மறுபடி இதயத்தைத் துடிக்கவைக்கும்போது கொஞ்சம் டென்ஷன்).

எப்போது ஆபரேஷன் தேவைப்படும்? மாடிப்படி ஏறும்போதோ, கொஞ்ச தூரம் நடக்கும்போதோ அல்லது சாப்பிட்டவுடனோ நெஞ்சு அடைத்தால், படபடவென்று வந்தால் அல்லது தாடையில், இடது கையில் வலி ஏற்பட்டால் உத்தரவாதமாக ஹார்ட் சரியில்லை என்று சொல்லலாம். இதற்கு ஆன்ஜைனா என்று பெயர். ரெஸ்ட் ஈ.சி.ஜி வெத்து. ஒரு சரிவில் நடக்க வைத்து எடுக்கிறார்களே ஸ்ட்ரெஸ் டெஸ்ட்.. அதுதான் சரியான முறை. அதில்தான் கண்டுபிடிக்கிறார்கள். அதுவும் சாதாரண டாக்டர்களால் ஈ.சி.ஜி-யைச் சரியாகப் படிக்க முடியாது. அனுபவமுள்ள கார்டியாலஜிஸ்டுகள் வேண்டும். ஈ.சி.ஜி. வலிக்காது. உடம்பில் நாலைந்து இடத்தில் பசை தடவி எலெக்ட்ரோடுகளை வைப்பார்கள். காகிதத்தில் உங்கள் இதயத்தின் மில்லிவோல்ட்டுகள் பதியும்.

எக்கோ கார்டியோ கிராம் என்பது கேளா ஒலி அலைகளான அல்ட்ராசவுண்டைப் பயன்படுத்தி கம்ப்யூட்டர் மூலம் கணக்கிட்டுத் திரையில் காட்டுவது. இது ரத்தக் குழாய் அடைப்பை கண்டு பிடிக்கப் பயன்படாது. பொதுவாக இதயத்தின் இயக்கத் திறனை பம்ப்பின் ஆற்றலையும் வால்வு கோளாறுகளையும் கண்டுபிடிக்கத்தான் பயன் படுத்துவார்கள். செஸ்ட் எக்ஸ்ரே இதயம் பெரிசாகியிருக்கிறதா

என்பதை மட்டும் சொல்லும். உள்ளே எதுவும் காட்டாது.

ரத்தக்குழாய் அடைப்பை கண்டுபிடிக்க ஆன்ஜியோகிராம் என்று எடுப்பார்கள். தொடையிலிருந்து இதயத்துக்குப் போகும் ஒரு ரத்தக்குழாயில் மெலிதான கம்பியை இதயத்துக்கு அனுப்பி அதன் நுனியில் எக்ஸ்ரே கதிர்களை மறைக்கும் திரவத்தை இதயக்குழாய் அருகில் பீச்சி அல்லது பாய்ச்சி விடியோ எடுப்பார்கள். வலிக்காது. அந்தக் கணத்தில் மட்டும் உடம்பு முழுதும் காதல் வசப்பட்டதுபோல் சூடாக இருக்கும். இது சிகிச்சை அல்ல. 'ஆன்ஜியோப்ளாஸ்டி' தான் சிகிச்சை. அதே மாதிரிதான் அடைபட்ட குழாய்க்குத் தொடையிலிருந்து துவங்கி கம்பி மூலம் ஒரு பலூனை அனுப்பி அந்த இடத்தில் ஊதி சற்றே விரிவுபடுத்தி அடைப்பை நீக்கி 'ஸ்டெண்ட்' வைப்பார்கள். இது லேசாக வலிக்கும். மூன்று நாளில் வீட்டுக்கு வந்துவிடலாம். இந்த முறை சில சமயங்களில்தான் உதவும்.

சர்ஜரி செய்யவேண்டும் என்பதை கார்டியாலாஜிஸ்டும் சர்ஜனும் ஒப்புக்கொண்டபின் அந்த விடியோவை மற்றொரு நிபுணரிடம் காட்டி இரண்டாவது அபிப்பிராயம் வாங்கி அதன்பின் நீங்கள் சர்ஜரிக்கு ஒப்புக் கொள்ளலாம். இதில் தப்பு இல்லை. இது ஒன்றும் மிக சிக்கலான ஆபரேஷன் இல்லை. அப்பெண்டிக்ஸ் நீக்கத்தைவிட எளிதானது என்கிறார்கள். முக்கியம் சர்ஜனை உங்களுக்குப் பிடித்திருக்க வேண்டும்.

சர்ஜரிக்கு ஒண்ணரையிலிருந்து இரண்டு லட்சம் செலவாகும். சர்க்கார் மருத்துவமனைகளில் திறமையுள்ள டாக்டர்கள் இருக்கிறார்கள். அத்தனை செலவாகாது. ஆனால், கருவிகள் எல்லாம் வேலை செய்கிறதா என்று நிச்சயித்துக் கொள்ளவும். அட்டெண்டரைக் கேட்டால் சொல்வார். சர்ஜரிக்குப் பின் பதினைந்து நாளாவது ரெஸ்ட் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சர்ஜரி எல்லாம் நல்லபடியாக முடிந்தவுடன் தினம் நாற்பது நிமிஷம் வெறும் வயிற்றில் நடப்பதும் (ஓடக் கூடாது.. நெற்றி வியர்வை வரும் வரை நடக்க வேண்டும்) சாப்பிட்டவுடன் ரெஸ்ட் எடுப்பதும் சிகரெட் குடிப்பதை நிறுத்துவதும் கோபப்படாமல் இருப்பதும் அவசியம். ஹார்ட் அட்டாக் இளம் வயதில் வந்தால் அபாயம் அதிகம். லைஃப் ஸ்டைலையே மாற்றிக்கொள்ள வேண்டும். ஐம்பதுக்கு மேல் வரும் 'அட்டாக்'கள் பொதுவாக ஆளை அடிப்பதில்லை. பெண்களுக்கு ஹார்ட் அட்டாக் குறைவு. எனக்கு 1986-ல் ஒரு ஆன்ஜியோப்ளாஸ்டியும் 1988, 94

இரண்டு பைபாஸும் நிகழ்ந்தன. மற்றபடி நான் நலம்.



அண்மையில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டபோது சென்னைவாசிகள் பீதியடைந்து கடற்கரையோரம் படுத்துக்கொள்ளச் சென்றார்கள். சென்னை போன்ற கடலோரப் பகுதிகளில் வரும் நிலநடுக்கம் கடலில் மையம் கொண்டு இருப்பதன் சாத்தியம் அதிகம். அதனால் நிலநடுக்கம் தீவிரமாக இருந்தால் முதலில் கடல்தான் பொங்கும். ட்ஸுனமி என்னும் விளைவில் ராட்சசக் கடலலைகள் தோன்றும். சென்னைவாசிகள் கடற்கரைக்கு பத்திரம் தேடிச் சென்றது தப்பு என்று சிலர் சொல்கிறார்கள்.

நிலநடுக்கம் பலவகைகளில் ஜன மன நடுக்கத்தை ஏற்படுத்தியது. சன் டி.வி-யில் ஒருவர் 'கொசுமருந்து வாங்கிட்டிருந்தேங்க... கீள விளுந்திரிச்சு.. ஐயா, நான் எதுவுமே செய்யலாய்யா' என்று தேம்பித் தேம்பி அழுதார். நானும் மனைவியும் ஹாலில் உட்கார்ந்திருந்தபோது இருக்கை நடுங்கியது.

இம்மாதிரி நிலநடுக்கங்களை டெல்லியிலும் பெங்களூரிலும் உணர்ந்திருக்கிறோம். டெல்லியில் சுவரில் மாட்டியிருந்த படம் அல்லாடியது.. பெங்களூரில் கட்டில். எனவே, பயந்துபோய் வீதிக்கு உடனே ஓடத் தோன்றவில்லை.

கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலை கவிஞர் எனக்கு அனுப்பியிருந்தார். அண்மையில் மிகச் சிறப்பாக வெளியிடப்பட்ட தமிழ் நூல்களில் இது

ஒன்று. இப்போது தமிழில் வெளிவரும் நூல்கள் ஓரளவுக்கு அச்சு நேர்த்தி கொண்டிருப்பது சந்தோஷத்துக்குரிய விஷயம்.

'கள்ளிக்காட்டு இதிகாசம்', 'மேகங்களால் நிராகரிக்கப்பட்டு இயற்கையால் சபிக்கப்பட்டு கடக்கும்போது தேவதைகள் கண்மூடிக்கொள்ளும்' வறண்ட பிரதேசத்தில் வாழ்ந்த மனிதர்களைப் பற்றிய விஸ்தாரமான நாவல். இதை மூன்றாவது இதிகாசம் என்று சொல்வதற்கு அவகாசம் போதாது.

ஆனால், இதைப் படிக்கும் போது இதன் நுட்பமான விவரங்கள் எனக்கு பிரமிப் பளிக்கின்றன. மரம், செடி, கொடிகள், தானியங்கள், தட்டு முட்டுச்சாமான்கள், விநோதப் பழக்கங்கள், சினை மாடுகள், கர்ப்பஸ்திரீகள், செங்கொட்டையை எடுத்து சூரீர்னு ஊசியால் செருகினால் வரும் பாலை வைத்து வண்ணான் துணிக்குப் போடும் அடையாளக் குறிகள் வரை இத்தனை விவரங்களின் மத்தியில் வாழும் மனிதர்களின் மேம்பாடுகளும் குறைபாடுகளும் மிக யோக்கியமாக சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. வைரமுத்து என்கிற கவிஞரின் மிகை விருப்பத்தையும் உருவகங்களையும் உவமைகளையும் சற்றே அடக்கி வைத்து உண்மைக்கு மிக அருகே உலவவே முயன்றிருக்கிறார்.

இந்த நாவலின் மாந்தர்களும் கதைக்களமும் சாதி வழக்கங்களும் எனக்கு மிகவும் அந்நியப்பட்டாலும் என்னால் இதை ரசித்துப் படிக்க முடிந்தது. காரணம் - அந்த கதை மாந்தர்களின் சம மாந்தர்களை நான் ஸ்ரீரங்கத்தில் என் இளமையில் வேறு பெயர்களில், வேறு வேஷங்களில் சந்தித்திருக்கிறேன். நான் பேயத்தேவரை பார்த்ததில்லை. ஆனால், அதற்கு ஈடாக ஒரு பார்த்தசாரதி ஐயங்காரைப் பார்த்திருக்கிறேன்.

மனித இயல்பின் பொதுத்தன்மைகளைச் சரியாகச் சொல்லும்போது எந்தப் பிரதேசத்திலும் அது செல்லும். சிங்கர், ஹார்ப்பர் லீ, சல்மான் ருஷ்டி, வேத் மேத்தா, விக்ரம் சேத், அருந்ததி ராய் போன்றவர்கள் நாவல்களை நாம் ரசிக்க முடிவது இதே காரணத்தால் தான்.

வைரமுத்துவிடம் திரையுலகம் கேட்கும் மேம்போக்கான தற்காலிக வரிகளைக் குறை கூறுபவர்கள் உண்டு. அந்தத் திறமையும் வசதியும் இந்த நாவலை எழுதும் வைராக்கியத்தை ஏற்படுத்தியது பெரிய நன்மையே!

# பள்ளி காலம்!



ஸ்ரீரங்கத்தில் நவராத்திரியை எப்போதும் பெண்கள் சமாசாரமாகக் கருதி வந்தோம்.

சரஸ்வதி பூஜைக்கு புத்தகங்களை வைத்து அன்று பாடம் படிக்கவே - வேண்டாம் என்று அதிகாரபூர்வமான அறிவிப்பு மட்டும் இன்பமான விஷயம். சின்னப் பெண்கள் கோபாலகிருஷ்ணன், கீரைக்காரி போன்ற வேஷங்கள் போட்டுக்கொண்டு முகம் நிறைய பவுடரும் கண் நிறைய மையும் அப்பி சவுரி குஞ்சம் வைத்து நீண்ட கூந்தலுடன் அமானுஷ்யமாகத் தோற்றமளிப்பார்கள். வீடுவீடாகச் சென்று 'சாந்தி நிலவ வேண்டு'மோ.. 'ராரவேணுகோபாலா'வோ பாடிவிட்டு கொத்துக்கடலை சுண்டலை வாங்கிக் கொண்டு ஓட்டமாக ஓடுவது நினைவிருக்கிறது.

எங்கள் வீட்டில் பெண் குழந்தை இல்லாததால் கொலு வைக்கமாட்டார்கள். என் அம்மாவைப் பெற்ற பாட்டி வீட்டில் அமர்க்களமாக வைப்பார்கள். அதற்கென்று உதவுவேன். மரப்பலகைப்படிகள் இருக்கும். அவற்றை சாய்ந்த ஏணி போல் டி.ஆர்.ஆர். நாதன் அமைக்க, தக்கையாக இருந்ததால் மேல்படியில் ஏறி செட்டியார் பொம்மை, நீலகிருஷ்ணன், ரோஸ் கலர் கிருஷ்ணன், நாயன செட் கருடவாகன செட் போன்றவற்றை அமைக்க நான்தான் பயன்படுவேன். சுண்டல் சேகரிப்பதில் மற்ற சிறுவர்கள் உன்னிப்பாக இருக்க, நான் எதிர்வீட்டு மாமா அமைத்த தெப்பக்குளத்துக்கு எப்படி கரண்ட் இழுத்து அமைத்தார் என்பதில் ஆர்வமாக இருப்பேன். சுண்டலுக்கு அலைவது பாட்டிக்குப் பிடிக்காது. 'பன்னாடை' என்று திட்டுவாள்.

நிறைய லீவு வரும். அந்த லீவின் இறுதியில் க்வார்ட்டர்லி

பரீட்சையின் ரிசல்ட் வரும். பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் பெற்றோரின் கையெழுத்து வாங்க வேண்டும். எனக்குக் கவலையில்லை. பாட்டியிடம் சுலபமாக வாங்கிவிடுவேன். ஒரு தடவை அந்தச் சமயத்தில் அப்பா க்ளென்மார்கனிலிருந்து பாட்டியைப் பார்க்க வந்துவிட்டார். வந்தது சிக்கல், "இந்த விசை உங்கப்பாகிட்ட வாங்கிக்கோ" என்று சொல்லி விட்டார். எனக்கு வயிற்றில் கன்றுக்குட்டி உதைத்தது. காரணம், பிராக்ரஸ் ரிப்போர்ட் ஒன்றும் அவ்வளவு சிலாக்கியமாக இல்லை. குறிப்பாக கணிதத்தில் ஒற்றை இலக்க மார்க் வாங்கியிருந்தேன். அதை அழித்து எழுத முடியாதபடி, மாற்ற முடியாதபடி கன்னங்கரேல் என்று மசியால் ஸ்பஷ்டமாக நிரப்பப்பட்டிருந்ததை அப்பாவிடம் காட்டத் தயங்கினேன்.

பாச்சா, "நான் போடுகிறேன். உங்கப்பா பேர் என்ன?" என்று கேட்டான். எனக்கு ஏனோ அதில் சம்மதம் இல்லை. "என்னடா, சித்திரை வீதியில அத்தனை பேருக்கும் கையெழுத்துப் போட்டாச்சு. ஒரு தெள்ளு குண்டு கொடுரா போதும்" என்றான். நான் அதை மறுத்து "அப்பா எப்படியும் ஊருக்குப் போய்விடுவார்... பாட்டியிடம் வாங்கலாம்" என்று தள்ளிப் போட்டேன். கிளாஸில் நான் ஒண்டிதான் பாக்கி என்னும்போது ஒரு மாதிரியாக தவிர்க்க முடியாது போய் பம்மிக்கொண்டே கிருஷ்ணன் கால் போட்டுக் கொண்டு தலையைச் சொறிந்துகொண்டு அப்பாவிடம் காட்டினேன். அவர் அதைப் பார்த்தார். ஒரு நிமிடம் உலகம் சுழல்வதை நிறுத்தியது. "அம்மா" என்று பாட்டியை அழைத்தார்.

"என்னடா..?"

"உம் பேரன் கணக்கில் எத்தனை மார்க் வாங்கியிருக்கான் பாரு."

"எத்தனைடா..?"

"எட்டு."

"பத்துக்கா.."

"நூத்துக்கும்மா."

பாட்டி என்னைப் பார்த்தாள். பக்கத்தில் வந்து தலையைத் தடவி, "அவன் கணக்கில குறைச்சலா வாங்கிருக்கான்னா அன்னிக்கு குழந்தைக்கு ஜுரம்.. 104. போய் பரீட்சை எழுதினதே பெரிசு. அரைப்

பரீட்சையில் சரியா வாங்கிடுவான். அவன் யார் பேரன்!" (தாத்தா அல்ஜிப்ராவில் பாட புத்தகம் எழுதியவா).

"என்னடா வாங்கிடுவியா?"

"நிச்சயம்பா" (எனக்கு எப்போது ஜுரம் அடித்தது என்று விழித்து) பாட்டி வைத்த நம்பிக்கையில் நான் அரைப் பரீட்சையில் நூற்றுக்கு நூறு வாங்கினேன் என்று சுத்த விரும்பவில்லை. தத்தித் தத்தித்தான் வந்தேன். எஸ்.எஸ்.எல்.ஸி-க்கு அப்புறம்தான் எனக்குக் கொஞ்சம் பிடிபட ஆரம்பித்தது. பாடங்கள் சுவாரஸ்யமாயின. பி.எஸ்ஸி-யில் ரேங்க் வாங்கும் அளவுக்கு வந்துவிட்டேன்.

பள்ளிக்கூட சாதனைக்கும் பிற்கால வாழ்க்கையின் சாதனைக்கும் சம்பந்தமில்லை என்றுதான் தோன்றுகிறது. என்னுடன் படித்து எப்போதும் நூறுக்கு கீழே வாங்கினால் ஓவென்று அழக்கூடிய ராமமூர்த்தி ஏ.ஜி. ஆபீஸில் சேர்ந்தான். என்னைவிட மோசமாகப் படித்த சாமிநாதன் ஐ.நா-வில் சேர்ந்தான். இதில் ஏதோ ஒரு பாடம் இருக்கிறது.

கலைஞன் பதிப்பகம் வெளியிட்டிருக்கும் 'மணிக்கொடி' இதழ்த் தொகுப்பு அந்தப் பத்திரிகையின் உண்மையான சரித்திர, இலக்கிய மதிப்பை இப்போது எடைபோட வைக்கிறது.

1933-ம் ஆண்டில் துவங்கி ஆறு ஆண்டுகளுக்கும் குறைவாக நடந்த அந்தப் பத்திரிகை, இலக்கிய உலகில் பெரும் தாக்கம் ஏற்படுத்தியதாக பலரால் மதிப்பிடப்படுகிறது. இந்த மதிப்பீடு சரிதானா என்று பார்க்க நாம் நிகழ்காலத்தை மறந்துவிட வேண்டும். இப்போதுள்ள சிறு பத்திரிகைகளில் மணிக்கொடியைத் தூக்கிச் சாப்பிடக்கூடிய விஷயங்கள் வருகின்றன.



மணிக்கொடியை 1933-ன் தமிழ்நாட்டுச் சூழலில் வைத்துப் பார்க்கும்போது ஒரு தரமுள்ள பத்திரிகைக்கு உண்டான அத்தனை அம்சங்களும் கொண்டு தீவிர நோக்கத்துடன் நடத்தப்பட்டிருக்கிறது என்பது புரிகிறது. கட்டுரைகள் (கு.ப.ரா-வின் 'தனபாக்யத்தின் தொழில்' கதையை கட்டுரையில் சேர்த்த ஆளை விசாரிக்கவேண்டும்), கவிதைகள், பாரதி தா'ஸ'னின் பிரபலமான 'ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட', சுத்தானந்த பாரதி போன்றவர்களின் மரபுக் கவிதைகளிலிருந்து ந.பிச்சமூர்த்தியின் 'கூட்டிலேயே இரு. உனக்கு இன்னும் சிறகு சரியாக முளைக்கவில்லை' என்று கிளிக்கு யோசனை சொல்லும் 'கிளிக்குஞ்சு' போன்ற அருமையான புதுக் கவிதைகள் வரை, ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், மொழிபெயர்ப்புக் கதைகள், நாடகம் என்று பல தரப்பட்ட விஷயங்கள் கொண்ட இத்தகைய முழுமையான பத்திரிகை இன்றும் தமிழில் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதனால் மணிக்கொடி தனிப்பட்ட உன்னதம் பெற்றது என்பதில் சந்தேகமில்லை.

சிட்டி, அசோகமித்திரன், முத்துக்குமாரசுவாமி மூவரும் தேர்ந்தெடுத்திருக்கும் விஷயங்கள் சம தரமானவையாக இல்லை.

காலத்தால் அழியா மௌனியின் அழியாச்சுடரும் இருக்கிறது. காலாவதி ஆகிவிட்ட 'மங்கிலியப் பெண்டுகள்' போன்ற மொட்டைப்பாட்டி கதைகளும் உள்ளன. பிற்பாடு பிரபலமடைந்த அத்தனை எழுத்தாளர்களும் (புதுமைப்பித்தன், லா.ச.ரா, கு.ப.ரா, சிட்டி, பி.எஸ். ராமையா, சிதம்பர சுப்ரமணியன், க.நா.சு., தி. ஜானகிராமன், சி.சு.செல்லப்பா, ஏ.என். சிவராமன், சுந்தா, கி.ரா., எம்.வி. வெங்கட்ராமன், எல்லார்வி., எஸ்.குஞ்சிதபாதம் என்று பெரிய லிஸ்ட்டே இருக்கிறது) இவர்களின் ஆரம்ப காலக் கதைகளை மதிப்பிட வாய்ப்பு கிடைக்கிறது. தொகுப்பில் வ.ரா-வின் கட்டுரைகள் பல இருக்கின்றன. இவருடைய எழுத்து காலத்தால் மங்கலாகவில்லை என்று சொல்லலாம். முப்பதுகளில் இத்தனை சரளமான வசனநடை எழுதியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. 'சொல்லுக்கு மதிப்பு' என்கிற இரண்டரைப் பக்கக் கட்டுரை புத்தகத்தில் சிறந்தது என்பேன்.

உள்ளத்திலே தோன்றிய உண்மைகளையோ, அழகையோ உணர்ச்சி உருவமாகப் பார்க்கிற ஒருவனுக்குச் சில சமயங்களில் வார்த்தைகள் தட்டிப்போகும். ஒரு காரியம் நியாயம் என்று உணர்ச்சியின் மூலமாய் ஒருவனுக்கு நன்றாகத் தெரியலாம். ஆனால், அந்த நியாயத்தை வார்த்தைகளின் மூலமாய் சொல்லத் தெரிவதில்லை. சொல்ல முடிவதுமில்லை. இது ஒரு நிலைமை.

சிலர் வர்ணனை ஆசையால் சொற்களைத் தூவிச் சிதற அடிக்கிறார்கள்... நாலா பக்கங்களிலும் அடிபட்டு விழும் சொற்கள் வீரிட்டு அலறி அழுகின்றன. அவற்றின் அழுகைக்குரல் காதில் கேட்கிறதேயல்லாமல் அவை வர்ணிக்கும் அழகு புலப்படுவதில்லை.

வார்த்தைகள் மனிதர்களிடம் அகப்பட்டுக் கொண்டு படும் கஷ்டத்தைச் சொல்லி முடியாது. என்னிடமும் அகப்பட்டுக்கொண்டு இப்போது விழிக்கவில்லையா?

மணிக்கொடியில் உ.வே.சா.கூட கதை எழுதியிருக்கிறார் (பெற்ற மனம்). கல்கி எழுதவில்லை. 'கலைமகள்', 'கிராம ஊழியன்' திரட்டுகளையும் கலைஞன் வெளியிடலாம்.

# உதை, வதை, கதை!



நான் விகடனில் எழுதிய முதல் சிறுகதை 'சில வித்தியாசங்கள்.' பிறகு அது 1970-ல் ஒரு சிறுகதைத் தொகுப்பின் முதல் கதையாக அதே தலைப்பில் புத்தக வடிவில் வந்தது. இப்போது அந்தப் புத்தகத்தின் ஐந்தாவது பதிப்புக்கு முன்னுரை எழுத ஏறத்தாழ 33 ஆண்டுகளுக்குப் பின் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமா என யோசித்ததில் கதையின் விலைவாசிகளில்தான் திருத்தம் தேவைப்பட்டது.

டெல்லியில் வாழும் ராஜாராமனுக்கு கதையில் சம்பளம் 290 ரூபாய். அவன் டெல்லியிலிருந்து சென்னைக்கு அம்மாவுக்கு உடம்பு சரியில்லாததால் அவசரமாக விமானத்தில் போக வேண்டும். டெல்லி-சென்னை ப்ளேன் டிக்கெட் விலை 325 ரூபாய்! விலைவாசிகள்தாம் இப்போது ஏறத்தாழ முப்பது மடங்கு அதிகரித்திருக்கிறதே ஒழிய, கதையின் ஆதார உணர்ச்சி - பணக்கார உறவினரிடம் ஏழை உறவினன் கடன் கேட்க வேண்டியதில் உள்ள அவமானம் அப்படியேதான் இருக்கிறது. அதனால், அந்தக் கதையை நான் திருத்தவில்லை. ஓஹென்றியின் 'கிஃப்ட் ஆஃப் த மாகி' (Gift of the Magi) என்னும் பிரசித்தி பெற்ற கதையில் விலைவாசிகளைப் பார்த்தால் ஒரு டாலர் அம்பது செண்ட் எல்லாம் பெரிய தொகையாக இருக்கும். இத்தனை வருஷம் கழித்து பண வீக்கத்தையும் மீறி என் கதைகள் திரும்பிப் படிக்கப்படுவதும் விரும்பிக் கேட்கப்படுவதும் என் பாக்கியம்.

ஜெராக்ஸ் இடங்களை 'நகலகம்' என்று சொல்வது வழக்கத்தில் வந்துள்ளது. இது தூயதமிழ் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு ஓர் அதிர்ச்சி.

தூயதமிழ் நகலுக்கு சிரிப்பு, மகிழ்ச்சி, நட்பு, பிரகாசம் போன்ற

பொருள்கள் உள்ளன.

'நகலானாம் நன்னயம் என்னும் செருக்கு' என்று திருக்குறளில் வரும் நகலல்ல ஜெராக்ஸ் நகல். 'நக்லி' என்னும் உருது வார்த்தையிலிருந்து பிரதி எடுக்கப்பட்டது. டுப்ளிக்கேட் என்ற அர்த்தத்தில் வருவது (அஸ்லி-நக்லி). உருது வார்த்தை தமிழிலிருந்து வந்தது என்று யாராவது விதண்டாவாதாடினால் அதற்கான அத்தாட்சியை தாசில்தார் கையெழுத்துடன் அனுப்பவும்.

'பிரதி' சம்ஸ்கிருத வார்த்தை. அதற்குச் சரியான தமிழ்ச்சொல் 'படி'. நாற்பதுக்கும் மேற்பட்ட அர்த்தங்கள் உள்ள 'படி', உள்ளபடியே மிக உபயோகமான சொல். அதன் பிரதி என்ற அர்த்தத்தில் பெரிய புராணத்தில் படியோலை என்கிற சொற்றொடரில் முதலில் வந்தது. ஜெராக்ஸ் என்ற வார்த்தை ஆங்கிலத்தில் கலைச்சொல் உருவாக்கும் சுலபத்துக்கு உதாரணம். போட்டோஸ்டாட், காப்பியிங் மெஷின் என்றெல்லாம் இருந்தது. முதலில் அந்த இயந்திரத்தை கொண்டு வந்த ஜெராக்ஸ் கம்பெனியின் பெயரையே எடுத்துக்கொண்டு ஜெராக்ஸ் மெஷினாகி, மெஷினைத் துறந்து ஜெராக்ஸ் என்று சுருங்கி, அதை இப்போது வினைச் சொல்லாகவும் பயன்படுத்துகிறார்கள்.

கணிப்பொறி இயலில் SPICE என்பது ஒரு மென்பொருளின் பெயர். டிஸைன் பண்ணுவதற்கு முன் அதை ஒரு முறை கம்ப்யூட்டரில் ஓட்டிப் பார்க்கும் 'எமுலேட்டர்' மென்பொருள். அந்த மென்பொருளைப் பயன்படுத்துவதையே வினைச் சொல்லாக்கி டிஸைன் முடிந்ததும் 'ஸ்பைஸ் பண்ணிவிட்டாயா?' (Have you spiced it?) என்று கேட்பார்கள். தமிழில் பெயர்ச்சொல், வினைச் சொல்லாக வரும்போது அர்த்தம் மாறி வருகிறது. 'படி'யே ஓர் உதாரணம். இதுபோல் நகை, வலி, பார் என்று பல உதாரணங்கள் சொல்லலாம். இரண்டும் ஒரே அர்த்தத்தில் வருவதற்கு உதாரணங்களாக எனக்குச் சட்டென்று தெரிவது உதை, வதை, கதை. வேறு உதாரணங்கள் இருந்தால் எனக்கு எழுதலாம். பத்துக்கு மேல் உதாரணங்கள் தருபவருக்கு ரூபாய் ஒரு கோடிக்கான தமிழ்லக்ஷ்மி லாட்டரி சீட்டு பரிசு.

About Time என்கிற அருமையான புத்தகத்தைப் படித்து முடித்தேன். God and the New Physics எழுதிய பால் டேவிஸ்ஸின் புதிய புத்தகம் (டைம்). காலம் என்பதைப் பற்றிய புராதனக் கருத்துக்களிலிருந்து நவீன இயற்பியல் கருத்துக்கள் வரை சின்னச்சின்ன அத்தியாயங்களில்

சொல்லியிருக்கிறார். ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள், 'காலம் என்பது வெள்ளைக் காரன் போட்டு அவனே நடந்து செல்லும் ரோடு... அவனுக்கு வேறு பாதை தெரியாது' என்கிறார்கள். நம்முடைய இந்து கருத்துக்களின் படி மோட்சம் என்பது சாசுவதம் அல்லது காலவரையறைகள் அற்ற நிலை... பௌத்தத்தின் நிர்வாணம் போல, வேதகாலத்து ரிஷிகள் முக்காலமும் உணர்வார்கள் என்று சொல்வார்கள். அத்வைதக் கருத்தின்படி பிரம்மம் என்பது காலமற்றது, முழுமையானது. நாம் உணரும் காலமெல்லாம் பொய்யானது. பிரம்மம் மட்டும்தான் நிஜம். இவ்வாறாக காலம் என்பது மனிதச் சிந்தனையை மிகவும் ஆக்கிரமித்திருக்கிறது.

மேதை ஐன்ஸ்டைனின் ரிலேட்டிவிட்டிபடி காலம் ஏன்பது மாறுபடக் கூடியது. நின்று கொண்டிருப்பவரின் காலமும் பறந்து கொண்டிருப்பவரின் காலமும் வேறு என்பதையாவது ஓரளவுக்கு புரிந்துகொள்ள முடியும். இந்தக் கருத்து நம் புராணங்களிலும் உள்ளது. ஆனால், gravitation என்னும் ஈர்ப்பு சக்தியின் அருகில் காலமும் பாதிக்கப்படும் என்பதுதான் விழுங்கக் கஷ்டமாக இருக்கிறது. இதிலிருந்து காலத்துக்கு ஒரு தெளிவான ஆரம்பம் - முடிவு இருக்கிறது... அது சாசுவதமானதல்ல என்ற கருத்து தவிர்க்க முடியாததாகிறது. காலத்தை சாசுவதம் என்று கொண்டால் பிசிக்ஸ் ரொம்ப உதைக்கிறது. காலத்தில் பிரயாணம் செய்ய முடியுமா? இதுபற்றி ஒரு 'லிமரிக்'கூட இருக்கிறது.



There was a young lady named Bright
Whose speed was faster than light
She set out one day in a relative way
And returned on the previous night

தமிழில்:-

நளினி என்றோர் வஞ்சி
ஒளியின் வேகத்தை மிஞ்சி
ஒருநாள் கிளம்பினாள்
முதல்நாள் திரும்பினாள்!

இது தமாஷாக இருந்தாலும் நளினிக்கு இது சாத்தியமில்லை. டாக்கியான் (Tachyon) என்னும் மிகு விசைத் துகள்கள் இருப்பதாகவும் அவை ஒளியின் வேகத்தை மிஞ்சக்கூடியவை என்றும் தெரிகிறது. 'டாக்கியான்' என்பது வேகத்துக்கு உண்டான கிரேக்க வார்த்தையிலிருந்து பெயரிட்டு, விஞ்ஞானிகளால் கற்பனை செய்யப்பட்ட துகள். இதுவரை யாரும் டாக்கியானைப் பார்த்ததில்லை.

அப்படி இருந்தால் 'டாக்கியான்'களால் கடந்த காலத்துக்குச் செல்ல முடியும். இன்று கிளம்பி நேற்றுத் திரும்ப முடியும். அவை மூலம் நம் முன்னோர்களுக்குச் செய்தி அனுப்ப முடியும்.

இது சாத்தியமென்றால், அலமாரியிலிருந்து மூணு ரூபாயை நான்தான் எடுத்தேன் என்பதை நான் கோதைப் பாட்டிக்கு ஒரு டாக்கியோகிராமாக அனுப்ப வேண்டும்.

# மேலும் சில தினங்கள்!



ஸ்ரீரங்கத்தில் கலர் கலராக காங்கிரஸ் கொடிபோல் வண்ணமடிக்கப்பட்டிருக்கும் ராஜகோபுரம் எங்களுக்கெல்லாம் ராயகோபுரம் தான்.1

பதினாறாம் நூற்றாண்டு விஜயநகர மன்னன் அச்சுத ராயனால் ஆரம்பிக்கப்பட்டு, 1987-ல் அகோபிலமட ஜீயரால் முடிக்கப்பட்டது. இதற்கும் சாத்தார வீதிக்கும் இடையில் ஒரு புராதன சந்நிதி இருக்கிறது. அதை திருக்குறளப்பன் சந்நிதி என்கிறார்கள். அதைப் பற்றிய குறிப்பு என் நண்பன் திருமஞ்சனம் சுந்தரராஜனிடமிருந்து கிடைத்தது. திருவள்ளுவருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. திருமாலின் வாமன அவதாரத்தை குறள்வடிவம் என்பார்கள். 'மாணிக்குறளனே தாலேலோ' என்றும் 'உருவக்குறளடிகள்' என்றும் பிரபந்தத்தில் இருக்கிறது. ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் 'பொல்லாக் குறள் உருவாய்ப் பொற்கையில் நீர் ஏற்று' என்றும், பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் 'ஆழித் தடக்கைக் குறளன்' என்றும் பாடியிருக்கும் வாமனரின் இந்தச் சந்நிதி ஏறக்குறைய பெரிய பெருமாள் சந்நிதி அளவுக்குப் பழமையானது என்றும் சொல்கிறார்கள். ராமானுஜர் காலத்தில் காவிரி இதனருகில் ஓடியதாகவும் நலம்திகழ் நாராயண ஜீயர் என்பவர்தான் வெள்ளத்தைத் தடுக்க அதற்கு ஒரு பர்லாங் தெற்கே கரையை உயர்த்தினார் என்றும் குறிப்புகள் உள்ளன. ஆண்டாள் படகில் வந்து இறங்கினது இந்தச் சந்நிதியருகில் என்றும் சொல்லப் படுகிறது. தீபாவளி சமயத்தில் இங்கு பூஜை நடக்குமாம்.

வாமன அவதாரத்துக்கும் தீபாவளிக்கும் என்ன சம்பந்தம்? மகாபலியின் தலைமேல் மூன்றாவது அடி வைத்து அவனை பாதாளத்தில் அழுத்துமுன் 'இந்தத் தினத்தை விளக்கேற்றிக் கொண்டாட வேண்டும்' என்று அவன் திருமாலிடம் வேண்டிக் கொண்டானாம்.

அதுதான் தீபாவளி என்கிறார்கள். இந்தக் கதை கேரளத்தில் ஓணத்துக்கு இடம் பெயர்ந்துவிட்டது. நரகாசுரன் கதைதான் பெரும்பாலானோர் கடைப்பிடிப்பது.

மூன்றாவதாக, ஸ்ரீராமர், ராவணனை வென்றுவிட்டு அயோத்திக்குத் திரும்பினதை விளக்கேற்றிக் கொண்டாடும் தினம்தான் தீபாவளி என்று ஒரு நம்பிக்கையும் உள்ளது. எப்படியும் தீமை மறைந்து நன்மை நிகழும்போது அதை தீபமேற்றிக் கொண்டாடும் வழக்கம், அறுவடை தினத்தைக் கொண்டாடுவது போல், உலகத்தின் எல்லா நாட்டிலும் உள்ளது. அதுபோல் பட்டாசு வாணவேடிக்கைகளும் கை ஃபாக்ஸ் டே (Guy Fawkes Day) ஜூலை நாலு, சீனத்துப் புது வருடம் என்று பல நாடுகளில் கொளுத்தப்படுகிறது. தீபாவளிக்கு விளக்கேற்றுவது தமிழ்நாட்டு வழக்கம் இல்லை. அதை கார்த்திகைக்குத் தள்ளிப் போட்டுவிட்டோம்.

டெல்லி அஜ்மல்கான் ரோட்டில் தற்காலிகமாக தெருவையே அடைத்து பாத்திரக்கடை போடுவார்கள். புதுப்பாத்திரங்கள், புதுக்கணக்கு இதெல்லாம் வடக்கத்திய தீபாவளி வழக்கம். பட்டாசு வெடிப்பது, புதுசுடுத்தல் தென்னிந்தியம். தின்பண்டங்கள் பொதுவழக்கம். மெள்ள மெள்ள இவை மற்ற மாநிலங்களில் பரவுவதற்கு முக்கிய காரணம் வியாபார நோக்கு. கர்நாடக மாநிலத்தில் தீபாவளி புதிய பழக்கம். அவர்களுக்கு வருஷப் பிறப்புதான் பெரிசு. சிங்கப்பூரில் கிறிஸ்தவர்கள் அதிகம் இல்லை என்றாலும் கிறிஸ்துமஸை அவர்கள் விமரிசையாகக் கொண்டாடுவார்கள். நுகர்பொருள்கள் விற்கவேண்டுமே! அமெரிக்கா மதர்ஸ் டே, ஃபாதர்ஸ் டே, வேலண்டைன்டே... ஏன் செக்ரெட்டரிஸ் டே, மதர் இன்லாஸ் டே என்றெல்லாம் நிறைய வைத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் முக்கிய உந்துசக்தி வாழ்த்தட்டை, பரிசுப்பொருள் வியாபாரம். நாளடைவில் நம் நாட்டிலும் கீழ்க்கண்ட தினங்கள் பட்டாசு கொளுத்திப் பரிசளித்துக் கொண்டாடப் படலாம்.

வீட்டுக்கு கம்ப்யூட்டர் வந்த தினம், மேட்டூரில் தண்ணீர் வந்த தினம், மெகா சீரியல் முடிந்த தினம், கல்லூரிப் படிப்பை அரியர்ஸ் இல்லாமல் முடித்த தினம், ஒரு பக்கக் கதை வெளிவந்த தினம், கணவன் - மனைவி தர்க்கம் பண்ணாத தினம், வெளியே போன இளையமகன் ஆறு மணிக்குள் வீட்டுக்கு வந்த தினம், கைக்குழந்தை ராத்திரி அழாத தினம், பவர் கட் இல்லாத தினம், காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்காத தினம்,

ரோடுகளில் கார்ப்பரேஷன் டெலிபோன் இலாகா மற்ற வாரியர்கள் தோண்டாத தினம்.




இந்த ஆண்டு இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் வி.எஸ்.நைபாலின் இந்தியத் தொடர்புகளைப் பற்றி பெருமைப்படுகிறவர்கள், அவரைச் சரியாகப் படித்ததில்லை என்று சொல்லலாம். மேற்கிந்தியத் தீவுகளில் பிறந்து இங்கிலாந்தில் செட்டில் ஆகிவிட்ட இவர் இந்தியாவைப் பற்றிப் பெருமையாக எழுதவில்லை. இவரையும் நிராத் சௌத்ரி போன்றவர்களையும் 'கோகநட் கிளப்' என்று குறிப்பிடுகிறார்கள். வெளியே பழுப்பு, உள்ளே வெள்ளை, தேங்காய் போல. மேற்கத்திய கிறிஸ்தவ வெள்ளைக் கார சமுதாயத்தின் மேன்மையைப் பேச இந்திய, ஏன் முஸ்லிம் கலாசாரத்தைக்கூட கடுமையாக விமரிசிப்பதைக் கட்டாயமாகக் கொண்ட எழுத்தாளர்கள். ஆங்கிலத்தில் தற்போது அமோகமாக எழுதி வரும் புக்கர் ப்ரைஸ் ஆசையுள்ள இளம் எழுத்தாளர்கள் பலர் நம்மூர் அவலங்களை அழகான ஆங்கிலத்தில் வனைந்து காசு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். மேற்கத்திய கலாசாரத்தை உயர்வாகச் சொன்னதற் காகத்தான்

நைபாலுக்கு நோபல் பரிசு கொடுக்கப் பட்டிருக்கிறது என்று செப்டம்பர் 11-க்குப் பிறகு சொல்கிறவர்கள் உண்டு. நோபல் பரிசிலும் அரசியல் இருப்பது வருந்தத் தக்கதே. ஆர்.கே.நாராயணுக்கு நோபல் கிடைக்காதது எனக்கு வருத்தமே.

ஏ.வி. ரமணன் நடத்தும் 'சப்தஸ்வரங்கள்' நிகழ்ச்சியை நான் ரசித்துப் பார்க்கிறேன். இளைஞர்களிடையே ராக ஞானமும் சினிமாப் பாடல்களின் கர்னாடக சங்கீத ஒற்றுமையையும் உற்சாகமாகக் கொண்டுவருகிறார் ('குஷி' படத்தின் 'பாப்பு பாப்பு' என்ன ராகம் தெரியுமோ..). குழந்தைகளும் இளைஞர்களும் நல்ல பயிற்சியினால் அபஸ்வரமில்லாமல் ஒரு தரத்துக்கு மேலேயே நன்றாகப் பாடுகிறார்கள். ரமணனிடம் ஒரே ஒரு வேண்டுகோள். சங்க காலப் பாடல்களை நாட்டுப்புற மெட்டுகளில் பாடச் சொல்வதை உடனே நிறுத்தவும். இரண்டுக்கும் இது அநியாயம். Imagine, 'மானே மருக்கொழுந்தே மாமன் மக ரத்தினமே ' மெட்டில் 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்' என்று ஒரு சிறுமி நெட்டுருப் போட்டுப் பாடுவது!

1963-ல் அமெரிக்கக் கவிஞர் சில்வியா ப்ளாத்தின் தற்கொலை இன்று வரை உலகெங்கும் பல மனங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறையும் அமெரிக்க கான்ஸுலேட்டும் சேர்ந்து சில்வியா ப்ளாத்தின் வாழ்க்கைக் குறிப்புகளை நடித்துப் படித்துக் காட்டுவதாக ஓர் அழைப்பிதழ் வந்தது (கண்டிப்பாக அழைப்பிதழை எடுத்து வரவும் என்று பயமுறுத்தியதால் போகவில்லை. எனக்கும் சில்வியாவைப் போல் மென்மனம்).

தற்கொலை செய்து கொண்ட அல்லது அகாலமரணம் அடைந்த கவிஞர்கள் மேல் பரிவும் பாசமும் அதிகமாகத்தான் இருக்கிறது. அவர்கள் கவிதைகளைக் கூடுதல் மரியாதையுடனும் அனுதாபத்துடனும் அணுகுகிறேம். சில்வியா ப்ளாத்,



வி.எஸ்.நைபால்



'Dying is an art like everything else
I do it exceptionally well'

என்று 'லேடி லாஸரஸ்' என்கிற கவிதையில் எழுதியது அவருடைய தற்கொலைக்குக் கட்டிய மாக நினைக்கப்படுகிறது. தமிழ் கவிஞர்களில் ஆத்மாநாம், செல்வி, சிவரமணி போன்றவர்கள் அகாலமரணம் அடைந்தவர்கள், சிவர மணி தற்கொலை செய்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது.

'என் இனிய தோழிகளே
இன்னுமா தலை வார
கண்ணாடி தேடுகிறீர்
சேலைகளைச் சரிப்படுத்துவதிலேயே
வேலைகள் வீணாகின்றன
வேண்டாம் தோழிகளே வேண்டாம்'

போன்ற வரிகளைப் படிக்கையில் சிவரமணியும் 'எதையும் நிரூபிக்க வேண்டாம். ஆயாசமாக இருக்கிறது' என்று சொன்ன ஆத்மாநாமும்

அடடா இன்னும் கொஞ்ச நாள் வாழ்ந்திருக்கலாமே என்று தோன்றுகிறது.

# கதை எங்கிருந்து வந்தது!



இரண்டு வாரங்களுக்கு முன் பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் ஒரே அர்த்தத்தில் வரும் வார்த்தைகள் எழுதுங்கள் என்று கேட்டிருந்தேன். கடிதங்கள் குவிந்துவிட்டன. சொல், இசை, கடி, அடி, பிடி, சுவை, வாழ்த்து, பாராட்டு என்று ஏராளமான சொற்கள். கோவையிலிருந்து எழில்செல்வி 36 சொற்கள் எழுதியிருந்தார். அதில் 35 சரி. 'காதலி' என்பதை இந்தப் பட்டியலில் சேர்க்கலாமா என்பது மட்டுமே என் சந்தேகம்.

எழில்செல்விக்கு என் பரிசாக 'கற்றதும்.. பெற்றதும்..' முதல் பாகத்தின் தொகுப்பை அனுப்பியிருக்கிறேன். மற்ற அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

'முன்பெல்லாம் நிறையப் புதுக் கவிஞர்களை உதாரணம் காட்டிக் கொண்டிருந்தீர்கள். இப்போது குறைந்துவிட்டதே...' என்று சிலர் வருத்தப்படுகிறார்கள். இதற்கு மூன்று காரணங்கள்.

விகடனில் பல புதுக் கவிஞர்களின் கவிதைகள் அவ்வப்போது பவழவிழா ஆண்டில் வெளிவந்து கொண்டிருப்பதால், நானும் கவிதைகளை எடுத்துக் காட்டுவது கொஞ்சம் திகட்டும். விகடன் கவிதைப் பத்திரிகையல்ல.

இரண்டாவது காரணம், எனக்கு அனுப்பப்படும் கவிதைத் தொகுப்புகளில் நல்ல கவிதையைத் தேடிப் படிப்பது கஷ்டமாகிக்கொண்டு வருகிறது. எப்போதாவதுதான் கண்டராதித்தன் கவிதைகள், கல்யாண்ஜியின் 'நிலா பார்த்தல்' போலக் கிடைக்கிறது. இதன் காரணத்தை யோசித்துப் பார்த்தால், நல்ல கவிஞர்கள் தம்

தொகுப்புகளை எனக்கு அனுப்புவதில்லை என்றே எண்ண விரும்புகிறேன்.

ஒருவேளை, அவர்கள் அதிகம் எழுது வதில்லையோ... நல்ல கவிதை எழுதுவதற்கான விஷயங்கள் தமிழ்நாட்டில் அரிதாகிக்கொண்டு வருகின்றனவோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. தமிழர்களின் பொது வாழ்வில் ஒரு மந்தநிலை மீடியாக்ரிட்டி பரவிப் போராட்டங்களும் ஜனன, மரணப் பிரச்னைகளும் இப்போது அதிகம் இல்லாமல் போய்விட்டன, சோவியத் ரஷ்யாவில் ட்ராக்டர்கள் வந்தபின் இலக்கியம் நலிந்துவிட்டது போல.

மழை வருவது, 23பி பஸ் பிடிப்பது, அரசியல் தாவல், தொலைக்காட்சிக் கிண்டல்கள், சினிமா போன்ற மேம்போக்கான விஷயங்கள்தான் அதிகம் எழுதப்படுகின்றன. காதல் கவிதைகள், ஹைக்கூ குப்பைகள் ஏராளம் (எனக்கு சி.எம். பதவி ஒரு நாள் கிடைத்தால், 3.5.2006 வரை தமிழில் காதல் கவிதைகளைத் தடை செய்ய ஆர்ட்னன்ஸ் போடுவேன்).

தமிழ்நாட்டில் நல்ல தமிழ்க் கவிதைகள், இப்போது கோபப்படக் காரணங்கள் இருக்கும் தமிழ்க் கவிஞர்களாலும் பெண்களாலும் மட்டுமே எழுதப்படுகின்றனவோ என்று சந்தேகம் வருகிறது. ஈழத்திலிருந்து நல்ல கவிதைகள் வருகின்றன. காரணம், அவர்கள் கோபத்தின் காரணம் உண்மையானது. சேரனின் 'துப்பாக்கி' பற்றிய ஒரு கவிதை, 'அம்மா அழாதே' போன்ற கவிதைகள் தமிழ் நாட்டில் எழுதும் சூழ்நிலை இல்லை.

'துயிலா இரவுகளில்
அப்பா என்று அலறித் துடிக்கிற
சின்ன மழலைக்கு
என்னதான் சொல்வாய்
உலவித் திரிந்த நிலவைக் காட்டி
மார்பில் தாங்கி
அப்பா கடவுளிடம் போனார்
என்று சொல்லாதே
துயரம் தொடர்ந்த வகையைச் சொல்
குருதி படிந்த கதையைச் சொல்
கொடுமைகள் அழியப் போரிடச் சொல்...'

யோசித்துப் பாருங்கள்... இவ்வகையிலான கவிதை எழுதுவதற்குத் தமிழ்நாட்டில் சூழ்நிலை உள்ளதா..?

செம்பூரான் மும்பைத் தமிழர்களுக்குப் பரிச்சயமான தமிழர் அவரது 'சுவைகள் மூன்று' என்ற புத்தகத்தில் பாலகாடு ('க்'கன்னா போட வில்லை!) வட்டாரத் தமிழ் வழக்குச் சொற்கள் அறுநூறுக்கும் மேற்பட்டவற்றைக் கொடுத்திருக்கிறார்.

பாலக்காட்டுத் தமிழை சமீபத்தில் பிரபலப் படுத்தினவர் கமல். 'மைக்கேல் மதன காமராஜனி'ல் அவரும் ஊர்வசியும் டெல்லி கணேஷும் சேர்ந்து அடித்த லூட்டி எத்தனை ஆழ்ச்சமானாலும் ஓர்மையுள்ளது. தமிழ் சினிமாவில் சிறந்த ஒரு நகைச்சுவை உபகதையை அவர்கள் அமைத்தார்கள் ('திருவிளையாடல்' தருமி, 'தில்லானா மோகனாம்பாளி'ல் வைத்தி... மற்ற சில உதாரணங்கள்).



'வருகிறாய், போகிறாய்' என்று செந்தமிழும் மலையாளமும் கலந்து தமிழர்கள், மலையாளிகள் இருவராலும் கேலி செய்யப்படும் இந்தத் தமிழுக்கு முழு வட்டார வழக்குக்கான அந்தஸ்து தரலாம் போலத் தோன்றுகிறது. நாஞ்சில் வட்டார வழக்குகளுடன் சில ஒற்றுமைகள் இருக்கின்றன.

சுவாரஸ்யமான சில வார்த்தைகளுக்கு உதாரணம்: அட்டு (அசடு), அழி (கம்பிகள் போட்ட இடம்), அலக்கு (சலவை செய்த துணி), அட்டம் (பரண்), ஆய்க்கோட்டே (இருக்கட்டுமே), இடநேரம் (மதியம்), ஈர்க்கிலி (துடைப்பக்குச்சி), உப்பேரி (வறுவல்), ஊட்டு புரை (சோறு போடும் இடம்), எழுத்துக்காரன் (எழுத்தாளர்), ஏம்போக்கி (ஊர் சுற்றுபவன்), ஒருபாடு (நிறைய), ஓர்மை (ஞாபகம்), கள்ளம் (பொய்), காணிப்பது (காட்டுவது), கிழக்கத்திக்காரர் (தமிழ் நாட்டவர்), கீசை (சட்டை பாக்கெட்), குப்பாயம் (சட்டை), கூட்டான் (குழம்பு), கைநீட்டம் (இனாம்), கொள்ளாம் (தேவலை), கோடதி (கோர்ட்), சமரம் (வேலைநிறுத்தம்), சாட்டியம் (பிடிவாதம்), சுண்டு (உதடு), சேஷம் (மீதி), தத்தை (கிளி), தாக்கோல் (சாவி), தெற்று (தவறு), வாதில் (கதவு). வெளிச்செண்ணெய் - தேங்காய் எண்ணெயா..? நான் விளக்கெண்ணெய் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

**ம**ணிக்கொடி போல 'சரஸ்வதி' பத்திரிகையின் களஞ்சியத்தையும் கலைஞன் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறார்கள். சரஸ்வதி, மார்க்சிஸ்ட்டான வ. விஜயபாஸ்கரனால் 1955 முதல் 62 வரை ஏழாண்டுகள் நடத்தப்பட்ட இலக்கிய இதழ். ஏழாயிரம் பிரதிகள் வரை விற்றதாகவும் 'தாமரை' போன்ற அதே கட்சிப் பத்திரிகைகளின் போட்டியாலேயே தொடர்ந்து நடத்த முடியாததை விஜயபாஸ்கரன் ஒரு விஸ்தாரமான முன்னுரையில் எழுதியிருக்கிறார்.

மார்க்சிய வர்ணம் இல்லாமல் இலக்கியப் பத்திரிகையாகவே நடத்தி வந்திருக்கிறார் என்பதற்கான அடையாளங்கள் இந்தத் தொகுப்பில் பல உள்ளன. க.நா.சு., வானமாமலை, ஜெயகாந்தன், ஜி.நாகராஜன், சுந்தர ராமசாமி, கி. ராஜநாராயணன், ஆர்.வி. போன்றோரின் படைப்புகள் உள்ளன.

புதுமைப்பித்தனைப் பற்றிப் பல கட்டுரைகள் உள்ளன. உள்ளடக்கத்தின் தரத்தையும் வீச்சையும் பார்க்கையில், மணிக்கொடி திரட்டைவிட, இது என்னை அதிகம் கவர்ந்தது. மேல்நாட்டுத் தமிழறிஞர் கமில் ஸ்வெலபில் எழுதியுள்ள 'சமஸ்க்ருதமும் தமிழும்' என்னும் கட்டுரை சிறந்தது:

"சென்ற ஆண்டு நான் தமிழகத்துக்கு வந்திருந்த போது தமிழிலேயே பேசத் துடித்தேன். ஒரு நாள் ஒரு நண்பர் வந்தார். 'எவ்வளவு நாட்கள் இங்கு இருப்பீர்கள்..?' என்று கேட்டார். 'பத்து மாசம் இருக்கலாம்'

என்றேன். 'மாசமென்றா சொன்னீர்கள்..? சேச்சே... திங்கள் என்று சொல்லுங்கள். சாதம், ரசம், புஸ்தகம், மாசம், பாஷை போன்ற சொற்களைப் பயன்படுத்தாதீர்கள். சோறு, குழம்பு, நூல், திங்கள், மொழி போன்ற தூயமொழிச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்... என்றார்.



மற்றொரு நண்பர் வந்தார். அவரும் அதே கேள்வியைக் கேட்டார். 'பத்துத் திங்கள் இருக்கலாம்' என்றேன். 'திங்களோ திங்கள்' என்று உரக்கக் கூறிச் சிரித்து, 'திங்கள் ஆகாயத்திலல்லவா இருக்கும்...' என்றார். அன்று முதல் எனக்குத் தமிழ் பேசும் துணிச்சலே ஏற்படவில்லை."


இவ்வாறான எளிய சரளமான நடையில், சில அழுத்தமான கருத்துக்களைக் கூறியுள்ளார். தமிழின் உரிச்சொற்களில் தொண்ணூறு சதவிகிதம் இந்தோ ஆரிய மொழிகளிலிருந்து வந்தவை (அவற்றையெல்லாம் அகற்றிவிட்டால் தமிழின் வளமே குன்றிவிடாதா என்று கேட்கிறார்).

பெர்க்லி பல்கலைக்கழகத்தின் ஜார்ஜ் ஹார்ட், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் ஹெரால்டு ஷிஃப்மன் போன்றோரும் இவ்வகை

கருத்துக்கள் கொண்டிருக்கின்றனர். நம் உள்ளூர் பண்டிதர்கள்தாம் இன்னும் கு.ச. குதிரை ஓட்டுகிறார்கள். 'சபாநாயகர்' என்பதை 'அவைத் தலைவர்' என்று ஆக்கினாலும் 'அவை' என்பது வடசொல்லின் திரிபு.

"'கதை' என்பது ஆரியச் சொல்லிலிருந்து வந்தது. இதற்குச் சரியான தூய தமிழ்ச்சொல் காண்பதில் இறங்கிப் பாருங்களேன்" என்கிறார் ஸ்வெலபில்,

# ரெடியா கலாம்?



ஏ.பி.ஜே. அப்துல் கலாம், திருச்சி புனித வளனார் கல்லூரியில் (சென் ஜோசப்) பி.எஸ்ஸி. படிப்பில் என் வகுப்புத் தோழர். அந்தக் கல்லூரியில் மதிய இடைவேளைகளில் லாலி ஹால் என்னும் பெரிய அரங்கத்தில் பெல் அடிக்கும் வரை அரட்டையடித்துக் கொண்டிருப் போம். அப்போதிலிருந்தே அப்துல் கலாமை எனக்கு ஞாபகம் இருக்கிறது அதிகம் பேச மாட்டார். ஏதாவது கலாட்டா செய்தால் சிரித்து மழுப்பிவிடுவார். எங்களுடன் சினிமாவுக்கெல்லாம் வரமாட்டார்.

பி.எஸ்ஸி. படிப்புக்குப் பிறகு நான் எம்.ஐ.டி-யில் எலெக்ட்ரானிக்ஸ் சேர்ந்தபோது அதே வருடம் அவர் ஏரோநாட்டிக்ஸில் சேர்ந்தார். இருவருக்கும் பொதுவாக இருந்த தமிழ் ஆர்வத்தால் அடிக்கடி சந்தித்துப் பேசியது நினைவிருக்கிறது. பாரதி பாடல்களிலும் திருக்குறளிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. அப்போதே அவருக்கு விமானஇயல், ராக்கெட்ரி போன்ற துறைகளில் எதையாவது நடைமுறையில் சாதிக்க வேண்டும் என்கிற ஆர்வம் இருந்ததை அறிய முடிந்தது. எம்.ஐ.டி-யின் ஜெர்மானிய புரொபசர் ரெபந்தின், பேராசிரியர் பண்டாலே போன்றவர்கள் வழிகாட்ட (நாட்டிலேயே முதன்முதலாக என்று எண்ணுகிறேன்), ஒரு கிளைடர் என்னும் இன்ஜின் இல்லாத விமானத்தை செய்து முடித்தார்கள். அதை மீனம்பாக்கத்துக்கு பார்ட் பார்ட்டாக கழற்றி எடுத்துச் சென்று மறுபடி பூட்டி 'வின்ச்'சின் மூலம் இழுத்து காத்தாடி போல உயர்த்த, அது தர்மலை (உஷ்ணக் காற்றைப்) பிடித்துக்கொண்டு பறந்தபோது கல்லூரியில் நாங்கள் அனைவரும் பெருமிதத்தில் பறந்தோம். கலாம் அதில் பங்கு வகித்தார்.



எம்.ஐ.டி-யில் இயற்பியல் பேராசிரியர் ராகவாச்சாரி, தமிழில் ஈடுபாடு உள்ளவர். அவர், தமிழில் அறிவியல் கட்டுரைகள் எழுதுவதற்கு ஒரு போட்டி வைத்தார். நானும் கலாமும் அதில் கலந்துகொண்டோம். கலாம் எழுதிய கட்டுரை ஆகாய விமானம் கட்டுவோம் என்பது. நான் எழுதியது 'அனந்தம்' என்னும் Infinity mathematics பற்றிய கட்டுரை.கலாமுக்கு பரிசு கிடைத்தது. எழுதுவதுடன் நிறுத்தி விடவில்லை. பிற்காலத்தில் விமானம் என்ன, ராக்கெட்டே கட்டி முடித்தார்.

எம்ஐடி-க்குப் பின் சில வருடங்கள் அவருடன் தொடர்பு இல்லை. இடைவருடங்களில் விக்ரம் சாராபாய் போன்றவர்களின் கண்காணிப்பில் அவர் வளர்ந்திருக்கிறார். நாசாவில் பயிற்சி பெற்றிருக்கிறார். கலாமை நான் பாரத் எலெக்ட் ரானிக்ஸில் சேர்ந்ததும் மீண்டும் வேலை தொடர்பாக சந்திக்க வாய்ப்புக்கள் கிடைத்தன. அவர் ஐ.எஸ்.ஆர்.ஒ-வின் 'எஸ்.எல்.வி' போன்ற ராக்கெட்டுகளின் வடிவமைப்பில் பங்கு கொண்டிருந்தார். அப்போதே கடினமான உழைப்பின் அடையாளங்கள் தெரிந்தன. கலாம், அரசாங்க ஏணியில்

விரைவாக உயர்வார் என்பதை சுற்றுப்பட்டவர்கள் அப்போதே சொன்னார்கள். பின்னர் அவர் ஸ்பேஸ் டிபார்ட்மெண்டிலிருந்த ஐதராபாத் டி.ஆர்.டி.ஓ. நிறுவனத்தின் தலைவராக பொறுப்பேற்று இந்திய அரசின் 'ப்ருத்வி', 'அக்னி', 'ஆகாஷ்', 'நாக்' போன்ற ஏவுகணைகளின் வடிவமைப்பை வெற்றிகரமாகச் செய்து முடித்தார். அதன்பின் டெல்லியில் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அரசின் மிக மிக தாமதமாகிவிட்ட எல்.சி.ஏ. விமானத்தை ஹாங்கரைவிட்டு வெளியே இழுத்து வந்து பறக்கவைத்ததில் கலாமின் பங்கு கணிசமானது.

எங்களுடன் அந்த பாட்ச்சில் எம்.ஐ.டி-யில் படித்த மற்றவர்களுடன் ஒப்பிட்டால் கலாமின் வளர்ச்சி பன்மடங்கானது. நாங்கள் யாரும் 'பாரத ரத்னா' ரேஞ்சுக்கு உயரவில்லை. கலாமின் வெற்றிக்கு முக்கியக் காரணம், செய்யும் தொழில் மேல் பக்தியும் அயராத உழைப்பும் தன்னம்பிக்கையும்தான்.

கலாம், டி.ஆர்.டி.ஓ-வில் இருந்த போது அவர் நடத்திய ரெவ்யூ மீட்டிங்குகளில் கலந்து கொண்டிருக்கிறேன். மிகச்சுருக்கமாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட காரியம் நடந்ததா என்று அந்தந்த ப்ராஜெக்ட் லீடரைக் கேட்பார். தாமதமானால் கோபித்துக்கொள்ளவே மாட்டார். சத்தம் போட மாட்டார். எப்படியோ அவரிடம் கொடுத்த வாக்குத் தவறுவதில் சங்கடத்தை உண்டு பண்ணுவார். அவரே அவ்வளவு கடுமையாக 24/7/365 என்று வேலை செய்யும்போது மற்றவர்கள் அதற்கு ஈடுகொடுக்க வேண்டியது கட்டாயமாகியது. Leading by example.



அவருடைய சொந்தத் தேவைகள் எளிமையானவை. பிரம்மச்சாரி, சைவ உணவு. எந்தவிதக் கெட்ட பழக்கமும் கிடையாது. இதனுடன் ஆதாரமான முஸ்லிமின் நல்லொழுக்க குணங்களும் சேர்ந்து அவரை அத்தனை பெரிய பதவியின் சபலங்களிலிருந்து வெகு தூரம் தள்ளிவைத்தன. தெஹல்கா டேப்களில் கலாம் பெரிய இடத்து லஞ்சங்களுக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டையாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறார்.

ஒரு சம்பவம் எனக்குத் தெளிவாக ஞாபகம் உள்ளது. ஐதராபாத்தில் அவருடன் ஒரு மீட்டிங் சென்றிருந்த போது சில ரஷ்ய தொழில்நுட்பர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்கு பஞ்சாரா ஓட்டலில் ஒரு டின்னர் இருந்தது. என்னையும் அழைத்திருந்தார். ரஷ்யர்கள் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மகிழ்ச்சியில் இருந்தனர். கலாம் கையில் ஒரு கிளாஸ் வோட்காவைத் திணித்து வற்புறுத்தினார்கள். கலாம் எந்தவித லாகிரிப் பழக்கமும் இல்லாதவர். சங்கடத்துடன் அவசரமாக என்னை அணுகி 'கையில என்ன?' என்றார். 'வாட்டர்... ஜஸ்ட் வாட்டர் கலாம்' என்றேன். 'கொண்டா' என்றார். நான் வைத்துக்கொண்டிருந்த

கிளாஸை மின்னல் வேகத்தில் பிடுங்கிக் கொண்டு வோட்கா கிளாஸை என் கையில் திணித்தார்.

'சாப்பிட மாட்டேன்னு சொன்னா அவங்களுக்குப் புரியமாட்டேங்குதுய்யா...' சற்று நேரத்தில் 'சியர்ஸ்' என்று வோட்கா கிளாஸ்களுடன் கலாமின் தண்ணீர் கிளாஸும் சேர்ந்து கிளிங்கியது.

கலாமும் நானும் இணைந்து ஒரு புத்தகம் எழுத உத்தேசித்திருந்தோம். இந்திய ராக்கெட் இயல் பற்றித் திப்புசுல்தான் காலத்திலிருந்து ஆரம்பித்து எழுதலாம் என்றார். 'நான் ரெடி... நீங்க ரெடியா கலாம்?' என்று எப்போது பார்த்தாலும் கேட்பேன். 'இதோ வந்து விடுகிறேன்.. அடுத்த மாதம் துவங்கிடலாம்யா' என்பார்.

இப்போது அவர் ஓய்வெடுத்த பின் அந்தப் புத்தகத்தை எழுதிவிடுவார் என்று எண்ணுகிறேன், இந்திய அரசும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் அரிமா ரோட்டரி சங்கங்களும் பள்ளிகளும் சமூக அமைப்புகளும் அவரை விட்டு வைத்தால்!

**ஆ**ந்த்ராக்ஸ் அபாயத்தைவிட ஹைக்கூ அபாயம்தான் அதிகம். தமிழ்நாட்டில் இத்தனை ஹைக்கூ கவிஞர்களா.. காரணம் என்ன?

பெரும்பாலானோருக்கு ஹைக்கூ என்றால் என்ன என்று சரியான வரையறையில்லை. மூணு வரியில் எழுதின எதுவும் ஹைக்கூ என்கிற தவறான கருத்து முதல் காரணம். இரண்டாவது, ஹைக்கூ என்பது ஒரு நிகழ்வு, ஒரு Snapshot என்பதை அறியாமல் சமூகச்சாடலுக்கும் காதலியின் பாதங்களை வர்ணிப்பதற்கும் பயன்படுத்துவது.. மூன்றாவது, யார் வேண்டுமானாலும் எழுதலாம். ஒரு பஸ் டிக்கெட், கட்டி தட்டாத பால்பாயிண்ட் பேனா போதும் என்கிற நினைப்பு.

எனக்கு அனுப்பப்படும் ஹைக்கூ தொகுப்புகளில் நூறில் ஒன்று தேறினால் அன்று என் அதிர்ஷ்ட தினம். அதுவும் ஹைக்கூ என்று தெரியாமலே தற்செயலாக வந்து விழுந்த சரித்திரங்கள்தாம் அவை. கவிபாலா என்பவர் எழுதிய 'ஒட்டுப்பொட்டு' என்கிற தொகுப்பில் 104 மூன்று வரிக் கவிதைகளில் ஹைக்கூ என்று சொல்லக்கூடியது சற்றே திருத்திய இது -

விதவை பார்க்கிறாள்
கண்ணாடியில்

ஒட்டுப்பொட்டு

# கம்ப்யூட்டரை மீட்டேன்!



எழுத்தாளர் ஜி.எஸ். பாலகிருஷ்ணனின் மகன் ஜி.பி. பிரபாத், தனது 'Chains' என்னும் ஆங்கில நாவலை அன்புடன் அனுப்பியிருந்தார். மற்ற இந்தாங்கில எழுத்தாளர்களின் நாவல்களைப் போலல்லாமல் மிகச் சுலபமாகப் படித்து முடிக்க முடிந்தது. எளிய நடையில் நகைச்சுவையும் அங்கதச் சுவையும் கலந்து எழுதியிருக்கிறார்.

சென்னையில் வந்து செட்டிலாக விரும்பும் என்.ஆர்.ஐ. இன்ஜினீயரும் அவர் மனைவி மக்களும் இந்தியாவில் சந்திக்கும் முரண்பாடுகளும் அடையாளக் குழப்பங்களும் இந்தக் கதையின் மிக யதார்த்தமான பின்னணி.

அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களுக்கு நடுவயதில் தாய்நாட்டுக்குத் திரும்பும் ஆவேசம் வரும். அவர்கள் தேடி வருவது, அவர்கள் விட்டுப் போன இந்தியாவை. அது தற்போது செலாவணியில் இல்லை என்பது முதல் அதிர்ச்சி. இதனுடன் அங்கு பிறந்த குழந்தைகள், இங்கே தலைகால் புரியாமல் கஷ்டப்படுவதும் இந்திய கம்பெனிகளின் தனிப்பட்ட விதிகளும் அரண்மனை ரகசியங்களும் கூடுதல் அதிர்ச்சிகள். இவற்றைத் தெளிவான, எளிதான ஆங்கில நடையில் எழுதி யுள்ளார்.

பிரபாத்தின் நாவல், அவருடைய சொந்த அனுபவங்களுடன் கற்பனைக் கலவையாக இருப்பதை உணர முடிகிறது. இந்தியாவை பிளேனிலிருந்து இறங்கியதிலிருந்து, ஏன்... பிளேனுக்குள்ளி ருந்தே சிங்கப்பூரிலிருந்து துவங்கிக் குறைகளை மட்டும் தேர்ந்தெடுத்துச் சொல்லும் பாணி நாவல் முழுவதும் தொடர்கிறது. இங்கே சில நல்லதும் இருக்கிறது என்று யாரேனும் எழுதமாட்டார்களா என்று ஏக்கம் தோன்றுகிறது.

East West சிறப்பாகப் பதிப்பித்திருக்கும் இந்த நாவல் நல்ல வரவேற்பைப் பெற்றதாம்.

**ஆ**க்ஸ் (Axe) டெக்னாலஜி என்னும் நிறுவனத்தின் ஆண்டு விழாவில் கலந்துகொள்ள, எனது நண்பர் பால்பாண்டியன் அழைத்திருந்தார். மகாபலிபுரத் தருகே 'ஃபிஷர்மன்ஸ் கோவ்'வின் அருமையான சூழ்நிலையில் நடந்த இன்ஜினீயர்களுக்கான பரிசளிப்பு. அன்பளிப்பு விநியோகிக்க நடிகை மும்தாஜ் வந்திருந்தது ஓர் இன்ப அதிர்ச்சி (அவர் நன்றாக இங்கிலீஷ் பேசியதை எத்தனை பேர் கவனித்தார்கள், தெரியவில்லை! 'மலே மலே' என்று பின்னணியில் உச்சாடனம் செய்து கொண்டிருந்தார்கள்!).

ஆக்ஸ் சேர்மன் பால்பாண்டியனை எனக்குப் பதினாறு வருடங்களாகத் தெரியும். அமெரிக்காவில் டல்லாஸில் இருந்துகொண்டு பெங்களூர், சென்னை போன்ற இடங்களில் கணிப்பொறி/ தொலைபேசித் தொடர்புக்கான மென்பொருள்களைச் சுமார் நூற்றுஎழுபத்தைந்து இன்ஜினியர்களை எழுத வைத்து, நாட்டுக்கு டாலர் ஈட்டித்தரும் பணியைச் செய்யும் தமிழர் பால்.

இவரை டல்லாஸில் முதலில் 1986-ல் சந்தித்த போது, அங்கிருந்த மெட்ரோப்ளொக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் எனக்கு ஒரு கம்ப்யூட்டர் பரிசளித்தார். 'மானிட்டர், கீ-போர்டு எதுவும் வேண்டாம். கம்ப்யூட்டர் மட்டும் போதும்' என்று சொல்லிவிட்டேன். அந்த கம்ப்யூட்டரை அமெரிக்காவில் இருக்கும் என் மைத்துனன் ரவியிடம் கொடுத்து, பெங்களூருக்கு அனுப்பும்படி சொல்லிவிட்டு வந்தேன்.


அவன் அனுப்ப, சில மாதங்கள் கழித்து அது பெங்களூர் விமான நிலையத்தில் வந்தது சேர்ந்தது. கஸ்டம்ஸ் பிடித்து வைத்துக் கொண்டு, டியூட்டி நிறையக் கேட்டார்கள். நான் 'அத்தனை' சுங்கவரி கட்டுவதற்கு இங்கேயே ஒரு கம்ப்யூட்டர் வாங்கிக் கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். 'அதெப்படி... அதற்கு டெமரேஜ் கட்டணும்' என்றார்கள். அது, சுங்க வரியைவிட அதிகமாக இருந்தது. 'ஏலத்தில் விட்டு வசூல் செய்து கொள்ளுங்கள்' என்றேன் வெறுப்புடன். லஞ்சத்தை எதிர்பார்க்கிறார்கள் என்பது என் மரமண்டைக்குப் புரியவில்லை. கஸ்டம்ஸ் அதிகாரி என்னை விசாரிக்க அழைத்தார்.

நான், டல்லாஸில் தமிழ்ச் சங்க விழாவில் எடுத்த போட்டோக்களைக்

காட்டினேன். 'எதற்குக் கொடுத்தார்கள்?' என்று கேட்டார். 'நான் தமிழில் ஒரு பரவாயில்லாத எழுத்தாளன்' என்றேன். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அந்த கஸ்டம்ஸ் அதிகாரியும் (மராட்டி) எழுத்தாளராம். டியூட்டியே கட்டவேண்டாம். எடுத்துக்கொண்டு செல்லுங்கள். ஒரு முறை வீட்டுக்கு வாருங்கள். டீ சாப்பிட்டுக்கொண்டே இலக்கியம் பேசலாம்' என்று அழைத்தார். ஒருவழியாக கம்ப்யூட்டரை மீட்டு, வீட்டுக்குக் கொண்டு வந்துவிட்டேன்.

அதனுடன் அந்தப் போராட்டம் ஓயவில்லை. அது 110 வோல்ட் மாடல். அதற்கான ஒரு ஸ்டெப் டவுன் டிரான்ஸ்ஃபார்மர் மத்திக்கரையில் சொல்லிச் செய்ய வேண்டியிருந்தது. அதைச் செய்தவர், லோடு எவ்வளவு இருக்கும் என்று தெரியாமல் கம்ப்யூட்டரைவிடப் பெரிசாக, ஏறக்குறைய ஈபி ரேஞ்சுக்கு ஒரு டிரான்ஸ்ஃபார்மர் செய்து கொடுத்தார். ஒருவழியாக அதை ஆன் செய்தேன்.

ஆபீஸில் நிறைய கம்ப்யூட்டர் பார்த்ததால் வீட்டில் என் முக்கியக் குறிக்கோள், அதில் தமிழில் கொண்டு வருவதே. எஸ்.ஆர்.ஜி. நிறுவனத்தைச் சார்ந்த முத்துகிருஷ்ணன் அதற்குப் பாரதி என்கிற மென்பொருள் கொடுத்து உதவினார். அந்த கம்ப்யூட்டர், ஒரு 286 எக்ஸ்டி மெஷின். இன்றைய தேதிக்கு அதை மியூஸியம்களில்தான் சேர்த்துக்கொள்வார்கள். அதில்தான் நான் முதலில் கம்ப்யூட்டரில் கதைகளை எழுத ஆரம்பித்தேன். டைப்ரைட்டிங் தெரிந்திருந்ததால், அதே லே-அவுட் டைக் கணிப்பொறியின் விசைப்பலகையிலும் அமைத்துக் கொண்டேன். தமிழில் இது சுலபம்.




நாட்பட நாட்பட கணிப்பொறியை பெண்டியமுக்கு மாற்றிவிட்டேன். மென்பொருளையும் மாற்றிவிட்டேன். இப்போது மைக்ரோசாஃப்ட்டின் 'வோர்ட்'லேயே தமிழை நேரடியாக உள்ளிட முடிகிறது. Movie Magic போன்ற திரைக்கதை சார்ந்த மென்பொருள்களையும் தமிழில் மாற்றிக் கொள்ள முடிகிறது. சகல வசதிகளும் தமிழில் கிடைக்கிறது.

மேலும் என் கையெழுத்தையே சாம்பிள் பண்ணி, அதை ஒரு ஃபாண்ட் செட்டாக்கி, கணிப்பொறியில் உள்ளிட்டுக் கையெழுத்தில் அச்சடித்துக் கொடுக்க முடிகிறது. என் எழுத்தாளப் பயணம் 1962-ல் கையெழுத்தில் துவங்கி, 1980-வாக்கில் டைப்ரைட்டருக்கு மாறி, 1987-ல் கணிப்பொறிக்கு மாறி, 2001-ல் மீண்டும் கையெழுத்துக்கு வந்துவிட்டது. சினிமாக்காரர்கள் பாஷையில் ஒரு ரவுண்டு வந்துவிட்டேன்.

மக்லூஹன் சொன்னது நினைவுக்கு வருகிறது - 'ஒவ்வொரு புதிய தொழில் நுட்பமும் அதற்கு முந்தைய தொழில் நுட்பத்தை இடம்பெயர்க்கும். ஆனால், அதற்கும் முந்தைய ஒரு தொழில் நுட்பத்தை மறுபடி கொண்டு வரும்...' இது என் உதாரணத்தில் சரியென்றே தோன்றுகிறது.

**வை**ணவ ஆசார்யர்களில் மிகச் சிறந்தவர்களில் ஒருவரான மணவாள மாமுனிகள் கி.பி.1370-ல் பிறந்து, 1443-ல் பரமபதித்தவர். தன் வாழ்நாளில் அவர் சாதித்த காரியங்கள் பல. உபதேச ரத்தினமாலை என்கிற நூலை இயற்றினார்.

பிள்ளை லோகாச்சாரியாரின் முமுக்ஷுப்படி, ஸ்ரீவசனபுஷணம், நாயனாரின் ஆசார்யஹ்ருதயம் போன்ற நூல்களுக்கு வியாக்கியானங்கள் எழுதினார். அவர் திருவாய்மொழிக்கு நம்பிள்ளையின் ஈடு வியாக்கியானத்தை விரிவுரைத்தபோது, ரங்கநாதரே சிறுவனாக வந்து கேட்டார் என்று ஓர் ஐதீகம் உண்டு. இவற்றையெல்லாம்விட, மாமுனிகள் செய்த ஒரு காரியம் மிக முக்கியமானது. திருவரங்கம் கோயிலின் திருவாராதனை நித்தியப் படியில் ஆழ்வார் பாசுரங் களைக் கொண்டு வந்து வழிமுறைகளை அமைத்தது. அதற்கு முன் சம்ஸ்கிருதத்தில் இருந்ததை தமிழுக்கு மாற்றியது.

பதினான்காம் நூற்றாண்டில் இதைப் புரட்சிகரமான மாறுதல் என்றே சொல்ல வேண்டும். இன்றுகூடத் தமிழ் அர்ச்சனை முழுவதும் நடைமுறையில் வராத நிலையில், திவ்யப் பிரபந்தத்தைச் சம்ஸ்கிருதத்துக்கு ஈடாகக் கொண்டு வந்தவர் மாமுனிகள். இவரைப் பள்ளிப்படுத்திய திருவரசு திருவரங்கத்தில் கொள்ளிடக் கரையில் தனியார் நிலத்தில் சிதிலமாக இருக்கிறது. இதை ஒரு கமிட்டி அமைத்து, இரண்டரை ஏக்கர் நிலத்தைத் தனியாரிடமிருந்து வாங்கி வைத்திருக்கிறார்கள்.

திருவரசை ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட் மூலம் அகழ்ந்து எடுத்து மண்டபம் கட்டி, மாமுனிகள் விக்கிரகத்தை மேற்குப் பக்கமாக அரங்கநாதரை நோக்கிப் பிரதிஷ்டை செய்யத் தீர்மானித்திருக் கிறார்கள். இதற்காக திவ்யதேசப் பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவை என்று திருவரங்கத்தில் உள்ள வானமாமலை மடத்தில் ஆரம்பித்திருக் கிறார்கள்.

முக்கியமான ஜீயர்கள், ஆழ்வார்கள் ஆய்வு மையத்தைச் சார்ந்த ஜகத்ரட்சகன் எம்.பி., டி.வி.எஸ். வேணு ஸ்ரீனிவாசன் போன்றவர்கள் மனம் வைத்தால், இந்தக் காரியம் ஒரு வருடத்தில் முடிந்துவிடும். தமிழை வடமொழியின் பிடியிலிருந்து விடுவித்து, ஏழை எளியவரும் சேவிக்கும்படி செய்த முதல் மகானின் நினைவாக ஓர் அழகான மண்டபம் கிடைக்கும்.

பார்க்கப்போனால், மாமுனிகள்தான் நான் தமிழ் எழுத்தாளனானதுக்கு மூல காரணம் என்று சொல்லலாம். ஆர்வமுள்ளவர்கள் akchari@vsnl.com என்னும் மின்மெயிலுக்கு எழுதலாம்.

# ஈ-மெயில் காதல்!



ஒரு கல்யாணக் கச்சேரியைக் கேட்டபின் நெய்வேலி சந்தானகோபாலன் அவர்களுடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தேன். கல்யாணக் கச்சேரியின் இரைச்சல்களும், கவனக் கலைப்புகளும், ஊடாடும் குட்டிக் குழந்தைகளும் இருந்தும் அவர் பாடிய சாவேரியையும் பந்துவராளியையும் என்னால் உன்னிப்பாக ரசிக்க முடிந்தது. இதற்குக் காரணம், அவர் எந்தக் கச்சேரியாக இருந்தாலும் ஒரு 'ஸ்டாண்டர்டு'க்கும் தன் மனத்திருப்திக்கும் பாடுவதுதான். இவரிடம் மதுரைமணியின் சாயலும், மதுரை சோமுவின் கலகலப்பும், மதுரை சேஷகோபாலனின் வித்வத்தும் கலந்து வாய்த்திருக்கிறது. "சிஷ்யர்களே சினிமாவில் அட்டகாசமாகப் பாடும்போது நீங்கள் பாடவில்லையா?" என்று கேட்டேன். "என் பஞ்சகச்சமும் சினிமா டூயட்டும் பொருந்தி வராது" என்று புன்னகைத்தார். புதிய குரல்களைத் தேடிக் கொண்டிருக்கும் ஏ.ஆர். ரஹ்மான், வித்யாசாகர் போன்றவர்கள் இவரை அதிக நாள் விட்டுவைக்க மாட்டார்கள் என்று தோன்றுகிறது.

ஈ-மெயில் வந்ததால், கடிதம் எழுதுவது மறைந்துவிடுமா என்று கேட்டு ஒரு ஈ-மெயில் எனக்கு வந்தது. இன்டர்நெட் இணையத்தில் கணித்திரையில் இப்போது புத்தகங்கள் படிக்க முடிகிறது. இதனால் புத்தக வியாபாரம் குறைந்துவிடவில்லை. இதுபோல்தான் ஈ-மெயில் வேறு, கடிதங்கள் வேறு. ஈ-மெயில் நவீன அவசர காலத்துக்குச் செய்திகள் உடனடியாகப் பரிமாறிக்கொள்வதற்காக ஏற்பட்ட வசதி. கடிதம் என்பது வேறு ஜாதி. லிட்டன் ஸ்ட்ரேச்சி சொன்னதுபோல் 'ஒரு நல்ல கடிதம் செய்தி சொல்லவோ, பெறுபவரை மகிழ்விப்பதற்கோ எழுதப்படுவதல்ல. இந்த இரண்டுமே தற்செயலாக நிகழலாம். ஆனால், அதன் ஆதாரமான காரணம் எழுதுபவரின் தனித்தன்மையை, பண்பை வெளிப் படுத்துவதே.'



கடிதம் என்பது ஓர் அழகுப் பொருள். ஈ-மெயில், இயந்திரப் பொருள். பெர்னார்ட்ஷா ஒரு காதல் கடிதத்தில் 'ஸ்டெல்லா, ஸ்டெல்லா, ஸ்டெல்லா' என்று 29 தடவை எழுதி விட்டு 'இனிமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது?' என்று எழுதினார். கேத்தரின் மேன்ஸ்ஃபீல்டு இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிறந்த சிறுகதைகள் எழுதிய பிரிட்டிஷ் பெண் எழுத்தாளர். ஜான் மிடில்டன் முர்ரே என்கிற மற்றொரு எழுத்தாளரைக் காதலித்தார். அவர் எழுதிய காதல் கடிதத்தின் ஒரு பகுதி இது -

'உங்கள் மேல் என் மென்மையான ஆழமான காதல், எனக்கு வெளியிலும் பரவியிருப்பதாகத் தோன்றுகிறது. பெரிய மலைகளின் நடுவே சிறிய ஏரிபோல நான் சிறைப்பட்டிருக்கிறேன். ஆழத்தில் நான் ஜொலிப்பதை உங்களால் பார்க்க முடியும். ஆனால், அடித்தளத்தைக் கண்டு பிடிக்கவே முடியாது. உங்கள் இதயத்தை எனக்குள் போட்டால் அது விழுவதை நீங்கள் கேட்கவே முடியாது.

என்ன காதல் இது!'

இம்மாதிரியான கடிதங்களை எல்லாம் ஈ-மெயில் யுகத்தில் காண முடியாது. ஈ-மெயில் என்பது பரிபாஷையில் சொல்லப்படும் கவிதையற்ற, காதலற்ற, உணர்ச்சி கலக்காத, ஒரு செய்திச் சக்கை. இன்று காதரின் ஈ-மெயிலில் அனுப்பினால்:

Subject காதல்

From katherine mansfield<kats@loveyahoo.com>

To: Middleton Murray<mmurray@madlyinlove.com>

அன்பே: நான் - )) அதேசமயம்: - & மேல் விவரங்களுக்கு http://www.loveletters.html பர்ர்க்கவும் TTFN என்றுதான் எழுதுவார். ஈ-மெயில் பரிபாஷைகளையும் 'இமோட்டிக் கான்'களையும் பிரித்தால் இதன் அர்த்தம்: 'அன்பே நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன் [-))]. அதே சமயம் என்னால் பேச முடியாமல் நாக்கு சிறைப்பட்டிருக் கிறது(;-&) கொடுத்திருக்கும் வலைதளத்தில் இருக்கும் காதல் கடிதத்தைப் பார்க்கவும். தற்போதைக்கு டாட்டா! (TTFN).'

இருக்கிற காதலும் போய்விடும். கடிதங்கள் எழுதி அனுப்பும் பழக்கம் மிகப் பழமையானது. ஆரம்ப காலங்களில் தபால் பெறுநரிடம்தான் தபால் கூலி வசூலித்தார்கள் (இப்போதுகூட சில அன்பர்கள் எனக்கு ஸ்டாம்ப் குறைச்சலாக ஒட்டி அனுப்பும்போது என்னிடம் தபால் இலாகா வாங்கு கிறார்களே அதுபோல), தபால் செலவு ஊருக்கு ஊர் வேறுபட்டது. 1680-லேயே லண்டனில் தபால்முறை இருந்திருக்கிறது. விக்டோரியா மகாராணி காலத்தில்தான் எல்லாக் கடிதங்களுக்கும் எல்லா தூரங்களுக்கும் ஒரே கட்டணம் என்று ஒரு பென்னி ஸ்டாம்ப் முறை வந்தது. பழங்காலத்திலிருந்தே சிரியா, சீனா, பர்சியா, எகிப்து, கிரீஸ், இத்தாலி போன்ற நாடுகளில் விதவிதமான தபால் முறைகள் இருந்திருக்கின்றன. ஷெர்ஷாவின் குதிரைத் தபால் பற்றி படித்திருப்பீர்கள். விக்டோரியா ராணியின் காலத்தில்தான் இது ஒழுங்குபடுத்தப்பட்டு கடிதத்தைப் பெறுபவருக்குப் பதிலாக எழுதுபவர் பணம் கொடுத்து அனுப்புவது என்பது வந்தது. இதை நடைமுறையில் கொண்டுவர ராணியின் தலையை ஸ்டாம்பாக பதிப்பித்தவர் ஸர் ரோலண்டு ஹில் என்பவர். அவர் 1864-ல் ரிட்டயர் ஆனபோது 'பஞ்ச்' (லண்டனின் விகடன்) பத்திரிகை அவருக்குச் சிலை வைக்க வேண்டும் என்றது. காரணம் 'கெட்ட ராஜாவின் தலையை வெட்டிய ஆலிவர் க்ராம்வெல்லுக்கு நாம் சிலை வைக்கும்போது நல்ல ராணியின்

தலையை ஒட்டவைத்த ஹில்லுக்கு வைப்பதில் என்ன தப்பு?' என்று தலையங்கம் எழுதியிருந்தது.



அப்பா எனக்கு கார்டில்தான் கடிதம் எழுதுவார். ஒரு முறை கேட்டபோது 'கார்டில் இரண்டு சௌகரியங்கள். சுருக்கமாக எழுதலாம். அதிகம் கோபமாக எழுதத் தயக்கம் ஏற்படும்' என்றார். அப்பாவின் மறக்க முடியாத கார்டு ஒன்று அலகாபாதில் எனக்கு வேலை கிடைத்ததும், அவருக்கு நான் எழுதியிருந்த கடிதத்துக்கு கிடைத்த பதில்: 'என்னைக் படிக்க வைத்து ஆளாக்கி வேலை கிடைக்க வைத்ததற்கு உனக்கு எப்படி கைம்மாறு செய்யப் போகிறேன்?' என்று சென்டிமெண்ட்டாக எழுதி இருந்தேன். அதற்கு அவர் கார்டில் மூன்று வரிகள்தான் பதில் எழுதியிருந்தார். 'உன் கடிதம் கிடைத்தது. நான் உனக்குச் செய்ததையே நீ உன் பிள்ளைகளுக்குச் செய்வதுதான் கைம்மாறு - அப்பா'. ஈ-மெயில் வந்ததால் கடிதம் எழுதும் பழக்கம் குறைந்து வருவது சோகம்தான். ஆனால், மறைந்துவிடாது. தன் பாட்டியின் காதல் கடிதங்களைக் கண்டுபிடித்த ஹார்ட் க்ரேன் என்கிற கவிஞர், 'விட்டத்தில் நெடு நாட்கள் அழுந்திப் பழுப்பாகி மென்மையாகி பனி மாதிரி உருகிவிடும் போல இருந்தன அக்கடிதங்கள்' என்கிறார். கடிதங்கள் மனதிலிருந்து உருகுவதில்லை.

தயவுசெய்து இனி எனக்கு ஹைக்கூ அனுப்பாதீர்கள். நீங்கள் ஹைக்கூ எழுதி அதை நான் கவனிக்க வேண்டும் என்றால் கீழ்க்காணும்

தர விதிகளை பயன்படுத்திப் பாருங்கள். ஹைக்கூ போட்டோ எடுக்கப்பட்ட நிகழ்வு போல. Haiku happen என்று அடிக்கடி சொல்லியிருக்கிறேன். இதனால் பெரும்பாலான ஹைக்கூக்கள் நிகழ்காலத்தில் இருக்கும். உதாரணம்:

சைக்கிள் ரிக்ஷாவில்
செல்கிறார்கள்
மூன்று குழந்தைகள்
கட்டபொம்மன் வேடத்தில்

இந்தக் காட்சியை மிகச் சுலபமாக கற்பனை பண்ணிக்கொள்ள முடியும். எந்த டவுனிலும் இது நிகழக்கூடியது. இதைப் பார்த்திராமல் கவிஞரால் எழுதியிருக்க முடியாது. மாறுவேஷப் போட்டியும் பள்ளிகளும் இருக்கும் வரை இது நிகழும். இதில் இருக்கும் subtext என்ன - பெற்றோர்கள் கற்பனை வறண்டுவிட்டது. மாறுவேஷப் போட்டி என்றால் பாரதி, கட்டபொம்மன், ஔவையார், இந்திரா காந்தி இதற்கு மேல் யாரும் சிந்திப்பதில்லை. பக்க விளைவாக இந்த ஹைக்கூ நான் பார்த்த பல மாறுவேடப் போட்டிகளை ஞாபகப் படுத்துகிறது. பி.இ.எல்-லில் ஆபீஸர்ஸ் கிளப்பில் நடந்த போட்டியில் மொத்தம் பத்துச் சிறுவர்களில் எட்டுப் பேர் போட்டிருந்த வேடம் குடிகாரன் வேடம்! இவ்வாறான கிளை ஞாபகங்களை சுரக்க வைக்கும் தகுதி பெற்றது ஹைக்கூ.

ஹைக்கூவில் ஓர் எதிர்பாராத தன்மை இருக்க வேண்டும். முதல் இரண்டு வரிகள் வரை சாதாரணமாக இருந்து, மூன்றாவது வரியில் ஒரு அதிசயம் அல்லது அதிர்ச்சி தர வேண்டும். மறைமுகமாக சமூக நிலை ஒன்றை உணர்த்தினால் அது 'போனஸ்' உருவகமோ உவமைகளோ கூடாது. இந்த ரீதியில் கீழ்வரும் ஜப்பானிய ஹைக்கூக்களைப் பாருங்கள்.

சாக்கடை நீரில்
மிதக்கிறது
முகமூடி

கோட்டையை அடுத்த
பார்க் பெஞ்சில்
காதலர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்
எதிரே பீரங்கி.

# நீங்களேதான், அவன்!



கவனக்குறைவு ஒரு தமிழ் தேசிய குணம். டைரக்டர் ஒருவர் ஒரு முறை சரித்திரப் பேராசிரியர் ஒருவரிடம் எம்.ஜி.ஆர். அவர்களை அறிமுகப்படுத்தியபோது அந்தப் பேராசிரியர் அவரைப் பார்த்து "நீங்க என்ன வேலைல இருக்கீங்க..?" என்று கேட்டாராம். 'ஆளவந்தான்' ப்ரீமியர் ஷோவிலிருந்து வெளி வரும்போது ஓர் அன்பர் என்னை அணுகி, "சார் நீங்க பாலகுமாரன்தானே?" என்று கைகுலுக்கினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் மற்றோர் அன்பர் என் மனைவியை அணுகி, "என்ன மேடம் இப்பல்லாம் நீங்க கதை எழுதறதே இல்லையே..?" என்று கேட்டார். இதாவது பெண் பெயரால் நிகழ்ந்த குழப்பம் என்று சொல்லலாம். ஆனால், ஒரு முனிவர் போல எல்லாப் பத்திரிகைககளிலும் போட்டோ போடப்பட்ட பாலகுமாரனையும் என்னையும் குழப்பிக்கொள்வது கொஞ்சம் ஓவர்தான்!

மனிதனின் எம்ப்ரியோ என்னும் கருவை க்ளோனிங் பண்ணியிருப்பதாக அட்வான்ஸ் செல் டெக்னாலஜி என்னும் அமெரிக்க நிறுவனம் அறிவித்ததையடுத்து உலகெங்கும் இதற்கு மறுப்பும் வெறுப்பும் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த நிறுவனம் 'எங்கள் ஆராய்ச்சியின் குறிக்கோள் மனிதப் பிரதிகளை உருவாக்குவதல்ல... பிறவி வியாதிகளை நீக்குவதற்கான 'ஸ்டெம்செல்' களை உற்பத்தி செய்வதே நோக்கம். இது 'தெராப்யுட்டிக் க்ளோனிங்'... 'ரீப்ரொடக்டிவ் க்ளோனிங்' அல்ல...' என்று சொன்னாலும் பயப்படுவதற்கான காரணங்கள் வலுவானவை.

ஜெனட்டிக் மாடிஃபிகேஷன் என்னும் முறை பத்து வருஷமாக இருந்து

வருகிறது. முதலில் தாவர விதைகளை ஜெனட்டிக்காக மாற்றி நல்ல விளைச்சல், புஷ்டி என்று கொண்டு வந்தார்கள். தற்போது அமெரிக்காவில் தானிய விதைகளில் பாதி , இவ்வாறு ஜெனட்டிக்காகத் திருத்தப்பட்ட விதைகள்தாம்.

அடுத்து, மிருகங்களுக்குத் தாவினார்கள். முதலில் அகப்பட்டது எலி. ஓர் எலியின் உள்ளே ஒருவகை ஜீனை விதைத்து, அடுத்த தலைமுறை களை முழுவதும் மாற்றிவிடும் கலை இப்போது எளிதாகிவிட்டது. செய்முறைகள் மிக மிக முன்னேறிவிட்டன. 'ட்ரான்ஸ் ஜெனட்டிக் மைஸ்' (Transgenetic Mice) மரபு மாற்றப்பட்ட எலிகள் மரபணு ஆராய்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.



உள்ளே விதைக்கும் ஜீன் மரபணு, ஒரு எலியினுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை... மனிதனிடமிருந்துகூட எடுத்து விதைக்கலாம். கான்சர் வந்த எலிக்கு, மனிதனின் 18-ம் நம்பர் க்ரோமோசோமை விதைத்தால், அது நோய் நீங்கி, தாங்க்ஸ் சொல்லிவிட்டு, தேங்கா பத்தையை நோக்கி ஓடுகிறது.

ஒரு எலியின் மூன்று நாள் கருவில் 'ஸ்டெம் செல்' (Stem Cell) என்னும் முதல் உயிரணுக்கள் உள்ளன. இதைப் பிரித்து ஒரு ஜீனுக்குள் செலுத்தினால், அந்த ஜீனை அதற்கான இடத்தில் வெட்டி, புதிய ஜீனை ஒட்டவைக்க முடியும். இந்த முறையில்தான் ஜீனை ரிப்பேர் செய்ய ஸ்டெம் செல்கள் பயன்படுகின்றன. இதை ஹேமோலோகஸ் ரிகாம்பினேஷன் என்கிறார்கள்.

இம்முறையைப் பயன்படுத்தி ஆடு, மாடு, பன்றி, கோழி போன்றவற்றை மரபு மாற்றி, அவற்றை மனிதர் வியாதிகளைக் குணப்படுத்து வதற்கேற்ற பொருள்களை உண்டாக்கிக் கொடுக்க முடியும். இதில் வியாபார சாத்தியங்களும் உண்டு.

ஒரு சிலந்தியிலிருந்து வலை பின்னும் ஜீனைத் தனிப்படுத்தி, ஆட்டுக்குள் விதைத்தால் ஆட்டுப்பாலில் இருந்து பட்டு நூற்கலாம்! பசுக்கள் பலமடங்கு அதிகம் பால் வைட்டமின் சேர்த்துக் கொடுக்கும்படி செய்யலாம். மட்டனில் நமக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சேர்க்குமாறு மாடுகளை மாற்றலாம். முட்டைகளை இன்னும் டேஸ்ட்டாக பண்ணலாம். மேட்டர் என்னவென்றால் மரபுக் குணத்தை மாற்றுவது.

இதையே ஒரு மனிதனுக்குச் செய்ய, ஒரு ஏஸிடி போல நல்ல ஆராய்ச்சி சாலையும் உன்னதமான கருவிகளும் இருந்தால் செய்ய முடியும்... செய்திருக்கிறார்கள். மனமுவந்து அன்பளித்த பெண்களின் கரு முட்டையில் இருந்து ந்யுக்ளியஸ் என்னும் நடுக்கருவை மட்டும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக டோனர் ஓர் ஆணின் செல்லின் உட்கருவை உள்ளே செலுத்தி, இன்குபேட்டர் களில் ஓரளவுக்கு அது தானே இரட்டிப்பாவதைக் கணித்திருக்கிறார்கள்.

கருவுக்குள் திரும்ப விதைக்கவில்லை. பார்த்தினோ ஜெனசிஸ் என்னும் இம்முறையில் அவர்கள் குறிக்கோள் டயாபடிஸ், பார்கின்சன் போன்ற வியாதியுள்ளவர்களை இவ்வகையில் கொஞ்சம் லேட்டாக மறுபிறக்க வைத்து வைத்து, அவர்களுக்கேற்ற ஆரோக்கியமான செல்களை உற்பத்தி செய்து அளித்து வியாதியை நீக்குவதே. மற்றொரு மனிதனை உருவாக்குவதல்ல எங்கள் நோக்கம் என்கிறார்கள்.

இன்றைய டெக்னாலஜியில் உங்கள் உடம்பிலிருந்து ஒரு செல்லை எடுத்து, அதன் ஒரு க்ரோமோசோமில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட ஜீனைச் செருக முடியும். இவ்வாறு மாற்றப்பட்ட மரபணுவின் ந்யுக்ளியஸ் என்னும் உட்கருவைப் பெண்களுக்கான முட்டையிலிருந்து ந்யுக்ளியஸை நீக்கிவிட்டு, அதில் உட்காரவைக்க முடியும்.

பதினைந்து நாள் வரை அந்தக் கருவுக்கு மனித அடையாளங்கள் ஏற்படுவதில்லை. அவை ஆதாரமான ஸ்டெம் செல்களைத் தான் உற்பத்தி செய்கின்றன. இந்த ஸ்டேஜில் பரிசோதனையை

நிறுத்திவிடுகிறோம் என்கிறார்கள். இதைத்தான் அமெரிக்காவில் சாதித்திருக்கிறார்கள்.

ஆனால், நாளடைவில் இந்தப் புதிய எம்ப்ரியோவில் இருந்து ஒரு புதிய மனிதனை உருவாக்க முடியும். பிறப்பவன் உங்களுடைய 'ட்ரான்ஸ்ஜெனிக் க்ளோ' னாக இருப்பான். அச்சு நீங்களேதான். உங்களுக்கு வழுக்கை இருந்தால், டயாபடீஸ் இருந்தால் அல்லது பார்கின்சன் இருந்தால், அந்த ஜீனை மட்டும் திருத்தி விட்டு வளர வைக்கலாம். மற்றபடி, நீங்களேதான் அவன்.

இந்த ஆசாமியிடமிருந்து எம்ப்ரியோ செல்களை எடுத்து, உங்களுக்கு ஸ்பேர் பார்ட்டுகளாகவும் அவனை வைத்துக் கொள்ளலாம் - லிவர், கிட்னி என்று. அதைவிட உங்களுக்கு வாழ்க்கை வெறுத்துப் போய் விட்டால், அவனுக்குச் சொத்து எழுதி வைத்து விட்டுச் செத்துப் போகலாம். உங்கள் வாழ்க்கையை அவன் தொடரலாம். அவன் உங்கள் பிரதிமகன்.

ஆனால், அதே மனமா, குணமா என்று கியாரண்டி கொடுக்க மாட்டேன். இதெல்லாம் உடனே நடக்கும் என்று சொல்லவில்லை. ஆனால், கூடிய சீக்கிரமே வருவதற்கான கருவிகள் நம்மிடம் உள்ளன. அதனால் தான் பயப்படுகிறார்கள்.

**ஆ**ர்தர் கானன் டாயில் எழுதிய 'செந்தலைச் சங்கம்' (The Redheaded League) ஷெர்லாக் ஹோம்ஸ் துப்பறியும் கதைகளில் எனக்குப் பிடித்த ஒன்று. (மற்றொன்று The speckled Band.) செந்தலைக் கதையில் ஒரு விநோத விளம்பரம் வரும் - கைநிறைய சம்பளம் கொடுத்து சுலபமான வேலை ஒன்றுக்கு தலைமுடி செம்பட்டையாக இருப்பவர்கள் விண்ணப்பிக்கவும் என்று இதைப் பார்த்துவிட்டு ஓர் இளைஞன் விண்ணப்பிப்பான். அங்கே போனால் அவனைப் போல நூற்றுக்கணக்கான செம்பட்டைத் தலையர்கள் காத்திருக்க, இவனை மட்டும் அழைத்துச் சென்று "வா.. உனக்குத்தான் வேலை' என்று உடனே அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் கொடுத்துவிடுவார்கள். மறுநாள் காலை வேலைக்குச் செல்வான். என்ன வேலை? என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா என்னும் கலைக்களஞ்சியத்தை பிரதியெடுக்க வேண்டும் காலையிலிருந்து மாலை வரை... இளைஞன் சந்தேகப்பட்டு ஷெர்லாக் ஹோம்ஸிடம் சொல்வான். ஹோம்ஸ் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துவிட்டு, "உன் வீடு எங்கிருக்கிறது...?" என்று

கேட்பார், விலாசம் சொல்வான்.

"பக்கத்தில் பாங்க் ஏதாவது இருக்கிறதா.?"

"ஆம்.."

"வீட்டில் தனியாக இருக்கிறாயா..?"

"ஆம்.."

"உன் கேஸ் முடிந்துவிட்டது." என்பார் ஹோம்ஸ்.

கதையைப் படித்துப் பாருங்கள். இந்தக் கதையைக் குறிப்பிடத் தூண்டியது கோவையிலிருந்து முத்து அவர்கள் எழுதிய ஒரு கடிதம். அங்கே புறநகர் பகுதியில் 'டேட்டா பிராசஸிங்' என்று சொல்லி டெலிபோன் டைரக்டரிகளை ஃப்ளாப்பியில் உள்ளிடுகிறவர்களுக்கு ஒரு வரிக்கு 25 பைசா கொடுக்கிறார்களாம். ரூபாய் ஐயாயிரம் முன்பணம் கட்டவேண்டுமாம். (இது non-refundable) ஜனங்கள் க்யூவில் நின்று அடித்துக் கொடுத்துவிட்டுப் போகிறார்களாம். முத்து 'நான் ஏன் பத்தாயிரம் முன்பணம் வாங்கி ஸ்ரீராமஜெயம் எழுதச் சொல்லி (கம்ப்யூட்டர் தேவையில்லை... நாற்பது பக்கம் நோட்டு போதும்) வரிக்கு பத்து பைசா என்று ஒரு பிசினஸ் ஆரம்பிக்கக் கூடாது?' என்று கேட்டிருக்கிறார்.

முத்து அவர்களே! வாழ்க்கையில் நம் ஒவ்வொரு வருக்கும் இத்தனை ஏமாறும் கணங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அப்போது எச்சரிக்கைகள் எல்லாம் தளர்ந்து எதையும் நம்பத் தயாராக இருப்போம். நெற்றியில் 'என்னை ஏமாற்று' என்று எழுதி ஒட்டிக் கொள்கிற பலவீன கணம் அது - gullibility of common man. இதை வைத்துக்கொண்டுதான் பல நிதி நிறுவனங்கள், முதல் தவணைக்கே ஒரு வெட் கிரைண்டர் அல்லது காத்ரெஜ் அலமாரி பரிசளிக்கும் சீட்டு கம்பெனிகள், லாட்டரிகள், ஜோஸியர்கள், அதிர்ஷ்டக்கல் விற்பவர்கள், துபாய் அனுப்புபவர்கள், நோட்டை இரட்டிப்பாக்குபவர்கள், ஆவியுடன் பேசுபவர்கள் அனைவரும் பிழைக்கிறார்கள். உங்கள் டெலிபோன் டேட்டாபேஸ் ஆசாமிகள் இதில் கொஞ்சம் ஹைடெக் வகை.

# மலையாளக் கரையோரம்..!



**ஆ**லப்புழை அருகில் உள்ள குமாரகம் கிராம்த்தில் உள்ள அழகான ஸ்வஸ்தஸ்தலம் அண்மைக் காலத்தில் பாரதப் பிரதமர் வாஜ்பாய் விஜயத்தால் பிரபலமடைந்துள்ளது. அங்கு சென்று பத்து நாள் இருந்து வந்தேன். மசாஜ் சமாசாரங் களுக்காக அல்ல... அதெல்லாம் என் சரீரம் தாங்காது.

கொச்சினில் இறங்கி சொடுக்கப்பட்ட சவுக்கு நுனிபோல் மலைப்பாதையில் நூறு கிலோ மீட்டர் வேகத்தில் அல்லாடிக்கொண்டே சென்ற க்வாலிஸ் டிரைவரிடம் எனக்குத் தெரிந்த ஒரே மலையாள வார்த்தையை இருமுறை பயன்படுத்தி 'பதுக்க பதுக்க' என்று சொன்னதில் அவர் 'ஓ' என்று பதிலிறுத்துவிட்டு வேகத்தை 98-க்கு குறைத்தார். (இந்த ‘ஓ’ மலையாளத்தில் 'அப்படியா', 'அப்படியே', 'புரிந்து விட்டது', 'வியக்கத்தக்கது' என்று பல அர்த்தங்களில் பயன்படுகிறது). திரும்பும்போது ஸ்டெமடில் விழுங்கிவிட்டுச் செல்லவேண்டும் என்று தீர்மானித்தேன்.

கம்யூனிசமும் ஐயப்ப பக்தியும் அருகருகே சமரசமாக வாழும் கேரள மாநிலத்தின் பல பகுதிகள் நான் பார்த்த மேல்நாட்டு கிராமங்களின் பசுமையை நினைவூட்டுகின்றன. தொடர்ச்சியாக ஒரு டவுன் முடிந்த இடத்தில் அடுத்த டவுன் ஆரம்பிக்கும் தேசம். அங்கங்கே வெள்ளத்தில் வள்ளங்கள். அடர்த்தியான கூந்தல் பெண்கள் பாரதி க்ளோபல் தொலைக் காட்சியில் 'பால்நிலாப் புஞ்சிரி, குங்கும சுந்தரி, தேனிலும் பூவிலும் பூமகள் பாத்திமா!' பெண்கள் முண்டு - ரவிக்கை அணிவதைத் துறந்து அனைவரும் சுடிதாருக்கு மாறிவிட்டார்கள். (கோபால்ட் நீலம் வேண்டப்பட்ட வண்ணம்.) ஆண்கள்தான் டப்பா கட்டையும், லுங்கியையும், வாயில் கடித்த பீடியையும் இன்னும் துறக்கவில்லை.



குமாரகம், எட்வர்டு பேக்கர் என்னும் சர்ச் ஆஃப் இங்கிலாந்து பாதிரியார் தன் குடும்பத்துடன் வாழ 1877-ல் கட்டிய வீடு... அழகான ஏரி விளிம்பில் ஆயிரம் ஏக்கரை பராமரித்து தூய மலையாளம் பேசி கிறிஸ்தவம் போதித்த பேக்கர் குடும்பத்தினர் 1977 வரை இருந்தபின் தாஜ் நிறுவனத்துக்கு விற்றுவிட்டு இங்கிலாந்து திரும்பிவிட்டனர். தாஜ் இதை ஒரு ஆரோக்கியசாலையாக நடத்தி வருகிறார்கள். படகு வீடுகள்... மோட்டார் படகுகள்... கையில் மெஹந்தி இன்னும் அழியாத... இன்னும் சண்டை போடத்துவங்காத புதுமணத் தம்பதிகள், நீச்சல் குளம், மசாஜ் பார்லர், உப்பங்கழிகளிடை படகுப் பயணம் என்று அட்டகாசமான இடம்.

சும்மா கேட்டு வைக்கலாமே என்று என் முதுகுவலிக்கு சிகிச்சை உள்ளதா, அது எப்படியிருக்கும், எவ்வளவு ஆகும் என்று விசாரித்தேன். டாக்டரிடம் அப்பாயின்ட்மெண்ட் வாங்கவேண்டும் (ஆண் டாக்டர்தான்). காலையில் நம் உடம்புவாகுக்கு ஏற்ப பச்சை, சிவப்பு எண்ணெய்களைத் தேர்ந்தெடுத்து தைலக்காப்பு அணிவித்து மேலே உத்தரத்தைப் பிடித்துக் கொண்டு லேசாக முதுகில் மிதிப்பார்களாம். முதுகுவலி பறந்து போகும் என்றார்கள். எனக்கு விலை கேட்டதுமே பறந்து போயிற்று. 'Later, much later' என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன்.

மலையாளப்படங்களின் சமூகக் கவலைகள் பற்றி ஓர் ஆழமான

கட்டுரை எழுதும் நோக்கத்துடன் சங்கனாச்சேரியோ எங்கேயோ டவுனுக்குச் சென்று 'நான்காவது சிம்ஹம்' என்னும் 'ஷகிலா' படம் பார்த்தோம். எங்கள் உடையைப் பார்த்து தணிக்கை அதிகாரிகள் என்று சந்தேகித்து அந்தப் பெண்ணின் செங்கல் நிற ஜன்னல் ஜாக்கெட்டின் முதுகுப் பக்க ரிப்பனை காதலன் கடித்து முடிச்சு நீக்கித் திரும்பிப் படுப்பதற்குள் ரீல் மாற்றிவிட்டார்கள்... அநியாயம்!

இருபது ஆண்டுகளுக்கு முன் டெல்லி தர்யாகஞ்சிலிருந்து ஒரு விளம்பரம் வரும். நாலுக்கு நாலு கட்டம் கொண்ட ஒரு 'மாஜிக் ஸ்கொயர்' கொடுத்து எப்படிக் கூட்டினாலும் முப்பத்திரண்டு அல்லது முப்பத்துமூன்று வரும்படியாக நிரப்பி அனுப்பவும் என்று எழுதி ஓர் உதாரணமும் கொடுக்கப்பட்டிருக்கும். கொஞ்சம் யோசித்தால் பொதக்கென்று எண்கள் வந்து விழுந்துவிடும். முதல் பரிசு பத்து லட்சம், இரண்டாவது பரிசு ஐந்து லட்சம், மூன்றாவது பரிசு ஒரு 'ஆல் வேவ் ஆல் வோர்ல்ட்' டிரான்சிஸ்டர் ரேடியோ. நுழைவுக் கட்டணம், கடைசி தேதி எல்லாம் கிடையாது. 'பரவாயில்லையே..' என்று என் உறவினர் ஒருவர் நிரப்பி அனுப்பினார், மூன்றாவது நாள் பதில் வந்தது. 'வாழ்த்துக்கள்... நீங்கள் மூன்றாவது பரிசு வென்றிருக்கிறீர்கள். உங்களுக்கு இலவச டிரான்சிஸ்டர் அனுப்பபட்டிருக்கிறது. அதன் லெதர் கேஸ், ஆன்ட்டெனா கட்டணமாக, வி.பி.பி. கொண்டுவரும் போஸ்ட்மேனிடம் நூற்று ஐம்பது ரூபாய் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.'



கடிதம் வந்த கையோடு பார்சலும் வந்தது. வேறு வழியில்லாமல் பணம் கொடுத்துப் பிரித்துப் பார்த்தால், டெல்லி சாந்தினி சௌக்கில் செய்யப்படும் எழுபத்தைந்து ரூபாய்க்கு உண்டான மீடியம் வேவ் டிரான்சிஸ்டர். ரேடியோ ஸ்டேஷன் அருகில் இருந்தால், காதருகில் வைத்தால் கேட்கும். தெருவில் போகும் ஆட்டோக்கள் சத்தம் தவறாமல் கேட்கும்! அப்புறம் அம்ருத்ஸரிலிருந்து வீட்டுக்குள்ளேயே சினிமா காட்டலாம் என்று ஒரு ப்ரொஜெக்டர் விளம்பரம் வரும் (இதை 'ஸ்ரீரங்கத்து தேவதை'களில் எனது முதல் சினிமா அனுபவம் என்று ஒரு சிறுகதையாக எழுதியிருக்கிறேன்). இருபத்தைந்து ரூபாய்க்கு பனாரஸ் பட்டுச் சேலைகள்... என்று ஏமாறுபவர்கள் இருக்கும்வரை

ஏமாற்றுபவர்கள் இருப்பார்கள் என்பது மகாபாரத காலத்திலிருந்து வரும் உண்மை.

முன்னாள் அமைச்சர் கா. வேழவேந்தன் அவர்களை முன்பெல்லாம் சி.ஐ.டி. காலனியில் காலை நடையின்போது சந்திப்பேன். தற்போது எங்கள் நடைபாதைகளும் நேரங்களும் மாறிவிட்டதால் கொஞ்ச நாள் அவரைப் பார்க்கவில்லை. எனக்குத் தன் புத்தகங்கள் சிலவற்றை அனுப்பியிருந்தார்.கடைசியாகத் 'தமிழா அமிழ்தா' என்று கேட்கும் புத்தகத்தை அனுப்பியிருந்தார்.

கலைஞர் அணிந்துரை. நாவலர் மதிப்புரை, சிலம்புச்செல்வர் முகவுரை, முன்னுரை, என்னுரைகள் எல்லாவற்றையும் கடந்தபின் கட்டுரைகளின் மூலம் இலக்கியத்தின் சில சுவையான கவிதைகளின் அழகை விளக்குகிறார். "எழில்வளை நீயேன் ஓரிரண்டு நாட்களாக என்னிடம் சரிவர உரையாடுவதில்லை" போன்ற ஸர்க்கா 1950 தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கும் விளக்கங்களைவிட வேழவேந்தன் தேர்ந்தெடுத்திருந்த பழங்கவிதைகள் என்னை வசீகரித்தன.

இவருடைய இலக்கியப் பரிச்சயம் நந்திக் கலம்பகம், கலிங்கத்துப்பரணி, தண்டியலங்காரம், முத்தொள்ளாயிரம் என்று விஸ்தாரமாக உள்ளது.

தமிழில் சங்க காலத்துக்குப் பிறகு வந்த இலக்கியங்களில் உவமைகளும் உருவகங்களும் மிகையின் எல்லையைத் தொட்டன. சேனை என்றால் கடல்போல் சேனை... ஒருத்திக்கு இடை சின்னது என்றால் அது உலோபியின் வார்த்தை போல! மார்பகங்கள் பெரிசு என்றால் பாரம் தாங்காமல் கால்கள் அழுமாம், இந்தத் தண்டியலங்கார வெண்பாவைப் பாருங்கள்.

'திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பால் என்று வாய் மடுக்கும் - அங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
ஏந்திழையாள் பூந்துகிலாம் என்று''

நிலாவைப் பார்த்து பால் என்று வாய்வைத்துக் குடிக்கத் தோன்றுமாம். காதலன் செக்ஸுக்குப் பிறகு காதலி புறக்கணித்துவிட்ட துகிலோ என்று நிலவொளியை பொறுக்கப் பார்ப்பானாம். இத்தகைய மிகையிலிருந்து மெள்ள மெள்ளத் தமிழன்னை தன்னை விடுவித்துக்கொண்டு,

''நடு இரவு
நிமிர்ந்து நிற்கவும்
நெளிந்து படுக்கவும்
இடமற்ற என் ***30***ம் இலக்கக் கூண்டின் கம்பிகள்
திடீர் என்று அதிரும்'"

என்கிற சேரன் கவிதைக்கு வர இத்தனை நூற்றாண்டுகள் ஆகியிருக்கின்றன.

## ஃப்யூஷன், கன்ஃப்யூஷன்!



**எ**னக்கு ஏறத்தாழ தினம் வரும் கவிதைத் தொகுப்புகளில் எப்போதாவது பளிச்சென்று ஒரு கவிஞர் தெரிவார். புத்தகத்தைப் புரட்டி ஓரிரு கவிதைகளைப் படித்ததுமே தெரிந்துவிடும், இது சற்று உசத்தி என்று.

அந்த வகையில், சமீபத்தில் என்னைக் கவர்ந்தது - தேன்மொழியின் 'இசையில்லாத இலையில்லை' என்கிற கவிதைத் தொகுப்பு. கல்யாண்ஜி, பாலு மகேந்திரா, இந்திரன் போன்றோரை தேன்மொழியின் கவிதைகள் கவர்ந்திருக்கின்றன என்பது முன்னுரை களிலிருந்து தெரிகிறது.

கல்யாண்ஜி 'என் இத்தனை வருட எழுத்தில், தேன்மொழியைப் போல் இன்னும் இரண்டொருவர் கிடைப்பார்கள்' என்று சொல்லும் அளவுக்குப் பாதித்திருக்கின்றன. really..?

தேன்மொழியின் கவிதைகள் மெருகூட்டி அழகூட்டப்பட்ட 'சனங்களின் கதை' போலத் தொனிக்கின்றன. மிக நுட்பமான பார்வையும் சில வார்த்தைகளிலேயே காட்சிகளைச் செதுக்கும் திறமையும் இவரை ஒரு முக்கியமான கவிஞராகக் கருத வைக்கிறது.

எட்டு வயசிருக்கும்போது அப்பாவோடு பேருந்தில் பயணம் செய்ததை...

தொலைதூர மலையடிவாரத்தில்
சாக்குகள் காய்வதுபோல
என்னப்பா அது?
'செம்மண் நிலமும்

வயல்வெளிகளும்'
இந்த மஞ்சள்?
'ஆவாரம்பூ.'
அந்த மரம்?
'தேக்கு.'
இதற்குப் பெயர்?
'பள்ளத்தாக்கு'
அது?
'சப்பாத்திக் கள்ளி'
அதென்ன
வெள்ளையா..?
'பருத்தி'
ஈச்சமார்
காய்க்குமாப்பா..?
'அட,, மக்கு மகளே...
அது தென்ன மரம்டா'

தகப் பனுக்கும் பெண்ணுக்கும் உள்ள அத்தனை பாசமும் எப்படியோ எங்கே, எதற்குப் பயணம் என்று சொல்லத் தேவையின்றி வெளிப்படுகிறது.



தொகுப்பில் சிறந்ததாக நான் கருதுவது, ஒரு அம்மி குத்தும் கிழவியைப் பற்றிய கவிதை.

**டா**க்டர் வா.செ.குழந்தைசாமியின் 'இது கல்வி யுகம்' என்கிற கட்டுரைத் தொகுப்பில், தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சிகளைப் பற்றி ஒரு கட்டுரை குறிப்பிடத்தக்கது.

தமிழில் கலைச்சொல்லாக்கத்தின் முன்னோடி, இலங்கையில் 1850-களில் வாழ்ந்த டாக்டர் சாமுவேல் கிறீன் என்பவராம். மருத்துவத்தைத் தமிழில் கற்பித்தார். தமிழில் மருத்துவ நூல்கள் எழுதினார். கலைச்சொல் அகராதியும் வெளியிட்டு, கலைச்சொல்லாக்க விதிகளையும் அமைத்தாராம்.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இதில் முன்னோடியுள்ளார். ராஜாஜி, வெங்கட சுப்பையருடன் சேர்ந்து 'தமிழ் சாஸ்திர பரிபாஷை சங்கத்தின் சார்பில் கலைச்சொற்கள் கொடுத்திருக்கிறாராம். கலைச் சொல்லாக்க விதிகளை நிர்ணயிக்காமல் கலைச் சொற்கள் மலிந்துகொண்டே

போவது மொழிக்குக் கேடு.

டாக்டர் ராதா செல்லப்பன், இரண்டு லட்சம் கலைச்சொற்கள் இருப்பதாகச் சொல்கிறார். அவை எல்லாம் எங்கே? பயன்பாட்டில் உள்ளனவா , விரயமா ? திரும்பத் திரும்ப வெட்டியாகக் கலைச்சொற்கள் அமைத்துக் கொண்டிருக்கிறோமோ என்பது தெரியவேண்டும்.

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்காக, ரேடார் பற்றி தமிழில் பாடப்புத்தகம் எழுத ஆரம்பித்தேன் . ஆரம்பத்திலேயே இடர்ப்பாடு ரேடார் ஈக்வேஷனை விளக்க வேண்டும். ரேடார் சமன்பாடு என்று சொல்வது சுலபமே. அதன்பின் வருகிறது சிக்மா, பி, ஆர் தீட்டா என்று கிரேக்க, ஆங்கில எழுத்துக்கள்.

உதாரணம் - ரேடாரிலிருந்து வெளிப்படும் சடகதியை P என்று எழுதுவதா, 'ச' என்று எழுதுவதா? இதைத் தீர்மானிக்காத வரை என்னால் புத்தகம் எழுத முடியாது. சங்கடம் புரிகிறதா?

இதற்கெல்லாம் காத்திருக்காமல், சுலபமாகப் புரியும்படியாக எழுத, ஒரு மணிப்ரவாள நடை பயில வேண்டியிருக்கிறது. இது பலருக்கு உகப்பில்லை. ஆனால் ஜப்பான், கொரியா, சீனா போன்ற நாடுகளில் எல்லாம் சகட்டு மேனிக்கு இங்கிலீஷ் கலக்கிறார்கள்.

விளக்கத்தைத் தாய்மொழியில் கொடுத்துவிட்டு, ஃபார்முலாக்களை ஆங்கிலத்தில் கொடுத்தால் என்ன போச்சு? இப்போது பல பாடப் புத்தகங்கள் அப்படித்தானே இருக்கின்றன. குறிப்பாக, வேதியியல் பாடப் புத்தகங்கள்!

ஸ்ரீரங்கத்திலிருந்து வந்த இசைக் கலைஞர்களைப் பற்றி தினமணி கதிரில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். மோர்சிங் கண்ணன், எனக்கு போன் பண்ணி நன்றி சொன்னார். 'ஆனால், என்னை எம்பார் கண்ணன் என்று குறிப்பிட்டு விட்டீர்கள். நான் ஸ்ரீரங்கம் கண்ணன். எம்பார் கண்ணன் வயலின் வாசிப்பவர். அவர் ஸ்ரீரங்கத்துக்காரர் அல்ல' என்று விளக்கினார்.

உலகெலாம் சென்று மோர்சிங்கால் வென்று வந்த என் எதிர்வீட்டுக்காரர், என் கவனக் குறைவை க்ஷமிப்பாராக.

கணேஷ் - குமரேஷ் 'ஜெயா'வில் ஒரு கச்சேரியின் இடையே வயலின் வாசிப்பை நிறுத்திவிட்டு, ஃப்யூஷனை நியாயப் படுத்தி, 'கர்னாடக சங்கீதத்தை ஜனரஞ்சகமாக்குவதற்குத்தான் ஃப்யூஷன் வாசிகிறோம்' என்றார்.

கணேஷ்-குமரேஷ், ஜாகீர் உசேன் , செல்வகணேஷ் , விநாயக்ராம் போன்றோருடன் அகாடமியில் சென்ற வருடம் செய்த துல்லியமான கர்னாடக சங்கீதக் கச்சேரியை நினைவுபடுத்துகிறேன். அதற்கு வந்த கூட்டமும் பரவசக் கரகோஷமும் அவர்களுக்கு ஃப்யூஷன் தேவையில்லை என்பதை நிரூபித்திருக்கும் என எண்ணினேன்.



நானும் ரொம்ப நாட்களாக ஃப்யூஷன் தாசனாகத்தான் இருந்தேன். அது விவஸ்தையில்லாமல் ரெண்டுங் கெட்டானாகப் போய்க்கொண்டிருப்பதைச் சமீபத்தில்தான் கவனித்து , சஞ்சய் சுப்ரமணியம் சொன்னது சரியே என்ற முடிவுக்கு வந்தேன்

பத்து நிமிஷத்துக்குமேல் அலுத்துப் போகிறது. உட்கார முடியவில்லை. ஜாஸ், ட்ரம்ஸ், கன்றுக்குட்டி மணி, லெசிம் போன்ற சுதியில்லாத தாள வாத்தியங்களையும் மிருதங்கத்தையும் சேர்ப்பது மகாபாவம்.

ஜூபின் மேத்தாவை ஃப்யூஷன் பற்றிக் கேட்டபோது, "Why fusion at all. Both systems can exist on their own strengths..." என்றார்.

'அரிகிரி அசெம்பிளியில் இப்போதெல்லாம் விருந்தினரைக் கொஞ்சம் பேச அல்லது வாசிக்க விடுகிறார்கள்.

புல்லாங்குழல் மாஸ்டர் ஷஷாங்கைப் பாமரத்தனமாகக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள் (கரும்பில் வாசிக்க முடியுமா சார்..? நீங்க வாசிச்சா, தெருவுல மாடு வருமா சார்?), ஷஷாங் சட்டென்று ஃப்ளூட்டை எடுத்து, சிந்து பைரவியை ஒரே சமயத்தில் கீழேயும் ஒரு ஆக்டேவ் மேலேயும் வாசித்துக் காட்டினார்.

What a talent!

# புத்தாண்டு தீர்மானங்கள்!



மில்லினியத்தின் முதல் ஆண்டு உலகுக்கு அப்படி ஒன்றும் பிரமாதம் இல்லை. யோசித்துப் பார்த்தால், இதைவிட மோசமான ஆண்டு இருக்குமா தெரியவில்லை.

முதலில் ஐடி ஸ்டாக்குகளின் வீழ்ச்சியில் துவங்கியது. செப்டம்பர் 11 சம்பவம் விமான கம்பெனிகளை மஞ்சள் கடுதாசி கொடுக்க வைத்தது. ஏரோப்ளேனிலிருந்து மெரீனாவில் மல்லிகைப்பூ விற்பனை வரை உலகின் வியாபாரத்தை பாதித்தது. இந்தியாவில் உலகப் பொருளாதாரம் வாங்கிய அடிகள் அனைத்தையும் நாமும் வாங்கிக்கொண்டோம்.



நம் என்ஆர்ஐ. அமெரிக்க மாப்பிள்ளைகள் வேலை இழந்தார்கள். ஹைடெக் நகரங்கள் காலியாகி, மானிட்டர் திரைகளில் தூசிபடிந்தன. இந்திய பார்லிமெண்டில் பட்டப்பகலில் தீவிரவாதிகள் புகுந்து ஹாலிவுட் படம் போல் சுட்டார்கள் (உள்ளே போய் ஒண்ணு ரெண்டு பேரை போட்டுத் தள்ளிருக்கணும் சார், இவங்க டயம் வேஸ்ட் பண்றதுக்கு' என்றார் பெயர் சொல்ல விரும்பாத நண்பர்). வாஜ்பாய் அரைக் கண்ணை மூடிக் கொண்டு, 'எங்கள் பொறுமை எல்லையற்றதல்ல' என்று சொல்லிக்கொண்டே இருக்கிறாரே தவிர,

குண்டுவீச்சு என்ன... ஒரு குண்டூசியைக்கூட அந்தண்டை நகர்த்தவில்லை.

சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம் வந்தது. அதன்பின் இப்போது வெள்ளம். கண்ணகி சிலை அகற்றப்பட்டதால்தான் மழை என்கிறார்கள். மக்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன் நாள் முழுவதும் அரைத் தூக்கத்தில் இருக்கிறார்கள், சினிமாக்கள் இரண்டாவது தினமே 'வெற்றி.. வெற்றி! 'பதினைந்தாவது தினம்' என்று பொய் சொல்லி, போஸ்டர் அடித்துக் கொண்டாடுகின்றன.

இந்தப் பின்னணியில் வரும் ஆண்டில் நடக்கக்கூடிய விஷயங்கள் இவை:-

இந்தியா - பாகிஸ்தான் போர் வரும். சரியாக ஒரு மாதம் சண்டை புரிந்துவிட்டுப் போர் நிறுத்தம் வரும். சில தினங்கள் கர்ஃப்யு வரும். நிறைய மெழுகு வத்தியும் டிரான்சிஸ்டருக்கு பேட்டரியும் வாங்கி வைத்துக் கொள்ளவும்.

தமிழ்நாட்டு அரசியலில் மாறுதல் வராது. அரிசி விலையில் வரும். வட மாநிலங்களில் காங்கிரஸ் வலுப்பெறும்.

ஆண்டின் இறுதியில் தமிழ் மக்கள் தமிழ்நாட்டில் இருப்பது ஒரே ஒரு தொலைக்காட்சி சேனல்தான்...அதற்கு 'சன்ஜெயராஜவிஜயபாரதி' என்று பெயர் என்பதை உணர்ந்துகொள்வார்கள். 'சித்தி' போன்ற மற்றொரு மெகா தொடர் வெற்றி பெறும் அபாயம் இருக்காது. சினிமா அல்லாத விஷயங்கள் காலை ஐந்து மணிக்கு காட்டப்படும்.

ஐடி, கம்ப்யூட்டர் படிப்பு மவுசு இழக்கும். ஹைகோர்ட்டில் பல கேஸ்கள் வாபஸ் வாங்கப்படும். இருநூற்று சொச்சம் பொறியியல் கல்லூரிகளை அண்ணா பல்கலைக்கழக குடைகீழ் கொண்டுவரும் காரியம் ஹைகோர்ட் டில் வாதாடப்படும். காப்பிட்டேஷன் தொகை குறைந்து, இலவச இணைப்பு களாக கலர் டி.வி. தருவார்கள். மாணவர்கள் மறுபடியும் பி.காம்., மாணவிகள் ஹோம்சயின்ஸ் போன்ற சம்பிரதாய படிப்புக்குத் திரும்புவார்கள். தொலைக்காட்சிகளில் தமிழ் உச்சரிப்பு இன்னும் மோசமாகி எண்ணிப் பார்ப்பதற்கு பதிலாக என்னிப்பார்ப் பார்கள்.

நியுமராலாஜி, வாஸ்து சாஸ்திரம் போன்ற ஜல்லியடி தெரிந்தவர்கள்

பணம் பண்ணுவார்கள். ஒஸாமா பின் லேடன், வீரப்பன் இருவரும் பிடிபடுவர்... வீரப்பன் உயிருடன்! ஓஸாமா காஷ்மீர் மார்க்கமாக சொர்க் கத்துக்குப் போன பின் ஆப்கானில் அமைதி ஆறு மாதம் நிலவும்.

பாலஸ்தீனிய பிரச்னை தீராது. பழகிவிடும். நியூஸில் சொல்வதைக்கூட நிறுத்திவிடுவார்கள். தமிழ் சினிமாவில் வெற்றிப் படங்களின் எண்ணிக்கை ஐந்திலிருந்து ஏழுக்கு உயரும். வருடக் கடைசியில் நாற்பது பெண்கள் இல்லாத பாடல் காட்சியுடன் ஒரு படம் எடுக்கப்பட்டு தோல்வி அடையும்.

தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய கவிஞர் தோன்றி உடனே சினிமாப் பாட்டு எழுதத் துவங்கி அதையே இலக்கியம் என்றும் சொல்லிக் கொள்வார்.

தமிழ்ப் பத்திரிகைகளின் சர்க்குலேஷன் குறையாது. அதிகமும் ஆகாது. சில பத்திரிகைகள் இலவச இணைப்பாக பூஜைமணி, எவர்சில்வர் ஸ்பூன், பெட்ஜார், காண்டம், ஷாம்பு, தலைவலி மாத்திரை போன்றவை கொடுப்பார்கள்.

லாட்டரிச் சீட்டுகள் விற்பனை குறையும். தமிழகமெங்கும் தோண்டிப் போடப்பட்டிருக்கும் கலர் கலர் பிளாஸ்டிக் குழாய்களில் ஒன்றிரண் டில் ஃபைபர் ஆப்டிக் கேபிள்கள் செருகப்படும்.

புத்தாண்டில் நீங்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய சில எளிமையான தீர்மானங்களுக்கான யோசனைகள் இவை:

தினம் இரண்டு மணி நேரமாவது டி.வி-யை அணைத்துவிடுங்கள். அதில்லாத மௌனத்தை சுவாசித்துப் பாருங்கள்.

தினம் யாராவது ஒருவரைப் பற்றி கஷ்டப்பட்டு யோசித்து, நல்லது நினையுங்கள், வெறுப்பு என்பது நமக்குள் அட்ரினலின் பித்தநீர் போன்றவற்றை அதிகமாக்கி ஆயுளைக் குறைக்கிறது. அது கஷ்டம்தான்... யோசித்தால் யாராவது ஒரு நல்ல ஆத்மா அகப்படுவார் - டி.பி. ராஜலக்ஷ்மி, டாஸ்டாயெவ்ஸ்கி.. யாராவது. உதாரணத்துக்கு டாஸ்டாயெவ்ஸ்கியைப் பற்றி நினைத் துப் பாருங்கள். 'உலகில் நடக்கும் எல்லா கெடுதல்களுக்கும் நான் ஒருவிதத்தில் பொறுப்பாக உணர்கிறேன்' என்றார். எத்தனை உயர்வான கருத்து! தினம் ஒரு சின்னக் குழந்தையின் கண்களை உற்றுப் பாருங்கள்.

இந்த எளிய தீர்மானங்களுடன் நான் எடுத்துக் கொண்ட தீர்மானம் - இந்த வருஷமாவது ஒரு புத்தகத்தை படித்து முடித்ததும்தான் அடுத்த புத்தகம் வாங்குவது என்பது.

படித்து முடித்த புத்தகத்தை தூக்கி எறிவதோ அல்லது தானம் கொடுப்பதோ ஒரு கலை. புத்தகங்களைப் புறக்கணிப்பதற்கு ஆண்டி ரூனி (Andy Rooney) சில நல்ல யோசனைகள் சொல்கிறார் அவை இவை:-

நீங்கள் ஒரு புத்தகத்தைப் படித்து அது பிடித்திருந்தால் மட்டும் போதாது. அதிலிருந்து எதாவது உங்கள் வாழ்க்கையில் எடுத்துக் கொண்டிருக் கிறீர்கள் என்றால்தான் புத்தகத்தைத் தூக்கிப் போடாமல் வைத்திருக்க வேண்டும்.

போடக்கூடிய புத்தகங்கள் எவை எவை..

பெஸ்ட் ஸெல்லர் நாவல்கள்: எந்த முட்டாளும் இந்த நாவல்களை இரண்டு முறை படிக்கமாட்டான். துப்பறியும் நாவல்கள், குடும்ப நாவல்கள், பெரிய அளவில் கலர் படம் எல்லாம் போட்டு ஷெல்ஃபில் வைக்க முடியாத, முழுக்க பிரித்துப் பார்த்திராத புத்தகங்கள் சில இருக்கும். அவற்றை உங்களுக்குக் கொடுத்த பாவாத்மா தெரிந்தால் திருப்பி கொடுத்துவிடவும்... இல்லையேல், கொஞ்சம் கல்மனதுடன் கடாசிவிடவும். அதுபோல், 'எப்போதாவது படிக்கலாம்' என்று வாங்கிவைத்து கடந்த ஒரு வருடத்தில் பத்து பக்கத்துக்கு மேல் படிக்கவில்லை என்றால் out it goes! அல்லது எதாவது லைப்ரரிக்கு கொடுத்துவிடலாம். 'பணம் பண்ணுவது எப்படி?', 'எடை குறைப்பது எப்படி?,' 'இல்வாழ்க்கைக்கு சில நல்ல யோசனைகள்' போன்ற 'எப்படி' புத்தகங்களை உடனே தூக்கிப் போடவும். புத்தகம் படித்து யாரும் கற்றுக்கொள்ள முடியாது. பின்னட்டையிலோ முன்னட்டையிலோ 'தலைசிறந்த' என்ற அடைமொழி இருக்கும் புத்தகங்களை உடனே நீக்கவும்.

புத்தகத்தின் தலைப்பைப் பார்த்ததும் அதில் வரும் ஒரு விஷயமோ ஒரு பாத்திரத்தின் பெயரோ உங்களுக்கு ஞாபகம் வரவில்லை என்றால் அதையும் நீக்கிவிடலாம். வருட ஜோதிடம், இயர் புக், இவற்றையெல்லாம் விசிறிக் கடாசவும். இதன்பின் உங்களிடம் இருக்கும் புத்தகங்கள் முக்கால்வாசி போய்விடும். இனிமேல், இந்த விதிப்படி வாங்குங்கள் - 'ஒரு புத்தகத்தைப் படித்தபின்தான் மறு

புத்தகம்.'

எனக்கு வாங்கும் புத்தகங்களில் மட்டும் பிரச்னை இல்லை. தினம் கூரியரில் வரும் புத்தகங்களும்தான். எதாவது நல்லது இருந்தால் குறிப்பிடுவேன் என்கிற நம்பிக்கையில் எனக்கு அனுப்பப்படும் இந்த அழையாத விருந்தாளிகளை என்ன செய்வது என்பது இன்னும் தீர்மானிக்காத விஷயம். இப்போது இவற்றை நண்பர்களிடம் ஸ்க்ரீன் பண்ணக் கொடுக்கிறேன். இதில் ஒரே ஒரு அபாயம்... இதற்கு பயந்துகொண்டு சில நண்பர்கள் வீட்டுக்கு வருவதைக் குறைக்கிறார்கள். இருந்தாலும் நல்ல புத்தகங்களை இனம் கண்டு கொள்வதில் எனக்கு அதிக கஷ்டம் இல்லைதான். ஓரிரண்டு பக்கங்களை மாதிரி பார்த்தாலே தெரிந்துவிடும். நாற்பது ஆண்டுகளாக எழுதி வருபவனுக்கு இந்த மோப்ப சக்தி இருந்தே தீரவேண்டும். என் சங்கடம் புத்தகங்களைப் படிப்பதில் அல்ல... படித்த புத்தகத்தை துறப்பதில்தான். இந்த வருஷம் வீடுமாற்றும்போது மனைவியிடம் பாதி புத்தகங்களை யாவது குறைத்துவிடுகிறேன் என்று சத்தியம் பண்ணிக் கொடுத்திருக் கிறேன்... நண்பர்களே உஷார்!

பின்குறிப்பு: இதில் ஒரு வினோதம் நான் எழுதும் புத்தகங்கள் பல என்னிடம் காப்பி இல்லை. நண்பர்கள் அரவிந்தனையோ, தேசிகனையோ கேட்க வேண்டியிருக்கிறது.

# இது என் சாய்ஸ்!




எல்லாப் பத்திரிகைகளும் இதுபற்றி கிண்டலடித்துக் கொண்டிருக்கையில் 2001-ல் நிஜமாகவே சிறந்தவர்களின்/வற்றின் லிஸ்ட் இதோ...

இலக்கியம்

சிறந்த கவிஞர் - மகுடேசுவரன் (விகடனில் வந்த கவிதை).

சிறந்த மொழிபெயர்ப்புக் கவிதை - பதிலடி. தெலுங்குக் கவிதை - காதிர்பாபு. மொழிபெயர்ப்பு - விஜயராகவன் (கணையாழி).

சிறந்த கட்டுரை - சித்தீதீதீ - மனுஷ்யபுத்திரன் (அம்பலம்).

சிறந்த சிறுபத்திரிகை - நவீன விருட்சம்.

சிறந்த புத்தகம் - தேடலின் குரல்கள் - இந்திரன், தமிழக ஓவிய சிற்ப இயக்கம்.

சிறந்த கவிதைத் தொகுப்புகள் - மரணத்துள் வாழ்வோம் (நான் பார்த்தது சென்ற ஆண்டில்தான்). சேரன் தொகுத்த ஈழத்துக் கவிதைகள், நிலா பார்த்தல் - கல்யாண்ஜி.

ஒரே விஷயத்தைப் பற்றிய சிறந்த கவிதைத் தொகுப்பு - கரும்பலகையில் எழுதாதவை - பழ. புகழேந்தி.

சிறந்த மொழிபெயர்ப்புச் சிறுகதை - பெருமரங்கள் சாய்கிறபோது (மலையாளம் - என்.எஸ். மாதவன் - சுந்தர ராமசாமி).

சிறந்த தீபாவளி மலர் - தினமணி - மனோஜ்குமார்.

சிறந்த இலக்கணப் புத்தகம் - தமிழ்நடைக் கையேடு - 'மொழி' வெளியீடு.

சிறந்த புத்தகக் கட்டமைப்புகள் - கிறுக்கல்கள் - பார்த்திபன்.



காதல் மனப்பாடப் பகுதி - வைகைச்செல்வன் ('எல்லோரிடத்திலும்/என் காதலைச் சொல்லி விட்டேன்/ உன்னைத் தவிர').

சிறந்த சித்திரம் - கொடியில் தொங்கும் கொடி போல - பெரியகுளம் ரவி (ஆனந்த விகடன்).

சிறந்த தமிழ்ப் பத்திரிகை லே-அவுட் - கிருஹ ஷோபா, அவள் விகடன்.

சிறந்த இணைய மென்பொருள் - டாக்டர் கிருஷ்ண மூர்த்தியின் தமிழ் ஓஸிஆர்.

சிறந்த ஆய்வுநூல் - ஈழத் தமிழர் யார் - வித்வான் சு.ந. வேலன், லண்டன்.

சிறந்த ஆங்கிலக் கட்டுரை - **Brain Cell Memories.** Spencer Nadler, Harper's Magazine.

சினிமா

சிறந்த நடிகர்: விக்ரம்.

சிறந்த நடிகை: லைலா.

சிறந்த நகைச்சுவை நடிகர்: விவேக் (மின்னலே).

சிறந்த இசையமைப்பாளர்: யுவன்ஷங்கர் ராஜா.

சிறந்த திரைக்கதை: பாலா (நந்தா).

சிறந்த ஒளிப்பதிவாளர்: திரு (ஆளவந்தான்).

சிறந்த படம்: மின்னலே (கௌதம்).


சிறந்த டைரக்டர்: வினயன் (காசி).

சிறந்த திரைப்படப் பாடல்கள்; உன் சமைய லறையில் - வித்யாசாகர், மஞ்சக்காட்டு மைனா

- யுவன்சங்கர் ராஜா.

மச்சினியே - ஏ.ஆர். ரஹ்மான்.

சிறந்த லிரிக்: காதல் வந்ததும் – 'பூவெல்லாம் உன் வாசம்'- வைரமுத்து.



சிறந்த இந்திப் படங்கள்: மான்சூன் வெட்டிங், லகான்.

சிறந்த ஹாலிவுட் படம்: Traffic - சோடர்பர்க். விளையாட்டு

சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்கள்: வீரேந்திர சேவாக், ஹர்பஜன் சிங்..

சிறந்த 'கம்பேக்' :தன்ராஜ் பிள்ளை - ஹாக்கி. பயஸ், பூபதி - டென்னிஸ்.

சங்கீதம்

சிறந்த பாடகர்: மதுரை சுந்தர்.

சிறந்த வயலினிஸ்ட் அக்கரை சுப்புலட்சுமி.

சிறந்த பாடகி. மதுமிதா.

சிறந்த மேல்நாட்டுப் பாடகி. ஜெனிபர் லோபெஸ்.

தொலைக்காட்சி

சிறந்த நிகழ்ச்சி - மார்கழி மாதக் கச்சேரிகள் - ஜெயா.

சிறந்த தொடர்கள்: சித்தி (சன்), இரண்டாம் சாணக்கியன் - ராஜ் (முடிவுதான் சொதப்பல்!).



சிறந்த நிருபர்கள்; பர்கா தத், ஸ்ரீனிவாசன் ஜெயின் (ஸ்டார் டி.வி.).

சிறந்த பேட்டியாளர்: டிம் செபாஸ்டியன் (பி.பி.சி.)

தமிழில்: ரபி பெர்னார்டு - ஜெயா.

சிறந்த தமிழ் டாக் ஷோ: யூகி சேது - விஜய்.

புதுமையான ஷோக்கள்: ஊர்வம்பு - ராஜ் டி.வி., சப்தஸ்வரங்கள் - ஏ.வி. ரமணன், சன், குல்ஜா சிம்சிம் - ஸ்டார்.

நம்பிக்கையளிக்கும் புதிய டி.வி. சேனல்: ஸ்ப்ளாஷ்.

சிறந்த டாகுமெண்டரிகள்: பி.பி.சி. ஒரிஸ்ஸாவில் ஒரு தொழு நோயாளியைப் பற்றியது. ஏசியா நெட் க்ளோபல் - காலிகட் பல்கலைக்கழகத்தை மார்க்சியமாக்குதல் பற்றிய டாகுமெண்டரி - மலையாளம்.

சிறந்த செய்தித் தொகுப்பு: செப்டம்பர் 11 - சி.என்.என்.

சிறந்த விளம்பரங்கள்: ஃபெவி சீல் (மரணப்படுக்கையில் இருப்பவரிடம் கையெழுத்து வாங்குவது). பெப்சி (என்னை என்ன முட்டாள்னு நினைச்சிங்களா..?') ப்ரூ ('சு சு சுகர்').

ரேடியோ

சிறந்த நிகழ்ச்சிகள்: சென்னை வானொலி காலை மலர், பண்பலையில் வண்ணமணிமாலை. சிறந்த தமிழ் உச்சரிப்பு: சென்னை வானொலியில் சில பெண் அறிவிப்பாளர்கள்.

உபரி விஷயங்கள் (சொந்தத் தேர்ந்தெடுப்புகள்)... சிறந்த டைரி: ஈகிள் கோல்ட். சிறந்த இந்திய பியர்: கிங் ஃபிஷர். சிறந்த பால்பாயிண்ட் பேனா: ஏட் ஜெல். சிறந்த டிபன்: சரவணா ட்ரைஃப்ரூட் ரவா, தென்காசியில் ஒரு சிறிய ஓட்டலில் அடை. சிறந்த இனிப்பு: மைசூர்பா கிருஷ்ணா ஸ்வீட்ஸ். சிறந்த தியேட்டர்கள்: ஸ்ரீ, மாயா ஜால், சிறந்த அரசு நிறுவனம்: ஆவின், சென்னை.

சிறந்த ஹைக்கூ:

நெல்வயல் பெண்களே
சேறுபடியாமல் இருப்பவை
உங்கள் கானங்கள் மட்டும்தான்.

- ரைசான்

ஜப்பானிய ஹைக்கூ)

அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்!





# எட்டாவது படியில் சந்திர மண்டலம்!



அத்தனை பேரும் கவிஞர்கள், சிறுகதை எழுத்தாளர்கள், சிறுபத்திரிகை வாசகர்கள் அதில் தீவிரமான விஷயங்களைப் பற்றிக் கடிதம் எழுதுபவர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் என்று தற்காலத் தமிழ் இலக்கியத்தின் பிரதிநிதிகளாக புக்பாயிண்ட் அரங்கத்தை நிரப்பியிருந்தார்கள்.

காலச்சுவடு பதிப்பகத்தின் பத்து புத்தகங்கள் வெளி யிடப்பட்ட நிகழ்ச்சி. அதில் மனுஷ்யபுத்திரனின் 'நீராலானது' கவிதைத் தொகுப்பை வெளியிட்டேன். அதற்குமுன் ப்ரேவுரா டெக்னாலஜிஸ் நிறுவனத்தினர் பாரதியாரின் புதிய ஆத்திசூடியை அடர்தகடு வடிவத்தில் (சிடி) வெளியிட்டார்கள். பாரதியின் 105 ஆத்திசூடிகளும் இதில் வாசிக்கப்படுகின்றன. ஒவ்வொன்றையும் க்ளிக்கினால் ஒரு நீதிக் கதைக்கு ஹைப்பர்லிங்க் கிடைத்துப் படித்துக் காட்டப்படுகிறது. 'புதியன விரும்பு' என்று சொன்ன பாரதி, சொர்க்கத்தில் சந்தோஷப்பட்டிருப்பார்.

ஈ-புக்ஸ் என்கிற புதிய முறையில் மின் புத்தகங்கள் இணையத்திலும் தகட்டிலும் மெள்ள மெள்ளக் கிடைக்கத் துவங்கியுள்ளன. எந்த அளவுக்குத் தமிழ்மக்கள் கணித்திரையில் புத்தகம் படிக்க விரும்புவார்கள் என்பது டாக்டர் பிரகாஷ் போன்றோரின் கவனக் கலைப்பின் மத்தியில் கேள்விக்குறியே. அவர்களைச் சம்பிரதாய புத்தகங்களை வாங்க வைப்பதும் பெரிய காரியமாக இருக்கிறது. ஒரு பதிப்பு விற்றுத் தீர சராசரி ஐந்து வருஷமாகிறது. கவிதைத் தொகுப்புகள் பரவாயில்லை என்று சொல்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையிலும் 'புதிய எழுத்து', 'புனைகளம்' போன்ற பத்திரிகைகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. வில்லுப்பாட்டுக்

கலைஞர் முத்துசாமிப் புலவரிலிருந்து பெல்ஜியம் நாட்டு ஜூலியோ கொர்த்தஸார் வரை உரையாடல்களைப் பதிப்பிக்கிறார்கள். ஒரு நோயாளி நாலரை மணி நேரம் சொன்ன வெளிப்பாடுகளை அப்படியே கொடுக்கிறார் கோபிகிருஷ்ணன். இது தனி உலகம்.

மனுஷ்யபுத்திரனின் 'நீராலானது' தொகுப்பின் அறிமுகத்தில் கவிதை பற்றிய என் பொதுவான வரையறை நல்ல கவிதைகளை அடையாளம் கண்டுகொள்ள உதவுவதைச் சொன்னேன் -

"கவிதை என்பது ஒரு மொழியின் ஓசைகளையும் சொற்களையும் படிமங்களையும் பயன்படுத்தி ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்தும் இலக்கிய வடிவம். அதில் சில சமயம் சந்தமும் அளவும் இருக்கலாம்."

'ஒரு முத்தத்தை இட்டு முடிப்பதற்குள்
ஒரு கரம்பற்றுதலின் வெம்மையை
உணர்வதற்குள்
ஒரு சரியான பிரிவுச் சொல்லைத்
தேர்ந்தெடுப்பதற்குள் நேரமாகிவிடுகிறது'

போன்ற மென்மையான கவிதைகள் நூறுக்கு மேல் இருக்கும் இந்தத் தொகுப்பு 2002-ல் தமிழ்க் கவிதைக்கு நல்ல காலத்தை அறிவிக்கிறது.

**டி**ம் ராபின்சன் எழுதிய The Fineness of Things என்கிற கட்டுரையை இந்த வாரம் ரசித்துப் படித்தேன். மிகப் பெரியதிலிருந்து மிகச் சிறியது வரை நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஒரு பாக்டீரியா, வைரஸ் ஏன்.. ஒரு எலெக்ட்ரான் க்வார்க் அதைவிட சிறிதான ப்ளாங்க் தூரம் (Planck distance)வரை சிறிதாக சிந்திக்க வேண்டியிருக்கிறது. மறுபக்கத்தில் பிரபஞ்சத்தையும் பல்லாயிரம் கோடி ஒளி வருஷ துரத்தின் பிரமாண்டத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த வீச்சின் இடையில் நாம் மாட்டிக்கொள்ளாமல் இருக்க ராபின்சன் ஓர் எளிய வழிமுறை சொல்கிறார்.

பத்து மடங்கு... பத்துப் பத்து மடங்காக பெரிசையோ சிறிசையோ எண்ணிப் பார்த்தால் சிருஷ்டி அனைத்தும் முப்பத்திரண்டு தப்படியில் மனசுக்குள் அடங்கிவிடும் என்கிறார். படிப்படியாக யோசிக்கலாம்.

நாம் நடுவில் இருக்கிறோம்... படிகளில் மேலே ஏறலாம், இறங்கலாம். ஒவ்வொரு படியும் முந்தின படியைவிட பத்து மடங்கு பெரிசு அல்லது

சிறிசைக் குறிக்கும். ஒரு படி மேலே போனால் ஒரு பெரிய வீட்டின் உயரம், அடுத்தபடி குன்று. அதைவிடப் பத்து மடங்கு மலை. இது மூன்றாவது படி. நான்காவதில் ஒரு நகரத்தின் அகலம். ஆறாவது ஒரு தேசம்.. ஏழு பூமி.

மாறாக படிகளில் இறங்கிப் பார்த்தால் முதலில் வருவது எலி. இரண்டாவது விட்டில்பூச்சி. மூன்றாவது அதன் முட்டை. நான்காவது அதன் சிறகின் ஒரு தீற்றல். ஐந்தாவது ஒரு ஒற்றை செல்.

இதற்குமேல் பெரிசாகவோ சிறிசாகவோ பார்ப்பதற்கு நமக்குக் கருவிகள் தேவைப் படும். ஒரு மைக்ராஸ்கோப் வழியாக ஒரு குளத்தின் தண்ணீரைப் பார்த்தால் நீச்சலடிக்கும், உருளும், புரளும், மோதும் ஜந்துக்களின் ஒரு மைக்ரோ உலகமே தெரியும்.

மேல் பக்கம் எட்டாவது படியில் நாம் சந்திரமண்டலத்தின் பாதிவழி வரை போய் விடுவோம். பதினொன்றாவதில் நம் கிரகங்களின் சுழற்சி தூரங்கள். அதன் பின் மனிதனைக் காட்டிலும் இருபத்தோராவது படியில் நம் பால்வீதி கேலக்ஸி - முப்பது கோடி ஒளி வருஷ அகலம். இருபத்திரண்டில் ஆயிரத்து ஐந்நூறு கோடி ஒளிவருஷம் நம்மால் பார்க்க முடியும். பிரபஞ்சத்தில் அதற்கு மேல் ஏதாவது இருந்தால் அது நம்மை வந்துசேர பிரபஞ்சத்தின் வயசை விட அதிக சமயம் ஆகுமாம். எனவே, சிருஷ்டி முழுவதும் பற்றிச் சிந்திக்க முப்பத்திரண்டு படிகள் ஏறி இறங்கினால் போதும்.



கலைமகள் ஜனவரி இதழில் புதுமைப்பித்தன் எழுதிய 'நானும் என் எழுத்தும்' என்கிற பழைய கட்டுரையை மறுபிரசுரம் செய்திருக்கிறார்கள். சிற்பியின் நரகம் (நகம் அல்ல) போன்ற அவருடைய சிறந்த சிறுகதைகள் பத்திரிகை அவசரத்தில் எழுதியவை. "ப்ளாக்' இருக்கிறது. அதற்கு தகுந்தாற்போல் ஒரு கதை எழுதிக் கொடு' என்று கேட்டு எழுதியவை சில. டைட்டில் கொடுத்து கெடு முடிந்து ஆசிரியர் ஆளை அனுப்பிக் காத்திருந்த நேரத்தில் எழுதியவை சில.

"இப்போது அவற்றைப் படித்துப் பார்த்தால் நன்றாகத் தான்

இருக்கின்றன'' என்று மிதப்பலில்லாமல் யதார்த்தமாக அந்தப் புத்தகத்தில் சொல்கிறார் புதுமைப்பித்தன். ஹ்யூகோ பால்ஸாக், தூமா, சார்லஸ் டிக்கென்ஸ் போன்றவர்களுக்கு இதே அனுபவம் ஏற்பட்டிருக்கிறது 'பாஸ்' என்பவர் வரைந்த ஏதோ ஒரு படத்துக்குக் கதை எழுதச் சொல்லி ஆரம்பித்ததுதான் 'பிக்விக் பேப்பர்ஸ்' என்னும் ஆங்கில இலக்கியத்தின் மகத்தான நகைச்சுவை நாவல். கல்கி, தேவன் போன்றோரும் இந்த வகையில் எழுதியிருக்கிறார்கள். ஒரு கால கட்டத்தில் ஒரே சமயம் மூன்று தொடர்கதைகள் எழுதிக் கொண்டிருந்தபோது எனக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. தீபாவளி மலர் கெடு முடிந்து, இனிமேல் காத்திருக்க முடியாது என்று போன் வந்தபின் எழுதின கதைகள் பல (உதாரணம்: குதிரை, அரங்கேற்றம், தேனிலவு). இவற்றையெல்லாம் இப்போது படித்துப்பார்க்கையில் சரியாகத்தான் தெரிகின்றன. 'குதிரை' பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. எந்தப் படைப்புக்கும் அவசரமும் காலக்கெடுவும் தேவையோ என்று தோன்றுகிறது. நான் கெடுவில்லாமல் எழுதிய புத்தகம் - 1990-ல் 'ஹைக்கூ ஓர் புதிய அறிமுகம்'. தற்போது எழுதிக்கொண்டிருக்கும் புத்தகம் 'திரைக்கதை எழுதுவது எப்படி?'.

நெட்டில் கிடைத்த ஹைக்கூ (அகுதகாவா ரையுனோஸுகெ 1892-1927)

பச்சைத் தவளையே
உன் உடம்பும்
புதிதாக வண்ணம் பூசியதோ

மோசமான ஹைக்கூ பற்றி அடிக்கடி புலம்புவதற்கு பதில் சில வாரங்களுக்கு நல்ல ஹைக்கூவுக்கு உதாரணங்கள் கொடுக்கத் தீர்மானித்துவிட்டேன். மேலே குறிப்பிட்டதில் உடம்பும் என்பதில் உள்ள 'உம்' விகுதிதான் விசேஷம்.

நான் கொடுத்திருந்த 2001-ன் இதழில் வந்த சிறந்த பட்டியலைப் பற்றி நிறைய தொலைபேசிகள் வந்தன. குறிப்பாக, 'பாண்டவர் பூமி'யையும் அதில் 'அவரவர் வாழ்க்கையில்...' என்ற பாடலையும் ஏன் குறிப்பிடவில்லை என்று கேட்டிருந்தார்கள். அதற்கு முக்கியமான காரணம், அந்தப் படத்தைத் தயாரித்ததில் என் பங்கும் இருந்ததால் அவையடக்கம் காரணமாக குறிப்பிடாமல் விட்டேன். சேரனுக்கும்

பரத்வாஜ்க்கும் என்னுடைய தனிப்பட்ட பாராட்டுகள்.

# இருக்கிறது இருபது விஷயம்!



**பீ**காரின் ஒரு சிறிய நகரத்தில் வசித்தபடி விகடன் இதழை சந்தாவில் வரவழைத்துப் படிக்கும் கனரா வங்கி அதிகாரி எனக்கு எழுதிய கடிதத்தில் "'பிரிவோம் சந்திப்போம்' போல ஒரு அருமையான தொடர் எழுதுங்களேன்" என்று கேட்டுவிட்டு "நீங்கள் எழுதும் அதே விகடனில் பாருங்கள்... சுவாமி மித்ரானந்தா எவ்வளவு சுவாரஸ்யமாக எழுதுகிறார்!" என்று சொல்லி யிருக்கிறார்.

அதைப் போல் எழுதுங்கள் என்று யோசனை சொல்கிறாரா, அல்லது மற்றொரு 'பிரிவோம் சந்திப்போம்' கேட்கிறாரா தெரியவில்லை. குறிப்பிட்ட மித்ரானந்தா போல என்னால் நிச்சயமாக எழுத முடியாது. மற்றொரு 'பிரிவோம் சந்திப்போம்' எழுதினால் எப்போதும் பழசுடன் ஒப்பிட்டு அதைப் போல இல்லை என்பார்கள்.

பல வருஷங்களாக எழுதும் எழுத்தாளர்களிடம் இவ்வாறு முரண்பட்ட கோரிக்கைகள் வருவதன் காரணம் வாசகர்களுக்கும் வயசாகிவிடுவதே!

பீகார் அன்பர் 'பிரிவோம் சந்திப்போம்' படித்த காலத்துக்கு ஏங்குகிறார். ஆனால், நடு வயது வந்து மித்ரானந்தா போன்ற விஷயங்கள் அவரை வசீகரிக்கத் துவங்கிவிட்டன. 'நான் மாறிவிட்டேன்.. ஏன் சுஜாதாவும் என்னைப் போல் மாறவில்லை' என்பதே இவர் விருப்பத்தின் அடிப்படை. பி.ஜி. உட்ஹவுஸ் தொண்ணூறு வயதிலும் பெர்ட்டி வூஸ்டர், ஜீவ்ஸ் கதைகள்தான் எழுதினார். வாசகனின் மாற்றமும் எழுத்தாளனின் மாற்றமும் ஒத்துப் போவது கொஞ்சம் கஷ்டம். என் படிப்பு, என் புத்தகங்கள் எல்லாமே வேறு. என் எழுத்தை விரும்பிப் படிக்க ஒவ்வொரு தலை முறையிலும் புது வாசகர்கள் இருக்கும்வரை என்னால் தொடர்ந்து எழுத முடிகிறது.

அப்படி இல்லையெனில் நானே நிறுத்திக்கொள்வேன்.

"நீங்க ஏன் சார் முன்னைப் போல எழுதறதில்லை?" என்று புகார் செய்யும் ஒரு சிறுபான்மையினர் எப்போதும் இருக்கிறார்கள். அவர்களிடம் 'நான் அப்படியேதான் எழுதிக் கொண்டிருக்கிறேன். நீங்கள்தான் மாறிவிட்டீர்கள்' என்று சொன்னால் கோபம் வருகிறது. அதனால் சிரித்து மழுப்பி விடுகிறேன்.

மீடியா ட்ரீம்ஸ் நிறுவனத்தின் டைரக்டராக ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் பணிபுரிந்ததில் ஐந்து படங்கள் எடுப்பதில் பங்கு கொண்ட எனக்குக் கிடைத்த அனுபவங்களின் சாரம் இந்த இருபது விஷயங்கள்... தமிழ் சினிமா உலகுக்குப் பயன்படும் என்று நம்புகிறேன்.

1. குறித்த நேரத்தில் பட்ஜெட் போட்டு அதற்குள் முடிக்கப்படும் படங்கள் தோல்வி அடைவதில்லை பெரும்பாலும்.

2. 'ஸ்டார் சிஸ்டம்' இருந்தும் கறுப்புப் பணத்தின் பாதிப்பைக் கணிசமாகக் குறைக்க முடியும். ஆனால், முழுவதும் குறைக்க முடியாது.

3. ஒரு நல்ல நடிகர் இருந்தால் படம் பூஜையின் போதே வியாபாரமாகிறது. அதாவது உத்தரவாதங்கள் தரப்படுகின்றன. ஆனால், பாதி பட்ஜெட் ஸ்டாருக்குப் போய்விடுகிறது.

4. சில வங்கிகளும் வென்ச்சர் நிறுவனங்களும் சினிமாவில் முதலீடு செய்ய முன்வந்துள்ளன. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு இந்த உதவி சுலபமாகக் கிடைக்கும்.

5. பட விநியோகம் படம் எடுப்பதைவிட பத்திரமானது. அதுபோல் டி.வி. சீரியலிலும் எடுப்பதைவிட விற்பது ரிஸ்க் குறைவானது.

6. டி.ஆர்.பி. ரேட்டிங் என்பது உட்டாலக்கடி.

7. நல்ல டைரக்டர், நடிகர்கள், இசையமைப்பாளர் இருந்தாலும் நல்ல கதையிருந்தால்தான் படம் வெற்றி பெறுகிறது. சிக்கல் என்னவென்றால், நல்ல கதை எது என்பதை லேசில் சொல்ல முடிவதில்லை. சிலசமயம் அற்ப காரணங்களுக்காக நன்றாக எடுக்கப்பட்ட படம் நிராகரிக்கப் படுகிறது. சிலசமயம் ஒரு பாட்டுக்காகப் படம் ஓடுகிறது.

8. தமிழ் சினிமாவின் மிகப் பெரிய பலவீனம் கதையும் முப்பத்தாறு சதவிகித வட்டியும்தான்.

9. தொலைக்காட்சியை சினிமாவின் சோகைக்குக் காரணம் கூறுவதில் அர்த்தமில்லை.

10. அமெரிக்காவில் இருப்பது போல் விடுமுறைகளில் அதிக ரேட்டும் சாதாரண தினங்களில் கம்மி ரேட்டும் வசூலிக்க தியேட்டர்களுக்கு அனுமதித்தால் அரசுக்கு வருமானம் அதிகமாகும்.

11. இப்படிச் செய்தால்தான் 'டாப்டென் மூவீஸ்' பற்றிய உண்மை வெளிப்படும். இல்லையேல் தியேட்டரை விட்டு எப்போதோ ஓடிப்போன படங்களெல்லாம் டாப் டென் பட்டியலில் வெத்தாக வீற்றிருக்கும். காரணம் - அவர்கள் அந்தப் படத்தின் சாட்டிலைட் உரிமையை வாங்கியிருப்பார்கள்.

12. முதல் வருடத்துக்கு டிரெய்லர் மட்டும்தான் காட்ட வேண்டும். 'பீட்டா'வைக் கொடுத்து விடுவதால் கொஞ்சம் கொஞ்சமாக முழு சினிமாவையே தவணை முறையில் காட்டிவிடுகிறார்கள். இது சினிமாவை மிகவும் பாதிக்கிறது. இதை அறியாமல் சாட்டிலைட் உரிமைக்காகப் படத்தை தாரை வார்த்துவிடுகிறார்கள்.

13. ஸ்லைடிங் ரேட்ஸ் சிஸ்டம் வந்தால் ஒரு படத்தின் தினப்படி வசூலை துல்லியமாகக் கணிக்க முடியும். ஹாலிவுட் படங்கள் போல இதற்கென்று யாராவது பாரபட்ச மற்ற வலைமனை துவங்கலாம்.

14. சினிமாவில் திறமையுள்ள கலைஞர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோருக்கு சம்பளம் போதாது. தயாரிப்பாளர்களுக்கு மானேஜ்மெண்ட் பயிற்சி போதாது. ஒவ்வொரு தயாரிப்பு கம்பெனியிலும் எம்.பி.ஏ. படித்த ஆசாமி ஒருத்தர் அவசியம் வேண்டும்.

15. படம் எடுப்பது சுலபம் போல இருக்கும் மிக மிகக் கடினமான வேலை.

16. ஒரு படம் தோற்பதற்கு எனக்குத் தெரிந்தவரை 132 காரணங்கள் உள்ளன. ஜெயிக்க நான்கே காரணம்தான்.

17. ஒரு டைரக்டருக்கு ஒரு நல்ல படம் செய்த பிறகு அடுத்து ஒரு மோசமான படம் வரை திரையுலகு மன்னிக்கிறது. அதன்பின் அவர் மறுபடி க்யூவில் கடைசியிலிருந்து வரவேண்டும்.


18. திரைப்படக் கல்லூரிகளில் தரும் பயிற்சி போதாது. குறிப்பாக திரைக்கதை அமைப்பதில் பயிற்சி. திரைப்படத் தயாரிப்பில் தனிப்பட்ட டிப்ளமா படிப்பு துவக்கவேண்டும்.

19. டிஜிட்டல் சினிமா டி.வி. - மூவிஸ் மூலம் இருபது, முப்பது லட்சத்துக்குள் படம் எடுக்க முடியும்.

20. இந்த ஆண்டு இந்தத் துறை ஒற்றுமை காட்டவில்லை என்றால் பல தியேட்டர்கள் மூடப்பட்டு ஸ்னோபோலிங், கோகார்ட், இன்டர்நெட் கபே, மசாஜ் பார்லர் மற்றும் கல்யாண மண்டபங்களாக மாறும் அபாயம் உள்ளது. நெருப்புக் கோழியை மண்ணிலிருந்து தலையை எடுக்க வைக்கவேண்டும்.

ஸ்ரீரங்கத்தில் இரண்டு நாள் 'பெருமாள் சேவிக்கப்' போயிருந்தேன். பழைய நண்பர்கள் என்.எஸ் - கிருஷ்ணமாச்சாரி, திருமஞ்சனம் சுந்தரராஜன், கேவி போன்றோர்களுடனும் என் சகோதரன் ராஜகோபாலனுடனும் கம்பராமாயணத்தை அரங்கேற்றிய மண்டபத்தின் அருகில் எல்லாம் உட்கார்ந்துகொண்டு பல விஷயங்களை அளவளாவிக் கொண்டு ஒரு nostalgia பயணம்.

இந்த முறை குறிப்பாக இரண்டு விஷயங்கள் கவனித்தேன். திருகொட்டாரத்தில் கோசாலையின் ஒரு வாசற்படியில் அழிந்தும் அழியாததுமாக இருக்கும் மிகப் பழமையான கல்வெட்டு முதலாம் பராந்தகனின் காலத்தது (கி.பி. 907). அவ்வரசன் திருவரங்கர் கோயிலுக்கு ஒரு வெள்ளிக் குத்துவிளக்கும் அதற்குக் கற்பூரம், பருத்தித் திரிநூல் வாங்குவது உட்பட அதைப் போற்றிப் பாதுகாப்பதற்கு 51 பொற்காசுகள் வழங்கியதை அறிவிக்கும் கல்வெட்டு. மாட்டுக் கொட்டகையில் சரித்திரம்!



சேஷராயர் மண்டபத்தில் இதுநாள் வரை நான் கவனிக்காமல் விட்ட தசாவதாரச் சிற்பங்கள் சிற்பக்கலையின் அற்புத உதாரணங்கள்.

பழையரங்கம் என்கிற பெயர் மாற்றத்திலிருந்து நல்லவேளை தப்பிவிட்ட திருவரங்கத்தில் மாறாத பகுதிகளும் மாறிவிட்ட பகுதிகளும் உடன் வாழ்கின்றன. ஏ.டி.எம்., இன்டர்நெட், டி.வி.டி (DVD), மினரல் வாட்டர் போன்றவற்றின் நவீனத்தைக் கடந்து ஐம்பதடி உள்ளே போனால் ஹொய்சாலர் காலத்து சிற்பங்கள் (கி.பி. 1234-1262) அமைந்த கிருஷ்ணன் சந்நிதி. வெள்ளை கோபுரத்தை நிஜமாகவே வெள்ளையடித்து ஒரு அல்பைனோ போல் பண்ணிவிட்டார்கள். மற்ற கோபுரங்களுக்கு பல வண்ணங்கள் கொடுத்து சிற்பக் குமரிகள் சர்க்கஸ் குமரிகள்போல ஜொலிக்கிறார்கள். பொதுவாகவே சம்ரோக்ஷணத்துக்குப் பிறகு கோயில் சற்று சுத்தமாகியிருக்கிறது என்னவோ நிஜம்.

மாலை சமயபுரத்துக்குச் சென்றிருந்தேன். சின்ன வயசில் சைக்கிளில்

போனது. ஐம்பத்தைந்து வருடங்களுக்குப் பின் இந்தக் கோயிலின் அளவும் கேள்வி கேட்காத பக்தியும் திகைக்க வைக்கிறது. சமயபுரம் raw faith-ன் வடிவம். ஒருபுறம் 'ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு உடலில் பிரியாப் புலனைந்தும் தாம்வாட வாடத் தவம் செய்ய வேண்டாம்' என்னும் ஆழ்வார்களின் பக்திநிலை திருவரங்கத்தில். மறுபுறம் இதற்கு நேர் எதிரான அங்கப்பிரதட்சண உருளல்களும் முழங்கால், கண் போன்றவற்றின் வெள்ளி வடிவக் காணிக்கைகளும் தீச்சட்டிகளும் வேப்பிலையடியும் சமயபுரத்தில். இந்து மதத்தின் இரண்டு விளிம்புகளும் இருபது கிலோமீட்டரில்!

# இயலுக்கு எத்தனை அர்த்தம்?



மனுஷ்யபுத்திரனின் 'சித்தீ' கட்டுரை பற்றிப் பலர் கேட்டார்கள். அது அம்பலம் இணைய இதழில் வெளிவந்தது. கம்ப்யூட்டர் இல்லாதவர்களுக்கு, அந்தக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி-

"சித்தி தமிழில் வெற்றிகரமான சினிமாக் கதைகள் பலவற்றின் ஒரு கலவை... இந்திய சமூகத்தில் கூட்டுக் குடும்பங்களில் நிகழும் முரண்பாடுகளுக்கும் அதன் தவிர்க்கவியலாத சிதைவுக்கும் ஒரு கற்பனையான வடிவத்தை அளிக்க முற்படுகிறது. நவீன சமூகத்தில் பெண் ஏற்கும் புதிய பாத்திரங்களை மறுத்து குடும்பப் பகையின் வெற்றி தோல்விகளுக்குள் அவரது நன்மை தீமைகளையும் பலம் பலவீனங்களையும் காண முற்படுகிறது. பெண் தலைமையேற்பவளாகவும் அதே சமயம் குடும்பத்துக்காகத் தனது எல்லாத் திறமைகளையும் விருப்பு வெறுப்புகளையும் அர்ப்பணிப்பவளாகவும் கட்டப்படும் கதையமைப்பு ஒரு சமூகத்தில் பெண்ணைப் பற்றிய அணுகுமுறைகளைப் பெருமளவு மறுஉற்பத்தி செய்யக்கூடியது..."

இவ்வகையில் சித்தி தொடரை ஒரு சமூகவியல் பார்வையில் அலசிய மற்றொரு கட்டுரை மலேஷியாவின் 'பயனீட்டாளர் குரல்' பத்திரிகையில் வந்திருந்தது. இவையிரண்டையும் தவிர, மொத்த தமிழ்நாடே ராதிகாவை சித்தீ என்று அழைத்துக் கொஞ்சகாலம் பைத்தியமடித்துக் கொண்டிருந்தது. ஜனங்கள் நடுராத்திரியில் சட்டென்று எழுந்து சித்தீ என்றனர். அந்த அளவுக்கு ஒரு மாநிலத்தின் மத்யமர் மனதை அது பாதித்தது.

சென்னை புத்தகச் சந்தைக்குக் கடைசி நாளன்றுதான் போக

முடிந்தது. இந்த முறை நல்ல கூட்டம்! 'எல்லோருக்கும் நல்ல வியாபாரம்' என்று அல்லயன்ஸ் ஸ்ரீனிவாசன் சொன்னார். 'இன்டர்நெட் யுகத்திலும் புத்தக அடையாளம் போகாது' என்று போன வருட சந்தையிலேயே பேசியபோது சொன்னேன். இம்மாதிரி புத்தகச் சந்தைகள் மாதம் ஒன்று ஊர்ஊராக நடைபெற வேண்டும். ஒரு வருஷம் என்பது நீண்ட இடைவெளி. கோவையில் மட்டும்தான் விஜயா வேலாயுதம் வருடா வருடம் நடத்துகிறார். திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம், நெய்வேலி போன்ற நகரங்களில் தொடர்ந்து நடத்துகிறார்களா, தெரியவில்லை. சந்தையில் திருமகள் நிலையத்துக்காகக் கொஞ்சம் கையெழுத்துக்கள் போட்டுவிட்டு, 'ஏஷியன் எஜுகேஷனல் சர்வீஸஸ்' ஸ்டாலுக்குச் சென்றேன். சென்ற நூற்றாண்டைச் சேர்ந்த பல சுவாரஸ்யமான புத்தகங்களை அப்படியே மறுபதிப்பு செய்கிறார்கள். விலை அதிகம் என்றாலும், சுவாரஸ்யமான புத்தகங்கள் கிடைக்கின்றன. என் வருடாரம்ப வைராக்கியத்தை மீறி நான்கு புத்தகங்களை அள்ளிக்கொண்டு வந்துவிட்டேன். அவற்றில், போப்பின் A Tamil Prose Reader சுவாரஸ்யமானது. பலவிதமான உரைநடைக்கு உதாரணங்கள் உள்ளன. தூய தமிழ், எளிய தமிழ், பஞ்சதந்திரத் தமிழ், மாஜிஸ்டிரேட் கச்சேரித் தமிழ், பெட்டிஷன்கள், அரசாங்கத் தமிழ் என்பதற்கு பல உதாரணங்கள் அபரிமிதமான குறிப்புகளுடன் கிடைக்கின்றன.

"தென்னார்க்காடு மாஜிஸ்டிரேட்டவராகிய (இன்ன) துரையவர்கள் சமூகத்துக்கு, கூடலூர் துனக்குடி (3)வது கிளாஸ் சபார்டிகேட்டு மாஜிஸ்டிரேட்டு கோவிந்தராவு எழுதிக் கொண்ட அர்ஜி இது:-

துனக்குடி மஜ்கூர் தாக்கல் ஆடுரூ குப்பம் கிராமத்தில் ராமசாமி நாயக்கன் (க) ராமலிங்க நாயக்கன் (உ) இவர்களது வீட்டில் நாளது மாசம் 2உ ராத்திரி சுமார் 29 பேர் தீவட்டித் திருடர்கள் பிரவேசித்து களவு நடக்கையில் மேற்படியூர் வில்லேஜ் மாஜிஸ்டிரேட் வகைரா சனங்கள் சேர்ந்து இரைச்சல் போட்டதன்பேரில், வீட்டுக்குள்ளிருந்த திருடர்கள் ரூபாய் 21*8 பெறுமான சொத்துக்களை களவு செய்து போனதாகவும் பின்தொடர்ந்து போனதில் திருடர்கள் அகப்படவில்லையென்றும் மேற்படி வில்லேஜ் மாஜிஸ்டிரேட் எழுதிய ரிப்போர்ட் நாளது தேதியில் காலமே வந்து சேர்ந்தது. அந்தச் சங்கதியை விசாரணை செய்ய உடனே மேற்படியூருக்குப் போகிறேன். விசாரித்துக் கிரமப்படி நடந்து கொள்கிறேன். சித்தம் அறியலாவதாய் மனுவு செய்து கொண்டேன்.

தங்கள் விதேயன்

1865-ல் எழுதிய இந்தக் கடிதம் வெள்ளைக்காரர்கள் கிராமத்துஅளவில் எவ்வாறு தமிழைச் சரளமாக நிர்வாகத்தில் பயன்படுத்தினார்கள் என்பதற்கு அத்தாட்சி. இன்று இம்மாதிரிக் கடிதம் எப்படி எழுதுகிறார்கள் என்பதை யாராவது கிராமாதிகாரி தெரிவிக்கலாம். தமிழ் உரைநடையில் ஒண்ணரை நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களை அறியவும் பயன்படும்.

முத்தமிழ்ப் பேரவையின் 26-வது ஆண்டு விழாவில் இயல் தமிழுக்காக கலைஞரிடமிருந்து விருது வாங்கியபோது, 'இயல்' என்கிற வார்த்தையை யோசித்தேன். இயற்றமிழ் என்றால் இலக்கியத் தமிழ் என்கிறது பிங்கல நிகண்டு. இதற்கு அப்பாலும் இந்தச் சொல்லுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட அர்த்தங்கள் உள்ளன. 'ஈண்டு செலன் மரபில் தன்னியல் வழா அது' என்று புறநானூறில் வரும்போது தன்மை என்று பொருள்பட வருகிறது. 'இயலன்று எனக்கிற்றிலை' என்று திருக்கோவையாரில் தகுதி என்ற பொருளில் வருகிறது. ஜன்மஜன்மங்களாக வந்த அன்பு என்று ஒரு அர்த்தம் உள்ளது. வேகம், தோற்றம், நூல், நூலின் பகுதி, அரசியல் என்று பல பொருள்களும் உள்ளன. திவ்யப்பிரபந்தத்தைக் கோஷ்டியாக நின்று சாற்றுவதை இயல் சாற்று என்பார்கள். அதில் பண்ணமைத்துப் பாட இயலாத பகுதியை இயற்பா என்று சொல்வர். இயல் என்றால் போட்டி, மாறுபாடு என்றும் சொல்லலாம்.



இயல்வது கரவேல் என்று ஆத்திசூடும்போது செய்ய முடிவது, நேர்வது நடத்தல், அணுகுதல் போன்ற அர்த்தங்கள் வருகின்றன. பொன்னியல் திருமேனி என்னும்போது பொன்னை ஒத்த என்கிற அர்த்தம் பெறுகிறது. எத்தனை இயல்கள், இயற்பியல், வேதியியல், அரசியல், பொறியியல், அறிவியல், கணினிவியல்.

இதில் ஒவ்வொரு இயலும் ஒரு சாகரம். இயல்பு சுபாவம், நல்ல குணம் என்றும் விரிகிறது. ஒரு சிறிய வார்த்தைக்குத்தான் எத்தனை சாத்தியங்கள்! இதில் ஏதேனும் ஒரு இயலுக்கு அல்லது சும்மா இயல்புக்கு, நல்ல குணத்துக்குக் கிடைத்த அங்கீகாரமே எனக்குப் போதும் என்று சொன்னேன்.

தமிழ்நாட்டின் கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள். தயவுசெய்து உங்கள் கவிதைகளின் ஜெராக்ஸ் பிரதிகளை கூரியரில் எனக்கு அனுப்பாதீர்கள். நான் புத்தக வெளியீட்டாளன் அல்ல. அவற்றைப் படித்துப் பதிலோ, அணிந்துரையோ எழுத எனக்கு அவகாசம் இல்லை. காசாவயல் கண்ணன், தமிழ்நாட்டில் உள்ள எல்லாச் சிறு பத்திரிகைகள், நாளிதழ்கள், வாரமலர்களில் வெளிவந்த தன் அத்தனை

கவிதைகளையும் ஜெராக்ஸ் எடுத்து அனுப்பியிருக்கிறார். இம்மாதிரி தினம் ஒரு கூரியர் வந்தால், நான் என்ன செய்வேன்..? சொல்லுங்கள்.

காசாவயல் கண்ணனின் கவிதைகளில், எனக்கு மூன்று நல்ல வரிகள் தென்பட்டன. இதை இவ்வார 'ஹைக்கூ'வாகத் தருகிறேன் -

'கூட்ட நெரிசலில்
காலியாகவே இருக்கிறது
டிரைவர் ஸீட்...'

கவிதைகள் என்னை நாடி வரக்கூடாது. நான் அவற்றை நாடிப் போகவே விரும்புகிறேன். நண்பர்களிடம் நல்ல கவிதைகள், கவிஞர்கள் பற்றிக் கேள்விப்பட்டு, இயல்பாகப் புத்தகக் கடைகளில் நானே தேடி, பட்டாம்பூச்சி பிடிப்பது போலத் துரத்திப் பிடிக்க விரும்புகிறேன்.

மகாதேவனின் 'ஆம் நண்பர்களே, அதுதான் நடந்தது' என்கிற தொகுப்பில் உள்ள -

'ஒருவனை
மூட்டை தூக்குபவனாக
ஆக்கவேண்டுமா
வெகு எளிது...'

என்று துவங்கும் கவிதை போல!

# விருதுகள்! விருதுகள்!



**பா**ர்த்தல், காணல், நோக்குதல், கவனித்தல்... இந்த நான்குக்கும் என்ன வேறுபாடு? வாஜ்பாயைப் பார்க்க டெல்லிக்குச் சென்றேன் என்று சொல்லலாமா? விடை - கடைசியில்.

**செ**ன்னை சேப்பாக்கில் கிரிக்கெட்டுக்கு நூற்றைம்பதுக்கு மேல் வயசாகிறது. எஸ். முத்தையாவின் சுவாரஸ்யமான சரித்திரத்தில் (The Spirit of Chepauk, East West Books) 1846-லிருந்து முதலில் வெள்ளைக்காரர்கள் மட்டும் இங்கே ஆடிவந்த கிரிக்கெட் மாட்ச்களில், அப்போதே நகக்கடி முடிவுகள் இருந்திருக்கின்றன (பெங்களூர் 97, மெட்ராஸ் 96). பவுண்டரி லைனே இருந்ததாகத் தெரியவில்லை. வர்ணனைகளில் ஐந்து ரன், ஏழு ரன் எல்லாம் வருகிறது. 1941 வரை அண்டர் ஆர்ம் பௌலிங்கும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது (இன்றும் அதற்குத் தடை இல்லையாம். சாப்பல் ஆஸ்திரேலியாவில் கடைசி பாலில் செய்த தந்திரம் ஞாபகம் இருக்கிறதா?).

முதன்முதலாக வெள்ளைக்காரர்களை எதிர்த்து ஆடிய டீமில் ராஜகோபால் நாயுடு, சுப்பராயலு, அப்பாதுரை போன்றவர்களால் ஹேசல்டைனின் பௌலிங்கைச் சமாளிக்க முடியாமல், ஒற்றை இலக்கத்திலேயே அவுட் ஆகியிருக்கிறார்கள். அச்யுத மேனன் ஒருவர்தான் இரட்டை இலக்கம். இவ்வாறான சுவையான விஷயங்கள் முத்தையாவின் புத்தகத்தில் உள்ளன. இன்றைய சேப்பாக் மாறி விட்டது!

சென்ற மாதம் சேப்பாக்கில் நாற்பத்து ஐயாயிரம் ஜனங்களும் ஏறக்குறைய அந்த அளவுக்கு அதிகாரிகளும் போலீஸ்காரர்களும் திருட்டு டிக்கெட்காரர்களும் கூடி ஸ்டேடியமே ஆயிரம் மெகாவாட்

குரலில் காலி வாட்டர் பாட்டில்களின் தாளத்துடன் ஆரவாரிக்க, ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 217 ரன்களையும் சொதப்பிவிட்டுத்தான் இங்கிலாந்தை ஜெயித்தார்கள். முத்தையா முரளிதரன், ரஜினிகாந்த், மாதவன் போன்ற பல தெரிந்த முகங்கள் அங்கங்கே தென்பட்டார்கள் . டி.வி-யில் பந்தையே ஸ்லோமோஷனில் காட்டி, "என்னப்பா, எல்.பி.டபிள்யு சரிதானா..? பேட்ல பட்டியா?" என்று அதையே பேட்டி காணும் அளவுக்கு டெக்னாலஜி முன்னேறி விட்ட நிலையில் நேரடியாக மாட்ச் பார்ப்பது அத்தனை சுவாரஸ்யமான அனுபவம் இல்லைதான். ஆனால், ஒருமித்த மக்கள் திரளில் நம் அடையாளங்களை இழந்து ஒரு 140 டெசிபெல் தொண்டையாக மாறி 'Flintoff! down down'என்று கம்பெனி சேர்மன்களுடன் சேர்ந்து கத்தும் அனுபவம் விசித்திரமானது. கிரிக்கெட் நம் பாரம்பரியத்தில் ஊறிவிட்ட ஆட்டம். சென்னையில் அதற்குக் கிடைக்கும் கார்ப்பரேட் ஆதரவு வேறெந்த நகரத்திலும் இல்லை என்று சொல்கிறார்கள். பல நாடுகளின் வேகப்பந்து வீச்சாளர்கள் எம்.ஆர்.எஃப். ஃபவுண்டேஷனில் இங்குதான் பயிற்சி பெறுகிறார்கள். சுழல்பந்து வீச்சாளர்களுக்கும் ஒரு அகாடமி இருக்கிறது ('ம்யுரளி'தரன் அதற்குத்தான் வந்திருந்தார்). தினேஷ் மோங்கியா, பதானி, சடகோபன் ரமேஷ் (என்ன ஆச்சு ரமேஷ்? எங்கே காணாமல் போய்விட்டீர்கள்?) இவர்கள் எல்லாம் இங்கே லீகில் ஆடுகிறார்கள் தெரியுமோ..! வருஷத்துக்கு இருபது மாட்ச் ஆடினால் போதும். சில்லறையும் நிறையவே பெறுகிறார்களாம்.



மனோரமா



ஜாகீர் உசேன்



ஜேசுதாஸ்

உலகின் அற்புதமான விளையாட்டரங் கங்களில் ஒன்றாக உருவாகியிருக்கிறது சேப்பாக். இரவில் மைதானம் முழுக்க சீரான வெளிச்சத்தில் நனைந்து இருக்க, பார்க்கத் தவறிவிட்ட சம்பவங்களை ராட்சஸ எல்.இ.டி. திரையில் பார்க்கும் அனுபவம் இந்த வருடம் புதிது. மாயாஜால் அருகில் பென்டாமீடியா சந்திரசேகர் ஆதரவில் ஓர் அருமையான ஸ்டேடியம் உருவாகி வருகிறது. மெள்ள மெள்ள சென்னை கிரிக்கெட்டின் மெக்காவாகி விடும் சாத்தியம் உள்ளது.

'செல்லுமிடம் தெரியாமல் நடப்பதும் அன்பளிப்புகளுக்கு ஆளற்றுப் போவதும் வருத்தத்திற்குரியது' என்னும் சங்கர ராமசுப்ரமணியனின் கவிதைத் தொகுப்பான 'மிதக்கும் இருக்கைகளின் நகரம்' புத்தகத்தை இந்த வாரம் நாடிப் படித்தேன். தமிழில் தற்போது வரும் நல்ல புதுக் கவிதைகள் பெரும்பாலும் அகத்துறை சார்ந்தவையாக இருப்பதை அறியாமலேயே கவிஞர்கள் எழுதுகிறார்கள். இவர்களுக்குக் கொஞ்சம் சங்கம் தெரிந்தால் இவர்கள் கவிதைத் திறன் கூடும் என்பதும் என் கருத்து.

சங்கர ராமசுப்ரமணியனின் சொல்லாட்சிகளும் தேர்ந்தெடுக்கும்

விஷயங்களும் (வாஷிங் மெஷின் கையேடு, சிமெண்ட் நிற காரில் வருபவர்கள்) புதுசாக இருக்கின்றன. மரணமும் வயசாவதும் இவரைக் கொஞ்சம் அதிகமாக பாதிக்கின்றன. ஆத்மாநாம் பற்றி ஒர் அருமையான கவிதை எழுதியிருக்கிறார்.

கீழ்வரும் கவிதையில் உள்ள Subtext உங்களுக்குப் புரிந்ததென்றால் புதுக் கவிதையில் இளங்கலைப் பட்டம் பெறலாம்.

'அருவி விழும் மலைமீது கயிற்றில்
நடக்கும் சாகச வீரன் நான்
வளர்ப்புப் பிராணியாகி அருவி
என் காலடியில் விழுகிறது
ஒரு போதும் தவறியதில்லை நான்
அருவி விழும் மர்மத்தை
சிறுவயதில் தொலைத்துவிட்டேன்
என் வயோதிகம்
வரும் வரை
கயிற்றின்மீது நடப்பேன்
ஒரு முறை
வித்தை மறந்து
அருவி விழுங்கும் வரை...
அப்போது
தூர்ந்த கயிறு
சர்ப்பமென
அருவிக்குள் மிதக்கும்
அருவி தன்
மர்மத்தை மீட்ட
ஆர்ப்பரிப்பில்
மீண்டும் விழும்.'

ஒவ்வொரு ஆண்டும் பாரத் ரத்னா, பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்மஸ்ரீ விருதுகளின் பட்டியலை குடியரசு தினத்தன்று அறிவிக்கிறார்கள் (இந்த வருடம் 'பாரத் ரத்னா' யாருக்கும் தரப்படவில்லை). இதில் வாசகர்களுக்கு ஒரு பரீட்சை... இந்த மூன்று வகை விருதுகளுக்கும் வித்தியாசம் தெரியுமா உங்களுக்கு?

பாரத் ரத்னா: இந்திய அரசு வழங்கும் விருதுகளிலேயே மிக உயரிய

விருது இது. கலை, இலக்கியம், விஞ்ஞானம், பொதுச் சேவைகளில் மிகமிகச் சிறந்த பங்களிப்பை வழங்கியவர்களுக்குத் தரப்படும் விருது இது. அரச இலை போன்ற வெண்கலத் தகட்டின் ஒருபுறம் சூரியனும் இந்தியில் 'பாரத் ரத்னா' என்ற எழுத்துக்களும், மறுபுறம் நமது தேசிய சின்னமான சிங்கங்களும் பொறிக்கப்பட்டிருக்கும். சூரியன், தேசியச் சின்னம் இரண்டும் பிளாட்டினத்தால் ஆனவை.

பத்ம விபூஷண்: அரசுப் பணி உள்பட எந்த ஒரு பணியிலும் மேம்பட்ட, மிகச் சிறப்பாகச் சேவை செய்தவர்களுக்குத் தரப்படும் விருது இது. இந்தப் பட்டயத்தின் ஒருபுறம் தாமரை மலரும், 'பத்ம விபூஷண்' என்று இந்தியிலும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறம் நமது தேசியச் சின்னமான சிங்கங்கள் காட்சியளிக்கும்.

பத்ம பூஷண்: இதுவும் அரசுத் துறை உள்பட எந்த ஒரு துறையிலும் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கும் தரப்படும் விருதுதான்! பத்ம விபூஷண் போலவே இந்தப் பட்டயத்திலும் ஒருபுறம் தாமரை மலரும், மறுபுறம் தேசியச் சின்னமும் இருக்கும். 'பத்ம விபூஷண்' என்பதற்கு பதிலாக 'பத்ம பூஷண்' என்று இந்தியில் பொறிக்கப் பட்டிருக்கும்.

பத்மஸ்ரீ: முந்தைய இரண்டைப் போலவேதான் இந்த விருதும். எழுத்துக்கள் மட்டும் 'பத்மஸ்ரீ' எனப் பொறிக்கப்பட்டிருக்கும்.

அதுசரி, இந்த ஆண்டு விருது பெற்றவர்களில் எத்தனை பேரை உங்களுக்குத் தெரியும்?



சோலி சொராப்ஜி



மணிரத்னம்

அனைவரையும் தெரியுமென்றால் நீங்கள் பொய் சொல்கிறீர்கள் அல்லது டெல்லியில் இந்த விருது கொடுக்கும் மந்திரிசபையின் அந்த இலாகாவுக்கு அண்டர்செக்ரெட்டரி யாக பணிபுரிபவராக இருக்க வேண்டும். பெரும்பாலானவரைத் தெரியும் என்றால் இந்தியாவின் பொது வாழ்விலும் சமூக நலனிலும் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டுபவராக நீங்கள் இருக்க வேண்டும். இந்த வகை பிராணிகள் மிக மிக அரிதானவர்கள், போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

அறுபது சதவிகிதம் தெரியுமென்றால் நீங்கள் ஐ.ஏ.எஸ். பரீட்சைக்கு படிப்பவர்கள்... ஐம்பது சதவிகிதம் என்றால் ஆங்கில பேப்பர் படிப்பவர்கள்... நாற்பது சதவிகிதம் என்றால் தமிழ் பேப்பர் படிப்பவர்கள்... முப்பது சதவிகிதம் என்றால் டி.வி-யில் நியூஸ் பார்க்கிறவர்கள்... இரண்டு சதவிகிதம் என்றால் டி.வி-யில் சினிமா மட்டும் பார்ப்பவர்கள்.

மாறாக, ஒருவரையுமே தெரியவில்லை என்றால், நீங்கள் இந்தத் தேசத்தில் எந்தவித அக்கறையும் காட்டாதவர்கள் அல்லது ஒரு பேப்பர் பொறுக்குபவரைப் போல் தின ஜீவனத்தைத் தவிர வேறு எதற்கும் நேரமில்லாதவர்கள் என்று சொல்லலாம்.

இந்த வார ஹைக்கூ. ஹைக்கூவில் மிக அரிதாகத்தான் 'நான்' வரும். ஒரு உதாரணம்...

எறும்பைக் கொன்றபின்
உணர்கிறேன்
என் மூன்று பிள்ளைகளும்
பார்த்துக் கொண்டிருந்ததை.

(காட்டோ சூசான்)

**ஆ**ரம்பத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு விடை...

பார்த்தல் என்றால் இயல்பாகப் பார்த்தல். வரவை எதிர்பார்த்தல். காணல் என்பது பெரியவரைப் பார்த்தல். வாஜ்பாயைக் காணத்தான் செல்ல முடியும். நோக்குதல் - குறிக்கோளோடு பார்த்தல். கவனித்தல் - நுட்பமாகப் பார்த்தல். சென்னைத் தமிழில் சொன்னால் 'லுக்கு விடுதல்'!

# அந்த நாற்பது பெண்கள் எங்கே?



ஸ்டீஃபன் ஹாக்கிங்கின் A Brief History of Time என்னும் பிரசித்தி பெற்ற நூலை எனக்குத் தெரிந்து இதுவரை மூன்று பேர் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். சிகாகோ உலகத் தமிழ் அறக்கட்டளையினர் அண்மையில் வெளியிட்டிருக்கும் 'காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கம்' நான்காவது என எண்ணுகிறேன். மொழிபெயர்த்தவர் நலங்கிள்ளி, பதிப்பாசிரியர் தியாகு.

இந்த நான்கையும் யாராவது ஒப்பிட்டுப்பார்க்கலாம். அறிவியலைத் தமிழில் எழுதுவதில் கொஞ்சம் மன்றாடியவன் என்கிற தகுதியில் இம்மாதிரியான நூல்களைத் தமிழில் தருவதில் உள்ள சிக்கல்களைக் கொஞ்சம் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். ஒருபுறத்தில் 'தமிழில் எல்லாம் முடியும்... கலைச் சொற்கள் இல்லையெனில் கலைச்சொற்களை அவ்வப்போது ஆக்கிக்கொள்ளலாம்' என்று ஒரு கருத்து. மறுபுறத்தில் 'தமிழில் கலைச்சொற்கள் அமைக்கும் வரை காத்திருக்க வேண்டாம், அமைக்கவும் வேண்டாம்... சரளமாக ஆங்கிலத்தையும் தமிழையும் சரியான கலைச்சொற்கள் வரும் வரை கலந்தளிக்கலாம்" என்னும் கருத்து. இந்த இரு துருவங்களுக்கும் இடையே ஒரு மொழி நடை வரவேண்டும். முதலில் இரண்டுக்கும் உதாரணம் தருகிறேன். சிகாகோவின் முயற்சி முதல் வகையைச் சார்ந்தது:-

'அண்டமானது மாவெடிப்பு இயன் வழிப்புள்ளியின் ஈறிலா அடர்த்தியுடன் தொடங்கிற்று. இயன்வழிப்புள்ளியில் பொதுச் சார்பியலும் மற்றெல்லா இயற்பியல் விதிகளும் செயலற்றுப் போகும். இயன்வழிப்புள்ளியிலிருந்து என்ன வரும் என்பதை ஊகிக்க முடியாது.'

இரண்டாவது வகை:-

'ஆர்டர் கமாண்டின் உதவியுடன் டேபிளின் அமைப்பில் மாற்றம் செய்யலாம். அதற்கு மூன்று வகையான கிளாஸ்கள் உள்ளன. புதிதாக ஒரு காலத்தைப் பதிவுசெய்யும்போது அது டேபிளின் கடைசி காலமாகத்தான் பதிவு செய்யப்படும். காலத்தின் இடத்தை நிர்ணயம் செய்ய முடியாது.'

இது 'தமிழ் இணையம்' பத்திரிகையில் வந்த கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது. இவ்விரண்டில் முதல் உதாரண வாக்கியத்தை, ஒழுங்காக ஃபிசிக்ஸ் படித்த எனக்கே, புரிந்துகொள்ள அதன் தமிழை மறுபடி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக்கொண்டால்தான் முடிகிறது. ஆங்கிலமே தெரியாதவர்கள் தமிழில் மட்டும் படித்தால் இயன்வழிப்புள்ளி என்றாலும் singularity என்றாலும் இரண்டுமே புரியப் போவதில்லை. எனவே இந்த நூலின் முக்கிய குறிக்கோள் தமிழில் எழுதுவது சாத்தியம் என்பதை மட்டும் நிரூபிப்பது. அது படிப்பவர்களுக்குப் புரியும் என்பதை உத்தரவாதமாகச் சொல்ல முடியாது.



அதே போல் இரண்டாவது உதாரண வாக்கியம் கம்ப்யூட்டர் கற்பவர்கள் DDL என்னும் டேட்டா டெஃபனிஷன் லேங்வேஜைப் பற்றி

அறிந்துகொள்ள ஓரளவுக்கு உதவும். ஆரம்பத்தில் இரண்டாம் வகைக் கட்டுரைகள் அதிகம் வரும். முதல் வகைக் கட்டுரைகளும் புத்தகங்களும் மெள்ளத்தான் வரும். தமிழிலேயே கலைச்சொற்களும் விளக்கங்களும் நிலைநாட்டப்பட்டு தமிழிலேயே படித்தாக வேண்டும் என்னும் கட்டாயம் ஏற்படும்போது, எல்லோரும் 'சிங்குலாரிட்டி'க்கு இயன்வழிப்புள்ளி என்கிற சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கும்போது, இம் மாதிரிப் புத்தகங்களுக்குத் தேவையும் பயனும் ஏற்படும். அதுவரை 'நேர்மங்களாலும் நொதுமங்களாலும் ஆன சின்னஞ்சிறு அணுக்கருவையும் அதைச் சுற்றிவரும் மின்மங்களையும் கொண்டமைந்த சாதாரணமான பருப்பொருளின் அடிப்படை அலகு' என்று அணுவைச் சொல்வதா அல்லது 'ப்ரோட்டான்களாலும் ந்யூட்ரான்களாலும் ஆன சின்னஞ்சிறு அணுக்கருவையும் அதைச் சுற்றிவரும் எலெக்ட்ரான்களாலும் கொண்டமைந்த (மேட்டர் என்னும்) பருப்பொருளின் அடிப்படைப் பிரிவு' என்று சொல்வதா என்கிற சர்ச்சை தொடரும். எப்படியும் சிகாகோவின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதே.

மாறாக, சில வாரங்களுக்கு முன் கிராம மாஜிஸ்திரேட் மேலிடத்துக்கு எழுதிய சென்ற நூற்றாண்டுக் கடிதத் தமிழின் உதாரணம் கொடுத்து இன்றைய நாட்களில் எப்படி எழுதுகிறார்கள் என்பதை யாராவது கிராமதிகாரி எழுதலாம் என்று சொன்னதற்கு பழநி மரிச்சிலம்பு கிராமத்தின் வி.ஏ.ஓ-வான என். சின்னச்சாமி இன்றைய ஜமாபந்தித் தமிழுக்கான உதாரணங்கள் கொடுத்து ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

'மாடாடுகள் மனுசாள் சௌக்கியம். நோய் நொடிகள் ஏதும் இல்லை. நஞ்சை பாழ், புஞ்சை பூஜ்யம். நாட்டாமை மௌத்தி அடியேனும் தண்டனும் ஆஜர் சமூக சித்தம்.' இதை அவர் நகைச்சுவைக்காக கொடுத்திருந்தாலும் வட்டாட்சியருக்கு வி.ஏ.ஓ. எழுதும் கடிதங்களின் உதாரணங்கள் எளிய தெளிய தமிழில் இருந்தன. தமிழில் எல்லாம் முடியும் என்பது இங்குதான் தொடங்குகிறது.

மணிரத்னத்தின் 'கன்னத்தில் முத்தமிட்டால்'திரைப்படத்துக்கு வசனம் எழுதிய அனுபவம் சுவாரஸ்யமானது. அதில் வரும் இரண்டு முக்கியமான காட்சிகளை (கொழும்பு பாராட்டுக் கூட்டம், வெளியேற்றம்) சிறுகதை வடிவமாகவே எழுதித் தரச் சொன்னார். திரைக்கதைக்கும் சிறுகதைக்கும் முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. ஒரு பக்கம் எழுதியதை திரையில் ஓரிரண்டு ஃப்ரேமில் காட்டி விட

முடியும். அதே சமயம் திரையில் மனதில் ஓடும் எண்ணங்களைக் காட்ட க்ளோஸ்ப்பையும் வாய்ஸ் ஓவரையும் தவிர வேறு மார்க்கமில்லை. சிறுகதையில் எளிதாக மனதில் நுழைந்து எழுதலாம். அந்த இரண்டு சிறுகதைகளில் முதல் கதை 'அமுதாவும் அவனும்' என்கிற தலைப்பில் தினமணி தீபாவளி இதழில் வெளியானது, வாசகரில் சிலர் படித்திருப்பீர்கள். சிறுகதையாக எழுதப் பட்டதை எப்படி விஷுவலாகப் பார்க்க முடியும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம். திரைக்கதையின் முக்கியமான ஸீன்களை எழுத்தாளன் தனிப்பட்ட சிறுகதைகளாகக் கருதுவது ஒரு நல்ல உத்தி, இரண்டு வகையான படைப்பாற்றலுக்கும் சுதந்திரம் கிடைக்கிறது. 'கன்னத்தில் முத்தமிட்டால்' மணிரத்னம் கமர்ஷியல் சமரசங்கள் அதிகம் செய்துகொள்ளாமல் எடுத்த படம். பாட்டுக்கென்று சுவிட்ஸர்லாந்து, நியூஸிலாந்து போகவில்லை, கதையை நிறுத்திப் பாட்டுப் பாடிவிட்டு வரவில்லை, கதை நகர வேண்டியிருக்கும்போது, பாட்டை பாதியில் நிறுத்த அல்லது அடக்கி வாசிக்கத் தயங்கவில்லை. அதிமுக்கியமாக அந்த நாற்பது பெண்கள் இல்லை, 'கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸை' மறைமுகமாகப் பிரயோகித்திருக்கிறார்.

சென்ற ஆண்டில் சிறந்த கவிதையாக மகுடேசுவரனின் கவிதையைக் குறிப்பிட்டிருந்தது ஞாபகமிருக்கலாம். 'அது எந்த விகடன் இதழில் வெளிவந்தது? முடிந்தால் அதை மறுபடி தாருங்களேன்' என்று பலர் கடிதமெழுதியிருக்கிறார்கள். எனவே இந்த வார ஹைக்கூவுக்கு பதிலாக மீண்டும் மகுடேசுவரன்.

வலியின் ஒலி

வாழ்ந்து கெட்டவனின்
பரம்பரை வீட்டை
விலை முடிக்கும்போது
உற்றுக் கேள்
கொல்லையில்
சன்னமாக எழும்
பெண்களின் விசும்பலை.

- ஆனந்த விகடன் **10.6.01**

# குடல் ரகசியங்கள்!



'கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்

குழாஅத்துப் பேதை புகல்.'

விஷயம் தெரிந்தவர்கள் கூட்டத்தில் ஒரு பாமரன் நுழைவது, கழுவாத காலைப் படுக்கையில் வைப்பதுபோல என்கிறார் வள்ளுவர். இதில் கழாக்கால் என்று சொல்லாமல், கழாஅக்கால் என்று சொன்னது ஏன்? - விடை கடைசியில்.

நான் வள்ளுவரைக் குறிப்பிட்டது வேறு காரணத்துக்காக.

ஓர் எழுத்தாளனுக்கு உண்டான அன்புக் கட்டாயங்களில் ஒன்று - அவன் எழுத்துக்குச் சற்றும் சம்பந்தமில்லாத கருத்தரங்கத்திலோ, பொது மக்களுக்கான விழிப்பு உணர்வு நிகழ்ச்சியிலோ பேச வேண்டியிருப்பது.

இப்படித்தான் குடல் இரைப்பை நோய் களுக்கான மக்கள் விழிப்பு உணர்ச்சி முகாம் ஒன்றில் கலந்துகொண்டேன்.

வள்ளுவர் எச்சரித்திருப்பதால், இந்த மாதிரிக் கூட்டங்களில் நான் கொஞ்சம் கால் கழுவிக்கொண்டு தயக்கத்துடன் நுழைவேன். படுக்கையில் வைக்காமல் மிகக் கொஞ்சமாக, அவர்கள் சார்ந்த டெக்னாலஜி மட்டும் பேசுவேன். தெரிந்த அளவுக்குப் படித்துவிடுவேன். அல்லது நெட்டில் பார்த்துவிடுவேன். அப்படிப் பார்த்தபோது, நமது குடலைப் பற்றிக் கொஞ்சம் பரிச்சயம் செய்துகொள்ள நேர்ந்தது. அதன் பிரமிப்பு இன்னும் நீங்கவில்லை.

சிறுகுடல், பெருங்குடல் என இரண்டு இருக்கிறது. பின்னதை

கோலன் என்கிறார்கள். சிறுகுடலை ட்யுவோடினம், ஜேஜுனம், இலியம் என மூன்று பாகங்களாகப் பிரிக்கிறார்கள் ட்யுவோடினம் என்றால், பன்னிரண்டு என்று அர்த்தம் - துவாதசி என்பதுபோல், சிறுகுடலின் முதல் பகுதி பன்னிரண்டு விரலகலம் இருப்பதால், இந்தப் பெயர்.

மருத்துவக் கலைச்சொற்களைப் புரிந்து கொள்ள லத்தீன், கிரேக்க வார்த்தைகளின் ஆதார அர்த்தங்கள் தெரிய வேண்டும். தமிழில் ட்யுவோடினம் என்பதற்குத் தனிப்பட்ட கலைச்சொல்லே தேவையில்லை. பன்னிரண்டு என்று சொன்னால் போதும். இதுதான் அர்த்தம். சிறுகுடல் இரைப்பையின் கீழ்முனையிலிருந்து துவங்கி, ஒரு இன்ச் குழாயாக முன்னும் பின்னும் சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இருபத்துமூன்று அடி நீளக்குழாய்!

அதன் பணி, சாப்பிட்டதை முழுவதும் ஜீரணிப்பதும் அதிலிருந்து சத்துக்களை உறிஞ்சிக்கொள்வதும், சாப்பிட்ட சோறு இரைப்பையிலிருந்த பாதி ஜீரணித்த நிலையில், சில சமாசாரங்கள் கலந்து அதற்குக் கொடுக்கப் படுகிறது. அது மெள்ளச் சுருங்கி விரிந்து, ஒரு மினி மலைப்பாம்பு போலத் தன் நீண்ட பாதைக்குள் உணவைச் செலுத்துகிறது. இடையில் ஒரு ரசாயன ரகளையே நிகழ்கிறது.

கணையம், கல்லீரல் சுரப்பிகளும் சொந்தச் சுரப்புகளும் ஒத்துழைக்க, தன் உள்புறம் எங்கும் வெல்வெட் போல வேய்ந்திருக்கும் 'வில்லை' என்கிற நுட்பமான நீட்டல்கள் மூலம் உணவின் சாரத்தைப் பிரித்துக் கொண்டு, அவற்றை நம் ரத்தம், லிம்ஃபாடிக் சிஸ்டம் வழியாக உடலின் பல பாகங்களுக்கு அனுப்புகிறது. சக்கையைப் பெருங்குடலுக்கு அனுப்புகிறது. அங்கே தண்ணீர் நீக்கப்பட்டு, இறுகிய பொருளாக ஒரு ஐந்தடிப் பயணத்தில் மாற்றப்பட்டு வெளியேற்றப்படுகிறது.


அடுத்த தடவை டாய்லெட் போகும்போது இந்த விந்தையை நினைத்துப் பார்த்தால், ஒவ்வொரு தடவையும் கடவுளுக்கு நன்றி சொல்லத் தோன்றும். நம் மனித உடலின் மூன்று முக்கியமான உறுப்புகள் மூளை, இதயம், கல்லீரல் என்று சொல்ல வேண்டும். மூளை மாற்று சிகிச்சை சாத்தியமில்லை... மாற்று இதய சிகிச்சையை இப்போது பல கேந்திரங்களில் வெற்றிகரமாகச் செய்கிறார்கள். மாற்று கல்லீரல் அண்மையில்தான் சாத்தியமாகி உள்ளது.

சென்னையில் அப்போலோ, மலர் போன்ற மருத்துவமனைகளில் இது நடைபெறுகிறது. டாக்டர் நீலமேகம், டாக்டர் பணையப்பன்

போன்றவர்கள் குழுவில் செய்கிறார்கள். சிகிச்சைக்குப் பின், ஒரு வருஷம் பிழைத்திருக்கும் சாத்தியம் எண்பது சதவிகிதம் என்கிறார்கள். ஒரு வருஷம் தாண்டிவிட்டால், சமாளித்து நீண்ட நாள் வாழலாம். முதல் ஆபரேஷன் அமெரிக்காவில் 1963-ல் நடந்தது. இந்தியாவில் மத்திய பார்லிமெண்டிலும் பின்னர் தமிழ்நாட்டிலும் 'ப்ரெய்ன் டெட்' (Brain Dead) சட்டம் கொண்டு வந்தபின், இந்த மாற்று சிகிச்சை சாத்தியமாகியுள்ளது.

இறந்துபோனவர்களின் கல்லீரலை எடுத்தபின், அதை இருபது ம்ணிநேரம் வரை பாதுகாக்கக்கூடிய UW போன்ற சொல்யூஷன்களும் நியோரால் போன்ற இம்யுனோசப்ரசண்ட் என்னும் ஒவ்வாமை நீக்க மருந்தும் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், சில கேந்திரங்களில் இந்த மாற்று சிகிச்சையின் வெற்றி தொண்ணூற்று மூன்று சதவிகிதம்வரை சென்றிருக்கிறது!

உடலுறுப்புகளைத் தானம் செய்வது மிகப்பெரிய தானம். நாம் இறந்த பின்னும் நம்மால் ஒருவரைக் காப்பாற்ற முடியும். விபத்தில் இறந்தவர்கள் மூளை நின்று போய், இதயமும் சுவாசமும் மட்டும் பாக்கியிருக்கும் நிலையில்தான் கல்லீரலை மாற்று சிகிச்சைக்காக எடுக்க முடியுமாம். இதனால், ரத்த சம்பந்தமுள்ள உயிருள்ள உறவினர்களிடமிருந்து கல்லீரலின் ஒரு பகுதியை நீக்கி, மாற்று சிகிச்சை செய்வதுதான் அதிக நடைமுறை சாத்தியமுள்ளது என்கிறார்கள், கல்லீரலின் கால் பாகம் பாக்கியிருந்தாலே போதும், சமாளித்துவிடலாம். அவ்வளவு அற்புதமான உறுப்பு அது.



இன்று குடல் இரைப்பை நோய்களைத் தெளிவாக ஆராய்ச்சி செய்ய மருத்துவர்களுக்கு டெக்னாலஜி பெரிதும் உதவுகிறது. எண்டாஸ்கோப்பி (உள்நோக்கி) மூலம் குடலுக்குள்ளே ஃபைபர் நூலிழையை நுழைத்து விடியோ படம் பார்க்கவும், படம்பிடிக்கவும் முடிகிறது. உள்ளேயிருந்து பயாப்ஸிக்காக சாம்பிள் எடுக்க முடிகிறது. ரத்தக் கசிவை நிறுத்த முடிகிறது. இதனுடன் ஸ்கேன் முறைகள் அல்ட்ராசவுண்டு போன்றவையும் ஓரளவுக்குப் பயன்படுகின்றன.

லேட்டஸ்ட்டாக, இஸ்ரேல் நாட்டில் விடியோ மாத்திரை என்ற ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு இன்ச் நீளம், கால்

இன்ச்சுக்குக் கொஞ்சம் மிஞ்சின அகலம் கொண்ட இந்த மாத்திரையில் ஒரு விடியோ காமிரா, ஒரு லைட், ஒரு ரேடியோ டிரான்ஸ்மீட்டர் பேட்டரி இருக்கிறது. இதை விழுங்கினால், சிறுகுடலில் எண்டாஸ்கோப்பி மூலம் அணுக முடியாத எல்லா பாகங்களையும் அணுக முடிகிறது.

குடல் இந்த மாத்திரையை ஜீரணிக்க முடியாமல், அந்நியனைப் போல் நாலு மணி நேரத்தில் வெளியே அனுப்பிவிடுகிறது. அதற்குள் இது நமது ஒற்றன் போலச் செயல்பட்டு ஒரு செகண்டுக்கு இரண்டு தடவை படம் அனுப்பும். இடுப்பில் வாக்மன் போன்ற ஒரு ரிஸீவர் அணிந்தபடி, நமது அன்றாட வேலைகளை கவனிக்கலாம்.

ஒரு மினி டிஸ்க் தகட்டில் எல்லாப் பிம்பங்களையும் வாங்கிக்கொள்ளும். அதை கம்ப்யூட்டரில் கொடுத்து அலசும்போது, சிறுகுடலின் பல உபாதைகளைக் கண்டுபிடிக்க முடியும் என்கிறார்கள். அமெரிக்க FDA இதற்கு அனுமதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.


விலைதான் கொஞ்சம் ஜாஸ்தி. ஒரு மாத்திரை பதினைந்தாயிரம் ரூபாய்! அலம்பி மீண்டும் பிரயோகிக்கலாமா என்பது தெரியவில்லை!

ரமா ராமநாதன் அனுப்பியிருந்த 'குயிலின் நிறம்' என்னும் ஹைக்கூ தொகுப்பில் (காலம் வெளியீடு, புதுக்கோட்டை - 622 002) ஒரு ஹைக்கூ எனக்குப் பிடித்திருந்தது (சற்றே திருத்தப்பட்டது).

'வீசி எறிந்த சில்லறைகள்
மறைக்கின்றன
பிளாட்பார ஓவியத்தை...'

**ஆ**ரம்பக் கேள்விக்கு விடை - 'கழாக்கால்' என்றால் தளை தட்டும். 'கழாஅக்கால் என்பது மூவசை சீர். நேரசையில் துவங்கும் 'பள்ளியுள்' என்பதுடன் தளை தட்டாது. அளபெடையின் முக்கிய உபயோகம் ஈரசைச் சீரை மூவசையாக ஆக்குவதும், ஓரசையை, ஈரசையாக ஆக்குவதும்.

# வீடு மாறிய கதைகள்!



முதலில் டெல்லியில் வேலைக்குப் போனதிலிருந்து நாற்பது வருஷங்கள் ஆகின்றன. இதில் இதுவரை பன்னிரண்டு முறை வீடு மாற்றியாகிவிட்டது. வேலைக்குப் போன புதிதில் டெல்லி சவுத் இண்டியா போர்டிங் ஹவுசில் ஒரு கட்டில், மேஜை, இரண்டு வேளை சாப்பாட்டுக்கு எழுபத்தைந்து ரூபாய். ஸ்டைஃபண்ட் நூற்றைம்பது ரூபாய். பாக்கிப் பணத்தை என்ன செய்வதென்று திணறுவேன். ஆகாகான் போல் உணர்ந்தேன். கண்டபடி புத்தகங்கள் வாங்கினேன். கிடார் வாங்கினேன். அதன்பின் சுமாரான வேலை கிடைத்து கரோல்பாக்கில் ஆறாவது ப்ளாக்கில் கஸ்தூரிரங்கன் (கணையாழி) குடியிருந்த வீட்டின் முன்னறையில் உபகுடி புகுந்தேன். ஆம்ப்ளிஃபையர் இணைத்து ராத்திரி நேரங்களில் நான் கிடார் வாசிப்பது கேட்டு கைக்குழந்தைகள் கக்குவதாக அந்த முனிசிபல் வட்டாரமே புகார் கொடுத்தத னால் இரண்டு காரியங்கள் செய்தேன். சங்கீத உலகம் ஒரு தேர்ந்த கிடாரிஸ்ட்டை இழந்தது. 15-ஏ ப்ளாக்குக்கு, மற்றொரு அறைக்கு குடிபெயர்ந்தேன். வீட்டுக்காரர் மினிஸ்ட்ரியில் செக்ஷன் ஆபீஸர். ஆசார சிலர். ஆரம்பத்தில் ரொம்ப நன்றாகப் பழகினார். சிகரெட் குடிப்பதில் ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இடைக்காலத்தில் கல்யாணம் ஆகிவிட்டதால் அதே 15-ஏ ப்ளாக்கில் கொஞ்சம் தள்ளி ஒரு மூன்று ரூம் அபார்ட்மெண்ட் எடுத்துக்கொண்டேன். மனைவியைப் பிரசவத்துக்கு அனுப்பிவிட்டு நாள் பூரா ப்ரிட்ஜ் ஆடுவோம். வாடகை இருநூற்று இருபத்தைந்து ரூபாய். வீட்டுக்காரர் சப்லோக் என்று ஒரு பஞ்சாபி. ரிப்பேரே செய்யமாட்டார். அவருக்கு அதைப் பற்றிப் பேசும்போது மட்டும் காது கேட்காது. பண விஷயங்கள் தெளிவாகக் கேட்கும். அந்த வீடு மெள்ள மெள்ள முனைகளில் உடைந்து எலும்பெல்லாம் தெரிய ஆரம்பித்தது.

அதுதான் ஐடியா... தாங்க முடியாமல் காலிபண்ணிப் போய்விடுவேன் என்று. நானா? நல்ல லொகேஷன்... அஜ்மல்கான் ரோடு பக்கத்திலேயே இருந்தது. அதன் மார்க்கெட்டில் உலகத்தில் உள்ள எல்லாப் பொருட்களும் கிடைக்கும் (புத்தகங்களைத் தவிர) இந்தியாவிலேயே பணக்கார மார்க்கெட் அதுதான் என்பது என் கருத்து. அந்த ஏரியாவில் இருந்த பழைய வீடுகளிலெல்லாம் 'மதராசி பாபு லோக்' வசித்து வந்தார்கள். ஒரு சிலர் பதினைந்து ரூபாய் வாடகை கொடுத்துக்கொண்டு பிரிவினை காலத்துக்கு முன்னமேயே வந்தவர்கள். அவர்களுக்கு வீட்டுக்காரர்கள் கணிசமான தொகை கொடுத்தும் சில பிடிவாதக்காரர்கள் வீடு இடிந்து விழும் வரை காலி பண்ணமாட்டார்கள்.

கரோல்பாக் அலுத்துப்போய் திடீரென்று சப்தர்ஜங்கில் ஒரு வீட்டின் பின்புறத்தில் குடி பெயர்ந்தேன். நல்ல அமைதியான லொகாலிட்டி தான். புது வீடுதான். ஆனால், வீட்டுக்காரர் சல்லிசாக வருகிறது என்று லோக்கல் மேக் ஃபேனை வாங்கிப் போட்டிருக்கிறார். ஒரு நாள் ஆபீஸிலிருந்து வந்த களைப்பில் ஃபேனைப் போட, 'தொப்'பென்று கீழே விழுந்தது. நடுக்கூடத்தில் விளையாடிக் கொண்டிருந்த என் பிள்ளைகள் மயிரிழையில் தப்பித்தார்கள். வெகுண்டு வீட்டுக்காரரை உடனே போனில் கூப்பிட்டு வரவழைத்து அடிபட்ட பறவை போல நடுவே கிடந்த ஃபேனைக் காட்டி சத்தம் போட்டேன். "என்ன இது.. என் பையன்கள் உயிர் தப்பினார்கள்... சாந்தினி சௌக்கிலிருந்து அடாசு ஃபேனைப் பொருத்தியிருக்கிறீர்கள்.."

"இல்லையே... தர்யா கஞ்சில் வாங்கினேன். விழுந்துவிட்டதா? ஒன்று பண்ணுகிறேன்... சீலிங் ஃபேன் வேண்டாம்.. தலைமேல் விழுகிறது. ஒரு பெடஸ்டல் ஃபேன் கொண்டு வந்து போடுகிறேன்" என்றார். எனக்கு வந்த கோபத்தில் பார்க்கில் போய் அரை மணி உட்கார்ந்துவிட்டு வந்தேன்.

பெங்களூரில் பி.இ.எல் வேலை கிடைத்ததால் ராஜாஜி நகர் முதல் ப்ளாக்கில் ஒரு பெரிய வீடு வாடகைக்கு எடுத்தேன். ஓனர் அந்த ஊர் ஐயங்கார். 'ஆட்டோ பண்ணிக்கொண்டு எங்குள்க்கு வாங்கோ' என்று ஒரு மாதிரியான தமிழ் பேசுவார். அடிக்கடி வந்து 'எல்லாம் வாசியா?' (சௌகரியமா) என்று விசாரித்துவிட்டு காபி குடித்துவிட்டு, வாடகை ஏற்றிவிட்டுப் போவார். மூன்று மாசம் இரண்டு மாசம் என்றிருந்தது, மாசா மாசம் வர ஆரம்பித்தார். ஒரு முறை நான் கண்டிப்பாக அதிக

வாடகை கொடுக்க மறுத்தேன். அவர் 'ஆமாவா' என்று புன்னகைத்துவிட்டு அடுத்த வாரம் அவுட்ஹவுசில் ஒரு சண்டைக்கார மாமியை (உறவினர்) குடிவைத்துவிட்டுப் போய்விட்டார். மாமி நடுராத்திரியில் எழுந்து துணி தோய்ப்பாள்... அதுவும் தோய்க்கிற கல்லைக் கணவன் மேலே உள்ள கோபத்தையெல்லாம் காட்டி அறைந்து அறைந்து 'ஸ்... ஸ்' என்று பி.ஜி.எம் கொடுத்துக் கொண்டு. இது ரொம்ப நாள் தாங்காது என்று - பக்கத்திலேயே ரோடு தாண்டி 'என்' ப்ளாக்கில் கலீக் ஒருத்தரின் மாமனார் வீடு வாடகைக்கு வந்தது - அதற்கு மாறினோம். 'உன்னைப் போல் ஒரு டெனன்ட்டை நான் பார்த்ததில்லை' என்று கண்ணால் தண்ணீர்விட்டார் ஐயங்கார். ராஸ்கல்.

இந்த வீடு புதுசாக கட்டியது. மாமா பார்த்துப் பார்த்துக் கட்டியிருந்தாலும் காண்ட்ராக்டர் ஏமாற்றியிருந்தான். சிமெண்டில் நிறைய மணல் கலந்து விட்டான் போலும். அதனால் மழை வந்தால் விட்டத்தில் அம்மைக் கொப்பளங்கள் போல தண்ணீர் தெரியும். எப்போது சொட்டும் என்று எதிர்பார்க்கவே முடியாது. டென்ஷனில் நகமெல்லாம் சிதிலமாகிவிடும். அங்கங்கே பிளாஸ்டிக் குவளை வைத்தால் மனசு மாறி வேறு ஸ்தலத்தில் சொட்டும். குறிப்பாக என் நோட்டுப் புத்தகத்தில் சொட்டி நான் எழுதின ஒரே ஒரு செக்ஸ் கதை கரைந்தே போயிருக்கிறது. இதற்கு மேல் தமிழ் இலக்கியம் நஷ்டப் படக் கூடாது என்று மறுபடி வீடு மாற்றத் தீர்மானித்து ஃபாக்டரியின் காலனியில் குவார்ட்டர்ஸுக்கு வந்து விட்டேன். தோப்பும் துரவும் குறைந்த வாடகையும் காரேஜுமாக தனியான வீடு. வீட்டுக்காரர் தொந்தரவு இல்லை. அவ்வப்போது குயில் கூவிக் கொண்டு இதர பறவைகள் ஆமோதிக்க, ஆ.. ஒரு எழுத்தாளனுக்கு வேறு என்ன வேண்டும்? என் படைப்பாற்றல் சுரப்பிகள் எல்லாம் ஓவர்டைம் பண்ணப் போகிறது என்று மகிழ்ந்தேன். ம்ஹும்! கொஞ்சம் அதிகமாகவே அமைதி, ஜாஸ்தியாகவே குயில் கூவல். எனக்கு எழுதுவதற்கு பரபரப்பும் சஞ்சலமும் தேவையிருந்தது.

மேலும் என் பையன்கள் பி.எம்.எஸ். காலேஜுக்கு ரொம்ப தூரம் போக வேண்டியிருந்தது. அதனால் காலேஜ் அருகில் பணசங்கரியில் மூன்றாவது ஸ்டேஜில் ஒரு வீட்டுக்கு குடி புகுந்தோம். பணசங்கரி என்பது அப்போது பெங்களூரின் விளிம்பில் ஒரு குன்றுப் பிரதேசம். ரௌடிகள் துரத்தலின் முடிவில் கத்திக்குத்துக்கு இங்கேதான் தீர்மானிப்பார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக வீடுகள். காலி

மனைகள் அதிகம். ஒரு டூத்பேஸ்ட்டுக்கு ஒரு கிலோமீட்டர் நடக்க வேண்டியிருந்தது. மேலும் இடம் மாற்றியதால் என் பிள்ளைகள் படிப்பில் அப்படி ஒன்றும் ஒஹோ என்று மார்க் ஏறினதாகத் தெரியவில்லை. கேர்ள்ஃப்ரெண்ட்ஸ்தான் அதிகமானார்கள். அதனால் மீண்டும் ஃபாக்டரி அருகிலேயே குவார்ட்டர்ஸுக்கு மனுச் செய்தேன். 'என்னப்பா குட்டி போட்ட பூனை மாதிரி அலையறியே..' என்று அலுத்துக் கொண்டு, அலாட் ஆக ஆறு மாசம் ஆகும் என்றார்கள். அதனால் ஃபாக்டரிக்கு அருகிலேயே ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸரின் வீட்டு மாடியில் குடிபுகுந்தேன். முதலில் எல்லாம் சுகம் தான். அவர்கள் நாய் டூட்ஸி என்னும் கோல்டன் ரிட்ரீவர், எங்களை அங்கீகரித்து தினம் வந்து ஒரு சுள்ளியைக் காலடியில் போட்டுவிட்டு பிஸ்கட் கேட்கும். காரை நிறுத்துவதில் நான் முன்னாலா, அவர் முன்னாலா என்பதில் சின்னச் சின்ன பிரச்னைகள் வந்தன. கேட் கதவை இருட்டினதும் பூட்டி விடுவார்கள். ஒரு நாள் கமல் என்னைப் பார்க்க வந்தபோது அவர்கள் வீட்டு மணியை அடிக்க, அவர்கள் கதவைத் திறந்து வாயடைத்துப் போய் 'கமலை உங்களுக்குத் தெரியுமா..?' என்று வாடகை ஏற்றாமல் தண்ணீர் அதிகமாகவே திறந்துவிட்டார்கள். அந்த வீட்டில் ஒரே ஒரு அசௌகரியம் இருந்தது. புழக்கடை என்று ஏதும் கிடையாது. பக்கவாட்டு காரேஜ் மேல்புறத்தில்தான் இறங்கி துணி உலர்த்த வேண்டும். அந்த வழியே ஷிஃப்ட்டுக்கு நூறு ஃபாக்டரி பஸ் போகும். அனைவரும் நாங்கள் உலரவைத்த உள்ளாடைகளை தரிசித்துக்கொண்டே செல்கிறார்கள் என்பது, ஒரு முறை என் சக ஊழியர், 'உங்க வீட்டில் யார் பட்டா பட்டி அண்டர்வேர் போடுவீங்க..? என்று கேட்ட போதுதான் திடுக்கிட்டது. அவசரமாகச் சொல்லி குவார்ட்டர்ஸ் கிடைத்து மறுபடி தோப்பு துரவு, குயில் அதன்பின் ரிட்டயர் ஆகும் வரை வீடு மாறவில்லை. அப்புறம் சென்னைக்கு வந்து ஆழ்வார் பேட்டையில் ஒன்பது வருஷம் ஒரு ரெக்கார்டு.



இப்போது மயிலாப்பூருக்கு மாறுகிறேன்.

எனக்கென்னவோ இடம் பெயர்தல், புலம் பெயர்தல் மனித இயற்கை

என்று தோன்றுகிறது. ஆதிமனித தினத்தில் இருந்து இது இருக்கிறது. இடம் பெயர்தலுக்கான காரணங்கள்தான் மாறியிருக்கின்றன. முன்பெல்லாம் தண்ணீர் தேடி, உணவு தேடி, பிழைப்பு தேடி.. இடம் பெயர்ந்தார்கள். மலை ஆடுகள், மீன்கள், பறவைகள் போன்ற உயிரினங்கள் இடம் மாறுகின்றன. புத்தர், ஏசுநாதர், முகமது நபி போன்றவர்கள் உண்மை தேடி இடம் மாறினார்கள். எப்போது அலைவதை நிறுத்துவார்கள்?

புனித தாமஸ் அக்வினாஸ் 'அழகு அலைவதை நிறுத்தும்' என்றார். உண்மைதான். மகத்தான அழகுக்கு அந்தக் குணம் உண்டு. எல்லா அலைச்சல்களையும் அது நிறுத்த வல்லது. திரியும் கால்களையும் அலையும் நாக்கையும் நிறுத்தக்கூடியது அழகு. இடம்பெயர்வதற்கு இன்றைய உலகில் சில அபாக்கியமான காரணங்களும் உள்ளன. சூழ்நிலை பத்திரத்தைக் குறைக்கும்போது அது அவன் மொழியாக இருக்கலாம். மதமாக இருக்கலாம். சருமத்தின் நிறமாக இருக்கலாம். குலமாக இருக்கலாம். விநோதப் பழக்கவழக்கமாக இருக்கலாம்.

இப்படிப் பல காரணங்கள் புலம் பெயர்தலுக்கு. ஏதோ ஒருவிதத்தில் ஒருவிதமான நிலையாமை restlessness வரும்போது நாம் பெயர்கிறோம். நீரிலும் நிலத்திலும் சஞ்சரிக்கும் 'மின்க்' என்னும் மிருகம் ஒரு தனிமை விரும்பி. அது மற்றொரு மின்க்கை கிட்டே சேர்த்துக் கொள்வதற்கு ஒரே காரணம் இனப்பெருக்கம்தான். காரியம் முடிந்ததும் 'ஆளைவிடு' என்று தனிமையை நாடிப் போய்விடுகிறது. இந்த மனநிலைக்குத்தான் ஆண்கள், பெண்கள் எல்லோரும் மெள்ள மெள்ள வந்து கொண்டிருக்கிறோம். அழகின் தரிசனம்தான் நம்மை நிறுத்தும்.

'கந்தனைக் காணவென்று
கார்த்திகைக்கு வந்தேனடி
உந்தனைக் கண்டேன்
இனி ஊருக்குப் போகமாட்டேன்'

என்று நாட்டுப்புறக் கவிஞனை நிறுத்தியதும் அழகுதான்.

# படிக்கும்போதே இடுப்பு வலி!



**ஹை**க்கூ கேள்விப்பட்டிருப்பீர்கள். எட்-கூ? நம்மைச் சுற்றி நடப்பவைகளைப் பற்றிய கருத்தை ஒரு ஹைக்கூ மூலம் வெளியிடுவதை எட்-கூ (எடிட்டோரியல் ஹைக்கூ) என்கிறார்கள். உதாரணம் -

Bill Gates sips Java
Watching Web surfers from beach
Mindful of Sun burn

மைக்ரோசாஃப்ட், சன் நிறுவனங்களுக்கு இடையே உள்ள ஜாவா மொழியைப் பற்றிய சர்ச்சைகள் தெரிந்தவர்கள், இதை ரசிப்பார்கள்.

தமிழில் ஒரு எட்-கூ எழுதிப் பார்த்ததில் -

ரயிலிலிருந்து நெருப்பெடுத்து
பற்ற வைத்தனர்
குஜராத்தை

ஒஸாமா பின் லேடா
பேசாம வெளியே வாடா
வீசா வேணும் நேக்கு
நாசா அமெரிக்காக்கு

வாசகர்கள் அனுப்பலாம் (கார்டு மட்டும்).

இனி ஒரு நிஜமான ஹைக்கூ:

மாலைவானம்
நகர விளக்குகளின் மேல்
நட்சத்திரங்கள் தெரியவில்லை.

- ஆண்ட்ரயேவ்

**எ**ண்பத்தோரு வயது நிரம்பிய கலைமாமணி எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் அவர்கள் வீடு தேடி வந்து சிரமப்பட்டு மாடிப் படியேறி என்னிடம் தன் சமீபத்திய 'பரதநாட்டிய சாஸ்திரம்' என்னும் நூலை அன்பளித்தார். இந்த வயசிலும் அவருடைய தணியாத ஆர்வம் என்னைத் திகைக்க வைத்தது. பன்னிரண்டு பதவிகள் வகித்தவர், பதினெட்டு கௌரவங்கள் பெற்றவர், ராஜாஜி, எம்.ஜி.ஆர்., செல்வி ஜெயலலிதா, காஞ்சி, சிருங்கேரி சங்கராச்சாரியார் சுவாமிகள், மொரார்ஜி தேசாய், பல கவர்னர்கள் - இவர்களிடம் இருந்தெல்லாம் பாராட்டுப் பெற்றவர் இந்த சம்ஸ்கிருத அறிஞர். பரதமுனிவரின் பரதநாட்டிய சாஸ்திரத்தை தமிழில் விஸ்தாரமாக மொழி பெயர்த்திருக்கிறார். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இதை வெளியிட்டிருக்கிறது. 500 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்தப் புத்தகத்தில் பல சுவையான விஷயங்கள் உள்ளன.

பரதநாட்டியத்தைப் பற்றிய என் அறிவை ஒரு அஞ்சல் தலையின் பின் பக்கத்தில் எழுதிவிடலாம்.

இளம்பெண்கள் ஆடினால் கால்மணி நேரம் பார்ப்பேன். அதற்கு மேல் நெளிவேன். பரதநாட்டியம் என்பது கர்னாடக சங்கீதத்துடன் மயிலாப்பூர் கலாசாரத்தின் அங்கங்களில் ஒன்று. எம்.என். ஸ்ரீனிவாஸ் சொல்லும் Sanscritisation என்னும் சமூக இயல் சார்ந்த மாறுதலின், பணமும் அந்தஸ்தும் வந்ததன் அடையாளங்களில் ஒன்று. பரதநாட்டியம் கற்றுக்கொண்டு அரங்கேறுவது ஒரு Snob Value என்ற கருத்துக் கொண்டிருந்தேன். இப்போதும் அந்தக் கருத்து மாறவில்லை. ஆனால், இந்தப் புத்தகத்தைப் படித்ததும் 'பரதநாட்டியத்தில் இத்தனை விஷயம் இருக்கிறதா!' என்ற பிரமிப்பு ஏற்பட்டு அதை வேர்க்க விறுவிறுக்கக் கஷ்டப்பட்டு ஆடும், சொல்லிக் கொடுக்கும் பெண்மணிகள் மேல் ஒரு பிரேமையே வந்துவிட்டது.

பரத முனிவர் எழுதிய நாட்டிய சாஸ்திரம் என்னும் நூல் கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்கிற கருத்து

சரியெனத் தோன்றுகிறது. அதற்கு முற்பட்டது என்று சொல்கிறவர்களும் உண்டு. இது தமிழ் நாட்டிலிருந்து வந்திருக்குமோ என்கிற கருத்தும் ஆராய்ச்சிக்கு உரியது.

தொல்காப்பியருக்கு முன்பே நாடகம் இருந்திருக்கிறது என்பது 'நாடக வழக்கு - உலகியல் வழக்கு' என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து தெரிகிறது. சங்க காலத்தில் கூத்து, குரவை போன்ற வார்த்தைகள் நாட்டியத்தைச் சார்ந்தவை. 'தாண்டவம்' என்கிற சொல் தமிழ்ச் சொல்லாக இருக்கலாம். சிலப்பதிகாரத்தில் மாதவி பதினோரு வகை ஆடல்கள் ஆடியதாகத் தெரிகிறது. இந்த ஆதாரங்களிலிருந்து நாட்டியம் தெற்கேயிருந்து வடக்கே போயிருக்கலாம் என்று எண்ண இடமுள்ளது.

ஸ்ரீராமதேசிகன் வைதிக மதம் பரதக் கலையை ஆதரிக்க வில்லை என்கிறார். நாட்டியக்கலை தெய்வீகமானதென்றும் நாட்டிய சாஸ்திரத்தைத் தோற்றுவித்தவர் பிரம்மதேவன் என்றும் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டிருந்தாலும் பண்டைய சுருதி - ஸ்மிருதி போன்ற அறநெறிகளை உணர்த்தும் நூல்கள் நாட்டியத்தில் பங்கு கொள்பவர்களை, அதாவது நடிகர்களை மிகவும் இழிவுபடுத்திக் கூறியுள்ளதைக் குறிப்பிடுகிறார். நடிகர்களுக்கும் நாடகத்துக்குத் தேவையான ஒலிக்கருவிகளை இசைப்பவர்களுக்கும் ஊர் நடுவில் வீடுகள் கட்டக்கூடாது என்று அர்த்தசாஸ்திரம் கூறுகிறதாம். குசலவர்கள் - அபிநயத்துடனும் இசையுடனும் கதை சொல்பவர்கள் என்று சொல்லும்போது, கு-சீலம் கெட்ட நடத்தை உள்ளவர்கள் என்று சில நூல்களில் பொருள் கூறப்பட்டுள்ளது. நடிப்புத் தொழிலை மேற்கொள்ளக்கூடாது என்று மனுதர்ம சாஸ்திரம் கூறுகிறது. நடிப்புத்தொழிலை மேற்கொண்டவர்களின் மனைவியருடன் உடலுறவு கொள்வதை பெரும் குற்றமாகப் பாராட்டிக் கொள்ளக்கூடாது என்று யாக்ஞயவல்க்ய ஸ்மிருதி கூறுகிறதாம். அந்தணன், நடிகனைத் தன்னுடன் கொண்டு உணவருந்தக்கூடாது. இவ்வாறு டேமேஜிங்காக பல விஷயங்கள் பழைய வைதிக நூல்களில் இருப்பதைக் குறிப்பிட்டுவிட்டு, ஸ்ரீராமதேசிகன் அதற்கு ஒரு சிறப்பான விளக்கம் தருகிறார்: 'நுட்பமாக ஆராய்ந்தால் தெளிவாவது யாதெனில், நாட்டியம் ஆரிய நெறிக்கு மாறானவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. அதனால் வேதநெறியை உணர்த்தும் சுமிருதிகளும் வேதத்தின் உறுப்பான இலக்கண நூல்களும் நாட்டியத்தையும் அதைக் கற்றவர்களையும் இழிவுபடுத்தியே கூறியுள்ளது. பிற்காலத்தில் நாட்டியத்தின்

பெருமையை உணர்ந்த பரதர் முதலானவர்கள் அம்முறையை தனதாக்கிக் கொண்டு நாட்டியம் அநாதி என்றும் தெய்வத் தன்மை வாய்ந்தது என்றும் அதற்கு ஏற்றம் கற்பித்தனர்.



வேதநெறி, வேள்வியின் வழியாக இறை வழிபாட்டை வற்புறுத்துவதாகும். உருவ வழிபாடு சிந்துவெளி நாகரிகத்தினைச் சார்ந்தது. நாட்டியம் என்பது உருவ வழிபாட்டின் சிறப்பானதோர் பகுதியாகும். மொகஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகத்தைச் சார்ந்த உருவ வழிபாட்டு முறை புத்தருக்குப் பிறகே வைதிக மதத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.' இவ்வாறாக சரிசமமான ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டுள்ள இந்த அரிய நூலில் 36 அத்தியாயங்கள், ஆறாயிரம் சுலோகங்கள் உள்ளன.வரலாறு, மண்டபங்களின் அமைப்பு, அரங்க தேவதைகளின் வழிபாட்டு முறைகள், திரையை அகற்று வதற்குமுன் ஏற்பாடுகள், பலவித இலக்கணங்கள், அரங்க அலங்காரங்கள், காதல் முறைகள், பாத்திரங்களின் தன்மைகள், நாடகக் காட்சிகளை வெற்றிகரமாக நடத்துவதற்கான குறிப்புகள் கொண்ட இந்த நூலின் சில பகுதிகள் Soft porno-வுக்கு அருகில் உள்ளன. ஒரு அத்தியாயத்தில் 108 கரணங்களை விவரித்திருப்பது சுவாரஸ்யமான பகுதி.

அவற்றில் ஒரு சாம்பிள்:-

'லலாட திலகம் விருச்சிக பாதத்தின் கட்டைவிரலால் நெற்றியைத்

தொட்டு பொட்டு வைத்துக்கொள்வதுபோல் அபிநயம் செய்ய வேண்டும். இங்கு வலதுகால் கட்டைவிரலுடன் இடது கை கட்டை விரலையும் நெற்றியைத் தொடும்படி வைத்துக் கொள்ள வேண்டும். வித்யாதரர்கள் என்னும் தேவசாதியினர் வானத்தில் இப்படித்தான் நடமாடுவார்களாம்.' நடமாடுவதாவது! எனக்கு இதைப் படிக்கும்போதே இடுப்பு வலிக்கிறது. இந்த மாதிரியான கரணங்கள் எல்லாம் நாட்டியப் பள்ளிகளில் கற்றுத் தருகிறார்களா என்ன? குறிப்பாக சக்ர மண்டலம் என்பதை சர்க்கஸ்காரர்கள்தான் பண்ணிப் பார்த்திருக்கிறேன். பரதசாஸ்திரத்தில் சொன்னபடி பரதநாட்டியம் இப்போது யார் ஆடுகிறார்கள் என்பதை ஸுஜாதா விஜயராகவன் போன்றவர்கள் சொல்லலாம்.

# மூச்சுவிட மறந்தவன்!



முன்குறிப்பு:

இந்த வாரம் க. பெ. அஞ்சா நெஞ்சர்களுக்காக எழுதப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் விலகிக்கொள்ளலாம்.

'ABC of Brainstem Death' என்கிற புத்தகத்தை எனக்கு டாக்டர் காளமேகம் அனுப்பியிருந்தார். பி.எம்.ஜே. என்னும் பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல் பதிப்பித்தது. இதைப் படித்துக் கொஞ்சம் ஆடிப்போய் விட்டேன். காரணம், மரணம் என்பதை அது அலசிய விதம்தான்!

மனித வாழ்க்கையில் மிகப் பெரிய கேள்வி: 'மரணம் என்பது என்ன?' அதைச் சரியாக அறுதியிட வேண்டியது பல காரணங்களுக்காக அவசியமாகிறது. சுற்றத்தார் நிஜமாகவே ஆள் செத்து விட்டானா என்பதை அறிவதற்கு, உடலுறுப்புகளைத் தானம் செய்ய விருப்பம் தெரிவித்தவர்களிடமிருந்து அவற்றை நீக்கத் தீர்மானிப்பதற்கு (குறிப்பாக கல்லீரல், இதயம்), கோமாவில் இருப்பவர்களின் வென்ட்டிலேட்டர் குழாய்களைக் குற்ற உணர்ச்சியில்லாமல் பிடுங்கிவிடுவதற்கு, யுதனேசியா கருணைக்கொலை பிரச்னைகளுக்குத் தீர்வு காணுவதற்கு...

நம் இந்து நம்பிக்கைகளின்படி மரணம் என்பது உடல் என்னும் சட்டையை உதறிப் போட்டுவிட்டு உயிர் பிரிந்துபோய் மாடியில் இருக்கும் பரமாத்மாவுடன் கலப்பது. அல்லது, இப்பிறவியில் செய்த கெட்ட காரியங்களுக்கு ஏற்ப அடுத்த பிறவியில் ஒரு ஆட்டுக்குட்டியாகவோ அமெரிக்க ராக் ஸ்டாராகவோ பிறப்பது... சுருங்கச் சொன்னால் உடல் தனி, ஆத்மா தனி என்று பல மதங்கள்

நம்புகின்றன.

கிறிஸ்தவ நம்பிக்கைகளின்படி இடைக்காலங்களில் ஒருவர் மடாலயத்தில் சேர்ந்தாலே, அந்த ஆள் வெளியுலகைப் பொறுத்த வரையில் இறந்துவிட்டான் என்று சொல்லிவிடுவார்களாம். இவன் இறந்த மாதிரிதான் என்று தேவாலயத்தின் தலைவர் சான்றிதழே கொடுத்துவிடுவாராம்.

புராதன எகிப்திய கலாசாரத்தில் உடலிலிருந்து உயிர் அல்லது ஆத்மா பிரிவதை நம்பினார்கள். கிரேக்க கிறிஸ்தவ, பின்னர் இஸ்லாமிய நம்பிக்கைகளிலும் இந்த அடிப்படைதான். உடல் தனி, ஆத்மா தனி சமாசாரம்தான் மேலோங்கி நிற்கிறது. ஆனால், இதிலிருந்து மரணம் என்பது என்ன என்று சொல்வது கஷ்டம். காரணம் அந்த உயிர் அல்லது ஆத்மா உடலில் எந்த பாகத்தில் இருக்கிறது? கட்டைவிரலிலா, கண்ணிலா, இதயத்திலா, மூளையிலா. எங்கு தேடினாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. உயிர் என்பது என்ன? லேசான நீல கலரில் ஒரு வாயுவா அல்லது எங்கோ ஒளிந்திருக்கும் சின்ன மொட்டா, அசுரனுடைய உயிர்நிலை போல இன்ன ஸ்தலத்தில் இருக்கிறது என யாராலும் சொல்ல முடியவில்லை. 1957-ல் புனித போப்பாண்டவர் அனஸ்தீஷியா நிபுணர்களின் சர்வதேச மாநாட்டில்... 'ஆத்மா பிரிந்த பின்னும் செயற்கை சுவாசம் கொடுக்கவேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும்!' என்றார், 'எப்போது உயிர் பிரிந்தது என்பதை டாக்டர்தான் தீர்மானிக்க வேண்டும்' என்றார்.

'மரணம் என்பது திரும்பப் பெற முடியாத செயல்பாடுகளா?' என்றும் ஆராய்ந்திருக் கிறார்கள். உடலின் ஒவ்வொரு பாகமும் நின்று போவதுதான் மரணம் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. காரணம் இதயம் நின்ற பிறகும் உடலின் பல பகுதிகள் தத்தம் தருணத்தில்தான் செயலிழக்கின்றன. மேலும் இதயம் நின்றுபோவது மட்டும் மரணமில்லை. நவீன டெக்னாலஜியின்படி இதயத்தை வெளியே ஒரு மெஷினிலிருந்து இயக்க முடியும். எனக்கு பைபாஸ் ஆபரேஷன் பண்ணியபோது சில மணி நேரம் என் இதயம் நிறுத்தப்பட்டு வெளியே ஹார்ட் லங் மெஷின் இயங்கிக் கொண்டிருந்தது. எனவே, இதயம் நின்று போவது மட்டும் மரணமல்ல, அதனால் ஏற்படும் மீளாத விளைவுகள்தான் மரணம். குறிப்பாக மூளைக்கு ஆக்சிஜன் நிறைந்த ரத்தம் போகாது. அனாக்ஸியா என்பது முக்கிய மரணக்காரணம்.

மூளை நின்று போவதுதான் மரணம் என்பதை மனிதகுலம் ஓரளவுக்கு உணர்ந்திருக்கிறது. தலையை வெட்டினாலோ, தூக்கில் போட்டாலோ மரணம் நிகழும் என்பதை நாம் நூற்றாண்டுக் கணக்காகத் தெரிந்து வைத்திருக்கிறோம். குற்றத்துக்குத் தண்டனையாக ஒரு ஆளைத் தூக்கில் போடுகிறோம். அப்போது கழுத்து எலும்பு உடைந்து மூளையின் மூச்சு விடுவதைக் கட்டுப்படுத்தும் காம்புப் பகுதி செயலிழக்க, உடனே மூச்சு நின்று விடுமாம். அதேபோல் ஞாபகத்தையும் உடனுக்கு உடன் இழந்து விடுவார்களாம். நல்லவேளை!

ஆனால், சுமார் இருபது நிமிஷம் வரை இதயம், 'யாருமே எனக்கு ஆள் போயிட்டான்னு சொல்லலையே!' என்று துடித்துக்கொண்டு மிச்சசொச்ச மூளைக்கு சோகையாக கொஞ்சம் ரத்தப்பாசனம் கிடைத்து அய்யோமிய்யோ என்றிருக்குமாம். ஈ.ஈ.ஜி. என்னும் மூளை அலைகளைப் பதிவு செய்யும் கருவி கொஞ்சநேரம் அலைகளைக் காட்டுமாம். தூக்குப் போட்டவன் எப்போது சாகிறான்? எந்தக் கணம்?

நினைக்கும் சக்தியையும் மூச்சு விடுவதையும் திரும்பப் பெற முடியாமல், இழப்பதுதான் மரணமா? தன்னிச்சையாக மூச்சுவிட முடியாவிட்டால், இதயம் தன்னிச்சையாகத் துடிப்பது நின்றுபோகும். அதனால் மூளைக்கு ஆக்சிஜன் சப்ளை நின்றுபோகும். நினைவு தவறும். இதை எல்லாம் கட்டுப்படுத்தும் கேந்திரம் மூளையில் 'ஸ்டெம்' என்னும் கீழ்பாகத்தில் இருக்கும் காம்புப் பகுதி - brainstem என்கிறார்கள். அதில்தான் இருக்கிறது உயிரின் மையம். இந்த காம்புப் பகுதி பழுதுபட்டால் அல்லது காயப்பட்டுவிட்டால், அதை சிகிச்சை செய்ய முடியாவிட்டால் - அதுதான் மரணம் என்று இப்போது நம்புகிறார்கள். ஞாபகம் திரும்ப முடியாமல் தவறுவதுதான் உயிர் பிரிவதற்கு ஈடானது என்று மேலைநாடுகளில் சொல்கிறார்கள். மூளையின் காம்புப் பகுதி காயப்பட்டு அதனால் மூச்சுவிடுவதும் இதயத்துடிப்பும் பாதிக்கப்பட்டு, அதைத் திருத்த முடியாமல் மெள்ள நினைவிழந்து மரணம் சம்பவிக்கிறது என்கிறார்கள்.



இதைத்தான் brainstem death என்கிறார்கள். அமெரிக்காவில் சிலர் காக்னிட்டிவ் டெத் (cognitive death) என்று ஒன்று சொல்கிறார்கள். 'நான் ஒரு மனிதன். என் பெயர் இது. என் ஞாபகங்கள் இவை. என் வாழ்க்கை இது!' என்கிற அடையாளங்களை முழுவதும் திரும்பப் பெற முடியாமல் இழப்பதுவே மரணம் என்கிறார்கள். ஒரு மனிதன் இறக்கும்போது எதை இழக்கிறான் என்பதை அடையாளம் கண்டு கொண்டுவிட்டால், மரணம் என்பது என்ன என்று சொல்லிவிட முடியும். 1968-ல் 22-வது உலக மருத்துவர்களின் மாநாட்டில் மரணம் விவரிக்கப்பட்டது: 'மரணம் என்பது நம் செல்களின் தனிப்பட்ட மரணங்களின் தொகுப்பு. ஆக்சிஜன் மறுக்கப்பட்ட நம் திசுக்கள் வெவ்வேறு சமயத்தில் செயல் இழக்கின்றன. ஆனால், தனிப்பட்ட பகுதிகள் எப்போது செயலிழக்கின்றன என்பது முக்கியமல்ல; இந்த செயலிழப்பிலிருந்து மீள முடியாததுதான் முக்கியம். அதைத் தவிர்க்க முடியாததுதான் முக்கியம். என்னதான் உயிர்ப்பிக்க முயற்சித்தாலும் மீட்க முடியாத தன்மைதான் மரணம்.'

ஆக்ஸ்போர்டு அகராதி எளிமையாகச் சொல்வது போல் மரணம் என்பது இறப்பதும் இறந்திருப்பதும் dying and being dead. சுற்றுப்பட்டவர்களிடம் சட்டென்று இந்தக் கணத்தில்தான் ஒருவன் இறக்கிறான் என்று சொல்லவே முடியாது. ஒரே சமயத்தில் ஒருவன் முழுவதும் இறப்பது அணுகுண்டு போட்டு கருகிச் சாகும்போது மட்டும்தான் நிகழக் கூடியது.

மரண தண்டனை கொடுக்கப் பல தேசங்களில் தலையை வெட்டி விடுவார்கள். பிரெஞ்சு கில்லட்டின் பிரசித்தம். அவ்வாறு தலை வெட்டப்பட்ட பின்னும் இதயம் ஒரு மணிநேரம் அடித்துக் கொள்ளுமாம். வெட்டப்பட்ட முண்டத்திலிருந்து ரத்தம் ஃபவுண்டன் போல பீய்ச்சியடிக்குமாம்.

'வெட்டப்பட்டு கூடையில் இருக்கும் தலைகளுக்கு உயிர் இருக்கிறதா?' என்று ஃபிரெஞ்சு கவிதை உள்ளது.

25 வருடங்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் ஒரு போட்டோ எல்லோரையும் கலக்கியது. ஒரு கோழி தலை துண்டிக்கப் பட்டபோதும் அதன் மூளையின் காம்பு மட்டும் ஒட்டிக் கொண்டிருக்க, கோழி தொடர்ந்து மூச்சு விட்டுக் கொண்டிருந்ததாம். 'கோமாவில் இருப்பவர்களைத் திரும்பப் பெற முடியாமல், இறந்தவர்கள் என்று சொல்வதற்கு மூளையின் காம்புப் பகுதியின் சேதம் மட்டும் போதும்!' என்று நவீன மருத்துவம் தீர்மானித்திருக்கிறது. மூளையின் மற்ற பாகங்கள், மூளை முழுவதுமே செயலிழக்க வேண்டும் என்பது தேவையில்லை. மூச்சு விடுவதையும், இதயத் துடிப்பையும் கட்டுப்படுத்தும் பகுதி ரிப்பேர் பண்ண முடியாமல் சேதமடைந்து விட்டால், அந்த ஆள் காலி. இந்தப் பகுதி அவ்வாறு பாதிக்கப் பட்டதா என்று கண்டுபிடிப்பது சுலபமாம். படுக்கை அருகிலேயே சில எளிய பரிசோதனைகள் மூலம் கண்டுபிடித்து விடலாமாம். கோமாவில் இருப்பவர் தலையை இப்படியும் அப்படியும் அசைத்தால் கண்கள் கூடவே உருளாவிட்டால் ஆள் க்ளோஸ்!

என்னைப் பொறுத்தவரை இறப்பு என்பது நம்பிக்கைகளின் முழுமையான இழப்பு. 1981-ல் எழுதப்பட்ட ஒரு லிமரிக் இங்கு குறிப்பிடத்தக்கது.

In our graveyards with winter wind blowing
There is a great deal of to 'ing and fro' ing
But can it be said
That the buried are dead
When their nails and their hair are still growing.

தமிழில் இதை சற்று மாற்றி முயற்சி செய்தால்,

கல்லறையில் குழிதோண்டக் கிளறும்போது**,**
சொல்லொணாத துயரத்தில் உளறும்போது
உண்மையிலவன் இறந்தானா***?***
மூச்சுவிட மறந்தானா***?***
கைநகமும் தலைமயிரும் வளரும்போது***!***

இறுதியில் வோர்க்கா சொன்னதுடன் எனக்கு உடன்பாடு,

If I die
Leave the balcony open
The little boy is eating oranges
From my balcony I can see him
If I die
Leave the balcony open

# 'எட்கூ' எட்டு!



'**எ**ட்கூ' எழுதி அனுப்புமாறு கேட்டதற்கு வாசகர்கள் ஒரு வாரத்தில் நூற்றுக்கணக்கில் அனுப்பிவிட்டார்கள். அவற்றில் நான் தேர்ந்தெடுத்த சில இங்கே..

எட்கூ என்பது சமகால நிகழ்ச்சியை விமரிசிக்கும் ஹைக்கூ. இவற்றை 'சென்ரியு' விலும் சேர்கலாம். இவர்களுக்கு நல்வாழ்த்துக்கள்.

முன்னாள் இந்நாள் முதல்வர்கள்
சட்டசபையில்
எதிரெதிரே மட்டுமல்ல
அருகிலும்தான்!

- எம்.சேவியர்பால், கோயம்புத்தூர்-29.

நான் இந்தியனாக
வாழவே விரும்புகிறேன்,
சிலிக்கான் வேலியில்.

- சி.எஸ்.சித்ரா, கோவை.38

கமல் நடிப்பில்
பஞ்ச தந்திரம்!
நடப்பில்
பஞ்சர் தந்திரம்!

கட்டுவதற்குத்தான் சண்டை
கடவுளைக்

காட்டுவதற்கு சண்டை என்றால்
மகிழலாம்.


- பி.ஜி.பி. இசக்கி, கடையம்.

சர்ச்சை
அயோத்தி பற்றி
ராமாயணத்திலும்
நீதிமன்றத்திலும்..!

- அவ்வை கே.சஞ்சீவிபாரதி, அவ்வையார்பாளையம்.

காவிரி அணை திறக்க
பேச்சுவார்த்தை
மனசு திறக்கவில்லை.

- எஸ்.கணேஷ் சொக்கலிங்கம், திருச்செந்தூர்.



பாப்பா'ரைம்ஸ்'சொன்னது-
பாபா! சூப்பர் ஸ்டார்!


கண்ணகிக்காக வாதாட
வக்கீல்!

- இரா.மோகன்ராஜன், முத்துப்பேட்டை.



அண்மையில் ஒரிய மொழியில் என் கதை ஒன்றை வெளியிட அனுமதி கேட்டு அந்த மொழியிலேயே விலாசமிட்டு எழுதப்பட்ட கார்டு மூஞ்சியெல்லாம் முத்திரை வாங்கி தடுக்கித் தடுக்கி என்னை வந்தடைந்தது. பல சிரமங்களுக்குப்பின் ஒரிய மொழி தெரிந்தவரைப் பிடித்து 'மேட்டர்' என்ன என்று தெரிந்தபின் எனக்கு மனசாட்சி சிலாம்பு போல உறுத்தியது.

மற்ற இந்திய மொழிகளின் இலக்கியத்தில் என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பது பற்றித் தமிழ்நாட்டில் அக்கறை உள்ளவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அந்த அளவுக்குத் தீவுத்தனமாக நாம் இருப்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை - மொழி பெயர்ப்பு நூல்களின், மொழிபெயர்ப்பாளர்களின் பற்றாக்குறையும் தமிழ் பத்திரிகைகளின் அலட்சியமும் (மஞ்சரி தவிர). இந்திய மொழிபெயர்ப்புகள் போடும் பத்திரிகைகளே இல்லை. சிறு சிறு பத்திரிகைகள் ஆடிக்கொரு முறை அமாவாசைக்கு ஒரு முறை மொழி பெயர்ப்புகள் வெளியிடுகிறார்கள். அதும் லத்தீன் அமெரிக்கா, ஐஸ்லண்டு போன்ற நாடுகளின் நான் லீனியர், மேஜிக் ரியலிசம் போன்ற ஜல்லியடிகள் இல்லாத போது இந்திய மொழிகளின் பால் கவனம் திருப்புகிறார்கள். நான் பெங்களூரில் இருக்கும் போது சுதா, மயூரா, கர்மவீரா போன்ற பத்திரிகைகள் அடிக்கடி என் கதைகளைக் கேட்டு மொழிபெயர்த்து வெளியிட்டன. மலையாள குங்குமம் குழுமப் பத்திரிகைகள் அவ்வப்போது மொழிபெயர்ப்புக் கதைகளை இவ்வப்போதும் வெளியிடுகின்றன. தெலுங்கு 'ஸ்வாதி'யும் இந்தி 'சாரிகா'வும் இதில் சேர்த்தி.



அவர்கள் எல்லாம் நம்மைத் தேடிப் பிடித்துப் போடுகிறார்கள். அவர்கள் கதை, கவிதைகளை நாம் ஏன் படிக்க முயற்சிப்பதுகூட இல்லை? வீம்பும் ஆர்வக்குறையும்தான். தமிழைவிட மேம்பட்ட மொழி உலகத்திலேயே இல்லை என்கிற மோசமான மனப்பாங்கும் காரணம். இதை நிவர்த்திக்க தமிழ் வாரப்பத்திரிகைகள் வருஷத்தில் மாத்ருபூமியின் ஆழ்ச்ச பத்திரிகை செய்வதுபோல ஒரு வாரம் பிறமொழி இலக்கியத்துக்காக ஒதுக்கி ஒரு ஷாம்பு சாஷேயை இணைத்தாவது படிக்க வைக்க வேண்டும். தமிழ் எழுத்தாளர்களில் திருமதி சிவசங்கரி மட்டும் மற்ற மொழிகளின் இலக்கியத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு 'இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு' என்று ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஒரு தனியான அழகான புத்தகம் வெளியிட்டுக் கொண்டு வருகிறார். முதல் புத்தகம் தென்னிந்திய மொழிகள் (இதில் என் கதை ஏதும் இல்லை - செய்தி). இரண்டாவதாக கிழக்கிந்திய மொழிகள். இந்தப் பணியை சில வருடங்களாக பல சிரமங்களுக்கு இடையில் சிவசங்கரி செய்து வருவது பாராட்டுக்குரியது.

கிழக்கிந்தியத் தொகுப்பைப் படிக்க முற்பட்டபோது பல ஆச்சரியங்கள் கிடைத்தன. 'அட, இதையெல்லாம் இவர்களும் எழுதுகிறார்களா என்ன..!' என்றல் முதல் ஆச்சரியம். இவையெல்லாம் நம் தமிழில் இல்லையே என்கிற இரண்டாவது ஆச்சரியம். இலக்கியக் கவலைகளில் அவர்கள் கலாசாரமும் ராமாயண மகாபாரத பின்னணியும் தாக்கமும் ஆங்கில இலக்கியத் தாக்கமும் அண்டை மொழிகளின் பாதிப்பும் அமைந்திருக்கின்றன என்பதை அறிய முடிகிறது. எல்லா மொழிகளிலும் நவீன இலக்கியம் சென்ற நூற்றாண்டிலேயே தொடங்கியதாகத்தான் கூறுகிறார்கள்... அதாவது வெள்ளைக்காரன் வந்ததிலிருந்து. நேஷனல் புக்ட்ரஸ்ட், சாகித்ய அகாதமி போன்றவர்கள் பதிப்பித்த புத்தகங்களில் மற்றமொழி இலக்கியங்கள் நமக்கு ஓரளவு கிடைக்கின்றன. அந்தத் தொகுப்பின் இரண்டாம் பகுதியில் கிழக்கிந்திய

மொழிகளின் தற்கால இலக்கியங்கள் கதைகள், கவிதைகள், கட்டுரைகள், பேட்டிகள் எல்லாம் வெளியாயிருக்கின்றன.

ஒரியா மொழியில் ரமாகாந்த் ரத் என்னும் பிரசித்திபெற்ற கவிஞரின் கவிதைகள் உடனடியாக என்னைக் கவர்ந்தன. 'மரணம் என்னைத் தழுவும்போது எதை அணிந்துகொள்வது?' என்ற தலைப்பே கவிதைக்குள் நம்மை இழுக்கிறது.

'மரணம் என்னைத் தழுவும்போது
நான் எதை அணிந்து கொள்வது?
வேண்டுமானால் அரைநிஜார் அணியலாம்
இறுதி மூச்சு வரை
எதைப் பற்றியும் கவலையின்றி சுறுசுறுப்பாய்
பயமோ தயக்கமோ இல்லாமல்
ஒரு விளையாட்டு வீரனாய் வாழ்ந்தேன்
என்று எல்லோரும் நம்புவார்கள்.
ஆனால், நான் வேட்டி அல்லவோ அணியவேண்டும்
இறுதி மூச்சுவரை
நீண்ட சந்தோஷமான ஓய்வாக
என் வாழ்வு அமைந்தது என்று
எல்லோரும் நம்புவார்கள்.
மரணம் என்பது
ஞாயிற்றுக்கிழமை போன்றது
சூட் அணிந்தால் என்ன?
நவநாகரிகமான உயரதிகாரி
எதனாலும் பாதிக்கப்படாத
சுபாவமுள்ளவன்
என்பார்கள் என்னைப் பற்றி


(இப்படி பலவிதமான உடைகள் ஏற்படுத்தக்கூடிய ஆபிச்சுவரி நினைவுகளை அலசிவிட்டு)

ஆனால் நான், எதை அணிந்தாலும்
நான் இறக்கும் அதே நாளில்
இன்னொரு மரணமும் நிகழும்
மேல்சட்டையே அணியா ஒரு சிறுவன்
நாளெல்லாம் தும்பிகளைத் துரத்தி
காட்டில் பழங்களைத் தேடும் அவனும்

நான் இறக்கும் அதே நாளில் இறப்பான்

(இது கவிதையின் முதல் அதிர்ச்சி. இதன்பின் அந்தச் சிறுவனுக்கு)

இடுகாட்டிலிருந்து வானம்
வரையுள்ள பாதை
வேறொரு காலத்தால் அடைபட்டிருக்கும்!'





என்று ஆழமாக சிந்திக்க வைக்கும் வரிகளுடன் கவிதை முடிகிறது. மற்ற இந்திய மொழிகளின் கவிதைக் கவலைகள் நம்மிலிருந்து வேறுபட்டவை என்பது தெளிவாகத் தெரிகிறது.

நாம்தான் காதலைக் கட்டிக்கொண்டு அழுகிறோம். ரத்தின் மற்றொரு கவிதை யின் தலைப்பு: 'பேசாமல் இருக்க உறுதி பூண்ட இளவரசி கேட்ட கேள்விகள்.'

பெங்காலியில் சுனில் கங்கோபாத்யா வின் சிறுகதையான 'கதாநாயகி'யும் ஒரியாவில் கிஷோரி சரண்தாஸின் 'விருந்தாளி' கதையும்

என்னைக் கவர்ந்தன.

கங்கோபாத்யாவின் கதையில் சமுத்திரத்தில் சந்தோஷமாக குளிக்க மனைவியுடன் பூரிக்கு சுற்றுலா சென்ற கணவன் ஓட்டலில் கோடி அறையில் ஒரு பெண் ஒளிந்து கொண்டிருக்கிறதைப் பார்த்து அவள் யார் என்று கண்டு பிடிப்பதிலேயே விடுமுறையை விரயம் பண்ணுகிறான்.

ஒரியா மொழிக்கதையில் விருந்தாளியாக வரும் தூரத்து உறவுக்காரர் சின்ன வயசில் அந்த வீட்டுப் பெண்மணி காதலனுடன் அறையில் தனியாக இருந்ததைக் கவனித்திருக்கிறார். இதனால் வரும் சங்கடங்கள் திறமையாக, நாசூக்காக எழுதப்பட்டிருக்கின்றன.

# கற்றதும்... பெற்றதும்...

## (பாகம் I)

**சி**று வயதிலிருந்தே வாகனங்கள் மேல் அலாதி பிரேமையுடன் வளர்ந்தேன். கோயம்புத்தூரில் அப்பா ஒரு முரட்டு மோட்டார் சைக்கிள் வைத்திருந்தார். அவர் டூர் போயிருக்கும்போது நாள் முழுவதும் அதன் மேல் ஏறி வாயாலேயே ஓட்டி சிங்காநல்லூர், அரவங்காடு எல்லாம் போவேன். மூன்று சக்கர சைக்கிள் ஒன்று இருந்தது. அதை ஓட்டி ஓட்டி அலுத்தப் பின், அதனுடன் என் தம்பியின் நடைவண்டி, ஸ்டூல் போன்றவற்றை இணைத்து ரயில் பண்ணி ஓட்டினேன். அதுவும் அலுத்துப்போய் கொஞ்சம் பெரிய மேஜையையே இணைத்து ஓட்டிப் பார்த்தேன். அதற்கான ஆற்றல் பற்றாமல் லோடு தாங்காமல் ஒரே இடத்தில் முன் சக்கரம் வழுக்கி வழுக்கி ஒரு நாள் அந்த சைக்கிள் என் இம்சை தாங்காமல் உடைந்து போனது.

விகடன் பிரசுரம்

KATRATHUM PETRATHUM (Volume-I)

(12th Edition)